தாய்வீடு

223

ISSN 2369-3657

THAIVEEDU | OCTOBER | 2025

தாய்வீடு | ஒக்ரோபர் | 2025

ஸ்கார்பரோ - ரூஜ்பார்க்
மாநகராட்சி இடைத்தேர்தலில்
நீதன் சண் வெற்றி



சிறப்பாக நடைபெற்ற
6-ஆவது அனைத்துலகத் திருக்குறள் மாநாடு
- இல. சுந்தரம்



ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


RE/MAX ACE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Lic# 10530
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
Address:
80 New Delhi Drive Unit 113, Markham, Ontario L3R 0B8
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc.

தாய்வீடு

Publisher & Editor
PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர்
பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர்
கருணா

ஆலோசகர் குழு
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

ஓவியங்கள்
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

அட்டைப்பட வடிவமைப்பு
பிரசாத் சொக்கலிங்கம்

வடிவமைப்பு
ஆரையன், ஊரோடிகள் குழுமம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

படங்கள்
istock.com,

தட்டச்சு
சாம் டானியல்.

ஒப்புநோக்கல்
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

அஞ்சல் முகவரி
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

கடந்த மாதம் நடந்து முடிந்த ஐக்கிய நாடுகளின் எண்பதாவது பொதுச்சபைக் கூட்டத்தொடரிலே, அழிவின் விளிம்பில் தத்தளித்துக்கொண்டிருக்கும் பாலஸ்தீனத்துக்கான ஆதரவுக் குரல்கள் ஓங்கி ஒலித்திருப்பது மானுட விடுதலையை நேசிக்கும் எவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தவல்லது.

முன்னரே அறிவித்திருந்ததுபோல் பிரான்சும் ஐக்கிய இராச்சியமும் கனடாவும் நியூ யோர்க் நகரில் நடைபெற்ற இந்த அனைத்துலகக் கூட்டத்தொடரில் வைத்து பாலஸ்தீனத் தனியரசுக்கான தமது அங்கீகாரத்தை வெளியிட்டன. அவற்றோடு அவுஸ்திரேலியா, போர்த்துக்கல், இலக்சம்பேர்க், மோல்ரா, மொனாக்கோ, பெல்ஜியம், அந்தோரா ஆகிய நாடுகளும் இணைந்துகொள்ள, பாலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரிக்கும் ஐ.நா. அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை 157-ஆக உயர்ந்திருக்கிறது.

பாலஸ்தீனத்தின் நிலப்பரப்பிலே யூதர்களுக்கான ஒரு நாட்டை உருவாக்க இசைந்த பெல்போர் பிரகடனத்தின் 108 ஆண்டுகளின் பின்னரும், டேவிட் பென்குரியன் இஸ்ரேலைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்திய 77 ஆண்டுகளின் பின்னரும், பிரித்தானியா தனது வரலாற்றுத் தவற்றுக்குப் பிராயச்சித்தமாக பாலஸ்தீனத்தைத் தனிநாடாக உலக அரங்கிலே அங்கீகரித்திருக்கிறது. 'மத்தியகிழக்கு நிலைமைகள் மோசமடைந்துவரும் வேளையில், அமைதிக்கும் இருநாட்டுத் தீர்வுக்குமான சாத்தியப்பாட்டைப் பாதுகாப்பதற்காக நாம் செயற்படுகிறோம்' என பிரித்தானியப் பிரதமர் கீர் ஸ்ராமர் தனது நாட்டின் இந்த நகர்வுக்கு விளக்கமளித்துள்ளார்.

இரு நாட்டுத் தீர்வுக்கான ஆதரவு பெருகிவருவதை ஆதரித்துக் கருத்து வெளியிட்ட ஐ.நா. பொதுச்செயலர் அன்ரோனியோ குத்தேரேஸ், 'இரண்டு நாடுகள் எனும் தீர்வு இல்லாமல் மத்தியகிழக்கில் ஒருபோதும் அமைதி ஏற்படாது' என்று கூறியதோடு, இரு நாட்டுத் தீர்வு இல்லாத நிலையில், பாலஸ்தீனம் மீதான ஆக்கிரமிப்பும் சமத்துவமற்ற நிலையும் தொடரும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளர்.

ஐ.நா.-வின் அங்கத்துவ நாடுகளுள் எண்பது வீதத்துக்கும் அதிகமானவை பாலஸ்தீனத் தனியரசை அங்கீகரித்துள்ள இன்றைய நிலையிலும், இன்னமும் அங்கீகரிக்காத நாடுகளின் குறுகிவரும் பட்டியலில் ஐக்கிய அமெரிக்கா முக்கிய இடத்தைத் தொடர்ந்தும் வகிப்பது கவனிக்கத்தக்கது. ‘பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிப்பதானது ஹமாஸ் அமைப்பின் பயங்கரவாதச் செயல்களுக்குச் சன்மானம் வழங்குவதாகும்,’ என அமெரிக்க அதிபர் வெளியிட்டுள்ள அதிருப்தியானது எதிர்பார்த்த விடயமே. அதற்குப் பதிலளிப்பதுபோல், ‘பாலஸ்தீன தேசத்துக்கான அங்கீகாரம் என்பது சன்மானம் அல்ல உரிமை’ என குத்தேரேஸ் ஆணித்தரமாகத் தெரிவித்த விடயமே அப்பழுக்கற்ற உண்மை.

அமெரிக்கா தொடர்ந்தும் தனது கண்மூடித்தனமான இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டில் உறுதியாக இருக்க, ஒரு காலத்தில் இந்த விடயத்தில் அமெரிக்காவின் தலைமையைப் பின்பற்றிய உலகின் பலம் வாய்ந்த நாடுகள் கடந்த ஓர் ஆண்டுக்குள் தமது நிலைப்பாட்டில் சடுதியான மாற்றத்தை ஏற்படுத்தியதன் பின்னணியில் உள்ள பூகோள அரசியலையும் நோக்கவேண்டும். டிரம்ப் அமெரிக்காவின் அதிபராகப் பதவியேற்றது முதல் அந்த அரசின் எதேச்சாதிகாரப் போக்கும் பொருளாதாரம் சார்ந்த ஒருதலைப்பட்ச முடிவுகளும் நேச நாடுகளை அரவணைப்பதாய் இல்லாமல் அந்நியப்படுத்துவதாகவே இருந்து வந்திருக்கின்றன. கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவின் மிகநெருக்கமான நேசநாடாக இருந்துவந்த கனடாவின் பிரதமர் மார்க் கார்னி, ‘அமெரிக்காவுடன் இதுவரை நிலவிவந்த எமது உறவு முறிந்துவிட்டது’ எனப் பலதடவைகளில் கூறியுள்ளார். 'உறவு மாற்றமடைந்துள்ளது' எனக்கூறாமல், 'முறிந்துவிட்டது' என்ற வார்த்தையை அவர் பயன்படுத்திவருவது உள்ளர்த்தம் மிக்கது.

அமெரிக்க ஆதிக்கத்தில் இருந்து தாம் வெளியேறிவிட்டதை உலக அரங்கில் பறைசாற்றும் ஒரு வழிவகையாக, பாலஸ்தீன விடயத்தில் தமது நிலைப்பாட்டை இந்த நாடுகள் எடுத்துக்கொண்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. இஸ்ரேலின் தொடரும் மூர்க்கத்தனமான இனவழிப்புப்போர் இந்த நிலைப்பாட்டு மாற்றத்தை இலகுவாக்கியிருக்கிறது.

காரணம் எதுவாயினும், இந்த அங்கீகாரம் முதற்படி மட்டுமே; முடிவல்ல. காலங்கடத்தாது இந்த அங்கீகாரத்தை நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியமும் அவசரமுமான விடயம்.
இஸ்ரேல் உருவானபோது பரந்து ஒன்றிணைந்த நிலப்பரப்பாக உலக வரைபடத்தில் காட்சியளித்த பாலஸ்தீனம், இன்று சின்னஞ்சிறு திடல்களும் திட்டுகளும் போல உருக்குலைக்கப்பட்டிருக்கிறது. அதையும் இல்லாமல் செய்வதற்கென்றே இஸ்ரேல் முழுமூச்சுடன் செயற்படுகிறது.

எனவே, பாலஸ்தீன தேசத்தை அதன் பழைய மாண்போடு மீளக்கட்டியெழுப்ப ஐக்கிய நாடுகள் முனைப்புடன் செயற்படவேண்டும். பாலஸ்தீனத்தை இதுவரை அங்கீகரிக்காத ஏனைய நாடுகளும் பாலஸ்தீனத் தனியரசை வரவேற்கவேண்டும்.

'உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா! வா!

தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...

ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா! 3

இன்னொரு பொருளாதார நெருக்கடியை நோக்கி... 5
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

குர்தீஸ் விடுதலை இயக்கம் (PKK):
ஆயுதப் போராட்ட முடிவும் எதிர்காலமும் 10
- ரூபன் சிவராஜா

சார்லி கேர்க்கின் கொலையும் பாசிசமும் ஒடுக்குமுறையும் 15
- ரதன்

என்னதான் நடக்கின்றது நேபாளத்தில்... 23
- சிவா முருகுப்பிள்ளை

மொழி உரிமையின் சவால்களும் நல்லிணக்கக் கனவுகளும் 30
- நிசன்குமார் கோபிநாத்

பெண்: உடமையல்ல உயிர்! 33
- சிறிதரன் ஹரிஷா

வேலையற்ற பட்டங்கள்: இலங்கையின்
பொருளாதாரமும் பட்டதாரிகளின் எதிர்காலமும் 36
- மேரி றெசொதா

செயற்றிறன் மிக்க மிகச்சிறந்த
வகுப்பறை முகாமைத்துவத்தை நோக்கி... 38
- அகமட் பிஸ்தாமி

கற்றல்-கற்பித்தலில் பல்பகுப்பு முறை ஆதரவுகள் 40
- த. சிவபாலு

பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே
அத்தியாயம் அத்தியாயமாகப் பேசாதீகள்! 43
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

அவளும் படிக்கின்றாள் 48
- பஞ்சகல்யாணி

மனதைத் தேடி... 49
- சியாமளா யோகேஸ்வரன்

செயற்கைச் சூரியனை உருவாக்கும்
விந்தைமிகு மாந்தர்! 52
- சுப்ரமணியம் ஜெயசீலன்

இலையுதிர்கால வீட்டுப் பராமரிப்பு 56
- வேலா சுப்ரமணியம்

சொத்துகளை அடுத்த தலைமுறைக்குத் தருவது 59
- செந்தூரன் புனிதவேல்

அஞ்சல் எந்தவொரு மொழிக்கும் விழியாகும் 61
- சி. நற்குணலிங்கம்

தீண்டாமையின் கொடிய முகங்கள் 64
- நெல்லை ஜெயசிங்

கிரேக்கப் புராணத்தில் பெண்களின் வடிவங்கள் 67
- குரு அரவிந்தன்

பெரு நாட்டுக்குச் சிறு பயணம் 70
- குமார் புனிதவேல்

ரூபனின் கலை இலக்கிய அரசியல் எழுத்துவெளி:
கலையை பேசுதலாக்கும் மொழி! 73
- இரா. மோகன்ராஜன்

சமூகக் கட்டுமானங்களைக் கட்டுடைக்கும் கறுப்பி 78
- ரதன்

வனவேட்டை 81
- ஓவியர் ஜீவா

தனித்துவமான ஆளுமை
திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் 84
- மல்லிகா செல்வரத்தினம்

நாட்டுப்புறக் கலைகளே நம் கலாசாரத்தின் உயிர்நாடி 89
- தேவசகாயம் சந்தியாகு

கிழக்கிலங்கைக் கவிஞர் பாவலர் பஸீல் காரியப்பர் 92
- வே. விவேகானந்தன்

ங்கி வா தியாங்கோவுக்கு அஞ்சலி - 4
மொழிகளின் மொழியாக மொழிபெயர்ப்பு 95
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில்
பேராசிரியர் துரை மனோகரனின் வகிபாகம் 100
- இக்பால் அலி

கிரா விருது பெறும் சு. வேணுகோபால் 106
- அரவிந்த் வடசேரி

கலைமாமணி விருதாளர் ஓவியர் ஜீவா நந்தன் 108

ரஜிதாவின் கவிதைகள்:
துயரத்தின் இருட்கனதியும் காதலின் தீரா வேட்கையும் 110
-கருணாகரன்

'தேய்பிறை': கவிதையின் தெவிட்டாத சுவை
தாகூரின் கவிதைகளைத் தமிழில் தந்த சி.வி. 116
- மல்லியப்புசந்தி திலகர்

நவீன வாழ்வின் நெருக்கடியில்
விளைந்த நாவல் 'கனவுச்சிறை' 119
- சு. வேணுகோபால்

பேராசிரியர் சச்சிதானந்தம் சுகிர்தராஜாவின்
அந்தணரும் ஆகமமும் 124
- மணி வேலுப்பிள்ளை

ஒரு நூலின் உருவாக்கம்:
ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல் 127
- என். செல்வராஜா

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும் -5 131
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

நாட்டார் இலக்கியத்தின் தொன்மையும் ஒண்மையும் 134
- விவேகவெளி தமிழேந்திரன்

மலையக மக்களின் பாரம்பரியப்
பழக்கவழக்கங்களும் சூழற் பாதுகாப்பும் 136
- அருள்கார்க்கி

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த
கலையாக காமன் கூத்து - 10 140
- அருணாசலம் லெட்சுமணன்

மலையக நாட்டார் புறக் கலைகளும் மனித உடல் -
உள நன்னிலைகளும் - ஓர் ஆய்வு 145
- ச. லக்ஹரன், - க. கஜவிந்தன்

நீர்ப்பண்பாடு x தீப்பண்பாடு எனும் எதிர்வுத்தளப்
பண்பாட்டு மோதுகைகளுக்கிடையே
'தமிழ்மை'யின் தனித்துவத்தைக் கண்டுபிடித்தல் 148
- தென்னவன் வெற்றிச்செல்வன்

ஈழத்துத் தமிழ்க் கவிதையில்
உடற்கூற்றியல் - பாலியல் 154
- சி. ரமேஷ்

இலங்கையில் 1796-1947 காலப்பகுதியில் தமிழ்-இந்து
அடையாள உருவாக்கமும், அதில் வடமொழியின் பங்கும் 158
- மைதிலி தயாநிதி

இனப்படுகொலையின் அரசியல் - 17
எண்ணிக்கையில் என்ன இருக்கிறது? 161
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

அதிகாரப் பிரதியின் ஆயிரமாண்டுப் பயணம் 172
- ச. சத்தியதேவன்

காக்கைக் கூட்டில் குயில் முட்டை 178
- நாஞ்சில் நாடன்

நினைவுக்கோட்டை 184
- குகன் சங்கரப்பிள்ளை

சிறப்பாக நடைபெற்ற
6-ஆவது அனைத்துலகத் திருக்குறள் மாநாடு 190
- இல. சுந்தரம்

புறநிலை அறிவும் அனுபவவாதமும் 200
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழாக்கம்: கந்தையா சண்முகலிங்கம்

கம்பனின் கருவூலம் திறந்து... 203
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

முலையறுகாதை!
பெண் துயரப் பெருங்கதை 208
- மா. சித்திவினாயகம்

வெள்ளோட்டம் 211
- உஷாதீபன்

மலிவு விலையில் மது கிடைக்கும் மகிழ்ச்சியான நேரம் 215
- டெனிஸ் ஜோன்சன்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்



தொடக்கக் குறிப்புகள்:

இலங்கையின் தலைநகர் கொழும்புக்கு விஜயம் செய்யும் ஒரு உல்லாசப் பயணியால் நாடு மாபெரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுகொண்டிருக்கிறது என்பதை உணர முடியாது. தலை நகர் கொழும்பின் இயங்கியல் அவ்வாறானது. உணவகங்களில், பல் பொருள் அங்காடிகளில், பொது இடங்களில் என எல்லா இடங்களிலும் மக்கள் நிறைந்திருக்கிறார்கள், விற்பனை அமோகமாக நடக்கிறது. மக் கள் இயல்பாகவும் மகிழ்வாகவும் இருப்பதாகவும் தெரிகிறது. பொருளா தார நெருக்கடியைச் சந்தித்த நாடா இது என்ற கேள்வி எழுவது இயல் பானது. ஆனால் இதன் அடியாளத்தில் இலங்கை இன்னொரு நெருக் கடியை நோக்கி நகர்கிறது என்ற உண்மையை மறைக்க இது உதவுகிறது.

இன்னொரு பொருளாதார நெருக்கடியை நோக்கி...

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கடந்த மாதம் இலங்கைக்குச் செல்லும் வாய்ப்புப் கிடைத்தது. எனது இலங்கை அனுபவங்களின் வழியிலாக மூன்று கதைகளின் ஊடு இக்கட்டுரைக்குள் நுழைய விரும்புகிறேன். முதலாவது கதை தலைநகரை நிறைத்துள்ள புதிய வாகனங்கள் பற்றியது. இலங்கையிலிருந்து வரும் எந்தவொரு பயணியும் கொழும்பில் புதிய வாகனங்களின் வருகையை கவனிப்பார்கள். வாகனங் களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை சமீபத்தில் தளர்த்தியதன் மூலம் இது நிகழ்ந்தது. 2025 ஜனவரியில் அரசாங்கம் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்குவதாக அறிவித்தது. இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு 300% வரை வரிகள் விதிக்கப் பட்டது. இலங்கை அரசாங்கம் வரி வருவாயிலிருந்து சம்பாதிப்பதற்கும் அதே நேரத்தில் அந்நியச் செலாவணி இருப்புகளைப் பாதுகாப்பதற்கும் இந்த வரி உயர்வு ஒரு நேரடியான திட்டமாகும். இங்கு பலரும் கவனிக்காது விட்ட ஒரு விடயமொன்றுண்டு. இலங்கை அரசாங்கம் வரி வருவாய், அந்நிய செலாவணி பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு எவ்வளவு பொறுப் பேற்றதோ, அதே நேரத்தில் கட்டுப்படியாகாத தன்மையால் தடுக்கப்பட்ட வர்கள், அவர்களின் நிதி குறைபாடுகளைப் பொருட்படுத்தாமல் வாகனங் களை வாங்கத் தொடங்கினால் என்ன நடக்கும் என்பதை ஒரு கணம் யோசித் துப் பார்த்தோ? இதை விளங்கிக் கொள்ள 2008-இல் அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி ஏன் வந்தது என்பதைச் சற்றுத் திரும்பிப் பார்ப்பது நல்லது.

தனிப்பட்ட முறையில், சராசரி இலங்கையரின் செல்லுபடியாகும் தன்மைக்கான ஏக்கத்தை யும், சுயமாக உணரப்பட்ட நிதி ரீதியாகக் கோரும் சமூக அந்தஸ்தின் தரங்களை அடைவதற்கான தாகத்தையும் அரசாங் கம் கடுமையாகக் குறைமதிப்பிற்கு உட் படுத்தியுள்ளது. இறக்குமதி கட்டுப் பாடுகள் நீக்கப்பட்டதிலிருந்து, கணிச மான எண்ணிக்கையிலானோர் தங்கள்

வாகன கனவுகளுக்குக் கடன்கள் மூலம் நிதியளிக்கின்றனர். கடன்களிலிருந்து உருவாகும் வட்டி விகிதங்களிலிருந்து இலாபம் ஈட்ட வங்கிகளும் நிதி நிறுவனங்களும் புதிய வாகனங்களை வாங்க ஆர்வமுள்ள நபர்களிடம் பணத்தை வீசி வருகின்றன. கடந்த காலத்தில் நிதி நிறுவனங்கள் தங்கள் கடனாளியின் நிதி சுயவிவரம் தொடர்பான கடுமையான கொள்கைகளைக் கடைப்பிடித்ததைப் போலல்லாமல், இப்போது சில நிறுவனங்கள் குறைந்த கடன் தகுதியுடன் கூடிய நபர்களுக்கு நிதியளிக்கத் துணிந்துள்ளன.

இந்த நபர்களில் நிலையற்ற வருமானம் கொண்ட சிறு வணிக உரிமையாளர்கள், தங்கள் வருமானத்திற்கு மேல் கடன் வாங்கிய கடனாளிகள், தங்கள் மாதச் சம்பளத்தை கிட்டத்தட்ட தங்கள் மாதத் தவணைக்கு நிதியளிக்கச் செலவழிப்பவர்கள், பல கடன்கள் மற்றும் நிதிக் கடமைகளைக் கொண்ட கடனாளிகள் (வீட்டுக் கடன்கள் / தங்கக் கடன்கள் / தனிப்பட்ட கடன்கள் / வாடகை), விரைவில் திரும்பப் பெற முடியாத தங்கள் EPF/ETF-களை நம்பியிருக்கும் கடனாளிகள் மற்றும் சிலர் அவ்வப்போது கடன் சுறாக்களிடமிருந்து சிறிய தொகைகளைக் கடன் வாங்கும் பாரம்பரிய முறையை நம்பியிருப்பவர்கள், தங்கள் மாதாந்திர கார் கட்டணத்தைச் செலுத்தத் தவறாமல் தங்களைத் தாங்களே தக்க வைத்துக் கொள்வதில் சிரமப்படுகிறார்கள். சிலர் கடவுளின் கிருபையையும், நேரம் வரும்போது அத்தகைய கடனை அடைக்க வேறு நிதி நிறுவனத்திடமிருந்து மற்றொரு கடனைப் பெறுவதற்கான வாய்ப்பையும் நம்பியுள்ளனர். சில கடன் கட்டமைப்புகள் ஒரு பெரிய இறுதித் தவணையை உள்ளடக்கியது, இது அவர்களின் மாதாந்திர கார் கட்டணத்தை விட கிட்டத்தட்ட 25 மடங்கு அதிகம். இதுபோன்ற முறைகேடுகள் முன்கூட்டியே ஒழுங்குபடுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படாவிட்டால், பல கடனாளிகள் கடன் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்படக்கூடும். பிரச்சினை என்னவென்றால், இவை பில்லியனர்களால் வாங்கப்பட்ட 10 ஆடம்பர / விளையாட்டுக் கார்கள் அல்ல, மாறாக நம்பகத்தன்மையற்ற கடனாளிகளால் நீடித்த கடன்கள் மூலம் வாங்கப்பட்டுள்ள 15-20 மில்லியன் டாலர் விலை கொண்ட 10,000 வாகனங்கள்.

இரண்டாவது கதை, பால் பற்றியது. கொழும்பு போன்ற பெருநகரத்தில் சுத்தமான கறந்த பாலைப் பெறுவது சவாலானது. ஒருபுறம் அனைத்துக் கடைகளிலும் அது கிடைப்பதில்லை. குறிப்பாகக் காலை வேளைகளில் அப்பாலைப் பெறுவது மிகவும் சிரமமானது. இலங்கையர்கள் பால்மாவுக்குப் பழக்கப்பட்டுவிட்டார்கள். மறுபுறம், உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் பால் விலை மிக அதிகமாக உள்ளது. பண்ணைகள் விற்கும் விலைக்கும் சில்லறை விலைக்கும் இடையே பாலுக்கான அதிக விலை இடைவெளியை இலங்கையில் காணலாம். தற்போது ஒரு லிட்டர் பாலின் பண்ணை விலை ரூ. 200 ஆக உள்ளது, அதே நேரத்தில் பால் பாக்கெட்டில் சில்லறை விலை ரூ. 550 வரையிலும், பிளாஸ்டிக் ஒரு லீற்றர் பாட்டில் ரூ. 480 வரையிலும், பொலிதீன் பாக்கெட்டில் 900 மில்லி லீற்றர் ரூ. 380 வரையிலும் கிடைக்கின்றது.

> ***இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு 300% வரை வரிகள் விதிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் வரி வருவாயிலிருந்து சம்பாதிப்பதற்கும் அதே நேரத்தில் அந்நியச் செலாவணி இருப்புகளைப் பாதுகாப்பதற்கும் இந்த வரி உயர்வு ஒரு நேரடியான திட்டமாகும்.***



பால் ஓர் ஆடம்பரமான நுகர்வுப் பொருள் ஆகிவிட்டது, குறைந்த பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட பல சமூக மட்டத்தினரால் இந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. இலங்கை மொத்த பால் நுகர்வில் 40% மட்டுமே உற்பத்தி செய்கிறது, மீதமுள்ள 60% பல்வேறு நாடுகளிலிருந்து பால் பவுடராக இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த மிகப்பெரிய பால் இடைவெளியை எந்த அரசாங்கமும் பல ஆண்டுகளாகக் கருத்தில் கொள்ளவில்லை, ஏனெனில் 40% பால் உற்பத்தி கடந்த 40 ஆண்டுகளாக நிலையானதாக இருந்தது. அனைத்து அரசாங்கங்களும் பால் இறக்குமதி செய்வதில் மிகவும் மகிழ்ச்சியடைந்தன மற்றும் வெளிப்படையான காரணங்களுக்காகப் பெரிய பன்னாட்டு அல்லது உள்ளூர் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்தன.

சுத்தமான பாலைப் பெறவும் அதை விநியோகிக்கவும் வினைத்திறனான முறைகள் இலங்கையில் இருந்தன. 1960-கள் மற்றும் 70-களில் நாட்டில் நிலவிய பால் பதப்படுத்துதல் மற்றும் விநியோக மாதிரியை அரசாங்கத்திற்குச் சொந்தமான 'பால் சபை' மேற்கொண்டது. கிட்டத்தட்ட அனைத்துப் பெரிய நகரங்களிலும் சிறிய அளவிலான பால் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இருந்தன, இந்தச் சபை 10 கி.மீ. வரம்பைச் சுற்றியுள்ள பால் விவசாயிகளை இலக்காகக் கொண்டது, மேலும் 2000 லீற்றர் பவுசர் பால் விவசாயிகளிடமிருந்து பால் சேகரிக்க ஊருக்குள் சென்றது, சில விவசாயிகள் பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு பாலைக் கொண்டு வந்தனர். பாலைப் பதப்படுத்தப்பட்ட பிறகு (பாஸ்டுரைசிங் என்பது இரசாயனங்கள் சேர்க்காமல் பாலை பாதுகாக்க சிறந்த

முறை), பால் சபை 'பால் கடைகள்' மற்றும் அவர்களின் குறிப்பிட்ட பிரதேசத்தைச் சுற்றி யுள்ள கடைகளுக்குப் பொதுவாக 10 கி.மீ. தொலைவில் விநியோகித்தது. மொத்த விநி யோகச் சங்கிலி 24 மணி நேரத்திற்குள் நிறைவடைந்தது. வாடிக்கையாளருக்குப் பால் வழங்கப்பட்டது. இந்தத் தயாரிப்பு காலை 6 மணிக்குள் சந்தைக்கு ஒரு அடிப் படை அலுமினிய மூடியுடன் புதிய பாலால் நிரப்பப்பட்ட திரும்பப் பெறக்கூடிய கண் ணாடி பாட்டில்களில் வந்தது, மேலும் வாடிக் கையாளர்கள் காலை தேநீருக்காக இதைப் பயன்படுத்தினர். தினமும் புதிய பாலை வாங்குவதற்குத் தேவையான வாங்கும் சக்தி மக்களிடம் இருந்தது. இன்று இரண்டும் இல்லை. அரசாங்கம் பாலை இறக்குமதி செய்வதற்கு குறிப்பிட்டளவு அந்நியச் செலா வணியை மாதந்தோறும் செலவிடுகிறது.

மூன்றாவது கதை, வற் (VAT) வரி பற்றியது. தெரிந்த ஒருவரின் சத்திரசிகிச்சை தொடர் பில் தனியார் மருத்துவமனை ஒன்று டன் தொடர்பு கொண்டபோது சிகிச்சைக்கு முழு மையாக எவ்வளவு முடியும் என்று கேட்டேன். நீங்கள் அதற்கான தொகையை பணமாகவா அல்லது வேறுவழிகளிலா (கிரடிட் கார்ட்) செலுத்தப் போகி றீர்கள் என்று கேட்டார்கள். என்ன வித்தியாசம் என்று கேட்டேன். பணமாகச் செலுத்தினீர்கள் என்றால் உங்களுக்கு வற் வராது. ஆனால் பிற வழிகளில் செலுத்தினால் மொத்தத் தொகைக்கு மேலதிகமாக 18% செலுத்த வேண்டும். அதா வது வைத்தியர், வைத்தியசாலை என்பன செலுத்தவேண்டிய வரியையும் நோயாளியே செலுத்தியாக வேண்டும் என்று விளக்கமாகப் பதில் வந்தது. மொத்தத்தில் வெளிப்படை யான வரி ஏய்ப்பு நடைபெறுகிறது. இது இலங்கையில் ஒரு கறுப்புப் பணச் சந்தையை உருவாக்கியுள்ளது.

இவ்வாறு வரிக்குள் அகப்படாமல் சம்பாதிக்கப்படும் கறுப்புப் பணம் தொடர்ந்தும் கறுப்புப் பணமாகவே தொடர்கிறது. ஓய் வெடுப்பதற்காக கொழும்புக்கு வெளியில் உள்ள பிரபல மான ஹோட்டல் ஒன்றுக்குச் சென்றபோதும் அதே கேள்வி, எவ்வாறு பணத்தைச் செலுத்த விரும்புகிறீர்கள். உணவகங் களில் அதே கேள்வி. எனவே மிகப்பெரிய வரி ஏய்ப்பு நடை பெறுகிறது. ஒருவகையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் மாட்டிக்கொண்டார்கள். அவர்களுக்கு வரிக்குரிய பணம் வெட்டப்பட்ட பின்னரே மாதச் சம்பளம் வழங்கப்படுகிறது. அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க வற் வரி இவ்வாறே பெறப் படுகிறது. இதன் மறுபுறமாக போதுமான வருமானம் இன்மை யால் இன்னமும் துணிந்து இலஞ்சம் கோருவதை அரச ஊழி யர்கள் செய்கிறார்கள். ஊழல் இன்னமும் சர்வ வியாபக மாகவே இலங்கையில் உள்ளது.

இலங்கைப் பொருளாதாரத்தின் இன்றைய நிலை என்ன என்ற கேள்விக்கான சரியான விடையை யாராலும் சொல்லிவி டவும் முடியாது. ஏனெனில் 'நல்லதே நடக்கிறது' என்றவொரு தோற்றத்தை அரசாங்கமும் அவர்தம் ஆதரவாளர்களும் கட் டமைக்க முயல்கிறார்கள். அவ்வாறான ஒரு சித்திரத்தையே மத்திய வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வழங்க முனை கின்றன. 'நாடு வழமைக்குத் திரும்புகிறது' என்ற கதையாடல் முன்னிறுத்தப்படுகிறது. இது ஒரு வகையில் உண்மையானது. தொடர்ந் தும் கடன் வாங்கி கடனில் நாட்டை நடத்துவது என்ற வகையில் மட்டுமே, நாடு வழமைக்குத் திரும்பியுள்ளது. இலங்கையின் இன்றைய பொருளாதார நிலையை மூன்று விடயங்களின் அடிப்படையில் நோக்க முடியும். அவை இலங் கையின் இன்றைய பொருளாதாரத்தின் நிலை குறித்த குறுக்குவெட்டுச் சித்திரத்தைத் தர வல்லன.

> ***இலங்கைப் பொருளாதாரத்தின் இன்றைய நிலை என்ன என்ற கேள்விக்கான சரியான விடையை யாராலும் சொல்லி விடவும் முடியாது. ஏனெனில் 'நல்லதே நடக்கிறது' என்றவொரு தோற்றத்தை அரசாங்கமும் அவர்தம் ஆதரவாளர்களும் கட்டமைக்க முயல்கிறார்கள். அவ்வாறான ஒரு சித்திரத்தையே மத்திய வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வழங்க முனைகின்றன.***

நிதிக் கொள்கைக் குளறுபடிகள்:

தற்போது, இலங்கை அதன் வரலாற்றில் மிக ஆழமான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள் வதற்கான பயணத்தில் உள்ளது. அடுத்தடுத்த அரசாங்கங்களின் ஆரோக்கியமற்ற நிதிக் கொள்கைகள் இந்த மோசமான செயல்திற னுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கொள்கை என்பது வரவுசெலவுத்திட்டம் தொடர்பான பல்வேறு முடிவுகளை உள்ளடக் கியது. எனவே, பொருளாதாரம் சரியான திசை யில் நகர்வதை உறுதிசெய்ய வரவுசெலவுத்திட் டத்தின் நடத்தை மற்றும் தொடர்புடைய முடிவுகளை உன் னிப்பாகக் கண்காணிப்பது மிகவும் முக்கியம்.

மொத்த அரச செலவீனங்கள் பல நிதிக் கொள்கை முடிவு கள் மூலம் நிதியளிக்கப்பட வேண்டும். மற்றொரு வழியில், பொதுச் செலவீனங்களின் மொத்தத் தொகை குடிமக்கள் மீதான மொத்தச் சுமையைக் குறிக்கிறது. இருப்பினும், இந்த சுமையை மாற்றுவதற்கான பல புத்திசாலித்தனமான மோச மான வழிகளை அரசாங்கம் வெளிப்படுத்துகிறது. குடிமக்கள் தங்களுக்கு விதிக்கப்படும் வரியின் அளவைக் கொண்டு அர சாங்கத்தின் சுமையை அளவிடுகிறார்கள் என்பது அறிந் ததே. எனவே, பல அரசாங்கங்கள் இந்தச் சுமையை மாற்ற தந்திரமான வழிகளைப் பயன்படுத்துகின்றன.

முதலாவதாக, சுமை மறைமுகமாக தற்போதைய வரி செலுத் துவோருக்கு மாற்றப்படுகிறது. தனிநபர் வருமான வரி போன்ற நேரடி வரிகள், வற் போன்ற மறைமுக வரிகளுடன் ஒப்பிடும்போது குடிமக்களுக்கு அதிகம் தெரியும். எனவே, இலங்கையில் நிதிக் கொள்கை வகுப்பாளர்கள் மறைமுக மூலங்களிலிருந்து வரும் வரி வருமானத்தையே அதிகம் நம் பியுள்ளனர். கடந்த இருபது ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண் டும், மறைமுக வரி வருமானம், நேரடி வரி வருமானத்தை விட அதிகமாக உள்ளது. மிக முக்கியமாக, மறைமுக மற்றும் நேரடி வரி வருமானத்திற்கு இடையே வளர்ந்து வரும் இடை வெளி மிகவும் முக்கியமானது. இந்த வேறுபாடு (மறைமுக-நேரடி) 2020 முதல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2023 முதல் 2024 வரை நிலைமை இன்னும் மோசமடைந்துள்ளது. மறைமுக வரிகளின் பின்னடைவுத் தன்மை காரணமாக, இந்தப் போக்கு ஏழைகளை மிகவும் கடுமையாகப் பாதித்து நாட்டில் வருமான சமத்துவமின்மையை மேலும் அதிகரித் துள்ளது.

மொத்த செலவினச் சுமையை எதிர்கால வரி செலுத்துவோருக்கு மாற்றுவதற்கான இரண்டாவது வழி, ஒட்டுமொத்த வரவு செலவுப் பற்றாக்குறையை (துண்டுவிழும் தொகையை) கடனாக நிதியளிப்பது தொடர்பான நிதி முடிவுகளில் இது பிரதிபலிக்கிறது. எளிமையான சொற்களில், நிதிக் கொள்கை வகுப்பாளர்கள் மொத்தச் செலவினத்தின் குறிப்பிடத்தக்க பகுதியை ஈடுகட்ட கடன்களைப் பெற முனைகிறார்கள். இந்தச் சூழ்நிலையில், எதிர்காலச் சந்ததியினர் வட்டி வடிவில் அபராதத்துடன் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். இருப்பினும், இந்த உத்தியால் உருவாக்கப்பட்ட மாயையின் காரணமாக அரசாங்கம் ஏற்கனவே உள்ள வரி செலுத்துவோரை மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியும். ஆனால் அது நீண்டகாலத்திற்கல்ல.

பொதுக்கொள்கைக் குளறுபடிகள்:

சர்வதேச நாணய நிதியத்தின் சொற்படி ஆடுவது என்ற முடிவை தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ளது. இதை அவர்கள் மறுத்தாலும் அவர்களது செயல்கள் அதை மீண்டும் மீண்டும் உறுதி செய்கின்றன. குறிப்பாக ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம். அரசாங்க அச்சுத் திணைக்களம் செலவு குறைந்ததாக இல்லாததால், அரசாங்கம் பாடசாலைப் பாடப்புத்தகங்களை அச்சிடும் பணியை 29 தனியார் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ அண்மையில் தெரிவித்தார். 'அரச அச்சுத் திணைக்களம் சந்தைக்கான போட்டி விலைகளை வழங்குவதில்லை', என்றும் 'முந்தைய அரசாங்கங்களால் அங்கு அதிகப்படியான பணியாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டமையால், உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது. வெளியில் அச்சிடுவது அரசாங்கத்திற்கு மலிவானது.' என்று அமைச்சர் ஜெயதிஸ்ஸ அண்மையில் கூறினார்.

அரசாங்கம் செய்ய வேண்டியது, அரசாங்க அச்சுத் திணைக்களத்தை வினைத்திறனுள்ளதாக மாற்றுவதே. இவ்வாறு அரசின் கடமையை தனியாருக்குக் கொடுப்பதல்ல. அரசாங்க அச்சுத் திணைக்களம் வெறுமனே பாடப்புத்தகங்களை மட்டும் அச்சிடும் ஒரு நிறுவனமன்று. அரசின் அனைத்து உத்தியோகபூர்வ அச்சாக்கல்களும் இங்குதான் நடைபெறுகின்றன. பாராளுமன்ற அறிக்கைகள், சட்டமூலங்கள் தொட்டு வாக்குச் சீட்டுகள் வரை இங்குதான் அச்சாகின்றன. இந்நிலையில் இதை வினைத்திறனுள்ளதாக மாற்றி அதன் மூலம் அரசாங்கம் பணத்தை மிச்சப்படுத்த வேண்டுமேயன்றி இவ்வாறு குறுக்கு வழிகளில் அல்ல.

இதேபோலவே, தேசிய லொத்தர் சபை, நான்கு தனியார் ஏலதாரர்களுக்கு லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கான டெண்டர்களை வழங்கியுள்ளது என்றும் இலங்கை அமைச்சரவை, 38 முதலீட்டுத் திட்டங்களுக்கு அரச நிலங்களை அந்நிய நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விடுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அமைச்சர் நலிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார். இன்று அரசாங்கத்தில் உள்ள ஜே.வி.பி-யின் கடந்தகாலத்தைக் கொஞ்சம் திரும்பிப் பார்த்தால் அரச சேவைகள் தனியார்மயமாக்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்தவர்கள் இவர்கள். அரச காணிகளை அந்நிய நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு வழங்குவதைத் 'தேசச் துரோகம்' என்று பாராளுமன்றில் எதிர்கட்சி வரிசையில் அமர்ந்தபடி குற்றஞ்சாட்டியவர் அனுரகுமார திசாநாயக்க. இன்று ஆட்சிக்கட்டிலில் அமர்ந்துள்ளபோது அவையனைத்தும் சரியாகத் தெரிகின்றன. அண்மையில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கியிடம் இருந்து கடனாகப் பெற்றுள்ளது. கடனில் காலத்தை ஓட்ட இந்த அரசாங்கமும் முயற்சிக்கின்றது.

> ***2028-ஆம் ஆண்டு முதல் இலங்கை தனது கடனை மீளச் செலுத்தத் தொடங்க வேண்டும். அதுவரை அந்நியக்கடன் என்ற வெடிகுண்டு தொடர்ந்து பெருத்து அரசாங்கத்தின் எதிர்காலத்தின் மேல் தொங்கியபடியே இருக்கும். அதைச் சமாளிப்பது எளிதல்ல.***



அந்நியக் கடன்: காத்திருக்கும் வெடிகுண்டு:

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மையம் அந்நியக் கடன், அதிலும் குறிப்பாகத் தனியாரிடமிருந்து அதிக வட்டிக்குப் பெறப்பட்ட கடனாகும். தனியார் கடன் வழங்குநர்களுடனான ஒப்பந்தத்தைப் பொறுத்தவரை, செப்ரெம்பர் 2024 ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தனியார் கடன் வழங்குநர்களுக்கு முந்தைய அரசாங்கத்தால் ஒரு வரைவு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அது நாட்டின் தேர்தல் சட்டங்களை மீறுவதாகும். உண்மையில் இது மக்கள் மீதும் புதிய ஜனாதிபதி மீதும் ஒரு ஒப்பந்தத்தை திணிக்க வடிவமைக்கப்பட்ட ஒரு சூழ்ச்சியாகும், இது தேசத்தின் நலன்களுக்கும் மக்கள் விருப்பத்திற்கும் எதிரானது. ஆனால் முட்டாள்தனமாக புதிய அரசாங்கம் இந்தத் தீங்கு விளைவிக்கும் ஒப்பந்தத்தை அங்கீகரித்தது. அது அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமில்லை. இந்த ஒப்பந்தத்தை சவாலுக்குட்படுத்தியிருக்க முடியும்.

பொருளாதார நெருக்கடியின் பின்னர் தனியார் கடன் வழங்குநர்களுடன் ஒரு புதிய உடன்படிக்கையை அரசாங்கம் செய்திருக்க முடியும். ஆனால் இலங்கையின் ஆட்சியாளர்கள் நாட்டிற்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் ஒப்பந்தமொன்றுக்கு உடன்பட்டனர். உலகின் பல நாடுகள் இவ்வாறு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தபோதெல்லாம் கடனில் பகுதிகள் இரத்து செய்யப்பட்டன. ஈக்வடார், ரஷ்யா, அர்ஜென்டினா, செர்பியா மற்றும் ஐவரி கோஸ்ட் போன்ற பிற நாடுகள் மிகப் பெரிய கடனின் பகுதி ரத்து உள்ளிட்ட கடன் மறுசீரமைப்புகளுக்கு ஒப்புக் கொண்டுள்ளன. 2009-ஆம் ஆண்டில் ஈக்வடாருக்குக் கிட்டத்தட்ட 70% கடன் ரத்து வழங்கப்பட்டது. மூன்றரை ஆண்டுகள்

பணம் செலுத்துதல் நிறுத்தி வைக்கப் பட்ட பின்னர், 2005-ஆம் ஆண்டில் அதன் கடனின் முதல் மறுசீரமைப்பின் போது, அர்ஜென்டினாவின் கடனில் 76.8% ரத்து செய்யப்பட்டது. ஆனால் இந்த ஒப் பந்தம் வெறும் 15% குறைப்புக்கே உடன் பட்டது. இது அபத்தமானது.

2028-ஆம் ஆண்டு முதல் இலங்கை தனது கடனை மீளச் செலுத்தத் தொடங்க வேண்டும். அதுவரை அந்நி யக்கடன் என்ற வெடிகுண்டு தொடர்ந்து பெருத்து அரசாங்கத்தின் எதிர்காலத் தின் மேல் தொங்கியபடியே இருக்கும். அதைச் சமாளிப்பது எளிதல்ல. ஆனால் அரசாங்கம் இப்போது அதைப்பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஏனெ னில் அன்றாட ஆட்சியிலே ஆட்டங் காணுகிறது என்பதே உண்மை.

> ***இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மையம் அந்நியக் கடன், அதிலும் குறிப்பாகத் தனியாரிடமிருந்து அதிக வட்டிக்குப் பெறப்பட்ட கடனாகும்.***

நிறைவுக் குறிப்புகள்:

இன்று நீங்கள் இரண்டு இலங்கையைத் தரிசிக்க முடியும். முதலாவது கொழும்பில் நீங்கள் காணுகின்ற வண்ணம யமான, மக்கள் திரளாகக் கொண்டாட்டங்களில் ஈடுபடுகின்ற இலங்கை. இரண்டாவது, மூன்றுவேளை உணவு உண்ணவி யலாத, பாடசாலைகளுக்குப் பசியோடு செல்கின்ற, அத்தியா வசியப் பொருட்களையே வாங்க இயலாத இலங்கையர் களின் இலங்கை. அரசாங்கம் ரணில் கைது போன்ற சாகசங்களின் வழி பொதுப்புத்திக் கதையாடலைத் திசைதிருப்ப முயல்கிறது. ஆனால் அது நீண்ட காலத்திற்கல்ல. நாட்டின் இன்றைய நிலைமை இன்னொரு பொருளாதார நெருக்கடிக்குக் கோடுகாட்டுகிறது. ஒரு சம்ப வத்தோடு இதை நிறைவு செய்கிறேன். கொழும்பின் புறநகர்ப் பகுதியில் முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தேன். ஒரு இடத்தில் என் வாகனம் தரித்து நின்றது. பாடசா லைகள் முடிவடைந்த நேரம். நான்கு பாடசாலை மாணவிகள் (உயர்தரம் கற்பவர்கள் என்பது என் அனுமானம்) நடந்து போய்க் கொண்டிருந் தார்கள். அவர்களில் ஒருவர் தீடிரென்று தடுமாறி விழுந்தார். பின்னர் சுதாகரித்துத் தன்னை ஆசு வாசப்படுத்தி நடந்து சென்றார். சில வினாடிகளில் யாரோ விழும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். இன்னொரு மாணவி விழுந்திருந்தார். எனது வாகனம் அப்போது புறப்பட் டிருந்தது. ஓட்டுனரிடம் விடயத்தைச் சொல்லி நிறுத்தச் சொன்னேன். அவர் சொன்னார்: 'சாப்பிடாமா ஸ்கூலுக்குப் போயிருப்பாங்க, அதுதான்'.



meenilankco@thaiveedu.com





குர்தீஸ் விடுதலை இயக்கம் (PKK):

ஆயுதப் போராட்ட முடிவும் எதிர்காலமும்

– ரூபன் சிவராஜா

ஆயுதப் போராட்டத்திற்குச் சாதகமான பிராந்திய மற்றும் சர்வதேச புறநிலை தற்போதைய அரசியலில் வெகு குறைவு அல்லது இல்லை என்பது யதார்த்தம். தற்போது என்பதுகூட இல்லை. பின்-செப்ரெம்பர் 11 அரசியல் யதார்த்தம் அத்தகைய நிலையையே தோற்றுவித்துள்ளது. விடுதலைக்கான ஆயுதப் போராட்டங்களும் பயங்கரவாத சட்டகத்திற்குள் மிகச் சாதுரியமாகக் கொண்டுவரப்பட்டுவிட்டன.

கடந்த ஜூன் மாதம் குர்தீஸ் விடுதலை இயக்கம் (PKK) ஆயுதங்களைக் கைவிடுவதாக அதிகாரபூர்வமாக அறிவித்தது. அதன் ஓரம்சமாக வட-ஈராக்கில் ஆயுதங்களை எரிக்கின்ற சடங்குபூர்வான குறியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. அதனை அடுத்து ஓகஸ்ட் மாதத்திலிருந்து துருக்கிய அரசாங்கத்திற்கும் - குர்தீஸ் விடுதலை இயக்கத்திற்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன. அவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முன்னேற்றகரமான கட்டத்தினை எட்டியிருப்பதான செய்திகளும் வெளிவந்துள்ளன. ஆனபோதும் சமாதானத் தீர்வு நோக்கிய அடுத்த கட்டமென்பது, காத்திரமான இராஜதந்திர முனைப்புகளிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதிலும் தங்கியுள்ளதாகவும் கருதப்படுகின்றது. பி.கே.கே ஆயுதக் கைவிடலை முன்னெடுத்தமையின் பின்னணியும் தேவையும் குறித்த ஆழமான பார்வை அவசியப்படுகின்றது. துருக்கியின் ஒடுக்குமுறைக்கெதிரான குர்தீஸ் மக்களின் போராட்டத்திற்கு 40 ஆண்டு கால வரலாற்று நீட்சி உள்ளது. 40,000 வரையான குர்தீஸ் மக்களின் உயிர்களையும் காவுகொண்டிருக்கின்றது.

அடிப்படையில் துருக்கியின் எர்டோகானின் (Erdogan) ஆட்சி பீடம் சர்வாதிகாரப் போக்குடையது. சமகால உள்ளக மற்றும் பிராந்திய அரசியற் புறநிலைகளைக் கையாள்வதற்கான உத்திசார் தந்திரோபாயமாக அவர் சமாதான ஈடுபாட்டினைக் காட்டுகின்றாரோ என்ற சந்தேகங்களும் பலமட்டங்களில் உண்டு.

ஆயுதக்கைவிடல்:

பி.கே.கே.-இனைப் பொறுத்தமட்டில் ஆயுதங்களை முற்றிலும் சுயகளைவு செய்து, சமாதானத்தின்பால் தம்மை ஈடுபடுத்த முன்வந்திருக்கின்றது. இதன் பின்னணி என்பது இராணுவ ரீதியில் அவர்கள் பலமிழந்துள்ளதோடு, ஆயுதப் போராட்டம் எதுவித தீர்வுக்கும் இட்டுச்சொல்லாது என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளமையுமான இரட்டைக் காரணங்களைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள சவால்களில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற வேண்டுமாயின் துருக்கிய அரசாங்கம் திட்டவட்டமான அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும். குர்தீஸ் மக்களின் உரிமைகளுக்கான அங்கீகாரம், முன்னாள் போராளிகளுக்கான மறுவாழ்வு ஏற்பாடுகள், பிராந்திய மோதல்கள் உட்பட்ட பி.கே.கே.-இன் உள்ளக முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணும் வகையிலான துல்லியமான மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

மறுசீரமைப்பு என்பது அரசியல் யாப்பு, சட்ட ரீதியான சீர்திருத்தங்களின் மூலம் குர்திஸ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதைக் குறிக்கின்றது. ஆயுதப் போராட்ட முடிவுக்கு ஆதரவளிக்கும் வகையில் சில நல்லெண்ண நடவடிக்கைகளை துருக்கி முன்னெடுத்துள்ளது. பி.கே.கே போராளிகளுக்கு பொதுமன்னிப்பு அளித்தல், பல ஆண்டுகளாகச் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த அரசியற் கைதிகளின் விடுதலை ஆகியன அதற்குள் அடங்குகின்றன. வட-ஈராக்கின் (Sinjar) மலைகளிலுள்ள பல்லாயிரக்கணக்கான குர்தீஸ் போராளிகளுக்குப் பொதுமன்னிப்பு அளிக்க குர்தீஸ் தரப்பில் வலியுறுத்தப்படுகின்றது. அவர்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவது மற்றும் அரசியல் நீரோட்டத்திற் கலந்து கொள்வதற்கு பொதுமன்னிப்பு அவசியமானது.

பரந்த சமூகப் பங்கேற்பு, பிராந்திய கூட்டிணைவும் ஒத்துழைப்பும், கண்காணிப்பு முறைமைகளுடனான வெளிப்படைத் தன்மை, பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்

பாடுகள், அதிகாரச் சமநிலை உட்பட்ட விடயங்கள் கவனத் திலெடுக்கப்பட வேண்டியவற்றின் பட்டியலில் வருகின்றன. முன்னைய காலங்களிற் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எதிர்த்துவந்த துருக்கியின் தீவிர வலதுசாரிக்கட்சியான தேசிய இயக்கக் கட்சி (The Nationalist Movement Party - MHP) இம்முறை பேச்சுவார்த்தைகளை ஆதரிக்கிறது என்பது அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியான இடையூறுகளை இல் லாமற் செய்கிறது.

குர்திஸ் விடுதலை அமைப்பு அல்லது பி.கே.கே.–யின் தோற்றமும் பின்னணியும்:

'குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி' என்பது அடிப்படையில் ஒரு இராணுவ, அரசியல் அமைப்பு. பெயரிற் தொழிலாளர் கட்சி என இருந்தாலும் குர்திஸ் விடுதலை அமைப்பு அல் லது பி.கே.கே என்றே அது உலகளவில் அறியப்பட்டிருக் கின்றது. 'PKK', ஒரு இடதுசாரி கெரில்லா இயக்கம், 1978-இல் தென்கிழக்கு துருக்கியில் குர்தீஸ் மக்களுக்கான குர் திஸ்தான் தனிநாட்டினை உருவாக்கும் இலக்குடன் நிறுவப் பட்டது. 1990-களில், PKK தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, துருக்கியின் எல்லைகளுக்குள் கூடுதல் தன்னாட் சியைக் (Greater autonomy) கோரியது. இன்றைய சூழலில் துருக்கி, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரித் தானியா ஆகிய நாடுகளின் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் பி.கே.கே உள்ளது.


அப்துல்லா ஒசாலான் பி.கே.கே உருவாக்கத்தை அடுத்து சிரியாவில் தங்கியிருந்து இயக்கத்தை வழிநடத்தினார். பின் னர் அங்கிருந்து வெளியேற வேண்டிய நெருக்கடி ஏற்பட, 1999-இல் கென்யாவில் துருக்கிய உளவுத்துறையினராற் கைதுசெய்யப்பட்டு இஸ்தான்புல்லில் சிறை வைக்கப்பட் டார். இம்ராலி தீவில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, அங்கு நீண்ட காலமாக தனிமைப்படுத்தப்பட்டு வைக்கப் பட்டார். மரணதண்டனை பின்னர், ஆயுள்தண்டனையாக மாற்றப்பட்டது. அவரின் கைது பி.கே.கே.-இனை அமைப்பு ரீதியாக, இராணுவ மற்றும் அரசியல் ரீதியாகப் பலவீனப்ப டுத்தியது. 1993 முதல் அவர் குர்தீஸ் தேசிய இனப்பிரச் சனைக்கு அரசியல் தீர்வை முன்வைத்து வந்துள்ளார். சிறை யில் இருந்தபோதும் புத்தகங்களை எழுதினார், துருக்கி - பி.கே.கே இடையிலான முன்னைய சமாதானப் பேச்சுவார்த் தைகளிலும் அவரது பங்கேற்பு இருந்தது. 2002-இல், பி.கே.கே, குர்திஸ்தான் சுதந்திர ஜனநாயக காங்கிரஸ் (KADEK) எனப் பெயர் மாற்றம் செய்து, வன்முறையைக் கைவிடுவதாகப் பிரகடனப்படுத்தியது. 2005-இல் அமைப்பு தனது பழைய பெயருக்கு மீண்டும் திரும்பியது.

அடிப்படையில் இந்த அமைப்பு துருக்கியில் உள்ள குர்தீஸ் மாணவர்களால் 1978-இல் துவங்கப்பட்டதாகும். கொம்யூனி சக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட மாணவர்கள் அப்துல்லா ஒசாலான் தலைமையில் இதனை உருவாக்கினர். 1990-களில் துருக்கியப் படைகளுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டது. மேற்கு ஐரோப்பாவிலும் இந்த அமைப்பு சில தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

உள்ளக மற்றும் பிராந்திய விளைவு:

குறிப்பாக சிரியாவிலுள்ள குர்திஸ் இன மக்கள் மற்றும் மத்திய கிழக்கு பகுதிகளில் இது எத்தகைய விளைவுகளுக்கு இட்டுச்செல்லும் என்பது குறித்த கேள்விகள் எழுகின்றன. ஒசாலானின் அறிவிப்பினை பி.கே.கே.-இன் இராணுவப் பிரிவின் தலைவர்கள், குறிப்பாக வடக்கு ஈராக்கின் மலைப் பிரதேசங்களைத் தளமாகக் கொண்டுள்ள இராணுவத் தலைவர்கள் எவ்வாறு எடுத்துக்கொள்வார்கள் என்ற கேள்வி நிலவுகின்றது. கடந்த பல ஆண்டுகளாக துருக்கி விமானப்ப டையால் இந்த மலைப் பிரதேசங்கள் மீது கடுமையான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

எர்டோஹான் அரசாங்கம் - பி.கே.கே இடையிலான இதற்கு முந்தைய சமாதான உடன்படிக்கை, 2013-இல் மேற்கொள் ளப்பட்டு, அது நாடு முழுவதும வரவேற்பினைப் பெற்றது. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அந்த உடன்ப டிக்கை நீடிக்கவில்லை. தற்போதைய ஆயுதக் கைவிடலும் அதன் அடுத்தகட்ட நகர்வுகள், நடவடிக்கைகளும் பி.கே.கே.-இன் இராணுவத் தலைவர்களால் எவ்வாறு எதிர் கொள்ளப்படும் என்பது ஒரு முக்கியமான கேள்வியாக உள்ளது, வடக்கு ஈராக்கின் மலைப்ப குதிகளில் இறுதிப் பல ஆண்டுகளிலும் துருக்கிய விமானப்படைகள் கடும் குண்டுவீச்சுத் தாக்கு தல்களை மேற்கொண்டன. YPG (மக்கள் பாதுகாப்பு அலகுகள்) என்று அழைக்கப்படும் சிரி யாவிலுள்ள PKK-இன் கிளை அமைப்பு, அமெரிக்க ஆதரவு பெற்ற சிரியா ஜனநாயகப் படைகளின் (SDF) முதுகெலும்பாக உள்ளது. SDF சிரியாவின் வடகிழக்குப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது. அத்தோடு பல ஆண்டுகளாக துருக்கி இராணுவத்துடனும் துருக்கிய ஆதரவு சிரிய-அரேபியக் குழுக்களுடன் போராடி வந்திருக் கின்றது. பி.கே.கே.-இனது ஆயுதக் கைவிடல், சிரியாவின் குர்திஷ் கட்டுப்பாட்டிலுள்ள நிர்வாகத் திற்கும் துருக்கிய ஆதரவு பெற்ற சிரியாவின் புதிய இடைக்கால அரசாங்கத்திற்கிடையிலான ஓர் உடன்படிக்கையை எட்டுவது எளிதாக இருக்கும் என நம்பப்படுகின்றது.



> ***அடிப்படையில் இந்த அமைப்பு துருக்கியில் உள்ள குர்தீஸ் மாணவர்களால் 1978-இல் துவங்கப்பட்டதாகும். கொம்யூனிசக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட மாணவர்கள் அப்துல்லா ஒசாலான் தலைமையில் இதனை உருவாக்கினர்.***

குர்தீஸ் மக்களும் பின்னணியும்:

மத்திய கிழக்கில் துருக்கி, ஈரான், ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் வாழுகின்ற தனித்துவமான இனக்குழுமம். நான்கு நாடுகளிலும் உள்ள மலைப்பிரதேசங்களான, குறிப்பாக Anti-Taurus மற்றும் Zagros மலைத்தொடர்களைச் சூழ வுள்ள உயர்நிலப்பிரதேசங்களைப் பூர்வீக வாழ்விடமாகக் கொண்டுள்ளனர். Eufrat, Tigris போன்ற முக்கியமான நதி களைக் கொண்ட மலைப்பிரதேசங்கள் நிறைந்த நிலத்தோற் றத்தை உடையது குர்திஸ்தான்.

துருக்கியின் இஸ்தான்புல், அங்காரா மற்றும் ஈரானின் தேஹ்ரான் போன்ற நகரங்களில் வசிக்கின்றனர். மொத்த மக் கட்தொகை 40 மில்லியன்கள் எனக் கணிக்கப்படுகின்றது. குர்திஸ் இனத்தவர் பெரும்பான்மையாக வாழும் இப்பிரதே சங்கள், ஏனைய சிறுபான்மையினரையும் உள்ளடக்கியது. மக்கள் தொகையிற் பெரும்பான்மையாகவுள்ள போதும் குர்திஸ் மக்களின் தன்னாட்சி உரிமை மறுக்கப்பட்டு, ஒடுக் குமுறைகளை அனுபவித்த புறநிலையிலேயே தனிநாட்டுக் கான போராட்டத்தினை அவர்கள் துவங்கினர். பி.கே.கே அமைப்பும் இந்நான்கு நாடுகளிலும் கட்டமைப்புகளைக் கொண்டு இயங்கி வந்தது. குர்தீஸ் தேசியவாதமும் சோசலி சமும் இணைந்த அரசியற் கொள்கையை இவ்வமைப்புக் கொண்டிருந்தது. பல்வேறு அரசியல் அமைப்புகளும் கட்சி களும் பி.கே.கே.-இன் ஆதரவு சக்திகளாக இருந்துள்ளன.

துருக்கியில் 15 மில்லியன், ஈரானில் 8 மில்லியன், சிரியாவில் 2 மில்லியன் மற்றும் ஈராக்கின் மொத்த மக்கட் தொகையின் 15 - 20 சதவீதமாகவும் குர்திஸ் மக்கள் உள்ளனர். அத் தோடு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளிலும் புலம்பெயர் சமூகமாக குர்திஸ் மக்கள் வாழ்கின்றனர். குறிப்பாக ஜேர் மனியில் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர். ஈராக்கில் குர்திஸ் பிரதேசங்களுக்கு சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப் பட்டுள்ளது. சிரியாவின் வடகிழக்கிலும் சுயாட்சி அதிகாரம் எட்டப்பட்டுள்ளது. துருக்கியுடன் மோதல் தொடர்ந்த நிலை யிலேயே தற்போதைய ஆயுதக் கைவிடலும் சமாதான முன் னெடுப்புகளும் இடம்பெறுகின்றன. புலம்பெயர் குஸ்திஸ் சமூகம் குர்திஸ்தானின் அரசியற் போராட்டத்திற்கான ஆதரவு சக்தியாக செயற்பட்டுவருகின்றது.

நிபந்தனைகள்:

ஆயுதக் கைவிடலுக்கான தெளிவான நிபந்தனையை பி.கே.கே முன்வைத்திருந்தது. பி.கே.கே தலைவர் அப்துல்லா ஒசாலான் சமாதான முன்னெடுப்புகளுக்குத் தலைமை தாங்குவது, துருக்கியில் பி.கே.கே அமைப்பின் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், சட்டரீதியான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் ஆகிய நிபந்தனைகளுடனேயே ஆயு தக் களைவுக்கு உடன்பட்டுள்ளது. மத்திய கிழக்கின் புவி சார் மாற்றங்களும் துருக்கி மற்றும் பி.கே.கே.-இன் சமாதான முனைப்பிற்கான காரணமாகவும் கூறப்படுகின்றது. குறிப் பாக, சிரியாவில் அசாத் ஆட்சிபீடத்தின் வீழ்ச்சி மற்றும் பிராந்தியத்தில் ஈரானின் செல்வாக்குச் சரிந்துவரும் புறநி லையில் தொலைநோக்கு அடிப்படையில் நிலைத்தன்மை யையும் அங்கீகாரத்தையும் அடையும் நோக்கில் இருத ரப்பும் சமாதானப் பேச்சுகளில் முனைப்புக் காட்டுவதான ஒரு கருதுகோளும் சர்வதேச மட்டத்தில் நிலவுகின்றது.

2024 இறுதியில், சிரியாவில் பஷார் அல்-அசாத் ஆட்சிபீடம் இஸ்லாமிய போராளிகளால் கவிழ்க்கப்பட்டு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டுள்ளது. காசாவில் இஸ்ரேல் படைகளின் ஆக்கிரமிப்பினால் ஹமாஸ் பலவீனப்படுத்தப் பட்டுள்ளமை, லெபனானில் ஹெஸ்பொல்லா மீதான இஸ்ரே லின் தாக்குதல்கள் மற்றும் சமீபத்தில் யேமனில் ஹூதிகள் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள், இஸ்ரேல் மற்றும் அமெ ரிக்காவின் ஈரான் மீதான தாக்குதல்கள் ஆகியவை பிராந்தி யத்தில் ஈரானின் செல்வாக்கினைச் சரியச் செய்துள்ளன. சிரியா மீதும் குறிப்பாக இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள கோலான் மலைகளை அண்டிய பகுதிகளில் இஸ்ரேல் இராணுவ நடவ டிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

பிராந்திய அரசியற் சமநிலை:

மத்திய கிழக்கின் பிராந்திய அரசியற் சமநிலை மறுவடிவ மைப்பிற்கு உட்பட்டிருக்கின்றது. இத்தகு பிராந்திய மாற்றங்



களின் பின்னணியில் நோக்கும் போது கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலப் போராட்டத்திற்குப் பின்னர் குர்தீஸ் மக்கள் தமது அரசியல் உரிமை, ஜனநாயகத்திற் பங்கேற்பு மற்றும் சட்டபூர்வமான அங்கீகாரம் ஆகியவற்றை உறுதிப்ப டுத்துவதற்கான பாதையைத் தற்போதைய சமாதான முன் னெடுப்பின் மூலம் அடையலாம் என்ற நம்பிக்கை நிலவு கின்றது. இந்தச் செய்தி அல்லது சமிக்ஞை 2025-ஆம் ஆண்டின் குர்தீஸ் தேசிய மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது. அம்மாநாட்டில் பல குர்தீஸ் கட்சிகளும் அமைப்புகளும் பங் கேற்றன. பிராந்திய ரீதியில் குர்திஷ் மக்களிடையே மூலோ பாய ஒருங்கிணைப்பு நிலவவேண்டியதன் முக்கியத்துவமும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டதாக தகவல்கள் வெளிவந் திருந்தன.

பி.கே.கே விவகாரம் சார்ந்த துருக்கியின் அணுகுமுறை நேர் மறையான விளைவுகளோடு நகருமாயின் மேற்கிற்கும் துருக் கிக்குமடையிலான உறவினையும் அது மேம்படுத்துவதற் குரிய அடித்தளமாக அமையும். தற்போது ஐரோப்பாவின் பாதுகாப்புசார் விவகாரங்களில் துருக்கி தனது வகிபா கத்தினை நிறுவ முயன்று வருகின்ற சூழலில் குர்திஸ் விவகா ரத்தில் தீர்வைக் கண்டடைவது சாதகமான வாய்ப்புகளை துருக்கி-மேற்கு உறவில் திறக்கக்கூடியது. ரஷ்ய - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பேச்சுவார்த்தைகளில் துருக்கி நடுவராகச் செயற்பட்டு வருகிறது. உக்ரைன் ஜனாதி பதி வொலோடிமிர் செலென்ஸ்கியும், ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புதினும் இஸ்தான்புலில நேரடியாகச் சந்தித்து பேசுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யத் தயார் என்றும் எர்டோஹான் கூறியிருந்தமை நினைவுகொள்ளத்தக்கது.

இந்த நகர்வு எப்படி நிகழ்ந்தது?

1978-இல் குர்திஸ்தான் தொழிற்கட்சியை நிறுவும் போது அப்துல்லா ஒசாலானின் இலக்கு சுதந்திர சோசலிச குர்திஸ் தான் தேசத்தை நிறுவுவதாகும். தற்போது தனியரசுக் கோரிக்கையையும் ஆயுதங்களையும் கைவிட்டுத் அரசியற் பாதையில் மாற்றத்தினை அறிவித்துள்ளது பி.கே.கே அமைப்பு. இந்த ஆண்டு மே மாதம், ஒரு காணொளிப் பதிவு மூலம் அப்துல்லா ஒசாலான் ஆயுதப் போராட்டத்தின் முடிவை யும் ஜனநாயக அரசியற் பாதையின் தெரிவையும் அறிவித் துள்ளார். ஆயுதப் போராட்டத்தின் முடிவு தொடர்பான அறி வித்தலை விடுத்து, இதுவொரு 'வரலாற்று வெற்றி' என்று விவரித்திருந்தார். ஜூலை 11-ஆம் திகதி (2025) வட ஈராக் கின் சுலைமானியாஹ் (Sulaymaniyah) நகரில் ஒரு குறியீட்டு நிகழ்வு நடத்தப்பட்டது. அதாவது குர்தீஸ் போராளிகள் தமது ஆயுதங்களைக் குவித்து எரியூட்டி ஆயுதப்போராட் டத்தின் முடிவைக் குறியீட்டு ரீதியாகப் பிரகடனம் செய்தனர். இது ஆயுதக் களைவு சார்ந்த செயற்பாட்டின் முதலாவது படிநிலையாகப் பார்க்கப்படுகிறது.

ஆயுதக் கைவிடல் பிராந்திய அமைதிக்கு முக்கியமான பங் களிப்பதோடு, ஆகப்பெரும் திருப்புமுனைச் சம்பவம் என்றும் துருக்கிய அரசாங்கத் தரப்பு வரவேற்றுள்ளது. முழுமையான ஆயுதக் களைவிற்கு துருக்கிய மற்றும் ஈராக்கிய இராணு வம், உளவுத்துறை, குர்தீஸ் பிராந்திய (வட ஈராக்) ஆட்சி நிர்வாக அதிகாரிகள் உட்பட்ட தரப்புகளை உள்ளடக்கிய பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. துருக்கியிலுள்ள குர்தீஸ் ஆதரவு டி.ஈ.எம் எனும் அரசியற் கட்சி (Pro-Kurdish Peoples' Equality and Democracy) சமாதானப் பேச்சுக் களுக்கான அனுசரணைத் தரப்பாகப் பங்காற்றுகின்றது. ஆயதக் களைவு நடவடிக்கை 3 - 5 மாதங்களுக்குள் நிறை வடைய வேண்டும், தாமதங்கள் வீண்சீண்டுதல்களைத் தோற்றுவித்துவிடும் என்று துருக்கியின் ஆளும் AKP கட்சி கூறியிருக்கின்றது. ஆனால் முழுமையான ஆயதக் களைவு என்பதோடு இந்த நடவடிக்கை நிறைவு பெற்றுவிடப்போவ தில்லை. அதற்குமப்பால் நிரந்தர அரசியற் தீர்வு, சட்டப்பாது காப்பு உட்பட்ட பேண்தகு சமாதானத்தை நோக்கிய பாதை நெடியதும் கடியதுமாகும்.

இந்த முடிவுக்கான பல்வேறு காரணிகளில் ஒன்று ஒசாலா னின் தலைமைத்துவச் செல்வாக்கு. 26 ஆண்டுகள் சிறையி லிருந்தபடி ஒரு இயக்கத்தினை வழிநடத்துவதும் அந்த வழி நடத்தலையும் எடுக்கின்ற தீர்மானங்களையும் இயக்கத்தின் தளபதிகளும் போராளிகளும் ஏற்றுக்கொள்வதென்பதும் அசாதாரணமான செல்வாக்கினைப் பறைசாற்றுகின்றது.

40 ஆண்டுகள் கடந்தும் தீர்வின்றி நீடிக்கின்ற ஆயுதப்போ ராட்டத்தினால் பல்லாயிரக்கணக்கான மனித உயிரிழப்புகள், பொருளாதார, சமூக, அரசியல் இழப்புகளும் கணக்கிலெ டுக்கவேண்டியவை. போர் என்பது அடிப்படையில் பேரழிவு களின் சகதி. உள்ளக - சர்வதேச அழுத்தங்களும் அரசியற் தீர்வுக்கான வெளி தொடர்பான நம்பிக்கையும் பி.கே.கே.- இன் இந்த முடிவுக்கான புற உந்துதல்களாக இருந்துள்ளன.



நல்லிணக்கத்தை நோக்கிய ஒரு குறியீட்டு மற்றும் நடைமுறைப் படிநிலையாகவும் இம்முடிவு சித்திரிக்கப் படுகின்றது.



சவால்கள்:

பரஸ்பர நம்பிக்கை சார்ந்த சவால்கள், குறிப்பாக குர்திஸ் மக்களும் பி.கே.கே ஆதரவாளர்களும் துருக்கி மீது முழுதான நம்பிக்கை கொண்டுள்ளனர் எனக் கூறிட முடியாது. ஏனெனில் வரலாற்றில் முன்னர் பலமுறை உடன்படிக்கைகள் மீறப்பட்டுள்ளன. பேச்சு வார்த்தைகள் முறிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும் சட்ட மற்றும் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்து வதோடு, ஒசாலானைச் சிறையிலிருந்து மீட்பது போன்ற நட வடிக்கைகளுக்கான வாய்ப்பாகவும் இந்தச் சூழல் சாதக மாகப் பார்க்கப்படுகின்றது. பி.கே.கே என்பது துருக்கிக்குள் மட்டும் இயங்கும் அமைப்பல்ல. அது ஈராக், சிரியா ஆகிய நாடுகளிலும் இயங்குகின்றது, அந்நாடுகளிலும் செல்வாக்கு மிக்கதாக இருக்கின்றது. இந்நிலையில் ஈராக் மற்றும் வட ஈராக்கின் குர்திஸ்தான பிராந்திய சுயாட்சி அரசாங்கத்திட மிருந்து உத்தரவாதங்களைத் துருக்கி கோருமா என்ற கேள் வியும் முன்வைக்கப்படுகின்றது. ஆயதக் களைவு நடவடிக் கையில் காலதாமதம் ஏற்படுமாயின் அது சமாதான முன்னெ டுப்பில் முறிவினை ஏற்படுத்துமென்ற அச்சம் துருக்கிக்கு உள்ளது. முன்னர் 2013-இல் புதிய போர் நிறுத்தம் அமு லுக்கு வந்ததையடுத்து பி.கே.கே போராளிகள் வடக்கு ஈராக் நோக்கி பின்வாங்கத் தொடங்கினர். இருப்பினும் துருக்கியப் படைகளுக்கும் குர்திஸ் விடுதலை அமைப்பிற்குமிடையி லான மோதல்கள் மீண்டும் வெடித்தன. 2024-இலும் துருக்கி யுடனான போர் நிறுத்தம் முறிவுற்று மீண்டும் மோதல்கள் இடம்பெறத் துவங்கின.

ஆயுதப் போராட்டத்திற்கான புறநிலை:

ஆயுதப் போராட்டத்திற்குச் சாதகமான பிராந்திய மற்றும் சர்வதேச புறநிலை தற்போதைய அரசியலில் வெகு குறைவு அல்லது இல்லை என்பது யதார்த்தம். தற்போது என்பதுகூட இல்லை. பின்-செப்ரெம்பர் 11 அரசியல் யதார்த்தம் அத்த கைய நிலையையே தோற்றுவித்துள்ளது. விடுதலைக்கான ஆயுதப் போராட்டங்களும் பயங்கரவாத சட்டகத்திற்குள் மிகச் சாதுரியமாகக் கொண்டுவரப்பட்டுவிட்டன.

முன்னாள் போராளிகளின் பாதுகாப்பு எவ்வாறு உறுதிப்ப டுத்தப்படும், அவர்கள் குற்றவாளி முத்திரைகளிலிருந்து விடுவிக்கப்படுவார்களா? போராட்ட நடவடிக்கைகளிற் குற் றம்சாட்டப்பட்ட மூத்த தளபதிகளின் நிலை என்ன? தற் போதையை குறியீட்டு நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டு குர்திஸ் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகை யில் எத்தகைய சட்ட, அரசியல் மறுசீரமைப்புகள் முன்னெடுக் கப்படும், அவற்றுக்குரிய பொறிமுறை, திட்டவரைபு என்பன இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

பி.கே.கே அமைப்பின் கிளைகள் ஒருமித்த கருத்துநிலை யில் உள்ளன எனவும் எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக துருக்கிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத பி.கே.கே தரப்புகள் நீண்டகால அடிப்படையில் முரண்பாடு களையும் எதிர்ப்புகளையும் வெளிப்படுத்தக்கூடும். தற் போதைய இந்த ஆயதக் கைவிடல் முடிவு, போராட்டத்தை விற்றுவிட்டதற்கு அல்லது சரணாகதி அடைந்துவிட்டமைக்கு ஒப்பானது என நம்பும் பி.கே.கே குழுக்கள் காலப்போக்கில் எழுச்சி பெறக்கூடும். குறிப்பாக அதன் மைய கட்டளைக்கு வெளியே இயங்கும் கிளைகள் அத்தகு எதிர்நிலைப்பாடு களைக் கொண்டிருக்கும் வாய்ப்புகள் அதிகம். பி.கே.கே இரண்டு இராணுவ அலகுகளுடனான ஒரு அரசியல் அமைப் பாகவே அது செயற்பட்டுவந்தது. Hêzên Parastina Gel (HPG) மற்றும் YekÎneyên Jinên Azad ên Star (YJA-STAR) என்பன அதன் இராணுவ அலகுகள். இவற்றைவிட பெண் களுக்கான தனியான ஒரு இராணுவப் பிரிவினையும் (YJA-STAR) கொண்டிருந்தது.

சிரியா, ஈராக், உட்பட்ட பிராந்தியத் தரப்புகள், அமெரிக்க வெளியுறவுக் கொள்கை ஆகியவற்றின் நலன்சார், அதி காரம் சார் செல்வாக்கு, பி.கே.கே - துருக்கி இடையிலான சமாதான முயற்சிகளை சிக்கலுக்கு உள்ளாக்கக்கூடும். மாறாக சமாதானச் செயல்முறையை ஆதரிப்பதன் மூலம் உதவக்கூடும், அல்லது சதிகள் மூலம் அதனை முறியடிக்க வும் முனையக்கூடும். இந்த வெளித்தரப்புகளும் சக்திகளும் இதுவிடயத்தை எவ்வாறு கையாளப்போகின்றன என்பதில் தெளிவின்மையே நிலவுகின்றது.

உசாத்துணை:

- The conversation | Turkey and the PKK have made historic moves toward peace – now begins the hard diplomatic work | Alpaslan Ozerdem | 02.09.2025
- BBC | Kurdish PKK burns guns in cauldron in big step towards ending Turkey conflict | Ayse Sayin & Paul Kirby | 11.07.2025
- The Guardian | Why has PKK leader called on group to dissolve – and why does it matter? | 27.02.2025 | Bethan McKernan
- Aljazeera | PKK begins disarmament process after 40 years of armed struggle in Turkiye | 11.07.2025
- Aljazeera | Why has the PKK ended its armed struggle? | Inside Story (Documentary) | 11.07.2025
- The conversation | Why are Turkey and the PKK turning to peace – and can it last? 14.05.2025 | Pinar Dinc
- The conversation | How does the PKK's disarmament affect Turkey, Syria and Iraq | 14.07.2025 | Pinar Dinc



rooban.s@thaiveedu.com



சார்லி கேர்க்கின் கொலையும் பாசிசமும் ஒடுக்குமுறையும்

– ரதன் –

அமெரிக்காவில் உள்நாட்டுப் பதட்டங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. அமெரிக்க அரசியல் சூழல் மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சியினர் மத்தியில் பாதுகாப்பற்ற பயம் கொண்ட உணர்வு ஏற்பட்டுள்ளது. தொடரும் வார்த்தை யுத்தங்களும், பிரச்சாரங்களும் உள்நாட்டில் மேலும் குழப்பநிலையை ஏற்படுத்தலாம் என்ற அச்சம் அமெரிக்க அரசியல் சமூகத்தினர் மத்தியில் நிலவுகின்றது. இதன் பின்னால் அமெரிக்காவிற்கு எதிரான சர்வதேச நாடுகளின் தூண்டுதல்கள் இருக்கலாம் என அமெரிக்க அரசு நிறுவனங்கள் சந்தேகப்படுகின்றன. அதே சமயம் அமெரிக்க பாதுகாப்பு மற்றும் உளவு நிறுவனங்கள் அமெரிக்க மக்களை பாதுகாக்கும் வல்லமை கொண்டனவா ? என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. இது அரசியல் கொலைகளை மட்டும் கருத்திற் கொண்டு எழவில்லை. மாறாக ஒவ்வொரு நாளும் தொடரும் கொலைகளையும் வன்முறைகளையும் மையப்படுத்தி எழும் அச்சமாகவுள்ளது.

அமெரிக்காவின் முக்கிய வலதுசாரி ஆர்வலர்களில் ஒருவராகவும், சமூக ஊடகங்களில் மில்லியன் கணக்கானவர்களால் பின்பற்றப்படுபவராகவும் சார்லி கேர்க் (Charlie Kirk) இருந்துள்ளார். அண்மைக் காலங்களில் வலதுசாரிகளின் மத்தியில் அதிகம் அறியப்பட்வராகவும் காணப்பட்டார். வலதுசாரி பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இவர் பிரபல்யம் பெற்றிருந்தார். இவரது பேச்சுக்கள் ஒலி, ஒளி வடிவில் சமூக வலைத் தளங்களில் காணப்பட்டன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் 'MAGA' ('Make America Great Again' என்பதன் சுருக்கம்) இயக்கத்தின் பின்னணியில் முக்கிய செல்வாக்குச் செலுத்தியவர்களில் ஒருவராக அவர் இருந்தார். மத அடிப்படைவாதத்தைத் தனது கருத்தியலாகக் கொண்ட சார்லி கேர்க் வலதுசாரிக் கருத்தியலையும், நவ தாராளவாதக் கருத்தியலையும் உள்வாங்கியவராக வெளிப்பட்டார். எதிர்காலத்தில் அமெரிக்காவின் முக்கிய அரசியல் தலைவர்களில் ஒருவராக வருவார் எனக் கருதப்பட்டார். அமெரிக்க ஜனாதிபதியாகவும் வரக்கூடியவர் எனவும் நம்பப்பட்டார்.

யுட்டா வலி (பள்ளத்தாக்கு) பல்கலைக்கழகத்தில் (Utah Valley University) நடந்த பொது நிகழ்வில் சார்லி கேர்க் கொடூரமாகக் கொல்லப்பட்டார். இக்கொலை அமெரிக்க சமூகத்தில் பல முக்கிய பிரச்சினைகள் குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளது.

•

சார்லி கேர்க்:

ஒக்ரோபர் 14,1993- இல் சிக்காகோ மாநகரின் புற நகரான ஆர்லிங்டன் ஹைட்ஸ் பகுதியில் பிறந்தார். இவரது தந்தையார் ஒரு கட்டட வரைஞர், (architect). தந்தையார் ரம்ப் ரவர் கட்டடம் கட்டுமானப் பணியில் பங்குபற்றியுள்ளார். தாயார் ஒரு பங்குச்சந்தை விற்பனை முகவர். கேர்க் பல்கலைக்கழகத்தில் ஒரு வருடம் பூர்த்தி செய்துள்ளார். அதன் பின்னர் கல்வியைத் தொடரவில்லை. இவரது பெற்றோர் குடியரசுக் கட்சி ஆதரவாளர்கள். இவரும் பாடசாலைக் காலங்களிலிருந்தே குடியரசுக் கட்சி ஆதரவாளர். 2012-ஆம் ஆண்டு ரேனிங் பொயின்ட் யு.எஸ்.ஏ என்ற அமைப்பை உருவாக்கினார். 2016-ஆம் ஆண்டு டொனால்ட் ரம்பிற்காகத் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டார். 2019-இல் ரம்ப் மாணவர் அமைப்பின் Students for Trump தலைவரானார் The Charlie Kirk Show என்ற வானொலி நிகழ்ச்சியையும் நடத்திவந்தார்.

"அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் 'MAGA' இயக்கத்தின் பின்னணியில் முக்கிய செல்வாக்குச் செலுத்தியவர்களில் ஒருவராக அவர் இருந்தார். மத அடிப்படைவாதத்தைத் தனது கருத்தியலாகக் கொண்ட சார்லி கேர்க் வலதுசாரிக் கருத்தியலையும், நவ தாராளவாதக் கருத்தியலையும் உள்வாங்கியவராக வெளிப்பட்டார்."

இவர் பல பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்களைக் குறிப்பாக குடியரசுக் கட்சிக்கு எதிரானவர்களைக் குறி வைத்து மிரட்டியதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தன்னை இணைய வழி பிரச்சாரராக வெளிப்படுத்திய போதும், ஒரு வகையில் வன்முறையாளராகவும் செயல்பட்டிருந்தார்.

•

சார்லி கேர்க்கின் சிந்தனைகள்:

மேலோட்டமாகப் பார்த்தால், சார்லி கேர்க் இணையத்தில் பிர பல்யமாக மிகவும் வித்தியாசமான பாதையைத் தேர்ந் தெடுத்தார்.

பதினேழு வயதில் பொக்ஸ் சனலில் முதன்முதலில் தோன்றி னார். பழமைவாத ஊடகங்கள் மூலம் புகழ் பெற்றார், மேலும் தனது இளைஞர் அமைப்பான Turning Point USA-வை அதன் சொந்த PAC மூலம் அரசியல் செல்வாக்கின் ஒரு செழிப்பான கருவியாக உருவாக்கினார். கேர்க், டிரம்ப் நிர்வா கத்தின் கவனத்தை ஈர்த்தார், மேலும் அனைத்துக் கணக்குக ளிலும் அதன் அணிகளை உருவாக்க உதவினார். எஸ்ரா க்ளீன் (Ezra Klein) சமீபத்திய பத்தியில், கேர்க் அரசியலை 'சரியான வழியில்' பயிற்சி செய்கிறார் என்று வாதிட்டார், குறிப் பாக பல்கலைக்கழகச் சுற்றுப்பயணங்களில். ராபின்சன் போன்றவர்களை சிக்க வைக்கும் அதே நச்சு இணைய இயக் கவியல் வழிமுறையைப் பயன்படுத்தினார். TikTok இணை யத்தைத் தொடக்கினார்.



அவர் 2019-இல் சார்லி கேர்க் ஷோ என்ற வழக்கமான டிஜிட் டல் ஒளிபரப்பைத் தொடங்கினார், மேலும் 2022-இல் ஒரு ரிக்ரொக் இணையத்தைத் தொடக்கினார். அது மில்லியன் கணக்கான பின்தொடர்பவர்களைப் பெற்றது, அவரது நிகழ்ச் சியின் சிறிய காட்சித் துண்டுகள் மற்றும் ஸ்மார்ட்போன்-பதிவு செய்யப்பட்ட சிறிய இசைக் கோர்வைகளால் (RIFFS) நிறைந் துள்ளது. அவர் தனது ஆதரவாளர்கள் வாழக்கூடிய பிரபஞ் சத்தை உருவாக்கினார்.

கேர்க்கின் சுதந்திரமான பேச்சு, வெறுக்கத்தக்க அரசியல் தலைவர்கள் மற்றும் கொள்கைகள் மீதான தவறான தகவல் களைப் பரப்புவது, சதிக் கோட்பாடுகளை ஒளி, ஒலி பரப்பு வது அத்துடன் கவர்ச்சிகரமான சொற்பொழிவுகளை இணை யத்தில் பரப்பவுது ஆகும். 2020 தேர்தல் டொனால்ட் டிரம்ப்மி டமிருந்து திருடப்பட்டது என்ற செய்தியையும் பரப்பினார்.

டெய்லர் ஸ்விஃப்ட்டை 'உங்கள் கணவருக்கு அடிபணியுங் கள்' என்று கூறினார், கறுப்பினப் பெண்களைக் குறிவைத் தார். அவர்கள் மீது Great Replacement conspiracy theory-ஐக் கூறி அச்சப்படுத்தினார்.

கேர்க் வெறுமனே ஜனநாயக அரசியலைப் பின்பற்றவில்லை; அவர் ஆன்லைன் ட்ரோலுக்கு (Troll) ஒரு நேர்த்தியான மற்றும் தொழில்முறை பிரதிபலிப்பாளராக இருந்தார், வைரல் ஒலி கள் மற்றும் கலகம் விளைவிக்கும் podcast monologues-குகள் மூலம் மீண்டும் மீண்டும் விளம்பரப்படுத்தப்படும் பொறுப்பற்ற பொய்களைக் கல்லூரி வளாகங்களிலோ அல் லது பொது அரங்குகளிலோ பொதுக் கருத்தாக வடிவமைக்க முடியும் என்பதைப் புரிந்துகொண்டு செயற்படுத்தினார்.

பாலின அடையாளம்:

அமெரிக்காவில் L.G.B.T.Q. சமூகத்தின் வளர்ந்து வரும் ஏற் றுக்கொள்ளலைப் பற்றி அஞ்சிய பழமைவாத கிறிஸ்தவர்க ளுக்கு திரு. சார்லி கேர்க் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். அவர் ஓரினச்சேர்க்கையாளர்கள் மற்றும் திருநங்கைகளின் உரிமைகள், தேவாலயத்தையும் அரசையும் பிரிப்பதை விமர் சித்தார். பாலினக் கருத்தியல் என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்வதாக சந்தேகிக்கும் பேராசிரியர்களைப் பற்றி புகார ளிக்க மாணவர்களையும் பெற்றோர்களையும் அவர் ஊக்கு வித்தார். 2021-ஆம் ஆண்டில், அவர் TPUSA Faith-ஐ நிறுவினார்.

பெண்ணியத்தை நிராகரிக்கவும். உங்கள் கணவர் டெய்ல ருக்கு அடிபணியுங்கள். நீங்கள் பொறுப்பில் இல்லை என்று குறிப்பிட்டார். (Discussing news of Taylor Swift and Travis Kelce's engagement on The Charlie Kirk Show, 26 August 2025)

துப்பாக்கிக் கட்டுப்பாடு:

திரு. சார்லி கேர்க் துப்பாக்கி உரிமைகளின் தீவிர ஆதரவாளராக இருந்தார்.

Turning Point USA-இன் ஒரு பிரிவான TPUSA Faith-இன் 2023-ஆம் ஆண்டு நடை பெற்ற நிகழ்வில், 'கொடுங்கோல் அரசாங் கத்திற்கு எதிராக உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான' ஒரு முக்கியமான வழிமுறை யாக இரண்டாவது திருத்தத்தை அவர் ஆதரித்தார். ஆயுத மேந்திய குடிமக்கள் உள்ள ஒரு சமூகத்தில் துப்பாக்கி இறப் புகளைத் தவிர்ப்பது சாத்தியமற்றது என்று அவர் கூறினார், ஆனால் துப்பாக்கி உரிமைகளின் நன்மைகள் செலவுகளை விட அதிகமாக இருப்பதாக அவர் நம்பினார். இரண்டாவது திருத்தம் என்பது துப்பாக்கி வைத்திருப்பதற்கான உரிமை யைக் குறிக்கும் சட்டமாகும். இச்சட்டத்தை கடவுள் எமக்க ளித்த வரமாக சார்லி கேர்க் குறிப்பிட்டுள்ளார். அதே துப் பாக்கியே அவரது உயிரையும் பறித்தது.

துப்பாக்கிகள் அதிகமானவர்களின் கைகளில் இருக்கும் பொழுது, துப்பாக்கியால் ஏற்படும் கொலைகள் குறையும் என்ற துப்பாக்கி சித்தாந்தத்தையும் துப்பாக்கியால் ஏற்படும் வன்முறைகளைக் குறைப்பதற்கான வழிமுறையாகக் கூறி யுள்ளார்.

இனம்:

1964-ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் (Civil Rights Act of 1964) அமெரிக்க அரசியலில் அழிவுகரமான சக்தி என்று

திரு. சார்லி கேர்க் நம்பினார், அதை நிறைவேற்றியது 'தவறு' என்றும், அது 'வெள்ளையர் எதிர்ப்பு ஆயுதமாக' மாற்றப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

'இச்சட்டம் நடைமுறைக்கு வந்தமைக்குக் காரணமானவர்களில் முக்கியமானவர் மாட்டின் லூதர் கிங், கண்டிக்கப்பட வேண்டியவர். இவர் ஒரு மிக மோசமான நபர் எனத் தெரிவித்துள்ளார்' அது மட்டுமல்லாமல் அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி Ketanji Brown Jackson-ஐ அவரது நிறத்தை மையப் படுத்தி அவர் தகுதியற்றவர் என விமர்சித்துள்ளார். 'பன் முகத்தன்மை கொண்ட கூலி' என்று அழைத்தார்.

நான் ஒரு கறுப்பு விமானியை (ஆபிரிக்க அமெரிக்க) பார்த்தால், அவன் தகுதியானவன் என்று நம்புகிறேன் என்கிறார். (The Charlie Kirk Show, 23 January 2024)

நகர்ப்புற அமெரிக்காவில் எப்போதும் நடக்கும் விஷயம் என்னவென்றால், கறுப்பினத்தவர்கள் வெள்ளையர்களைக் குறி வைத்து வேடிக்கை பார்ப்பதற்காகச் சுற்றித் திரிகிறார்கள், அது உண்மைதான். இது மேலும் மேலும் நடக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். (The Charlie Kirk Show, 19 May 2023)

நான் வாடிக்கையாளர் சேவையில் இருக்கும் ஒரு முட்டாள் தனமான கறுப்பினப் பெண்ணுடன் பழகினால், அவள் அங்கு இருப்பது அவளுடைய சிறந்த குணத்தால்தானா அல்லது உறுதியான நடவடிக்கையால்தானா என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது? (The Charlie Kirk Show, 3 January 2024)

ஜாய் ரீட் மற்றும் மிஷெல் ஒபாமா, ஷீலா ஜாக்சன் லீ மற்றும் கேதன்ஜி பிரவுன் ஜாக்சன் (Joy Reid and Michelle Obama and Sheila Jackson Lee and Ketanji Brown Jackson) ஆகியோர் நிறவாத எதிர்ப்பைக் குறைப்பதற்கான தேர்வுகள் என்று கூறியிருந்தால் எம்மை நிறவாதிகள் இனவெறி பிடித்தவர்கள் என அழைத்திருப்பார்கள். இப்பொழுது அவர்கள் வெளியே வந்து வெள்ளை இனத்தவர்களுக்கு எதிராகக் கூறுகின்றார்கள். அவர்களிடம் மூளை இல்லை. ஓரளவு தீவிரமாக எடுத்துக்கொள்ளப்படுவதற்கு நீங்கள் ஒரு வெள்ளைக்காரரின் இடத்தைத் (மூளை) திருட வேண்டியிருந்தது. (The Charlie Kirk Show, 13 July 2023)

நீங்கள் ஒரு WNBA, புகைபிடிப்பவர், கருப்பு லெஸ்பியன் என்றால், அமெரிக்கக் கடற்படையினரை விட சிறப்பாக நடத்தப்படுகிறீர்களா? (The Charlie Kirk Show, 8 December 2022)

அமெரிக்க ஜனநாயகக் கட்சி இந்த நாட்டை வெறுக்கிறது. அமெரிக்கா சரிவதை அவர்கள் பார்க்க விரும்புகிறார்கள். அமெரிக்கா வெள்ளையர்களின் எண்ணிக்கை குறைவதை அவர்கள் விரும்புகிறார்கள். (The Charlie Kirk Show, 20 March 2024)

யூத எதிர்ப்பு:

இவரது ஆதரவு பழமைவாதிகள் இவரது யூத எதிர்ப்பை விமர்சித்தனர். 'replacement theory,' a once-fringe conspiracy theory வெள்ளையர்களை வெள்ளையர்கள் அல்லாத குடியேறிகளால் யூதர்கள் அமெரிக்காவில் மாற்ற முயற்சிக்கின்றார்கள் என்ற யூதர்களின் கருத்தியலை விமர்சித்தார். இது வெள்ளையர்களுக்கு எதிரான சதி எனக் குறிப்பிடுகின் றார். இதனால் தான் ஒக்ரோபர் 27, 2018-இல் பிற்ஸ்பேர்க் யூத வழிபாட்டுத் தளத்தில் 11 யூதர்களை வெள்ளையினத்தவர் சுட்டுக் கொன்றார்கள் என்றும் கூறினார்.

பிளாக் லைவ்ஸ் மேட்டர் இயக்கம் போன்ற தாராளவாத இனவெறி எதிர்ப்புக் காரணங்களை ஆதரிப்பதன் மூலம் யூத கொடையாளர்கள் வெள்ளையர் எதிர்ப்பைத் தூண்டுவ தாகவும் திரு. கிர்க் குற்றம் சாட்டினார்.

'வெள்ளையர் எதிர்ப்பின் தத்துவ அடித்தளம் (philosophical foundation) பெரும்பாலும் நாட்டில் யூத நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்படுகிறது,' என்று அவர் 2023-இல் தனது நிகழ்ச்சியில் கூறினார். (Not long after, he accused Jews of controlling 'not just the colleges - it's the nonprofits, it's the movies, it's Hollywood, it's all of it.')

சிறிது நேரத்திற்குப் பிறகு, யூதர்கள் 'கல்லூரிகளை மட்டுமல்ல - இலாப நோக்கற்ற நிறுவனங்கள், திரைப்படங்கள், ஹாலிவுட், அனைத்தும்' ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதாக அவர் குற்றம் சாட்டினார்.

திரு. சார்லி கேர்க்கின் அரசியல் நண்பர்கள்; இஸ்ரேலுக்கான அவரது ஆதரவைக் குறிப்பிட்டு யூத எதிர்ப்புக் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக அவரைப் பாதுகாக்க முயன்றனர். காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகளை திரு. சார்லி கேர்க் ஆதரித்தார். அவரது மரணத்திற்குப் பிறகு, இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'யூத-கிறிஸ்தவ நாகரிகத்திற்காக உயர்ந்து நின்ற இஸ்ரேலின் சிங்க இதயம் கொண்ட நண்பர்' என்று தனது இரங்கல் தெரிவித்தார். ('a lionhearted friend of Israel' who stood tall for Judeo-Christian civilization.)

இஸ்லாம்:

திரு. சார்லி கேர்க் இஸ்லாத்தை அமெரிக்காவின் ஆபத்து என்று அழைத்தார், 'நிலத்தையும் பிரதேசத்தையும் கையகப் படுத்த முயலும்' மதத்தின் 'வெற்றி மதிப்புகள்' என்று அவர் கண்டதை எதிர்த்துப் பேசினார்.



‘நிச்சயமாக அமெரிக்காவிற்கு மத சுதந்திரம் உள்ளது, ஆனால் நாம் வெளிப்படையாக இருக்க வேண்டும்’ என்று அவர் ஏப்ரல் மாதம் கூறினார். ‘பெரிய அர்ப்பணிப்புள்ள இஸ்லாமியப் பகுதிகள் அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாகும்’ (Large dedicated Islamic areas are a threat to America)

நியூயோர்க் மாநகர தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக தேர்வான சொகரான் மம்தானியை (Zohran Mamdani) அல்கைடா மற்றும் 9-11 உடன் இணைத்துப் பேசினார். இஸ்லாமிய வெறுப்பை நியு யோர்க் நகர தேர்தலில் ஏற்படுத்த முயன்றார். சொகரானின் தந்தையாரே முஸ்லீம், தாயார் ஹொலிவூட் இயக்குநர் மீரா நாயர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் கழுத்தை அறுப்பதற்கு இடதுசாரிகள் பயன்படுத்தும் வாள் இஸ்லாம். (Charlie Kirk social media post, 8 September 2025)

தேவாலயத்திற்கும் அரசுக்கும் எந்தப் பிரிவும் இல்லை. இது ஒரு கட்டுக்கதை, இது ஒரு புனைகதை, இது அரசியலமைப்பில் இல்லை. இது மதச்சார்பற்ற மனிதநேயவாதிகளால் உருவாக்கப்பட்டது. (The Charlie Kirk Show, 6 July 2022)

பேச்சு சுதந்திரம்:

திரு. சார்லி கேர்க் பேச்சு சுதந்திரத்தை ஆதரிப்பதாகத் தன்னைத்தானே அறிவித்துக் கொண்டார், மேலும் ரேனிங் பொயின்ட் யுஎஸ்ஏ அதன் பேச்சு சுதந்திரத்தை ஆதரிப்பதற்காக அறியப்பட்டது. இந்தக் குழு வளாகங்களில் மிகப் பெரிய ரப்பர் கடற்கரை பந்துகளை வைப்பதற்காக அறியப்பட்டது, மேலும் மாணவர்கள் தங்கள் பேச்சு சுதந்திர உரிமைகளைப் பயன்படுத்துவதற்கான அடையாள வழியில் பந்துகளில் கருத்துகளை எழுத அழைத்தனர். திரு. சார்லி கேர்க் மாணவர்களைத் தன்னுடன் விவாதிக்கவும் அழைத்தார், ‘நியாயமான கருத்து வேறுபாடுகளை’ ஆதரித்தார். பல சந்தர்ப்பங்களில், திரு. சார்லி கேர்க் தனது இருப்பைத் தடுக்க முயன்ற பல்கலைக்கழகங்கள் மீது வழக்குத் தொடர முதல் திருத்தத்தைப் பயன்படுத்தியுள்ளார். திரு. கேர்க்கின் பேச்சுச் சுதந்திரத்தை ஊக்குவிப்பது போலித்தனம் நிறைந்ததாக விமர்சகர்கள் வாதிட்டனர், ரேனிங் பொயின்ட் யுஎஸ்ஏவின் ‘பேராசிரியர் கண்காணிப்புப் பட்டியலை’ சுட்டிக்காட்டி, இடதுசாரி நிலைப்பாடுகளைக் கொண்ட பேராசிரியர்களைப் பட்டியலிடுமாறு மாணவர்கள் கேட்கப்பட்டனர்.

முதல் திருத்தம் மத சுதந்திரம், பேச்சுரிமை, பத்திரிகை சுதந்திரம், ஒன்றுகூடல் உரிமை மற்றும் அரசாங்கத் தலையீட்டிலிருந்து அரசாங்கத்திடம் மனு செய்யும் உரிமையைப் பாதுகாக்கிறது.

இளம் பழமைவாத வாக்காளர்கள் பருவநிலை மாற்றம் குறித்த பிரச்சினைக்கு முன்னுரிமை அளிப்பதாகக் கருத்துக் கணிப்புகள் காட்டினாலும், திரு. கேர்க் அடிக்கடி காலநிலை மாற்றம் குறித்த கவலைகளை நிராகரித்தார். பூமி வெப்பமாதல் குறித்து விஞ்ஞானரீதியான ஒருமித்த கருத்து இல்லை என்று அவர் தவறாகக் கூறினார்.

உக்ரேன் – ரஷ்யா:

ரஷ்யாவிற்கு எதிரான போரில் அமெரிக்க பங்கேற்பை எதிர்த்ததற்காக சார்லி கேர்க் அறியப்பட்டார். Kiev-க்கு அமெரிக்க ஆயுதங்கள் மற்றும் நிதியளிப்பதை முடிவுக்குக் கொண்டு வருவதை ஆதரித்து, ஒரு நடைமுறை நிலைப்பாட்டை அவர் ஆதரித்தார். உக்ரேன் மீதான அவரது விமர்சன நிலைப்பாடு, உக்ரேன் அரசு நிறுவனங்களால் அவர் குறிவைக்கப்படுவதற்கு வழிவகுத்தது, அதனால்தான் அவர் யுக்கிரெயின் அரசாங்கத்தால் ‘கிரெம்ளின் பிரச்சாரகர்கள்’ என்று கூறப்படும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

அது மட்டுமல்லாமல், உக்ரேனிய அரசு சேவைகளால் தான் அச்சுறுத்தப்படுவதாக சார்லி கேர்க் ஏற்கனவே தெளிவுபடுத்தியிருந்தார். 2023-ஆம் ஆண்டில், அமெரிக்க திருநங்கை ‘பெண்’ மற்றும் உக்ரேனிய பிராந்திய பாதுகாப்பு ஆங்கில மொழி பிரச்சாரத்தின் முன்னாள் தலைவரான Sarah Ashton-Cirillo, அனைத்து ‘கிரெம்ளின் பிரச்சாரகர்களையும்’, ‘வேட்டையாடுவதாக’ உறுதியளித்து சமூகவலைத்தளமான ருவிற்றரில் (எக்ஸ்) ஒரு வீடியோவை வெளியிட்டார். அந்த நேரத்தில், யுக்ரேனியர்கள் தன்னையும் மற்ற அமெரிக்கப் பழமைவாத ஆர்வலர்களையும் ‘வேட்டையாடுவார்கள்’ என்று அஞ்சுவதாக சார்லி கேர்க் கூறினார்:

‘அவர்கள் என்னையோ அல்லது Steve Bannon-னையோ அல்லது ரக்கர் கால்சனையோ கொலை செய்யப்போகின்றார்களா, அல்லது கொலை செய்ய முயற்சிக்கப்போகின்றார்களா?. நாங்கள் எவரும் புட்டினின் கைப்பாவைகள் அல்லது ருசியாவிற்கு ஆதரவு பிரச்சாரகர்கள் அல்ல. ஆனால் நியுயோர்க் ரைம்ஸ் பத்திரிகை எங்களை அவ்வாறே அழைக்கின்றது. ருவிற்றரும் எங்களை அவ்வாறே பதிவு செய்துள்ளது. அத்துடன் ‘நாங்கள் உங்களைக் கொலை செய்வோம்’ என அமெரிக்க திறைசேரியின் நிதியினைப் பெற்ற சாரா கூறுகின்றார்.’
(https://www.nytimes.com/2025/09/11/us/charlie-kirk-views-guns-gender-climate.html)

•

சார்லி கேர்க்கின் மரணம்:

சார்லி கேர்க்கின் மரணத்தை ஆதரித்து இணையத் தளங்களில் யுக்கிரேனிய சமூக வலைத்தள பதிவாளர்கள் தங்களது மகிழ்ச்சியை பின்வருமாறு தெரிவித்துள்ளனர் ‘Epic, Cool. Super shot,’ and ‘Rest in pieces,’ மற்றொரு பதிவாளர் ‘முதலில் ரஷ்யாவை ஆதரித்தார், இப்போது இறந்துவிட்டார்’ எனவும் இன்னுமொரு பதிவாளர் டிரம்ப்பை ஆதரிக்கும் முட்டாள், பழமையானவர் எனப் பதிவிட்டுள்ளார். இவரது மரணத்திற்குப் பல உக்ரேனியர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்;

‘Myrotvorets’ (https://myrotvorets.center/1588417-about-myrotvotrets-center/) என்னும் இணையத்தளம் உக்ரேனின் எதிரிகள் என அடையாளம் காணப்படுபவர்களின் பெயர்களை வெளியிடுகின்றது.

கொலையாளி அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்ட பின்னரும் கொலையாளியின் பின்னால் உக்ரேனும் இயங்கியது என்ற கருத்தியலும் வெளிப்படுகின்றது.

கொலையாளி ராபின்சன், கேர்க்கின் கருத்துக்களை விரும் பாததிலிருந்து அவரைக் கொலை செய்ய முடிவு செய்ததற்கு எப்படித் தாவினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை - அவர் 'ஒரு வாரத்திற்கும் மேலாக' படப்பிடிப்புக்குத் திட்ட மிட்டு வருவதாக அவர் திகைப்பூட்டும் வகையில் எழுதினார் - மேலும் ராபின்சன் விட்டுச் சென்ற செய்திகள் ஒரு குழப்ப மாகவே இருக்கின்றன. ஒரு தோட்டாவில் பொறிக்கப்பட்ட 'பெல்லா சியாவோ' என்ற சொற்றொடர், பிரபலமான பாசிச எதிர்ப்புக் கீதத்தின் தலைப்பு மற்றும் வீடியோ கேம்களில் தோன்றும் ஒரு சொற்றொடர் ஆகும். இந்தப் பாடல், நிக் ஃபி யூன்டெஸ் தலைமையிலான தீவிர வலதுசாரி, வெள்ளை-தே சியவாதி, மீம்-ஊக்கமுள்ள இணையவாசிகளின் குழுவான க்ரோய்பர்ஸுடன் தொடர்புடைய ஸ்பாட்டிஃபை பிளேலிஸ்ட் டிலும் இடம்பெற்றதாகச் சிலர் சுட்டிக்காட்டியுள்ளன.

•

சார்லி கேர்க்கின் மரணத்தின் பின்னான விளைவுகள்:

திரு. டிரம்பும், அவரது உயர் ஆலோசகர்களும் திரு. கேர்க் கின் மரணத்திற்கு 'தீவிர இடதுசாரிகளை' குற்றம் சாட்டியுள் ளனர், மேலும் அரசியல் வன்முறையைத் தூண்டியதாக அவர்கள் வாதிடும் மக்கள் மற்றும் அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர். பல ஆண்டு களாக, ஜனநாயகக் கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும் அரசியல் வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளனர், மேலும் திரு. கேர்க்கின் விஷயத்தில், துப்பாக்கிதாரி தனியாகச் செயற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்போது, கேர்க்கின் படுகொலை - வீடியோவில் பதிவாகி, இணையங்களில் பரவியுள்ளது - அவரது உள்ளடக்கத்தின் தாக்கத்தை அதிகப்படுத்தியுள்ளது. திங்களன்று, துணை ஜனாதிபதி ஜே.டி. வன்ஸ், வெள்ளை மாளிகையில் இருந்து ஒளிபரப்பப்படும் கேர்க்கின் இணைய நிகழ்ச்சியின் தொகுப் பாளராகப் பங்கேற்றார். 'இடதுசாரிகள், அரசியல் வன் முறை யைப் பாதுகாக்கவும் கொண்டாடவும் அதிக வாய்ப்புள் ளது' என்று ஆதாரமின்றிக் கூற வன்ஸ் இந்தத் தளத்தைப் பயன்படுத் தினார். டிரம்ப் நிர்வாகம் இடதுசாரி 'பயங் கரவாத வலைப்பின்னல்களை' ஒடுக்குவ தாக உறுதியளித்துள்ளது, கேர்க்கின் மரணத்தை டிரம்ப் அரசு பயன்படுத்து கின்றது. அதன் எதிரிகள் மீது குறிவைக் கின்றது. ஏற்கனவே அமெரிக்காவில் 'சிவப்பு அச்சம்' மக்கள் மத்தியில் சோவியத் யூனி யன் காலத்திலிருந்தே உருவாக்கப்பட்டுள் ளது. அதனை மீள டிரம்ப் தனது 1.0-இல் பிரச்சாரப்படுத்தினார். ஜஸ்ரின் ரூடோ மீது கூட கம்யூனிஸ்ட் என்ற முத்திரையைக் குத்தினார். கேர்க்கின் கொலை அதற்கு மேலும் வழிவகுக்கின்றது.

அதன் எதிரிகள் என்று கருதப்படுபவர் களைக் கட்டுப்படுத்தாமல் குறிவைத்து மௌனமாக்குவதற்கு மேலும் நியாயப் படுத்துகிறது. வோஷிங்டன் போஸ்ட் கருத்துக் கட்டுரையாளர் மற்றும் Clemson பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் உட்பட பலர், கேர்க்கைப் பகிரங்கமாக விமர்சித்ததற்காக ஏற்கனவே பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கிடையில், கேர்க்கின் சமூக ஊடகக் கணக்குகள் அவரது மரணத்திற்குப் பின் மில்லியன் கணக்கான பின்தொடர்பவர்களைப் பெற்றுள் ளன. X-இல், செனட்டர் Ted Cruz 'slopaganda' என்று பொருத்தமாகப் பெயரிடப்பட்ட ஒரு வகையான படத்தைப் பதிவேற்றினார்: இயேசு, கேர்க்கைத் தழுவுவது போன்ற AI உருவாக்கிய படங்கள் மற்றும் சமீபத்தில் வட கரோலினாவில் ரயிலில் குத்திக் கொல்லப்பட்ட யுக்ரேனியப் பெண் Iryna Za-rutska-வுடன் கேர்க் இருப்பது போன்ற படங்கள். கேர்க்கின் கொலையினை மேலும் பயங்கரமாக்கி, மக்களை அரசு தனது எதிரிகளுக்கு எதிராக்க தூண்டுகின்றது. அத்துடன் அவரது ஆதரவாளர்கள், பின்பற்றாளர்களின் கோபத்தையும் தூண்டுகின்றது. துப்பாக்கி வன்முறையை விட அதிகளவு தாக்கமான இணைய தீவிரமயமாக்கலை டிரம்ப் அரசும், குடி யரசுக் கட்சியும் உருவாக்கியுள்ளது.

டிரம்பின் மிகவும் செல்வாக்கு மிக்க கூட்டாளிகள் மற்றும் ஆலோசகர்கள் சிலர், அமெரிக்க இடதுசாரிகள் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வெளிப்படை யாகக் கோருவதன் அர்த்தம் என்ன? புதிய தலைமுறை இளம் பழமைவாதிகளைக் குடியரசுக் கட்சிக்குச் சேர்ப்ப தற்கு சார்லி கேர்க் பயன்படுத்திய முறையை மேலும் வலுப் படுத்த இடதுசாரி அமைப்புக்கள் மீது குடியரசுக் கட்சியினர் பரப்புரைகளை செய்கின்றனர். 'ஒவ்வொரு இடதுசாரி அமைப் பையும் மூட, பணத்தைத் திரும்பப் பெற மற்றும் வழக்குத் தொடர டிரம்ப் நிர்வாக நேரம் இது,' என்று பல மூத்த தேசிய பாதுகாப்பு அதிகாரிகளைப் பணிநீக்கம் செய்ய டிரம்பை வெற்றிகரமாகத் தள்ளிய தீவிர வலதுசாரி சதி கோட்பாட்டா ளரான Laura Loomer, X-இல் எழுதினார். 'இந்தப் பைத்தி யக்கார இடதுசாரிகளை நாம் அடக்க வேண்டும். இடதுசாரி கள் ஒரு தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்.' (We must shut these lunatic leftists down. Once and for all. The Left is a national security threat) 2.0 டிரம்ப் நிர்வாகத்தின் முக்கிய கோட்பாடாக மாறிய பன்முகத்தன்மை முயற்சிகளுக்கு (diversity initiatives) எதி ரான நடவடிக்கைக்கு தலைமை தாங்கிய மற்றொரு செல்வாக்கு மிக்க டிரம்பிஸ்ட் கிறிஸ்டோபர் ரூஃபோ (Christopher Rufo), 1960-களில் தீவிர இடது சாரி அலை எழுந்த போது அப்போதைய சட்ட அதிகாரி ஜே.எட்கர் கூவர் சில ஆண்டுகளுள் அதை முடிவுக்குக் கொண்டு வந்தார் எனக் கூறி னார். 'சட்டத்தின் எல்லைக்குள், இந்தக் குழப்பத்திற்குக் காரணமான அனைவரை யும் ஊடுருவி, சீர்குலைத்து, கைது செய்து, சிறையில் அடைக்க வேண்டிய நேரம் இது.' என மேலும் கூறனார்.

> ***"கேர்க்கின் கொலையினை மேலும் பயங்கரமாக்கி, மக்களை அரசு தனது எதிரிகளுக்கு எதிராக்க தூண்டுகின்றது. துப்பாக்கி வன்முறையை விட அதிகளவு தாக்கமான இணைய தீவிரமய மாக்கலை டிரம்ப் அரசும், குடியரசுக் கட்சியும் உருவாக்கியுள்ளது."***



Antifa:

இது anti-fascist என்பதன் சுருக்கம். இவ்வ மைப்பானது வெள்ளை இனவாத அமைப் புக்களின் போராட்டங்களுக்கு எதிராக எதிர்ப் போராட்டங்களை நிகழ்த்திவரும் அமைப்பாகும். டோனால்ட் டிரம்ப் 1.0 ஆட்சி வரும் முன்னரே வெள்ளை இனவாத

அமைப்புக்களின் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தினார். அதன் தொடர்ச்சியாகவே சார்லி கேர்க் போன்றவர்கள் உருவாக்கப்பட்டார்கள். சார்லி கேர்க்கின் இறுதி நிகழ்ச்சியில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபற்றியுள்ளார்கள் என்பது இவ்வெள்ளையின அமைப்புக்களின் தீவிரத்தை வெளிப்படுத்துகின்றது.

சார்லி கேர்க்கின் கொலையைப் பயன்படுத்தி டொனால்ட் டிரம்பும் அவரது குடியரசுக் கட்சியும் தங்களுக்கு எதிரானதும் வெள்ளை இன அமைப்புக்களுக்கும் எதிரானதுமான அமைப்புக்களை கட்டுப்படுத்த முயற்சிக்கின்றது. அவ்வகையில் அன்றிபா அமைப்பையும் தடைசெய்துள்ளது. இவ்வமைப்பை நிறவாதம் மற்றும் பாசிசத்துக்கு எதிரான அமைப்பாகக் கருதாமல், கம்யூனிஸ்ட் அமைப்பாகக் கருதி பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தியுள்ளது.

இனிமேல் வெள்ளை இன நிறவாத ஊர்வலங்களுக்கு எதிராகக் குரலெழுப்புபவர்கள் கைது செய்யப்படலாம். இனிமேல் நீதி மன்றம் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் டொனால்ட் டிரம்ப் தனது சர்வாதிகாரத்தைக் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராகச் செயற்படுத்துவார் என்பது உறுதி.

வியாழக்கிழமை காலை (Sep 17) X-இல் ஒரு பதிவில், வெளியுறவுத்துறை துணைச் செயலாளர் Christopher Landau, 'வன்முறை மற்றும் வெறுப்பை மகிமைப்படுத்தும் வெளிநாட்டினர் நம் நாட்டிற்கு வருகை தருவதை வரவேற்க மாட்டோம்' என்று எழுதினார், மேலும் சமூக ஊடகங்களில் கேர்க்கின் மரணத்தை 'பாராட்டுபவர்கள், பகுத்தறிவு செய்பவர்கள் அல்லது வெளிச்சம் போட்டுக் காட்டுபவர்கள்' என்று கருதப்படுபவர்களுக்கு எதிராக 'தகுந்த நடவடிக்கை எடுக்க' தூதரக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் கூறினார்.

செப்ரெம்பர் இரண்டாம் வாரம் அமெரிக்கன் ஏயர்லைன்ஸ் விமானிகள் கேர்க்கின் கொலையை ஆதரித்துக் கருத்துகூறினார்கள் என்பதற்காக விமானம் தரையிறக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் குறிப்பிடுகின்றன.

நிறவாத அமைப்புகள்:

'சார்லி கேர்க்கின் படுகொலையை கழகங்கள் மற்றும் அமைப்புக்கள் ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றன, குறிப்பாக வெள்ளையர்களை இயக்கத்தில் சேர வலியுறுத்துகின்றன' என்று தீவிர வலதுசாரிகளை ஆராய்ச்சி செய்யும் தொழில்முறை ஆய்வாளர் Joshua Fisher-Birch கூறினார். இணையப் பதிவுகள் மூலமாகவும், சமூக வலைத் தளங்களினூடாகவும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இனவாதக் கருத்துக்களை பரப்புகின்றன. அத்துடன் தங்களது அமைப்பை விரிவாக்கவும் முயல்கின்றன.

'நான் சார்லி கேர்க்கைப் பின்பற்றுபவன் அல்ல, ஆனால் நான் ஒரு வெள்ளை அமெரிக்கக் குடிமகன்' என்று தெற்கு கலிபோர்னியாவில் செயற்படும் ஒரு கழக உறுப்பினர் அவர்களின் இயக்கம் கேர்க்குடன் ஒத்துப்போகவில்லை, ஆனால் அவரது மரணத்தை ஒரு முக்கிய திருப்புமுனையாகக் காண்கிறது.' எனக் கூறினார்.

வட-கலிபோர்னியாக் கழகமொன்றின் பதிவு இது. 'எந்தவொரு மேற்கத்தேய நாட்டிலும் வெள்ளையர்களுக்கு ஆதரவாக இருப்பது, இடதுசாரிகள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் கொலை செய்வதற்கான காரணமாக அமையும்.'

'சார்லியின் மரணம் தொடர்பான மற்ற அரசியல் பேச்சுக்கள் எதுவும் பொருத்தமற்றவை.' அவரது வெள்ளையின ஆதரவே அவரது மரணத்துக்குக் காரணம். பதிவு தொடர்ந்தது 'வெள்ளை இன மக்களே. எதிர்த்துப் போராடவேண்டிய காலம் வந்து விட்டது. அப்படி போராடாவிட்டால், உங்களை மாற்றீடு செய்யும் முயற்சியின் ஒரு பங்கேற்பளாராக நீங்களே செயற்படுகின்றீர்கள்' (White man, the time has come to fight back. If you are not actively fighting back you are an active participant in our replacement.
https://www.theguardian.com/us-news/2025/sep/19/active-clubs-charlie-kirk-killing-new-members)

•

சார்லி கேர்க்கின் கொலையைத் தொடர்ந்து உலகெங்கும் போராட்டங்கள் நடைபெற்றன. குறிப்பாக இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடைபெற்ற போராட்டங்கள் குடிவரவாளர்களையும், ஏனைய இனத்தவர்களையும் குறிவைத்தே நடைபெற்றது. குடிவரவாளர்களை வெளியேற்றுமாறு கோசங்கள் முன்வைக்கப்பட்டன. சார்லி கேர்க்கின் மரணத்தின் பின்னர் வெள்ளை மக்கள் அதிகமாகவும், ஆட்சியிலும் இருக்கும் நாடுகளில் தீவிர வலதுசாரி அமைப்புக்களால் குடிவரவாளர்களுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. இனி வரும் காலங்களில் இது மேலும் அதிகளவு நடைபெறும்.

•

முன்னாள் ஜனாதிபதி ஒபாமா:

முன்னால் அமெரிக்க ஜனாதிபதிகளுள் ஒபாமா ஒருவரே தொடர்ச்சியாக டொனால்ட் டிரம்ப்பின் செயற்பாடுகளை விமர்சித்து வருகின்றார். கடந்த தேர்தலில் டொனால்ட் டிரம்ப்பிற்கு எதிராகப் போட்டியிட்ட கமாலா ஹரிசும் மௌனமாகவே நாட்களைக் கடக்கின்றார்.

முன்னாள் ஜனாதிபதி ஒபாமா செவ்வாயன்று, (செப்ரம்பர் 16) ஜனாதிபதி டிரம்பும் அவரது கூட்டாளிகளும் பழமைவாத ஆர்வலர் சார்லி கேர்க்கின் படுகொலையைப் பயன்படுத்தி, திரு. கேர்க்கின் கருத்துகள் குறித்த பிரிவினையைத் தூண்டி விவாதத்தை மௌனமாக்குகிறார்கள் என்று கூறினார்.

திரு. ஒபாமா, திரு. கேர்க்கின் மரணத்தை 'கொடூரமானது மற்றும் ஒரு சோகம்' என்று அழைத்தார். ஆனால் அமெரிக்கர்கள் இன்னும் திரு. கேர்க்கின் கருத்துக்களை விவாதிக்க முடியும் என்று அவர்

> ***சார்லி கேர்க்கின் கொலையைப் பயன்படுத்தி டொனால்ட் டிரம்பும் அவரது குடியரசுக் கட்சியும் தங்களுக்கு எதிரானதும் வெள்ளை இன அமைப்புக்களுக்கும் எதிரானதுமான அமைப்புக்களை கட்டுப்படுத்த முயற்சிக்கின்றது. அவ்வகையில் அன்றிபா அமைப்பையும் தடைசெய்துள்ளது.***



> ***டிரம்ப் அரசுக்கு எதிரான விமர்சனங்களை ஒளி, ஒலிபரப்பும் நிறுவனங்களுக்கான உரிமை இரத்துச் செய்யப்படும் என அரசு அச்சுறுத்தியுள்ளது. அத்துடன் பேச்சுச் சுதந்திரத்துக்கு சாவுமணி அடித்துள்ளது. உலகின் சிறந்த பேச்சு சுதந்திரம் உள்ள நாடு எனக் கூறப்படும் அமெரிக்காவின் இருண்ட பக்கமிது.***

கூறினார், பழமைவாத ஆர்வலருடன் அவர் உடன்படாத பல பகுதிகளைக் குறிப்பிட்டார்.

'நாம் ஜனநாயகக் கட்சியினராக இருந்தாலும் சரி, குடியரசுக் கட்சியினராக இருந்தாலும் சரி, சுயேச்சைகளாக இருந்தாலும் சரி, இரு தரப்பிலும் சந்தேகத்திற்கு இடமின்றி தீவிர வாதிகள் இருக்கிறார்கள் என்பதையும், அமெரிக்காவின் முக்கிய மதிப்புகள் என்று நான் நம்புவதற்கு முரணான விஷயங்களைச் சொல்பவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் நாம் அங்கீகரிக்க வேண்டும்,' என்று திரு. ஒபாமா கூறினார்.

திரு. டிரம்புடன் அதிக வேறுபாட்டைக் காட்டிய அவர், தனது சொந்த ஜனாதிபதி பதவியையும், பிளவுபட்ட நாட்டை ஒன்றிணைப்பதில் நம்பிக்கை கொண்ட கடந்த காலக் குடியரசுக் கட்சித் தலைவர்களையும் குறிப்பிட்டார்.

'ஜார்ஜ் டபிள்யூ. புஷ் அதை நம்பினார் என்று நினைக்கிறேன்,' என்று திரு. ஒபாமா கூறினார். 'நான் எதிர்த்துப் போட்டியிட்ட John McCain அதை நம்பினார் என்பது எனக்குத் தெரியும். Mitt Romney அதை நம்பினார் என்பதும் எனக்குத் தெரியும். நான் விவரிப்பது ஜனநாயக மதிப்பு அல்லது குடியரசுக் கட்சி மதிப்பு அல்ல. இது ஓர் அமெரிக்க மதிப்பு. மேலும் பதட்டங்கள் அதிகமாக இருக்கும் இதுபோன்ற தருணங்களில், ஜனாதிபதியின் வேலையின் ஒரு பகுதி மக்களை ஒன்றிணைப்பதாகும் என்று நான் நினைக்கிறேன்.' அந்தப் பதட்டங்கள், 'நாம் இதற்கு முன்பு பார்த்திராத வகையான அரசியல் நெருக்கடிக்கு' சமமாக இருந்ததாக அவர் மேலும் கூறினார்.

•

சார்லி கேர்க்கின் மரணத்தின் பின்னர் இடது சாரிகளை அழிக்கும் செயற்பாட்டை அமெரிக்க அரசு செயல்படுத்தத் தொடங்கிவிட்டது. கேர்க்கின் கொலை பற்றி பல இரவு நேரத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் (Late Night Show) கருத்துகளைத் தெரிவித்துள்ளன. பொதுவாகவே இந்த இரவு நேர நிகழ்ச்சிகளுக்கு பரவலான வரவேற்பு உள்ளது. பொதுவாக அரசியல்வாதிகளின் கருத்துக்களே இங்கு அதிகளவு நகைச் சுவையாக உரையாடப்படும். பல அமெரிக்க ஜனாதிபதிகள் இந்நிகழ்ச்சிகளை தூய தமிழில் கூறுவதானால் வறுத்தெடுப் பார்கள். அதற்கு டொனால்ட் டிரம்ப்-ம் விதிவிலக்கல்ல. ஆனால் டொனால்ட் டிரம்பிற்கும் ஊடகவியலாளர்களுக்கு மிடையில் ஒரு பெரிய இடைவெளி தொடர்ந்து இருந்துவருகின்றது. தனக்கு எதிரான ஊடகவியலாளர்களை அடக்குவது டொனால்ட் டிரம்பின் இயல்புமட்டுமல்ல, விருப்பமும் கூட. சார்லி கேர்க் மரணத்தின் பின்னர் பின் இரவு நிகழ்ச்சியான Jimmy Kimmel Live! நிகழ்வில் தொகுப்பாளர் Jimmy Kimmel கொலையாளி ஒரு முன்னால் MAGA gang எனக் கூறினார். அவரது முழுமையான வரிகள் இவை 'We hit some new lows over the weekend with the MAGA gang desperately trying to characterize this kid who murdered Charlie Kirk as anything other than one of them and doing everything they can to score political points from it.'

இதனைத் தொடர்ந்து, இந்த நிகழ்ச்சியை ஒலிபரப்பிய ஏபிசி நிறுவனத்துக்கு டிரம்ப் அரசு கொடுத்த அழுத்தத்தைத் தொடர்ந்து இந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது. அது மட்டுமல்லாமல் டிரம்ப் அரசுக்கு எதிரான விமர்சனங்களை ஒளி, ஒலிபரப்பும் நிறுவனங்களுக்கான உரிமை இரத்துச் செய்யப்படும் என அரசு அச்சுறுத்தியுள்ளது. அத்துடன் பேச்சுச் சுதந்திரத்துக்கு சாவுமணி அடித்துள்ளது. உலகின் சிறந்த பேச்சு சுதந்திரம் உள்ள நாடு எனக் கூறப்படும் அமெரிக்காவின் இருண்ட பக்கமிது.

•

சார்லி கேர்க்கின் கொலையும், புலம்பெயர் மக்களும்:

உலகமயமாதலின் வளர்ச்சியில் பல தேசியங்கள் உடைக்கப் பட்டன. மக்கள் வேலை தேடி பல்வேறு நாடுகளுக்கு சென்ற போது, ஒரு இனக்கலப்பு ஏற்பட்டது. உதாரணத்துக்கு இன்று வட இந்திய மக்கள் வேலை தேடி தென் இந்தியாவிற்கு வருகின்றார்கள். இது அங்கு ஒரு இனக் கலவையை ஏற்படுத்துகின்றது. எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது, அரசியல் தேர்வுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றது. இது பெரியளவில் நடைபெறாவிட்டாலும், ஓரளவிற்கு நடைபெற்றுக்கொண்டே வருகின்றது. இவ்வாறன ஒரு பயத்தை மேற்கு நாடுகள் மத்தியில் உள்ள வெள்ளையினவாதிகள் வெள்ளையின சமூகத்தின் மத்தியில் பரப்புகின்றனர். அது மட்டுமல்லாமல் உங்களுக்கு வேலையற்றுப்போவதற்குக் குடிவரவாளர்களே காரணம் என்றும் குறிப்பிடுகின்றார்கள். பெரும் நிறுவனங்கள் அதிக இலாபம் கருதியும், குறைந்த விலையில் கூலி பெறுவதற்கும் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளை நோக்கித் தங்களது நிறுவனங்களை நகர்த்தின. எனவே வேலை இல்லாமைக்குப் பல காரணங்கள் உள்ளன. அவை எவற்றையும் கூறாது பொருளாதாரக் காரணங்களைக் கூறி இனவாதத்தைத் தூண்டுகின்றனர். பெரும்பாலான இரண்டாம், மூன்றாம் தலைமுறை குடிவரவாளர்களும் புதிய குடிவரவாளர்களை எதிர்க்கின்றனர். இவர்களும் இந்த வெள்ளையின வாதத்துக்கு ஒத்துப் போகின்றனர்.

சார்லி கேர்க்கின் மரணத்தின் பின்னர் அதிகளவு தோன்றியுள்ள வெள்ளையற்றவர்களுக்கு எதிரான எழுச்சியானது புலம் பெயர் மக்களையும் அதிகளவு பாதிக்கும். போராட்டங்கள் தொடர்ந்து டொனால்ட் டிரம்ப்-ம், அவரது வாரிசுகளும் அடுத்த பத்தாண்டுகளுக்கு அமெரிக்காவையும், உலகையும் ஆண்டால் மேற்கு நாடுகளில் வாழும் குடிவரவாளர்கள்

குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க குடிவரவாளர்கள் எண்ணிக்கை குறைவடையலாம். இரண்டாம், மூன்றாம் தலைமுறையினரும் தங்களது அடியை அதாவது மூலத்தை நோக்கிய தேடலை அதிகரிப்பார்கள். அல்லது தங்களது முதலீடுகளை அங்கு நகர்த்துவார்கள். வெள்ளையினவாத அதிகரிப்பு ஒரு பாது காப்பற்ற சூழலைப் புலம் பெயர் மக்களுக்கு உருவாக்கும். எனவே இந்தச் சூழலை மேலோட்டமாகக் கடந்து செல்ல வேண்டாம். அதன் பாதிப்பை விரைவில் உணரவேண்டிவரும்.

•

இன்று வரை சார்லி கேர்க்கின் கொலையாளி பற்றிய விபரங் களை அமெரிக்க அரசு வெளியிடவில்லை. பெரும்பாலான தகவல்கள் மறைக்கப்படுகின்றன. அவர் ஒரு தீவிர இடதுசாரி என்பதற்கான எந்தவித ஆதாரங்களும் இல்லை. அவர் யார் ? ஏன் இந்தக் கொலையைச் செய்தார் என்பதை ஊகங்களால் உறுதி செய்ய முடியாது. அரசு ஏன் மறைக்கின்றது ?

17 வயது போலிஸ் ஜேர்மன் அரசியல் பிரமுகர் பிரான்ஸில் வைத்துச் சுட்டுக் கொன்ற பின்னர் டரொட்ஸ்கி 1939-ஆம் ஆண்டு எழுதிய கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின் றார் 'பழிவாங்குதல் அல்ல முக்கியம். ஒரு பெரிய புரட்சிகர வெகுஜன இயக்கம் மட்டுமே ஒடுக்கப்பட்டவர்களை விடு விக்க முடியும், அந்த இயக்கம் வர்க்க சுரண்டல், தேசிய ஒடுக்குமுறை மற்றும் இன துன்புறுத்தலின் முழு கட்டமைப் பின் எச்சத்தையும் விட்டு வைக்காது.' பாசிசத்தைத் தோற்க டிக்க, 'உலகம் முழுவதும் மில்லியன் கணக்கான, பல்லாயி ரக்கணக்கான மற்றும் நூற்றுக்கணக்கான மில்லியன் ஒடுக்கப் பட்டவர்களை இயக்கத் தொடங்கி, பழைய சமூகத்தின் கோட் டைகள் மீதான தாக்குதலில் அவர்களை வழிநடத் துவது அவசியம்.'


ட்ரொட்ஸ்கியின் பெரும்பாலான கருத்துக்களுடன் உடன்படா விட்டாலும் அவரது மேற்கூறப்பட்ட கூற்று உண்மை. இன்று டொனால்ட் டிரம்பினாலும் அவரைப் பின்பற்றுபவர்களாலும் உருவாக்கப்பட்டுள்ள பாசிச அலை ஒரு மதத்தைப் போன் றது. இது பாலஸ்தீனம் தொடங்கி, இந்தியாவூடாக உலக நாடுகள் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்தி ருக்க முயல்கின்றது. காசாவில் பல யுகங்களாக வாழ்ந்த பாலஸ்தீனியர்கள் வெளியேற்றப்படுகின்றார்கள். எங்கு அவர் கள் செல்வார்கள். அதனையும் டிரம்பின் பாசிச அமைப்புக் களே முடிவு செய்யும். அவ்வாறு பல நாடுகளின் நகர்வுகளை அமெரிக்காவே தீர்மானிக்கச் செய்யும். இதற்கு எதிராக உலக மக்கள் நாடுகள் எதிர்த்துப் போராடினாலேயே குறிப் பாக ஆசிய, ஆபிரிக்க நாட்டுக்குள் போராடினால்தான் இதனை நிறுத்த முடியும். ரொனால்ட் டிரம்பின் பாசிசத்தை முடிவுக்குக் கொண்டுவரமுடியும்.

உசாத்துணை:

- https://www.theguardian.com/us-news/2025/sep/11/charlie-kirk-quotes-beliefs
- https://www.theguardian.com/us-news/2025/sep lie-kirk-podcast



rathan@thaiveedu.com



?

என்னதான் நடக்கின்றது நேபாளத்தில்...



சிவா முருகுப்பிள்ளை

இன்று நேபாளத்தில்...
நேற்று பங்களாதேசத்தில்...
அதற்கு முதல் இலங்கையில்...

ஸ்ரீலங்காவில் பொருளாதாரம் திவாலான நிலையில் நாடு அதள பாதளத்தைச் சென்றடைய, அது மக்களை நேரடி யாகப் பாதித்தது. பின்னர் மார்ச் 15, 2022-இல் அது அரகலய போராட்டமாக வெடித்தது.

பங்களாதேசின் விடுதலைக்காக தம்மை அர்பணித்த குடும்பத்தின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்புகளில் விசேட ஒதுக்கீட்டை செய்ய அதனை எதிர்த்து பங்களாதேசின் சேக் ஹசினாவின் அரசிற்கு எதிராக ஜுலை 29, 2025-இல் மாணவர் போராட்டம் ஒன்று வெடித்தது.

நேபாள அரசாங்கம் பதிவு செய்யாத 25 சமூக வலைத்த ளங்கள் மீது தடை விதித்தது. அதற்கு எதிராக செப்பரம்பர் 05, 2025-இல் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

ஆளும் அரசுகளுக்கு எதிராக நடைபெற்ற இப்போராட்டங் களில் பல ஒற்றுமைகள் உள்ளதை அவதானிக்க முடியும். இம்மூன்று நாடுகளிலும் மக்களின் வாழ்வாதாரத்திற்கான செலவினங்கள் கட்டுக்கடங்காமல் எகிறியது... இந்நி லையில் அது சார்ந்து வேலை வாய்ப்பு இன்மை நிலவியது. அந்நிலையில் அரசியல்வாதிகளின் ஊழல், அதிகார துஸ்பிரயோகம் என்பன மேலோங்கியது. இவற்றைப் பாவித்து மேற்குலகம் இதற்குள் தனது கரங்களை வைத்திருக்கின்றது என உணரப்படுவதே இந்த நாடுகளுக்கிடையிலான பொது ஒற்றுமையாகும்.

இதில் இந்து சமுத்திர பிராந்தியத்தின் 'வல்லரசாகத் தன்னை வரிந்து கட்டிய இந்தியாவின் பெரியண்ணை பாத்திரம் பாஜக ஆட்சிக்கு பின்னர் நழுவி வருவதினால் மேற்குலகம் இந்து சமுத்திர அமைதிப் பிராந்தியத்தில் தனது ஆட்டத்தை ஆட வெளிக்கிட்டு உள்ளது என்ப தையும் நாம் கருத்தில் கொண்டாக வேண்டும். இந்தப் பெரியண்ணைப் பாத்திரத்தில் இந்து சமுத்திரப் பிராந் தியம் மேற்குலகின் ஆடுகளமாக்கப்படாமல் பாதுகாக்கப் பட்டதில் இந்தியாவின் வரவேற்பு மிக்க பாத்திரம் இருந்த தையும்... இதுவரை இருப்பதையும் நாம் ஏற்றாக வேண்டும்.

ஆனால், தற்போதைய இந்திய ஆட்சியாளர்களால் அது காவு கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை இந்தியாவின் உள்நாட்டு அரசியலைத் தவிர்த்து இங்கு கேள்வியாக முன்வைக்க வேண்டியுள்ளது. இதன் முதற்படிகளாக கல கங்களை ஏற்படுத்தல்; இருக்கும் ஆட்சிகளை விரட்டுதல்; இதன் பின்பு, தாம் விரும்பிய ஒரு அரசை தற்காலிகமாக அமைத்தல் என்பதாக காய்களை மேற்குலகம் நகர்த்தி வருகின்றது. இந்த அணுகுமுறை ஒன்றும் புதிதானவை அல்ல. தென் அமெரிக்காவில் பல ஆண்டுகளாக மேற்கு லகம் கைக்கொண்டுவரும் அணுகுமுறையின் வடிவங் கள்தான் இவை. ஆனால், தென், மத்திய அமெரிக்க மக்கள் இந்த மேற்குலகம் பற்றி அடைந்த விழிப்புணர்வு அளவிற்கு ஆசிய இந்து சமுத்திர நாடுகள் தெளிவான புரிதலை தமக்குள் கொண்டிருக்கின்றனவா? என்பது இங்கு பிரதானப்படுகின்றது.

கலகங்களுக்கு பின்னர்... இலங்கையில் ரணில் விக்ரம சிங்க தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது.

இது காலப்போக்கில் தேர்தல் மூலம் அது நிரந்தரமாகும் என்றும் நம்பியது மேற்குலகம். ஆனால், தொடர்ந்த இலங்கைத் தேர்தல் முடிவுகள் மேற்குலக எதிர்பார்ப்பை முழுவதுமாக பொய்யாக்கியும் விட்டது. இதே போல் இன்று நேபாளத்தில் கலகத்தின் பின்னர் உச்ச நீதிமன்ற தலமை நீதிபதி சுசீலா கார்க்கி என்னும் பெண் பிரதமர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதே போல், கலகத்தின் பின்னர் பங்களாதேசில் இடைக்கால அரசின் தலைவராக அமெரிக்காவில் வசித்து வந்த முனைவர் பட்டம் பெற்ற முகமட் யூனிஸ் பொறுப்பை எடுத்துக் கொள்ள வைக்கப்பட்டார். இன்று வரை தேர்தல் நடைபெறாதபடியால் அங்கு என்ன மாதிரியான அரசு அமையப் போகும் என்பதை எதிர்வு கூற முடியவில்லை. ஆனால், அமெரிக்காவின் வரிப் போரில் ஆசிய நாடுகளில் பங்களாதேசிற்கு மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் வரிச் சலுகையாக சிறிய அளவிலாவது குறைப்பு வழங்கியது. எதை பங்களாதேசிடம் அமெரிக்கா எதிர்பார்க்கின்றது என்பதையும் இது கோடிட்டு காட்டி நிற்கின்றது.

இவை எல்லாவற்றிக்கும் இடையில் பல ஒற்றுமைகள் இருப்பதாகவும் உணர முடிபகின்றது. இதில், இலங்கையில் அடுத்து வந்த தேர்தல் என்றான நிலமையில், ஏற்கனவே அமைப்பு ரீதியாக வலுவாக இருந்த நிலையில்தான், தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வர முடிந்தது. இது நிச்சயமாக மேற்கிற்கு உவப்பான செய்தியல்ல. கூடவே மாகாண சபைத் தேர்தலைத் தவிர்ந்து ஏனைய மூன்று நிலைத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியின் வலுவான நிலையும் நிருபிக்கபட்டுள்ளது. ஆட்சி அதிகாரத்தின் ஒரு வருடக் காலத்தின் ஆட்சி மாண்பும் இலங்கையை உறுதியாக்கி இருக்கின்றது. ஆனாலும் ஐ.எம்.எவ் இலங்கையின் கடன் ஊடாக இன்னும் தனது கரங்கள் என்னும் மூக்கணாங் கயிற்றை இலங்கை மீது வைத்திருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்த வகையில் அரகலயப் போராட்டம், அதன் நோக்கம், அப்போராட்டத்தில் ஈடுபட்ட நாட்டு மக்களின் அபிலாசைகளை பெரும்பாலும் பூர்த்தி செய்துள்ளது. இதனை ஒரு முன்னோக்கிய நகர்வாகவும் பார்கலாம். ஆனால் இலங்கை பயணப்பட வேண்டிய தூரம் மிக அதிகமாக உள்ளதையும் நாம் மறுதலிக்க முடியாது.


பங்களாதேசில் இனி என்ன நடக்கும் என்பதை தேர்தலுக்கு பின்புதான் முழுமையாக எதிர்வு கூற முடியும். ஆனாலும், அங்கு சிறுபான்மை மக்களுக்கு எதிரான பேரினவாத உணர்வும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்பதற்கு எதிராக ஏற்படுதப்பட்டுள்ள மனநிலையும் என்ன மாற்றங்களை பங்களாதேசின் அரசியலில் ஏற்படுத்தப்போகின்றது என்பதை நடைபெறவுள்ள தேர்தல் முடிவுகள்தான் தெரிவித்து நிற்கும்.

ஆனால், ஒரு நாட்டின் விடுதலைக்காக போராடியவர்களை மறுதலிப்பதற்கான உணர்வலைகளை ஏற்படுத்துவது என்பது இனி வரும் நாட்களில் உலகில் உரிமைகளுக்காகப் போராடுபவர்களின் உளவியலைப் பாதித்து போராடும் குணாம்சத்தை மழுங்கடிக்க உதவலாம் என்பது ஆரோக்கியமான ஒன்றல்ல. இதுவும் ஏகாதிபத்தியங்களின் ஒரு எதிர் பார்ப்பாக இருக்கின்றது என்பதையும் நாம் மறுக்கவும் முடியாது.

இனி நேபாளம் பக்கம் நாம் பார்வையைத் திருப்பினால்...

பத்தாண்டு கால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து கூட்டாட்சி ஜனநாயகக் குடியரசாக மாறுவதற்காக, நேபாளம் மார்க்சிஸ்ட் குழுக்களுடன், குறிப்பாக 2006-ஆம் ஆண்டு நேபாள கம்யூனிஸ்ட் கட்சியுடன் (மாவோயிஸ்ட்) விரிவான அமைதி ஒப்பந்தம் (CPA) கையெழுத்திடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சமீபத்தில், 2021-ஆம் ஆண்டில், நிலுவையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கவும், நீடித்த எந்தவொரு வன்முறைக்கும் அமைதியான தீர்வை உறுதி செய்யவும், பிளவுபட்ட மாவோயிஸ்ட் குழுவுடன் அரசாங்கம் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. முன்னர் மன்னர் ஆட்சியில் இருந்து மக்களாட்சி வேண்டும் என்று போராடிய நேபாள மக்கள் இன்று மீண்டும் மன்னர் ஆட்சி வேண்டும் என்று போராடுகின்றனர். இதற்காக பிரேந்திரா பீர் பிக்ரம் சா தேவ் மன்னர்களின் வாரிசுகளும் களத்தில் இறங்கியும் உள்ளனர்.

நேபாளத்தில் புரட்டாதி 06, 2025 திங்கட்கிழமை சமூக வலைத்தளங்களின் தடைக்கெதிராக ஆரம்பமான கலகப்





போராட்டம் நாடு தழுவிய ஊழல் எதிர்ப்புப் போராட்டம் என்று மாற்றங்கண்டு முன்னெக்கப்பட்ட நிலையில் குறைந்தது 72 பேரின் மரணத்திற்கு இப்போராட்டம் வழிவ குத்தது. இரண்டு ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இதில் காய மடைந்தனர். பிரதமர் அலுவலகம் மற்றும் பிற அமைச்சகங் களைக் கொண்ட வளாகம், உச்ச நீதிமன்றம் மற்றும் நாடாளு மன்றக் கட்டடம் ஆகியவை அதிகம் குறிவைத்துத் தாக்கப் பட்டன. இந்தப் போராட்டங்களின்போது பவுடெல் மற்றும் ஒலி சர்மா போன்ற அரசியல் தலைவர்களின் வீடுகளும் குறிவைக் கப்பட்டன. வணிக வளாகங்கள், உல்லாசப்பயணிகள் தங்கும் ஹோட்டல்கள் மற்றும் பிற பெறுமதிமிக்க அரசுக் கட் டடங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. மொத்தச் சேதங்கள் இன்னும் மதிப்பிடப்படவில்லை. மேலும் பிரதமர் கே.பி. சர்மா ஒலி ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானதைத் தொடர்ந்து, முன்னாள் தலைமை நீதிபதியான சுசிலா கார்க்கி, கடந்த வாரம் நாட்டை வழிநடத்திய முதல் பெண்மணியாகவும் ஆக்கப்பட்டார்.

இடைக்காலப் பிரதமர் சுசிலா, நாடாளுமன்றம் கலைக்கப்படு வதற்கு வழிவகுத்த கொடிய வன்முறைக்குப் பிறகு, சீர்திருத் தவாத மற்றும் ஊழல் எதிர்ப்புத் தகுதிகளைக்கொண்ட மூன்று நபர்களுக்கு அமைச்சரவைப் பதவிகளை புரட்டாதி 15 அன்று வழங்கினார். நிதி அமைச்சகம் ரமேஸ்வோர் பிரசாத் கானல் தலைமையில் இருக்கும் என்று ஜனாதிபதி அலுவலகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும் அவர் ஜனாதிபதி ராம்சந்திர பவுடேலால் பதவிப் பிரமா ணமும் செய்து வைக்கப்பட்டார். முன்னாள் நிதிச் செயலா ளரான கானல், சமீபத்தில் முக்கிய பொருளாதார சீர்திருத் தங்களைப் பரிந்துரைத்த ஒரு குழுவிற்கு தலைமை தாங்கி யவர்.

எரிசக்தி அமைச்சகத்தை முன்னாள் மாநில மின் பயன்பாட்டுத் தலைவர் குல்மான் கீசிங் வழிநடத் துவார் என்று புதிய அரசு தெரிவித்துள்ளது. இவர் பொறியிலாளர் பதவியில் இருந்தபோது, மலை நாட்டில் மின்வெட்டு என்ற கொடுமையை எதிர்த்துப் போராடியவராவார். மனித உரிமை வழக்கறிஞரும், காத்மண்டு மேயரின் ஆலோசக ருமான ஓம் பிரகாஸ் ஆர்யல், பொது நலன் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளில் சட்டப் போராட்டங்களைத் தொடங்கியவர். இவர் உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். செப்ரம்பர் 13, ஞாயிற்றுக்கிழமை முறையாகப் பதவியேற்ற 73 வயதான கார்க்கி, 5 மார்ச் 2026-அன்று தேசியத் தேர்தல்களை நடத்தப் போவதா கவும் அறிவித்துள்ளார். கூடவே போராட்டங் களில் அழிக்கப்பட்ட பொதுக் கட்டமைப்புகளை மீண்டும் கட்டத் தொடங்குமாறு அதிகாரிகளை இவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தெற்காசியாவில் நிலத்தால் மட்டும் சூழப்பட்ட நாடு நேபாளம். இது முக்கியமாக இமயமலையில் அமைந்துள்ளது. சிந்து, கங்கை நதியின் சில பகு திகளையும் தன்னகத்தே கொண்ட நாடாகவும் விளங்குகிறது. அண்ணளவாக 30 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட நாடு. நீர் நிலைகளும் அழகும் பச்சை பசேலுமாக மலை சார்ந்த நாடு. 1850-களில் நேபாள தேசம் உரு வாக்கப்பட்ட போதே ஐந்தடுக்கு சாதிய அமைப்பை பேண வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டு ஆட்சியை உருவாக்கி தனது பயணத்தை தொடங்கியதே வரலாறு.

2006-ஆம் ஆண்டில் மன்னர் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்த யுத்தத்திற்கு பிறகு மாவோயிஸ்ட்டுகள் ஆட்சிக்கு வந் திருந்தாலும் சாதியரீதியாகப் பாகுபடுத்திப் பார்க்கும் அடுக்கு முறையை இன்று வரை அவர்களால் தகர்த்து அதிகம் முன்னேற முடியவில்லை. புரையோடிப் பயணித்து சாதியக் கட்டமைப்பும் அது சார்ந்த பொருளாதார அடுக்கு களும் ஏற்றத் தாழ்வுகளும் அதிகார வர்க்கத்தையும் இன்னமும் நேபாளம் கொண்டிருப்பது இன்றைய முரண்பாடு களுக்கான முக்கிய சமூகக் காரணியாக நாம் பார்க்க முடியும்.

இந்தியாவுடன் தெற்கு மேற்கு கிழக்கு திசைகளில் 1750 கிலோ மீற்றர் வரையிலான அதிகளவு தரைப் பகுதியால் இணைப்பை கொண்டுள்ளது நேபாளம். அதேபோல், முழுமையாக சீனாவின் ஆளுகைக்குட்பட்ட திபேத்துடனும் கிட்டத்தட்ட இதே அளவிற்கு வடக்குத் திசையில் தரை எல்லைப் பகுதி இணைப்பை கொண்டிருக்கின்றது. பல தசாப்தங்களாக நேபாளம் இந்தியாவின் செல்வாக்குட் பட்டும், திபேத் ஊடான சீனாவின் ஆளுமைக்குட்பட்டும் காணப்படுகின்றது. அதிகளவில் இந்துகளைக் கொண்டிருப் பதினால் இந்தியா தனது மற்றொரு மாநிலமாக இதன்மேல் செல்வாக்குச் செலுத்த முயலுகின்றது. இந்தியா காங்கிரஸ் கட்சியின் பெயரை ஒத்ததாக நேபாளத்தில் காங்கிரஸ் என்ற பெயரில் வலதுசாரிக் கட்சியை அமைத்து அதன் ஊடாக நேபாளத்துடன் பல தசாப்தங்களாக உறவாட முயன்று வரு கின்றது.

இதன் மறுவளமாக அங்கு 2006-ஆம் ஆண்டுவரை நடைபெற்று வந்த நேபாள காங்கிரஸின் கொயங்கா ஆட்சிக்கு எதிராக நேபாள மாவோயிஸ்ட்டுகள் சீனாவின் முழுமையான ஆதரவு, செல்வாக்கைப் பெற்று போராடி வந்தனர். இந்தப் போராட்டம் 1996-இல் இருந்து 2006-ஆம் ஆண்டு வரை மிக வீரியமாக நடைபெற்றது. அது இறுதியில் போர் நிறுத்தம் - சமாதானம் என்றாகி 2006-ஆம் ஆண்டில் நிறைவுற்றது. அதன் பின்பு நடைபெற்ற தேர்தலில் நேபாள காங்கிரஸ் சீனாவின் ஆதரவு பெற்ற நேபாள மாவோயிஸ்டுக ளுடன் இணைந்து ஆட்சியை அமைத்தது. தேர்தல் முடிவில் இரு தரப்பிற்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போனது. இதனால் காங்கிரஸ் கட்சியும் மாவோயிஸ்ட் கட்சியும் இணைந்து ஒரு ஐக்கிய முன்னணி அரசை அமைத்தன. ஆனால், யுத்தம் விட்டுச் சென்ற பேரழிவுகளும் மலைசார்ந்த வாழ்வியலும் நாட்டைக் கட்டியமைப்பதில் அதிக சிரமங்களை ஏற்படுத்திக்கொண்டே இருந்தது. இதற்குள் சீனா, இந்தியா என்ற இரு நாடுகளும் நேபாளத்தை தமது வளையத்திற்கு கொண்டு வருதல் என்ற விடயத்தில் தத்தமது தாக்கத்தை இங்கு செலுத்தி வந்தன. இது இலங்கையில் 2009 மே இறுதி யுத்தத்தின் பின்னர் இலங்கையை தமது செல்வாக்கு வலையத்திற்குள் சீனாவும் இந்தியாவும் கொண்டு வருவதற்கு முயன்ற செயற்பாட்டுடன் ஒத்ததாகவே இருந்தது. இலங்கையில் பொருளாதார உதவி, அபிவிருத்தி என்ற நிலையில் சீனாவின் கரம் ஓங்கியதோ அதே போலத்தான் நேபாளத்திலும் நடைபெற்றது. ஏனைய அயல் நாடுகளுடன் இந்திய உறவுகள் சீர்கெட்டது போன்று நேபாளத்திலும் சீர்கெட்டது. இது சீனாவுக்கு வாய்ப்பாகவும் அமைந்தது.

ஆனாலும் இந்தியாவுடன் நேரடித் தரை இணைப்பும் இந் துக்களை அதிகமாக கொண்டிருக்கும் இந்து நாடாகவும் நேபாளம் இருந்தமையால் அது இந்தி யாவின் நட்பு நாடாகவே இற்றைவரை உள்ளது. கூடவே பௌத்தத்தை சிறிய அளவில் கொண்டி ருப்பதும் இந்தியாவிற்கு சாதகமாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறது. ஆனால், சீனா நேபாளத்துடன் சர்ச்சைக்குரிய தீபெத் ஊடாகவே தனது செல்வாக்கை விடாப்பிடியாகச் செலுத்தி வருகின்றது. அதிலும் சிறப்பாக அபிவிருத் திக்கான நிதி மற்றும் தொழில்நுட்பம் போன்ற வற்றால் தனது செல்வாக்கை இலங்கையில் செலுத்தியது போல் நேபாளத்திலும் சீனா செலுத்தி வருகின்றது. இந்த சீனாவின் பிரசன்னம் எந்த வகையிலும் மேற்குலகிற்கு உவப்புடையது அல்ல.

உலகம் முழுவதும் பொருளாதார உதவிகள் அபிவிருத்தி என்றாகி ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, ஆசியா என்று எங்கும் சீனாவின் அகலக் கால் வைத்தலை தடுத்து நிறுத்தும் மேற் குலகின் செயற்பாட்டின் ஒரு அங்கமாக எப்படி இலங்கை குறி வைகப்பட்டதோ அவ்வாறுதான் நேபாளமும் இன்று குறி வைக்கப்பட்டுள்ளது. அண்மையில் தடை செய்யப்பட 26 சமூக வலைத் தளங்களில் அதிகம் மேற்குலக சமூக வலைத்த ளங்கள்தான் இருந்தன. இவைகள்தான் இன்று உலகில் இளைஞர் படையிடம் ஒரு கருத்துவாக் கத்தை அது சார்ந்த சிந்தனைக் குழப்பங்களை ஏற்படுத்து கின்றன.

இதில் தடைக்குள் உள்ளாகாத ஐந்துக்குட்பட்ட சமூக வலைத்தளங்களில் பிரதானமானது சீனாவின் ரிக் ரொக் ஆகும். இவை எல்லாம் நேபாளத்தில் குழப்பத்தை ஏற்படுத் துவதற்கான பின்புலச் செயற்பாட்டிற்கு போதுமானவையாக இருந்தன. இலவசம் என்று மக்கள் மத்தியில் கடை பரப்பி இருக்கும் இந்த சமூக வலைத்தளங்கள் உண்மையில் பல பில்லியன் டாலர் கணக்கில் மக்களிடம் இருந்து பணத்தை மறைமுகமாக பெற்று இயங்கி வருகின்றன. இதனை நாம் எலான் மஸ்க்-இன் சொத்துகளில் இருந்தே அறிய முடியும். கூடவே மிகப் பாரிய அளவில் இந்த இலத்திரனியல் பிரச்சா ரத்தில் இளம் தலைமுறையினர் வீழ்ந்து போகின்றனர். கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் உணர்ச்சிவசப்பட்டு ஆழ்ந்த சிந்தனையற்ற 'ஆபத்தான' செயற்பாடுகளுக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். உதாரணத்திற்கு மருத் துவர் சொல்லும் சுகவீனத்திற்கான மருந்தை விட கூகிள் சொல்லும் மருந்துவத்தை இளைஞர்கள் அதிகம் நம்புகின் றனர். ஒரு சாப்பாட்டுக் கடையின் அல்லது பொருளின் தரத்தை கூகிள் என்ன சொல்லுகின்றதே அதனை நம்பி அதன்பால் இழுக்கப்படும் விட்டில் பூச்சிகள் போல் இளம் தலைமுறையினர் அதிகம் சாய்க்கப்படுகின்றனர். இவ்விட யங்களில் ஆழ்ந்த ஆய்வுப் பார்வையைத் தவிர்த்து எந்தனை ஸ்ரார் போட்டிருக்கின்றது என்றான கூகிளின் தரம்தான் அதிகம் நம்பப்படுகின்றது. இது இன்று சமூக வலைத்தளங்களின் செல்வாக்கு மேலோங்கிவிட்டதை எடுத் துக்காட்டுகின்றது.

எனவே, நேபாளத்தில் முகநூல், வட்ஸ் அப் போன்றவற்றின் தடை அதில் வீழ்ந்து கிடந்த பல இலட்சம் இளைஞர்களை





சூதான் குருங் ஒரு 'அர்ப்பணிப்புள்ள கொடையாளர்'. அவர் கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலமாகத் தனது அரசு சாரா நிறுவனம் மூலம் வளங்களைத் திரட்டி வருகிறார்

இவை ஏன் தடை செய்யப்பட்டன என்பதை ஆழமாக ஆராயமலே வெகுண்டு எழச் செய்திருக்கின்றது. இதன் ஒரு வடிவம்தான் நேபாளத்தில் நடந்த கலவரங்கள். தமது சொத்துகளைத் தாமே நாசம் செய்த கலவரங்களையும் அவர்களே ஏற்படுத்தியிருக்கின்றனர். இதற்கு சூதான் குருங் போன்ற பிரபல்ய என்.ஜி.ஓக்கள் பாவிக்கப்பட்டார்கள். வெளிநாட்டுப் பணத்தின் செல்வாக்கால் இயங்கும் இவர்களைப் போன்ற வர்களை இலகுவாக வளைத்தே அந்த நாட்டில் குழப் பங்களை மேற்குலகத்தால் ஏற்படுத்த முடிந்தது. சமூக வலைத்தளங்களின் தடை என்பனவற்றுக்கு எதிராக போராட் டங்கள் தொடர்ந்தன. போராட்டம் வலுவடைய சமூக வலைத் தளங்களுக்கு எதிரான தடையும் அரசால் நீக்கப்பட்டது. ஆனால் போராட்டங்கள் நிற்கவில்லை. மாறாக தமது போராட்டத்தை மக்கள் இதற்கும் அப்பால் ஊழல் நிறைந்த, சர்வாதிகார மற்றும் தோல்வியுற்ற அரசாங்கம் என்பனவற் றிற்கு எதிராக விரிவாக்கினர். இந்தப் போராட்டத்தில் நேபாளம் முழுவதும் இளைஞர்களை அணிதிரட்டிய தன்னார்வ தொண்டு நிறுவனமான ஹமி நேபாளம் இன்னின் தலைவராக நேபாள போராட்டங்களில் முன்னணியில் இருக்கும் 38 வயதுடைய சூதான் குருங் உள்ளார்.

சூதான் குருங் யார் ?

நேபாள போராட்டங்களில் முன்னணியில் இருக்கும் சூதான் குருங், 25, ஏப்ரல் 2025 பூகம்பத்திற்குப் பிந்தைய மறுவாழ்வு மற்றும் அவசரகால மீட்புத் திட்டங்களுக்கு உதவும் ஹமி நேபாளம் இன்னின் தலைவராகப் பணியாற்றியவர். ஊடகங் களின் அறிக்கைகளின்படி, குருங் ஒரு 'அர்ப்பணிப்புள்ள கொடையாளர்'. அவர் கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலமாகத் தனது அரசு சாரா நிறுவனம் மூலம் வளங்களைத் திரட்டி வருகிறார். தனது சங்கம் ஊடாக, குருங் சர்வதேச நிதியை ஒருங்கிணைத்து வெள்ளம், நிலச்சரி வுகள் மற்றும் பூகம்பங்களால் பாதிக்கப்பட்ட சமூ கங்களுக்கு நன்கொடைகளைப் பெற்றுக்கொடுத் துள்ளார். ஆனால், தான் அரசியல்வாதி அல்ல என்றே திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார். 2015-ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத் தின்போது, தனது சொந்தக் குழந்தையை இழந்த ஒரு தனிப்பட்ட துயரத்தை எதிர்கொண்ட பிறகு, அவர் இந்த மக்களுக்கான உதவிப் பொதுச் செயற்பாட்டில் அதிகம் ஈடுபட்டார்.

'என் கைகளில் ஒரு குழந்தை இறந்தது. அந்த தருணத்தை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்' என்று அவர் எப்போதும் கூறி வந்தார். நாட்டில் ஒரு பயனுள்ள அவசரகால மீட்புக் குழு இல்லாததை உணர்ந்த குருங், 'ஹமி நேபாளம் 2020'-இனை உருவாக்கினார். இலாப நோக்கற்ற இந்த நிறுவனம் 1,600-க்கும் மேற்பட்ட உறுப்பி னர்களைக் கொண்டிருப்பதாக சொல்லப்படு கின்றது.

08, செப்ரம்பர் 2025 சமூக ஊடகங்களைத் தடை செய்வதற்கான நேபாள அரசாங்கத்தின் முடிவை எதிர்த்து நாடு முழுவதும் அமைதியான போராட் டங்களுக்கு குருங் மற்றும் ஹமி நேபாளம் அழைப்பு விடுத்தன. நேபாள பிரதமர் ஓலி சர்மா அரசாங்கத்தை அகற்றி மன்னர் முடியாட்சியிற்கு திரும்புவதற்கான போராட்ட கோரிக்கை அழைப்பை இணைத்தளங்களில் ஒலி ஒளி வடிவில் கோரிக்கையாகப் பல மாதங்களுக்கு முன்பே விடுத்தும் இருந்தனர்.

உக்கிரம் அடைந்த மக்கள் புரட்டாதி நான்கிற்கு ஒரு கிழமைக்கு முன்பே தெருவில் இறங்கியும் இருந்தனர். புரட்டாதி 4-ஆம் தேதி நேபாள அரசாங்கம் சமூக ஊடகங் களைத் தடை செய்ததைத் தொடர்ந்து போராட்டங்கள் தீவிர மடைந்தன. நேபாளத்தின் தடைக்கு முன்பு, ஹமி நேபாளம் இன்ஸ்டாகிராம் மற்றும் டிஸ்கார்டில் செப்டம்பர் எட்டு 2025-இல் மைதிகர் மண்டலாவில் மக்கள் போராட்டம் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. எப்படி போராட்டம் நடத்துவது ? என்ற தலைப்பில் சில வீடியோக்கள் அவர்களால் பகிரப்பட்டன, மாணவர்கள் சீருடையில், புத்த கங்கள் மற்றும் பாடசாலைப் பைகளை எடுத்துச் சென்றும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

2006 யுத்தம் முடிவடைந்த பின்பு கடந்த 19 வருடங்களில் மாறி மாறி 15-இற்கு மேற்பட்ட அரசுகள் மூன்று பிரதான கட் சிகளுடன் இணைந்தே அமைக்கப்பட்டன. அது தனித் தனியாக அல்லது கூட்டு அரசாக அமைந்தாலும் எதிர்கட் சியாக செயற்படுதல் என்றாலும் இந்த மூன்று பிரதான கட்சி களுக்கு இடையேதான் காணப்பட்டது. ஆனால், இவர்கள் யாராலும் நேபாளத்தை அதிகளவிற்கு முன்னோக்கி நகர்த்த முடியவில்லை.

இளைஞர்கள் விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டனர். வேலை வாய்ப்பு குறைவு, பொருளாதார சிக்கல், வறுமை, ஊழல் என் பனவும் காரணமாக இருந்தன. அதனைப் பாவித்து உசுப்

பேத்தி தமது தேசத்தின் மிக முக்கிய கட்டடங்களை அவர் களைக் கொண்டே எரித்து நாசப்படுத்தி மேலும் தமது நாட்டிற்கே பொருளாதார சிக்கலை ஏற்படுத்தியும் விட்டனர். போராட்டம் ஒரு எல்லையை கடந்த நிலையில் தமக்கு விரும்பாத அரசைக் கலைத்து தமக்கு விரும்பிய அரசை உருவாக்கும் முயற்சியில் மேற்குலகும் இறங்கிவிட்டது.

அன்று இலங்கையில் ரணிலும் அதன் பின்பு பங்களாதேசில் முகம்மது யூனுசும் இன்று நேபாளத்தில் சுசிலாவும் மேற்குலக நாடுகளால் உருவாக்கப்பட்டனர். ஆனால், இலங் கையில் மக்கள் விழிப்படைந்து மேற்கின் கைகூலியான வலதுசாரி ரணில் போன்றவர்களைத் தேர்தலில் நிராகரித்த துபோல் நேபாளத்திலும் பங்களாதேசிலும் நடைபெறுமா என்பது இங்கு கவனத்தைப் பெறுகின்றது.

கம்யூனிஸ்ட்களின் கருத்தியல் ஆதிக்கம் நிலவும் நேபா ளத்தில், இனி வரும் தேர்தல்களிலும் இலங்கையில் நடந்தது போன்று மேற்குலக நாடுகளின் விருப்பங்கள் நிறைவேறாமல் போகலாம். ஆனால், மாவேயிஸ்ட்கள் இரண்டு மூன்றாகப் பிரிந்து நிற்பதைத் தவிர்த்து இலங்கையின் தேசிய மக்கள் ஒரு சக்தியாக இணைந்தது போன்ற செயற்பாட்டைச் செய்தாக வேண்டும். அவர்கள் ஒரு ஐக்கிய முன்னணியை அமைப்பதில் வெற்றி காணலாம் என நம்பப்படுகிறது. ஏற்கனவே ஆட்சி அனுபவம் உள்ளமையினால் இதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக நம்பப்படுகின்றது. இதற்கு சீனா, இந்தியாவின் இடதுசாரிகளின் பின்புலச் செயற்பா டுகள் கருத்துருவாகச் செயற்பாடுகளும் அவசியமாகின்றது. சீனா நிச்சயம் உள்ளாட்டு அரசியலில் தலையிடாது. ஆனால் இந்தியாவின் கம்யூனிஸ்ட்களுக்கு மிகப் பாரிய பங்களிப்பு இருப்பதாக இங்கு உணர முடிகின்றது.

சுமார் 40 இலட்சம் வரையிலான நேபாளிகள் இந் தியாவில் உள்ளார்கள். அவர்கள் இந்தியாவின் ஆதார் அட்டையைப் பெற்றுள்ளனர். இதில் 4 இலட்சம் பேர் வரை தமிழ் நாட்டில் உள்ளார்கள். சமூக வலைத்தளங்களின் தடைக்கு எதிராக கலகம் விளைவித்த இளைஞர்களை நோக்கிய பலராலும் முன்வைக்கப்படும் விமர்சனமாக நேபாள சட்டதிட்டங்களுக்கு அமைய சமூக ஊட கங்கள் பதிவு செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட வேண்டும். அதனைப் பின்பற்றாத நிலையில் அந்த சமூக வலைதளங்களின் செயற்பாடுக ளுக்கு மட்டும் தடை விதித்த நிலையில் அதிக ளவில் 1997-இல் இருந்து 2021-வரை பிறந்த Gen Z எனப்படும் வயதினர் நியாயம் கோரி வீதியில் இறங்கி போராடியது சரியான பார்வையா ?' என்ற விமர்சனத்திற்கு இற்றைவரை பதிலில்லை.

இந்தத் தடை, அந்த நாட்டில் உள்ள ஒரு அர சுக்குச் சட்டபூர்வமாக உள்ள உரிமையாகும். இந்த வலைத்தளங்களை அதிகம் இயக்குப வர்கள் மேற்குலகைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஓர் இறைமையுள்ள நாட்டில், அந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கு இணங்கச் செயற்படாததை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. அப்படியி ருக்க, இந்த அடிப்படை உண்மையை ஏன் இளை ஞர்கள் கருத்தில் கொள்ளவில்லை ?

சமூக வலைத்தளங்கள் ஒரு நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படுவது ஒரு அடிப்படையானது. இதனைப் பின்பற்ற மறுத்ததினால் இந்த வலைத்தளங்களுக்கு தடை விதிக்கப்பட்டன. அப்படியிருக்க, சமூக வலைத்தளங்களை அதிகம் பயன்படுத்தும் இளைஞர்கள் இந்தச் சட்ட அடிப் படையை கருத்தில் கொள்ளவில்லை. அதனால் இந்தத் தடையை முதன்மைப்படுத்தி உருவான போராட்டம் அடிப்ப டையில் தவறானது. உண்மையில் இளைஞர்கள் அந்த சமூக வலைத்தளங்களைத் தங்கள் நாட்டின் சட்டங்களுக்கு அமைவாக முறைப்படி பதிவு செய்து நிர்வகியுங்கள் என்பதையே பிரதான கோரிக்கையாக முன்வைத்திருக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை ஏன் அவர்கள் முன்வைக் கவில்லை ?

ஆனால், இதற்கு மறு வளமாக போராட்டம் வெகு வேகமாக, கலவரமாக விரிவடைந்து துப்பாக்கிச் சூடும் மரணங்களும் காயங்களும் என்றானது. இதனைத் தவிர்ப்பதற்கு இளை ஞர்கள் முயன்று இருக்க வேண்டும் அல்லவா ? மரணங்களும் காயங்களும் எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. கலவரங்கள் நடக்கும் போது இது நடைபெறும் என்று கூறி, இதனைக் கடந்து செல்லவும் முடியாது. தற்கால இளைஞர்களை மக்கள் ஏன் சரியாகக் கையாளவில்லை ? இந்த மரணங்கள், காயப்படுத்தல்கள் இளைஞர்களின் வேகத்தையும் அதிகப்ப டுத்தியது, அவர்களின் உணர்ச்சிகளைத் தூண்டி, கட்டுபா டற்ற செயற்பாடுகளில் இறங்க வைத்தபோது அதனை ஏன் நல்வழிப்படுத்தவில்லை ?

கூடவே தமது போராட்டத்திற்கான காரணம் இந்த சமூக வலைத்தளத் தடை மட்டும் அல்ல. நாட்டில் நிலவும் பொரு ளாதாரப் பிரச்சினைகள் மற்றும் வேலைவாய்ப்பின்மை





சுதான் குருங் தனது சமூக வலைத்தளங்களில் முடக்கம் குறித்தும் அரசின் செயற்பாடுகள் குறித்தும் அதிகம் பேசினார். பேச்சினிடையில் தமது சொத்துகளை தாமே அழிப்பதாகக்கூறி அவர் முயன்றபோது போராட்டம் உச்சம் தொட்டது. யார் இந்த சுதாங் குருங்? அவரை பின்னால் இருந்து யாராவது இயக்குகின்றார்களா என்பதை ஏன் இற்றை வரை யாரும் ஆய்விற்கு உள்ளாக்கவில்லை?

போன்றவையும் ஆகும். அப்படியிருந்தும், இந்தப் போராட்டத்தின் பின்னால் உள்ள சக்திகள் யார், எவர் என்பதை ஏன் இளைஞர்களால் இனங்காண முடியவில்லை?

சுதான் குருங் தனது சமூக வலைத்தளங்களில் முடக்கம் குறித்தும் அரசின் செயற்பாடுகள் குறித்தும் அதிகம் பேசினார். பேச்சினிடையில் தமது சொத்துகளை தாமே அழிப்பதாகக்கூறி அவர் முயன்றபோது போராட்டம் உச்சம் தொட்டது. யார் இந்த சுதாங் குருங்? அவரை பின்னால் இருந்து யாராவது இயக்குகின்றார்களா என்பதை ஏன் இற்றை வரை யாரும் ஆய்விற்கு உள்ளாக்கவில்லை?

நேபாள மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினை, வேலை வாய்ப்பின்மை போன்ற பிரச்சினைகள் உள்ள நிலையில், அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள் சுக போகங்களை அனுபவிக்கின்றனர். அதனால், ஆத்திரம் ஊட்டும் வகையில் இளைஞர்கள் செயற்படுகின்றனர் என்பது உண்மையாக இருந்தாலும் இந்த உள்நாட்டுப் பிரச்சினையால் ஏற்பட்ட சூழலைப் பின் இருந்து இயக்கும் சக்திகள் யார் என்பதை நீண்ட போராட்ட வரலாற்றில் இளைஞர்கள் இனங்காணத் தவறிவிட்டனர். இன்னும் சில காலத்தில் நேபாளத்தில் தேர்தல் வரும். அதில் தமக்கான வலதுசாரிக் கருத்தியலை மேற்குலகம் தூக்கிக்காவும். அது ஒரு தரப்பினரை ஆட்சிக்கு அமர்த்தும். திட்டமிட்டு மேற்குலகத்தால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளை இந்த இளைஞர்கள் ஏன் உள்வாங்கவில்லை?

இதில், நிச்சயம் இந்தியாவின் வலதுசாரிச் சிந்தாத்தந்தின் தற்போதைய அரசின் கரங்களும் இருக்கலாம் என்பதான பார்வை இளைஞர்களால் ஏன் சீர்தூக்கிப் பார்க்கப்படவில்லை? இவ்வாறான பல விமர்சனங்களை இளைஞர்கள் கலகக்காரர்களாக மாறியதால் பலரும் கேட்கின்றனர். அருகில் இருக்கும் இந்தியாவும் 100 வீதம் இந்துக்களைக் கொண்டு நேபாளத்தில் இந்து இராஜ்ஜியம் அமைவதை விரும்பி மேற்குல விருப்பத்திற்கு இணையாக மௌனமாக ஆதரித்தே நிற்கிறது என்ற பார்வையையும் மறுதலிக்க முடியாது.

நேபாளத்தின் போராட்டமும் அரபு வசந்தம் போல் உணர்ச்சி வசப்பட்டுச் சொத்துக்களை அழிக்கும் வன்முறைச் செயற்பாடுகள் சரியான தலைமைத்துவம் அற்ற நிலமையைச் சுட்டிக் காட்டி நிற்கின்றது. ஆனால் அங்கு இனி வரும் தேர்தலுக்கு முன்பு அமைப்பு ரீதியாக வலுவான முற்போக்கு ஜனநாயக சக்திகள் ஒருங்கிணைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக உணர முடிகின்றது.

இந்த மூன்று நாடுகளும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள். இந்தியா இந்து சமுத்திரப் பிராந்தியத்தை சமாதானப் பிராந்தியமாகப் பேணல் என்ற கொள்கையின் அடிப்படையில் மேற்குலகின் ஆதிகத்திற்கு அனுமதி அளிக்காது வெளியுறவுக் கொள்கைகளில் உறுதியாக செயற்பட்டு இருந்தால், இது போன்ற நிலமைகள் ஏற்பட்டிருக்க வாய்ப்புகள் குறைவு. ஆபத்து நேரத்தில் உறுதியான நட்புக்கரம் நீட்டும் சகோதரத்துவ நிலைப்பாட்டை இந்தியா சரியாகக் கையாண்டு இருந்தால் இந்து சமுத்திர அயல்நாடுகளில் மேற்குலகிற்கு கால் ஊன்ற வாய்ப்புகள் இருந்திருக்காது. அமெரிக்கா தனது வொயிஸ் ஒப் அமெரிக்காவை இலங்கையில் அமைப்பதற்கு முனைந்த நிலையில், அதற்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை இந்திரா காந்தி எடுத்தமையை நாம் இவ்விடத்தில் நினைவுகூரவேண்டிய தேவையும் ஏற்படுகின்றது.

தற்போது அயல் நாடுகளுடன் இந்தியாவின் உறவு முன்பு எப்போதையும் விட சீரற்ற நிலையில் இருக்கின்றது. இது மேற்குலகம் தனது கால்களை இங்கு பதித்து குழப்பங்களை ஏற்படுத்தும் களங்களை அமைப்பதற்கும் ஏதுவாக அமைந்திருக்கின்றது. இந்நிலையில் இருந்து இந்து சமுத்திரப் பிராந்தியம் அமைதிப் பிராந்தியமாகத் தொடர்ந்தும் நிலவுவதற்குரிய உறவுகளை இந்தியாவும் ஏனைய அயல் நாடுகளும் செய்தாக வேண்டும். இதுவே இன்றைய நிலையில் இதில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளுக்குமான சுபீட்சமான எதிர்காலத்தை அமைக்கும். அது கலவர நிலையில் இருக்கும் நேபாளத்திற்கும் பொருந்தித்தான் இருக்கின்றது.



James@thaiveedu.com

மொழி உரிமையின் சவால்களும் நல்லிணக்கக் கருவுகளும்



– நிசன்குமார் கோபிநாத்

உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனின் கருத்துகளையும் மற்றொருவருக்கு பரிமாற்றம் செய்ய உதவும் ஒரு ஊடகமாக மொழி திகழ்கிறது. மனித சமூகத்தின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக மொழி இருப்பதோடு, தனிப்பட்ட மனிதரின் உரிமைகளையும் கௌரவத்தையும் பாதுகாப்பதில் மொழி ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந்த உலகில் ஒரே மொழியை பேசும் மக்கள் மட்டுமே வாழும் நாட்டை காண்பது அரிது. பெரும்பாலான நாடுகளில், பல மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்கின்றனர். இலங்கை இதற்கு விதிவிலக்கல்ல. கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் மொழிப் பிரச்சினை ஒரு பெரிய சவாலாக இருந்து வருகிறது. இந்த சவால் மக்கள் அன்றாட வாழ்வில் அரசாங்க சேவைகளைப் பெறுவதில் தடைகளை ஏற்படுத்துகின்றது.

வடக்கு மாகணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அரசாங்க அலுவலகங்களுக்குச் செல்லும் தமிழ் பேசும் மக்கள் பெரும்பாலும் மொழி காரணமாகப் பல இடர்பாடுகளைச் சந்திக்க நேர்கிறது. முக்கியமாக அரசின் கோப்புகள் படிவங்கள் மற்றும் அறிவிப்புகள் பெரும்பாலும் சிங்களத்தில் மட்டுமே கிடைக்கின்றன. இதனால் பொது மக்கள் தங்கள் தேவைகளை அல்லது கோரிக்கைகளை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாமல் தவிக்கின்றனர். சில நேரங்களில் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாத காரணத்தினால் சிறிய காரியங்களுக்காகக் கூடப் பல நாட்கள் அலைய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

> ***“இலங்கையின் மொழிப் பிரச்சினை என்பது அண்மைய நாட்களில் எழுந்ததல்ல. இது பிரித்தானியர் ஆட்சியிலிருந்து தொடங்குகிறது. அக்காலத்தில் நிர்வாக மொழியாகவும் கல்வி மொழியாகவும் ஆங்கிலம் கோலோச்சியது.”***

உள்ளூர் அரச அலுவலகங்கள், காவல்துறையினர், மருத்துவமனைகள் போன்ற அத்தியாவசிய பொது சேவை நிறுவனங்களில்கூட தமிழ் மொழி பேசும் அதிகாரிகள் போதுமான அளவில் இல்லை. இதனால் தமிழ் பேசும் மக்கள் தங்கள் குறைகளைத் தெளிவாக எடுத்துரைக்க முடியாமல் போகிறது. உதாரணமாக ஒரு மருத்துவமனையில் நோயாளியின் நோய்க்கான காரணத்தைக் கூற முடியாதபோது அவருக்குச் சரியான சிகிச்சை கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளது. அதேபோல காவல் துறையினரிடம் ஒரு புகாரைக் கூறும்போது சரியான முறையில் மொழிபெயர்ப்பாளர் இல்லாததால் புகார் முழுமையாகப் பதியப்படாமல் போகலாம். இந்த மொழித் தடைகள் மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரிப்பதோடு பொது மக்களின் உரிமைகளையும் பாதிக்கின்றன.

இலங்கையின் மொழிப் பிரச்சினை என்பது அண்மைய நாட்களில் எழுந்ததல்ல. இது

பிரித்தானியர் ஆட்சியிலிருந்து தொடங்குகிறது. அக்காலத்தில் நிர்வாக மொழியாகவும் கல்வி மொழியாகவும் ஆங்கிலம் கோலோச்சியது. இதன் காரணமாக ஆங்கிலம் அறிந்த சிலர் மட்டுமே அரச பதவிகளில் அமர்ந்து அதிகாரம் செலுத்தினர். பெரும்பான்மையான சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு ஆங்கில மொழி தெரியாததால் அவர்கள் அரச சேவைகளைப் பெறுவதிலும் அதிகாரத்தில் பங்கு பெறுவதிலும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, பெரும்பான்மை மக்களின் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. இதன் விளைவாக 1956-இல் அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் 'தனிச் சிங்களச் சட்டம்' கொண்டுவரப்பட்டது. சிங்கள மொழி மட்டுமே இலங்கையின் உத்தியோகபூர்வ அரசகரும மொழியாக அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்டம் தமிழ் மொழியைப் புறக்கணிப்பதாகக் கருதப்பட்டதால் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இது இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

முதலாவது குடியரசு அரசியலமைப்பானது, அந்தச் சட்டத்தை அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தியது.

இந்த அரசியலமைப்பின் பகுதி III, பிரிவு 7-இல், 'சிங்களம் இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாகும்' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டது. இந்த அரசியலமைப்பில், தமிழ் மொழிக்கு எந்தவிதமான அதிகாரபூர்வமான அங்கீகாரமும் வழங்கப்படவில்லை.

1978-ஆம் ஆண்டு அரசியலமைப்பு, மொழிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொண்டுவரவில்லை. 1987-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 13-வது அரசியலமைப்புத் திருத்தமே, தமிழ் மொழிக்கு அதிகாரபூர்வ மொழித் தகுதியை வழங்கியது. இதற்கமைய 1978 அரசியலமைப்பில்:

- உறுப்புரை 18 (1): இலங்கையின் அரசகரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும்.
  (2): தமிழும் அரசகரும மொழி ஒன்றாதல் வேண்டும்.
  3): ஆங்கிலம் இணைப்பு மொழியாதல் வேண்டும்.
- உறுப்புரை 19: இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழும் ஆதல் வேண்டும்.
- உறுப்புரை 22 (1): சிங்களமும் தமிழும் இலங்கை முழுவதிலும் நிருவாக மொழிகளாக இருத்தல் வேண்டும். அத்துடன் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தவிர்ந்த இலங்கையின் எல்லா மாகாணங்களிலும் சிங்களம் நிருவாக மொழியாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பொதுப் பதிவேடுகளைப் பேணி வருவதற்காகவும், பகிரங்க நிறுவனங்களினால் அலுவல்கள் யாவும் கொண்டு நடத்தப்படுவதற்காகவும் சிங்களமொழி பயன்படுத்தப்படுதலும் வேண்டும். வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் தமிழ் மொழி அவ்வாறு பயன்படுத்தப்படுதல் வேண்டும். ஆயின் உதவி அரசாங்க அதிபரின் பிரிவொன்றை உள்ளடக்கும் கூறு எதனதும் மொத்த சனத்தொகைக்குச் சிங்கள அல்லது தமிழ் மொழிவாரியான சிறுபான்மைச் சனத்தொகை என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதனைக் கருத்திற்கொண்டு சிங்களம், தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.



> ***1956-இல் அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் 'தனிச் சிங்களச் சட்டம்' கொண்டுவரப்பட்டது. சிங்கள மொழி மட்டுமே இலங்கையின் உத்தியோகபூர்வ அரசகரும மொழியாக அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்டம் தமிழ் மொழியைப் புறக்கணிப்பதாகக் கருதப்பட்டதால் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.***

தனிச் சிங்களச் சட்டத்தின் தாக்கங்கள் சமூகத்தில் கலவரங்களையும் அமைதியின்மையையும் ஏற்படுத்திய நிலையில் அரசு மொழிப் பிரச்சினையைச் சமாளிக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. அதன் ஒரு பகுதியாக 1961-ஆம் ஆண்டில் அரசகரும மொழி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் நோக்கம் அரசாங்கப் பணிகளில் சிங்கள மொழியைப் படிப்படியாக நடைமுறைப்படுத்துவதற்கும் அதற்கான வழிமுறைகளை வகுப்பதற்கும் உதவுவதே ஆகும். ஆனால் இந்த ஆணைக்குழுவினால் தமிழ் மக்களின் கோரிக்கைகளை முழுமையாக நிவர்த்தி செய்ய முடியவில்லை. அதன் விளைவாக மொழிப் பிரச்சினை ஒரு தொடர்ச்சியான சமூக அரசியல் போராட்டமாக மாறியது.

1956-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம், வெறும் ஒரு சாதாரண சட்டமாக இருந்தது. ஆனால், 1972-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இலங்கையின்

தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும், அல்லது அத் தகைய இடப்பரப்பு அமைந்திருக்கக்கூடியதான மாகாணத்தில் நிருவாக மொழியாகப் பயன்படுத்தப்படும் மொழி தவிர்ந்த ஒரு மொழி அத்த கைய இடப்பரப் பிற்கான நிர்வாக மொழியாக பயன்ப டுத்தப்படலாம் எனச் சனாதிபதி பணிக்கலாம்.

என இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டு, மொழிப் பிரச்சினைகளை மாகாண அள வில் தீர்க்க ஒரு வழியை உருவாக்கிய துடன், தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான மொழிச் சமத்துவத் திற்கு ஒரு சட்டபூர்வமான அடித்த ளத்தை அமைத்தது.

இருப்பினும், இந்தச் சட்டம் நடைமு றையில் முழுமையாகச் செயற்படுத்தப் படவில்லை என்பதே உண்மை. தமிழ் மக்கள் இன்றும் மொழி காரணமாக அரச சேவைகளைப் பெறுவதில் சிரமங் களை எதிர்கொள்கின்றனர்.

> ***இலங்கையில் உண்மையான சமத்துவம் மற்றும் இன ஒற்றுமை ஏற்பட வேண்டுமெனில், அரச சேவைகளில் இரு மொழிக் கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அரசகரும மொழி ஆணைக்குழுவை வலுப்படுத்தி, அதற்கு சுதந்திரமான செயல் அதிகாரம் வழங்க வேண்டும்.***

இலங்கையில் உள்ள பல மாவட்டங் களில், குறிப்பாகச் சிங்களப் பெரும்பான்மை உள்ள பகுதி களில், அரச அலுவலகங்களில் தமிழ் பேசும் அதிகாரிகள் இல்லை. படிவங்கள், அறிவிப்புகள் ஆகியவை சிங்க ளத்தில் மட்டுமே கிடைக்கின்றன. இதன் விளைவாக, தமிழ் மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளுக்காகப் பல இடர் பாடுகளைச் சந்திக்கின்றனர். இது, சட்டம் இருந்தும், அது முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை என்பதைக் காட்டு கிறது. ஒருவேளை, சட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தால், இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் தமிழ் மக்கள் மொழிப் பிரச்சினையின்றி அரச சேவைகளைப் பெற் றிருக்க முடியும்.

இலங்கையில் அரசகரும மொழிக் கொள்கையைச் சரியாக நடைமுறைப்படுத்த அனைத்து அரசாங்க நிறுவனங்களின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம். அரசாங்க ஊழியர்கள் இரண்டாம் மொழியைக் கற்பது, மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஒரு முக்கிய படியாகும். இதற்கான முயற்சிகள் பல்வேறு சுற்றறிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன: ஆனால், இதுவும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படா ததால், அதன் நோக்கம் அடையப்படவில்லை.

மொழித் தடையால், தமிழ் மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கை யில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அடிப்படைச் சேவைகளான கல்வி, மருத்துவம், காவல்துறை போன்ற வற்றில் மொழித் தடையால் பாதிக்கப்படுகின்றனர். இதன் விளைவாக, அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

- ***சமத்துவமின்மை:*** அரச சேவைகளில் தமிழ் மக்களின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. இது சமத்துவ மின்மையை உருவாக்குகிறது.
- ***அதிகார மேலாதிக்கம்:*** மொழி வெறும் தகவல் பரிமாற்றத்திற்கான கருவி மட்டுமல்ல, அது அதி காரம், தனித்துவம் மற்றும் அரசியல் பலத்தின் ஒரு முக்கிய பிரதிபலிப்பாகும். இலங்கையில் சிங்கள மொழிக்கு அளிக்கப்படும் அதிகார மேலாதிக்கம், தமிழ்ச் சமூகத்தின் அடிப்படை உரிமைகளை மறுப்ப தற்கு வழிவகுத்துள்ளது.
- ***சமூக ஒற்றுமை:*** இது இன ஒற்றுமையையும் சமூக சமத்துவத்தையும் பாதிக்கிறது.

இலங்கையில் உண்மையான சமத்துவம் மற்றும் இன ஒற் றுமை ஏற்பட வேண்டுமெனில், அரச சேவைகளில் இரு மொழிக் கொள்கையை முழுமையாக நடைமு றைப்படுத்த வேண்டும். அரசகரும மொழி ஆணைக் குழுவை வலுப்படுத்தி, அதற்கு சுதந்திரமான செயல் அதிகாரம் வழங்க வேண்டும். இதுவே, அனைத்து மக் களும் தங்கள் மொழியில் அச்சமின்றி அரச சேவை களைப் பெறுவதற்கான வழியாகும்.

இலங்கை போன்ற பல இன, பல மத மற்றும் பல கலாசார பின்னணியைக் கொண்ட ஒரு நாட்டில், சமூக ஒற்றுமை, பன்மைத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதற்கான சட்டரீதியான பொறுப்பு அர சுக்கே உள்ளது. இது அரசகரும மொழிக் கொள்கை யைப் பின்பற்றுவதில் இருந்து தொடங்குகிறது.

அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமும், பிற கொள்கை ரீதி யான ஏற்பாடுகளின் மூலமும் மொழி தொடர்பான ஒரு தொலைநோக்குப் பார்வை இலங்கைக்கு உள்ளது. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்குச் சம அந்தஸ்து வழங்கும் சட் டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், இவை வெறும் சட் டங்களாக மட்டும் இருக்கக்கூடாது, நடைமுறையிலும் முழு மையாக அமுல்ப்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு அமைச் சும், திணைக்களமும், அரச நிறுவனமும் மொழிக் கொள்கை யைச் சரியாக நடைமுறைப்படுத்த வேண்டியது கட்டாய மாகும்.

அரசகரும மொழிக் கொள்கையை முழுமையாக நடை முறைப்படுத்துவது வெறுமனே ஒரு நிர்வாகக் கடமை அல்ல. அது, நாட்டின் அனைத்து மக்களும் எதிர்பார்க்கும் நல்லி ணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டிற்கான ஒரு அடையாள மாகும். அரச சேவைகளை மக்கள் தங்கள் தாய்மொழியில் பெறுவதை உறுதி செய்வதன் மூலம், அரசு அவர்கள் மீதான நம்பிக்கையை வளர்க்கிறது. இது, சிறுபான்மையினர் தங் களது உரிமைகள் மதிக்கப்படுகின்றன என்று உணர்வதற் கும், சமூகத்தில் சமமானவர்களாகப் பார்ப்பதற்கும் வழி வகுக்கும். இதன் மூலம், நாட்டில் உள்ள அனைத்து மக்களி டையேயும் ஒரு புரிதல் மற்றும் பரஸ்பர மரியாதை உருவாகி, ஒரு சிறந்த எதிர்காலத்திற்கு வழிவகுக்கும்.



kobinath.n@thaiveedu.com

பெண்: உடமையல்ல உயிர்!

– சிறிதரன் ஹரிஷா

சமூகத்தில் பெண்களுக்கு எதிராகவே அதிகளவான குற்றங்கள் நடக்கின்றன என்பது ஒரு கசப்பான உண்மை. இந்த நிலை ஒரு அதிர்ச்சியான நிகழ்வாக இல்லாமல் அன்றாடச் செய்திகளில் நாம் கடந்து செல்லும் ஒன்றாக மாறிவிட்டது. பெண்களுக்கு எதிரான வன்முறை, பாலியல் துன்புறுத்தல், வரதட்சணைக் கொடுமை எனப் பல வடிவங்களில் நிகழும் அநீதிகள் நம் சமூகத்தின் ஆழமான ஏற்றத்தாழ்வுகளைப் பிரதிபலிக்கின்றன.

இந்தப் பிரச்சினைக்கான மூல காரணங்களை ஆராயும்போது சமூகத்தில் பெண்களுக்கு வழங்கப்படும் குறைந்த முக்கியத்துவம் தவறான ஆணாதிக்க மனநிலை மற்றும் குற்றவாளிகளுக்கான சட்ட நடவடிக்கை தாமதப்படுதல் போன்ற பல அம்சங்கள் வெளிப்படுகின்றன. பெண்களுக்கு எதிரான வன்முறை வெறும் சட்டப் பிரச்சினை மட்டுமல்ல; அது சமூக மனப்பான்மை மற்றும் கலாசாரத்துடன் பிணைந்த ஒரு ஆழமான சிக்கலாகும்.

> ***“ஒரு பெண் மென்மையானவள் பலவீனமானவள் என்பது ஒரு சமூகக் கட்டமைப்பே தவிர, அது இயற்கையான உண்மையல்ல.”***

சட்டங்களால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட செயல்களைச் செய்யத் தவறுவதும் சட்டத்தால் தடை செய்யப்பட்ட செயல்களைச் செய்வதும் குற்றம் எனப்படும். சமுதாயத்தின் அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காகவே இந்தச் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு தனிநபர் இந்தச் சட்டங்களை மீறும்போது அது குற்றம் என்றழைக்கப்படுகிறது.

பண்டைய காலங்களில் குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக பகுத்தறிவற்ற முறைகள் பின்பற்றப்பட்டன. உதாரணமாக சந்தேக நபரின் கை கால்களைக் கட்டி கிணற்றில் போடுதல், கொடிய விஷமுள்ள பிராணிகளைக் கொண்டு கடிக்க விடுதல் போன்ற காட்டுமிராண்டித்தனமான செயல்கள் நடைமுறையில் இருந்தன. இத்தகைய மூடநம்பிக்கைகள் நிறைந்த தண்டனை முறைகளுக்கு முக்கியக் காரணம் அக்கால மன்னர்கள், மதத் தலைவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்ததுதான்.

அக்கால மக்கள் மத்தியில் குற்றமிழைப்பவர்கள் தீய சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள் என்ற ஆழமான நம்பிக்கை இருந்தது. இந்த மூடநம்பிக்கையின் அடிப்படையிலேயே குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். காலப்போக்கில் நீதித்துறையின் பரிணாம வளர்ச்சியின் காரணமாக அறிவியல்பூர்வமான முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் நிரூபிக்கப்பட்டனர்.

பெரும்பாலான மக்களின் பொதுவான கருத்து, ‘பெண்கள் மென்மையானவர்கள் பலவீனமானவர்கள். அதனால்தான் அவர்களுக்கு எதிராகக் குற்றங்கள் நடக்கின்றன’ என்பதாகும். ஆனால், இந்தக் கருத்து தவறானது. நமது சமூகம் நீண்ட காலமாகவே தாய்வழிச் சமூகமாக இருந்துள்ளது. அதாவது குடும்பத்தின் அதிகாரம் தாயிடமே இருந்தது. இந்த மரபில் இருந்துதான் நாம் வந்திருக்கிறோம்.

ஒரு பெண் மென்மையானவள் பலவீனமானவள் என்பது ஒரு சமூகக் கட்டமைப்பே தவிர, அது இயற்கையான உண்மையல்ல. இன்றைய சூழலில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிக்கக் காரணம் நமது சமூகத்தில் நிலவும் பாலின ஏற்றத்தாழ்வுகள், வன்முறைப் பண்பாடு மற்றும் பெண்ணை ஒரு போகப்பொருளாகப் பார்க்கும் தவறான மனப்பான்மையே ஆகும். இதனைப் புரிந்துகொண்டு சமூகத்தின் சிந்தனைப் போக்கை மாற்றுவதன் மூலமே பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் குறைக்க முடியும்.

மனிதகுலத்தின் ஆரம்பகால ஆதிப் பொதுவுடமைச் சமூகங்களில், உணவு சேகரித்தல் மற்றும் வேட்டையாடுதல் ஆகிய தொழில்களில் ஆண்களும் பெண்களும் சமமாக ஈடுபட்டனர். அத்தகைய சமூகங்களில், குழந்தைகள் யார் யாருக்குப் பிறந்தார்கள் என்பதைக் கண்டறிவது கடினமாக இருந்ததால், உறவுகள் தாயை மையமாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டன. இதனால், பெண்கள் குடும்பத்தின் தலைவர்களாகவும், சமூகத்தில் உயர்ந்த இடத்திலும் இருந்தனர். இதுவே தாய்வழிச் சமூகம் (Matriarchal Society) என்று அழைக்கப்படுகிறது.



வேளாண்மை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், உற்பத்தி அதிகமாகியது. இதனால், தனிப்பட்ட சொத்துரிமை (Individual Ownership) என்ற கருத்து உருவானது. தங்கள் சொத்துகளை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றபோது, ஒரு பெண் ஒரே ஆணுடன் மட்டும் உறவு கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. இது தந்தைவழிச் சமூகத்தின் (Patriarchal Society) தோற்றத்திற்கு வழிவகுத்தது.

நிலவுடைமைச் சமூகத்தில், மன்னர்கள் மற்றும் நிலப்பிரபுக்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள, 'மண்ணையும், பெண்ணையும்' தங்கள் உடைமைகளாகக் கருத ஆரம்பித்தனர். இந்தச் சூழலில், சமூகத்தில் குறைந்த அதிகாரம் கொண்ட, குறிப்பாக அடிமைச் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், பணக்காரர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்தப்பட்டனர். இது வெறும் தனிப்பட்ட செயல் அல்ல, மாறாக சமூக அமைப்பு அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதன் ஒரு சோகமான வெளிப்பாடாகும்.

இந்தப் பரிணாமம் பெண்களின் சமூக அந்தஸ்தைக் கடுமையாகப் பாதித்து, அவர்களை அதிகாரமற்றவர்களாகவும், ஆண்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும் ஆக்கியது. இதுவே பாலின சமத்துவமின்மைக்கான ஆரம்ப அடித்தளங்களில் ஒன்றாகும்.

தொழில்துறைப் புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தில், பெண்கள் முக்கியமாக குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதிலும், வீட்டைக் கவனித்துக் கொள்வதிலும் மட்டுமே ஈடுபட்டிருந்தனர். அவர்களை வெளியில் சென்று வேலை செய்ய முதலாளித்துவ சமூகம் பெரும்பாலும் அனுமதிக்கவில்லை. ஆனால், பண்ணையாளர்களும் முதலாளித்துவவாதிகளும் தொழிற்சாலைகளை உருவாக்கி, முதலீடுகளைப் பெருக்க முற்பட்ட போது, அதிக இலாபம் ஈட்டுவதற்காக ஆண்களுடன் பெண்களையும் வேலைக்கு அமர்த்தினர்.

இந்தக் காலகட்டத்தில், தொழிற்சாலைகளில் பணிபுரிந்த பெண்களுக்கு அனைத்துவித அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டன. 12 மணி நேரத்திற்கும் மேலான தொடர் வேலை, கழிப்பறைகளைப் பயன்படுத்தக்கூட முடியாத நிலை, மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்குப் பாலூட்ட அனுமதி மறுப்பு போன்ற கொடுமைகளை அவர்கள் சந்தித்தனர். இந்த அவலமான சூழல், உழைக்கும் பெண்களிடையே ஒரு பெரிய எழுச்சியை ஏற்படுத்தியது.

இந்தக் கொடுமைகளை எதிர்த்துப் போராடத் துணிந்த உழைக்கும் பெண்கள், தங்கள் உரிமைகளை மீட்டெடுக்க முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராகப் போராடினர். அவர்கள் வேலை நேரத்தைக் குறைத்தல், மேம்பட்ட பணிச்சூழல், சம ஊதியம் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். இந்தப் போராட்டங்கள் படிப்படியாக வலுப்பெற்றன. இதன் விளைவாக, பல்வேறு நாடுகளில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை போன்ற அடிப்படை அரசியல் உரிமைகளும் கிடைத்தன.

இந்தத் தொடர் போராட்டங்களின் நினைவாகவும், பெண்களின் தியாகங்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும், சர்வதேச உழைக்கும் மகளிர் நாளான மார்ச் 8 கொண்டாடப்படுகிறது. இது பெண்களின் உரிமைகளுக்காக உழைக்கும் வர்க்கம் நடத்திய போராட்டத்தின் வெற்றிச் சின்னமாக இன்றும் விளங்குகிறது.

பெண்கள் பலவீனமானவர்கள் கிடையாது; பலவீனமானவர்களாக ஆக்கப்பட்டவர்கள். ஏனென்றால், இந்த சமூகம் திறமை, தகுதி என்பனவற்றினை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பினை ஆண்களுக்கு மாத்திரமே கொடுத்து வந்துள்ளது. இந்த வாய்ப்பு, தகுதி என்பன பெண்களுக்கு கொடுக்கப்படாமையினால்தான் அவர்கள் பல வீனமானவர்களாக உருவாக்கப்படுகின்றார்கள். இந்த நிலை வெறும் வாய்ப்பு மறுப்புடன் மட்டும் நின்றுவிடவில்லை; இதற்கு மூன்று முக்கியக் காரணங்கள் பங்களிக்கின்றன.

> ***"இந்த சமூகம் திறமை, தகுதி என்பனவற்றினை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பினை ஆண்களுக்கு மாத்திரமே கொடுத்து வந்துள்ளது. இந்த வாய்ப்பு, தகுதி என்பன பெண்களுக்கு கொடுக்கப்படாமையினால்தான் அவர்கள் பலவீனமானவர்களாக உருவாக்கப்படுகின்றார்கள்."***

- **பால்நிலை சார் உணவுப் பாகுபாடு (Gender–Based Nutritional Discrimination):**

  பெரும்பாலான குடும்பங்களில், ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுகள் ஆண் பிள்ளைகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. அதேபோல், கணவன் - மனைவி உறவில், கணவருக்கே உணவு விஷயத்தில் முதலிடம் கொடுக்கப்படுகிறது. இது சர்வதேச அளவில் நடத்தப்பட்ட பல ஆய்வுகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, வளரும் நாடுகளில் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது இந்த உணவுப் பேதத்தின் நேரடி விளைவாகும். இது அவர்களின் உடல்நலத்தையும், அறிவாற்றல் திறன்களையும் பாதிக்கிறது.

- **தொழில்சார் பாலின சமூக வரையறை (Work–Based Gender Stereotyping):**

  சமூகம் ஆரம்பத்திலிருந்தே ஆண்களுக்கு அதிக உடல் உழைப்பு தேவைப்படும் வேலைகளையும், பெண்களுக்குக் குறைந்த உடல் உழைப்பு தேவைப்படும் வேலைகளையும் ஒதுக்கியுள்ளது. இதனால், பெண்களுக்குத் தொழில்ரீதியான அனுபவமும், தலைமைத்துவப் பண்புகளும் கிடைப்பதில்லை. உதாரணமாக, கட்டுமான வேலைகள், கனரகத் தொழில், கனரக வாகனமோட்டல் போன்ற கடினமான வேலைகளை ஆண்கள் மட்டுமே செய்வார்கள் என்ற மனப்பான்மை, பெண்களின் உடல் வலிமைக்கு சவாலான வேலைகளில் ஈடுபடுவதைத் தடுக்கிறது. இந்த வேலைப் பிரிவினை, உடல் ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் பெண்களை பின்தங்கச் செய்கிறது.

- **உளவியல் காரணிகள் (Psychological Factors):**

  சமூகத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், பெண்களின் மனநிலையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. 'பெண்கள் மென்மையானவர்கள்', 'பெண்களால் குறிப்பிட்ட வேலைகளைச் செய்ய முடியாது' போன்ற கருத்துகள் பெண்களின் தன்னம்பிக்கையைக் குறைக்கின்றன. இது அவர்களின் உளவியலில் ஒரு தடையை உருவாக்கி,

சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் தைரியத்தை இல்லாமல் செய்கிறது. இது, பெண்கள் தாங்கள் தகுதியற்றவர்கள் என்று நம்புவதற்கு வழிவகுத்து, அவர்களின் முழுத் திறனையும் வெளிப்படுத்தத் தடையாக அமைகிறது.

இந்த மூன்று காரணிகளும், பெண்கள் பலவீனமானவர்களாகக் கருதப்படுவதற்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தப் பேதங்களைக் களைந்து, சமமான வாய்ப்புகளையும், ஆரோக்கியமான சமூகப் பழக்கங்களையும் உருவாக்கினால் மட்டுமே, பெண்கள் தங்கள் முழுத் திறமையையும் வெளிப்படுத்த முடியும்.

சமூகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கப் பல சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இருந்தும் அவை ஏன் குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை? குற்றங்கள் தொடர்வதற்கான முக்கிய காரணம் சட்டத்தின் பற்றாக்குறை அல்ல, மாறாக ஆழமாக வேரூன்றிய சமூக மனப்பான்மைதான்.

பெரும்பாலான குற்றங்கள் நடப்பதற்குப் பின்னால் 'பெண் ஒரு உடமையே தவிர உயிர் அல்ல' என்ற தவறான எண்ணம் உள்ளது. இந்தச் சிந்தனை ஆண் தன் அதிகாரத்தை ஒரு பெண்ணின் உடல் மீது செலுத்துவதற்கு உரிமை உண்டு என்று நம்புகிறது. இத்தகைய மனப்போக்கே குற்றங்களுக்கு முக்கியக் காரணமாக அமைகிறது. இந்த எண்ணம் ஆண்களுக்குச் சமூகத்தால்தான் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனை கொடுப்பது மட்டும் நிரந்தரத் தீர்வல்ல. தண்டனைகள் தற்காலிகமாக குற்றங்களைக் குறைக்கும். ஆனால், இந்த வன்முறைச் சிந்தனையை வேரிலிருந்து அகற்ற, ஒரு முழுமையான அணுகுமுறை அவசியம்.

இதற்கு, கல்வி, சட்டம் மற்றும் சமூக-பொருளாதார மேம்பாடு ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்த ஒரு பொறிமுறை மட்டுமே சரியான தீர்வாக அமையும். இத்தகைய அணுகுமுறையின் மூலம், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சிந்தனையை மாற்றி, குற்றமற்ற ஒரு சமூகத்தை உருவாக்க முடியும்.

சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு, பெண்கள் ஆண்களுக்குச் சமமானவர்கள், அவர்களுக்கு உடல் மீதும், வாழ்க்கை மீதும் முழு அதிகாரம் உண்டு என்ற புரிதலை ஏற்படுத்த வேண்டும். பள்ளிகள், வீடுகள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் இந்த மாற்றத்தை உருவாக்க வேண்டும். இந்தச் சமூகக்கல்வி, பாலின சமத்துவம் குறித்த புதிய கண்ணோட்டத்தை உருவாக்கும். அப்போதுதான், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சிந்தனை இல்லாமல், சமத்துவமான சமூகம் உருவாகும்.

குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனைகள் கொடுப்பதன் மூலம் குற்றங்களைக் குறைக்க முடியும் என்று சிலர் நம்புகின்றனர். உதாரணமாக திருடுபவர்களின் கையை வெட்டுதல், பாலியல் குற்றவாளிகளைத் தூக்கிலிடுதல் போன்ற பழிக்குப் பழி வாங்கும் தண்டனைகள் ஒரு தீர்வாக முன்வைக்கப்படுகின்றன. இதுபோன்ற கடுமையான சட்டங்கள் மக்களை அச்சுறுத்தி, குற்றங்கள் நடக்காமல் தடுக்கும் என்ற கருத்தும் நிலவுகிறது.

ஆனால், இது ஒரு பெரிய ஆலமரத்தின் கிளைகளை மட்டும் வெட்டுவதற்குச் சமம். குற்றங்கள் என்பது அந்த மரத்தின் வேர் போன்றது. வேரை அடியோடு பிடுங்காத வரை மரம் மீண்டும் துளிர்க்கும். தண்டனைகள் வெறும் தற்காலிகத் தீர்வை மட்டுமே வழங்குகின்றன. குற்றம் செய்வதற்கான அடிப்படைக் காரணமான மனப்பாங்கையோ, சமூகச் சூழலையோ அவை மாற்றுவதில்லை. எனவே, குற்றங்களைக் குறைக்க ஒரே வழி குற்றவாளிகளுக்கு புரியவைத்து சமூகத்திற்கு ஒரு நல்ல மனிதராக அவர்களை மாற்றுவதுதான். இதை வெறும் தண்டனைகளால் சாதிக்க முடியாது. சரியான புரிதல் மற்றும் கல்வி மூலம் குற்றச் செயல்களுக்குப் பின்னால் உள்ள மனப்போக்கைக் களையெடுக்க முடியும். இந்த மனமாற்றத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதன் மூலம் குற்றங்களைக் குறைந்து, சமூகம் மேம்படும். தண்டனைகள் ஒருபோதும் குற்றங்களை வேரிலிருந்து அகற்றாது. சரியான வழியில் கற்பிப்பதும் கற்றுக்கொள்வதும் மட்டுமே நிரந்தரமான மாற்றத்தைக் கொண்டு வரும்.

இறுதியாக பெண் உரிமைகளை பெற வேண்டும் என்றால் அவர்களுக்கு மூன்று உரிமைகள் அடிப்படையில் அவசியமாகின்றது.

- உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமை: ஒரு பெண் ஆரோக்கியமான வாழ்வைப் பெற, சத்தான உணவு அத்தியாவசியம். இது அவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு அடிப்படையானது.
- உடை சார்ந்த உரிமை: ஒரு பெண் தன் விருப்பப்படி ஆடை அணியும் உரிமை என்பது அவளது தனிப்பட்ட சுதந்திரம். அவள் அணியும் ஆடை ஒருபோதும் அவளது நடத்தையைத் தீர்மானிக்காது. இந்த எண்ணம் சமூகத்தில் வலுப்பெறும்போது, உடைகளைக் காரணம் காட்டி நடக்கும் குற்றங்கள் குறையும்.
- இருப்பிடம் சார் உரிமை: ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பான, சுதந்திரமான இருப்பிடம் அவளது பாதுகாப்பை உறுதி செய்கிறது. இது அவள் சமூகத்தில் அச்சமின்றி நடமாடவும், முடிவெடுக்கவும் துணைபுரிகிறது.

ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் பார்க்கும் கண்ணோட்டமே பெரும்பாலான குற்றங்களுக்கு முக்கியக் காரணமாகிறது. ஆண்களில் பலர் பெண்களை ஒரு வெறும் 'உடமையாக' அல்லது 'நுகர்பொருளாக' கருதுகின்றனர். இந்தத் தவறான பார்வை பெண்ணை ஒரு தனிநபராக சமமான மனிதராக மதிக்கத் தவறுவதால் ஏற்படுகிறது. இந்தக் கண்ணோட்டமே பாலியல் குற்றங்கள் உட்பட பல அநீதிகளுக்கு வழி வகுக்கிறது.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடப்பதற்குக் காரணம் அவர்கள் பலவீனமானவர்கள் என்பதல்ல. மாறாக தவறு செய்பவரின் தவறான கண்ணோட்டமும் அவர்களது சிந்தனையில் உள்ள கோளாறுமே அடிப்படைக் காரணமாகும். இந்தத் தவறான பார்வையைக் களைந்து பெண்கள் ஆண்களுக்குச் சமமானவர்கள் என்ற எண்ணத்தை உருவாக்குவதே சமூகத்தின் அடுத்த முக்கியமான படியாகும்.



Harisha.S@thaiveedu.com

வேலையற்ற பட்டங்கள்:

இலங்கையின் பொருளாதாரமும் பட்டதாரிகளின் எதிர்காலமும்

– மேரி றெசொதா

ஒரு காலத்தில் பட்டம் என்பது பிரகாசமான எதிர்காலத் திற்கான உறுதியான அடையாளமாக இருந்தது. ஆனால், இன்று அதே பட்டம், வேலைவாய்ப்பு சவால்களின் சின்னமாக மாறியுள்ள நிலையில், ஒரு புதிய யதார்த்தத்தை இலங்கையின் பட்டதாரி இளைஞர்கள் எதிர்கொள்கிறார்கள். பல்கலைக்கழ கங்களிலிருந்து வெளியேறும் இளைஞர்களை, கல்விக்கும் தொழிலுக்கும் இடையிலான மிகப்பெரிய இடைவெளி வரவேற் கிறது. இலங்கையில் பட்டதாரிகளின் வேலையற்ற சூழல் நாட் டினது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழலுடன் நேரடி யாகவும் மறைமுகமாகவும் தொடர்பினைக் கொண்டுள்ளது. குறிப்பாக, பட்டதாரிகளின் வாழ்க்கைத்தரம் மற்றும் மனநிலை யைப் பாதிப்பது மட்டுமின்றி நாட்டின் சமூக - பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை எதிர்கொள்ளும் வகையில் சவால்மிக்கதாக மாறிவருகின்றது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதவியல், சமூக அறிவியல் மற்றும் இதர துறைகளில் மாணவர்களுக்கு விரிவான அறிவுத் திறன், பகுத்தறிவு, சிந்தனைத்திறன் மற்றும் சமூக பங்களிப்புத் திறனை மேம்படுத்தும் கல்வியை வழங்குகின்றன. இதன்மூலம், பட்டதாரிகளின் அறிவுப்புலன் விரிவுபடுவதுடன், சமூக பங்க ளிப்பிற்கான திறனையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இருப் பினும், பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் பாடத்திட்டங் கள் நாட்டினது வேலைவாய்ப்புச் சூழல், விரைவாக மாற்ற முறும் தொழில்ச் சந்தையின் தேவைகளுடன் முழுமையாக இணைக்கப்படாமையானது பட்டதாரிகளின் வேலையின்மைக்கு முக்கிய காரணியாக உள்ளது.

மாணவர்கள் தங்கள் துறையில் பெற்ற அறிவு, தொழில் அனு பவம், நுண்ணறிவுத் திறன் ஆகியவற்றை வேலைச் சூழலுடன் இணைத்துக் கொள்ள முடியாமல் சிரமப்படுகின்றனர். குறிப் பாக, கலை மற்றும் சமூக அறிவியல் துறைகளில் பட்டம் பெற் றவர்களிடையே உள்ள குறைவான தொழில்நுட்பத் திறன் மற் றும் குறைவான வேலை அனுபவம் காரண மாக வேலைவாய்ப்பைப் பெறுவதில் சிக்கல் களை எதிர்கொள்கின்றனர். Labour Force Survey-இன் 2023-ஆம் ஆண்டின் அறிக்கை பட்டதாரிகளின் வேலையின்மை வீதம் 4.7% ஆகவும், இதில் பெண்கள் 7% எனவும் குறிப் பிடுகின்றது. மேலும் மொத்த வேலையற்ற பட்டதாரிகளில் 42.6% கலைத்துறையில் பட் டம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விரைவாக மாறிவரும் இன்றைய வேலை வாய்ப்புச் சூழலுக்கு ஏற்ப மாணவர்களின் திறன்கள் போதுமானதாக இல்லாமை வேலை

> ***“கலை மற்றும் சமூக அறிவியல் துறைகளில் பட்டம் பெற்றவர்களிடையே உள்ள குறைவான தொழில்நுட்பத்திறன் மற்றும் குறைவான வேலை அனுபவம் காரணமாக வேலைவாய்ப்பைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.”***





வாய்ப்பின்மைக்கு இன்னொரு காரணியாகும். தொழில்நுட்ப முன்னேற்றங்கள், குறிப்பாக Artificial Intelligence, Data Analytics, Digital Marketing, மற்றும் Automation போன்ற தொழில்நுட்பங்கள் வேலை வாய்ப்பின் இயல்பையும், தேவைப்படும் திறன்களையும் மாற்றி வருகின்றன. இத்தகைய புதிய திறன்களை மாணவர்கள் கற்றுக் கொள்ளாமை வேலை வாய்ப்பின்மையினை அதிகரிப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. மேலும், இளைஞர்கள் வேலைவாய்ப்பினை பெறுவதில் இலங்கையின் பொருளாதார சூழலும் முக்கிய தாக்கத்தினை வகிக்கின்றது. பணவீக்கம், வணிக வளர்ச்சி குறைவு, கடன் சுமை, அரச துறைகளின் ஒத்துழைப்பு குறைவு ஆகியவை இளைஞர்களை மன அழுத்தத்தில் ஆழ்த்துகின்றன. இதனால், எதிர்கால திட்டமிடலில் குழப்பம், மனநிலை பாதிப்பு மற்றும் சமூக பங்களிப்பு குறைவு ஏற்படுகின்றது. இவை தனிநபரின் திறன்களை வெளிப்படுத்துவதிலும், நாட்டின் சமூக - பொருளாதார வளர்ச்சியிலும் தடையாகின்றன.

> ***“பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் வழங்கும் பாடத்திட்டங்கள் தொழில்ச் சந்தையின் மாற்றமடையும் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்படாமை கல்வித்துறையின் முக்கிய குறைபாடாக உள்ளது. இதனால், மாணவர்கள் தொழில் சூழலை அறியாமை, அனுபவக் குறைபாடு மற்றும் தொழில் நுட்பத் திறனின்மை போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர்.”***

பட்டதாரிகளின் வேலைவாய்ப்பின்மை அவர்களின் மனநிலையில் எதிர்கணியமான தாக்கத்தினைச் செலுத்துகின்றது. குறிப்பாக, நம்பிக்கையின்மை, எதிர்காலம் குறித்த பயம், மன அழுத்தம், தோல்வி மனப்பான்மை மற்றும் தற்கொலை முயற்சி போன்றன அதிகரிப்பதன் வாயிலாக கடுமையான பாதிப்புக்குள்ளாகின்றனர். இது அவர்களின் ஆளுமை மற்றும் திறன்களின் வளர்ச்சியைத் தாமதமாக்குகின்றன. குடும்பத்தின் பொருளாதார நிலை பாதிக்கப்படுவதுடன், எதிர்பார்ப்புகளை அடைய முடியாத நிலைக்கு செல்கின்றனர். இதனால் குடும்ப - சமூக உறவுகளில் இடைவெளி அதிகரிக்கின்றது.

இந்நிலையில், பட்டம் பெற்றவர்கள் வேலைவாய்ப்புகளைத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்லும் போக்கு அண்மையில் அதிகரித்துள்ளது. இது இலங்கையின் அந்நியச் செலவாணியில் பங்களிப்பு செய்வதுடன், சமூக - பொருளாதார மாற்றங்களை குறிப்பிடத்தக்களவில் ஏற்படுத்துகின்றன. ஆனாலும், நாட்டிலுள்ள திறமையான மனித வளம் குறைவதற்கும், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் புத்தாக்க முயற்சிகளில் தடைகள் உருவாகுவதற்கும் காரணமாகின்றன. கல்வி - வேலைவாய்ப்பு இடையேயான இடைவெளி, தனிநபரின் பிரச்சினையாக மட்டுமல்லாது நாட்டின் முன்னேற்றத்திற்கும் நேரடித் தடையாகவும் அமைகின்றது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் வழங்கும் பாடத்திட்டங்கள் தொழில்ச் சந்தையின் மாற்றமடையும் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்படாமை கல்வித்துறையின் முக்கிய குறைபாடாக உள்ளது. இதனால், மாணவர்கள் தொழில் சூழலை அறியாமை, அனுபவக் குறைபாடு மற்றும் தொழில்நுட்பத் திறனின்மை போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர். இதனால், வேலைவாய்ப்பை பெறுவதில் தாமதம், தோல்வி மற்றும் மனஅழுத்தம் ஆகிய பிரச்சினைகள் உருவாகின்றன.

இந்த இடைவெளியை நிரப்புவதற்கு பல்வேறு வகையான திறன் மேம்பாட்டு திட்டங்கள், தொழில் - கல்வி இணைப்பு, புத்தாக்க முயற்சிகள் (Entrepreneurship Initiatives), Digital Skills பயிற்சி போன்றவை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் முக்கிய வழிகளாக அமைகின்றன. இவை, மாணவர்கள் தங்கள் திறன்களை வெளிப்படுத்தவும், தொழில் சந்தையின் புதிய தேவைகளுக்கு ஏற்ப தங்களை உருவாக்கவும் வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை. திறன் மேம்பாடு, தொழில் வாய்ப்பு உருவாக்கம், புத்தாக்க முயற்சிகள் மற்றும் தொழில்நுட்ப கற்றல் மட்டுமே இளைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதுடன், மற்றும் நாட்டின் சமூக - பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமையும் என்பது வலுவான நம்பிக்கை.



meryresotha.a@thaiveedu.com



செயற்றிறன் மிக்க மிகச்சிறந்த வகுப்பறை முகாமைத்துவத்தை நோக்கி...

- அகமட் பிஸ்தாமி

இங்கு நாம் மூன்று விடயங்களில் எமது கவனத்தைக் குவிக்க வேண்டும். முதலாவது இந்த நூற்றாண்டின் போக்கிற்கு அமைவாக வகுப்பறை குறித்த மிகச்சரியான புரிதலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்தது வகுப் பறையை முகாமைத்துவம் செய்யக்கூடிய வகையில் வகுப்பா சிரியர்களாகிய நாங்கள் அதனை முறையாக நிர்வகிக்கத் தேவையான சகல அறிவுசார், திறன்சார் ஆற்றல்களையும் நடைமுறைக்கு ஏற்றாற் போல விருத்தி செய்து கொள்ளல் வேண்டும். மூன்றாவதாக இந்த இரண்டையும் பயன்படுத்தி எமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வதன் மூலம் மாணவர்களைப் பரிபூரண ஆளுமை களாக மாற்றுவதோடு அவர்களது கல்வி மற்றும் வாழ்க்கை சார்ந்த விடயங்களில் செயற்றிறனை உருவாக்க வேண்டும்.

கற்பித்தல் என்பது ஒரு தொண்டாக, சேவையாக, மகிழ்ச்சிக ரமான திருப்திகரமான பணியாகக் கருதப்படுகிறது. இனிய தொண்டுகளை விடவும் இது பரிபூரணமாக வித்தியாசப்படு கிறது, வேறுபடுகிறது. காரணம் இங்கு நிகழ்வது மனித உரு வாக்கம். மனிதர்களுடனான உறவும் உரையாடலும் உருவாக் கமும்தான் வகுப்பறைகளில் நிகழ்கிறது. வைத்தியர்கள் நோயாளிகளோடு தொடர்புபடுகின்றனர், உரையாடுகின்றனர். சட்டத்தரணிகள் பிரச்சினைகளைச் சுமந்துள்ள தரப்பினரோடு தமது செயற்பாடுகளை, நடவடிக்கைகளை அமைத்துக் கொள்கின்றனர். ஆனால் மாணவர்கள் என்ற எதிர்கால தலை வர்களோடு ஆளுமைகளோடு இரவு பகலாக முழுமூச்சாகத் தொடர்புபடக்கூடியவர்கள் ஆசிரியர்கள்.

ஆசிரியர்களாக பணியாற்றக் கிடைத்தவர்களுக்கு தெய்வீக அருள் கிடைத்ததாகத்தான் கருத வேண்டும். அந்த அருளைத் தொடர்ந்தும் தக்க வைப்பதாக இருந்தால் அந்த மாணவ பரம்பரையோடு மிக நெருக்கமான சுமுகமான உறவும் உரையாடலும் உருவாக்கமும் இடம்பெற வேண்டும்.

மாணவர்களை நட்பு ரீதியாகவும் அதே நேரம் செயலூக்கம் கூடியவர்களாகவும் மாற்ற வேண்டிய பொறுப்பை சுமந்த வர்கள் ஆசிரியர்கள்.

அந்த வகையில் வகுப்பறையை ஆக்கபூர்வமான வகுப்பறையாக மாற்றிக் கொள்வதற்கான சில எளிய முன்னெடுப்புகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள நினைக்கின்றோம்.

- வகுப்பறைக்கு என்ற பிரத்தியேகமான சட்டக் கோவை ஒன்றை தயாரித்துக் கொள்ளல்.

  வகுப்பறையில் மிகச்சிறந்த விளைவுகளைக் காண முற்படும்போது வகுப்பறைக்கு என்று பிரத்தியேகமான ஒழுங்குகள் இருந்தே ஆக வேண்டும் என்பதனைப் புரிந்து கொள்ளலாம். இந்தச் சட்ட திட்டங்களும் ஒழுங்குகளும் பின்பற்றப்படுகின்ற பொழுது வகுப்பறைக்குள் ஒரு விதமான போட்டித் தன்மையும் செயலூக்கமும் மிகுந்திருக்கும். வகுப்பறைக்கு என்ற ஓர் உயர் இலக்கு இங்கு வரையறுக்கப்பட்டு இருக்கும். இதன் அடிப்படையில்தான் வகுப்பு முன்னோக்கி நகரும். வகுப்புக்கு விசேட குறிக்கோள் என்றும் அதற்கென்று சட்டதிட்டங்களும் இருப்பதால் அந்தச் சட்ட திட்டங்களை மீறாத வகையில் மாணவர்கள் கவனமாக இருப்பார்கள். இது வகுப்பறையின் கவனக்குவிப்பை ஒற்றைப் புள்ளியில் குவித்து வைத்து இலக்கு நோக்கி நகர, நகர்த்த வசதியாக இருக்கும். அதே நேரம் மாணவர்கள் மத்தியிலும் ஒருவிதமான நேர்த்தியும் ஒழுங்கமைப்பும் உருவாகும். இதனை வகுப்பு ஆசிரியர் வருட ஆரம்பத்திலேயே பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் அறிவுறுத்த வேண்டும். அப்பொழுதுதான் அவர்களின் உதவி ஒத்தாசைகளும் இந்த இலக்கு நோக்கிய பயணத்திற்கு உதவியாக இருக்கும்.

- ஒவ்வொரு மாணவருக்கும் அவரவர் திறமைக்கும் ஆற்றலுக்கும் ஈடுபாட்டுக்கும் அமைவாக பிரத்தியேக இலக்குகளை வழங்கி அதன் பால் வழிகாட்டி அதனை அடையச் செய்ய உந்து சக்தியாகவும் உறுதுணையாகவும் நிற்றல்.

  இந்த ஒழுங்குமுறையால் ஒவ்வொரு மாணவரும் தனது திறமைக்கும் ஆற்றலுக்கும் இயல்புக்கும் ஈடுபாட்டுக்கும் அமைவாக பிரத்தியேகமான இலக்குகளை வகுத்துக் கொண்டு சுயமாக இயங்கக்கூடிய ஒரு நிலை தோன்றும். நேரத்தை ஒழுங்கமைத்து திட்டமிட்டு இயங்குகின்ற தன்மையும் ஏற்படும். மேலதிக நேரங்களையும் தன்னுடைய இலக்கை எய்தப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பமும் சூழ்நிலையும் உருவாகும். அதேபோல தன்னுடைய ஆற்றலை வளர்க்கவும் குறிப்பிட்ட துறை சார்ந்த விடயத்தை விரிவாக கற்றுக் கொள்ளவும் அதிலே காலூன்றவும் கற்கும் காலத்திலேயே மிகச்சிறந்த ஒரு சாதனையை, அடைவை உலகிற்கு வெளிக்காட்டவும் சந்தர்ப்பம் வாய்க்கும்.

  அவ்வாறே பல துறைகளில் ஆர்வமுள்ள மாணவர்கள் கூட ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பு, அவகாசம் உருவாகும். இது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் தத்தமது உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்வதற்கும் அவர்களை வெளி உலகையும் வேலை உலகையும் நோக்கி கொண்டு செல்லவும் சாதகமான வழிகளை திறந்து தரும்.

  அதேபோல ஏனைய மாணவர்களும் இவ்வாறு தனித்தனியாகத் தத்தமது திறமைகளை இனங்கண்டு அவற்றை வளப்படுத்தி முன்வைக்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்ற பட்சத்தில் வகுப்பில் யாருக்கும் பின்தங்கிய நிலை தோன்றாது. ஒவ்வொருவரும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளோடு ஏதோ ஒரு மேலதிக துறையில் தேர்ச்சியும் நிபுணத்துவமும் ஈடுபாடும் கொண்டவர்களாக மாறுவார்கள். இது வகுப்பறையை கலகலப்பாக, உற்சாகமாக வைத்திருக்கும். மாணவர்களும் ஆர்வத்தோடு பங்கெடுக்கக் கூடிய வகையில் ஏனைய மாணவர்களையும் தமது திறமைகளை வெளிக்காட்ட தூண்டும் வகையிலும் அமையும்.

  கற்றல் கற்பித்தல் என்பது வகுப்பறைச் செயற்பாடுகளை மனனம் செய்து பரீட்சைகளில் அவற்றைக் கொட்டுதல் போன்றவற்றிற்கு அப்பால் இரசனையும் சுவையும் மிக்க ஓரம்சம் என்பதனை உணர்த்தும்.

- எப்பொழுதும் பரீட்சையை மையப்படுத்தியதாக மாணவர்களை ஈடுபடுத்தாமல் பரீட்சைகளுக்கு அப்பால் மாணவர்களது திறமையை வெளிப்படுத்தக் கூடிய வகையில் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் களம் அமைத்து கொடுப்பவராக ஆசிரியர் இருக்க வேண்டும்.

  ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள், மிக நன்றாக கற்கக் கூடிய, புள்ளிகளை ஈட்டக்கூடிய மாணவருக்கு சிலபோது விளையாட்டில் ஆர்வம் இல்லாமல் இருக்கலாம் அல்லது கலை ஈடுபாடு இல்லாதவராக இருக்கலாம். ஆனால் அதே நேரம் சூழலை அழகாக நேர்த்தியாக கவர்ச்சியாக வைக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ள மாணவர் கற்றலில் ஓரளவு பின்னடைவில் இருக்கலாம். அந்த மாணவரை கலைத்துறையில் ஈடுபடுத்தும் பட்சத்தில் அவர் ஓவியராக அல்லது சூழல் நயமிக்கவராக சூழலியல் அறிஞராக மாறக்கூடிய கலைஞன் என்ற நிலைக்கு உயரும் சந்தர்ப்பம் அதிகம். எனவே ஆசிரியர் இந்த தனியாள் வேறுபாடுகளை கருத்தில் கொண்டு மாணவர்களை இனங்கண்டு வழி நடத்த வேண்டும்.

- வகுப்பறை எப்போதும் கலகலப்பாக இருப்பதற்கு அங்கு நகைச்சுவையும் சுதந்திரமும் இருக்க வேண்டும். மாணவர்கள் தமது கருத்துகளை, சிந்தனைகளை முன்வைக்கக் கூடிய களம் வாய்க்க வேண்டும். எழுதுவதற்காக இருக்கலாம் பேசுவதற்காக இருக்கலாம் தத்தமது திறமைகளை, ஆடல் பாடல் மூலம் முன் வைப்பதற்கான சந்தர்ப்பமாக இருக்கலாம் இவை மாணவர்களை கற்றல் கற்பித்தலோடு இணைந்ததாக உற்சாகமாக சுறுசுறுப்பாக தொடர்ச்சியாக இயங்கக்கூடிய தன்மை மிக்கவர்களாக மாற்றும். எப்போதும் கேள்வி பதில்கள் சிறு குறிப்புகள் வீட்டு வேலைகள் வாசிப்பு வினா விடை என்று மாணவர்களுக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்படும் எமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை நவீன முறைக்கு ஏற்ப வித்தியாசமான பாங்கில் அமைத்துக் கொள்ள வேண்டும். எமது பாரம்பரிய முறைகளை, முறைமைகளை மாற்றி அமைப்பதன் ஊடாக மாணவர்கள் விரும்புகின்ற, எதிர்பார்க்கின்ற கற்கும் ஆர்வத்தை தூண்டுகின்ற வகையில் அமைத்துக் கொண்டால் வகுப்பறைகள் நிச்சயமாக செயற்றிறன் மிக்க வகுப்பறைகளாக மாறும்.

bisthamy.ahamed@thaiveedu.com



கற்றல்-கற்பித்தலில் பல்பகுப்பு முறை ஆதரவுகள்

Multi-Tiered System of Supports



– த. சிவபாலு

பெற்றோர் தங்கள் குழந்தைகள் எப்பொழுதும் சிறந்த கல்வியைப் பெறவேண்டும் என விரும்புவது இயல்பே. பாட சாலைகளில் என்ன நடக்கின்றது என்பதனை மேம்படுத்து வது கடினமான செயலாகப் படலாம். இன்று எல்லாக்குழந் தைகளும் கல்வியின் இலக்கை அடைவதற்கான ஆதரவைத் தருவதற்காகப் பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன. பிள்ளை கள் தனித்துவமானவர்கள். அவர்களின் கற்றல் முறையும் தனித்துவமானது. ஒருவரைப் போன்று இன்னொருவரின் கற் றல்முறை அமைவதில்லை. சிலருக்குச் சில பாடங்கள் இலகு வாக அமைலாம்; வேறு சிலருக்கு அவை கடினமாக அமைய லாம். கடினமாக உள்ளவற்றை இனங்கண்டு அதற்கேற்றவ கையில் கற்றல் முறைகளைப் பகுத்தும் தொகுத்தும் கற்ற லுக்கு ஏற்ற வகையில் எம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். மொழியை இலகுவாகக் கற்கும் ஒருபிள்ளை கணித பாடத்தில் சிரமங்களை எதிர்கொள்கின்றது. இசையை விருப் புடன் இலகுவாகக் கற்கும்பிள்ளை மற்றய துறைகளில் மந்த கதியில் கற்பதைக் காணமுடிகின்றது. அண்மையில் தமிழ் தொலைக்காட்சி இசை நிகழ்ச்சியைப் பார்த்தபோது அதில் ஒரு மாணவர் பேசுவதற்கு மிகவும் சிரமப்பட்டார். ஆனால் பாடும்போது எந்தவித சிரமமும் இன்றி மிகத் திறமையாகப் பாடி நடுவர்களின் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டார். அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் பெரும் சிரமத்தை எதிர்நோக் கினார். நடுவர்கள் பாட்டிலேயே பதிலை அளிக்கச் சொன்னபோது எந்தவித தடையும் இன்றி மிக அநாயசமாக பாட்டால் பதிலை அளித்தார். இவ்விதம் பல்வேறு குறைபாடு கள் உள்ள பிள்ளைகளை ஊக்குவித்து பாட வைக்கும் கலையை அங்கு காணமுடிகின் றது. எனவே பிள்ளைகளிடம் உள்ள திறமை களைக் கண்டறிந்து அவற்றை வளர்க்கும் அதேவேளை அவர்கள் சிரமப்படும் பகுதி களுக்கு சிரமபரிகாரம் தேடவேண்டியது அவ சியமாகின்றது. அதன் மூலம் அவர்களின் கற்றலை ஊக்குவித்து சமநிலைக்குக் கொண்டு வரமுயற்சிப்பதாக பல்பகுப்பு ஆதரவு முறை காணப்படுகின்றது. அதில் பல்பகுப்பு ஆதரவுகள் முறை (Multi-Tiered System of Supports)- MTSS என்பது என்பது பிள்ளைகளின் கல்வியில் தனித்துவமான ஒன்றாகும். கற்றல் முறையினை மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ற அவற் றைப் பல கூறுகளாகப் பகுத்து அதனடிப்படையில் இலகு வாகக் கற்கக்கூடிய பகுதிகளை தனியாகவும் சிரமத்தை எதிர்கொள்ளும் பகுதிகளை வேறாகவும் வகுத்து அதனடிப்ப டையில் அவர்களின் கல்வியினை மேம்படுத்த முயற்சிப்ப தாக இந்தப் பல்பகுப்பு முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை ஆராய்வதாக இக்கட்டுரை இடம்பெறுகின்றது.

> ***“கற்றல் என்பது இதுவரை கேட்டல், வாசித்தல், கவனித்தல் எழுதுதல் என்ற முறையிலேயே இடம் பெற்று வந்துள்ளது. இந்த முறையில் கூட காலத்திற்குக்காலம் மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன.”***

அனைத்துப் பிள்ளைகளினதும் கற்றல் முறை ஒரே தன்மையு டையதாக அமைவதில்லை. சில மாணவர்களுக்கு எல்லாப் பாடங்களுமே இலகுவாகக் கற்றுக்கொள்ள முடியாதிருக்க லாம். கற்றல் என்பது இதுவரை கேட்டல், வாசித்தல், கவனித் தல் எழுதுதல் என்ற முறையிலேயே இடம்பெற்று வந்துள் ளது. இந்த முறையில் கூட காலத்திற்குக்காலம் மாற்றங்கள் ஏற்பட்டுவந்துள்ளன. ஆரம்பத்தில் ஆசிரியர் சொல்வன வற்றை மனப்பாடம் பண்ணி ஒப்புவிக்கும் முறையே கற்ற லாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இது திண்ணைப் பள்ளி கள் என அழைக்கப்பட்டன. ஆசிரியருக்கு முன்பாக இருந்து அவர் அளிக்கும் விளக்கங்களைப் புரிந்து மனதிலிருத்திக் கொள்வதே கற்றல்-கற்பித்தல் முறையாக ஆசிரியர் மையக்கல்வி அமைந்திருந்தது. இது பின்னர் காலத்திற்குக்காலம் மாற்றம் பெற்று எழுத்தில் பதித்து கற்கும் முறையும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. மண் ணில் எழுத்துக்களை எழுதும் முறை விரி வாக்கம் பெற்றமையை சுமேரிய நாகரிக கால எழுத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன. களிமண்ணில் எழுதி அவற்றைக் காய வைத்து அல்லது சுட்டு சிறிய சிறிய துண்டு களாகப் பாவிக்கும் முறையை அவர்கள் கொண்டிருந்தனர். அதன் விரிவாக்கமாக சிலேற்றுக்களின் பயன்பாடும், விலங்கு களின் தோல்களில் எழுதும் முறையும். ஓலைகள், மரப்பட்டைகள் என்பனவற்றில்

எழுதிப் பாதுகாக்கும் முறையும் படிப்படியாக பல்வேறு நாக ரிகங்களின் வளர்ச்சியின் பயனாக விரிவடைந்து வந்துள்ளது.

விரிவுரை அல்லது போதனை முறைகள் ஆசிரியரை மைய மாகக் கொண்ட கல்விமுறையாகக் காணப்பட்டது. கல்வி எல் லோருக்கும் இலகுவாகக்கிடைப்பதாகக் காணப்படவில்லை. குலத்தொழிலைக் கற்றுக்கொள்ளும் முறை சமூகத்தின் பெரி யவர்களாலும் பெற்றோராலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள் ளது. கல்வியின் வளர்ச்சியின் காரணமாக எழுதக் கற்றுக் கொள்ளுதலே கல்வியாகக் கருதப்பட்டது. படிமுறையாக கற்றலில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப் படையில் நவீன கற்றல் முறைகளாக எழுத்து, வாசிப்பு, அவ தானிப்பு, பேச்சு என்னும் நான்கும் கற்றலின் அடிப்படை யாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனாலும், அக்கல்வி முறை யில் தவறுகளும் காணப்பட்டன. மாணவர்களைச் சரியான முறையில் இனங்கண்டு அவர்களின் தனித்துவத் திறனுக் கேற்ற கல்வியை வழங்கவில்லை என்பது கண்டறியப்பட்டது. மாணவர்கள் தனித்துவமானவர்கள் அவர்களின் தனித்துவத் தன்மைகளுக்கு ஏற்ப கல்வியை வகுத்தும், தொகுத்தும், கொடுக்கவேண்டிய முக்கியத்துவம் கல்வி உளவியல் சார்ந் ததாக சிறப்பிடம் பெறத்தொடங்கியது.

ஆரம்பத்தில் காணப்பட்ட 'ஆசிரிய மையக்கல்வி' குரு அல்லது ஆசானினிடம் இருந்து பெறப்பட்டு வந்தமையோடு ஆசிரியர் சொல்பவற்றை மாணவர்கள் வெகுவாகப் பின்பற்றி வந்தார்கள். இக்கல்விமுறை குரு-சீடன் முறையில் அமைந் தது. அது மாணவர் மையக் கல்வி முறைமை கற்றல்-கற் பித்தல் முறைகளுள் புகுத்தப்பட்டது. இது மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றலைத் தூண்டுவதற்குப் பதிலாக மனனம் செய்து ஒப்புவித்தலைக் கொண்டதாகக் காணப்பட்டது. இந்த நிலையில் இருந்து மாறுபட்டதாக, குழந்தை-உளவியல் பிள் ளைகளின் உளத்தொழில்பாடு கற்றல் திறன், நடத்தைகள், கற்றல்முறைகள் பற்றிய தெளிவு ஏற்படத்தொடங்கியமை கல்வியில் விழிப்புணர்வை ஏற்படுத்தத் தொடங்கியது. 'உன் னையே நீ அறிவாய்' என்னும் சோக்கிரட்டீஸ் உபதேசித்த சிந்தனை மரபு ஒன்று உலகில் தோற்றம் பெறத்தொடங்கியது. பல்வேறு உளவியல் அறிஞர்களால் கண்டறியப்பட்டு செயற் படுத்தப்பட்டமை கற்றலில் வரப்பிரசாதமாக அமைந்தது. மாணவர்களின் திறன்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஏற் றவகையில் திட்டமிடப்படும் வகுப்பறைக் கற்றல்முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வந்துள்ளன. இருப்பினும், வகுப் பறைக் கற்றல் முறையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படு வதாகக் கல்வியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். மாண வர்களின் தனித்துவத்தை மற்றும் அவர்களின் கற்றல் திறனை அறிந்து அதற்கேற்ப கற்பித்தல் திட்டமிடப்படவேண் டும். மாணவர்களின் தேவையைக் கண்டறிந்து அவர்களுக் கான கற்றல் முறைகள் கல்விக்கூடங்களில் புகுத்தப்பட வேண்டும். ஒரு வகுப்பில் முப்பதிற்கு மேற்பட்ட மாணவர் களை வைத்திருந்து அவர்கள் அனைவரையும் ஒரே கற்றல் திறனுடையவர்கள் எனக் கருதிக் கற்பித்தலினைத் திட்டமிடு வது பல மாணவர்களின் கல்வி விருத்தியில் சாதகமாக அல் லது வெற்றியளிப்பதாக அமையவில்லை என்பது கண்டறியப் பட்டுள்ளது.

பிள்ளைகளின் கற்றல் பற்றிய நிலைமைகளைப் பெற்றோர் அறியாதவர்களாக இருந்துள்ளனர். இன்று அந்த நிலைமாறி குழந்தையின் பள்ளியில் என்ன நடக்கிறது என்று அறிந்து அவர்களின் கல்வியை வளர்த்துக்கொள்ள வேண்டிய கடப் பாடு அவர்களுக்கு உரியதாக்கப்பட்டுள்ளது. எல்லாம் பாட சாலை பார்த்துக்கொள்ளும் அல்லது ஆசிரியர் பார்த்துக் கொள்ளுவார் என்ற மனப்பாங்கு சிதறடிக்கப்பட்டு இன்று பிள்ளைகளின் கல்வியில் கருத்தூன்றிக் கவனிக்கவேண்டி நிலை ஏற்பட்டுள்ளது. இது சில பெற்றோருக்குக் கடினமாக இருக்கலாம். அதுவும் சாதாரணமான பிள்ளைகளைவிட, விசேட கவனிப்புத் தேவைப்படும் தாமதமாகக் கற்கும் பிள்ளை களைப் பெற்றெடுத்த பெற்றோருக்கு மிகக் கடினமாக இருக் கலாம். இதனால் பல நிறுவன அமைப்புக்களின் ஆய்வின் பயனாகத் தாமதமாகக் கற்கும் மாணவர்களுக்கு, அவர் களின் இயல்திறனைப் பகுத்து, எந்தத் துறைகளில் அவர்கள் மீத்திறன் உள்ளவர்களாக உள்ளனர், எந்தெந்தக் துறை களில் மந்தமாக உள்ளனர் என்பதை அறிந்து, அவர்களை சமநிலை பேணக்கூடிய கற்றலுக்கு தயார்படுத்துவதே பல் பகுப்பு முறை உதவுதல் ஆகும். இது எவ்விதம் செயற்படுத் தப்படுகின்றது என்பது முக்கியமாகும்.



"கற்றலில் விலகி இருக்கும் மாணவர்களை கண்டு கதைத்து தனிப்பட்ட ஆதரவு மற்றும் உள்ளீடுகளை வழங்குவதன் மூலம், மாணவர்கள் கல்விப் பாணியில் திரும்பவும் இயல்பாக இணைத்துக் கொள்ளலாம்."

சிறப்புத் தேவைகளைக் கொண்ட குழந்தைக ளுக்கு அவர்களின் உடல், தொடர்பு, அறிவு சார், உணர்ச்சி, சமூக அல்லது நடத்தை வளர்ச்சியைப் பாதிக்கும் பல நிலைமைகள் அல்லது குறைபாடுகள் இருக்கலாம். சிறப்புத் தேவைகளில் தொடர்பு தாமதங்கள் மற்றும் உடல் குறைபாடுகள், நரம்பி யல் வளர்ச்சி குறைபாடுகள், நாட்பட்ட அல்லது நீண்ட கால மருத்துவ நிலைமைகள் முதலானவை இருக் கும். பல்பகுப்பு ஆதரவுகள் முறைகளில் ஒன் றாக மந்தகதியில் கற்பவர்களுக்கான அல் லது உள, உடல் சார்ந்த குறைகள் உள்ளவர் களுக்கான திட்டங்கள் காணப்படுகின்றன. மாணவர்கள் கடுமையாகக் கற்றலில் இடர் படும் இடங்களை அடையாளங்கண்டு, காணும்

> ***“பாடசாலைகளில் பல்பகுப்புமுறை உதவிகள் என்பது ஒவ்வொரு மாணவனும் வளரச் செய்கிற ஆதரவைப் பெறுவதற்கான சக்திவாய்ந்த கருவியாகும். பெற்றோர் ஆசிரியர்களுடன் உரையாடுவதன் மூலம், தங்கள் குழந்தைகள் கல்வியில் ஈடுபட்டி ருப்பதை உறுதி செய்து கொள்ளலாம்.”***



தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, மதிப்பீடுகளை செய்து போதனை அல்லது நெறிப்படுத்தல்களைச் செய்தல் வேண்டும்.

பல்பகுப்பு ஆதரவுகள் முறையின் முக்கியத்துவம்:

பல்பகுப்பு முறை ஆதரவுகள் முக்கியமாக ஒவ்வொரு மாண வனுக்கும் அவனுடைய வெற்றியின் அடைவைப் பெற்றுத் தரும். அல்லது வெற்றியை தக்கவைத்துக்கொள்ள உதவும். கற்றலில் விலகி இருக்கும் மாணவர்களை கண்டு கதைத்து தனிப்பட்ட ஆதரவு மற்றும் உள்ளீடுகளை வழங்குவதன் மூலம், மாணவர்கள் கல்விப் பாணியில் திரும்பவும் இயல் பாக இணைத்துக் கொள்ளலாம். மாணவரின் திறன்களை மேம்படுத்தவும், அவர் தம் திறன்களில் நம்பிக்கைகளை உருவாக்கவும் முடியும். ஆசிரியர்கள் மாணவர் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் கணிப்பீடுகளைச் செய்து அவர்களை முன்னேற்றலாம். மாணவர்களுக்கு தேவையான உதவியை கிடைக்கச் செய்து அவர்களைத் தொடர்ந்து பயிற்றுவிக்கவும் முடியும். நுண்ணறிவு தாமதம் அல்லது தடையாக உள்ளவர் களுக்கு சிறப்பு அணுகுமுறைகளை மேற்கொண்டு கற்றல் முறையினை சமநிலைக்குக் கொண்டுவர முடியும்.

பல்பகுப்புமுறை உதவிகளை (MTSS) பெற்றோர்கள் தம் பிள்ளைகள் பொருட்டு முறையாகப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வகையில் முக்கியமான முறைகளில் ஒன்று கல்வியாளர் களுடன் உரையாடுவது ஆகும். உங்கள் குழந்தை ஒரு குறிப் பிட்ட பாடத்தில் சிரமப்படுகிறார் என்றால், முதலில் ஆசிரியர் அல்லது பள்ளி ஆலோசகரை நாடுங்கள். உங்கள் குழந்தை யின் பொருட்டு பெற்றோர்- ஆசிரியர் மாநாடுகளில் கலந்து கொண்டு அவர்களின் முன்னேற்றம் குறித்து மேலும் அறி யுங்கள். இணைந்து பணியாற்றுவதன் மூலம் இதனைச் சாதிக்கலாம். பெற்றோர் மற்றும் கல்வியாளர்கள் ஒவ்வொரு மாணவனும் கல்வியில் வெற்றி பெற உதவலாம். சகல பாடங் களுக்கும் தனிப்பட்ட கற்றல் வசதிகளை ஒழுங்கு படுத்திக் கொள்ளலாம். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் மாணவர்கள் சிரமப்படும் பாடங்களைக் கற்றுக்கொள்ள வழிவகைகளைச் செய்து கொடுக்கலாம். இதனால் பிள்ளைக்குச் சிரமமான பகுதிகளை மேம்படுத்தி ஏனைய பாடங்களைக் கற்கும் முறைக்குச் சமத்துமாக மாற்ற முடியும்.

பாடசாலைகளில் பல்பகுப்புமுறை உதவிகள் என்பது ஒவ் வொரு மாணவனும் வளரச் செய்கிற ஆதரவைப் பெறுவ தற்கான சக்திவாய்ந்த கருவியாகும். தரவுகள் மற்றும் மதிப்பீடு களை அடிப்படையாகக் கொண்டு தனித்தேவைகளை வழங் குவதன் மூலம், கல்வியாளர்கள் மாணவர்களின் அடைவு மட் டங்களை உயர்த்தலாம். பெற்றோர் ஆசிரியர்களுடன் உரை யாடுவதன் மூலம், தங்கள் குழந்தைகள் கல்வியில் ஈடுபட்டி ருப்பதை உறுதி செய்து கொள்ளலாம். மற்றும் அவர்களின் தேவைகளைப் புரிந்து பல்பகுப்புமுறை உதவிகளைப் பெற் றுக் கொள்ளலாம். மிக மெதுவாக கற்கும் மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் எனவும் கருதப்படு கின்றது.

இவ்விதக் கல்விக்கான சட்டவாக்கங்கள் அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இதனால் சட்டத்தின் மூலம் உறுதியளிக் கப்பட்ட கற்றல் நடத்தைகளில் பல்பகுப்புமுறையிலான உதவிகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதனால் ஒரு மாணவன் வெவ்வேறு வழிகளில் கற்று, ஒரே விதமான அடைவினைப் பெற்றுக்கொள்ள வழிவகுப்பதாக கல்விச் செயற்பாடு மாற்றம் பெற்றுள்ளது. ஒரு பாடத்தில் கீழ் நிலையில் உள்ள மாணவனுக்கு அதற்கான முன்னுரிமை கொடுக்கப்பட்டு பல்பகுப்பு முறைக்கு உட்படுத்தப்பட்டு தனித்துவமான கற்றலை வழங்குவதால் அவனின் அடைவு மட்டம் உயர்கிறது.

இவை மனித மேம்பாட்டுத் திட்டமிடலின் ஒரு பாகமாகக் கொள்ளப்படுகின்றன. திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுப் பதனால் சில பிள்ளைகள் சிரமமான பகுதிகளைக் கற்றுக் கொள்ள முடிகின்றது. தடைக்கல்லாகக் காணப்படும் விடயங் களைப் பிள்ளைகளோடு இணைந்து கண்டறிந்து அவற்றில் முன்னேற்றம் காண ஒத்துழைப்பு நல்குவதே பல்பகுப்பு கற்றல் உதவி முறையாகும். இந்த உதவிகள் தனிப்பட்டவை யாகவே அன்றி, குழுக்களாகவோ மேற்கொள்ளப்படலாம். தனித்துவ உதவி தேவைப்படும்போது அவற்றை ஒழுங்கு படுத்திக் கொடுப்பது அவசியமாகின்றது. சிலபிள்ளைகள் தாம் பின்தங்கியுள்ளோம் என்ற தாழ்வுச் சிக்கல் உள்ளவர் களாக இருப்பார்கள். அவ்வித மன அழுத்தம் உள்ளவர்க ளுக்கு தனியான கற்றலுக்கான ஆசிரியரை ஏற்பாடு செய்து கொடுப்பது பயனளிக்கும். ஏனைய பிள்ளைகளோடு ஒப்பிட் டுப்பார்த்து தம்மைத் தாழ்த்திக்கொள்பவர்களுக்கு இக்கல் விமுறை ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது.



sivapalu@thaiveedu.com

6 பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே அத்தியாயம் அத்தியாயமாகப் பேசாதீர்கள்!

- எஸ்.கே. விக்னேஸ்வரன்



பதினேழு வயதுப் பாரி கூறுகிறான்: *என் அம்மா பேசுவதில்லை, அவள் சொற்பொழிவு செய்கிறாள். அவள் எளிமையான ஒரு சாதாரண கருத்தைச் சொல்லும்போது கூட அதை ஒரு சிக்கலான விவாதமாக மாற்றுகிறாள். நான் ஒரு சிறிய கேள்வியைக் கேட்கிறேன் என்றால், அதற்கு அவள் எனக்கு ஒரு நீண்ட பதிலைக் கொடுக்கிறாள். இதனால், அவளோடு பேசுவதை, நான் தவிர்க்கவே செய்கிறேன்.

அவளுடைய பேச்சுகள் என்னுடைய நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்கின்றன. 'அவள் அத்தியாயங்களில் அல்லாமல், சில வாக்கியங்களிலோ, அல்லது சிறிய பந்தியளவிலாகவோ என்னோடு பேசியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.'

பதினெட்டு வயது லெராய் கூறுகிறான்: 'என் தந்தைக்கு தன் பிள்ளைகளுடன் நெருக்கமாக இருக்க முடிவதில்லை. அவரது பேச்சு ஒருபோதும் நேருக்கு நேராக இருப்பதில்லை. அது எப்போதும் ஒரு விசயத்திலிருந்து இன்னொரு விசயத்துக்குத் தாவுவதாக இருக்கும். அவர் முன்கூட்டியே தீர்ப்பளிப்பவராக இருக்கிறார்; எம்மை இவ்வாறு வகைப்படுத்திப் புறாக்கூடுகளுக்குள் அடைப்பதுபோலத் தனிமைப்படுத்தி எங்களைப் பிரிக்கிறார்; அவருடைய சொந்தக் குழந்தைகளான எங்களுக்குக் கூட அவர் அந்நியமானவராகவே இருக்கிறார்.'

பதினாறு வயது பெஸ் கூறுகிறார்: 'என் அப்பா வெப்ப நிலை தொடர்பான நல்ல உணர்திறன் உடையவர் தான், ஆனால் ஒருவருடைய மன நிலையை அறிவது பற்றிய உணர்திறன் அவரிடம் இல்லை. அவருக்கு உணர்ச்சிகள், மன நிலைகள் என்பவை பற்றி எதுவும் தெரியாது. அவரால், சொல்லப்படாத வார்த்தைகளை எங்களால் உணர முடியாது. தன் பேச்சு சலிப்பைத் தருகிறது, தான் பேசுவதை யாரும் கேட்கவில்லை என்பதை ஒருபோதும் உணர்ந்து கொள்ளாமலே நீண்ட நேரம் அவரால் பேச முடியும். மற்றவர்களது சலிப்பின் வெளிப்படையான அறிகுறிகளைக் கூட அவர் காண்பதில்லை. ஒரு வாதத்தில் தான் தோற்றுவிட்டதைக் கூட அவர் ஒருபோதும் கவனிப்பதில்லை. ஆனால், அவர் தனது நிலையை எங்களுக்குத் தெளிவுபடுத்தத் தான் தவறிவிட்டதாகவே நினைக்கிறார். அதனால் அவர் தொடர்ச்சியாகப் பேசுகிறார்; ஆயினும் அதன்மூலம் அவரால் எங்களுடன் நெருக்கமான தொடர்பினைப் பேணிக்கொள்ள முடிவதில்லை. அவரது கற்பித்தலும், போதனை செய்தலும், அவர் செய்யும் எந்த உரையாடலும் வெறுமனே நிலத்துடனும் வெளியுடனும் நடத்துவதாகத் தான் இருக்கிறது.'

அவரது முன்னிலையில் அவரை முத்திரை குத்தாதீர்கள்!

பெற்றோர்கள் பெரும்பாலும் தமது பதின்ம வயதினர்களைக் காது கேளாதவர்கள் போலவே நடத்துகிறார்கள்; அவர்கள் இருக்கும்போதே, அவர்களைப் பற்றிப் பேசுகிறார்கள்; அவர்களின் கடந்த காலத்தை மதிப்பிடுகிறார்கள்; அவர்களின் எதிர்காலத்தைக் கணிக்கிறார்கள். இவ்வாறு, அவர்கள் சுய நிறைவான தீர்க்கதரிசனங்களை உருவாக்குகிறார்கள். '**அல்ஃபி** ஒரு வெடுவெடுப்பான பூனைக்குட்டிபோலப் பிறந்தவன். அவன் இயற்கையாகவே ஒரு அவநம்பிக்கைவாதி. அவன் எப்போதும் போல இனிமேலும் அப்படியேதான் இருக்கப்போகிறான் என்பது போலத்தான் தான் அவனது நிலை இருக்கிறது. நீங்கள் அவனுக்கு ஒரு அரைக் கிளாஸ் தண்ணீரைக் கொடுத்தால், அவன் கிளாசின் காலியான பாதியை மட்டுமே கவனிப்பான். மறுபுறத்தில், **புரூஸ்** ஒரு பிறவி நம்பிக்கையாளன்; மூடுபனி போன்றவன். அவனது கண்கள் எங்காவது ஒரு குதிரையின் சாணத்தைக் கண்டால், ஒரு குதிரைக் குட்டியை அவன் தேடத் தொடங்கிவிடுவான். அவனைச் சோர்வடையச் செய்வது சாத்தியமே இல்லை. அவன் (தனது வாழ்க்கையில்) வெகுதூரத்துக்குச் செல்லக் கூடியவன். ஆனால், **கிளேயரோ** அப்படியும் இல்லை இப்படியும் இல்லை என்ற வகையில் இயங்குபவள். அவள் ஒரு கனவுலகில் வாழ்பவள். அவள் கவிஞரான தன் அத்தை எமிலியைப்போல, அவள் வழியைப் பின்தொடர்பவளாக இருக்கிறாள். அவள் தனக்கென்று தானே உருவாக்கிக்கொண்ட ஒரு உலகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறாள்.' இது போன்ற, இத்தகைய முத்திரை குத்துதல்கள் ஆபத்தானவை. ஏனென்றால், குழந்தைகள் தங்கள் பெற்றோர்கள் தங்களுக்குக் கொடுக்கும் பாத்திரங்களுக்கு ஏற்ப வாழ முனைகிறவர்களாகவே இருக்கின்றார்கள்.

தலைகீழ் உளவியலைப் பயன்படுத்தாதீர்கள்!

பதினைந்து வயதுடைய பேர்த்தா இப்படிக் கூறுகிறாள்: 'நான் நல்ல மனநிலையில் வீட்டுக்கு வருகிறேன். பத்து நிமி டங்கள் கழித்து, நான் பைத்தியமாக மாறி விடுகிறேன். என் அம்மாவுக்கு என்னை எப்படி மடக்கிப் பிடிப்பது என்று தெரியும். தான் விரும்புவது போல நான் நடந்து கொள்ள வேண்டும் என்று அவள் விரும்பும்போது, அவள் 'நீ ஒரு போதும் மாறமாட்டாய்' என்று சொல்கிறாள். அவள் எனக்கு இலவச அறிவுரை வழங்கும் நேரங்களில், ' உனக்காக நான் என் காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறேன். நீ ஒரு போதும் இதை விளங்கிக் கொள்ள மாட்டாய்'.' என்று சொல்கிறாள்.

இது ஒரு நியாயமான புகார். பெற்றோர் பதின்ம வயதினர் மீது ஒருபோதும் எதிர்மறை உளவியலைப் பயன்படுத்தக் கூடாது. இது ஒரு நேர்மையற்ற அணுகுமுறை. இது வெறுப்பு மிக்க நடத்தைகட்கும் உறவுகளுக்குமே வழிவகுக்கிறது. அதுமட்டுமின்றி, நாம் சொல்கின்ற வார்த்தைகளை அவர் கள் கேட்டு, அதை உண்மையாகவே தங்கள் மனதுகளில் ஏற்றிக் கொண்டுவிடும் ஆபத்து எப்போதும் இருக்கவே செய்கிறது என்பதுதான், நாம் எப்போதும் கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கியமான விடயம்.

முரண்பட்ட செய்திகளை அனுப்பாதீர்கள்!

பெற்றோரின் குழப்பமானதும் முரண்பாடானதுமான அறிவு றுத்தல்கள் காரணமாகப் பதின்ம வயதினர் பெரிதும் பாதிக் கப்படுகின்றனர். நடனத்துக்குப் போக விரும்புவதற்காகக் கூறும் 15 வயதான மகள் மோலிக்குத் தாய் இப்படிக் கூறு கிறார்:

'ஓம் நிச்சயமாக, நீ நடனத்திற்குப் போகலாம் தான். உனக்கு அங்கே நல்ல சந்தோசமாகப் பொழுதைப் போக்க நேரம் கிடைக்கும். ஆனால், உனக்கு என்னை நன்றாகத் தெரியும். நீ வெளியே போகும்போது நான் ஒருபோதும் தூங்கப் போவ தில்லை. நான் உனக்காகக் காத்திருப்பேன்.' அம்மாவின் இந்தக் கூற்று அவரது மகளை ஒரு சாத்தியமற்ற சூழ்நிலைக் குத் தள்ளுகிறது. மோலி நடனத்திற்குச் சென்றாலும் சரி செல்லவில்லை என்றாலும் சரி தன்னைச் சபிக்கப்பட்டவள் ஆக உணருகிறாள். அம்மாவின் இரட்டைச் செய்தி குழப்பத் தையும் துயரத்தையும் விளைவிக்கிறது. மோதலைத் தவிர்க்க, ஒரு பெற்றோரின் கூற்று எப்போதும் ஒற்றைச் செய்தியையே கொண்டிருக்க வேண்டும்; ஒரு தெளிவான தடை, ஒரு கரு ணையுள்ள அனுமதி அல்லது ஏதாவது விருப்பமான முடி வுக்கான (open choice) வாய்ப்பு என்பதாக அது இருக்க வேண்டும்.

> ***"இது ஒரு நியாயமான புகார். பெற்றோர் பதின்ம வயதினர் மீது ஒருபோதும் எதிர்மறை உளவியலைப் பயன்படுத்தக்கூடாது. இது ஒரு நேர்மையற்ற அணுகுமுறை. இது வெறுப்புமிக்க நடத்தைகட்கும் உறவுகளுக்குமே வழிவகுக்கிறது."***

பதின்நான்கு வயது பிரெண்டா, ஒரு விருந்துக்குச் செல்ல அனுமதி கேட்டபோது, அவளுடைய அம்மா இவ்வாறு பதில ளித்தார்: 'நான் அதைப் பற்றி யோசிக்க வேண்டும். நாளை காலை நான் உனக்கு ஒரு திட்டவட்டமான பதிலைத் தருகிறேன். ஒன்பது மணி அளவில் என்னிடம் கேள்.' அம்மா கோரிக்கையைப் பற்றி யோசித்து, விருந்து பற்றி விசாரித்து, பின்னர் அவளுக்கு கருணையுடன் அனுமதி அளித்தாள். அவள் சொன்னாள்: 'இது ஒரு அழகான விருந்து போல் தெரி கிறது., 'நீங்கள் விருப்பப்பட்டா அங்க போகலாம்.' பிரெண் டாவுக்கு சரியான உடையைத் தேர்ந்தெடுக்க அம்மா உதவி செய்து, உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் விருந்துக்கு அனுப்பி வைத்தாள்.

எதிர்காலத்தை உருவாக்காதீர்கள்!

பல பெற்றோர்கள் தங்கள் பதின்ம வயதினர் ஒருபோதும் முதிர்ச்சியடைய மாட்டார்கள் என்று பயப்படுகிறார்கள். அவர்கள் அவரை வளரத் தூண்டும் அதே வேளையில், அவரது எதிர்கால விதியைப் பற்றி வெளிப்படையாகப் புலம் பவும் செய்கிறார்கள்.

'உன்னால் ஒருபோதும் ஒரு வேலையில் தொடர்ந்து இருக்க முடியாது. நீ சரியான நேரத்துக்கு எழுந்திருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அந்த நிலமைதான் உனக்கு வரும்'.



‘நீ ஒரு எழுத்துப்பிழையும் இல்லாமல் எழுதக் கற்றுக்கொள் ளாவிட்டால் யாரும் உன்னை வேலைக்கு அமர்த்த விரும்ப மாட்டார்கள். நீ கிட்டத்தட்ட படிப்பறிவில்லாதவன் என்றே நினைப்பார்கள் நடைமுறையில் நீ ஒரு எழுத்தறிவில்லாத வனாகவே கருதப் படுவாய்.’

‘உன்னுடைய கையெழுத்து இந்த மாதிரி இருந்தால் உன் வேலையிலிருந்து கிடைக்கும் காசோலைகளைக் கூட உன் னால் பணமாக மாற்றிக்கொள்ள முடியாது.’

இப்படி, எவ்வளவு கடினமாக எதிர்காலத்தை எதிர்வுகூற முயன்றாலும், இந்தப் பெற்றோர்கள் கிட்டத்தட்ட எப்போ துமே தோற்கடிக்கப்படுகிறார்கள். உண்மையில், எம்மால் எமது பதின்ம வயதினரை எதிர்காலத்திற்குத் தயார்படுத்த முடியாது. அவர்களுக்கு, நிகழ்காலத்தைச் சமாளிக்க மட் டுமே எம்மால் உதவ முடியும். ஒரு பதின்ம வயதினர் வாழ வேண்டியிருக்கின்ற, அவர்களது உள்ளத்தை உலுக்குகின்ற அனுபவங்களுக்கு எத்தகைய உண்மையான தயாரிப்பு முயற்சிகளும் இருக்க முடியாது: அன்பானவர்களால் ஏமாற் றப்படுதல்; ஒரு நண்பரால் ஏமாற்றப்படுதல்; சகாக்களால் அவமதிக்கப்படுதல்; ஒரு ஆசிரியரால் தவறாக நடத்தப்ப டுதல்; ஒரு உறவினர் அல்லது ஒரு நண்பரின் மரணத்தால் அதிர்ச்சியடைதல் போன்ற இத்தகைய நிகழ்வுகளைப் பற்றி ஊகிப்பதில் அர்த்தமில்லை.

காதலில் வீழ்ந்திருக்கும் ஒரு பையனிடம், ‘ இதோ பார் சில நேரங்களில் காதல் உன்னை உறைந்து போக வைக்கும். உனது காதலி உன்னை ஏமாற்றக்கூடும். எதற்கும் தயாராக இருப்பது நல்லது’ என்று சொல்வது இரக்கமற்றது. அல்லது, ஒரு நண்பனை மட்டும் அதிகம் நம்பியிருக்க வேண்டாம். அவன் உன்னை ஏமாற்றக்கூடும்.

‘நீ உனது நாயை அளவுக்கு அதிகமாக நேசிக்கிறாய். அது இறந்துவிட்டால் என்ன செய்வது? அதனால் என்றென்றைக் கும் உன்னோடு வாழ முடியாது’. அந்தமாதிரியான யோச னைக்கு இந்த விடயத்திலும் பழகிக் கொள்ளத் தொடங்கு என்றோ சொல்வது எந்தப் பயனையும் தருவதில்லை.

ஒவ்வொரு பதின்ம வயதினரும் வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு நெருக்கடியையும் எதிர்கொண்டு முன்னேறுவ தற்கான தமது வழியைக் கொண்டிருக்க வேண்டும். நமது அமைதியான அன்புதான் அவர்களுக்கு முக்கிய ஆதர வாகும். ஆலோசனைகள் நிராகரிக்கப்படும். காரணங் களைக் காணமுயலல்கள் வெறுப்பூட்டப்படுபவையாக அமை யும். லேசான எச்சரிக்கைகள் கூடத் தனிப்பட்ட அவமானமாக எடுத்துக் கொள்ளப்படும்.

பெற்றோர்கள் பாசத்துடனும் மரியாதையுடனும், ஒவ்வொரு பதின்ம வயதினரும் தனியாகத் தமது பயணத்தைத் தொடர் வதற்கு உதவ வேண்டும். அக்கறையுள்ள பெரியவர்கள், நம்பிக்கையுடன் நின்று பொறுமையாகக் காத்திருக்கும் போது தான் தமது சிறப்பான சேவைகளைச் செய்கிறார்கள். ஒரு பதினேழு வயதுச் சிறுமி கூறியது போல ‘நான் எனது கடந்த காலத்தை யோசித்துப் பார்க்கும்போது.... நீங்கள் அங்கே இருந்தீர்களே ஒழிய வேறு எதையும் எனக்காகச் செய்ததாகத் தெரியவில்லை. ஆனாலும், பயணிகள் வீடு திரும்புவதற்காக எப்போதும் கைகளை நீட்டிக் கொண்டு அமைதியாக நிற்பதைத் தவிர, ஒரு துறைமுகம் எதையும் செய்வதில்லை என்பது தானே உண்மை!.’

முதன்மை ஆனவை அல்ல – அனுபவத்தை ஒப்புக்கொள்ளல்:

வைத்தியர்களிடம் ஒரு பொதுவான கோட்பாடு இருக்கிறது: ‘Primum Non Nocere’. இதன் அர்த்தம் ‘எல்லாவற்றுக்கும் மேலாக, எந்தப் பாதிப்பும் இல்லை’ என்பது. பெற்றோர்க ளுக்கும் இதுபோன்ற விதி தேவை. முதலாவதாக உங்களது பதின்ம வயதினரின் புரிதல்களை, அல்லது உணர்தல்களை மறுக்காதீர்கள்; அவர்களது அனுபவங்களோடு விவாதத் தில் இறங்காதீர்கள்; அவரது அனுபவங்களை நிராகரிக்கா தீர்கள்; அவர்களது உணர்வுகளை நிராகரிக்காதீர்கள். குறிப்பாக, அவர்கள் பார்ப்பதை, கேட்பதை, உணர்வதை அல்லது ஊகிப்பதை அப்படி இல்லை என்று மறுத்து உரைக்காதீர்கள்.

கரோலும் அவனது அம்மாவும் ஏதாவது பொருளைக் கண்டால் வாங்கலாமே என்று கடைத்தெருவைப் பார்த்தபடி நகர்ந்து கொண்டிருந்தார்கள்:

பதினைந்து வயதான கரோல்: என்ன அழகான ‘ப்ளவுஸ்’ சட்டை இது.

அம்மா: இல்லை, இது அழகானதல்ல. இது சரியான ஆபாச மான சட்டை

இந்த வகையான பதில் முரண்நிலையை ஏற்படுத்தும். அம்மா, ஒரு தவறான தெரிவை மகள் செய்யக் கூடாது என்ப தற்காக அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால் அந்தப் பதில் மகளுக்கு இப்படித்தான் கேட்டிருக்கும்: நீ ஒரு முட்டாள். உனக்கு ஒரு அழகுணர்ச்சியும் கிடையாது.

ஒரு மிகப் பொருத்தமான எதிர்வினை, பதின்ம வயதினை தாக்காது. உதாரணமாக அது இப்படி விபரிப்பதாக இருந்தி ருக்கும்:

‘நான் நினைக்கிறேன் உனக்கு ஆழமான கழுத்துள்ள ‘ப்ள வுஸ் சட்டை’ தான் பிடிக்கும் எண்டு’

‘உனக்கு பச்சை, ஊதா அல்லது, இளஞ்சிவப்புக் கலர்கள் தான் பிடிக்கும் எண்டு’

‘நீ பெரிய டிசைன்களைத்தானே வாங்குவாய்’

பின்னர் தாய் தனது அபிப்பிராயத்தைச் சொல்வார்.

‘எனக்கு அமைதியான உடைகள் தான் பிடிக்கும்.’

‘எனக்கு மென்மையான கலர்கள் பிடிக்கும்.’

எனக்குமென்மையான டிசைன்கள் தான் பிடிக்கும்

‘எனக்குச் சிறிய புள்ளிகள் போட்டது பிடிக்கும்’

இத்தகைய அறிவிப்புக்கள் பாதுகாப்பானவை. ஏனென்றால் அவை மதிப்பீடு செய்வதைத் தவிர்க்கின்றன. அவை விமர்

சனம் செய்பவை அல்ல; அவை வெறுமனே விபரிக்கின்றன. விபரிக்கும் அபிப்பிராயங்கள் பொதுவாகக் எரிச்சலையோ எதிர்ப்புணர்வையோ ஏற்படுத்துவதில்லை. அவளது தெரிவு எதிர்க்கப்படாததால் அவளுக்கு எதிர்வினையாற்ற வேண்டிய அவசியம் இல்லை. ஒரு விமர்சனமற்ற எதிர்வினை, அவளைத் தன் தெரிவு குறித்துச் சிந்திக்கும் வாய்ப்பை வழங்குகிறது. இது தனது முடிவை எத்தகைய தோல்வி உணர்வும் இல்லாமலே மாற்றிக் கொள்ள உதவுகிறது.

உப்புக் கரிக்கும் 'சூப்':

பதின்நான்கு வயசான சிந்தியா, ஒரு கரண்டி 'சூப்'-ஐ ருசி பார்த்தாள்.

சிந்தியா: (எரிச்சலுடன்) இது சரியான உப்பு...

அம்மா: இல்லை. அப்பிடி இல்லை. அது உவர்ப்பாக இருக்க முடியாது. நான் அதுக்கு மிகக் கொஞ்சமாகவே உப்புப் போட்டிருந்தேன். சும்மா குறைசொல்லாமல் சாப்பிடு.

சிந்தியா: இது சரியான மோசமமான 'சூப்'

அம்மா: இல்லை சூப் நல்ல ருசியாயிருக்கிறது. அதில் காளானும், பார்லியும் கூடவே..

சிந்தியா: இஞ்சை பாருங்கோ அம்மா...இது ருசியானதுதான் என்றால் நீங்களே சாப்பிடுங்கோ.

அம்மா: உனக்குத் தெரியுமா நீ ஆர் எண்டு? நீ இப்ப புதுசாக் கெட்டுப்போய் நிக்கிறாய்...அதுதான் நீ உப்பிடிக் கதைக்கிறாய்.. ஐரோப்பாவிலும் சீனாவிலும் இருக்கிற மில்லியன் கணக்கான அகதிப் பிள்ளையள் இந்தச் சூப்பை நல்லா விரும்பிக் குடிப்பினம்.

சிந்தியா: அப்ப இதைக் கொண்டுபோய் அவையளுக்குக் குடுங்கோவன்...,

சொல்லிவிட்டு அவள் வேகமாக தனது அறையை நோக்கிச் செல்கிறாள்

இந்த உரையாடற் பகுதி மிகவும் சந்தோசமாக முடிந்திருக்கக் கூடிய ஒன்று. ஒரு பதின்ம வயதினர், ஒரு சாப்பாடு சரியான சூடு அல்லது சரியான குளிர் என்று குறையாகச் சொல்லும் போது அதற்காக அவர்களது சுவை உணர்வு பற்றிய விவாதத்தில் இறங்குவது எத்தகைய பயனையும் தராது. மாறாக, 'கொஞ்ச நேரம் பொறுத்திரு உனது தேநீர் உனக்குத் தேவையான அளவுக்கு ஆறிவிடும்' என்றோ, அல்லது 'அந்தக்கோப்பி வடிப்பான்ரை (percolator) பிளக்கைக் (plug) கொளுவன், கொஞ்ச நேரத்திலை சூடு வந்திடும்' என்றோ நாமாகவே மாற்று வழிகளைச் சுட்டிக் காட்டுவதும் கூட நல்லதல்ல. பதிலாக. எங்கள் பதின்ம வயதினரை, அவர்களது சொந்த முயற்சியில் நிலமையைச் சரி செய்துகொள்ள அனுமதிக்க வேண்டும். நடைமுறைப் பிரச்சினைகளை அங்கீகரிப்பதும், அவர்கள் தமது சொந்த முயற்சியில் அதைக் கையாள அனுமதிப்பதும், அவர்களது அபிப்பிராயங்களைக் கேட்பதற்காகப் பொறுமைகாப்பதும், அவர்கள் தங்கள் விருப்பத்தை நிறைவு செய்யவும், சுயாதீனமாக இயங்கவும் வாய்ப்பளிப்பதாக அமையும்.

உணவு என்பது அன்பிற்கான ஒரு அடையாளம்; அதைக் கருணையுடன் கையாள்வதே சிறப்பானது. எங்கள் கருணை காட்டும் இயல்பு, மோசமான வகையில் பயன்படுத்தப் படுவதற்கான வாய்ப்பு பெரும்பாலும் ஏற்படுவதில்லை. மாறாக, அது நல்ல நம்பிக்கைகளை (அல்லது நல்ல விருப்பங்களை) ஏற்படுத்தும். கனிவான மனோநிலை நிலவும் போது, குறைகள் மறைந்து போய்விடுவதுடன்,தீர்வுகளும் கண்டடையப் பட்டுவிடும்.

கார்லின் அம்மா, தனது மகனது சோளப் பொத்தி பற்றிய இவ்வாறான ஒரு அபிப்பிராயத்தை இப்படிக் கையாண்டாள். அவள் சொன்னாள்: 'ஓ,..உனக்கு இது உப்புக் கூடிவிட்டதுபோல் தெரியுதா? ...நான் உனக்கு வேறு ஏதாவது செய்திருக்கலாம்?' பதினேளு வயதான கார்ல் சொன்னான்: 'பரவாயில்லை அம்மா, நான் கொஞ்சம் உப்புக் கூடவவாகவே இண்டைக்குச் சாப்பிடுகிறேன்'. எலோரும் சிரித்தார்கள். பிரச்சனை தீர்ந்துவிட்டது. முன்னைய சந்தர்ப்பத்தில், குறை சொன்னது கோபத்துடனான வாதங்களுக்குப் போனதுடன் சூழாலையும் பாழாக்கி விட்டது.

சுருக்கமானதும் உறுதியானதுமான உரையாடல்!

பதின்மூன்று வயதான **கல்வின்** தனது தந்தையாருடன் ஒரு நவீன வகை ஓவியக் கண்காட்சியகத்துக்குப் போயிருந்தான்.

கல்வின்: இந்தப் படங்கள் எந்தவகையன, எனக்கு இவை எந்த விதமான உணர்வுகளையும் தரவில்லை.

தந்தை: உனக்குக்கு ஓவியங்களைப் பற்றி என்ன தெரியும்?. நீ இந்த வகையான ஓவியங்கள் பற்றிய ஏதாவது நூலை வாசித்திருக்கிறாயா?..நீ இப்படி அபிப்பிராயம் சொல்லமுன், அதைப்பற்றி நன்றாகப் படித்திருக்க வேண்டும்.

கல்வின் தகப்பனை ஒரு வகை எரிச்சலுடனான பார்வையுடன் பார்த்தபடி சொன்னான்,' ஆனாலும் எனக்கு இந்த ஓவியங்கள் வெறும் நாறல் ஓவியங்களாகத்தான் தெரிகிறது.

இந்த வகையான் உரையாடல் அந்த ஓவியம் மீதான ஆர்வத்தையோ அல்லது அவனது தகப்பன் மீதான மதிப்பையோ கூட்டிவிடவில்லை. அவன் அவமதிக்கப்பட்டவனாவும், தாக்கப்பட்டவனாகவும், எதிர்ப்புணர்வு கொண்டவனாகவும் இருந்தான். இதனால், அவன் உடனடியாகவோ சற்றுப் பின்னராகவோ தகப்பனுக்கு ஒரு பதிலடியைத் திருப்பிக் கொடுப்பதற்கான சந்தர்ப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருப்பான். ஏதாவதொரு ஒரு சமயத்தில் உங்களது பிள்ளைகளைப் பார்த்து 'உங்களுக்கு என்னதான் தெரியும்?' என்பது போன்ற கேள்விகளை ஒருபோதும் கேட்கக் கூடாது.

பதின் நாலு வயதான **கிளாரா**, நவீன ஓவியங்களை விமர்சித்த போதும் தாயார் அவளது அபிப்பிராயத்தை எதிர்த்து எதையும் கூறாதது மட்டுமல்ல, அவளின் ரசனைஉணர்வு பற்றிக் கேள்வி எழுப்பவும் இல்லை. (ஆனால் அவள் இப்படி உரையாடினாள்).

தாய்: உனக்கு இந்த ஓவியம் பிடிக்கவில்லையா?

கிளாரா: ஓம், எனக்குப் பிடிக்கவில்லை; அது சரியான அசிங்கம்.

தாய்: உனக்கு அசலை அப்படியே காட்டும் 'பிரதிநிதித் துவப்' படுத்தும் ஓவியங்கள் பிடிக்குமா ?

கிளாரா: அப்பியெண்டால் என்ன வகை அது ?

தாய்: உனக்கு ஒரு வீடு, வீடுபோலவும், ஒரு மரம், மரம் போலவும், ஒரு மனிதன், மனிதன் போலவும் இருக்கின்ற ஓவி யங்கள் பிடிக்குமா ?

கிளாரா: ஓம்.

தாய்: அப்படியானால் பிரதிநிதிப்படுத்தும் ஓவியங்களையே நீ விரும்புகிறாய்.

கிளாரா: அது பற்றி யோசித்துப் பார்க்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் நான் பிரதிநிதித்துவ ஓவியங்களைத்தான் விரும்பி இருக்கிறேன், ஆனால் எனக்கு அது தெரிந்திருக்க வில்லை.

அமைதியின் அரசியல்: சொற்களும் உணர்வுகளும்:

பதினாறு வயதான சார்ள்ஸுக்கு அரசியல் விஞ்ஞானத்தில் ஆர்வம். அவனுக்கு வித்தியாசமான நாடுகளையும் அந்நிய அரசுகளையும் பற்றி அறிந்து கொள்வதில் விருப்பம். அவனது தகவல்கள் எல்லாக் காலங்களிலும் மிகவும் துல்லி யமாக இருப்பதோடு அல்லாமல், அவனது கருத்துக்கள் அடிக்கடி அளவுக்கு மீறியவையாகவும் இருக்கும்.

சார்ள்ஸ்: சீனா மிக விரைவில் இந்த உலகத்திலேயே மிக அதிகளவான பலமுள்ள நாடாக மாறிவிடும். அதன் மீதான போரை இப்போதே ஆரம்பித்து விட வேண்டும்.

தகப்பன்: எனது பதினாறு வயது இராணுவ நிபுணரே, கேளும்!. நீங்கள் ஒரு முட்டாளைப் போலக் கதைக்கிறீர்கள். சீனா பற்றிய சில தகவல்களை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

சார்ள்ஸ்: (கோபத்துடன்) வேண்டாம் அப்பா, நான் இப் போது போக வேண்டும்.

தகப்பன்: அப்படி என்ன அவசரமான விசயம் ? இந்த விவா தம் உனக்குச் சூடாக இருக்கிறதா ? ஜனாதிபதி ட்றூமன் சொல்லுவார் ' உன்னால் சூட்டைத் தாங்க முடியாவிட்டால் குசினியை விட்டு வெளியேறிவிடு' என்று.

தாக்கப்பட்ட உணர்வும் கோபமும் கொண்ட சார்ல்ஸ், வசிப் பறையிலிருந்து எழுந்து வெளியேறியபோது, தகப்பன் தனது மனைவியுடன் உலக சமாதானத்தை கொண்டுவருவது எப்படி என்று பேசிக்கொண்டிருந்தார். தகப்பனது சமாதா னத்துக்கான பிரசங்கம், அவரது வீட்டிலேயே ஒரு புதிய யுத் தத்தில் முடிந்தது. தனது மகனுடனான அவரது பேச்சினால், குடும்பத்தின் மீதான விருப்பத்தையோ மரியாதையோ அவ னிடம் உருவாக்கி விட முடியவில்லை. சார்ள்ஸும் சமாதா னம் பற்றியோ அரசியல் பற்றியோ பெரிதாக எதையும் அறிந்துகொள்ளவும் இல்லை. அவன் கற்றுக் கொண்ட தெல்லாம், தனது தகப்பனாரை எதிர்ப்பதையும், தனது கருத் துக்களை தன்னுடனேயே வைத்திருக்க வேண்டும் என்ப தையும் மட்டுமே.

இத்கைய ஒரு சண்டை அவசியம் தானா ? அனேகமாக இல் லையென்றே சொல்ல வேண்டும். ஒரு பதின்ம வயதினரை, அவரது கருத்துக்கள் மடைத்தனமானவை என்றும் அவரை ஒரு முட்டாள் என்றும் அவரே எண்ணும்படி நடந்துகொள் வதும் எவ்வகையிலும் ஒரு புத்திசாலித்தனமான நடவ டிக்கை அல்ல. இதிலுள்ள அபாயகரமான விடயம் என்ன வென்றால், அவர்கள் அதை உண்மையென்றே நம்பத் தொடங்கிவிடக்கூடும் என்பதுதான். பதின்ம வயதினரின் அபிப்பிராயங்களை விவாதத்துக்கு உள்ளாக்கக் கூடாது என்ற விதியை நடைமுறைப் படுத்துவதன் மூலம், தகப் பனார் இப்படிச் சொல்லியிருக்கலாம். 'யுத்தத்தையும் சமாதா னத்தையும் பற்றிய உனது கருத்துக்களை நான் அறிவதற்கு விரும்புகிறேன். இன்னும் சற்று விரிவாக எனக்குச் சொல்லும் பார்க்கலாம்' என்று கேட்டு, அதன் பின் அவன் சொன்னதன் சாரத்தைத் தகப்பனார் தான் திருப்பிச் சொல்லி, 'நீ சொன் னதிலிருந்து எனக்கு விளங்கியது இதுதான்' என்று சொன்ன பின்னர்தான், அவர் தனது கருத்துக்களைச் சொல்ல வேண் டும். 'நான் நினைக்கிறேன், சீனா பற்றிய எமது கருத்துக் களில் நாங்கள் இருவரும் பெரிதாக முரண்படுகிறோம்....இது தான் எனது கருத்து' ஒரு விவாதத்தில், எதிராளியின் கருத் தைச் சுருக்கமாகத் திருப்பிச் சொல்லிப் பின்னர் தனது சொந்தக் கருத்தை முன்வைப்பதுதான் அறிவார்ந்த விவாத முறைக்கான நெறிமுறையாக இருக்க வேண்டும்.

தமது பதின்ம வயதினரான பிள்ளைகளுடனான தொடர்பா டல்களிலும், உரையாடல்களிலும் (communication and conversation) எப்போதும் பொறுப்புணர்வோடு நடந்துகொள் வது அவர்களது பெற்றோர்களின் பொறுப்பாகும்.

உதாரணமாக:
முழுமையான சிரத்தையுடன் செவிமடுப்பது

'அவர்களது 'கருத்தின்' சுருக்கத்தைத் திருப்பிச் சொல்வது.

விமர்சனத்தையும், சொன்னவர் பெயரைச் சொல்வதையும் தவிர்ப்பது.

அதன் பின் தனது கருத்தை முன்வைப்பது.

அவர்கள் சொல்வதை எமது மூன்றாவது காதால் கேட்டு, அக்கறையுள்ள எமது நாக்கால் பதிலளிக்கும்போது, நாம் எமது பதின்ம வயதினரின் கவனத்தை ஈர்த்துக் கொள்வதில் வெற்றி கொள்கிறோம். அவர் தெளிவற்ற முறையில் எம்மிடம் சொன்னதை நாம் தெளிவாக திருப்பி வெளிப்படுத்தும் போது, அவரது இதயத்தை வெல்கிறோம். நாம் உண்மை யானவர்களாகவும், எமது வார்த்தைகள் எமது உணர்வு களுக்கு ஏற்றவாறும் இருக்கும்போது, நாம் அவர்களது மதிப்பைப் பெற்றுக் கொள்கிறோம்.

(தொடரும்...)



vickneaswaran.sk@thaiveedu.com



அவளும் படிக்கிறாள்

– பஞ்சகல்யாணி

பாடசலையிலிருந்து அழைப்பு வந்ததும் கலக்கமுற்றார், வானதி என்ற வங்கி முகாமையாளர்.

‘மிஸ் உங்களை ஒருதரம் பாடசாலைக்கு வரச்சொல்லி மகளிடம் மூன்று தடவை சொல்லிவிட்டோம். நீங்கள் வராதபடியால் தொலைபேசி அழைப்பெடுத்தேன்’. முதலாம் ஆண்டில் படிக்கும் மகளின் வகுப்பாசிரியரிடம், ‘மன்னித்துக் கொள்ளுங்கள் இன்று நான் வருவேன்’ என்று வாக்குறுதி கொடுத்தார்.

உணவு இடைவேளை நேரம் மகளின் வகுப்பறைப் பக்கம் சென்ற வானதியை மறித்து, அதிபர் அலுவலகத்திற்குக் கூட்டிச் சென்றார் ஆசிரியர். அங்கு உப அதிபர், பகுதித் தலைவர், வேறு ஆசிரியர்கள் இருந்தனர். ‘இருங்கோ மிஸ்’ என்ற அதிபர், ‘உங்களுடைய மகள் வகுப்பில இருக்கிறா இல்லை, அடிக்கடி வகுப்பிற்கு வெளியே காண்கிறேன், என்னுடைய அலுவலகத்திற்குள்ளும் சிலவேளை வந்து கணினியை இயக்கப் பார்க்கிறா’ என்றபடி வகுப்பாசிரியையைப் பார்க்கிறார்.

‘ஓம், வகுப்பில அவ எதையும் கவனிப்பதில்லை, தன்பாட்டில் படம் கீறிக்கொண்டு இருக்கிறா, யாருடனும் சேர்வதில்லை, கூப்பிட்டாலும் திரும்பிப் பார்க்கிறா இல்லை, அடிக்கடி வெளிய போய் ஓடிவிட்டு வாறா, எல்லாரும் சேர்ந்து பாட்டுப் பாடினால் காதைப் பொத்திக்கொண்டு மேசைக்குக் கீழ ஒழிக்கிறா, பென்சிலை அல்லது சட்டைக் கொலரை வாயிற்குள் வைத்துச் சப்பியபடி இருக்கிறா, இடைக்கிடை எழும்பி நின்ற இடத்தில் தன்னைத் தானே சுற்றிவிட்டு இருக்கிறா, சிலவேளைகளில் காரணமில்லாமல் சிரிக்கிறா அல்லாட்டி அழுகிறா, கையில இருக்கிற சின்னப் புண்ணை உரஞ்சி உரஞ்சிப் பெருசாக்கீட்டா, அவவுக்கு நோகிறேல்லையோ?’ என்ற கேள்வியுடன் வகுப்பாசிரியர் தன் குற்றச்சாட்டுகளை முடித்தார்.

மற்றவர்கள் வானதியை ஒரு குற்றவாளி போல பார்த்துக் கொண்டிருக்கப் பகுதித் தலைவர் கொஞ்சம் கோபமாக ‘உதை ஏன் இங்க சேர்த்தனீங்கள். உதை விசேட தேவை அலகு இருக்கிற பள்ளிக்கூடத்தில கொண்டுபோய் விடுங்கோ’ என்று கூறவும், இன்னுமொரு ஆசிரியை ‘அதுதானே, இப்ப முதலாமாண்டு, ஐந்தாமாண்டிற்கு என்னிடம் விடாதையுங்கோ, இவ ஸ்கொலசிப் பாஸ்பண்ணமாட்டா, பிறகு எங்கடை பாஸ் றேட் குறைஞ்சு போகும்’ என்று கூறவும், அமைதியாக இருந்த வானதியை அதிபர் பார்த்தார்.

‘நான் கதைக்கலாமோ’ என்று அனுமதி பெற்று வானதி கதைக்கத் தொடங்கினார். ‘என்னுடைய மகள் ஓட்டிசம் என்ற நிலைமையுடன் வாழ்கிறார். இந்தப் பாடசாலையில் அவரைச் சேர்க்கும் போது வகுப்பாசிரியரிடம் நான் சொன்னதென்ன வென்றால்’ எனது மகள் ஸ்கொலசிப் பாஸ்பண்ணவேண்டுமென்று இங்கு சேர்க்கவில்லை. சமுதாயத்தில் மற்றவர்களுடன் சேர்ந்து வாழப்பழக வேண்டும். அடிப்படை அறிவைப் பெற வேண்டும்’ என்றுதான் கூறினேன்.

‘எனது மகள் உரிய வயதில் கதைக்கவில்லை, பெயரைக் கூப்பிட்டாலும் திரும்பிப் பார்க்கவில்லை, தனக்கு வேண்டிய பொருட்களைக் கைகளால் காட்டிப் பெற்றுக் கொண்டார். நாங்கள் கதைப்பது விளங்குவதும் இல்லை, நாங்கள் சொன்னதைத் தானும் திருப்பிச் சொல்லுவா, எனவே நாங்கள் ஒரு குழந்தை வைத்தியரிடம் ஆலோசனை பெற்றோம். அப்போது அவவிற்கு மூன்று வயது.

வைத்தியர்தான் இவ ஓட்டிசக் குழந்தை எனவும், அதனால்த் தான் கதைக்கவில்லை, கல்யாணவீட்டு மேளச்சத்தத்திற்குப் பயப்படுறா, குறிப்பிட்ட நிறத்தை, உடையை, உணவை விரும்புகிறா. நண்பர்களை உருவாக்கவில்லை, வரிசையில் நிற்க முடியவில்லை, தலை இழுப்பதென்றால் பயம், பல்லுத் தீட்டுவதற்கு வாயிற்குள் brush வைக்கப் பயம், மண்ணை அளைவதற்கு விருப்பமில்லை, நேருக்கு நேர் பார்ப்பதில்லை, பெயர் சொல்லிக் கூப்பிட்டாலும் பார்ப்பதில்லை என்று பல விடயங்களைச் சொன்னார். நல்லவேளை உரிய நேரத்திற்கு ஆளைக் கொண்டுவந்துவிட்டீர்கள். அல்லாவிடின் அவர்களைத் therapy மூலம் சரிப்படுத்துவது கடினம் என்றும் கூறினார்.

ஓட்டிசம் பற்றி நாங்கள் அறிந்திருக்கவே இல்லை. ஊரில் ஓட்டிசம் பிள்ளைகள் இருந்திருக்கிறார்கள். குழப்படி, ஏலாத பிள்ளை என்ற பெயர்களுடன் அவர்கள் வாழ்ந்து மடிந்திருக்கிறார்கள். கோயில், சாத்திரம், திருநீறு போடுதல், பேயிற்குக் கழித்தல் என்று அவர்கள் பெற்றோரின் காலம் கழிந்திருக்கிறது.

ஓட்டிசம் ஒரு நோய் நிலைமை இல்லை என்றும், அது நரம்பு சம்பந்தமான ஒரு நிலமை என்றும், பரம்பரையில் கடத்தப்படும் என்றும், இதைப் பூரணமாகக் குணப்படுத்த முடியாவிட்டாலும் therapy மூலம் சாதாரண வாழ்க்கை முறைக்கு அண்மித்துக் கொண்டு வரலாம் என்றும் எங்களை ஊக்கப்படுத்தினார். எனவே, நான் மூன்று மாதம் லீவு எடுத்து மகளை therapy-க்குக் கொண்டு சென்றேன். பலவிதமான பயிற்சிகளுடன் பேச்சுப் பயிற்சியும் வழங்கப்பட்டது. சொற்களைச் சேர்த்து வசனமாகக் கதைக்கத் தெரியாவிடினும் அவ பல சொற்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் ஏற்கனவே அறிந்திருந்தா. இலக்கம், வடிவம், நிறம் எல்லாம் தெரியும். படங்களை வைத்து மூன்று சொல் வசனங்கள் கற்றா. அப்படியே கதைக்கத் தொடங்கிவிட்டா என்ற வானதியின் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தியது. அதன்பின் அவவின் கோபம் குறைந்திருந்தது. மகளின் முன்னேற்றத்தைக் கண்ட பயிற்சியாளர்கள் ‘இவவை விசேட தேவை அலகில் சேர்க்காமல் சாதாரண குழந்தைகளுடன் படிக்கவிடுங்கோ அப்பத்தான் அவ இன்னும் கற்றுக்கொள்ளுவா’ என்று சொல்லிவிட்டார்கள். அதனால்தான் இங்கு கொண்டுவந்தேன் என்று முடித்தார் வானதி.

வகுப்பாசிரியரும் உணர்ச்சிவசப்பட்டிருந்தார். ‘நீங்கள் கவலைப்பட வேண்டாம். இப்படியான குழந்தைகளை உள்வாங்கிக் கற்பிப்பதுதான் சிறப்பு. நான் அதைச் செய்வேன்’ என்று உற்சாகமூட்டி வானதியை அனுப்பி வைத்தார்.



Panchakalyany@thaiveedu.com

மனதைத் தேடி...

– சியாமளா யோகேஸ்வரன்

மனம் என்பது மாயைகள் காட்டும் கண்ணாடி என்று சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். இல்லாதவற்றை எல்லாம் இருப்பதைப் போன்று காட்டும் மாயைதான் மனமா அல்லது மனமெனப்படுவதே ஒரு மாயைதானா? அந்த மனம் எங்கே தான் இருக்கின்றது?

இதயப்பகுதியில்தான் மனம் இருப்பதாக எல்லோரும் நம்புவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. கவலை ஏற்பட்டால் அல்லது துக்கம் உண்டானால் இதயப்பகுதி வலிப்பது போன்றோ அல்லது கல்லைக் கட்டி வைத்தது போன்று கனமாக இருப்பதாகவோ உணர்கின்றோம். கவலையாக இருக்கும்போது இதயத்தின் ஒரு பகுதியை யாரோ பிசைவது போன்ற வேதனையை உணர்வதால், மனதை இதயத்தின் இருப்பிடத்தோடு இணைத்துப் பார்க்கின்றோம்.

மனம் என்பதை அறிவியலும், ஆன்மீகமும் வெவ்வேறு விதமாகப் பார்க்கின்றன. அறிவியலானது மனம் என்பதை மூளையின் செயற்பாடுகளாகப் பார்க்கும் அதே வேளையில், ஆன்மீகமானது மனம் என்பதை ஆன்மாவின் கருவியாகவோ உணர்வோட்டமாகவோ கருதுகின்றது.


மனதை அமைதிப்படுத்துவதன் மூலம் ஆழ்ந்த தியான நிலைக்குப் போகலாம் என்று ஆன்மீகம் கூறுகின்றது. அதாவது எண்ணங்களை உருவாக்குவதும் தீர்மானங்களை எடுப்பதும் மனம்தான் என்ற கருத்தை ஆன்மீகம் கொண்டிருப்பதால், மனதைக் கட்டுப்படுத்தினால் தியானம் கைகூடும் என்று சொல்கின்றது. மார்பின் மத்தியில் 'அனாகதம்' என்ற சக்கரம் இருக்கின்றது என்றும் அது அன்பு, உணர்ச்சி மற்றும் கருணை உணர்வுகளை ஆள்கின்றது என்றும் கூறப்படுகின்றது. அதனால் அன்பென்ற உணர்வால் வலி ஏற்படும் போது அந்தப் பகுதியும் வலி கொள்கின்றது. எதுவானாலும் எம் வசதிக்கேற்ப 'மனமிருந்தால் மார்க்கம் இருக்கும்' என்றும் 'மனமென்பதே இல்லாதவன் செய்த கொடூரச் செயல்' என்றும் இல்லாத மனதைக் குறை கூறிச் சமாதானப்பட்டுக் கொள்கின்றோம்.

மனம் என்பது அறிவியலின் படி தனி ஒரு உறுப்பாக இல்லை. மூளையில் நடக்கும் நரம்பியற் செயற்பாடுகளின் கூட்டுச் செயலொன்றையே மனதின் முடிவு என்று நாம் எண்ணுகின்றோம். அப்படியாயின் மனதை யாரும் காயப்படுத் தினாலோ அல்லது பெருந்துக்கத்தின் போதோ இதயம் இருக்கும் பகுதி அல்லது நெஞ்சுக்கூட்டின் நடுப்பகுதி வலிப்பது ஏன்?

நம்முடைய உணர்வுகளான கவலை, பயம், மகிழ்ச்சி என்பன மூளையின் limbic system என்னும் பகுதியில் உருவாகின்றன. இதன்போது adrenaline மற்றும் cortisol என்ற ஹார்மோன்கள் வெளியிடப்பட்டு, இதயத் துடிப்பு வேகமாகிறது, மார்புப் பகுதி இறுக்கமாகிறது. கவலைப்படும் போது மார்புப் பகுதியில் உள்ள (intercostal muscles) மற்றும் மார்பு சுவர்த்தசைகள் சிறிது இறுகும்போது 'வலி' அல்லது 'கசப்பு' மாதிரியான உணர்ச்சிகள் ஏற்படுகின்றன. சில நேரங்களில், இது chest tightness அல்லது 'கல் வைத்தது' போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. இதனாலேயே கவலைப்படும் போது இதயம் கனமாக இருப்பது போன்றும் மார்பின் மத்தியில் ஒரு விதமான வேதனை உணர்வு ஏற்படுவது போன்றும் உணர்கின்றோம்.

இல்லாத அந்த மனதால் மனிதர் வருத்தப்படுவதற்கான காரணங்களைப் பட்டியல் இட்டால் அது முடிவில்லாமல் நீண்டுகொண்டே செல்லும். கவலைகளின் பரிமாணங்களும் அது ஏற்படுத்தும் தாக்கங்களும் மனிதருக்கு மனிதர் வேறுபடுகின்றன. எதையாவது நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்குச் சிறிய கவலை கூட மலையளவு பெரிதாகத் தோன்றும். கவலைப்படுவதால் மட்டும் எதுவும் மாறி விடப்போவதில்லை என்று புரிந்து கொண்டவர்கள், கவலைகளைப் புறந்தள்ளி விட்டு, எதிர்காலத்தை நோக்கிய அடுத்த அடியைத் தெளிவாக எடுத்து வைக்கின்றார்கள்.

கவலைகளை மனதில் வைத்துச் சுமந்து, வாழும் கணங்களைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என்று எமக்குத் தெரிந்திருந்தாலும், அதனை நடைமுறைப்படுத்துவது இலகுவாக இருப்பதில்லை. ஏனெனில் மனம் என்று சொல்லப்படும் கற்பனை அமைப்பு உள்ளிருந்து கொல்லும் வியாதியாக, எமக்குத் தெரியாமலேயே எம்மை ஆட்டி வைப்பதைத் தடுக்க எம்மால் முடியவில்லை. எண்ணங்களை எம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும் என்ற உயர் ஞானநிலை எல்லோருக்கும் கிடைத்து விடாததால், நினைவுகளையும்,



அது தரும் வலியையும் தன் இஷ்டப்படி புரட்டிப் போட்டு எம் நிம்மதிக்கு உலை வைக்கும் மனதை அடக்க முடியவில்லை என்பதுதான் நடைமுறை உண்மை.

எம் மனதை வாட்டுவன எவை? நெருங்கிய உறவொன்றின் இழப்பானது துக்கத்தை உண்டாக்குகின்றது. வாழ்க்கை நிரந்தரமற்றது என்பது தெரிந்தும், மரணம் வாழ்வின் நிச்சய மானது என்று தெரிந்தும் எம்மால் இறப்பை இலகுவில் ஏற் றுக் கொண்டு சமாதானமாக முடிவதில்லை. உற்றவர்களை இழந்த வேளையில், உறவினர்களும் நண்பர்களும் ஆறு தலைத் தந்தாலும், இழப்பின் துயரை ஆற்றும் மருந்து காலத்திடம்தான் இருக்கின்றது. நாட்கள் நகர்கையில் வேதனை யின் வீரியம் குறைவடையும் என்றாலும், மனதுக்கு நெருங்கி யவர்களின் மரணம் ஏற்படுத்தும் வேதனையை உடனடியா கத் தாங்கித்தான் ஆக வேண்டியிருக்கின்றது.


வாழ்வதற்கான ஆதாயங்கள் இன்றிப்போய் அடுத்து வரும் பொழுதை எப்படிச் சமாளிப்பது என்ற அச்சம் தருவதும் ஒரு விதமான மன வேதனையாகும். எம்மை நம்பி இருப்பவர் களுக்கு உணவையோ அல்லது அத்தியாவசியத் தேவை களையோ பூர்த்தி செய்ய முடியாமற் போகும்போது, அது வும் எம் கைகளைத் தாண்டிய காரணிகளால் அந்த நிலை ஏற்படும்போது மனம் உடைந்து போகின்றது. தனியொரு வனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடு வோம் என்று சொன்ன பாரதியாரின் வாக்குக்கு ஏற்ப, ஒவ் வொருவரின் வாழ்க்கைப் பாதையையும் செப்பனிட்டுக் கட்டி எழுப்பும் சமூக அமைப்பொன்று இருக்க வேண்டும். அல்லது தம் திறமைகளை மேம்படுத்திக்கொண்டு, மாறி வரும் உல கத்துடன் போராடும் வல்லமையை மனிதன் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மனதுக்கு நெருக்கமானவர்களின் புறக்கணிப்போ, துரோ கமோ எம் மனதைக் கிழித்து நாராக்கி விடுகின்றது. எந்தக் காயங்களுக்கும் மருந்திருக்கலாம். ஆனால் உண்மையான பாசம் வைத்திருக்கின்றார்கள் என்று நம்பிப் பழகிய ஒருவர், அந்த அன்பைப் பொய்யாக்கி எம்மைக் காலில் போட்டு மிதிக்கும்போது ஏற்படும் வலியைத் தாங்கிக் கொள்வது அத்தனை இலகுவாயிருப்பதில்லை. சில வேதனைகளை வாய் விட்டுச் சொன்னால், அதன் தாக்கம் குறைந்து விடும். சில வலிகளைப் புரிந்து கொள்ள யாருமில்லாதபோது, அவற்றை மனதுக்குள் போட்டுப் புழுங்கத்தான் வேண்டி யிருக்கின்றது. 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்பார்கள். ஒருவரில் பாசம் வைக்க முன்னர், அவர் தகுதியானவரா என்று தெரிந்து கொண்டு அன்பு வைத்தால் ஏமாற்றமடைய வேண்டி வராது என்று இலகுவில் சொல்லிவிடலாம். ஆனால் அந்த அன்புக் கணக்கை எப்படிப் போடுவது என்று யாரும் கற்றுத் தரவில்லை. அடுத்தவரின் அன்பை அறியக்கூடிய அளவுகோலை எவரும் வைத்திருப்பதாகவும் தெரிய வில்லை. கணக்கு வைத்துப் பாசம் வைக்க அன்பு ஒன்றும் பொருளல்லவே? அன்பென்பது மனித மனங்களுக்கு ஆறு தல் தந்து, மனங்களின் காயங்களுக்கு ஒத்தடமிட்டு, மனி தத்தையும் காதலையும் உயிர்ப்புடன் வைத்திருக்கும் அற் புதமான உணர்வல்லவா?

தேவைக்குப் பயன்படுத்திக் கொள்பவர்கள், உறவுகளின் மகத்துவம் புரியாதவர்கள், மனித விழுமியங்களை அறியாத வர்கள் போன்றோரை எம் வாழ்வில் சந்தித்துத்தான் ஆக வேண்டும். சக மனிதர்களாலும் உறவுகளாலும் நேர்ந்த அவமானங்களும் வலிகளும் மனித வர்க்கத்தின் மீதிருக்கக் கூடிய நம்பிக்கையை உடைத்து விடுகின்றன. சமூகத்தில் பழக விருப்பமின்றி மனிதர்களில் இருந்து ஒதுங்கி வாழத் தூண்டுகின்றது. யாருடனும் நம்பிக்கை வைத்துப் பழகவோ அல்லது தெரியாதவருக்கு உதவி செய்யவோ ஒரு தயக் கத்தை உருவாக்கி விடுகின்றது. எதுவும் கடந்து போகும் என்றாலும் இதயம் சுக்குநூறாய் உடைந்து போயிருக்கும் கணங்களைத் தாங்குவது என்பது கடினமானதாகத்தான் இருக்கின்றது. மனமுடைந்து விட்டது என்று நாம் ஒதுங்கிக் கொண்டால் வாழ்க்கையும் எம்மை ஒதுக்கிவிட்டுச் சென்று விடும். ஓடும் நதியோடு ஓடியபடி எம் காயங்களுக்கு நாமே மருந்திட்டுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின் றோம். சில சமயங்களில் அந்த மனமற்றவர்கள் ஏற்படுத்தி விட்ட நிரந்த வடுக்களுடன் வாழ்நாள் பூராவும் வாழ வேண் டிய நிர்ப்பந்தமும் ஏற்படத்தான் செய்கின்றது.

பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வாக எதையாவது பொய் யைச் சொல்லி அந்த நிமிடப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று சிலர் நினைக்கின்றார்கள். அல்லது உண்மையை மறைப்பதன் மூலம் தற்காலிகமாகத் தப்பித் துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றார்கள். அப்படியான எண்ணமானது அன்புக்கும் உறவுக்கும் என்றும் ஆதாயமாக இருக்கப்போகும் நம்பிக்கை என்ற அத்திவாரத்தைத் தகர்த்து விடுவதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. சிதைந்து போன நம்பிக்கைக்கும் நொருங்கிவிட்ட மனதுக்கும் மன் னிப்பு என்பது ஒட்டுப் போடுகிறதே தவிர முன்னைய அன் பையும் புரிந்துணர்வையும் மீளக் கொண்டு வரப்போவ தில்லை.

அன்பொன்றை நம்பி அடி வாங்கிய மனதை மீட்பது எங் ஙனம்? வானம் தலையில் விழுந்து விடவில்லை என்பதைப் புரிந்துகொண்டு, நிதானமாகப் பிரச்சினையை அணுகக் கற்றுக்கொள்ள வேண்டும். வேதனையில் வார்த்தைகளைச்



"எண்ணங்களை எம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும் என்ற உயர் ஞானநிலை எல்லோருக்கும் கிடைத்து விடாததால், நினைவுகளையும், அது தரும் வலியையும் தன் இஷ்டப்படி புரட்டிப்போட்டு எம் நிம்மதிக்கு உலை வைக்கும் மனதை அடக்க முடியவில்லை என்பதுதான் நடைமுறை உண்மை."



> ***“மனமுடைந்து விட்டது என்று நாம் ஒதுங்கிக் கொண்டால் வாழ்க்கையும் எம்மை ஒதுக்கிவிட்டுச் சென்று விடும். ஓடும் நதியோடு ஓடியபடி எம் காயங்களுக்கு நாமே மருந்திட்டுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.”***

சிதற விட்டுவிடாமல் பொறுமை காக்க வேண்டும். எம்மைக் காயப்படுத்தியவர்கள் தம் தவறுகளை ஒருகாலத்தில் உணர்ந்து கொள்ளலாம் அல்லது உணர்ந்து கொள்ளாமற் போகலாம். அது அவரவர்களின் மனநிலையைப் பொறுத்தது. விளைவுகளை எம்மிற் சிலர் நம்பும் கர்மாவின் கரங்களிலும் காலத்தின் பிடியிலும் கொடுத்து விடலாம். காலம் எந்த மனக்காயத்துக்கும் மருந்திடும் என்ற மாறாத உலக நியதி இருக்கின்றது. அந்த ஒற்றை நம்பிக்கையை மட்டும் உறுதி யாகப் பற்றிக்கொண்டு வலியிலிருந்து மீண்டு வர முயற்சிக்க வேண்டியதுதான்.

தோல்வி தரும் துயரே மனங்களை வாட்டும் அடுத்த வேதனை ஆகும். முயற்சியும் கடின உழைப்பும் இருந்தபோதும் எடுத்த செயலொன்று தோல்வியில் முடியும் போதோ அல்லது எதிர் பார்த்த வெற்றி ஒன்று கை நழுவிப் போகும் போதோ மனம் தளர்ந்து போகின்றோம். எம்மீதே அவநம்பிக்கை கொண்டு விடுகின்றோம். எமக்கு மட்டுந்தான் எல்லாத்துயரும் என்பது போலத் துவண்டு விடுகின்றோம். தோல்வி தரும் பாடமும், வீழ்ச்சி தந்த அவமானமும் தரக்கூடிய மனஉறுதி அடுத்த முயற்சிக்கான அத்திவாரத்தை ஆழமா கவே போட்டுத் தரும். அடுத்ததாகப் புது அத்தியாயம் ஒன்றிருக்கின்றது என்று நம் பும் அந்த மனதைத் தேடித் தக்கவைத் துக் கொள்ளும் பக்குவம் எம்மிடம் இருக்க வேண்டும்.

இறுதியாக மனம் என்ற ஒன்றிருந்தால் தானே அது உடைந்து நொருங்கிவிட்டது என்று வருந்தி மூலையில் முடங்கிக் கொள் வதற்கு என்று சொல்வது எளிதாயிருந்தாலும், வாழ்க்கையின் வலி மிகுந்த தருணங்களைக் கடப்பது அத்தனை இலகு வாயிருப்பதில்லை. சவால்களும், சறுக்கல்களும், சோதனை களும், சோகங்களும், இன்பங்களும், இனிய தருணங்களும் நிறைந்தது தான் வாழ்க்கை என்பதை மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். மனம் பலவீனமாக இருந்தால் எதுவுமே பிரச்சினைதான். மனம் கலங்காமல் இருந்தால், பிரச்சினைகளைச் சவால்களாக மட்டும் நோக்கி அதை வெல்லும் வழி தேடி வாழ்ந்து விட முடியும். பிரச்சினைகள் புதுப்பாடமொன் றைக் கற்றுத் தருவதாகவே உறுதியான மனம் எடுத்துக் கொள்ளும். குரங்காகத் தாவும் மனதுக்கான தேடலைத் தொடர்ந்தபடி இந்தக் கட்டுரையை முடிக்கின்றேன்.



Shiyamala@thaiveedu.com





செயற்கைச் சூரியனை உருவாக்கும் விந்தைமிகு மாந்தர்!

சுப்ரமணியம் ஜெயசீலன்

இந்தப் பூமிப்பந்து சூரியனைச் சுற்றி ஞாயிற்றுத் தொகுதியில் வலம் வரும் ஓர் அங்கமாகத் திகழ்கின்றது. பூமிப் பந்தின் ஓர் அங்கமான மனிதர்களாகிய எமக்குச் சக்தி தரும், பகல் இரவைத் தரும், நேர மாற்றத்தைத் தரும் இயற்கைச் சூரியனை செயற்கையாக உரு வாக்கும் முனைப்புகளில் ஆய்வாளர்கள் ஈடுபட்டுள் ளார்கள் என்றால் மெய்சிலிர்க்கின்றதல்லவா? ஆம், அவ்வாறான ஒரு முயற்சி சீனாவிலும் இன்னும் பிற நாடு களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பல ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் சீன விஞ்ஞானிகள் செயற்கைச் சூரியன் ஒன்றை உரு வாக்கும் முனைப்புகளில் குறிப்பிட்ட அளவு வெற்றியை எட்டிப் பிடித்துள்ளனர்.

மனிதர்களுக்கு அருமையானதும், பற்றாக்குறையான துமான பொருட்களைக் கொண்டு இந்த அகிலத்தின் பூகோள அரசியல்சார் போர் முன்னெடுப்புகள் கட்ட மைந்துள்ளன. அனேகமாக இவ்வாறான போர்க ளுக்கான மூல ஏதுக்களாகக் குறித்த நாடுகளின் இயற்கை வளத் திரட்சி அமைந்துள்ளது என்றால் அது மிகைப்படப்போவதில்லை. குறிப்பாக பற்றாக்குறை யாகக் காணப்படக்கூடிய எரிபொருட்கள், கனிய வளங்கள் அதிக அளவில் செறிந்து கிடக்கும் நாடுகள் மத்தியில் போர் பதற்றமும் முரண்பாடுகளும் அதிக அளவில் காணப்படுகின்றன அல்லது அவ்வாறான நாடுகளை ஆக்கிரமித்து அழிப்பதில் சில தரப்புகள் நாட்டம் காட்டுவதனை வெளிப்படையாகக் காண முடி கின்றது.

அந்த வகையில் உலகின் மிகவும் செல்வந்த நாடுகள் முதல் வறிய நாடுகள் வரை அனைத்துத் தேசங்க ளுக்கும் ஒரு பொதுவான கேள்வி அல்லது கிராக்கி செறிந்ததாக எரிபொருட்கள் காணப்படுகின்றன.

சக்தி வளத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மனிதன் நாள்தோறும் பல புதிய முயற்சிகளை முன்னெடுத்து வரு கின்றான். தீர்ந்து போகக்கூடிய சக்தி வளத்தைத் தவிர்த்து பல்வேறு வழிகளில் புதுப்பிக்கத்தக்க புதிய சக்தி வளங்களை நோக்கிய ஆய்வுகளும் அதற்கான முனைப்புகளும் நீண்டு செல்கின்றன என்றால் அதுவே நிதர்சனமாகும்.

பெட்ரோல், டீசல், எரிவாயு போன்ற புதை வடிவிலான எரி பொருட்களுக்கு மாற்றீடாக சூரிய சக்தி, காற்றாலை உள்ளிட்ட பல்வேறு புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் மீதான ஆய்வுகளும் பெறுபேறுகளும் பல்கிப் பெருகத் தொடங்கியுள்ளன.

விஞ்ஞான ஆய்வுப் பரிணாம வளர்ச்சியின் ஒரு படியாகச் சீனா செயற்கைச் சூரியன் ஒன்றை உரு வாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இது சக்தி வள உற்பத்தித் திறனை மேம்படுத்தும் ஒரு முயற்சியாகக் கருதப்படுகின்றது.

அணுக்கரு இணைவு (Fusion) ஆராய்ச்சி:

அணுக்கரு இணைவு (Nuclear Fusion) என்பது இரண்டு இலகு அணுக்கருக்கள் (Hydrogen Isotopes போன்றவை) மிகுந்த வெப்பம் மற்றும் அழுத்தத்தில் ஒன்று சேர்ந்து புதிய கனமான அணுக்கருவாக (Helium போன்றன) மாறும் செயலாகும். இந்த செயலின் போது மிகப்பெரிய அளவில் சக்தி வளம் வெளியிடப்படுகின்றது.

சூரியனில் இவ்வாறான ஒரு செயன்முறை தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. இதன் காரணமாகவே சூரியன் எல்லா நேரங்களிலும் ஜொலித்துப் பிரகாசம் தருகின்றது என ஆய் வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மனிதர்கள் எதிர்காலத்தில் சுத்தமான, வரையறையற்ற எரிசக்தி வளத்தைத் தேடி ஓடிக்கொண்டிருக்கும் நிலையில், புதைம வடிவ எரிபொருட்கள் (Petrol, Diesel, Coal) அருகி வருகின்றன, மேலும் கார்பன் உமிழ்வு காரணமாக காலநிலை மாற்றம் மனித குல இருப்பினை நாளுக்கு நாள் சவாலுக்கு உட்படுத்தி வருகின்றது.

அணுக்கரு இணவு மூலம்...

- மிக அதிகளவான சக்தி வளம், சிறிய எரிபொருளில் இருந்து கிடைக்கும்.
- கார்பன் உமிழ்வு இல்லை - காலநிலை மாற்றத்தைத் தடுக்க உதவும்.
- நீண்ட காலத்திற்கு எரிசக்தி கிடைக்கும் - கடலில் உள்ள டீட்டீரியம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் போதுமானது.
- அணுக்கருப் பிளவு (Nuclear Fission) போல பெரும் அளவு கதிரியக்கக் கழிவு இல்லை.

டோகமாக் (EAST) – செயற்கை சூரியன்:

டோகமாக் என்பது அணுக்கரு இணைவு (Nuclear Fusion) ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படும் முக்கிய கருவியாகும். இதன் பெயர் ரஷ்ய மொழியில் இருந்து வந்தது - 'TOKAMAK' - (Toroidalnaya Kamera s Magnitnymi Katushkami) என்று அழைக்கப்படுகிறது. இதன் பொருள் காந்தக் குவியல் கொண்ட வளைய வடிவ அறை என்பதாகும்.

டோகமாக் ஒரு வளைய வடிவ (டோனட் போன்ற) அறை ஆகும். இந்த அறையின் உள்ளே மிகவும் அதிக வெப்பநி லையுள்ள பிளாஸ்மாவை (பிளாஸ்மா (Plasma) என்பது பொருளின் நான்காவது நிலை என்று அழைக்கப்படுகிறது) உருவாக்கிக் காந்தக் கலத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

திண்மம், திரவம் மற்றும் வாயு ஆகிய மூன்று நிலைகளைக் கடந்த பொருளாகும். வாயுவை வெப்பமாக்கும் போது அதில் காணப்படும் அணுக்கள் பிரிகையடைந்து இலத்திரன்களா கவும் மின்னேற்றம் பெற்ற அயன்களாகவும் மாறும் நிலையை பிளாஸ்மா என அழைக்கின்றோம்.

இந்த பிளாஸ்மாவில் ஹைட்ரஜன் ஐசோடோப்புகள் (Deute-rium, Tritium) சேர்ந்து ஹீலியம் உருவாக்கும் போது மிகப் பெரிய அளவில் சக்தி வெளிவரும் என்பதுடன் இதனையே நாம் அணுக்கரு இணைவு என அழைக்கின்றோம்.

சூரியனில் நடைபெறும் செயற்பாட்டையே பூமியில் மீண்டும் செய்து அதன் ஊடாக சக்தி வளத்தைப் பிறப்பித்துக் கொள்ளும் பாரிய முனைப்பில் சீனா ஈடுபட்டுள்ளது.

சீனாவின் ஹெஃபேய் நகரில் அமைந்துள்ள ஒரு நவீன டோகமாக் ஆராய்ச்சி நிலையம் EAST (ஈஸ்ட்) என அழைக் கப்படுகின்றது. இதன் விரிவாக்கம் Experimental Advanced Superconducting Tokamak - ஆய்வுக்கான மேம்பட்ட சூப்பர் கண்டக்டிங் டோகமாக் என்பது குறிப்பிடத்தக்கது.

EAST உலகில் முதன்முதலில் முழு சூப்பர் கண்டக்டிங் (Full Superconducting) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்து கின்றது. அதாவது மின்சார எதிர்ப்பு இல்லாத நிலை மற்றும் காந்தப் புலத்தைத் தள்ளும் திறன். அதனால் அதிவேக, சக்தி வளம் இழப்பில்லாத தொழில்நுட்பங்கள் சாத்தியமா கின்றன. டோகமாக் கருவியானது இந்தத் தொழில்நுட் பத்தைப் பயன்படுத்தி சக்தி வள உற்பத்தி முனைப்புகளை மேற்கொள்கின்றது.

இதன் சிறப்பம்சங்கள்:

- பிளாஸ்மாவை 100 மில்லியன் பாகை செல்சியஸ் (சூரியன் மைய வெப்பத்தை விட அதிகம்) வரை சூடாக்கும் திறன் கொண்டதாகும்.
- நீண்ட நேரம் பிளாஸ்மாவை நிலைத்த நிலையில் வைத் திருக்க முடியும்.
- புதிய காந்தக் கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பங்களைப் பரி சோதிக்கப் பயன்படும்.

ஏன் இது முக்கியம்?

EAST போன்ற டோகமாக் கருவிகள் மூலம் நாம் சுத்தமான, வரையறையற்ற சக்தி வளத்தைப் பெறும் வழியைக் கண்டுபி டிக்கும் முயற்சியில் வெற்றியீட்டும் சாத்தியங்கள் அதிகம். நிலக்கரி, பெட்ரோல் போன்ற புதைம வடிவ அல்லது தீர்ந்து போகக்கூடிய எரிபொருட்களுக்கு மாற்றீடாகப் புதுப்பிக்க தக்க அணுக்கரு இணைவு சக்தி வளத்தைப் பிறப்பிக்க முயற்சிக்கப்படுகின்றது.

இந்த முயற்சி வெற்றியளித்தால்,

- கார்பன் உமிழ்வு இல்லை (சுத்தமான சக்தி வளம்).
- குப்பை அல்லது கதிரியக்கக் கழிவு மிகவும் குறைவு.
- உலகின் எரிசக்தி தேவையைப் பல ஆயிரம் ஆண்டுக ளுக்குத் தீர்க்கக் கூடிய வல்லமை கிடைக்கப் பெறும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த ஆய்வு கடந்த 2006-ஆம் ஆண்டு முதல் சீனாவில் முன் னெடுக்கப்பட்டு வருவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சீனாவின் செயற்கை சூரியன் அல்லது HT-7U (Hefei Toka-mak 7 மேம்படுத்தல்) என்று அழைக்கப்படும் சோதனை மேம்பட்ட மீக்கடத்தும் டோகாமாக் (EAST), 2006-இல் அதன் சோதனை முயற்சிகளைத் தொடங்கிய ஒரு சோதனை மீக்க டத்தும் டோகாமாக் காந்த இணைவு ஆற்றல் உலை ஆகும்.

சீன அறிவியல் நிறுவகத்தின் பிளாஸ்மா இயற்பியல் நிறு வனத்தால் (IPP) நிர்வகிக்கப்படும் EAST, காந்த அடைப்பு இணைவுக்கான ஒரு முக்கியமான திட்டமாகும், மேலும் குறிப்

பிடத்தக்க அறிவியல் மைல்கற்களை இந்த ஆய்வு அடைந் துள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், EAST ஒரு புதிய உலக சாதனையைப் படைத்தது என்பதுடன் எல்லையில்லாததும் தூய்மையானதுமான சக்தி வளத்தைக் கண்டு பிடிப்ப தற்கான முன்னேற்றப் பாதைக்கு வழி வகுத்துள்ளது.

இது 100 மில்லியன் பாகை செல்சியஸ் (180 மில்லியன் பாகை பரனைட்) க்கும் அதிகமான வெப்பநிலையில் 1,066 வினாடிகளுக்கு இந்த ஆய்வு நிலையான-நிலை, நீண்ட-து டிப்பு பிளாஸ்மா செயற்பாடுகளை வெற்றிகரமாக அடைந்தது எனவும் இந்த நேரப் பெறுமதியானது, ஆய்வின் மிக முக்கியமான வெற்றியாகும் எனவும் ஆய்வாளர்கள் தெரி விக்கின்றனர்.

ஒரு புதிய உலக சாதனையைப் படைத்துள்ளமை, இணைவு மின் உற்பத்தியைத் தேடுவதில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்பு முனையைக் குறிக்கிறது.

1,066 வினாடிகளின் காலம் பூச்சிய உமிழ்வைக் கொண்ட நீண்ட கால சக்தி வள உற்பத்தி ஆராய்ச்சியில் முக்கியமான முன்னேற்றமாகும். சீன அறிவியல் அகடமியின் ஹெஃபி இயற்பியல் அறிவியல் நிறுவனத்தில் (HFIPS) உள்ள பிளாஸ்மா இயற்பியல் நிறுவனம் (ASIPP) அடைந்த இந்தப் பெறுதியானது, 2023-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 403 வினா டிகளின் முந்தைய உலக சாதனையை விட மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

ஒரு செயற்கைச் சூரியனை உருவாக்குவதன் இறுதி இலக்கு, சூரியனில் நிகழும் அணு இணைவு செயல்முறைகளை நக லெடுப்பது, மனிதகுலத்திற்கு எல்லையற்ற மற்றும் தூய்மையான சக்திவள மூலத்தை வழங்குவது மற்றும் நமது சூரிய மண்டலத்திற்கு அப்பால் ஆய்வுகளை செயற்படுத்துவ தாகும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகெங்கிலும் உள்ள விஞ்ஞானிகள் இந்த இலக்கிற்காக 70 ஆண்டுகளுக்கும் மேலாக அர்ப்பணிப்புடன் போராடி வரு கின்றனர்.

எனினும், ஓர் அணுக்கரு இணைவு சாதனத்திலிருந்து மின்சாரம் தயாரிப்பது என்பது மிகவும் வியாகூலமான விஞ்ஞான தொழில்நுட்பப் படிமுறை செயற்பாடுகளைக் கொண்டமைந்துள்ளது.

அதாவது100 மில்லியன் பாகை செல்சியஸுக்கு மேல் வெப்ப நிலையை அடைவது, நிலையான நீண்டகால செயற் பாட்டைப் பராமரித்தல் மற்றும் இணைவு செயல்முறையின் துல்லியமான கட்டுப்பாட்டை உறுதி செய்தல் உள்ளிட்ட முக்கிய சவால்களை வெற்றிகொள்வது என்ற யதார்த் தத்தைப் பறைசாற்றுகின்றது.

எதிர்கால அணு இணைவு ஆலைகளின் தொடர்ச்சியான மின் உற்பத்திக்கு அவசியமான பிளாஸ்மாவின் சுய-நிலையான சுழற்சியைச் செயல்படுத்த, ஓர் இணைவு சாதனம் ஆயிரக்க ணக்கான வினாடிகளுக்கு உயர் செயற்றிறனில் நிலையான செயற்பாட்டை அடைய வேண்டும், என ASIPP பணிப்பா ளரும் HFIPS-இன் துணைத் தலைவருமான சொங் யுன்டாவோ (SONG Yuntao) குறிப்பிடுகின்றார்.

அண்மைய சாதனையானது, இது ஒரு செயற்பாட்டு இணைவு உலையை நிர்மானிப்பதற்கான ஒரு முக்கியமான சமிக்ஞை படியைக் குறிக்கிறது என்று அவர் தெரிவிக்கின்றார்.

EAST சாதனத்தின் பல அமைப்புகள் கடைசிச் சுற்றுச் சோதனைகளுக்குப் பிறகு மேம்படுத்தப்பட்டுள்ளதாக ஈஸ்ட் (EAST) இயற்பியல் மற்றும் பரிசோதனைச் செயற்பாட்டுப் பிரிவின் தலைவரான கோங் ஸியான்ஸு (Gong Xianzu) தெரி விக்கின்றார். உதாரணமாக முன்னர் சுமார் 70,000 வீடுகளில் பயன்படுத்தப்படும் மைக்ரோவேவ் அடுப்புகளுக்கு சமமான சக்தியில் செயற்பட்ட வெப்பமாக்கல் அமைப்பு, நிலைத் தன்மை மற்றும் தொடர்ச்சியைப் பராமரிக்கும் அதே வேளையில் இப்போது அதன் சக்தி வெளியீட்டை இரட் டிப்பாக அதிகரித்துள்ளது.

2006-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, EAST, சீன மற்றும் சர்வதேச விஞ்ஞானிகள் அணு இணைவு தொடர்பான சோதனைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான திறந்த சோதனைத் தளமாகச் செயற்பட்டு வருகிறது.

சீனா 2006-ஆம் ஆண்டில் அதன் ஏழாவது உறுப்பினராகச் சர்வதேச வெப்ப அணுசக்திப் பரிசோதனை உலை (ITER) திட்டத்தில் அதிகாரபூர்வமாக இணைந்தது. இந்த ஒப்பந் தத்தின் கீழ், திட்டத்தின் கட்டுமானம் மற்றும் செயற்பாட்டில் சுமார் 9 சதவீதத்திற்குச் சீனா பொறுப்பாகும், ASIPP சீனப் பணிக்கான முதன்மை நிறுவனமாக செயற்படுகிறது.

தென் பிரான்சில் தற்போது கட்டுமானத்தில் உள்ள ITER, உலகின் மிகப்பெரிய காந்த அடைப்பு பிளாஸ்மா இயற்பியல் பரிசோதனையாக மாறும் எனவும் கட்டுமானப் பணிகள் பூர்த் தியானதும் உலகின் மிகப்பெரிய டோகாமாக் அணு இணைவுச் சோதனை உலையாகவும் மாறும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

அண்மைய ஆண்டுகளில், EAST தொடர்ந்து உயர்-அடைப்பு முறையில் புரட்சிகரமான முன்னேற்றங்களை அடைந் துள்ளது, இது ITER மற்றும் எதிர்காலச் சீன அணு இணைவுப் பொறியியல் பரீட்சார்த்த டெஸ்ட் ரியாக்டர் (CFETR) போன்ற சோதனை இணைவு உலைகளுக்கான அடிப்படை செயற் பாட்டு முறையாகும். இந்தச் சாதனைகள் அணு இணைவு உலைகளின் உலகளாவிய வளர்ச்சிக்கான விலைமதிப்பற்ற நுண்ணறிவுகளையும் குறிப்புகளையும் வழங்குகின்றன.

EAST வழியாக சர்வதேச ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும், இணைவு ஆற்றலை மனிதகுலத்தின் நடைமுறைப் பயன்பாட் டிற்குக் கொண்டு வரவும் நாங்கள் நம்புகிறோம் என சொங் (SONG) கூறினார். ஈஸ்ட் அமைந்துள்ள சீனாவின் அன்ஹுய் மாகாணத்தில் உள்ள ஹெஃபியில், புதிய தலைமுறைச் சோதனை இணைவு ஆராய்ச்சி வசதிகள் தற்போது கட்டுமா னத்தில் உள்ளன.

இந்த வரலாற்றுச் சாதனை மிக்க விஞ்ஞானத் தேடலில் காணப்படும் நடைமுறைச் சவால்கள் எவை?

- அப்படியான இணைவு ரியெக்டர் fusion reactor-இல் 'ignition' (அதாவது தானே தொடரும் இணைவு fusion

மாற்றம்) இன்னும் வெற்றி பெறப்படவில்லை. உண்மையான சக்தி உற்பத்தி இன்னும் இலக் காகவே காணப்படுகின்றது.

- சாதனம் தொடர்பான மூலப்பொருட்களின் (materials) தேடல், plasma-வில் எதிர்ப்புகள், வெப்பம் மற்றும் கதிரியக்கத் தாக்கம் போன்றவை சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய சாத்தி யங்கள்.
- நீண்ட-நேர நடத்தை, நிலைத்தன்மை, செயற்றிறன் எல்லாப் பாகங்களிலும் மேம்படுத்த வேண்டிய தேவையுள்ளது.
- பிளாஸ்மாவை 100 மில்லியன் பாகை செல்சியஸ் (100 million °C) வரை வெப்பமாக்க வேண்டும்.
- அதனை நிலைத்த நிலையில் (Stable) வைத்தி ருக்க வேண்டும் - இது மிகக் கடினம்.
- உற்பத்தி செய்யும் சக்தி வளமானது செலவு செய்யும் சக்தியைவிடவும் அதிக தேறிய பெறுமதியை கொண்டிருக்க வேண்டும்.

ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் திட்டங்கள்:

- Tokamak (டோகமாக்) - காந்தக் கலத்தால் பிளாஸ்மாவை வளைய வடிவ அறையில் கட்டுப்ப டுத்தும் கருவி.
- EAST (சீனா), KSTAR (கொரியா), JET (இங்கி லாந்து) போன்றவை செயற்படுகின்றன.
- ITER Project - பிரான்சில் உலகின் மிகப்பெரிய சர்வதேச டோகமாக் கட்டப்படுகிறது.
- 35 நாடுகள் இணைந்து செய்கின்றன.
- 2030-களில் முழுமையாக இயங்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.
- Stellarator - டோகமாக் போல் ஆனால் வேறு வடிவம் (Wendelstein 7-X, ஜெர்மனி).

இதேவேளை, நம் வீடுகள், தொழிற்சாலைகள், வாகனங்கள் அனைத்தும் தூய்மையான, மலிவான சக்தி வளத்தினால் இயங்கும், எண்ணெய், நிலக்கரி போன்ற வற்றின் தேவைகள் குறையும், உலகின் எரிசக்தி பிரச்சி னைகள் அநேகமாகத் தீர்க்கப்படும் நிலை உருவாகும். பிரகாசமான எதிர்காலத்தை மனிதர்களுக்குக் கொண்டு வரும் ஓர் ஒளிமயமான ஆய்வு முயற்சியே இந்தச் செயற்கைச் சூரியன் ஆய்வுத் திட்டம் என ஆய்வா ளர்கள் நம்பிக்கை வெளியிடுகின்றனர்.



jeyaseelan.s@thaiveedu.com



நாம் எமது வாழ்நாளில் செய்திருக்கக்கூடிய பாரிய முத லீடு 'வீடு' என்று சொல்வதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. எனவே அத்தகைய முதலீட்டைப் பேணி உரிய முறைப்படி பராமரிக்க வேண்டியது மிக அவசியமா னது. தவறும் பட்சத்தில் அல்லது கவனயீனமாக இருந்துவிட் டால் காலப்போக்கில் அதிக செலவினை எதிர்கொள்ள வேண்டி வரலாம். மறுவார்த்தைகளில் கூறுவதானால் நாங்கள் போட்ட முதலீட்டிற்கேற்ற முழுப் பலாபலனையும் அடையமுடியாது போகலாம். இதனைக் கருத்திற்கொண்டே வீட்டுப் பராமரிப் புப் பற்றிப் பல்வேறு கோணங்களில் ஆராயப்படுகின்றது.


வட அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் மாறிவரும் பருவ கால நிலைக்கேற்றவாறு நாமும் வீட்டுப் பராமரிப்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். பருவகால மாற்றத் தைக் கருத்திற்கொண்டு பராமரிப்பு வேலைகளை முக்கிய 4 பிரிவாகப் பிரிக்கலாம்.

- வசந்தகாலப் பராமரிப்பு (Spring)
- கோடைகாலப் பராமரிப்பு (Summer)
- இலையுதிர்காலப் பராமரிப்பு (Fall)
- குளிர்காலப் பராமரிப்பு (Winter)

வழமைக்கு மாறாக இவ்வாண்டு குளிர்காலம் நேரகாலத் திற்கே தொடங்கிவிட்டதுபோலத் தெரிகிறது. எனவே அதற் கேற்றபடி எமது பராமரிப்பு வேலைகளையும் துரிதப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். கோடைகா லத்தில் ஓடியாடித் திரிந்த நாம் வரப்போகும் 4-5 மாதங்க ளுக்கு நான்கு சுவர்களுக்கு மத்தியில் அடைபட்டுக் கிடப்பது மட்டுமல்லாது எமது நடவடிக்கைகளையும் குறுகிய வட்டத் துள் அடக்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாதது. அத்த கைய குளிர்காலத்திற்கு ஏற்றவாறு முன்கூட்டியே வீட்டினை, வீட்டுச் சூழலைத் தயார்படுத்துவதையே இலையுதிர்காலப் பராமரிப்பு குறித்து நிற்கின்றது. மறுவார்த்தைகளில் கூறுவதா னால் வெள்ளம் வருமுன்னரே அணைகட்டுதல் அவசியமல் லவா ?

வெப்பமாக்கி (Furnace):

வீட்டில் இருக்கக்கூடிய இயந்திரக் கருவிகளில் வெப்பமாக்கி (Furnace) மிக முக்கியமானது. எதிர்கொள்ளப்போகும் குளிர் காலத்திற்கேற்ப அதனைத் தயார்நிலையில் வைத்துக் கொண்டால் பெருங்குளிர்நேரத்தில் ஏற்படப்போகும் இடர்க



ளைத் தவிர்த்துக் கொள்ளலாம். பெரும்பாலான வீடுகளில் எரிவாயுவில் இயங்கும் (Gas Furnace) வெப்பமாக்கிகளே பயன்பாட்டில் உள்ளன. இத்தகைய வெப்பமாக்கிகளைக் குறைந்தது இரண்டு வருடத்திற்கொரு முறை தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் (Qualified Technician) மூலம் சரிபார்த்துக்கொள்வது நல்லது. சிலர் 'Winter Tune up' என்ற பெயரில் ஒவ்வொரு வருடமும் தயார்படுத்திக் கொள்வதும் உண்டு.

எண்ணெயில் இயங்கும் (Oil Furnace) ஆக இருந்தால் ஒவ் வொரு வருடமும் தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்க ளின் உதவியுடன் சரிபார்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.

- வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Air Filter) 3 மாதத்திற் கொருமுறை மாற்ற வேண்டும். வெப்பமாக்கியின் தொழிற் பாடு குளிர்காலத்தில் தொடர்ச்சியாக இருக்கப்போவதால் முன்கூட்டியே இதனை மாற்றித் தயார் நிலையில் வைத்தி ருத்தல் மிகப் பொருத்தமானது. ஆரோக்கியமான வாழ் விற்கு இச்செயற்பாடு மிக இன்றியமையாதது. தொய்வு, ஒவ்வாமை (Ashma, Alergy) போன்ற நோய் அறிகுறிகள்



உள்ளவர்கள் வீட்டில் இருந்தால் வடிகட்டியை மாற்றும் போது ஏற்ற தரமான வடிகட்டிகளை மாற்றுவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். புதிய வடிகட்டியைப் போடும் போது வடிகட்டியில் போடப்பட்டிருக்கும் அம்புக்குறி குளிர் காற்றுப் பகுதியிலிருந்து வெப்பமாக்கி நோக்கிப் போகும் விதத்தில் போடப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- முதன்மை விளக்கு (Pilot Lamp) அணைக்கப்பட்டிருந்தால் அந்த விளக்கினைக் கொழுத்தித் தயார் நிலையில் வைத் திருத்தல் வேண்டும். வெப்பமாக்கி 8-9 வருடத்திற்குட்பட்ட தாக இருந்தால் Pilot Lamp இல்லாமல் இருக்கலாம். அதா வது புதிய வெப்பமாக்கிகளில் பொருத்தப்பட்டிருக்கும் Electronic Ignitor தேவையான போது மட்டும் இயங்கி பொறியைக் கொடுக்கும் தன்மை வாய்ந்தது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

Heat Register:

இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Duct Cleaning செய் வது நல்லது. தவறினால் இக்காலப்பகுதியில் ஒவ்வொரு அறைகளிலும் மற்றைய வீட்டுப் பகுதிகளிலும் இருக்கக்கூ டிய வெப்பமூட்டும் வழிகளுக்கான தடைகளைத் (Heat Reg-ister) திறந்து சுத்தம் செய்து (Vacum) வைத்துக்கொள்வது நல்லது.

தண்ணீர்க் குழாய்கள் (Pipes):

கோடைகாலத்தில் முன்வளவு, பின்வளவு போன்ற இடங்க ளுக்கு இருக்கக்கூடிய தண்ணீர்க் குழாய்கள் மூலம் நீர் பாய்ச்சியிருப்போம். தற்போது அவற்றின் பயன்பாடு அடுத்த கோடைகாலம் வரை இருக்காது. எனவே இவற்றுக்குரிய கட் டுப்படுத்திகள் (Control Valve) வீட்டிற்குள் உள்ள நிலக்கீழ் அறையில் இருக்கும். பொதுவாக முன்பக்கத்திற்கு ஒன்றும் பின்பக்கத்திற்கு ஒன்றுமாக 2 கட்டுப்படுத்திகள் பொருத்தப் பட்டிருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து இறுகப் பூட்டிவிடு தல் மிக அவசியம். தவறும் பட்சத்தில் குளிர் காரணமாகத் தண்ணீர் உறைநிலைக்குச் செல்லும் போது குழாய்கள் வெடித்து வீட்டிற்குள் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பிருக் கிறது.

அத்துடன் வெளியில் உள்ள பிளாஸ்ரிக் குழாய்களில் இருக் கும் தண்ணீரைத் திறந்து வடியவிடுதல் வேண்டும். அல்லது அத்தகைய குழாய்களிலும் வெடிப்பு ஏற்படுவதால் அடுத்த வருடம் பாவிக்க முற்படும்போது ஒழுக்கு ஏற்படுவதைக் கண்டு புதிதாக அவற்றை மாற்றவேண்டிய நிலை உருவாகும்.

குளிரூட்டி (AC):

இனி வரப்போகும் 6 - 7 மாதங்களுக்கு குளிரூட்டியின் தேவை இருக்காது எனவே அதனை உரிய முறையில் பேணினால் அதன் ஆயுட்காலத்தைக் கூட்ட வாய்ப்பிருக்கும். குளிரூட்டிக ளைக் கொட்டும் பனியில் மூழ்க விடுவதைவிட உரிய உறை களைப் போட்டு மூடி வைத்தல் நல்லது. துருப்பிடித்தலைக் கட்டுப்படுத்துவதற்காக வெளிப் பகுதிக்கு 'Anti Rust Spray' அடித்த பின்னர் மூடிவிடுதல் நல்லது. 6 - 7 டொலர்களுக்கு வாங்கக்கூடிய Anty Rust Spray பல தடவைகள் பாவிக்கப் போதுமானது.

Weather Stripes:

தலைவாசற் கதவு, பின்கதவு, கராஜ் கதவு என்பன குளிர் உட் புகாதவாறு மூடப்படுகின்றனவா ? என்பதை உறுதி செய்தல் வேண்டும். இடைவெளிகள் காணப்படும் பட்சத்தில் காலநி லைக்கேற்ற Weather Stripe-ஐ பொருத்தி விடுதல் அல்லது சரிபார்த்துக்கொள்ளுதல் வேண்டும். வருடாந்தம் ஏற்படும் வெப்பமாக்கலுக்கான செலவின் கணிசமானளவு திருப்திகர மில்லாத வாசல்களின் ஊடாக ஏற்படுவதாகப் பல அறிக்கை கள் கூறுகின்றன.

ஈரப்பதனாக்கி (Central Humidifer):

குளிர்காலம் தொடங்குவதற்கு முன்னரே ஈரப்பதனாக்கிக்கு ரிய வடிகட்டிகளைச் (Evaporator grid) சுத்தம் செய்து வைத்

திருப்பது நல்லது. ஒவ்வொரு வருடமும் இலையுதிர்காலப்பகுதியில் இத்தகைய வடிகட்டிகளையும் மேலதிக நீர் வழிந்தோடும் குழாய்களையும் நீரினால் கழுவிச் சுத்தம் செய்வதை ஒரு பழக்கமாக ஏற்படுத்திக் கொள்ளல் நல்லது.

Garage Man–Door:

கராஜ்ஜில் இருந்து வீட்டிற்குள் செல்லும் கதவு தானே இறுக்கமாக மூடவேண்டியது மிக அவசியம். குளிர்காலத்தில் ஊர்திகளை வெப்பமாக்குவதற்காகக் கராஜ்ஜின் உள்ளே இயங்கவிடுவதும், நிறம், மணம் அற்ற காபன்மொனோக்சைட் வாயு பாதுகாப்பற்ற கதவுகளின் ஊடாக வீட்டிற்குள் செல்வதும், இதன் நச்சுத் தன்மை காரணமாகப் பலர் உயிரிழப்பதும் நாம் வருடா வருடம் கனடாவில் அறியும் செய்திகள். இத்தகைய கதவுகள் தானே மூடப்படுவதற்காகப் பொருத்தப்பட்டிருக்கும் 'Auto Closer' சரியாகச் செயற்படுகின்றதா? என்பதைப் பரிசோதித்து அதன் விசையை உரிய நிலைக்குச் சரிசெய்து விடவேண்டியது மிக அவசியம்.

கூரை வடிகால்: (Gutters):

கூரை வடிகால்களில் சருகுகள் தேங்கிக் கிடப்பதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றைச் சுத்தம் செய்து அத்துடன் தண்ணீர் ஒழுங்காகக் கீழ்நோக்கிச் செல்லும் குழாயினூடாக (Downspout) அகற்றப்படுகின்றதா? என்பதை உறுதிப்படுத்துதல் நல்லது.

குறிப்பு:

சுற்றுப் புறங்களில் அதிக மரங்கள் உள்ளவர்கள் Gutters-க் குரிய துவாரமிடப்பட்ட மூடிகளைப் பொருத்துவதன் மூலம் சுத்தம் செய்யும் மேலதிகப் பழுவைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

ஜன்னல்கள் மற்றும் கூரையில் கண்ணாடிகள் (Sky Light) பொருத்தப்பட்டிருந்தால் அவை இறுக்கமாக மூடப்படுகின்றனவா? என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

கோடைகாலத்திற்குரிய யன்னல் திரைச்சீலைகளை மாற்றிவிட்டு குளிரை எதிர்க்கக்கூடிய திரைச்சீலையை மாற்றுபவர்கள் இக்காலப்பகுதியில் அதனையும் மறக்காது செய்தல் வேண்டும்.

வீடுகளில் அதிகளவு ஈரப்பதன் காரணமாக யன்னல் கண்ணாடிகளில் நீர்ப்படிவு ஏற்படுவதை அவதானித்திருக்கலாம். குறிப்பாகத் திறக்கக்கூடிய யன்னல் பகுதிக்கு உட்பக்கமாகப் போடப்பட்டிருக்கும் Net அடியிலேயே அதிகளவு நீர்ப்படிமானம் ஏற்படுவது, வழிந்தோடுவது, பங்கசு பிடிப்பது போன்ற பல இடர்களைக் காணக்கூடியதாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்பவர்கள் முன்கூட்டியே அத்தகைய Net-களை எடுத்து வைத்துவிட்டு மீண்டும் கோடைகாலத்தில் போடலாம். இத்தகைய Net-கள் காற்றோட்டத்திற்கு இடையூறு செய்வதாலேயே அத்தகைய இடர்கள் ஏற்படுகின்றன. ஆனால், உயர்ந்த மாடிகளில் இருப்பவர்கள் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற் கொண்டு அதனைத் தவிர்த்துவிட வேண்டும்.

Smoke Detectors + Carbon Monoxide Detectors என்பன உரிய முறையில் வேலை செய்கின்றனவா? என்பதனை உறுதிசெய்தல் வேண்டும். ஏனெனில் குளிர்காலத்தில் இவற்றின் தொழிற்பாடு அதிகளவில் தேவைப்படும்.

முக்கிய குறிப்பு:

எரிபொருளில் இயங்கும் புல் வெட்டும் இயந்திரத்தை வைத்திருப்பவர்கள் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விடயம். அதனை எவ்வாறு குளிர்காலத்தில் பாதுகாப்பது என்பதே.

இதைப் பலரும் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. புல் வெட்டும் இயந்திரத்தினை உரியமுறைப்படி பாதுகாக்கா விட்டால் வரப்போகும் கோடைகாலத்தில் அதனை முதற்தரம் இயங்கவைக்கப் படாதபாடு படவேண்டியிருக்கும். அல்லது அதனைத் திருத்துபவர்களிடம் எடுத்துச் சென்று பணம்



செலவு செய்து குணப்படுத்திய பின்னர் பாவிக்கவேண்டியிருக்கும். இதற்கான மாற்று வழி மிக இலகுவானது.

இந்த வருடம் கடைசியாகப் புல் வெட்டிய பின்னர் இயந்திரத்திலுள்ள கொள்கலனில் இருக்கும் பெற்றோலை (gas) முற்றாக எடுத்து விடவேண்டும்.

இயந்திரத்தை ஒரு பக்கமாகச் சரித்து ஒரு பழைய மாஜரின் பெட்டியில் பெற்றோலை மிக இலகுவாக எடுத்து விடலாம். அதன் பின்னர் அவ்வியந்திரத்தை ஸ்டார்ட் செய்து தானாக அது நிற்கும் வரை இயங்க விடவும். அதாவது 'காபோரேற்றரில்' இருக்கும் பெற்றோல் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். அதன் பின்னர் சாதாரணமாக ஒரு இடத்தில் பனியின் தாக்கம் நேரடியாக இல்லாத வாறு பாதுகாத்து விடலாம். அடுத்த வருடம் பெற்றோலை நிரப்பிய பின்னர் வழமை போல 3 தடவை 'பம்' செய்துவிட்டு ஸ்டார்ட் செய்தால் இயந்திரம் மிக இலகுவாகத் தயாராகிவிடும்.



velasubramaniam@thaiveedu.com

சொத்துகளை அடுத்த தலைமுறைக்குத் தருவது



- செந்தூரன் புனிதவேல்

உங்கள் சொத்துக்களைப் பற்றி நீங்கள் அறிய வேண்டியது:

உங்களின் இறுதிக் காலத்தில் நீங்கள் வைத்திருக்கும் அனைத்துச் செல்வங்களின் தொகுப்பு சொத்து எனப்படும். இதில் காணி, வீடு, வங்கிச் சேமிப்பு, முதலீடுகள், தனிப்பட்ட உடைமைகள் மற்றும் வியாபார முதலீடுகள் அனைத்தும் அடங்கும். அதேவேளை, உங்கள் கொடுப்பனவுகள் மன்றும் கடன்களும்கூட இதில் உள்ளடங்கும். பலரும் தங்கள் சொத்தின் பெறுமதியை குறைவாக எடை போடுவதும் சில வற்றைத் தவறவிடுவதும் பொதுவாக இடம்பெறுவதுண்டு. உதாரணமாக ஆயுள் காப்புறுதியினால் வரும் தொகையைக் கவனியாதிருப்பர். இச்சிறுசிறு தவறுகளைத் தவிர்ப்பதற்கு உங்கள் சொத்துகளின் பட்டியலை ஆவணப்படுத்துங்கள்.

அந்த பட்டியலில்...

- காணி, வீடு, வளவுகள், வாடகை வீடுகள்.
- வங்கிக் கணக்குகள், முதலீட்டுக் கணக்குகள், ஓய்வூதிய வரவுகள்.
- காப்புறுதிகள் (ஆயுள், ஆரோக்கியம், நீண்டகால பராமரிப்புகள்).
- தனிப்பட்ட ஐஸ்வரியங்கள் (நகைகள், வாகனங்கள் மற்றும் பெறுமதியான பொருட்கள்).
- ஒன்லைன் கணக்குகள், கிரிப்டோ கரண்சிகள் ஆகியன.

உங்களுக்கு உங்கள் சொத்தின் மதிப்புத் தெரிந்தால்த்தான் அதனை முறையாக அடுத்த தலைமுறைக்குத் கைமாற்றமு-டியும்.

சட்டப்படி செல்லுபடியாகும் உயில் எழுதுங்கள்:

சொத்துக்களை மாற்றம் செய்வதில் உயில் மிக முக்கியமான பங்கு வகிக்கும். அது யார் பெறுவது, அதிலும் சிறுவர்கள் என்றால் அவருக்கு பாதுகாவலர் என்பது தரப்படுவதுடன் எவருக்கு எவ்வளவு கொடுக்கப்படும் எனவும் குறிக்கப்படும். அந்த உயிலில் எப்படி கடன்கள் அடைக்கப்படும் எனவும் குறிக்கப்பட வேண்டும். உயில் இல்லாத வேளையில் நாட்டின தும் மாகாணத்தினதும் சட்டதிட்டங்களுக்கு அமையப் பிரித் துக் கொடுக்கப்படும். இது உங்கள் விருப்பத்திற்கு ஒவ்வாதி ருக்கலாம்.

உயிலில் முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயங்கள்:

- உங்களுக்கு நம்பிக்கையும் செயலாற்றும் திறனும் கொண்ட ஒரு நிறைவேற்றுநரைத் (Executor) தேர்ந்து எடுங்கள்.
- உங்கள் செல்வத்தை யாருக்கு, எதை, எப்படிக் கொடுப்பது என்பதை தெளிவாகத் தேர்ந்தெடுங்கள். அல்லாவிடில் உங்கள் வாரிசுகளுக்கிடையில் தகராறுக ளும் சர்ச்சைகளுக்கும் ஏற்படும்.
- உயில் எழுதிய பின் ஏதாவது வாழ்க்கையில் கணிசமாக

மாற்றம் ஏற்படின், உயிலைத் திருத்தி, திரும்ப எழுதுங்கள்.

- யாருக்கு எதனைக் கொடுப்பது என்பதில் மிக்க கவனமாகச் செயற்படுங்கள்.

நெடுநாள் வாழ்வதால் வரும் செலவுகள், வைத்தியச் செலவுகள், கடன்கள் போன்றவற்றையும் கவனத்தில் கொள்ளுங்கள். இவை பெரும் தொகையாக தேவைப்படுவதற்கான சாத்தியக் கூறுண்டு. இந்த பொறுப்புகளுக்கு ஈடுகொடுக்காவிட்டால் அவை உயிலில் உள்ள தொகையில் இருந்துதான் கழிக்கப்படும் என்பதனை மறத்தலாகாது.

இத்தகைய செலவுகளை ஈடு செய்வதற்கு பின்வரும் செயற்பாடுகள் அனுசரனையாக இருக்கும்.

- நெடுங்கால பராமரிப்பு காப்புறுதி, உங்கள் சொத்திற்கு அரனாக வந்துதவும்.
- நியமிக்கப்பட்ட கணக்கில் வைப்பில் இருக்கும் பணம், இறுதிக்கால வைத்திய சேவைக்கு அனுசரனையாக இருக்கும்.
- உங்கள் கடன்களுக்கும், இறுதிச் சடங்குகளுக்கு வேண்டிய தொகைக்கும் ஆயுட் காப்புறுதி செய்து வைக்கலாம்.
- உங்கள் நிறைவேற்றுநருடைய அனுசரணை நிலுவையிலுள்ள கடன்களையும் கொடுப்பனவுகளையும் தீர்த்து வையுங்கள்.

முன் எச்சரிக்கையுடன் தீர்வுகளை கண்டுவைப்பது உங்கள் வாரிசுகளுக்கு எதிர்பாராத அதிர்ச்சிகளை விட்டுச் செல்லாது.

Trust - நம்பிக்கை பொறுப்பு ஆவணம் எப்போ எப்படி உங்கள் ஐஸ்வரியம் பகிரும் என்பதை தீர்மானிக்க உறுதுணையாக இருக்கும். இப்படி செய்வது உங்கள் சொத்து வரி, மற்றும் கடன் கொடுத்தவர்கள் முதல் பகிர்வது வரை அனைத்திலும் உறுதுணையாக இருக்கும்.

உதாரணமாக:

- மாற்றக்கூடிய நம்பிக்கைப் பொறுப்பு ஆவணம், உங்கள் இறுதிவரை சொத்தை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்து விட்டு, பின்னர் குறை இன்றி கொடுத்துச் செல்லலாம்.
- மாற்ற முடியாத நம்பிக்கை பொறுப்பு ஆவணம் உங்கள் உடமைகளைக் கடன்காரரிடம் இருந்து காக்க உதவும்.
- விசேட தேவைக்கான நம்பிக்கை பொறுப்பு ஆவணம் இருப்பின், மாற்றுத் திறனாளிகள் இருப்பின் அவர்கள் அரசாங்க அனுசரனைகள் பெறுவதில் ஏதும் தடைவராது காக்க உதவும்.
- எண்ணிமமுறை சொத்து எனும் Digital Account-ஐயும், பாரம்பரியத்துக்கு மாறுபட்ட Non Traditonal Assets-இலும் கவனத்தைச் செலுத்துவது அவசியம்.

இன்றைய காலகட்டத்தில் டிஜிட்டல் கணக்குகள் அதாவது Online வணிகத்தில் பலரும் ஈடுபடுவதால் அவற்றிலும் அக்கறை செலுத்தத் தவறாதீர்கள்.

அதனை எப்படி செய்வதெனில்...

- அத்தகவலை ஒரு வெற்றுத்தாளில் குறித்து வைத்திருப்பது.
- Password எனும் கடவுச்சொல் அவசர தேவைக்காக வைத்திருத்தல்.
- எண்ணிமமுறைச் சொத்துக்களை உயிலில் அல்லது பொறுப்பாவனத்தில் சேர்த்து வைத்திருங்கள்.
- இயன்ற அளவு வரிக்கொடுப்பனவும் மற்றும் சட்ட செலவுகளைக் குறைக்க முயலுங்கள்.

பல வேளைகளில் செல்வம் கைமாறும் வேளைகளில், பல மாதங்கள் தடைப்படுவதுடன் வீண் செலவுகளும் ஏற்படுவதுண்டு இவற்றை தவிர்ப்பதற்கு...

- உங்கள் உடைமைகளுக்கு கூட்டு உரிமையும், ஒருவர் இல்லாதவேளை மற்றவர்க்கு கையளிக்கப்படவும் வேண்டும்.
- வாழும் காலத்திலேயே பெரும் பகுதியை அன்பளிப்பாக வாரிசுகளுக்கு கொடுத்து விடுங்கள்.
- இயன்ற அளவு வரி கொடுப்பதைக் குறைத்து அன்பளிப்பைச் செய்யுங்கள்.

உங்கள் விருப்பங்களைத் தெளிவாகத் தெரியப்படுத்துங்கள். எவ்வளவு சட்டதிட்டங்களுக்கு அமையப்பட உயில் எழுதப் பட்டாலும், குடும்ப அங்கத்தவரிடையே உட்பூசல் ஏற்படின், அனைத்தும் சிதைந்து விடும்.

எனவே,, உங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் தெளிவான, உண்மைக்குட்பட்டு கலந்து ரையாடலைச் செய்யுங்கள்.

உதாரணத்திற்கு:

- குடும்ப ஒன்றுகூடலை ஏற்படுத்தி உங்கள் முடிவுகளை விளக்குங்கள்.
- உங்கள் உயிலுடன் உங்கள் விருப்பங்களைத் தெரிவித்து கடிதம் ஒன்றில் விளக்கம் தாருங்கள்.
- உடனடியாக உங்கள் மரணத்திற்கு முன் சுயமாகச் சிந்திக்கு வல்லமை இல்லாதுபோது, உங்களுக்காகத் தீர்மானம் எடுப்பதற்கு ஒருவரை நியமியுங்கள்.
- நீங்கள் எழுதிய உயிலை இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்து வேண்டிய மாற்றங்களைச் செய்யுங்கள்.

இறுதியாக, உயில் எழுதுவது உங்கள் செல்வத்தை அடுத்த தலை முறைக்கு கொடுப்பது மட்டும் அல்ல, அவர்கள் எதிர் காலத்தை நெறிப்படுத்துவதுமாகும். இது உங்கள் அடுத்த தலைமுறைக்கு கொடுக்கும் இறுதிக் கொடுப்பனவு. மரணம் தவிர்க்க முடியாத ஒரு விடயம். ஆனால், நினைவுகள் தொடரும். எனவே சிறப்பாகச் செயல்பட்டு அவர்கள் உள்ளங்களில் அழியாத கோலங்களாக நிரந்தரம் வாழுங்கள்.



senthuran.p@thaiveedu.com



அஞ்சல் எந்தவொரு மொழிக்கும் விழியாகும்

– சி. நற்குணலிங்கம்

மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் ஒற்றர்களின் மூலமாகத் தகவல்கள் பரிமாறப்பட்டன. தமிழகத்தைப் பொறுத்தவரை சங்க இலக்கிய காலங்களிலேயே மயில்விடுதூது, கிளிவிடுதூது, புறாவிடுதூது என்றெல்லாம் புகழப்பட்டவை நவீன அஞ்சலின் அத்திவாரம் என்பது பெருமைக்குரியது மட்டுமல்ல, மறக்கவும் கூடாதது. உலக அஞ்சல்தின வரலாறு ரோமில் அகஸ்டஸ்சீசரின் காலத்தில் நிறுவப்பட்டதாக அறியப்படுகிறது. இவ்வாறு நிறுவப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட வரலாறு மிக நீண்டது. பொ.ஆ.பி. 1712 தொடக்கம் ஸ்கொட்லாந்தில் இயங்கிவரும் பழைமையான தபால் அலுவலகம், அஞ்சல் வரலாற்றின் பழைமையினையும் செழுமையினையும் பறைசாற்றுகின்றது.

அஞ்சல் சேவைகளின் தோற்றம் பண்டைய நாகரிகங்களுக்கு முந்தையது. பொ.ஆ.மு. 2400-இல் பெர்சியர்கள் ஒரு திறமையான தகவல் தொடர்பு அமைப்பை உருவாக்கினர்.

> ***“அஞ்சல் துறையில் பலவகையான அஞ்சல்களும் குழப்பமின்றி பிரிக்கப்பட்டு விரைவாக அனுப்புவதற்கு வசதியாக அஞ்சல் குறியீட்டு எண்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் குறியீட்டு எண் திட்டம் முதன்முதலில் 1972-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.”***

அவர்கள்தான் கூரியர்களைப் பயன்படுத்தியுள்ளார்கள். இதேபோல ரோமானியர்கள் தங்கள் பேரரசு முழுவதும் தகவல் தொடர்பு வசதிக்காக ஒரு பரந்த வலையமைப்பை நிறுவினர். இருப்பினும் 19-ஆம் நூற்றாண்டில் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் அதிகாரபூர்வ அஞ்சல் சேவைகளை நிறுவியதன் மூலம் நவீன அஞ்சல் அமைப்பு வடிவம் பெறத் தொடங்கியது. அங்கு 1840-இல் பென்னிபிளாக் முத்திரை அறிமுகமானது. இது அஞ்சல் விநியோகத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

அஞ்சல் வரலாறு என்பது அஞ்சல் முறைமைகள், செயற்படும் முறை குறித்து ஆய்வு செய்தலையும் அவ்வரலாற்றை விளக்கும் கடித உறைகள், அஞ்சல் தொடர்பான பிற பொருட்கள் போன்றவற்றை சேகரிப்பதையும் குறிக்கும். அஞ்சல் என்பது அஞ்சல் முறைமையின் ஊடாக அனுப்பப்படும் எதுவும் பொதுவாக அஞ்சல் எனப்படுகிறது. அஞ்சல் சேவை அரசுகளினால் நடத்தப்படுவதாக அல்லது தனியாரினால் நடத்தப்படுவதாக இருக்கலாம். அஞ்சல்தலை அல்லது தபால்தலை என்பது அஞ்சல் சேவைக்கு முன்கட்டணம் செலுத்தப்பட்டதற்குச் சான்றாக கொடுக்கப்படுவது.

அஞ்சல் எண் என்பது அஞ்சல் குறியீட்டு எண் அல்லது அஞ்சலகச் சுட்டு எண் (PIN) அல்லது பின்கோடு என அழைக்கப்படும். ராப்சன்லோவே என்பவரே 1930-ஆம் ஆண்டில் முதன்முதலாக இவ்விடயம் குறித்த ஒழுங்கான ஆய்வொன்றை செய்தவராவார். அஞ்சலகம் (POST OFFICE) என்பது அஞ்சல்களை (தபால்) போடுதல், வாங்குதல், பிரித்தல், கையாளுதல், அனுப்புதல், வழங்குதல் ஆகிய பணிகளைச்



செய்யும் அஞ்சல் அமைப்பின் ஒரு பகுதியாக விளங்கும் ஓர் இடமாகும்.

அஞ்சல் துறையில் பலவகையான அஞ்சல்களும் குழப்பமின்றி பிரிக்கப்பட்டு விரைவாக அனுப்புவதற்கு வசதியாக அஞ்சல் குறியீட்டு எண்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் குறியீட்டு எண் திட்டம் முதன்முதலில் 1972-ஆம்

ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் ஆறு இலக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதில் முதல் இலக்கம் மண்டலத்தையும், இரண்டாவது இலக்கம் துணை மண்டலத்தையும், மூன்றாவது இலக்கம் அந்த அஞ்சல் பிரிப்பக மாவட்டத்தையும் குறிக்கிறது. கடைசி மூன்று இலக்கங்கள் அந்த அஞ்சல் வட்டத்தின் தபால் நிலையத்தைக் குறிக்கும்.

இன்றைய நாளில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் உலகின் மூலையில் எங்கு இருந்தாலும் இணைய செயலிகளின் வழியே சில நொடிகளில் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளலாம். இதுவே சில ஆண்டுகளுக்கு முன் ஒரு தகவலை உறவினருக்குத் தெரிவிக்கவேண்டும் எனில் கடிதம் எழுதி தபாலில் அனுப்பி வைக்கப்படும். இரண்டு, மூன்று நாட்கள் கழித்தே அந்தச் செய்தி உரியவர்களின் கைகளில் சேரும். இப்படியாக நட்பு, காதல், பாசம், கோபம் என அனைத்து விதமான உணர்வுகளும் அஞ்சல் கடிதங்கள் வழியே பகிர்ந்து கொள்ளப்பட்டன. இவ்வாறு முக்கியத்துவம் பெற்ற அஞ்சல் சேவையினை ஒரு தினம் குறித்து கொண்டாடாமல் விடுவது ஒரு வரலாற்று தவறாகும்.

உலக அஞ்சல் தினம் ஒக்ரோபர் 9–இல் சர்வதேச ரீதியில் நினைவுகொள்ளப்படுகிறது. ஒக்ரோபர் 9, 1874-இல் சுவிற்சலாந்தில் உள்ள பேர்ன் நகரில் சர்வதேச அஞ்சல் ஒன்றியம் நிறுவப்பட்ட தினமே சர்வதேச அஞ்சல் தினமாகக் கொள்ளப்படுகிறது. 1969-ஆம் ஆண்டு யப்பான் டோக்கியோவில் நடந்த அனைத்துலக அஞ்சல் ஒன்றியக் கூட்டத்தில் இந்தத் தினம் குறித்து முடிவெடுத்துக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த முன்மொழிவு அந்த அமைப்பில் உள்ள இந்தியப் பிரதிநிதித் தரப்பின் ஓர் உறுப்பினரான ஆனந்த்மோகன்நரூலா என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டது. சர்வதேச அஞ்சல் ஒன்றியம் (UNIVERSAL POSTAL UNION) 1948-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அமைப்புகளில் ஒன்றாகியது. சர்வதேச அஞ்சல் ஒன்றியம் உலகளாவிய அஞ்சல் சேவைகளை ஊக்கிவிக்கும் மற்றும் ஒருங்கிணைக்கும் ஒரு சர்வதேச அமைப்பாகும். இன்று இது 192 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் ஆண்டுக் கொண்டாட்டத்தில் பங்கேற்கின்றன.

நமது கடிதங்களை, ஆவணங்களை மற்றும் பொருட்களை அனுப்புவதற்குத் தூதுவராகச் செயற்படும் அஞ்சல் சேவையை உலக அஞ்சல்தினம் (WORLD POST DAY) நினைவுகூர்கிறது. இது சமூகங்களை இணைப்பதில் தபால் அலுவலகங்கள் வகிக்கும் முக்கிய பங்கை அங்கீகரிக்கும் நாளாகும். அஞ்சல் சேவையின் முக்கியத்துவத்தையும், மக்களின் அன்றாட வாழ்வில் அஞ்சல் துறையின் பங்களிப்பு பற்றியும் பொதுமக்களிடம் எடுத்துரைப்பது இந்த நாளின் நோக்கமாகும். உலகத்தின் தபால் தொடர்பில் புரட்சியை ஏற்படுத்திய சர்வதேச அஞ்சல் ஒன்றியத்தின் உருவாக்கத்திற்கான நினைவு தினமாகவும் உள்ளது.

முடிவில் உலக அஞ்சல் தினம் என்பது ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகில் அஞ்சல் சேவைகளின் வளமான வரலாற்றையும், முக்கிய பங்கையும் கொண்டாடும் நாளாகும். உலகளாவிய வளர்ச்சிக்கு அஞ்சல் ஊழியர்கள் மற்றும் சேவைகள் செய்த விலைமதிப்பற்ற பங்களிப்புகளை இது நமக்கு நினைவூட்டுகிறது. மேலும் இது பாதுகாப்பான மற்றும் மிகவும் இணைக்கப்பட்ட எதிர்காலத்தை உருவாக்க ஒத்துழைப்பை ஊக்கிவிக்கிறது.

இந்த நாளில் அஞ்சல் அமைப்புகளின் வளமான வரலாறு, அவற்றின் பரிணாமம் மற்றும் இன்றைய டிஜிற்றல் யுகத்தில் அஞ்சலின் பங்களிப்பு ஆகியவற்றைப்பற்றி சிந்திப்பதற்கான நாளாக உள்ளது. உலக அஞ்சல் தினம் என்பது வெறும் கொண்டாட்டம் அல்லாமல் தகவல் தொடர்பு மற்றும் புரிதலை வளர்ப்பதில் அஞ்சல் சேவைகளின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இது ஒரு வாய்ப்பாகவும் உள்ளது. மேலும் இத்தினத்தைக் கொண்டாடும்போது அஞ்சல் சேவைகளின் வரலாற்று முக்கியத்துவத்தையும் உலகின் பழைமையான அஞ்சல் நிலையங்களின் கட்டடக் கலை அற்புதங்களையும் அங்கீகரிக்க இது ஒரு வாய்ப்பாகவும் உள்ளது.

> ***19-ஆம் நூற்றாண்டில் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் அதிகாரபூர்வ அஞ்சல் சேவைகளை நிறுவியதன் மூலம் நவீன அஞ்சல் அமைப்பு வடிவம் பெறத்தொடங்கியது. அங்கு 1840-இல் பென்னிபிளாக் முத்திரை அறிமுகமானது.***





1712 தொடக்கம் ஸ்கொட்லாந்தில் இயங்கிவரும் பழைமையான தபால் அலுவலகம்

உலக அஞ்சல் தினத்தை உலக நாடுகள் பல்வேறு வழி களில் கொண்டாடுகின்றன. புதிய அஞ்சல் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்த அல்லது விளம்பரப்ப டுத்தத் தபால் அலுவலகங்கள் பெரும்பாலும் இந்த சந்தர்ப் பத்தைப் பயன்படுத்துகின்றன. அன்றாட வாழ்வில் அஞ்சல் சேவைகளின் முக்கியத்துவத்தையும் சமூக மற்றும் பொரு ளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கத்தையும் எடுத்து ரைக்க பல நாடுகள் சிறப்பு கண்காட்சிகளை நடத்துகின்றன. சில அஞ்சல் சேவைகள் தங்கள் ஊழியர்களை அவர்களின் சிறந்த சேவைக்காக அடையாளம் கண்டு வெகுமதியளிக்க இந்த நாளை பயன்படுத்துகின்றன.

உலக அஞ்சல் தினத்தின் 2024-ஆம் ஆண்டின் மகுடவாசகமாக 'ஒன்றாக, நம்பிக்கைக்காக; பாது காப்பான மற்றும் இணைக்கப்பட்ட எதிர்காலத்திற்காக ஒத்துழைத்தல்' அமைந்திருந்தது. டிஜிற்றல் அஞ் சல் பிரதேசத்தை உருவாக்க அர சாங்கங்களும் அஞ்சல் சேவை களும் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட் டுக் காட்டுகிறது. இந்த டிஜிற்றல் (DIGITAL) உட்கட்டமைப்பு பல நூற்றாண்டுகளாக கட்டமைக்கப் பட்ட விரிவான இயற்பியல் அஞ்சல் வலையமைப்பை நிறைவு செய்கி றது. எல்லா இடங்களிலும் உள்ள மக்கள் தங்கள் உள்ளூர் தபால் அலுவலகங்கள் மூலம் டிஜிற்றல் பொருளாதாரத்தை அணுக முடியும் என்பதை உறுதிப்படுத்த சர்வதேசஅஞ்சல் ஒன்றியமுடனான ஒத்துழைப்பை இது ஊக்குவிக்கிறது.



பென்னிபிளாக் முத்திரை

உலக அஞ்சல் தின பிரகடனமாக; உலகின் பல்வேறு நாடு களுக்கும் உரிய புவியியல், அரசியல், மதம் போன்ற பல்வேறு எல்லைகளையும், தடைகளையும் தாண்டி எமது மக்களை முழு உலகிற்கும் இணைக்கின்றோம். மக்கள் அவர்களுக் குரிய பிரத்தியேகமானதும் மிகப் பெறுமதி வாய்ந்ததுமான தகவல்களையும், பொருட்களையும் எம்மிடம் ஒப்படைப்பது அவற்றைப் பாதுகாத்து மிக வேகமாகவும், மிகக் கவனத்து டனும் அதன் உரிமையாளர்களுக்கு ஒப்படைப்பார்கள் என்ற எம்மீதுள்ள பெரு நம்பிக்கை என்பதை நாம் அறிந்துள்ள தோடு அவர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை உயர் செயற்திறமையுடனும், நேர்மையுடனும், பாதுகாப்புடனும் இரகசிய தன்மையைப் பேணி அவர்களது தகவல்களையும், பொருட்களையும், உரிமைகளையும் ஒப்படைப்பதற்கு நட வடிக்கை எடுப்பதாகவும் நேற்றைய தினத்தைவிட நன்றாக நாளைய தினத்திலும் திறமையான சேவையை மக்களுக்கு வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோமாக.

தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒருவரை தொடர்பு கொள்வதற்கு இன்று இ-மெயில், இன்ரநெற், அலைபேசி என பல தொழில் நுட்ப வசதிகள் வந்துவிட்டன. இதற்கு முன் தகவல் பரிமாற் றத்திற்கு தபால் சேவை மட்டுமே பயன்படுத்தப்பட்டது. தற்போது தபால் எழுதும் பழக்கம் இளைஞர்களுக்குக் குறைந்து வருகிறது. இருப்பினும் உலகில் தபால்துறை ஏதாவது ஒரு வழியில் மக்களுக்கு பயன்படுகிறது. உலகளா வியரீதியில் 650000-இக்கு மேற்பட்ட அலுவலகங்கள் மற்றும் 5.3 மில்லியனுக்கு அதிகமான ஊழியர்களை உள்ள டக்கிய வலையமைப்பு மற்றும் பல அரசாங்கங்களின் பொதுச்சேவை ஆணை ஆகியவற்றுடன் யாவருக்கும் எங்கும் சேவைகளை வழங்கும் திறனில் அஞ்சல்சேவை இணையற்றதாக உள்ளது.

தற்போதய சூழலில் டிஜிற்றல் தகவல் தொடர்பு தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துவதால் பாரம்பரிய அஞ் சல் சேவைகள் பாரிய சவால்களை எதிர்கொள்கின்றன. கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் டிஜிற்றல் இணைப்பு குறைவாக இருக்கிறது. எனவே இவ்வாறான இடங்களில் அஞ்சல் சேவைகள் பெரும்பாலும் தகவல் தொடர்புக்கான முதன்மை வழியாகவே இருக்கிறது.

அஞ்சல் எனும் தபால் சேவை நாடு, இனம், மதம், மொழி என்ற எண்ணற்ற வேறுபாடுகளைக் களைந்து இதயங்களை இணைக்கும் ஒப்பற்ற சேவையாக உள் ளது. அவரவர் பண்பாடு, கலாசாரத்திற்கு ஏற்ப மொழி களைச் சுமந்து திசைகள்தோறும் பயணிக்கும் கடிதங்கள் எந்த ஒரு மொழிக்கும் விழியாக இருக்கிறது என்பது அறிஞர் களின் கூற்று. இன்றைய செய்தி நாளைய வரலாறு என் பார்கள். இன்றைய தகவல்களும்கூட நாளைய சமுதாயத் திற்கான வரலாறாக மாறும் என்ற நம்பிக்கையோடு மீண்டும் கரங்களில் எழுதுகோல் தாங்கி கடிதங்களைத் தீட்டுவோம். இதன்மூலம் மொழிக்கான விடிவெள்ளியாக இருந்து அதற்கு ஒளியூட்ட இனிய நாளில் உறுதியேற்க வேண்டும் என்கின் றனர் காலம் கடந்தும் கடிதங்களை நேசிக்கும் எம்மவர்கள். எனவே உலக அஞ்சல் தினத்தை நாம் எல்லோரும் கொண் டாடுவோமாக.



natkunalingam@thaiveedu.com

தீண்டாமையின் கொடிய முகங்கள்

நெல்லை ஜெயசிங்

இந்தியா சுதந்திரம் அடைந்த 79-வது ஆண்டை, இந்திய அரசாங்கம் கொண்டாடி வருகிறது. உலகில் மிகப்பெரிய சனநாயக நாடு இந்தியா. பொருளாதாரத்தில் பிரிட்டனை பின்னுக்குத் தள்ளி, நான்காவது இடத்தையும் பிடித்து விட்டோம் என்றும் கூறப்படுகிறது. அதே நேரம் வறிய மக்களின் வறுமை வெளியில் தெரியாதிருக்க, அதனை திரைச்சீலைக்குப் பின்னால் மறைத்து வைத்திருக் கிறோம். இந்தியாவின் இராணுவ வலிமையைப் பார்த்து உலக நாடுகள் அதிசயித் ததாக நமது பிரதமர் கூறிவருகிறார். விண்வெளியிலும் சாதனை நிழ்த்தி வருகிறோம். ஆனால் இவை எதுவும், இந்த சமூகம், சமத்துவத்தை நோக்கி நகர உதவவில்லை.

கல்வி, பொருளாதாரம், மருத்துவம், தொழில் வளர்ச்சி என பல்வேறு துறைகளில், முதன்மை மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. சமூக ரீதியாக உலகிற்கு வழி காட்டுவதாகப் பெருமைப்பட்டுக்கொள்ளும் தமிழ் நாட்டில், சாதியத் தீண்டாமை தொடர்ந்துகொண்டே வருகிறது. அது குறைந்ததாகத் தெரியவில்லை. சில சமூக மக்கள், பிறப்பு முதல் இறப்பு வரை இதன் கொடுமைகளை அனுபவித் துக்கொண்டு இருக்கின்றனர் என்பது, மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண் மையாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என ஓங்கி ஒலித்த நாட்டில், சமத்துவம் தொலைந்து போய்விட்டது. வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் சாதிய வன்மம் வளர்ந்துகொண்டு வருகிறது. குறிப்பிட்ட சில சமூகத்தவர்கள் மட்டுமே காலம் காலமாக இழி நிலைக்கு ஆளாகி வருகின்றனர்.



தீண்டாமையின் வடிவங்கள்:

- சமத்துவம் இல்லா இச்சமூகத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்படுபவர்கள் பல இடங்களில் சமமாக மதித்து நடத்தப்படுவதில்லை.
- கிராமப்புற ஊராட்சி மன்ற பட்டியலினத் தலைவர்களில் பலருக்கு, உரிய இருக்கைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. தரையில் உட்கார வைக்கப்படுகிறார்கள்.
- ஆதிக்க சாதியினரின் ஆதிக்கம் உள்ள பாடசாலைகளில், குறிப்பிட்ட சமூக மாணவர்கள் விரும்பிய இருக்கையில் அமரும் உரிமை மறுக்கப்படுகின்றது.
- கை மணிக்கட்டில் சாதிக் கயிறு கட்டி, தங்களை மேலான வர்களாகக் காட்டிக்கொண்டு, குறிப்பிட்ட மாணவர்களை ஒதுக்கி வைப்பது நடைபெறுகிறது.
- சாதி மறுப்புத் திருமணம் செய்தவர்கள், சாதி வெறியர் களால் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள்.
- சாதி மறுப்புத் திருமணம் செய்பவர்கள், நெருங்கிய உறவி னர்களால் கொடூரமாகக் கொல்லப்படுகிறார்கள்.
- அங்கன்வாடி எனப்படும் சிறு குழந்தைகள் பராமரிப்பு மையங்களில், ஒடுக்கப்பட்டோர் சமைப்பதை, உயர் சாதி எனக் கூறிக்கொள்ளும் குழந்தைகள் உண்பதில்லை.
- ஒடுக்கப்பட்ட சமூகத்துப் பணியாளர்கள், அரசு பள்ளி களில் சமைப்பதை உயர் சாதியினர் எனக் கூறிக் கொள்வோர் தடுக்கின்றனர்.
- சத்துணவு பள்ளிகளில் மாணவர்கள் உணவுத் தட்டுகளை வெவ்வேறாக வைக்க வேண்டும் என வற்புறுத்தப்படுகி றார்கள்.
- கிராமப் பொதுக் கிணறுகளில் தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் அள்ள அனுமதிக்கப்படுவதில்லை.
- சில இடங்களில் தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்குத் தனியாகத் தண்ணீர் குழாய்கள் உள்ளன.
- சில இடங்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கான குடிநீர் வசதி அல்லது கிணறு ஊருக்கு ஒதுக்கு புறத்தில் இருக்கும்.
- பல கிராமப்புற தேநீர் கடைகளில் இரட்டைத் தம்ளர் முறை இருப்பதுடன், தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிக் குவளை வைத்திருப்பார்கள்.
- சில தேநீர் கடைகளில், தேநீர் கை தொட்டுக் கொடுப்ப தில்லை. கடைக்காரர் ஓரிடத்தில் வைக்க, தாழ்த்தப்பட் டவர் எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஆதிக்க சமூகத்தவர்கள் வாழும் தெரு வழியாக, தாழ்த் தப்பட்டவர்களின் இறந்த உடல்களைத் தூக்கிக்கொண்டு போவது தடுக்கப்படுகிறது.
- தனித்தனியாக, சமூக வாரியாக இடு காடுகள் பராமரிக்கப் பட்டு வருகின்றன.
- ஆதிக்க சமூகத் தெருக்களில், தாழ்த்தப்பட்டவர்கள் செருப்பு அணிந்து செல்வது தடுக்கப்படுகிறது.
- ஆதிக்க சாதியினர் தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள், தலைப்பாகை, தோளில் துண்டு (சால்வை) அணிந்து செல்ல முடியாது.
- சில பகுதிகளில் இரு சக்கர வாகனத்தில் அமர்ந்து போகவும், சில பகுதிகளில் இரு சக்கர வாகனத்தில் வேகமாகச் செல்லவும் முடியாது.
- பொது சமூகத்தவர்கள் வாழும் கிராம உள்ளாட்சி அமைப் புகளில், தாழ்த்தப்பட்டவர்கள், தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படுவதில்லை.
- அரசின் பலத்த பாதுகாப்புடன் உள்ளாட்சி சபைகளின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர்கள் சுதந்தி ரமாகப் பணிபுரிவது பல வழிகளிலும் தடுக்கப்படுகிறது.
- பலதரப்பட்ட பொதுக் கோயில்களுக்குள் நுழைய, தாழ்த் தப்பட்டவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.
- இந்தியாவில் மிக உயர் பதவியில் (ஜனாதிபதி) இருப்பவர் தாழ்த்தப்பட்டவராக இருப்பின், அவரும் சில கோயி லுக்குள் போக முடியாது.
- சில கோயில்களில் தேர் வடம் பிடித்து இழுக்கத் தாழ்த்தப் பட்டவர்கள், அனுமதிக்கப்படுவதில்லை.
- சில கோயில்களில் தேங்காய் உடைத்து வழிபட அனும திக்கப்படுவதில்லை.
- நகர்ப்புற பெரிய கோயில்களில் தகுதி இருந்தாலும் தாழ்த் தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக ஆக முடியாது.
- சில அர்ச்சகர்கள், தாழ்த்தப்பட்டவர்களின் கை படாமல் திருநீறு, பிரசாதத்தை இலாவகமாகக் கொடுப்பார்கள்.
- மனிதக் கழிவுகளை மனிதனே அள்ளும், கொடும் வேலைக்குத் தாழ்த்தப்பட்டவர்களே நியமனம் ஆகிறார்கள்.
- அனைத்து துப்பரவுப் பணிகளிலும் பெருமளவில், இவர்களே ஈடுபடுத்தப்படுகிறார்கள்.
- அரசின் அறிவிப்புகளை பறை அடித்து மக்களுக்குத் தெரி யப்படுத்துபவர்களும் இவர்களே.
- தாழ்த்தப்பட்டவர்கள் தொட்டால் தீட்டு, பட்டால் தீட்டு என்ற கொடுமை நடக்கின்றன. மற்ற சாதியினரைத் தொடக்கூடாது.
- தங்களை உயர்த்திக் காட்ட, சமத்துவம் இல்லை என்பதை வெளிப்படுத்த, தீண்டாமைச் சுவர் சில இடங்களில் உண்டு.
- சில பகுதிகளில் திருமண மண்டபங்கள் தாழ்த்தப்பட்டவர் களின் திருமணங்களுக்குத் தரப்படுவதில்லை.
- சில பகுதிகளில் வீடு வாடகைக்குத் தருவதில்லை.
- சமூக நிகழ்வுகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுவதில்லை.
- சமமாக அமர்ந்து உணவு உண்ண அனுமதிப்பதில்லை.
- படிப்பிப்பதில் ஆசிரியர்கள், பாரபட்சம் காட்டுவது நடக் கிறது.
- மதம் மாறினாலும் தீண்டாமை பார்க்கப்படுகிறது.
- சில பகுதிகளில் வயதான பெரியவர்களையும் பெயர் சொல்லி அழைப்பார்கள்.
- மரியாதை இல்லாமல் ஆதிக்க சாதியினர் ஒருமையில் அழைப்பார்கள்.
- சில பள்ளிகளில் கழிப்பறைகளைச் சுத்தம் செய்ய வைப்பது நடக்கிறது.
- தாழ்த்தப்பட்டவர்களின் வசிப்பிடங்களை, சேரிக் குடியி ருப்பு என அழைப்பது தொடர்கிறது.
- சமூக ஊடகங்களிலும் அவமானப்படுத்தல் நடைபெறு கிறது.
- உயர் கல்வி நிறுவனங்களில் பாரபட்சம் காட்டப்படுகிறது.
- பணி இடங்களில் பாகுபாடு காட்டப்படுகிறது.
- வேலை வாய்ப்பு மறுக்கப்படுவதும், சாதி பார்த்து வேலைக்கு ஆள் எடுப்பது நிகழ்கிறது.

- தலித் மக்களுக்கு முடி திருத்தம் மறுக்கப்படுகிறது.
- தொழில்நுட்பக் கல்வி வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது.
- தாழ்த்தப்பட்டவர்களின் நீர் (குடிநீர் நிலைகள் அசுத்தப்ப டுத்தப்படுகிறது).
- சில இடங்களில் புத்தாண்டு கேக் வெட்டுவது தடுக்கப்படுகிறது.
- சுடுகாட்டின் தகன மேடையிலும் தீண்டாமை கடைப்பிடிக் கப்படுகிறது.
- சுதந்திர தினத்தில் தலித் பஞ்சாயத்து தலைவர் கொடியேற்ற இயலாத நிலை காணப்படுகிறது.
- பண்ணையார் வீடுகளில் பணிபுரிவோர் மரியாதை குறைவாக நடத்தப்படுகிறார்கள்.
- பொதுப் பாதையில் நடக்க முடியாத நிலை காணப்படுகிறது.
- வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு ஆதிக்க சமூக வீதியில் நடக்க முடியாது.
- தனிமைப்படுத்துவது மற்றும் ஒதுக்கி வைப்பது நடைபெறுகிறது.
- சில பகுதிகளில் ஆடைகளை இஸ்திரி செய்து கொடுக்க மாட்டார்கள்.
- துணிகளைச் சலவை செய்து கொடுக்கமாட்டார்கள்.
- சில சலவை நிலையங்களில் இரட்டை அலமாரி (Cubbord) பயன்படுத்தப்படுகிறது.
- சில சிகை அலங்கார நிலையங்களில் தனி இருக்கை வைக்கப்பட்டிருக்கும்.
- சில தேநீர் கடைகளில் பெஞ்சுகளில்கூட உட்கார முடியாது.
- சில பகுதிகளில், குவளைகளில் தண்ணீர் தராமல் கைகளை ஏந்திக் குடிக்க வைக்கப்படுகிறார்கள்.
- திருவிழாக் காலத்தில் தலித்துக்கள் பட்டாசு வெடிக்க முடியாது.
- துக் குளங்களில் சுதந்திரமாகக் குளிக்க முடியாது.
- சில குளங்களில் தலித்துகளுக்குத் தனிப் படித்துறை பயன்படுத்தப்படுகிறது.
- திருவிழாவின்போது தலித் தெருவுக்குச் சப்பரம் வராது.
- ஆலய மண்டகப்படி தலித்துகளுக்குக் கிடையாது.
- சில கோவில்களில், தலித்துகளின் தாம்பூலத்தைத் தண்ணீர் தெளித்து எடுப்பார்கள்.
- பொது மயான உரிமை கிடையாது.
- பொது மயானத்தில் சாதி வாரி இட ஒதுக்கீடு பேணப்படுகிறது.
- மயானத்திற்குச் செல்ல பொதுப் பாதை மறுக்கப்படுகிறது.
- கிராமப் பொது மேடைகளில் பேச, பாட முடியாது.
- தாழ்த்தப்பட்டவர்கள் உயர்ரக ஆடை அணிவதை ஆதிக்க சாதியினர் விரும்புவதில்லை.
- இறந்த விலங்குகளை அப்புறப்படுத்த கட்டாயப்படுத்தப்ப டுகிறார்கள்.
- மயான வேலைகளை செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.
- திருமணங்களில் பொதுப் பந்திகளில் அமர்ந்து உணவு உண்ண முடியாது.
- பொது இடத்தில் தலித் தபால்காரர் நியமனம் எதிர்க்கப்படுகிறது.
- பஞ்சமி நிலங்கள் திருப்பித் தர மறுக்கப்படுகிறது.
- அரசியல் அதிகாரம் தரப்படுவதில்லை.
- குடிசைகள் தீ வைத்து எரிப்பது நடக்கிறது.
- காவல்துறையினர் ஆதிக்க சாதியினர் சர்பாக நடந்து கொள்கிறார்கள்.
- ப்ளாஸ்டிக் டம்ளரில் தேநீர் தருவது பின்பற்றப்படுகிறது.
- சாதி அடிப்படையில் தேர்தலில் போட்டி நடைபெறுகிறது.
- திறமை, தகுதி என்ற போலிக் காரணங்கள் கூறித் தாழ்த் தப்பட்டவர்கள், உயர் நிலை அடைவது தடுக்கப்படுகிறது.
- வேலை வாய்ப்பில் பாகுபாடு, தொழில்நுட்ப, அலுவலக வேலைகளில் மிகக் குறைவான இடம் வழங்கப்படுகிறது.
- தலித் தெரு என கை காட்டுவது தொடர்கிறது.
- பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.
- சாதி அடிப்படையில் அரசியல் கட்சிகள் செயற்படுகிறது.
- ஆசிரியர்கள், சில சமயங்களில் சாதிப் பெயர் குறிப்பிட்டு மாணவர்களை அழைக்கிறார்கள்.
- தலித் மாணவர்கள் மீது அக்கறை காட்டுது இல்லை.
- உயர் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீட்டில் வரும் தலித் மாணவர்கள் இழிவு படுத்தப்படுகிறார்கள்
- சாதி ரீதியாக மாணவர் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன.
- நன்கு படிக்கும் தலித் மாணவர்கள் மீது தாக்குதல் நடத் தப்படுகிறது.
- தலித் அரசியல் பிரதிநிதிகள் சில கிராமங்களுக்குள் அனு மதிக்கப்படுவதில்லை.
- கிராம விளையாட்டுப் போட்டிகளில் சுதந்திரமாகப் பங்குபெற முடியாத நிலை உண்டு.
- ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் மாடுகளை அவிழ்ப்பதில், பிடிப்பதில் பாரபட்சம் காட்டப்படுகிறது.
- மாற்று சமூகத்துக் குழந்தைகளை தொட்டுத் தூக்கிட அனுமதிப்பதில்லை.

இதுபோல நூற்றுக்கும் மேற்பட்ட தீண்டாமை வடிவங்கள் சமூ கத்தில் இன்றும் இருந்து வருகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, பல்வேறு வழிகளில் அடக்கி, ஒடுக்கி, நசுக்கி வைக்கப்பட்ட, விளிம்பு நிலை சமூகம், தற்போது கொஞ்சம் கொஞ்சமாக மேலே வருவதைச் சகித்துக் கொள்ள முடியாத, சாதி வெறி பிடித்த சமூகங்கள் இன்றைக்கும் அவர்களை, சமூக ரீதியாகப் பல்வேறு வழிகளில் இழிவாக நடத்த முயற்சிப்பதைக் காண்கிறோம். இந்தியா சுதந்திரம் பெற்று 79 வருடங்கள் கடந்தும், சமூ கங்கள் இடையே சமத்துவம் இன்மை தொடர்கிறது.

மனிதன் தோன்றும்பொழுது இல்லாத சாதி, சதிகாரர்களின் சதியால், இன்று சமூகங்களைப் பிரித்து நாசம் செய்துகொண் டிருப்பதுடன், நாட்டின் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய தடையாக இருந்து வருகிறது.



jeyasingh@thaiveedu.com

கிரேக்கப் புராணத்தில் பெண்களின் வடிவங்கள்

– குரு அரவிந்தன்





கிரீட் தீவில் ஹெராக்லியன், ரெதிம்னோ, சானியா போன்ற இடங்களில் சில நாட்கள் தங்கியிருந்தோம். சிறந்த வெண் மணற் கடற்கரைகள் இங்கே உண்டு. கிரீட் மக்கள் மிகவும் அன்பானவர்களாகவும், நாகரிக உடை அணிபவர்களாகவும் இருந்தார்கள். இங்கே விவசாயமும் சுற்றுலாத் துறையும் பொருளாதாரத்தில் முக்கிய பங்கை வகிக்கின்றன. இங்குள்ள திராட்சை மற்றும் ஒலிவ் தோப்புகள் குறிப்பிடத்தக்கவை. இதைவிட தோடம்பழம், தேசிக்காய், வாழை மரங்களும் நிறைய உண்டு. வீதியோரங்களில் தோடை மரங்களை அழகிற்காக நட்டுப் பராமரிக்கிறார்கள். இலைகளைவிட தோடம்பழங்கள் அதிகமாகக் காய்த்துக் குலுங்குவதை அங்கே காண முடிந்தது. மந்தை வளர்ப்பு, பால், வெண்ணெய் பொருட்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன.

சானியாவில் இருந்து மத்தியதரைக் கடலில் உள்ள நக்சோஸ் என்ற இன்னுமொரு கிரோக்க தீவுக்குப் பயணித்தோம். விரைவுப் படகு மூலமும் அங்கு செல்ல வசதிகள் உண்டு. ஆனால் சானியாவில் சர்வதேச விமான நிலையம் இருந்ததால், அங்கிருந்து உள்ளூர் விமானத்தில் பயணித்தோம். பயணம் சுமார் ஒரு மணிநேரம் எடுத்தது. நக்சோஸ் தீவு கிரேக்கத்தின் பிராந்திய அலகுகளில் ஒன்றாகும். இது தெற்கு ஏஜியன் பிராந்தியத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றது. இந்தப் பிராந்தியம் ஏஜியன் கடலில் நக்சோஸ், அமோர்கோஸ், டோனோசா, இராக்லியா மற்றும் ஏஜியன் கடலில் உள்ள பல சிறிய தீவுகளைத் தன்னகத்தே கொண்டது.

நக்சோஸ் சைக்லேட்ஸ் தீவுக்கூட்டத்தில் உள்ள மிகப்பெரிய மற்றும் மிகவும் வளமான மத்தியதரைக் கடலால் சூழப்பட்ட தீவாக, அழகிய கடற்கரைகளைக் கொண்டிருக்கின்றது. கலாசாரம் மற்றும் புராதன வரலாறு கொண்ட இடமாக இது இருக்கின்றது. உள்நாட்டில் கிரேக்க ஆட்சிக்காலத்துப் பழங்காலக் கட்டடங்களையும், கோட்டைகளையும், பல இடிபாடுகளையும் காணக்கூடியதாக இருந்தது. இதிலிருந்து நக்சோஸ் வெவ்வேறு வரலாற்று சகாப்தங்களைக் கடந்து சென்றிருப்பதை அறிய முடிந்தது. இங்கு காணப்படும் பல்வேறு தொல்பொருள் கண்டுபிடிப்புகள் ஒரு மேம்பட்ட சமூகத்தின் இருப்பை சுற்றுலாப் பயணிகளுக்கு நிரூபிக்கின்றன.

பல ஆயிரம் ஆண்டுகள் பழமையான பல கண்டுபிடிப்புகளில், கோயில்கள் மற்றும் நக்சோஸின் புகழ்பெற்ற கூரோய், மற்றும் கோராய் வடிவங்கள் உள்ளன. கூரோய் என்பது அழகிய இளைஞர்களின் ஆடையற்ற உருவச் சிலைகளையும், கோராய் என்பது அழகிய இளம் பெண்களின் ஆடையற்ற உருவச் சிலைகளையும் குறிக்கும். பளிங்குக் கற்கள் நக்சோஸில் நிறையக் கிடைப்பதால் பொ.ஆ.மு. ஏழாம் நூற்றாண்டில் இத்தகைய சிலைகள் இங்கு வடிவமைக்கப்பட்டன. பெரும் பிரபுக்களின் விருப்பத்திற்காக அழகிய பெண்களும், ஆண்களும் இத்தகைய உருவச்சிலை அமைப்பதற்கு மாதிரியாக இருந்திருக்கிறார்கள். அக்காலத்து மக்களின் உடலமைப்பை இவை இன்று எமக்கு எடுத்துக் காட்டுவனவாக இருக்கின்றன. கிரேக்க சிற்பக் கலைஞர்கள் எகிப்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் இயற்கையான அளவிலான கல் சிற்பங்களைக் கண்ட பிறகு இதுபோன்ற பளிங்குச் சிற்பங்களை உருவாக்க முயன்றிருக்கலாம்.

நக்சோஸ் தெருக்களிலும் சரி, வீட்டு வாசல்களிலும் சரி நிறையப் பூனைகளையும், புறாக்களையும் காணமுடிந்தது.



வளர்ப்பு நாய்களும் உண்டு. குன்றுகளில் வீடுகள் இருப் பதால் வீடுகளில் வண்டியை விடுவதற்கான வசதிகள் இல்லை. அதனால் வீதியோரங்கள் எப்போதும் வண்டிகளால் நிறைந்திருக்கும். வண்டியை வீதி ஓரங்களில் விட்டுவிட்டு கால்நடையாகத்தான் வீடுகளுக்குச் செல்ல வேண்டும். வீடுக ளுக்குச் செல்ல குன்றுகளில் நிறையவே ஏறி இறங்க வேண்டும்.

நக்சோஸின் ஸ்பிங்க்ஸ் (Sphinxes) என்பது ஸோரா என்ற இடத்தில் நக்சோஸ் நகரமண்டப வாசலில் உள்ள ஏழு அடி உயரமான ஒரு பளிங்குச் சிலை ஆகும். பிரதி எடுக்கப்பட்ட இது ஒரு பெண்ணின் தலையும், பறவையின் சிறகும், சிங் கத்தின் உடலும் கொண்ட புராணகாலத்து உயிரினமாகக் கரு தப்படுகின்றது. பொ.ஆ.மு. 560-ஆம் ஆண்டு பண்டைய கிரேக்கத்தின் மத மையமான டெல்பியில் உள்ள அப்பல்லோ கோவிலுக்கு அடுத்ததாக அசல் ஸ்பிங்க்ஸ் சிலை அமைக் கப்பட்டுள்ளது. 1893-ஆம் ஆண்டு இது கண்டெடுக்கப்பட்டது. அதன் பின் இதே போன்ற பல சிலைகள் கண்டெடுக்கப்பட்டி ருக்கின்றன. பொ.ஆ.மு. 6-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் எழுந்த அசோகரின் சின்னமும் கிரேக்கரின் இந்தச் சின் னத்தைப் பின்பற்றி எழுந்திருக்கலாம் என ஆய்வாளர் கருது கின்றனர்.

கிரேக்க புராணங்களின்படி, ஜீயஸ் மலை என்று அழைக்கப் படும் ஜாஸ் மலை, பண்டைய கிரேக்கக் கடவுளான ஜீயஸ் (Zeus) தனது குழந்தைப் பருவத்தைக் கழித்த இடம் என்று சொல்கிறார்கள். மலையின் உச்சிக்கு ஏறும்போது உள்ள சரி வுகளில் ஜீயஸ் பிறந்த இந்தக் குகையைக் காணமுடியும். இதைவிட நக்சோஸ் தீவின் முக்கியமான நினைவுச் சின்னமாக மிகப்பெரிய பளிங்குப் போர்டாரா என்று அழைக் கப்படுகின்ற கட்டி முடிக்கப்படாத, பழங்கால கோவிலுக்கான வாயில் கட்டடம் ஒன்று இருக்கின்றது. இது அப்பல்லோ கடவு ளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட புராண காலத்துக் கட்டடமாகும். நக்சோஸ் துறைமுகத்தின் நுழைவாயிலுக்கு அருகே உள்ள பலாட்டியா என்ற ஒரு சிறிய தீவில் இது அமைந்திருக்கிறது. இங்கிருந்து சூரிய அஸ்தமனத்தை முழுமையாகப் பார்ப்பதற் காகப் பலர் இங்கு வருகிறார்கள்.

இங்கே இடிபாடுகளைக் கொண்ட பல கோட்டை, அரண்மனை களைக் காணமுடியும். இவை தீவின் வெனிஸ் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகின்றன. மேலும் இங்கே உள்ள பசாயோஸ் கோபுரம், சோராவில் உள்ள டெல்லா ரோக்கா-பரோஸி கோபுரம், க்ளெசோஸ்-கிறிஸ்பி கோபுரம், கலனாடோவில் உள்ள பெலோனியா கோபுரம் போன்றவை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களாக இருக்கின்றன.

சிறிய குன்றில் உள்ள போர்டாராவுக்கு அருகில் நின்று பழைய நகரமான நக்சோஸைத் திரும்பி மறுபக்கம் பார்த்தால், சோரா என்று அழைக்கப்படும் தெருக்களையும், வெள்ளையடிக்கப்பட்ட கட்டடங்களையும் காணமுடிகிறது. 'ஏன் கட்டடங்கள் எல்லாம் வெள்ளை நிறமாகவே காணப்படு கின்றன' என்று கேட்டதற்கு அது அவர்களின் பாரம்பரியம் என்று பதில் சொன்னார்கள். ஐரோப்பாவில் கிரேக்க நாகரிகம் பரவிய இடங்களில் இதுபோன்ற வெள்ளை நிறக் கட்ட டங்களை ஆங்காங்கே மலைக்குன்றுகளில் காணமுடியும். அக்காலத்தில் குடியேற்றங்களைச் சுற்றி ஒரு கோட்டைபோல சுற்றுமதில் கட்டி குன்றுகளில் மக்கள் பாதுகாப்பாக இருந் தார்கள்.

நாங்கள் நாக்சோஸ் தீவில் நான்கு நாட்கள் தங்கிவிட்டு, அங் கிருந்து சற்றுத் தள்ளியிருந்த மைக்கோனோஸ் என்ற கிரேக்க தீவுக்குப் பெரிய விரைவு படகில் பயணித்தோம். சுமார் 300 பயணிகள் வரை பயணிக்கக்கூடிய இருக்கைகள், வண்டிகளை ஏற்றிச் செல்லக்கூடிய வசதிகள் அந்தப் படகு களில் இருந்தன. மைக்கோனோஸ் தீவுக்கான பயணம் சுமார் ஒரு மணி நேரம் வரை எடுத்தது. நடுவழியில் இருந்த இன்னுமொரு தீவில் பயணிகளை ஏற்றி இறக்கினார்கள்.

மைக்கோனோஸ் என்பது சைக்லேட்ஸின் ஒரு பகுதியில் உள்ள கிரேக்கத் தீவாகும், இது டினோஸ், சிரோஸ், பரோஸ் மற்றும் நக்சோஸ் தீவுகளுக்கு இடையே இருக்கின்றது. இந்தத் தீவு சுமார் 85 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண் டுள்ளது. சுமார் ஆயிரம் அடி உயரமான குன்றுகள் இருக் கின்றன. அந்தக் குன்றில் இருந்த ஒரு ஹோட்டலில்தான் தங் கியிருந்தோம். எந்த ஒரு குறையும் இல்லாத வசதிகளைக் கொண்ட ஹோட்டலாக, அதன் விருந்தோம்பலும் சிறப்பாக இருந்தது. அங்கிருந்து சுற்றிவர அழகிய காட்சிகளைக் காண முடிந்தது. சூரிய அஸ்தமனத்தைப் பார்க்கச் சிறந்த இடம் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டது போலவே அழகான செவ்வானக் காட்சிகளை அங்கிருந்த மாடியில் இருந்து படம் எடுக்க முடிந்தது. அங்கும் கிரேக்கர்களின் பாரம்பரியமான வெள்ளைநிறக் கட்டடங்களையே காணமு டிந்தது.

இங்கு சுமார் 10,000 மக்கள் வரை நிரந்தரமாக வசிக்கி றார்கள். அதிகமானவர்கள் மேற்கு கடற்கரையில் உள்ள மிகப்பெரிய நகரமான மைக்கோனோஸில் வசிக்கிறார்கள். இந்த நகரத்தை அவர்களின் மொழியில் 'சோரா' என்றும், இதமான காற்று வீசுவதால் 'காற்றின் தீவு' என்றும் அழைக்கி றார்கள். சுற்றுலா முக்கியமான ஒரு தொழிலாக இருப்பதால், மைக்கோனோஸ் அதன் துடிப்பான இரவு வாழ்க்கைக்குப் பெயர் பெற்றது. காதலர்களும், இளம் ஜோடிகளும் நிறையவே இங்கு வருகிறார்கள். இந்த அழகிய இயற்கைக் காட்சிகளைப் படம் எடுக்கத் தொழிற்துறை சார்ந்த படப்பிடிப் பாளர்கள், குறிப்பாக 'மொடலிங்' செய்யும் பலரையும் இங்கு கமெராக்களுடன் காணமுடிந்தது.



1970-களில், நிர்வாணக் கடற்கரைகளில் இது மிகவும் பிரபலமான இடமாக இருந்தது. இதனால் மைக்கோனோஸ் கிரேக்கத்தின் மிகவும் விலையுயர்ந்த தீவுகளில் ஒன்றாக மாறியது. மைக்கோனோஸ் தீவில் உள்ள காற்றாலைகள் 16-ஆம் நூற்றாண்டில் வெனிசியர்களால் மாவு அரைப்பதற்காகக் கட்டப்பட்டவை. இன்று சுற்றுலாப் பயணிகளைக் கவரும் காட்சிப் பொருளாக இருக்கின்றது. 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இவை பயன்பாட்டில் இருந்தன.

மைக்கோனோஸ் நகரத்தில் பார்த்த ஒரு சிலை எனக்கு ஆச்சிரியத்தைத் தந்தது. அந்தச் சிலை எதுவென்றால் குதிரை முகத்தோடு கூடிய பெண்ணின் சிலைதான். இதே போன்றதொரு சிலையைத்தான் இலங்கையில் மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்திலும் பல வருடங்களாகப் பார்த்திருக் கிறேன். அது ஒரு சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியின் உருவச் சிலை என்று சொன்னார்கள். என்னால் அதை நம்பமுடியாமல் இருந்தது. மாவிட்டபுரத்தில் இருப்பது போல கிரேக்கத்திலும் ஒரு சிலையா? எப்படி, இதற்கும் அதற்கும் என்ன தொடர்பு?

மாவிட்புர சிலை பற்றி ஏற்கனவே மகாஜனக் கல்லூரியில் எனது தமிழ் ஆசானாக இருந்த தமிழ் ஒளி த. சண்முகசுந்தரம் அவர்களின் உதவியுடன் விபரங்களைப் பெற்று ஆய்வு செய்திருந்தேன். அக்காலத்தில் குதிரை முகநோய் என்று ஒருவகை நோய் இருந்தது. முகத்தில் கட்டிகள் வந்து முகம் குதிரமுகம்போல வீங்கி நீண்டிருக்குமாம். காங்கேசந்துறைக்குக் கிழக்குப் பக்கமாக இருந்த பலாலி என்ற ஊரில் பிரபலமாகவிருந்த ஆயுள்வேத மூலிகை வைத்தியரிடம் இருந்த மிகப்பழைய நூலில் இருந்து இதுபற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொண்டேன். எழுத்தாளர் குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள்தான் அவரைச் சந்திப்பதற்கு எனக்கு உதவினார். அது உண்மையில் குதிரைமுகமல்ல, குதிரைமுக நோய். அது மூலிகை வைத்தியம் மூலம் மாற்றக்கூடியது என்று வைத்தியர் குறிப்பிட்டார்.

இப்படியான நோயால் பீடிக்கப்பட்ட பிரபலமானவர்களைச் சுட்டிக் காட்டுவதற்கு அக்காலத்து ஓவியர்கள் அவர்களுக்குக் குதிரை முகத்தையே வரைந்துவிட்டார்கள். இதைப் பார்த்து சிற்பிகளும் அப்படியே சிலை வடித்தார்கள். அறிவியல் சார்ந்து சிந்தித்தபோது, மிருகங்களின் முகத்தோடு மனிதர் வாழ்ந்திருக்க முடியாது என்பதால், இது சார்ந்த உண்மைகளைப் புரிந்து கொள்ள முடிந்தது.


மேலை நாடுகளில் ஐபோடேன்ஸ் அல்லது ஹிப்போடேன்ஸ் (Ipotanes or hippotaynes) என்று அழைக்கப்படுவது புராணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் உயிரினங்களாகும். அவை பொதுவாக சென்டார்களிலிருந்து (Mythological creature) மிகவும் வேறுபட்ட அரை-மனித, அரை-குதிரை உயிரினங்களாகச் சித்திரிக்கப்படுகின்றன. சில சமயங்களில் கிரேக்க புராணங்களுடன் தொடர்புடையதாகக் கதைகள் இருந்தாலும், பிந்தைய நாட்களில்தான் இக்கதைகள் தோன்றியதாகத் தெரிகிறது, மேலும் ஒரு திட்டவட்டமான விளக்கம் இல்லாமல், அவை முதலில் ஜான் டி மாண்டேவில்லின் (John de Mandeville) பதின்னான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பயணக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதேபோல, கற்பனை வகையின் நவீன படைப்புகளில் ஐபோடேன்ஸ் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சில சித்திரிப்புகள் மனித உடலும் குதிரையின் தலையும் கொண்ட ஐபோடேன்களைக் காட்டுகின்றன. அக்காலத்தில் எழுத்து வடிவத்தில் சொல்ல முடியாததை இப்படித்தான் உருவ வடிவங்களாகப் பதிவு செய்தார்கள். அங்கேயும் குதிரை முகம் கொண்ட அந்தப் பெண்ணைத் தங்கள் கிரேக்கப் பெண் கடவுளாக அவர்கள் குறிப்பிட்டார்கள்.

உசாத்துணை:

- https://en.wikipedia.org/wiki/Mykonos
- https://en.wikipedia.org/wiki/Naxos_(regional_unit)



kuruaravindan@thaiveedu.com



பெரு நாட்டுக்குச் சிறு பயணம்

– குமார் புனிதவேல்

உலகின் மனித நாகரிகம் தோன்றியதாக ஆறு பிரதேசங்களைக் குறிப்பிடுவர். அவை சுமேரியா, எகிப்து, இந்தியா, சீனா, மெக்சிகோவுடன் பெரு நாட்டையும் குறிப்பிடுவர். இந்த ஆறு பிரதேசங்களில் பூமியின் தென் பாதியில் உள்ள நாடு பெருவாகும். கடந்த ஓகஸ்ட் மாத இறுதியில் சில நண்பர்களுடன் பெரு நாட்டிற்கு சுற்றுலா செல்லும் சந்தர்ப்பம் கிடைத்ததால், அங்கு எனக்குக் கிடைத்த சில அனுபவங்களை, இங்கு பகிர்ந்து கொள்கிறேன். 'பெரு' (Peru) என்பது தென் அமெரிக்காவில் அமைந்துள்ள ஒரு நாடு. வடக்கில் ஈக்வடார் (Ecuador) மற்றும் கொலம்பியா (Colombia), கிழக்கில் பிரேசில், தென்கிழக்கில் பொலிவியா, தெற்கில் சிலி மற்றும் மேற்கில் பசிபிக் பெருங்கடல் ஆகிய நாடுகளால் சூழப்பட்ட இந்நாட்டில் மச்சு பிச்சு முக்கிய சுற்றுலா தலமாக விளங்குகிறது.

பொ.ஆ.மு. 4000 காலகட்டத்தில் மக்கள் பெருவில் வாழ்ந்த அடையாளங்கள் இருப்பினும், பொ.ஆ.பி. 1438-இல் தான் இன்கா (Inca) எனும் பாரிய சாம்ராஜ்யம் தோற்றுவிக்கப் பட்டது. இந்த சாம்ராஜ்யம் வடக்கே மெக்சிகோவிலிருந்து தெற்கே சிலி நாடுவரை பரந்திருந்தது. எனினும், ஐரோப்பாவி லிருந்து இந்நாட்டுக்கு வந்த மக்கள் தம்முடன் கொண்டுவந்த சின்னம்மை நோயால் மக்கள் பேருமளவில் இறந்தனர். இந்த பலவீனத்தைப் பயன்படுத்தி, ஸ்பானிய தளபதி ஃபிரான் சிஸ்கோ பிஸ்ஸாரோ (Francisco Pizarro) என்பவன் பொ.ஆ.பி. 1532-இல் இன்கா சாம்ராஜ்யத்தை அடிமைப்படுத் தினான்.

குஸ்கோவைத் தலை நகராக கொண்டு ஆட்சி செய்த இன்கா அரசர்கள் மச்சு பிச்சு எனும் இடத்தில் ஒரு பெரும்

கோட்டையை அமைத்திருந்தார்கள். 'மச்சு' என்றால் 'பழைய' என்றும், 'பிச்சு' என்றால் 'பிரமிடு' அல்லது 'கூம்பு' என்றும் பொருட்படும். எனவே பழைய கூம்பு போன்ற அமைப்பு என அறியப்படும். மச்சு பிச்சு நகரம் அடர்ந்த காட்டுக்குள், மிக செங்குத்தான மலைகளின் ஊடே அமைந்திருப்பதே ஓர் அதிசயம்.

ஒரு சிறு சமுதாயம் வாழக்கூடிய நகரக் கட்டமைப்போ, தொழில்நுட்பமோ, இயந்திரங்களோ இல்லாத காலத்தில் எப்படி இத்தனை துல்லியமாக இந்நகரத்தை வடிவமைத்தி ருந்தது என்னை வியக்க வைத்தது.

கடல் மட்டத்தில் இருந்து 2,400 மீட்டர் உயரத்தில் அமைந் துள்ள மச்சுபிச்சு கோட்டையை அரசர்கள் தமது வாசஸ்தலமாகக் கொண்டு ஆண்டார்கள். மச்சு பிச்சு நகரம், இரு பகுதிகளைக் கொண்டது. மலையின் மேலடுக்கில் நகரப் பகுதி அமைந்துள்ளது. கீழடுக்கு விவசாயம் மற்றும் தளவாட சேமிப்பு பகுதிகளாக பயன்பட்டுள்ளது. மேலும், கிழக்குப் பகுதி, மேற்குப்பகுதி, தெற்குப்பகுதி நகரங்கள் தனித் தனியாக வடிவமைக்கப்பட்டு அவை, சதுர வடிவ கற்தளங் களால் பிரிக்கப்பட்டுள்ளன. அரண்மனை வாசிகளுக்கான தங் குமிடங்கள், வேலையாட்களுக்கான தங்குமிடங்கள் என அவை நேர்த்தியான முறையில் கட்டப்பட்டிருந்தது.

வடிவமைக்கமைப்பட்ட நீர் மேலாண்மைக் கட்டமைப்பினைக் கண்டு என்னால் அதிசயிக்காமல் இருக்க முடியவில்லை. மலைப்பகுதிகளில் தேயிலைத் தோட்டங்கள் போல பல படிகளாக அமைக்கப்பட்டு இருந்தது. அது துல்லியமான கட் டடக்கலைக்குச் சான்றாகவும் அமைந்திருந்தது. சுமார் ஆயிரம் பேர் வசிக்கக்கூடிய அளவில் நகரம் அமைக்கப்பட் டுள்ளது. அங்கே மக்கள் வசித்ததை அவர்கள் வாழ்ந்த காலத்து ஆவணங்களைக் கொண்டும் அகழ்வாய்வில் கண் டெடுத்த பொருட்களைக் கொண்டும், மச்சு பிச்சு நகரத்தின் சற்றே உருக்குலைந்த கற்கட்டடங்களைக் கொண்டும் என்னால் அறியமுடிந்தது.

மழைக்காலத்தில் வெள்ளத்தால் கட்டடங்கள் அடித்துச் செல்லாமல் இருக்கும் படியாக வடிகால்களையும், விவசாயத் திற்குத் தேவையான நீர் ஆதாரங்களையும் உருவாக்கியி ருப்பது இம்மக்களின் கட்டடக்கலைக்கு சான்றாக இருக்கிறது.

குஸ்கோ தென்கிழக்கு பெருவில் உள்ள ஒரு நகரமாகும், இது ஆண்டிஸ் மலைத்தொடரின் புனித பள்ளத்தாக்கு மற்றும் ஹுவாடனே நதிக்கு அருகில் உள்ளது. 16-ஆம் நூற்றாண்டில் ஸ்பானிஷ் வெற்றி பெறும் வரை இந்த நகரம் இன்கா பேரரசின் தலைநகராக இருந்தது. குஸ்கோவிற்கும் மச்சு பிச்சு-விற்கும் இடைத்தூரம் ஐம்பது மைல் இருக்கும். இவற்றிற்கு இடையில் இன்கா பாதை (Inca trail) உள்ளது. இதில் ஒரு நெடும்வழி நடைபாதையும் காணப்படுகிறது.

மச்சு பிச்சு, பெரு நாட்டினால் 1981-இல் சரித்திரப் புனித இடமாக பிரகடனப்படுத்தப்பட்டது. மச்சு பிச்சு இன்கா காலத்தைய கட்டடக் கலைக்கு சான்றாக விளங்குகிறது. குறிப்பாக உலர் கற்களைக் கொண்டு பளபளப்பாக்கப்பட்டு கட்டப்பட்ட அதன் துல்லியமான சுவர்கள் குறிப்பிடத்தக்கவை. அதன் தனித்துவமான கட்டடக் கலையின் காரணமாக, 1983-



இல் யுனெஸ்கோவால் உலகப் பாரம்பரிய இடமாக அறிவிக் கப்பட்டது.

உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான மச்சு பிச்சு பிரதே சத்தைப் பார்வையிட வருடாந்தம் 1.5 மில்லியன் மக்கள் வருகிறார்கள். மச்சு பிச்சுவைப் பாதுகாக்க, பெரு அரசு வரு கையாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தியுள்ளது. தற்போது, ஒரு நாளைக்கு சுமார் 4,044 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது

பெரு நாட்டின் தற்காலத் தலைநகரம் லீமா ஆகும். இங்கு எனக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. பொதுவாக, ஒரு பிரமிட் என்றால் பெரும் சதுரக் கற்களை அடுக்கி உயரமான கோபுரமும் உள்ளே செல்ல ஒரு வாயிலும் இருக்கும். அந்த பிரமிட்டுக்கு கீழே இறந்த பெருமக்களின் உடல் புதைக்கப் பட்டு இருப்பதுடன் அவர்கள் அடுத்த உலகில் வாழ்வ தற்காகப் பெரும் செல்வமும் வைக்கப்படும். அவர்களுடனும் உடன் கட்டை ஏறுவதற்கு கூடவே சிலரை அனுப்பி வைப் பார்கள்.

லீமாவில் நான் பார்த்த பிரமிடுகள் ஒரு புதிய அனுபவத்தைத் தந்தன. பொதுவாக எகிப்திய பிரமிடுகள் போல் இல்லாமல், லீமாவில் உள்ள பெரும் பிரமிட் செங்கற்களால் கட்டப்பட் டுள்ளது. இது 'Huaca Pucllana' என்று அழைக்கப்படுகிறது. இந்தியா, இலங்கையில் வீடுகள் கட்டவும், வேறு கட்டடங்கள் கட்டவும் பாவித்த சுட்ட களிமண் கற்களை ஒத்த செங்கற் களையே இங்கும் பயன்படுத்தியுள்ளனர். இந்த பிரமிட்டுகள் அழகாகக் கட்டப்பட்டு உள்ளன. ஒரு பெரும் வித்தியாசம்

என்ன என்றால் நாம் செங்கற்களை கிடையாக அடுக்குவோம். லீமாவிலே அவை நிலைக்குத்தாக அடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 2008-ஆம் ஆண்டில் செய்த புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பின் இக்கட்டடங்களின் உண்மையான தேவையை உணரமுடிகிறது. பொ.ஆ.பி 450 முதல் 600 வரை இக்கட்டடங்கள் மதச்சடங்குகளுக்காகப் பாவிக்கப்பட்டதை அறியமுடிகிறது. பின்னர் அன்டியன் மலைப்பிரதேசவாரி இனத்தவரின் இறந்த தலைவர்களின் சடலங்களை அடக்கம் செய்யும் இடமாகப் பாவிக்கப்பட்டது.

2008-இல் புதைக்கப்பட்ட மூன்று உடலங்கள் எடுக்கப்பட்டதுடன் ஒரு உடலுடன் குழந்தையும் சேர்த்துப் புதைக்கப் பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

பெரு பயணத்தின்போது மோரே என்ற இடத்திற்குச் செல்லும் வாய்ப்பும் கிடைத்தது. ரோமாபுரியில் வட்டமான ஒரு திடலில் சுற்றிவர படிக்கட்டுகளில் இரசிகர்கள் இருக்க நடுவில் பல விளையாட்டுகள், மல்யுத்தங்களை எல்லாம் நடத்தியதை யாவரும் அறிவர்கள். அதைப்போல ஒரு மைதானத்தை இங்கு மோரே-யில் கண்டோம். ஒரு பெரும் வேறுபாடு என்னவெனில் நடுவில் உள்ள மைதானத்தின் விட்டம் மிகவும் குறுகியதாய் இருந்தது. ஒருவேளை இங்கு திடலில் குத்துச் சண்டைகள் நிகழ்ந்ததோ என யோசித்தேன்.

மோரே, அன்டீஸ் மலையில் 11,500 அடி உயரத்தில் அமைந்துள்ளது. மேலும் இந்த படிக்கட்டுகளுக்கு நீர்ப்பாசன வசதிகளும் இருந்தது. இந்த படிக்கட்டு தளம் பயிர் வளர்ச்சிக்கான ஆதாரத்தளமாகப் பாவிக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இத்தளம் அமைந்துள்ள உச்சிப்படியிலி ருந்து கீழ்ப்படிக்கு உள்ள சீதோஷன வேறுபாடு 25° பரனைட்டுகளாகும் (சுமார் 14°C).

இன்கா மக்கள் இந்த தனித்துவமான அமைப்பைப் பயன்ப டுத்தி, வெவ்வேறு உயரங்கள் மற்றும் சீதோஷ்ண நிலைகளில் பயிர்களைப் பரிசோதித்து, எந்தெந்தப் பயிர்கள் சிறப்பாக வளரும் என்பதைக் கண்டறிந்தனர்.

இந்த படிக்கட்டு வடிவமைப்பு, மழைநீரைச் சேமித்து, ஒவ்வொரு நிலையிலும் நீர்ப்பாசனத்திற்காகப் பயன்படுத்தும் வகையில் மிகத் துல்லியமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இன்கா மக்களின் விவசாயம் மற்றும் நீர் மேலாண்மைத் தொழில்நுட்பத்திற்குச் சிறந்த சான்றாகும்.

எனது நீர்ப்பாசனத் தொழிலில், இத்தகைய பயிர் வளர்ச்சி, நீர்ப்பாசன ஆராய்ச்சிப் பீடத்தை வேறு எங்கும் காணவில்லை. இது ஒரு புது அனுபவமாகும்.

புவிமத்திய கோட்டிற்கு அண்மையில் உள்ள சிறு தீவான இலங்கையில் வடக்கில் வாழ்ந்த நான், அங்குள்ள உப்ப ளங்கள் பலவற்றைக் கண்டுள்ளேன். இதைவிட இத்தீவில் இன்னும் பல உப்பளங்கள் உள்ளன. இலங்கை உப்பளங் களைக் கண்ட நான், கடல் நீரை காயவைத்து பெறுவதுதான் உப்பு என்ற மாறாத கருத்துடையவனாயிருந்தேன். அண்மைக் காலத்தில் இமாலய உப்பு என்று பெரும் விலையில் இளம் சிவப்பு நிறம் உடைய உப்பைக் கண்டு வியந்ததும் உண்டு. அந்தீஸ் மலைப்பிரதேசத்திலுள்ள பெரு நாட்டில் மறா என்ற இடத்தை அடைந்தவேளை எனக்கு பெரும் வியப்பு காத்தி ருந்தது.

உலகின் நிலப்பரப்புகள் பல மில்லியன் வருடங்களுக்கு முன் ஒன்றோடு ஒன்று மோதியபோது, இமயமலை தோன்றியது போன்றே வெவ்வேறு தட்டுகளுடன் இணைந்து இப்போதுள்ள ஆண்டிஸ் மலை தோன்றியது. இமயமலைப் பகுதி ஒரு காலத்தில் கடலாக இருந்தது என்பது அறிவியல்ரீதியாக உறு திப்படுத்தப்பட்ட உண்மை.

இந்த மலைகளில் பெய்யும் மழைநீர், மலைகளுக்குள் புதைந் துள்ள உப்புப் படிவங்களின் வழியாகக் கரைந்து, உவர் நீராக வெளியேறும் நீரூற்றுகளை உருவாக்குகிறது. இந்த உவர் நீருடன், நிலத்தடியில் உள்ள கனிமங்களும் கலந்து உப்பின் நிறத்தை இளம்பழுப்பு நிறமாக மாற்றுகின்றன. இந்த உவர் நீரானது ஆயிரக்கணக்கான சிறிய குளங்களுக்குள் திருப்பி விடப்பட்டு, சூரிய ஒளியால் நீர் ஆவியாகி, உப்புப் படிகங்களாக மாறுகிறது. மறா உப்பளங்கள் (Maras Salt Mines), இன்கா நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே இந்த மலைப்பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டதற்கான சான்று கள் உள்ளன. இது கடல்நீரிலிருந்து மட்டும் உப்பு உற்பத்தி செய்ய முடியும் என்ற பொதுவான கருத்துக்கு ஒரு விதிவி லக்காக உள்ளது.

பெரு மக்கள் (இன்காக்கள்) எழுத்துகளுக்குப் பதிலாகச் சித் திரங்களையும், கயிற்றில் முடிச்சுகளையும் பயன்படுத்தினர். முடிச்சுகள் கொண்ட இந்த முறை கிபு (Quipu) என அழைக் கப்படுகிறது.

சூரியனை முழுமுதல் தெய்வமாகவும் சந்திரனை சூரியனின் மனைவியாகவும் வழிபட்டதாக அறியப்படுகிறது. சூரியக் கடவுள் இன்டி என அழைக்கப்பட்டார். சந்திரனை, கிலா என்ற பெயரில் வழிபடப்பட்டார்.

அவர்களை அடிமைப்படுத்திய ஐரோப்பியர்கள், இன்கா கோயில்களை அழித்து, தங்கள் வழிபாட்டை அறிமுகப்படுத் தினர்.

எங்களுடைய வழிகாட்டியிடம் அவர்களுடைய அரும்பொருள் காட்சியகத்தில் சூரியனை வழிபட்ட சிலை ஏதும் உளதா எனக்கேட்டேன்? அவர் இல்லை என்று சொன்னார். ஆயினும் இங்குள்ள 'இன்டிகுவாட்டானா' என்ற இடத்தில் சூரியனுக்கு கோயில் கட்டப்பட்டதை அறிந்திருந்தேன். அவர் அவ்வாறு சொன்னதும் மனம் சப்பென்றாகிவிட்டது.

இறுதியில் பெருவின் தலைநகர் லிமாவில் ஆகாய விமானத்திற்காக காத்திருந்த வேளை அங்கு சூரிய தேவனின் படத்தைக் கண்டேன்.



kumar.punithavel@thaiveedu.com

ரூபனின் கலை, இலக்கிய, அரசியல் எழுத்துவெளி:

கலையைப் பேசுதலாக்கும் மொழி!

– இரா. மோகன்ராஜன்

பல தலைப்புகளிலான கட்டுரைகளை ஒருசேர வாசிப்பதும், வாசிக்கத்தருவதும், சிந்தனையின் பரப்பு வெளியை விரித்துச் செல்வதுமான சிவராஜாவின் விவரிப்பு மலைப்பையும், ஆச்சரியத்தையும் தருகிறது. கட்டுரையை இலக்கிய வடிவில் ஒன்றாக இசையாதவர்கள் சிவராஜாவின் 'கலைப் பேச்சு' கட்டுரைகளை இலக்கிய வகைமைக்குள் அடக்குகின்றது என்பதை இனியேனும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தோழர் ரூபன் சிவராஜா கலை இலக்கிய அரசியல் எழுத்து வெளியில் நன்கு அறியப்பட்டவர். நோர்வேயின் புலம்பெயர் தமிழர். நோர்வே மற்றும் அதற்கு வெளியேயான கலை இலக்கியம், அரசியல் தொடர்பாக எழுதி வருபவர். எளிய ஆழமான எழுத்து அவருடையது. இசையின் பாவங்களை நுட்பமாக அவர் எழுத்தில் கொண்டிருப்பதால் அரசியலாகட்டும், கலை இலக்கியங்களாகட்டும் அந்த எழுத்து நடை பேச்சை இசையாக்கிவிடக்கூடியது, எழுத்தை இசையாக்கிவிடக்கூடியது. அவ்வெழுத்து நடை அவருடைய கருத்துக்களை எளிதில் நம்முள் கடத்திவிடக்கூடிய சாத்தியங்களைக் கொண்டுள்ளது.

நோர்வே கலை இலக்கிய வெளியின் குறுக்கு வெட்டுத் தோற்றம்:

மொத்தம் 33 கட்டுரைகளை உள்ளடக்கியிருக்கிறது இத் தொகுப்பு. அதன் தலைப்புகள் அத்தனையும் ஒட்டுமொத்த நோர்வேயின் கலை இலக்கிய, சமூக அரசியல் வெளியின் ஒரு குறுக்குவெட்டுத் தோற்றத்தைக் கொண்டுள்ளது. இக் கலை, இலக்கியப் பிரதிகள் நோர்வேயை மட்டுமல்லாது அதற்கு வெளியேயான உலகையும் சுட்டிநிற்கிறது. உலகோடு பொருத்தும் வகையில் அமைந்திருக்கும் நோர்வேயின் செவ்விலக்கியங்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ் ஆதி இலக்கியங்களின் பேசுபொருளைக் கொண்டவை.

இந்த தொகுப்பும் அதில் பேசப்பட்டிருப்பவையும் அப்படியானவையே. குறிப்பாக நோர்வே கலை இலக்கியச் சூழலில் தவிர்க்க முடியாதவரான ஹென்றிக் இப்சன் குறித்த முதல் கட்டுரை (ஹென்றிக் இப்சனின் விதிச்சிறை) அவரது படைப்பின் தரிசனங்கள் பற்றியதாக இருக்கிறது. 'ஒரு நூற்றாண்டிற்கு முன்பு இருந்த சமூகப் போக்குகள், கட்டமைப்பு முறைகள், மதக் கட்டுப்பாடுகள், மனித உறவு சார்ந்து கட்டமைக்கப்பட்டிருந்த ஒழுங்குகள், பேணப்பட்டிருந்த நடை முறைகள் மீது இப்சன் கேள்விகள் எழுப்பியவர்.

கேள்வி கேட்பதே பாவம், குற்றம், மத நிந்தனை எனக் கருதும் இந்தியச் சூழலுக்கு இப்போதும்கூட இப்சன் போன்றவர்கள் தேசவிரோதிகளாக இருக்ககூடும். மதவிரோதிகளாக இருக்கக்கூடும். அப்படியான நோர்வே சூழலைக் கடந்துவர இப்சன் போன்றவர்களின் எழுத்துகள், முன்திசையாக இருந்திருக்கிறது என்பதை அவரது படைப்புகளை, நாடகப்பிரதிகளை வைத்து சிவராஜா மதிப்பிடுகிறார்.

இப்சனின் பொம்மை வீடு பிரதியில், நூரா தனது கணவனையும், மூன்று பிள்ளைகளையும் விட்டுவிட்டு நள்ளிரவில் வீட்டுக் கதவை அடித்துச் சாத்திவிட்டு வெளியேறுகிறாள். 1879-இல் அதாவது இன்றைக்கு 145 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட பிரதி அது. இப்சனின் நாடகங்களில் மட்டுமல்ல உலகளாவிய பெண்ணியப் படைப்புகளில் இது முதன்மையானது என்றும் அன்றைக்கு அது பெரும் உடைப்பைச் செய்தது என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். 'விதிச்சிறை' படைப்பில் திருமணமான ஒரு ஆண்டிலேயே கணவனைப் பிரிந்து தான் நேசிக்கும் பாதிரியாரிடம் செல்கிறாள் கதை நாயகி. இது அன்றைக்கு பல மட்டங்களில் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டிருக்கிறது. குடும்பம் மற்றும் திருமண அமைப்பு முறைகளில் அது சார்ந்த சமூக ஒழுங்குமுறைகளைப் பேண விரும்புகிற தேவலாயம் உள்ளிட்ட சமூகத்தின் பழமைவாத தரப்புகளிடமிருந்து எழுந்த எதிர்ப்பினை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இப்சனின் காலமானது ஸ்காண்டிநேவியா உட்பட ஐரோப்பிய சமூகம் குடும்ப



அமைப்புசார் கடமைகள், மரபுவாத ஒழுக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த காலம் என்கிறார் சிவராஜா. இப்சனின் பொம்மை வீடு, மற்றும் விதிச்சிறை ஆகியன முக்கியமான பிரதிகளாகும். மேலும் இப்சனின் விதிச்சிறை பிரதியை சிவராஜா அவர்கள் மொழியாக்கம் செய்ய இருப்பதாகவும் பலர் குறிப்பிடுவர்.

பன்மைத்துவம், அடையாளம், சமூக மானிடவியற் பார்வை:

சமூக மானிடவியற் துறைக்கு அப்பால் பல்வேறு துறைகளில் ஆளுமை செலுத்திய தோமஸ் எரிக்சன் குறித்த கட்டுரை இத்தொகுப்பிற்குச் சிறப்பு சேர்ப்பதாக இருக்கிறது. மேலும், ஆய்வு மற்றும் அறிவூட்டல் பணிக்காக அவர் 2019-இல் நோவேயின் கல்வியாளர் விருதினைப் பெற்றுக்கொண்டார். உலகமயமாக்கல், தேசியவாதம், அடையாளம், சமூக அறிவியல், இனத்துவம், பன்மைத்துவம், பல்கலாசார சமூகங்கள், சூழலியல், காலநிலை மாற்றம் போன்ற துறைகளில் அண்மைக்கால ஆய்வுகளைப் பதிவு செய்தவர். 'சிறிய இடங்களில் பெரிய பிரச்சனைகள்' என்ற அவரது பாடநூல், 30 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

21-ஆம் நூற்றாண்டு, பன்முகத்தன்மை மற்றும் இனத்துவப் பன்மைத்துவத்தின் காலமாக இருக்கும் என்பது மிகுந்த சாத்தியமானது. இனத்துவப் பன்மைத்துவம் எல்லா காலங்களிலும் நிலவி வந்த ஒன்றுதான் என்றாலும் சமீப தசாப்தங்களில் மட்டுமே பன்மைத்துவத் தன்மையை அங்கீகரிக்கும் மாதிரிகள் உருவாகியுள்ளதாக எரிக்சன் குறிப்பிடுகிறார். இனத்தவ மற்றும் கலாசாரப் பன்மைத்துவம் பல நாடுகளில் ஒரு இயல்பான பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிடுகிறார்.

இனத்துவ பன்மைத்துவம் என்பது இன்றைக்கு ஒரு அடையாள அரசியலாக மாறியிருக்கிறது. இனத்துவ பன்மைத்துவம் என்பது எரிக்சன் குறிப்பிடுவது போல அது இருந்தது-இருக்கிறது-இருக்கும் என்பதே நடைமுறை மெய். ஆனால், இந்தியத்துணைக் கண்டத்தில் என்ன நடக்கிறது என்றால் ஏற்கனவே இருக்கும் புவியியல் வழியிலான இனத்துவ பன்மைத்துவம் நெருக்கடிக்குள்ளாக்கப்படுகிறது. ஏற்றுக் கொண்ட மெய்மையை மறுக்கிறது. இனத்துவத்தை ஒற்றை இனத்துவத்திற்குள், பண்பாட்டிற்குள், மொழிக்குள், அரசியலுக்குள் கரைக்க முயற்சிக்கிறது. இந்த இடத்தில்தான் எரிக்சன் போன்றவர்கள் இந்தியாவிற்கும் தேவைப்படுகிறார்கள்.

நோர்வே குறித்த அவரது பிரதி இனத்துவ முரண்பாடுகள், இனத்துவ நெருக்கடிகள், இனத்துவ சமநீதி என்ற அளவில் உலகளவில் பன்மைத்துவம் நிலவும் சமூகங்களுக்கு தேவைப்படுவதாகவே இருக்கும்-இருக்கிறது. நேர்வேயின் இறுக்கமான புகலிடக் கோரிக்கைகள், அரசியற் கொள்கைக்கு நடுவிலும் ஆண்டுதோறும் வெளிநாட்டவர் வருகை அதிகரித்துவருகிறது. அமெரிக்கக் குடியரசின் ட்ரம்ப் அரசு, சட்டவிரோத குடியேற்றவாசிகள் என்று இனத்தூய்மை செய்யும் நாளில் நோர்வேயின் இனத்துவ பன்மைத்துவம் உலகிற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அறிவியல் வழிப்பட்ட தேசத்தின் முன்னேற்றத்தை விரும்பும் மக்கள் எரிக்சன் போன்றோரின் வழிக்காட்டலையே ஏற்றுக்கொள்வர். எரிக்சன் போன்றோரின் பன்மைத்துவப் பார்வையும், ஆய்வும், பங்களிப்பும் ஆகப்பெரிய ஒன்று.

தன்னிலிருந்து இந்த உலகைக் காணாமல் பிறரிலிருந்து இவ்வுலகைக் காணுதலே எழுத்துசார் அறம். 'எரிக்சன் எப்பொழுதும் தன்னைவிட மற்றவர்களிடம் அதிக அக்கறைக் கொண்டிருந்தார். வெளியுலகம் மற்றும் மனிதர்கள் சார்ந்த நிகழ்வுகளில் தொடர்ந்து ஆர்வமாக இருந்தார்' என்று அவரது இணையர் கூற்றை சிவராஜா சுட்டிக்காட்டுகிறார். 'ஒரு முழுமையான இயற்கையும், வாழ்வதற்கான உகந்த காலநிலையும் இல்லாமற் போகுமிடத்து பகிர்வதற்கு எதுவும் இருக்காது!' என்ற எரிக்சனின் வாதம், எச்சரிக்கையானதும் இவ்வுலகின் மீதான ஆகப்பெரிய மானுடக் கரிசனமாகவும், எதிர்வு கூறாலாகவும் இருக்கிறது. ஒரு அறம் சார் எழுத்தாளர் இப்படித்தான் இருக்க முடியும். எரிக்சன் அப்படியானவர். 'அவரை ஒரு மறுமலர்ச்சி மனிதர்' என்று நண்பர்கள் குறிப்பிடுவார்கள். 'ஆழ்ந்த அனுபவமும் செயல் வேக முடையவர் என்பது அவர் குறித்து நிலவும் கருத்து என்கிறது அவரைப் பற்றிய மதிப்பீடு' என்று அவரது இணையர் நினைவுகூர்கிறார். எரிக்சன் போன்றோர் பொது சமூகத்தின் மனச்சான்றாகவே இருப்பார்கள்.

•

நவீன கவிதைப் போக்குகள் – இரண்டு கட்டுரைகள்:

நேர்வேஜிய நவீன கவிதைப் போக்குகள் குறித்த இரண்டு கட்டுரைகள், சமகால தமிழ் சூழலிலும் வைத்துப் பேசுவதற்கான வெளியை உருவாக்குகிறது. உலகம் ஒரு சிறு கிராமமாகச் சுருங்கும் நிலையில் அதன் இருப்பு, எதிர்கொள்ளல்கள் மற்றும் சவால்கள் ஒன்றுபோலவே இருக்கின்றன. முதலாளித்துவ உலகின் சிக்கல்களும் அவ்வாறே பொதுமையைக் கொண்டிருக்கின்றன. சுரண்டல் முறையிலான உற்பத்தி முறை, மனிதவள சுரண்டல்கள் மனிதர்களை மனிதர்களிடமிருந்து அந்நியப்படுத்துவது போலவே தன்னிலிருந்தும் அந்நியப்படுத்துவது பற்றி மார்க்ஸின் எழுத்துக்கள் கவலையும், கொதிப்புமாகப் பேசுவதைப் பார்க்கலாம். அந்த வகையில் அந்நியமாதல் கடவுளிடமும் கவிதையிடமும் கொண்டு சேர்க்கின்றன. இருத்தல், இல்லாமல் போவதே அந்நியமாதல். அப்படியான இருப்பிற்கும் அந்நியமாதலுக்கும் இடையிலான போராட்டம் அரசியல் வெளியில் பொதுவுடைமை-முதலாளித்துவம் எதிர்வு என்பதாக இருக்க, தனி மனிதர்களில் அவை அகமும், புறமுமான போராட்டமாக இருக்கிறது.

படைப்பிலக்கியத்தில் அந்நியமாதல் உருவாக்கும் சித்திரங்கள் பல. அவற்றில் நவீன கவிதைகள் வண்ணச் சிதறல்களாகப் பல தெறிப்புகளை உருவாக்குகின்றன. இந்தப் பொதுவான உலகப் போக்கிற்கு நோர்வே இலக்கியப் பரப்பும் தப்பியிருக்கவில்லை. விளிம்பு நிலை மனிதர்கள் பற்றி பேசுதல், அவர்களது உணர்வுகள், நிலைமைகளையும் எதிர் காலம் பற்றியும் கவனம் கொள்ளுதல் படைப்பின் உயிராதாரமாக விளங்குகின்றன. அரசியல், சமூக, பொருளாதார வாழ்வியல், தொழிற்நுட்ப மாற்றங்களின் விளைவான நகரமயமாக்கல், இயற்கையிடமிருந்து மனிதனின் விலகல், அந்நியப்படும் உணர்வுகள் என்பனவற்றோடு இணைத்துப் புரிந்து கொள்ள வேண்டியவை. அதன் பிரதிபலிப்பாகவே நவீன கவிதைகள், புனைவுகள் இன்னபிற படைப்புகள்

வெளிப்படுகின்றன. இன்றைய தீங்கு என்பன சூழலியல் சார்ந்ததகவும், மனிதனின் மேலாண்மையோடும் தொடர் புடையதாக இருக்கிறது. எதிர்காலத்தில் உலக வெப்பமய மாதல் பாரிய சூழலியற் பேரழிவுக்கு இட்டுச் செல்லுமென்ற எச்சரிக்கைகள் தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருக் கின்றன. இவை எப்படி நவீன படைப்புகளில், கவிதைகளில் அதே உணர்வுகளுடன் கடத்தப்படுகின்றன என்பதை சிவராஜா நோர்வேஜிய நவீன கவிதைப்படைப்புகள் குறித்த கட்டுரையில் (நோர்வேஜிய நவீனத்துவக் கவிதை-தோற்ற மும் வளர்ச்சியும்) விவரித்துச் செல்கிறார். பேரழிவுகளைத் தரும் அணு குண்டு வீச்சு, போர் பதட்டங்கள், அது தரும் இருப்பின் நெருக்கடிகள், அவலங்கள், மரண ஓலங்கள், துயரங்கள் என கவிதையின் தளம் மானுடத்தின் தவிப்பை தரிசனங்களாக முன்வைக்கின்றன.

‘ஹிரோசிமாவில் மழை
தேநீர் கேற்றிலை எடுப்பதற்காக
அவள் கையை உயர்த்திய போது
ஒரு கண்மூடித்தனமான
ஒளிப்பிழம்பு தெறித்தது.
எதுவும் மிச்சமில்லை.
எல்லாமும் போய்விட்டது.
அவர்கள் இனி இல்லை.
நீராவியாகவும், மேகக்கருமையாகவும்
ஆக்கப்பட்டுவிட்டனர்...’

என்ற கவிதையை,

‘குத்திய கிபீரின்
வெளிச்சமாய் மின்னல்
‘செல்’லாகக் கேட்கும்
இடிமுழக்கம்
செயின் பிளாக் உடைத்த
நீர் தேங்கும் வீதி
சன்னங்களின் வெடிப்பாய்
கொட்டும் மழை...’

என்னும் கவிதையுடன் ஒப்பிட்டு இக்கட்டுரை ஆராய்கிறது. யுத்தப் பின்னணியுடனான வாழ்வின் தரிசனங்களும் யுத் தத்தை நினைவுகளிலிருந்து பிரித்துவிட, அழித்துவிட இயலா கொடுந்துயரங்களுடன் இருப்பதை இக்கவிதையின் வாயி லாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

நவீன கவிதையைப் பொறுத்தவரை நோர்வேயிடம் அல்லது மேற்குலகிடம் ஒரு மரபின் தொடர்ச்சியை காணமுடிகிறது. தமிழ் சூழலில் அப்படியான தொடர்ச்சி அறுந்து தொங்கிக் கொண்டிருக்க, மேற்குடன் ஒப்பிடும்போது கிட்டத்தட்ட 40-50 ஆண்டுகள் பிந்தியே அவை இங்கு அறிமுகமாகும் சூழல் இருக்கிறது என்பதைக் கட்டுரையாளர் சொல்வது தமிழ் கவிதைச் சூழலின் அவலம் மட்டுமல்ல கவிதைக்காரர்கள் கவலைப்பட வேண்டிய ஒன்று.

•

அடிமை வாழ்வின் பெண்குரல்:

காலச்சுவடு வெளியீடாக வந்துள்ள(2022) ‘ஓர் அடிமைச் சிறுமியின் வாழ்க்கை நிகழ்வுகள்’ 19-ஆம் நூற்றாண்டில் அமெரிக்கத் தென்மாநிலங்களில் நிலவிய நிறுவனமயப்பட்ட அடிமை முறை மற்றும் அடிமைபடுத்தும் நிறுவனங்கள் பற்றியும், ஹாரியட் ஜேக்கப்ஸ் எழுதிய நூலின் தமிழ்வடிவம். அன்றைய காலக்கட்டத்தின் அடிமை முறைகள் பற்றியும் குறிப்பாக பெண்கள் அடிமைகளாகச் செல்வதில் உள்ள பாடுகள் குறித்துமாக இந்நூல் பேசுகிறது. கூலி அடிமை யாக மட்டுமல்லாது பாலியல் அடிமைகளாகவும், பாலியல் ஒடுக்குமுறை, சுரண்டுதலுக்கு உள்ளாகக்கூடியவர்களா கவும் இரட்டைச் சுமைகளை ஏற்பவர்களாகவும் இந்தப் பெண் அடிமைகள் இருப்பதை விவரிக்கிறது. எத்தனையோ நூல்கள் ஆபிரிக்கக் கூலி அடிமைகளின் அமெரிக்க வாழ்வு பற்றி பேசியிருப்பதை வாசித்திருந்தாலும் அடிமை வாழ்வின் பெண் குரல்கள் அரிதாகவே ஒலிக்கின்றன. தமிழ்நாட்டில் கடந்த காலத்திலிருந்த அடிமைமுறை பற்றி முழுமையாக எதுவும் வெளிவரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அவையும் எழுதப்பட வேண்டும். அன்றைய பெண்களின்



அடிமை வாழ்வும் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு வெளிவரும்போது அது வரலாற்றையும், வரலாற்றின் தொடர்ச்சியையும் மறுவாசிப்பிற்குட்படுத்துவதுடன் இது குறித்த மீள் விமர்சனமானதாகவும் அது இருக்கும். இதை சிவராஜா நுட்பமாக விவரித்துச் செல்கிறார். இந்த நூலை கவனப்படுத்தியிருப்பதன் வழி ஆப்பிரிக்க-அமெரிக்கப் பெண்ணடிமைக் குரலை, வலியை, வாதையை தமிழ் வாசகர்களும் உணர்ந்து கொள்வார்கள்.

•

நோர்வேயின் கால அமைப்பைப் போலவே இதமான சூழல் கலைப்படைப்பிலும் பிரதிபலிப்பதைப் பார்க்க முடிகிறது. உலகின் மகிழ்ச்சியான நாடுகளில் பின்லாந்து முதலிடத்தில் தொடர்ந்து 8-வது தடவைகள் இருக்க அடுத்த இடங்களை நோர்வே உள்ளிட்ட நாடுகள் பெற்றிருப்பதைப் பார்க்கும் போது அவர்களது சமூக, அரசியல், பொருளாதார வாழ்வும் ஒரு கலையாக வளர்த்தெடுக்கப்படுவதை ரூபனின் எழுத்து கள் வழி அறிய முடிகிறது. நோர்வேஜிய இலக்கியத் திரு விழா மற்றும் அதன் தொழிற்பாடுகளை குறித்த வர்ணனை வழி சிறப்பாக அறியத் தருகிறார் கட்டுரையாளர்.

நோர்வேஜிய கலை இலக்கியத் திருவிழா மற்றும் கலை இலக்கியங்களுக்கு அந்த நாட்டு மக்கள் தரும் முக்கியத்து வத்தை இந்நூல் சிறப்பாக அறிமுகப்படுத்துகிறது.

•

கலாசார அரசியல்:

நோர்வேஜிய சூழலில் தமிழ் கலைப்படைப்புகள் அதற்கான முக்கியத்துவம் பற்றி பேசாமல் இருக்க முடியாது. நோர்வே யில் புலம் பெயர் தமிழர்களின் கலைப்படைப்புகளுக்குரிய அங்கீகாரத்தை அந்நாட்டு அரசும் மக்களும் அளித்திருப் பதை பார்க்க முடிகிறது. பல்கலாசாரத் தளங்களில் ஜன நாயகம் மற்றும் பன்முகத்தன்மையை முதன்மையான கலாசார அரசியற் கொள்கையாகவும் இலக்காகவும் நோர்வே அரசு கொண்டுள்ளது. கலை இலக்கியச் செயற்பாடுகளில் சிறார், இளைஞர்களின் பங்கேற்பை அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் அக்கறை கொண்டுள்ளது. உள்ளூராட்சி சபை, நகராட்சி சபை என்பன அவற்றை நடைமுறைப் படுத்துவதில் தேசிய ரீதியாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் கவனம் செலுத் துவதாகக் கட்டுரையாளர் குறிப்பிடுகிறார். நோர்வேயின் 35 சதவீதத்தினர் வெளிநாட்டுப் பின்னணி யுடையோர். இவர்கள் யாவரையும் ஒன்றாக இணைத்துக் கொண்டு கலை இலக்கியச் செயற்பாடுகளை எவ்வித பேதமுமின்றி நோர்வே இலக்கியப் பரப்பு ஆற்றி வருகிறது.

நோர்வே சூழலில் அதன் ஜனநாயகத் தன்மையை உள் வாங்கி உயிர்வாழும் சிவராஜாவின் 'தமிழ் மொழி, மொழிக் கல்வி, பண்பாடு, கலை இலக்கியப்படைப்புகள் பற்றிய கட்டுரை சிறப்பான ஒன்று. 'பண்பாடு என்பது மனித மனதின் கூட்டு நிரலாக்கம்' என்கிறார் சமூக மானிடவியலாளர் கீட் ஹஃசிட். 'உலகின் மதங்கள் ஏதோ ஒரு மொழியுடனோ, பல மொழிகளுடனோ நெருங்கியப் பிணைப்புக் கொண்டிருக் கின்றன. உதாரணமாக கிருஸ்தவ மதம் இலத்தின் மொழி யுடன் நெருங்கிய பிணைப்புக் கொண்டிருந்திருக்கிறது. இஸ் லாம் அரசு அரபு மொழியுடனும் பௌத்தம் பாலி மொழி யுடன் என மொழியோடு மதங்களுக்கும் மதங்களோடு மொழிக்குமான பிணைப்பை சுட்ட முடியும். ஆனால் அனைத்து மதங்களுக்குமான ஊடாட்ட மொழியாக தமிழ் இருந்து வந்துள்ளது. தமிழ் எந்த மதத்திற்குள்ளும் தஞ்ச மடைந்து கொள்ளவில்லை' என்பதை அழகாக சுட்டிக் காட்டுகிறார் சிவராஜா. அதுவே உலக பொதுமறை போல உலக பொது மொழி என்று சொல்ல வைக்கிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தமிழ் கலாசாரப் பின்னணிக் கான ஆழ்ந்தப் பொருளை தமிழ் மொழியே தருவதைக் காண்கிறோம். சமஸ் கிருதம், இந்தி என்பன இந்து மதத்தின் மொழிகள், ஆனால், மொழி அரசியலும், இந்துத்துவா அரசியலும் தமிழை இந்து மொழி என்ற சிமிழுக்குள் அடைக்க முயற்சிக்கின்றன. பண்பாடு மொழிக்குள் இருக் கிறது. மொழி பண்பாட்டிற்குள் இருக்கிறது. 'பண்பாடென்பது மாறக்கூடியது, தொடர்ச்சியான இடையறாத செயற்பாடுகள் வழி அதன் பெறுமதியான முற்போக்கான கூறுகள் பேணப் படுவதோடு, அடுத்த தலைமுறைகளுக்கும் கடத்தப்படு கிறது. கால, வரலாற்று, சமூக வாழ்வியல் புறநிலைகளுக்கும் அவற்றின் தேவைகளுக்கும் ஏற்ப மாற்றங்கள் நிகழும் ஒவ்வாத அம்சங்கள் புறந்தள்ளப்படும்' என்ற சிவராஜாவின் கருத்து முக்கியமானது. மொழி ஒரு பேராறு. அது தேங்கி நிற்கும் குட்டையல்ல. மதம் ஒரு குட்டை. அதில் மொழியை அடைத்து வைக்க முடியாது-கூடாது. தமிழ் கமண்டலத்தில் அடைக்க மறுத்துப் பாயும் காட்டாறு. தமிழ்மொழி மதத்திற்கு வெளியே நிற்கிறது.

•

இரண்டு நாவல்கள்:

இந்தத் தொகுப்பில் இரண்டு நாவல்கள் பேசப்படுகின்றன. நவமகனின் 'போக்காளி' மற்றும் குணாகவியழகனின் 'கடை சிக்கட்டில்'. நாவல் பற்றி கொஞ்சம் பேசலாம் என்று தோன்று கிறது. அவரது நாவல்கள் எல்லாவற்றையும் வாசித்திருந் தாலும், அவர் அருகிலிருக்க அரங்குகளில் வாதித்திருந் தாலும் கடைசிக்கட்டில் நாவல் இன்னும் வாசித்திருக்காத குறையை சிவராஜாவின் அந்த நாவல் பற்றிய கருத்துரை போக்குகிறது. ரூபன் மதிப்புரை மேலும் வாசிக்கத் தூண்டும் ஒன்றாக இருக்கிறது. கடைசிக் கட்டிலுக்கு யாராகினும் ஆசைப்பட முடியுமா... இந்த கட்டில் அப்படியான தூண்டு தலைச் செய்கிறது.

அரச மருத்துவமனையொன்றின் புற்று நோய் சிகிச்சை பிணியாளனான கதைநாயகனுக்கும், மருத்துவர்கள் மற்றும் தாதிகளுக்கிடையேயான உரையாடல்களுமாக குணாவிற்கே உரிய தத்துவ, அரசியல், சமூக கதையாடல்களுடன் பக் கங்கள் நகர்வதை சிவராஜா எழுதிச் செல்கிறார். எளிய மனிதர்களிடம் புழங்கும் எளிய தத்துவங்கள்தாம் நடை முறை மெய்மைகளைப் பேசும் வலிமையான, அழுத்தமான வாழ்வியல் அனுபவத் தெறிப்புகளாக இருக்கின்றன. அப் படியான சூழல்கள் பிரசவிக்கும் தத்துவங்கள் கதைப் போக் கில் குணாவிடம் அசாதரணமாக வெளிப்படுவதைக் காண லாம். இதையே சிவராஜாவும் சுட்டிக்காட்டுகிறார். கதை யோட்டத்தை ஆழ, அர்த்தமுள்ளதாக்க இப்படியான தத்து வார்த்தப் பார்வைகள் நாவலுக்கு அவசியம்.

யுத்தமுனைக் கதைகளும், யுத்தக் கதைகளுமான குணா வின் நாவலிலிருந்து இது வேறுபட்டு யுத்தத்திற்குப் பின்ன ரான தமிழ் நிலத்தின் நெருக்கடியான வாழ்வியல் பின்னணி யைப் பேசுகிறது. யுத்தத்தைப் போன்றே மரணத்தின் விளிம்பில் நிற்கும் ஒன்றாகவே புற்றுநோய் போன்ற கொடிய நோய்கள் இருக்கின்றன. எப்போது மரணம் நேரும் என்பதை இரண்டிலும் கணிக்கவே இயலாது. யுத்தமும், புற்றுநோயும் போராடி வெல்லும், தோற்கும் களம். எனவே, குணா இந்தக் களத்திலும் கதையாடலுடனும் யுத்தம் செய்கிறார். இரண்டும் அவருக்கு சவால் மிகுந்த போராட்டக் கதைக்களம்தான். சாவின் விளிம்பும், குதூகல நிலையும் தத்துவங்கள் பிறக் கும் இரு முனைகள். கனவுகள், எண்ணங்கள், சிந்தனை வாழ்வு, செயல், மனம், பற்றிய தத்துவ விசாரங்கள் அதிகம் இடம்பெறுவதையும் அவை குணாவின் நாவலின் பொது அம்சம் என்பதையும் சிவராஜா குறிப்பிட மறக்கவில்லை.

கடைசிக் கட்டிலுக்கு ஏக பொருளுண்டு. தொட்டில் தொடங்கி கட்டில் வரை. மருத்துவமனையின் கடைசிக் கட்டிலாகவும், வாழ்வின் கடைசிக் கட்டிலாகவும் அது இருக்கிறது. நான்கு பேர் தூக்கிச் செல்லும் ஒன்றாகவும் பொருள் கொள்ள முடியும். வாழ்வின் கடைசி உறக்கத்திற்கான கட்டில் என்றும் வாழ்வைப் பிரிய முடியாத பதைக்கும் எண்ணங்களுடனும் பொருள் கொள்ள முடியும். 'மூன்று வகை பிணியாளர்கள் கடைசிக் கட்டிலில் இருக்கிறார்கள். வயதான மனிதர்களைப் பொறுத்தவரை சிலர் வாழ்நாள் முழுவதும் பணம்



சம்பாதிக்க முயன்றவர்கள். சிலர் தன் சுற்றத் தில் புகழ் சம்பாதிக்க முயன்றவர்கள். மூன் றாமவர்கள் அருந்தலாக மனித உறவைச் சம்பாதிக்க முயன்றவர்கள். உறவைச் சம்பா தித்த வர்கள் வாழ்வை அனுபவித்த பாங்கில் பதட்டமின்றி மரணத்தை எதிர்கொண்டார்கள் என்று நம்புகிறேன்' என்ற கடைசிக்கட்டிலின் கூற்று இயல்பானது. இம் மும்முனையும், மனி தர்களின் அந்தரிப்பும் வாழ்வியல் போராட்டத் தின் ஆதாரமான விடயங்கள். இம்மும்முனை மனிதர்களே அன்றாடம் சக பயணியாக எம் முடன் பயணிப்பவர்கள். இவர்களே வாழ்வு. இவர்களுடனான பயணமே வாழ்க்கை. கடை சிக்கட்டில் வாழ் விற்கும் மரணத்திற்குமிடை யிலான ஓர் இடைத்தங்கல்.

நவமகனின் போக்காளி நாவல் புலப்பெயர்தலையும் அதன் வாழ்வியலைப் பேசுகிறது. இரண்டு நிலங்களுக்கிடையே யான, தேசங்களுக்கிடையேயான இரண்டு தலைமுறைகளுக் கிடையேயான வாழ்வியலைப் பேசுவதாக இருக்கிறது. முரண் பாடுகளைப் பேசுவதாக இருக்கிறது. குறிப்பாக நோர்வே யில் தஞ்சமடைந்திருக்கும் தலைமுறை குறித்த வாழ்வியல் அனுப வங்கள் இந்த நாவலில் பேசப்படுகிறது. இரண்டு நிலத்தின் தமிழர் பாடுகளை விவரிக்கும் இந்த நாவலை இரத்தமும், சதையுமாக வாசிக்கப் பரிந்துரைக்கலாம். அதையே இக்கட்டுரையும் முன்வைக்கிறது.

•

திரைத் தொடர் பற்றிய கண்ணோட்டம்:

'தி ஃபேம்லி மான்-2' என்ற இணையத் திரைத் தொடர் (வெப் சிரீஸ்) பற்றிய சிவராஜாவின் கண்ணோட்டம் இத்தொகுப்பில் பேசப்பட்டிருக்கிறது. பின்- முள்ளிவாய்க்கால் குறித்த தொடர் மிக அபத்தமான முறையிலும், ஈழமக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளதை சிவராஜா காரணகாரியங்களுடன் முன்வைக்கிறார்.

'விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சரிகளுடனும் தவறுகளு டனும் வரலாற்று வகிபாகத்துடனும் அவர்களுக்கென ஒரு விம்பம் உள்ளது. அவர்கள் பற்றிய பொதுவான மதிப்பீடு களே இற்றைவரை உள்ளன. அந்த விம்பத்தையும் மதிப் பீடுகளையும் இந்தத் திரைத்தொடர் முழுமையாகச் சிதைத் துள்ளது. அந்த விம்பச்சிதைப்பு என்பது ஈழ விடுதலைப் போராட்டத்தின், ஒரு காலகட்டத்தின், கடந்தகால அரசியலை இழிவுபடுத்துவதோடு எதிர்கால அரசியலை மந்தமாக்கும் முனைப்பினைக் கொண்டதாகும்'. என்று மதிப்பிடுவதைக் காணும்போது இப்படியான திரைத்தொடர்கள் ஒரு அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதையும், அப்படியான அரசியல் யாருக்கானவை என்பதையும் சேர்த்தே புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. 'புலி வருகுது' கதை இந்திய அகண்ட பாரத கனவில் தொடர்ந்து புளி கரைத்துக் கொண்டுதானி ருக்கிறது. ஏற்கனவே அகண்டபாரதம், தமிழீழத்தை தின்று செரித்துவிட்ட ஏப்பத்தின் கதைகளே இவை. அகண்ட பாரதத்தின் தொண்டையில் சிக்கிய முள்ளாகவே தமிழீழம் இருக்கிறது. அந்த துர்கனவின் புலம்பல்களே இப்படியான வெப் சீரிஸ்கள் என்றால் மிகையல்ல.

•

சிந்தனையின் பரப்பு வெளி:

பல தலைப்புகளிலான கட்டுரைகளை ஒருசேர வாசிப்பதும், வாசிக்கத்தருவதும், சிந்தனையின் பரப்பு வெளியை விரித்துச் செல்வதுமான சிவ ராஜாவின் விவரிப்பு மலைப்பையும், ஆச்சரி யத்தையும் தருகிறது. கட்டுரையை இலக்கிய வடிவில் ஒன்றாக இசையாதவர்கள் சிவராஜா வின் கலைப்பேச்சு, கட்டுரைகளை இலக்கிய வகைமைக்குள் அடக்குகின்றது என்பதை இனி யேனும் கவனத்தில் கொள்ள வேண்டும்.


இத்தொகுப்பிலிருக்கும் ஒவ்வொரு கட்டுரையை யும் தனித் தனியாக பேச வேண்டும். இந்த முகப்புரை இலக்கண ஒழுங்கும், சுருக்கமும் வடிவும், விரிவாகப் பேசுவதற்கு விடுவதா யில்லை. எனினும் வாசிப்பாளர்கள் எனது பார்வைக்கு அப்பால் இன்னும் விரிந்த அளவில் பொருள் கொள்ளும், புரிந்து கொள்ளும், விவாதிக்கும், ஏற்கும், பேசும் வெளிகள் 33 கட்டுரைகளாகப் பரந்துகிடக்கின்றன. ஏற்கனவே காக் கைச் சிறகினிலே, தாய்வீடு, மானுடம், யாவரும், புதுமலர், தினக்குரல், தை, வெற்றிமணி போன்ற சஞ்சிகைகளில் வெளி வந்த காத்திரமான கட்டுரைகளின் தொகுப்பே இவை.

'கலை இலக்கியம் சார்ந்த எனது எழுத்துக்களுக்கென்று ஒரு வரையறை உண்டு. ஒரு படைப்பில் நான் எதிர்ப்பார்க்கும் விடயங்கள், இருக்கும் போது மட்டுமே நான் எழுதுகிறேன். படைப்புகளின் வடிவங்கள் எதுவாக இருந்தாலும், அவை மனதில் ஓர் உந்துதலை உருவாக்க வேண்டும். அவற்றின் பிரதிபலிப்பு கவனிக்கத்தக்கதாக, சமூகப் பயன்பாடு மிக்க தாக கலைத்துவ அழகியல் நிறைந்ததாக இருக்க வேண் டும். மனித மனங்களை வாழ்வை மனிதர்களுக்கிடையிலான உறவுகளைப் பிரதிபலிக்கும் ஆழமுள்ள தாக்கங்களை ஏற் படுத்த வேண்டும். மனிதர்கள் மற்றும் சமூகங்கள், அரசியல், இயற்கை, உலகம் ஆகியவற்றுக்கிடையிலான உறவினைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். இவை இல்லாதபோது, ஒரு படைப்பைப் பற்றி நான் எழுதுவது இல்லை' என சிவராஜா தனது முகநூல் பதிவொன்றில் குறிப்பிட்டிருப்பதன் அடிப்படையில் இந்த கலைப்பேச்சுக்களை அணுக முடியும்.

தமிழ் அரங்க ஆற்றுகைகள், நாடகங்கள், கலை இலக்கியப் பார்வைகள், புத்தகங்கள் குறித்த மதிப்புரைகள், விமர் சனங்கள், திரை வடிவங்கள், கலை இலக்கியப் போக்குகள் குறித்தவை என இத்தொகுப்பு விரிந்து செல்கிறது. இயல், இசை, நாடகம் உள்ளிட்ட கலைப் பார்வைகளோடு இவற்றை சிவராஜா அணுகியுள்ளார். கலை எழுத்துக்கள், கலைப் பேச்சுக்களாக மிக அவதானமான, நுட்பமான பார்வை களாக, விவரிப்புடன் கூடிய அலுப்புத்தட்டாத எழுத்துப் பாய்ச்சலுடன் விளங்குவதை வழமை போல சிவராஜாவின் இத்தொகுப் பும் மீள உறுதிப்படுத்துகிறது.



mohanrajan@thaiveedu.com



சமூகக் கட்டுமானங்களைக் கட்டுடைக்கும்

கறுப்பி

– ரதன்

ஐம்பதாவாது ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் கறுப்பி குறும்படம் திரையிடப் பட்டது. இதுவரை ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் கடந்த வருடங்களில் மூன்று தமிழ்க் குறும்படங்கள் திரையிடப்பட்டுள்ளன. 2023-ஆம் ஆண்டு ரொறன்ரோவைச் சேர்ந்த நயனி தியாகராஜாவின் 'இந்த நிலம்' என்ற முழுநீளத் திரைப்படம் திரையிடப்பட்டது. இதுவே ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட கனடியத் தமிழர் ஒருவரின் முதலா வது திரைப்படமாகும்.

ரொறன்ரோவில் அதிகளவு மக்கள் வாழும் சமூகங்களில் தமிழ்ச் சமூகமும் ஒன்றாகும். ரொறன்ரோ தமிழ்ச் சமூக ஊடகங்கள் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவை தொடர்ந்து புறக்கணித்துவருகின்றன. 'காஞ்சிவரம்' திரைப்படம் திரையிடப்பட்டபோது, அதிகளவு தமிழர் கள் அப்படத்தை ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் பார்த்தனர். எனினும், விழாவில் வேற்றுமொழிப் படங்களைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. இதனை இங்கு குறிப்பிடுவதன் காரணம் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் எமது சமூகத்தின் பிரதி நிதித்துவம் குறைவு என்பதை சுட்டிக்காட்டுவதற்கேயாகும்.

நயனியின் திரைப்படம் திரையிடப்பட்டபோதும் ரொறன்ரோ தமிழ் ஊடகங்கள் பதிவுகள் எதனையும் செய்யவில்லை. இந்திய வர்த்தக சினிமா நடிகர்கள், பாடகர்கள் போன் றோருக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் ரொறன்ரோ மண்ணில் விளையும் தமிழ் திரைப்படப் படைப் பாளிகளின் சர்வதேச அங்கீகாரத்துக்கு கொடுக்கப்படுவதில்லை. பல ஊடகங்களுக்கு ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவையே தெரியாது. இந்திய வர்த்தக சினிமாக் கலைஞர்கள் ரொறன்ரோ வரும்பொழுது, நடைபெறும் ஊடகச் சந்திப்பு களும், அவர்களுடனான செவ்விகளும் சமூக வலைத் தளங் களில் நிரம்பிக் காணப்படுகின்றன. அவ்வாறான ஊடக சமூகம் கறுப்பியைக் கண்டு கொள்ளாது என்பது உண்மை.

கறுப்பி திரைப்படம் Canadian Film Centre-இன் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் இயக்குநர் கலைநிதன் கலைச்செல்வன். கலைநிதன் உயர் பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு கொன்கோடியா பல்கலைக்கழகத்தில் மூன்று வருடங்கள் திரைப்படவியல் பட்டப்படிப்பை முடித்துள்ளார். 2024-ஆம் ஆண்டு கனடியன் பிலிம் சென்ரரில் இயக்குநர் பயிற்சியை முடித்துள்ளார். கடந்த எட்டு வருடங்களாகக் கனடிய திரைப்படத்துறையில் பல குறும்படங்களை இயக்கி யுள்ளார். அத்துடன், இசையிலும் இவருக்கு அதிக ஆர்வம் உண்டு.

'Petit Four' (2019), 'Inland Freaks' (2017), 'A Feller and the Tree' (2021), 'Kingdom Animalia: The Melanie Fyfe Story'(2020), 'The Windless Days' (2018), 'Stella Maris'(2017), 'Two Doves on a Painted Lake' (2020), 80613 (2020) ஆகிய குறும்படங்களை இதுவரை இயக்கியுள்ளார் கறுப்பியின் இயக்குநர் கலைநிதன் கலைச்செல்வன். 2023-இல் 'காட்டுக்கோழி' குறும்படத்தையும் இயக்கியுள்ளார்.

'காட்டுக் கோழி' குறும்படம் இலங்கையில் போரின் போது நடைபெறும் சம்பவம் ஒன்றை மையப்படுத்தியது. சிறுமி ஒருத்தி ஆசையாய் வளர்க்கும் கோழி, இராணுவத்தின் செல் அடித்து இறந்துவிடுகின்றது. கோழியை புதைத்துவிட்டு சிறுமி கண்ணீர் விடுகின்றாள். போராளிக்கு அடைக்கலம் கொடுத்தமைக்காக சிறுமியின் தந்தையை இராணுவத்தினர் அழைத்துச் செல்கின்றனர். இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டவர்களில் மீண்டும் வீடு திரும்பியவர்கள் மிக, மிகக் குறைவு. அக்கிராமத்தில் தொடர்ந்து வாழ்வது கடினம் எனக் கருதி, தாயும், மகளும் வேறு கிராமத்தை நோக்கிச் செல்கின்றனர். 14 நிமிட 'காட்டுக் கோழி' குறும்படம் தமிழர் களின் வாழ்வியல் எதிர்காலம் அற்ற தன்மையை பதிவு செய் கின்றது.

அச் சிறுமிக்கு வீடும், கோழியும் அவள் உலகம். வீட்டை விட்டு வெளியேறும் பொழுது, அவள் முகத்தில் தெறிக்கும் பார்வை, விரியப்போகும் நிரந்தரமற்ற உலகத்தையும், நம் பிக்கையுடன் வாழ்ந்த இருப்பின் இழப்பையும் வெளிப் படுத்துகின்றது. இக்குறும்படம் உலகின் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டது.

காட்டுக் கோழியை, இலங்கையிலேயே மட்டும் வாழ்வதாக அமெரிக்க மிருகக்காட்சிச்சாலைக் குறிப்புக்கள் தெரியப் படுத்துகின்றன. காட்டுக் கோழி இலங்கையின் தேசியப் பறவை.

கறுப்பி திரைப்படம் எமது சமூகத்தின் மிக முக்கிய பிரச் சினை ஒன்றை உரையாடுகின்றது. உரையாடும் மொழி இங்கு முக்கியமானது. எமது சமூகத்தில் அதிகளவு குறிப்பாக பெண்கள் மத்தியில் உள்ள மனச்சோர்வு இங்கு முக்கிய பேசுபொருளாகவுள்ளது. அத்துடன் எம்சமூகத்தில் அதிகளவு காணப்படும் தற்கொலையுணர்வும் இங்கு பேசு பொருளாகி யுள்ளது. கனடிய தமிழ்ச் சமூகத்தில் ஆண்கள், பெண்கள் இருபாலாரும் தற்கொலை செய்துகொண்டாலும் அதிகளவு பெண்களே தற்கொலை செய்துகொண்டுள்ளார்கள். இது பற்றிய முழுமையான தரவுகள் இல்லாதபோதும், ஒரு பொது நோக்கில் பெண்கள் அதிகமாக தற்கொலை செய்துகொண் டுள்ளார்கள் என்பது ஒரு கணிப்பு.

தனது 65-வது வயதில் கறுப்பி, தான் அன்று மாலை தற் கொலை செய்யப்போவதாக தனது பிறந்த நாள் விழாவில் தெரிவிக்கின்றார். கறுப்பி ஒரு கம்பீரமான, திடமான குரல் கொண்ட, அழகாக உடையணிந்த ஒரு மத்திய வர்க்கப் பெண். அவரது முகத்தில் கடும் அதிருப்தி தெரிகின்றது. இவர் வாழும் வீடு, பழமை நிரம்பிய வீடு. இவர் ஏன் தற்கொலை செய்ய வேண்டும்? குடும்பத்தையோ, சமூகத்தையோ எதிர்க் கும் துணிச்சல் இவரிடம் இல்லையா? உறுதியான, திடமான குரலிலேயே இவர் தான் தற்கொலை செய்யப்போவதாக அறிவிக்கின்றார். தற்கொலை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமல்ல. ஆனால் இப்படத்தில் இது ஒரு சமூகக் கட்டுடைப்பாகவே வெளிப்படுகின்றது. கறுப்பி கூறும் இரு வசனங்கள் முக்கியமானவை. 'தரித்திரம் பிடித்த மூஞ்சிகள் மத்தியில்...', 'ஒட்டுண்ணிகள்'. இவ்விரு வசனங்களுமே கறுப்பியின் வாழ்வியல் அவலங்களை வெளிப்படுத்துகின் றது. அதுவும், தான் எல்லோரின் முன்னால் தற்கொலை செய்யப்போகின்றேன் என்று கூறுவது மிகவும் முக்கியமானது.

பொதுவாக, இவ்வாறு ஒருவர் உறவினர்கள் மத்தியில் கூறி னால் ஒரு சூறாவளி அங்கு தோன்றும். இயக்குநரும், திரைக் கதையாசிரியருமான கலைநிதன் கலைச்செல்வன் 12 நிமி டங்களில் கறுப்பியின் தற்கொலைக்கான காரணத்தை அவ ரது மகள், பெயர்த்தி, மருமகன், மகளின் கணவன், தந்தை ஆகியவர்களூடாகப் பார்வையாளர்களுடன் உரையாடுகின் றார். இவர்கள் ஐவரும் வெவ்வேறு சந்ததிகளைச் சேர்ந்த வர்கள். இவர்கள் ஐவரிடமும் ஒரு குற்றவுணர்வுண்டு. அது அவர்களின் உரையாடலில் வெளிப்படுகின்றது. இவர்களில் கறுப்பியின் தந்தை இறந்துவிட்டார். அவரது புகைப்படத்து டனேயே கறுப்பி உரையாடுகின்றார். அவரும் கறுப்பியுடன் உரையாடுகின்றார்.

ஒரே காலத்தில் வாழ்ந்தாலும், இவர்களுக்கிடையிலான வயது வித்தியாசம் வெவ்வேறு பரிமாணங்களை வெளிப் படுத்துகின்றது. அதனை நீங்கள் திரையில் காணலாம். ஒரு தற்கொலை அல்லது மனச்சோர்வுக்கான காரணம் தனி ஒருவரோ அல்லது பாதிக்கப்பட்டவரோ எனக் கூறமுடியாது. உறவினர்கள், சமூகம், சமூக அரசியல், புற அரசியல் எனப் பல காரணிகளும் பங்கு வகிக்கின்றன. இவர்கள் அனை வருமே தூண்டிகள்.

தற்கொலை செய்த பின்னர், சமூகமும், உறவும் என்ன விட யங்களை விவாதிப்பார்கள். அல்லது புறம் சொல்வார்கள். ஒவ்வொரு குடும்பத்துக்குள்ளும் வெளியே தெரியாத பல இரகசியங்கள் உண்டு. இவை உடைபடுமா? எனவே











தற்கொலை செய்யப்போகின்றேன் என்று கூறியவுடன் ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் கறுப்பியுடன் உரையாடும் களம் தமிழுக்கு புதிது.

இயக்குநர் தமிழ்ச் சமூக கலாசார கட்டுமானத்தை மிக ஆழமாக விமர்சிக்கின்றார். தாய் கறுப்பி, அவரது மகள் ஜெயா, கறுப்பியின் பெயர்த்தியும் ஜெயாவின் மகளுமான வைஸ், இவர்கள் மூவரும் வெவ்வேறு தளத்தில் உள்ளனர். தாய் தற்கொலை செய்யவேண்டும் என உறுதியாகவுள்ளார். மகள் ஜெயாவிற்கு அவர் தற்கொலை செய்வதல்ல சிக்கல். அதனால் ஏற்படப்போகும் அவப்பெயர்கள், அவரைச் சுற்றியுள்ள சமூகம். ஜெயா வெளியுலகுடன் முரண்பட விரும்பவில்லை. அகத்துடன் போராடுகின்றார். பெயர்த்தி இது எதுமற்றவர். அவரது வயதுக்கேற்ற சிந்தனைகள் உண்டு. தற்கொலையின் தாக்கத்தையோ, மரணத்தின் உணர்நிலையையோ உணர்ந்தறியாதவர். சமூகம் இளம் வயதினரை சற்று தள்ளியே வைத்திருக்கின்றது. இவர்களுக்கு எதுவும் தெரியாது என்பது சமூகத்தின் கணிப்பு. அதனை இந்த இளம் வயது பெயர்த்தி வைஸ் இடம் காணலாம். அவர் கறுப்பியிடம் மெல்லச் சாக வேண்டாம். இதனை பெரிதாக்கு என்கிறார். கறுப்பி தனது பெயர்த்தியுடன் வீட்டின் பின்புற வெளியிலேயே உரையாடுகின்றார். வெளிப்புறம் என்பதும் ஒரு குறியீடாகவேயுள்ளது. அதே சமயம் கறுப்பி தனது மகள் ஜெயாவுடன் வீட்டினுள்ளேயே உரையாடுகின்றார்.

இவ்வாறு இயக்குனர் ஒரு வீட்டினுள்ளேயே வெவ்வேறு இடங்களில் படத்தை எடுத்துள்ளார். இவர்கள் மூவரையும் இயக்குனர் விசாரணைக் குட்படுத்துகின்றார். இப் பெண்கள் சமூகத்தின் பிரதிநிதிகள். இவர்களை சமூகம் அந்நியப்படுத்தியுள்ளதாகவே இயக்குனர் வெளிப்படுத்தியுள்ளார்.

இது ஒரு நேரடிப்படமல்ல. இது ஒரு தற்கொலைக்கான விசாரணை. தந்தைவழிச் சமூகத்தில், அல்லது ஆணாதிக்க உலகில் பெண்களுக்கு சமூகம் இழைக்கும் கொடுமைகளுக்கான விசாரணை. ஒரு பெண்ணின் துயரம், விரக்தி, சமூகத்தின் மீதான நம்பிக்கையின்மை இவை அனைத்தும் இணைந்தவரே கறுப்பி.

கறுப்பியாக சுமதி ரூபன் மிகச் சிறப்பாக நடித்துள்ளார். இயக்குநர் ரஞ்சித் யோசப் கறுப்பியின் தந்தையாக குரல் கொடுத்துள்ளார். இயக்குநர் கலைநிதன் மிகச் சிறப்பாக இயக்கியுள்ளார். காட்சிகளின் தெரிவு, களம், ஒழுங்கு என்பன மிகச் சிறப்பாகவுள்ளன. ஒளிப்பதிவும், இசையும் இப்படத்தை மேலும் சிறப்பாக்குகின்றன.

இங்கு கறுப்பி தற்கொலை செய்து கொண்டாரா என்பது முக்கியமல்ல. இது கறுப்பி படத்துக்கான விமர்சனமுமல்ல. ஒரு அறிமுகமே. இப்படம் எம் மத்தியில் தொடர்ந்து திரையிடப்படவேண்டும் உரையாடப்பட வேண்டும் என்பதே இங்கு முக்கியம்.

35 எம்.எம். பிலிமில் இப்படம் எடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக குறும் படங்கள் பிலிமில் எடுப்பது தற்போது குறைவு. இப்படம் ஒரு புலம் பெயர் படமாகும். இது அனைத்து சமூகங்களுக்குமான பொதுப் பிரச்சினையாக உள்ளது. திரைப்படங்கள் சமூகத்தின் பிரச்சினைகளை, கலாசாரக் கூறுகளை விசாரணைக்குட்படுத்தும், அதேசமயம் கலைநேர்த்தியுடன் கூடிய பிரதிகளாகவும் இருக்கவேண்டும். கறுப்பி இதனைச் சாத்தியப்படுத்தியுள்ளது.



rathan@thaiveedu.com

திரைவெளிச்சம்

– ஓவியர் ஜீவா

கேரள மாநிலம் என்பது கடவுளின் சொந்த தேசம் என்று அழைக்கப்படுகிறது. அந்த அளவுக்கு நீர் வளம், வன வளம் என்று அனைத்து வளங்களும் நிறைந்த சிறிய மாநிலம். தமிழகமும் கேரளமும் ஒரு காலத்தில் ஒரே பகுதியாக இருந்திருக்கும் என்று சொல்வார்கள். இடையில் மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர்தான் குறுக்கிடுகிறது. வனங்களில் வாழும் ஆதிவாசிகள் தமிழும் மலையாளமும் கலந்த ஒரு மணிப் பிரவாள மொழி பேசுவார்கள். இவர்கள் காலம் காலமாக சுரண்டப்பட்டு வனங்களிலிருந்து துரத்தப்படும் நிலைக்கு கொண்டுவரப் பட்டவர்கள். இவர்கள் வாழ்க்கையை திரைப் படங்கள் பதிவு செய்திருக்கின்றனவா என்றால் ஓரளவுக்கு ஆமாம் என்று ஒத்துக்கொள்ளலாம். மலையாற்றூர் ராமகிருஷ்ணன் எழுதி தோப்பில் பாசி இயக்கத்தில் வெளியான 'பொன்னி', ராமு காரியத் இயக்கத்தில் வெளியான 'நெல்லு', 'மலங்காற்று' போன்ற திரைப்படங்களில் ஆதிவாசிகளுக்கு முக்கியமான இடம் தந்து உருவாக்கினார்கள். பி.என். மேனன் இயக்கிய 'மலமுகளிலே தெய்வம்' ஆதிவாசிகள் பின்னணியில் வெளியான இன்னொரு நல்ல திரைப்படம். ஓரிரு ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த 'கள', இவர்கள் வாழ்க்கை பிரச்சினையின் இன்னொரு பக்கத்தை காட்ட முயற்சித்தது. ஒரு எஸ்டேட்டில், கடன் பிரச்சினைகளில் மாட்டித் தவிக்கும் ஒரு முதலாளி தன் இருப்பிலிருந்த, ஆனால் தனக்கு சொந்த மில்லாத மிளகு மூட்டைகளைக் கடத்தி விற்க முனைகிறான். அதற்காக அமர்த்தப்பட்ட ஆட்கள் தமிழ் பேசும் ஆதிவாசி இளைஞர்கள். உண்மையிலேயே இவர்களுக்கு உரிமை யாயிருந்த நிலங்கள்தான் பறிக்கப்பட்டு இப்போது முதலாளி கைகளில் இருக்கிறது. அந்த இளைஞனின் வளர்ப்பு நாயை இந்த முதலாளி முன்பொருமுறை அடித்துக் கொன்றிருக்கிறான். பழி வாங்கும் படலத்துடன் தொடர்கிறது திரைப்படம்.

'பட' என்றொரு திரைப்படமும் இதே கால கட்டத்தில் வெளியானது. பிரச்சினைக்குரிய ஆதிவாசி நில வரைவுச் சட்டத் திருத்தத்தை வாபஸ் வாங்கச் சொல்லி நடந்த போராட்டத்தின் அங்கமாக நடந்த உண்மை நிகழ்ச்சி ஒன்றை அடிப்படையாக வைத்து இந்தத் திரைப்படம் உருவானது. நான்கு போராட்ட வீரர்கள் பாலக்காடு ஆட்சியாளர் அலுவலகத்திற்குள் புகுந்து, ஆட்சியாளரைப் பிணையக் கைதியாக அவரது அறையிலேயே வைத்து பூட்டி, போரா டுவதை இந்த திரைப்படம் சித்தரித்தது.

வேறு மொழிகளிலும் ஆதிவாசிகள் மீது நடத்தப் படும் அடக்குமுறை குறித்த திரைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. கோவிந்த் நிஹலானி இயக்கிய முதல் திரைப்படமான 'ஆக்ரோஷ்' தன் மனைவியைக் கொன்றதாக கைதாகும் ஒரு ஆதிவாசி இளைஞனின் மௌனத்தையும், அவனுக்காகச் சட்டப்போராட்டம் நடத்தும் இளம் வழக்குரைஞர் ஒருவரின் பரிதவிப்பையும் சொன்ன அருமையான ஒரு இந்தித் திரைப் படம். மகா நடிகர்கள் நசீருத்தின் ஷாவும் ஓம் புரியும் அற்புதமாக நடித்திருந்தார்கள்.

'கோர்ட்' என்ற மராத்தி திரைப்படம் ஒரு துப்பு ரவுத் தொழிலாளியைத் தன் பாடல்கள் மூலம் தற்கொலைக்குத் தூண்டியதாகக் கூறப்படும் வாசுதேவ் பவர் என்ற மேடைப் (நடிகர் / சமூகப் போராளி) பாடகரை கைது செய்து வழக்குப் பதிவு செய்வதை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டது. இதனை ஒடுக்கப் பட்டவர்களுக்காக நடைபெறும் வழக்கு என்று கூடச் சொல்லலாம்.







தமிழில்கூட இது போன்ற சில படங்கள் வந்திருக்கின்றன. கோமல் சுவாமிநாதன் இயக்கிய 'அனல்காற்று' அவற்றில் ஒன்று. சமீபத்தில் வெளியான 'ஜெய் பீம்' திரைப் படம் இருளர் இனத்தைச் சேர்ந்த தம்பதி காவலர்களிடம் சிக்கி அவதிப்படுவதையும், அவர்களுக்காகப் போராடும் ஒரு வழக்கறிஞர் பற்றிய திரைப்படம். தமிழகம் - கேரளா எல்லைப்பகுதியில் உள்ள ஆனகட்டி பகுதியில் நடைபெறுவது போல அமைந் திருக்கும் 'அலங்கு' என்ற திரைப்படமும் இந்த முதலாளிகள் - ஆதிவாசிகள் மோதல் பற்றிதான் பேசியிருக்கிறது. வெளிவரப் போகும் 'தண்டகாரண்யம்' திரைப்படமும்கூட இதே பாணித் திரைப்படமாகக்கூட இருக்கலாம்.


சமீபத்தில் மலையாளத்தில் வெளியான 'நரிவேட்ட' பரபரப்பான முத்தங்கா போராட்டத்தை அடிப்படையாக வைத்து வெளியான திரைப்படம். வனங்களையும் வனவுயிர் களையும் பாதுகாக்கும் காரணத்தை வைத்து பழங்குடியினர் காடுகளை விட்டு வெளியேற்றப்படுவதை எதிர்த்து போராட்டங்கள் வெடிப்பதை மையப்படுத்தி எடுக்கப்பட்ட திரைப்படம். பலர் வறுமையில் இறந்த பிறகு 2001-ஆம் ஆண்டு முதலமைச்சர் அந்தோனியின் வீட்டின் எதிரே 'அகதிகள் முகாம்' அமைக்கும் அடையாளப் போராட்டங்கள் தொடங்கின. 48 நாட்கள் தொடர் போராட்டங் களுக்குப் பிறகு அவர்களுக்கு நிலம் ஒத்துக்குவதாகவும் வேறு நிவாரணங்களும் தருவதாக அரசு ஒப்புக்கொள்ள வேண்டி இருந்தது. காங்கிரஸ் அரசு அதற்கு பின்னர் வாக்குறுதிகளை நிறைவேற்ற எந்த நடவடிக் கைகளையும் எடுக்காததால், மீண்டும் போராட்டங்கள் நடத்த முனைந்தனர். போராட்டக் குழுவினர் வயநாட்டின் குடிகள் ஆதிவாசி கோத்ரா மகாசபா என்ற அமைப்பின் கீழ் காட்டுக்குள் நுழைந்து குடிசைகள் போட்டு வசிக்க முனைந்தனர்.

முத்தங்கா வனம்

தமிழ்நாடு, கேரள, ஆந்திர, கர்நாடக பழங்கு டியினரின் தாய்மண் என்று அறிவிக்கப் பட்டது. ஏற்கனவே 1960-களில் முத்தங்கா பகுதி சரணாலயம் என்று அறிவிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் வெளியேற்றப்பட்டனர். பின்னர் 1980-களிலும் அங்கு யூகலிப்டஸ் பயிரிடப்பட வேண்டும் என்று சொல்லி மீண்டும் ஒரு வெளியேற்றம் நடைபெற்றது. வெளியேற்றப்பட்ட பழங்குடியினர், வெவ்வேறு சமூக பொருளாதாரப் பின்னணியுள்ள வாழ்விடங்களில் வாழ நிர்பந்திக்கப்பட்டனர்.

வனத்தினுள் நுழைந்த பழங்குடியினர், தங்கள் உரிமைகளை அங்கே நிலைநாட்ட அங்கேயே ஊர்ப் பஞ்சாயத்து போன்ற ஊர்க் கூட்டங்களை நடத்தத் தொடங்கினர். கூடவே பயிரடவும் தொடங்கினர். பஞ்சாயத்து ராஜ் கொள்கையின்படி ஒரு சுயாட்சி நிர்வாகம் அங்கே அரங்கேறியது. இயற்கையான சூழல், நீர் மேலாண்மை போன்றவை அவர்களது முக்கிய நோக்கங்களாயிருந்தன. வெளியேற்றத் திட்டத்தின்படி குடிசைகளுக்கு வன இலாகா நெருப்பு வைத்ததாகவும், வளர்ப்பு யானைகளுக்கு சாராயம் தந்து அவற்றை குடியிருப்புக்களை நோக்கி விரட்டி விட்டதாகவும் குற்றச்சாட்டுகள் வீசப்பட்டன.

பெப்பிரவரி 2003-இல் ஒரு நாள் கேரள காவல் அதிகாரிகளும் வனத்துறையினரும் இணைந்து முத்தங்கா பழங்குடிகளை வெளியேற்ற ஒரு ஆபரேஷனைத் தொடங் கினர். அவர்கள் வைத்திருந்த செக் போஸ்ட்களை உடைத்து உள்ளே நுழைந்தனர். ஏறத்தாழ 200 பேருக்கும் மேற்பட்ட பழங்குடியினர் காட்டினுள் இன்னும் ஆழமாக நுழைந்து எதிர்த்து நின்றனர். கண்ணீர்ப்புகை குண்டுகள் வீசப்பட்டும்கூட அவர்கள் தடிகள், கற்கள் போன்ற







ஆயுதங்களுடன் எதிர்த்துப் போராடினர். போராட்டக் காரர்கள் ஒரு காவலரையும் வனத்துறை ஊழியரையும் பிடித்து வைத்துக்கொண்டனர். நடந்த மோதலில் காவலர் உயிரிழந்தார். வனத்துறை ஊழியர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டார். போலீஸ் துப்பாக்கி சூடு தொடர பல உயிரிழப்புக்கள்! அரசு தரப்பில் ஒருவர் மட்டும் இறந்தார் என்று சொல்ல, பத்திரிகையாளர்களும் நேரில் கண்டவர்களும் உயிரிழப்புக்கள் 5 முதல் 16 வரை இருக்கலாம் என்று கணித்தனர். இவர்களில் பெண்களும் குழந்தைகளும் அடக்கம். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஏறத்தாழ 130 பழங்குடியினர் கைது செய்யப்பட்டனர். போராட்டத் தலைவர்களான சி.கே. ஜானு மற்றும் கீதானந்தன் போன்றவர்களும் கைது செய்யப்பட்டனர். மனித உரிமை ஆர்வலர்கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்தனர். நீதி விசாரணைக் கமிஷன்கள் பின்னர் உருவாக்கப்பட்டன.

'நரிவேட்ட' படம் முழுதும் பல வேட்டைகள், அவற்றில் ஒன்று நாயகனே வேட்டைக்குறியாக மாறுவது! திரைப்படம் கான்ஸ்டபிள் வர்கீசின் கதையைத்தான் சொல்ல ஆரம்பிக் கிறது. அவனது தனிப்பட்ட வாழ்க்கை, அரசு வேலைக்காக அவன் உழைப்பது, காவலர் பணியிலும்கூட ஆய்வாளருக்கு கீழான வேலை அவனுக்கு தேவையில்லை. ஐ.ஏ.எஸ் அல்லது ஐ.பி.எஸ் அவனது இலட்சியம். ஆனால் வீட்டுச் சூழல் கனவுகளுக்கு உரமூட்டக்கூடியதாக இல்லை. கூடவே ஒரு காதலும், புரிந்து கொள்ளும் தன்மையுள்ள ஒரு காதலியும். கடைசியில் கான்ஸ்டபிள் வேலையே அவனுக்கு வாய்க்கிறது. பசுமையான வேம்பநாட்டு ஏரிப்பகுதியில் இருந்து இருண்ட வயநாடு வனங்களுக்கு அவன் பணி நிமித்தமாக செல்ல வேண்டியிருக்கிறது. பணியிடம் முத்தங்கா முகாமுக்கு வெளியே காவலிருக்கும் காவலர்களுடன் அமைகிறது. பணியில் இருக்கும்போது அவன் மனம் அவதியுறும் பழங்குடியினர் பக்கம் சாய்கிறது. அவர்கள் மீது பெரும் அனுதாபம் கொள்கிறான். பணியில் இருக்கும் போது தலைமைக்காவலர் பஷீருடன் பழக நேர்கிறது. அவருடைய நிதானமான போக்கு அவனுக்கு பல விஷயங்களை சொல்லித் தருகிறது என்று சொல்லலாம்!

இந்த முகாமுக்கு உயர் அதிகாரியாக டி.ஐ.ஜி ரகுராம் கேசவதாஸ் நியமிக்கப்படுகிறார். அவர் நல்லவரா, கெட்டவரா என்ற வினா எழுகையில் கெட்டவராக நன்றாகவே செயற் படுகிறார் என்று சொல்லலாம். அவர் பதவியும் பொறுப்பும் அப்படி. ஆனாலும், அவ்வப்போது அவரிடம் இருக்கும் மனிதத் தன்மையும் எட்டிப்பார்க்கிறது.

அடிக்கடி பழங்குடியினருக்கும் காவலர்களுக்கும் அவர் களுடைய எல்லைப்பகுதியில் உரசல்கள் ஏற்படுகின்றன. பரஸ்பரம் நம்பிக்கை என்பது அறவே இல்லாத சூழ்நிலை. ஒரு சிறு குச்சியும் பெருநெருப்பை ஏற்படுத்தும் என்பது போல ஒரு சூழல். பழங்குடிகள் பக்கத்தில் அவர்களுக்கு பேராதரவாகப் புரட்சிப் பெண்மணி 'சாந்தி'யும் அவருடைய தோழர்களும் சுழன்றுகொண்டிருக்கிறார்கள். பின்னர் நாம் மேலே பேசிய முத்தங்கா சம்பவம் அரங்கேறுகிறது.

இந்தத் திரைப்படத்தில் நடிகர்களின் பங்கு அருமையாக அமைந்திருக்கிறது. டோவினோ தாமஸ், வர்கீஸ் வேடத்தில் அருமையாகப் பொருந்துகிறார். ஒரு வேலையற்ற இளைஞனின் மனக்குமுறல்களையும், பின்னர் காவலர் பணியில் இருக்கும்போது பாதிக்கப்படுபவர்களைக் கண்டு வேதனைப்படுவதையும் மிக பொருத்தமாகச் சித்திரித்திருக் கிறார். சுராஜ் வஞ்சாரமூடு, தலைமைக்காவலர் பஷீர் வேடத்தில் அவருடைய அனுபவ முதிர்ச்சியை காட்டுகிறார். தமிழ் இயக்குனர் சேரன், டி.ஐ.ஜி வேடத்தில் வருகிறார். பாத்திரத்திற்கேற்ற உடல்வாகு இல்லாவிட்டாலும் தேர்ந்த நடிப்பால் அந்த கதாபாத்திரத்திற்கு உயிரூட்டுகிறார். சி.கே. ஜானுவின் கதாபாத்திரத்தைப் பிரதிபலிக்கும் சாந்தியாக ஆர்யா சலீமும், பழங்குடி தாமியாக பிரணவ் டியோபினும் நெருப்பாக ஜொலிக்கிறார்கள். 'இஷ்க்' என்ற வெற்றிப்படத்தின் இயக்குநராக புகழ் பெற்ற அனுராஜ் மனோகர் இந்தத் திரைப்படத்தை வெகு நேர்த்தியாக இயக்கியிருக்கிறார். 'யுவபுரஸ்கார்' விருது பெற்ற இளம் எழுத்தாளர் அபின் ஜோசப் இதற்கான திரைக்கதையை உருவாக்கியிருக்கிறார்.

பழங்குடிகளை வெகு நேர்மையாகவும் யதார்த்தமாகவும் சித்திரித்திருக்கிறார்கள். அவர்கள் பேசும் மணிப்பிரவாள மொழியைக்கூட வெகு நேர்த்தியாகத் திரைக்கு கொண்டு வந்திருக்கின்றனர்.அதே போல காவலர்களின் பக்கத்தையும் கூட நேர்மையாகவே காட்டியிருக்கிறார்கள். சமீப காலங் களில் வெளியான சிறந்த மலையாளத் திரைப்படங்களில் ஒன்றான இதை ஓடிடி தளங்களில் பார்க்கலாம்.



jeeva@thaiveedu.com



தனித்துவமான ஆளுமை திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம்

- மல்லிகா செல்வரத்தினம்

காலங்காலமாகப் பெண்ணினம் தன் ஆளுமைப் பண்பைச் சகல துறைகளிலும் நிலைநாட்டி வந்திருப்பதை வரலாறுகளும் இலக்கியங்களும் எடுத்தியம்புகின்றன. அரசியல் களமாகட்டும்; அண்டவெளி ஆய்வாகட்டும்; ஏர் முனைகளாகட்டும்; போர் முகங்களாகட்டும்; இலக்கியத் துறைகளாகட்டும்; இயந்திர இயக்கமாகட்டும்; நாட்டு, வீட்டு நிர்வாகங்களாகட்டும் அனைத்துத் துறைகளிலும் அவர்கள் முத்திரை பதித்தனர், பதிக்கின்றனர். ஆயினும், சமூகத் தடைகளைத் தகர்த்தெறிந்து ஆண்களுக்குச் சமமாக உழைத்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இத்தகைய சாதனைப் பெண்மணிகளுள் ஒருவர்தான் திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அம்மையார்!

ஆங்கிலக் கவிஞன் சேக்ஸ்பியர் கூறியதைப் போன்று, 'உலகமெனும் நாடக மேடையில் நடிப்பதற்கு எத்தனையோ மனிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள். அவர்கள் எல்லோரும் நம் மனதில் நிலைபெற்று நின்று விடுவதில்லை.' சிலர் வருவதும் தெரியாது, போவதும் தெரியாது. வெகுசிலரை மாத்திரம் அவர்கள் மறைந்த பின்னரும் நினைத்துப் பார்க்கிறோம், அவர்தம் செயலைப் போற்றுகிறோம், அந்த விழா நாயகர்களுக்கு விழா எடுக்கிறோம். காரணம், அவர்கள் செய்திருக்கும் செயற்கரிய செயல்கள். இந்தப் பாராட்டுப் பத்திரம் திருமதி வள்ளியம்மை அம்மையாருக்கும் பொருத்தம்.

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் சுழிபுரம் எனும் இடத்தில், ஆசைப்பிள்ளை - செல்லமுத்து தம்பதிகளுக்கு 1938.10.07-ஆம் திகதி மகளாகப் பிறந்த திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்கள், சிறந்த எழுத்தாளரும் கவிஞரும் ஆவார். இவருடன் ஒன்பது சகோதரர்கள் கூடப்பிறந்தனர். நோயின் பிடியில் சிக்கி எழுவர் அடுத்தடுத்து இறந்துவிட, ஒரு தம்பியும் தங்கையுமே எஞ்சினர். தங்கை இலட்சுமிப்பிள்ளை கணித ஆசிரியராக இருந்து, கனடா நாட்டில் காலமாகிவிட்டார். தம்பி பொன்னையா ஓய்வு பெற்ற கல்வி அதிகாரியாக வவுனியாவில் வசிக்கிறார். திருமதி வள்ளியம்மை மூத்த சகோதரி ஆதலால், தம்பி தங்கையர்க்கு அன்னையாகவும் இருந்தார். அவர்களுக்கு அறிவு அமுதூட்டி மகிழ்ந்தார்.

திருமதி வள்ளியம்மையார் ஆரம்பக் கல்வி முதல் SSC வரை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கற்றவர். கற்கும் காலத்திலேயே எழுத்தார்வம் மிக்கவராகத் திகழ்ந்த இவர், வாசிப்பின் மீது தீராக் காதல் கொண்டிருந்தார். வாசிப்பின் பாலிருந்த ஈர்ப்பு இவரை எழுத வைத்தது. எழுத் தாற்றலை வெளிப்படுத்தி ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்ற இவர், பத்திரிகைகளுக்கும் ஆக்கங்கள் எழுதினார். 'நான் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்தில், 'மெய்கண்டான்' என்ற பெயரில் மாணவர் கையெழுத்துப் பத்திரிகை இரண்டு வாரத்திற்கு ஒருமுறை மாணவர் சங்கக் கூட்டத்தில் வாசிக்கப்படும். அதில் சிறுகதை, கவிதை, விடுகதை, நொடி, பழமொழி, துணுக்குகள் முதலியன வெளிவரும். உப பத்திராதிபர், பத் திராதிபர் என்ற பதவிகளில் நான் இருந்தபோது (1953), நிறைய எழுதியுள்ளேன். அதற்கு எங்கள் குருவான பண்டிதர் அமரர் அ. ஆறுமுகம் அவர்கள் தூண்டுகோலாக இருந்தார். அவர் தந்த ஊக்கமும் தன்னம்பிக்கையும் என்னை அதிகம் எழுதத் தூண்டியது.' என்று கூறிய அம்மையாரது சிறுக தைகள் கலைமதி, கலைச்செல்வி, சுதந்திரன், வீரகேசரி, ஜனசக்தி, ஜீவநதி, தாயகம் ஆகிய இதழ்களில் பிரசுரமாகி யுள்ளன.

SSC கல்வியை நிறைவுறுத்திய அம்மையார், யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள அரச நெசவுக் கல்லூரிக்குத் தெரிவாகி நெசவுக் கற்கை நெறி பயின்றார். அத்தோடு, ஆரிய திராவிட பாஷை விருத்திச் சங்கத்தில் இணைந்து பண்டிதர் படிப்பினை மேற்கொண்டு பாலபண்டிதர் தேர்வில் சித்தி பெற்றார். சமஸ்கிருத மொழியிலும் பாண்டித்தியம் பெற்றார். நெசவுக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தபின் 21-ஆவது வயதில் அரச நெசவு ஆசிரியராகிப் பல்வேறு இடங் களில் பணியாற்றினார். அரச பணி நிமிர்த்தம் சிங்கள மொழியையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். இவர் ஆங்கில மொழியிலும் சிறந்த பாண்டித்தியம் உடையவர்.

இவர் நெசவுக் கல்லூரியில் கற்கும் காலத்தில் யாழ். கொல் லங்கலட்டியைச் சேர்ந்த பொதுவுடைமைவாதியான K.A. சுப் பிரமணியத்தைக் காதலித்து வந்தார். சாதி வேறுபாடு காரணமாக இருவரது பெற்றோர்களும் திருமணத்திற்கு மறுப்புத் தெரிவிக்க, 1962-ஆம் ஆண்டு தைப்பூசத் தினத் தன்று இருவரும் கலப்புத் திருமணம் செய்துகொண்டனர். உலகப் பாட்டாளிகளின் விடுதலைச் சின்னமான அரிவாளும் சம்மட்டியும் பதித்த சின்னமே திருமதி வள்ளியம்மையாரின் தாலிச் சின்னமாகியது. சாதிய இறுக்கத்தால் கட்டுண்டு கிடந்த யாழ்ப்பாணத்துக்கு முற்போக்கு வித்தினைத் தூவி, சமூக சீர்மியத்தினை இடித்துரைத்தனர் இத்தம்பதியர்.

சாதியைக் காரணம் காட்டி இவர்களை எந்த வீடுகளிலும் ஏற்க மறுத்ததால், பல வாடகை வீடுகளில் வசிக்க நேரிட்டது. ஆனாலும், திருமதி வள்ளியம்மையார் எதற்கும் சளைக்காத புதுமை விரும்பியாகத் திகழ்ந்தார். இவர்களின் கருத்தொரு மித்த இல்லற வாழ்க்கையின் பயனாக சத்தியராசன் (மீரான் மாஸ்டர்), சத்தியமலர், சத்தியகீர்த்தி எனும் முத்தான மூன்று பிள்ளைச் செல்வங்கள் கிடைத்தனர். மூவரையும் கண்போல காத்துச் சிறப்புற வளர்த்தனர். வறுமை ஒரு பக்கம், சொந்த வீடின்மை மறுபக்கம் எனப் பல துன்பங்களைச் சந்தித் தாலும், வந்தோருக்கெல்லாம் விருந்தளித்துச் செம்மையுற வாழ்ந்தனர்.

'காத லொருவனைக் கைப்பிடித்தே – அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து,
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி'

என்ற அமரகவி பாரதியின் வாக்கிற்கிணங்க, சமூக விடுத லைக்காகவும் தீண்டாமைக்கு எதிராகவும் குரல் கொடுத்துப் போரிட்டு வந்த கணவரது கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரி விக்காமல் அவரது கொள்கைகளைப் பின்பற்றி வாழ்ந்து வந்த திருமதி வள்ளியம்மையார், வீட்டுக்குள்ளே பெண்கள் முடங்கியிருந்த காலத்தில் கணவருடன் இணைந்து அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தவர். பெண் முன்னேற்றத் திற்காக அதிகமதிகம் உழைத்தவர். பெண்கள் எப்பொழுதும் தங்கள் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் என்று உரைத் தவர்.

பொதுவாக எழுத்தாளர்களுள் சமூக ஆர்வம் மிகுந்திருக்கும். இதற்குத் திருமதி வள்ளியம்மையாரும் விதிவிலக்கல்ல. இவர் பதின்ம வயது முதல் இறுதி மூச்சை நிறுத்தும்வரை சமூக சேவையில் முனைப்புடன் ஈடுபட்டு வந்தவர். அதுமட்டு மல்ல, கல்விப் பணியிலும் ஈடுபட்டவர். இலங்கை முற் போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினராக இருந்து எழுதும் கரங்களை ஊக்குவித்தவர். வடக்கில் மாதர் சங்க உருவாக் கத்திற்கு வித்திட்டு, சங்கத்தின் உதவிப் பொருளாளராகவும் கடமையாற்றியவர். தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாடுகளிலும் தாயகம் இதழின் ஆசிரியர் குழுச் செயற் பாடுகளிலும் விருப்புடன் ஈடுபட்டவர்.

தனக்கென ஒரு குடும்பம் அமைந்த பின்னர் அந்தக் குடும்பச் சுமைகளின் அழுத்தம் பலரது எழுத்தார்வத்தை நசுக்கி விடு வதுண்டு. சில பெண்களது குடும்பங்களில் அவர்களது எழுத் தார்வத்தைத் தூண்டிவிடக்கூடிய சூழ்நிலைகளும் ஆதரவுக் கரங்களும் கிடைக்காமற் போய்விடுவதும் உண்டு. இந்தத் துன்பியல் திருமதி வள்ளியம்மையாரையும் விட்டுவிடவில்லை. இவரது கணவர் பொது வேலைகளில் முழுநேரப் பணியாளர் ஆகிவிட, குடும்பத்தின் அனைத்துப் பொறுப்புக்களையும் இவரே சுமந்தார். இவரது ஊதியத்திலேயே குடும்பத்துக்கான உணவு, உடை, கல்வித் தேவை, வீட்டுக்கு வருவோருக்கான விருந்தோம்பல், இன்னபிற செலவுகள் அனைத்தும் நிறைவேறின. குடும்பச்சுமை கண்டு மனம் கோணாமல் அனைத்தையும் தனியொருத்தியாகச் செவ்வனே நிறை வேற்றிய அம்மையார், அனைவரையும் தாயைப் போல பேதமற்று நேசித்தவர்.

இவரது குடும்பச் செலவுகள் நாளாந்தம் அதிகரித்தன. பொதுச் செயற்பாடுகளில் கணவர் மும்முரமாக இயங்கிக் கொண்டிருந்தார். மூத்த மகன் சத்தியராசன் (மீரான் மாஸ்டர்) குடும்பப் பொறுப்புக்களில் பங்கெடுப்பார் என்று திருமதி வள்ளியம்மையார் நினைத்திருந்தார். இவரது எண்ணத்திற்கு மாறாக மகன் இன விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். இதனால், 1984-ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் சிறைப்பிடிக்கப்பட்டார். மகன் சிறையில் இருந்த காலத்தில் சிறைச்சாலைக்கும் வீட்டிற் குமாக ஓய்வற்றுத் திரிந்த திருமதி வள்ளியம்மையார், மகனின் விடுதலைக்காக வேண்டாத தெய்வங்கள் இல்லை.

யாழ். குருநகர் இராணுவ முகாம், கோட்டை இராணுவ முகாம், பூசா இராணுவ முகாம், வெலிக்கடை சிறைச்சாலை, மகசீன் சிறைச்சாலை எனப் பல இராணுவ முகாம்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் கால்கள் கடுக்க நடந்தார். மகனை மீட்க அலைந்தார். இவரது தொடர்ச்சியான முயற்சிகள் மகனை விடுதலை செய்தன. எனினும், இவரது வாழ்வில் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. 1988-இல் சம்பவித்த கணவரின் இறப்பு, 2000-ஆம் ஆண்டில் வாகன விபத்தில் உயிர்நீத்த மகனின் இழப்பு என அடுத்தடுத்துத் துக்கங்கள் இவரை ஆட்கொண்டன. இருப்பினும், துக்கத்தைப் பலமாக மாற்றி வாழ்ந்தவர்.

திருமதி வள்ளியம்மையார் கணவரின் இறப்பின் பின்னர் சிங்கப்பூருக்குச் சென்று இளையமகனுடன் வசித்து வந்த காலத்தில், மீண்டும் புதுவீச்சுடன் எழுதத் தொடங்கினார். எழுதுவதற்கான வாய்ப்புகளைச் சிங்கை மண் அவருக்கு அளித்தது. 'நான் சிங்கப்பூரில் இருந்த காலத்தில் கவிமாலை, கவிச்சோலை ஊடாக ஒரு கவிஞராக மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டேன். அங்குள்ள 'தமிழ் முரசு' பத்திரிகை ஞாயிறு வெளியீடுகளில் ஈரம், நான், முள்மகுடம், கவிதையில் சிங்கை சிரிக்கிறாள், படிக்கட்டுகள் என்று பல தலைப்புகளில் எழுதியுள்ளேன். அதைவிட ஐந்து கவிதை நூல்களில் கூட்டாகப் பல கவிதைகளை மேற்படி இரண்டு கவி அமைப்புக்கள் வெளியிட்டன. சிங்கை மண் தமிழ் மொழிக்கு மிகுந்த வரவேற்பு அளிக்கும் மண்' என்று பெருமையுடன் கூறிய அம்மையார், 'சிங்கை ஔவையார்' என்று சிங்கப்பூர் நண்பர்களால் அழைக்கப்பட்டவர்.

இவர் சிங்கப்பூரில் வசித்த காலத்தில் மலாய் மொழியைக் கற்றுத் தேர்ந்தவர். கணினி அறிவையும் பெற்றுக்கொண்டவர். இவரிடம் எப்போதும் ஒரு சிறியரக மடிக்கணினி இருக்கும். இதன் மூலம் தன் எழுத்துக்களைத் தட்டச்சுச் செய்து பத்திரிகைகளுக்கு அனுப்பியதுடன், முகநூலிலும் பதிவேற்றம் செய்துவந்தார். சிங்கப்பூரில் கவிமாலை, கவிச்சோலை அமைப்புகளுடன் இணைந்து பல கவிதைகளை இயற்றி வாசித்தார், விவாத அரங்குகளில் முழங்கினார். பல பட்டங்களும் பரிசில்களும் பெற்றார். அன்றிலிருந்து பல நூல்களை எழுதத் தொடங்கியவர், இறக்கும் வரை எழுதிக்கொண்டே இருந்தார்.

சிங்கப்பூரில் வசித்தது போதும் என்று நினைத்த திருமதி வள்ளியம்மையார், தன் மிகுதிக் காலங்களைப் பிறந்த மண்ணில் கழிக்க ஆசைப்பட்டார். 2019-இல் இலங்கைக்கு வந்த இவர், 'சத்தியமனை'வீட்டில் மகள் சத்தியமலர் குடும்பத்தினருடன் வசித்து வந்தார். இலங்கை திரும்பிய இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மூன்றாவது தமிழியல் ஆய்வு மாநாட்டில், 'புலைமையாளர்' விருது வழங்கிக் கௌரவித்தது. வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகம் 'கலைவாரிதி' பட்டம் கொடுத்துக் கௌரவித்தது.

வாழ்க்கைப் பயணத்தைக் கடக்கின்றபோது புதிய உறவுகளைச் சந்திக்கும் வாய்ப்புகள் அதிகம் ஏற்படும். சேர்ந்து பழகும் காலங்களில் அன்பைக் கொடுத்து, அவர்களிடமிருந்தும் கொஞ்ச அன்பைப் பெற்றுப் பண்டமாற்று அடிப்படையில் பாசத்தைப் பரிமாறிக்கொள்கின்றோம். இத்தகைய உறவுச் சேர்க்கையில் முகநூல் வாயிலாக எனக்கு அறிமுகமாகிய அம்மையார், 'வெற்றிக்கு வலிகள் தேவை' என்ற நூல் வெளியீட்டிற்கு அழைப்பு விடுத்து முகமுகமாய்ச் சந்தித்துக் கொண்டார். அதுமுதல் அவரது குடும்பத்தில் என்னையும் ஒருத்தியாய் இணைத்து அன்பு பாராட்டிய அவரது தாயன்பு என்னுடன் இரண்டறக் கலந்தது.

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே, அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று'

என்ற ஔவை மொழிக்கிணங்க, அம்மையாருடன் மணிக் கணக்கில் பேசி மகிழ்ந்தாலும் இன்னும் இன்னும் பேச மீதம் இருக்கின்றது என்ற அவாவை உள்ளம் அள்ளித் தரும். இல்லம் நாடி வருவோரை முகமலர்ந்து உபசரிக்கும் இவரது பண்பு தமிழரின் விருந்தோம்பலைச் சொல்லித்தரும். 'அடையா நெடுங்கதவும் அஞ்சேல் என்ற சொல்லும்' என்ற வரிகளால் சடையப்பன் கொடையைக் கம்பர் புகழ்ந்து பாடுவார். இந்த வரிகள் அம்மையாரின் கணவருக்கு மிகவும் பிடித்த மானவை என்று அவர் அடிக்கடி கூறுவார். சடையப்பன் இல்லம் போலவே சத்தியமனையும் இருப்பதை நான் கண்ணுற்றேன்.



திருமதி வள்ளியம்மையாரின் 'முகவரிகள்' அவரது அயர்ச்சியற்ற உழைப்பை வெளிச்சம் போட்டுக் காட்டின. இந்தச் சமூகத்திற்கு இன்னும் நிறையச் செய்ய வேண்டும் என்ற வேணவாவை அவரது பேனா மைகள் தீட்டின. வாழ்க்கை கற்றுக்கொடுத்த அத்தனை பாடங்களிலும் தேர்ச்சியுற்ற அம்மையார், ஒரு நடமாடும் நூலகமாகத் திகழ்ந்தார். கணவரின் ஞாபகார்த்தமாகச் சத்தியமனை வளாகத்தில் 'கே.ஏ. சுப்பிரமணியம் படிப்பகம்' என்ற டியிற்றல் மாடி நூலகம் ஒன்றினை அமைக்கத் தீர்மானித்தார். இவரது எண்ணத்தைப் புரிந்துகொண்ட மகள், தன் பிள்



> “பூமியில் பிறக்கின்ற அத்தனை மனிதர்களும் சிறக்கின்ற வரலாறு இல்லை. தானும் வாழ்ந்து, தக்காரையும் வாழ வைக்கும் மனிதர்களை உலகம் மறப்பதும் இல்லை, பொறையுடன் நிறைவாழ்வு வாழ்ந்த அம்மையாரையும் உலகம் மறக்காது! வரலாறும் துறக்காது!”

ளைகளின் உதவியுடன் நூலகம் அமைக்கும் பணியை ஆரம் பித்தார். இந்த நூலகத்திற்கான அடிக்கல் கணவருடைய 30-ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இடப்பட்டது. நூலக அத்திபாரத்தினுள் சம்பிரதாயப் பொருட்கள் இடுவதை விடுத்து, கணவருடைய அஸ்தியை இட்டுக் கட்டியமை அம் மையாரின் புரட்சிகர மனப்பாங்கை எடுத்துக்காட்டுகின்றது.

இந்நூலகம் அமைக்கும் பணிக்கு இவரது மகன் சத்தியகீர்த் தியும் உதவி புரிந்ததுடன், நூலகத்திற்குரிய நம்பிக்கை நிதி யத்தையும் உருவாக்கினார். அறுகு போல் வேரூன்றி வளர் ந்த நூலகம் இன்று ஆல்போல் தழைத்துப் பலரும் பயன் பெறும் நிழற்குடையாக இருக்கின்றது. அறிவுத்தாகம் உடை யோரை அரவணைத்து அன்பு பாராட்டிவரும் இந்நூலகம், மாணவச் செல்வங்கள் மத்தியில் எண்ணற்ற போட்டிகளை நடத்திப் பரிசில்களும் பாராட்டுக்களும் வழங்கி வருகின்றது. அம்மையாரின், ‘பாட்டி சொன்ன கதைகள்’ நூல் வெளியீடு இவ்வருடம் இடம்பெற்ற (ஏப்ரல்-20) தினத்தன்று சிறுவர் நூலகம் அமைப்பதற்கான அடிக்கல்லும் இந்நூலகத்தின் அருகே இடப்பட்டமை சிறார்களின் கல்வி மீது அம்மையார் கொண்டிருந்த அக்கறையைக் காட்டுகின்றது.

பழமரத்தை நாடிப் பறவைகள் வருவது போல இவரைத் தேடி அன்பர்களும் நண்பர்களும் நாளாந்தம் வந்துகொண் டிருந்தனர். முகம் முழுக்கப் புன்னகை நிரப்பி, இருகரம் கூப்பி வரவேற்று, அன்பு கலந்த மென்மைக் குரலில் உரையாடும் அம்மையாரின் தமிழ் உச்சரிப்பு மெச்ச வைக்கும். எல்லோர் மீதும் காட்டும் அக்கறை, பெற்றவள் அன்பை ஒத்திருக்கும். கடந்த வருடம் இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய அவர்களும் அம்மையாரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், ஆசிகளும் பெற்றார். தன்னை நாடி வந் தோரையெல்லாம் இன்முகத்துடன் வர வேற்று அளவளாவி மகிழ்ந்த அம்மையார், ‘அடிக்கடி இங்கே வாருங்கள்’ என்று பேரன்புடன் கூறுவார்.

காலத்தின் பெறுமதி தெரிந்தவர்கள் நொடிப்பொழுதையும் வீணாக்க விரும்புவதில்லை. இதற்கு வள்ளியம்மை அம்மை யாரும் விதிவிலக்கில்லை. உறங்கி எழும் நேரம் தவிர, எஞ்சிய தன் பொன்னான நேரங்களைப் பயனுறச் செல விட்டார். எழுத்தும் வாசிப்பும் இவரது இரு விழிகள் ஆயின. இவரது திறமைகள் தமிழுடன் இணைந்து பல மொழிகள் பேசின. இவரது நடை தளர்ந்த பின்பும் கையெழுத்து அச் சுப்பதித்தது போல மிக அழகாக இருக்கும். முதிர்ந்த வயதிலும் தன் கைகளால் அன்பானவர்களுக்குக் கடிதம் எழுதி நலம் விசாரித்த பண்பினையும் வாழ்த்துப்பா எழுதிக் கொடுத்த பாசத்தையும் இவரிடம் கண்டேன். எனக்கும் ஒரு வாழ்த்துப்பா எழுதித் தந்தமையை இவ்விடத்தில் நன்றி யுடன் பதிவு செய்கிறேன். ‘உள்ளங்கையில் உலகம், விரல் நுனியில் விபரம்’ என்று சொல்லுமளவுக்கு கைபேசிக ளுக்குள் ஆயிரம் ஆயிரம் கதைபேசிகள். இணையத்தில் உலாவி ஊர்ப் புதினம் முதல் உலகப் புதினம் வரை அறிந் திடும் அம்மையார், முகநூல் வழியாக எண்ணற்ற சொந்தங் களையும் சம்பாதித்தவர். தனக்குப் பிரியமானவர்களின் பெயரைக் ‘குறுக்குத் தையல் துணியில்’ தைத்து அன்பளித் தவர். அவற்றை எனக்கும் மகளுக்கும்கூட அளித்திருந்தார்.

சாதிப்பதற்கு வயது ஒரு தடையல்ல என்பதனை நிரூபித்த அயர்ச்சியற்ற பெண் ஆளுமையான இவரை முதுமை ஆட்



கொண்டும் முழுநிலவாய் ஒளிர்ந்தவர், பூரண பொற்குடமாய் மிளிர்ந்தவர். எண்பதுகளைத் தாண்டியும் எழுத்துலகில் நிலைத்திருந்தவர், நினைவாற்றலைத் தொலைக்காதிருந்தவர். தேடித் தேடிப் புதுப்புது விடயங்களைக் கற்பதில் ஆர்வமாய் இருந்தவர். 86-ஆவது வயதில் 'ஓகன்' இசைக்கருவி இயக்கும் கலை பயிலத் தொடங்கியமை இதற்குச் சான்று. முதுமையில் முடங்கி, மூலையில் ஒடுங்கி விடாது இயங்கிய இவரது பேராற்றல் வியப்பளிக்கிறது. 'கல்வி முக்கியம். அதற்கு வயது ஒரு தடையல்ல. நான் முப்பது வயதைக் கடந்த பின்புதான் சிங்கள மொழியைக் கற்றேன். அறுபது வயதைத் தாண்டிய பின்புதான் கணினி அறிவைப் பெற்றேன். அந்தக் காலப்பகுதியில்தான் 'மலே' மொழியையும் கற்றேன். சாதிப்பதற்கு வயது ஒரு தடையல்ல, அது எதற்கும் எல்லை வகுக்காது.' என்று கூறிய அம்மையார், சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.



எண்ணங்களால் இமயமென உயர்ந்து, சொல்லும் செயலும் ஒன்றென வாழ்ந்து, மாதர்குல மாணிக்கமாய்த் திகழ்ந்த அம்மையார், தையல் தொழிலில் விற்பன்னர். சிறந்த பாடகர். சோதிடக்கலையிலும் தேர்ந்தவர். தன் எழுத்துக்களால் ஈழத்து எழுத்துலகின் துருவ நட்சத்திரமாக ஒளிர்கிறார். தனது பாடசாலைக்கால அனுபவங்களைத் தொகுத்து, 'பசுமையான நினைவுகளில் பண்ணாகம் மெய்கண்டான்' என்ற தலைப்பில் வெளியிட்டார். இவரது கவிதைகளையும் சிறுகதைகளையும் தொகுத்து, 'வெற்றிக்கு வலிகள் தேவை' எனும் தலைப்பில் தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு செய்தது. இந்நூலில், போர்க்காலங்களில் தனக்கு ஏற்பட்ட அவலங்களையும் வலிகளையும் எழுதியுள்ளார். சமகாலச் சமூகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கருத்தை மையமாகக் கொண்டு 'கற்க கசடற' என்ற குறுநாவலை வெளியிட்டார். இந்நாவல் மூவினத்தவரின் ஐக்கியத்தைப் பேசும் சிறந்த படைப்பு.

இவர் கண்முன்னே காணும் காட்சிகளை அல்லது தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கதையாக எழுதுவதில் தேர்ந்தவர். அந்தவகையில், தன் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களையும் அவற்றை எவ்வாறு எதிர்கொண்டு கடந்து வந்தார் என்பதையும் அனுபவ மொழியாக, 'வாழ்வின் சந்திப்புகள்' என்ற தலைப்பில் முகநூலில் பதிவிட்டு வந்தார். இப்பதிவுகள் பார்வையாளர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. இப்பதிவுகளைத் தொகுத்து, 'ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புகள்' என்ற தலைப்பில் 2023-ஆம் ஆண்டு வெளியிட்டார். இவ்வருடம், 'பாட்டி சொன்ன கதைகள்' என்ற தலைப்பில் சிறுவர் கதைப்புத்தகம் ஒன்றினையும் வெளியிட்டுள்ளார். இரண்டாவது பகுதியான 'பாட்டி சொன்ன கதைகள் - 2' என்ற நூல் தொகுப்பை கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகம் விரைவில் வெளியிடவுள்ளது.

மேலும், இவர் எழுதிய 'மனோன்மணீயம்' என்ற கவிதை நாடக நூல் 2025.07.26-ஆம் திகதி இடம்பெற்ற அம்மையாரின் நினைவுப்பகிர்வு நிகழ்வில் வெளியிடப்பட்டது. இந்நூல் இளம் தலைமுறையின் காதல் அனுபவம், வீரம், தமிழ்மேல் கொண்ட பற்று போன்ற விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அம்மையார் எழுதி வைத்துள்ள, 'என்னூர் சுழிபுரம்', 'புராண இதிகாசக் கதைகள்' போன்ற நூல்களை கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகம் வெளியீடு செய்யவுள்ளது.

மனைவியாக, தாயாக வாழ்வில் சவால்கள் பலவற்றைச் சந்தித்தபோதெல்லாம் துவண்டுவிடாது போராடிய திருமதி வள்ளியம்மையார், மூச்சுள்ளவரை மானுடநேயம் உள்ளவராக, சமுதாயப் பிரக்ஞை உடையவராக இருந்தவர். பெண் என்பவள், 'கூடிக் கலையும் காகக் கூட்டம் அல்ல. அவள் கூடிப் பொழியும் மேகக் கூட்டம்' என்பதற்கு நிகராக அம்மையார் கொடையும் அந்த மழையும் ஒன்று. இவர் எத்தனையோ வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் அளித்து வாழ வைத்த தெய்வம்.

திருமதி வள்ளியம்மையாரை நான் இறுதியாகச் சந்தித்தது, 'பாட்டி சொன்ன கதைகள்' நூல் வெளியீட்டிற்குச் சென்றிருந்தபோதுதான். இதுவே இறுதிச் சந்திப்பாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. நூல் வெளியீட்டு நிகழ்வு நிறைவுற்ற பின், நீண்ட நேரம் அவருடன் உரையாடினேன். அவரது உரையாடல் அன்றைய தினம் குறைந்திருந்தது. பேசுவதற்கு அவர் மிகவும் சிரமப்பட்டார். மூப்பு நோயால் அவர் நொந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. 'நிலா! என் உடம்புக்கு ரொம்ப முடியவில்லைப் பிள்ளை. என்னைக் கடவுள் சீக்கிரம் கொண்டு போயிடனும்.' என்று கண்கள் கரிக்க, மனம் வலிக்கச் சொன்னார். இவைதான் அவர் என்னுடன் இறுதியாகப் பேசிய வார்த்தைகள். ஆறுதலை மட்டும் அவருக்களித்து விடைபெற்ற என் மனமெங்கும் பாரம்.

இவரின் எழுத்துப்பணி மற்றும் கலைப்பணியைப் பாராட்டி வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகம், 'கலாபூஷணம்' விருது வழங்குவதற்குப் பரிந்துரைத்தது. இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை அவருக்குத் தெரிவிப்பதற்கும் அவர் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கும் யூன் 26-ஆம் திகதி கலாசார உத்தியோகத்தர்கள் அவருடைய இல்லத்திற்குச் சென்றபோது, அவர் மண்ணுலக வாழ்வுக்கு விடை கொடுத்து விண்ணுலகம் சென்றிருந்தார்.

பூமியில் பிறக்கின்ற அத்தனை மனிதர்களும் சிறக்கின்ற வரலாறு இல்லை. தானும் வாழ்ந்து, தக்காரையும் வாழ வைக்கும் மனிதர்களை உலகம் மறப்பதும் இல்லை, பொறையுடன் நிறைவாழ்வு வாழ்ந்த அம்மையாரையும் உலகம் மறக்காது! வரலாறும் துறக்காது!

mallika@thaiveedu.com



நாட்டுப்புறக் கலைகளே
நம் கலாசாரத்தின் உயிர்நாடி

தேவசகாயம் சந்தியாகு

இலங்கை பல்வேறு இன மத மொழி பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு பண்பாட்டு செழிப்புமிக்க நாடாகும். இந்தத் தீவு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே தனித்துவமான கலாசார மரபுகளை வளர்த்துக்கொண்டிருக்கின்றது. அந்த மரபுகளின் மையத்தில் திகழ்வது நாட்டுப்புறக் கலைகள். நாட்டுப்புற கலைகள் என்பவை வெறும் கலைப் பாடுகள் அல்லது பொழுதுபோக்கு சாதனங்கள் அல்ல. அவை மக்களின் வாழ்வியல் அனுபவங்களின் பிரதிபலிப்பும் சமூகத்தின் அடையாளமும் தலைமுறை தலைமுறையாகப் பரம்பரை வழியாக பரவிய பண்பாட்டு சின்னங்களும் ஆகும். நாட்டுப்புறக் கலைகள் வாய்மொழி வழியாகச் சொல்லப்பட்ட கதைகள், பாடல்கள், நடனங்கள், நாடகங்கள், கைவினைக் கலைகள், புராணங்கள் எனப் பல வகைகளில் வெளிப்படுத்தப்பட்டன. அவற்றின் மூலம் மக்களின் அன்றாட வாழ்க்கையில் மகிழ்ச்சியும், துக்கமும், ஆன்மீக நம்பிக்கையும், சமூக ஒற்றுமையும் வெளிப்பட்டன.

இலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனியான நாட்டுப்புறக் கலை வடிவங்களை உருவாக்கினாலும் அவற்றின் அடிப்படை நோக்கம் ஒன்றுதான். அது மக்களை ஒன்றிணைப்பதும், ஒழுக்கத்தையும், நிறைவையும், கற்பிப்பதும், சமூகத்தில் மகிழ்ச்சியையும் ஒற்றுமையையும் வளர்ப்பதும் ஆகும். இந்தக் கலை வடிவங்கள் பல காலம் மக்களின் வாழ்வில் உயிருடன் இருந்தன. ஆனால் காலப்போக்கில் உலக மயமாக்கல், நவீன தொழில்நுட்பம், நகரமயமாக்கம் போன்ற பல்வேறு காரணங்களால் அவை அழிந்து செல்லும் அபாயத்தில் சிக்கியுள்ளன.

முக்கியமான நாட்டுப்புறக் கலை வடிவமாக நாட்டுப்புறப் பாடல்கள் திகழ்கின்றன. தமிழர்களின் வாழ்வில் வயல் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், திருமணப் பாடல்கள், இரங்கல் பாடல்கள் போன்றவை சிறப்பான இடம்பெற்றிருந்தன. வயல் வெளிகளில் உழைக்கும்போது ஆண்களும் பெண்களும் இணைந்து பாடிய வயல் பாடல்கள் உழைப்பின் சோர்வை மறக்க செய்ததோடு மட்டுமல்லாமல் ஒற்றுமையையும் சமூகப் பிணைப்பையும் வலுப்படுத்தின. சிறுவர்களுக்குப் பாடப்பட்ட தாலாட்டு அம்மாவின் பாசத்தையும் குழந்தையின் இனிமையையும் வெளிப்படுத்தின. திருமணங்களில் பாடப்பட்ட திருமணப் பாடல்கள் மகிழ்ச்சியையும் கொண்டாட்டத்தையும் மட்டுமல்லாமல் குடும்ப உறவுகளை வலுப்படுத்தும் ஊடகமாக இருந்தன. அதேபோல் இறப்பு நிகழ்வுகளில் பாடப்பட்ட இரங்கல் பாடல்கள் இறந்தவரின் நினைவையும் குடும்பத்தின் துயரத்தையும் வெளிப்படுத்தின. சிங்கள மக்களிடமும் பல்வேறு பண்டிகைகளிலும், விவசாய தொடக்க நிகழ்வுகளிலும் பாடப்பட்ட பாரம்பரிய பாடல்கள் மக்களின் நம்பிக்கையையும் ஆன்மீக உணர்வையும் வெளிப்படுத்தின. ஆனால், இன்றைய தலைமுறையினர் பெரும்பாலும் மேற்கத்தேய இசை, திரைப்படப் பாடல்கள், நவீன இசை ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டதால் இத்தகைய பாடல்கள் மறைந்து வருகின்றன. இன்று வயல் வேலைகளில் உழைப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதால் அவை பாடப்படும் சூழலும் குறைந்துவிட்டது.

நாட்டுப்புற நடனங்கள் மக்களின் வாழ்வியல் கலாசாரத்தை வெளிப்படுத்தியவை. தமிழர்களின் கோலாட்டம், கும்மி, காவடி போன்றவை மக்களின் ஒற்றுமையையும் ஆன்மீக உணர்வையும் சமூகத்தில் பெண்களின் பங்கையும் பிரதிபலித்தன. கோலாட்டம் பெரும்பாலும் திருமணங்களில் சிறுமிகள் மற்றும் பெண்கள் வட்டமிட்டு ஆடிய நடனம் ஆகும். அதேபோல் கும்மி பெண்கள் வட்டமாக நின்று கைகளை அடித்துக்கொண்டு பாடி ஆடிய நடனம். இந்நடனங்கள் சமூக வாழ்வின் மகிழ்ச்சியையும் சமூகப் பங்குபெற்றலையும் வெளிப்படுத்தின. காவடி நடனம் முருகன் கோவில் திருவிழாக்களில் பக்தியுடன் ஆடப்பட்டது. உடலின் சிரமத்தையும் தாங்கிக்கொண்டு பக்தியின் உச்ச நிலையை வெளிப்படுத்தும் நடனமாக அது விளங்கியது. சிங்கள மக்களிடம் கண்டிய நடனம், சப்ரகமுவ நடனம் போன்றவை இருந்தன. குறிப்பாக ஆடப்படும் இந்நடனங்கள் கோவில்களில் ஆன்மீக வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டதோடு வீர உணர்வையும் மக்களின் வலிமையையும் பிரதிபலித்தன. ஆனால், இன்றைய காலத்தில் இந்நடனங்கள் சமூக வாழ்வின் அன்றாட நிகழ்வுகளில் காணப்படுவதில்லை. சுற்றுலா பயணிகளுக்கான

> ***“இலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனியான நாட்டுப்புறக் கலை வடிவங்களை உருவாக்கினாலும் அவற் றின் அடிப்படை நோக்கம் ஒன்றுதான். அது மக்களை ஒன்றிணைப்பதும், ஒழுக்கத்தையும், நிறைவையும், கற்பிப்பதும், சமூகத்தில் மகிழ்ச்சியையும் ஒற்றுமையையும் வளர்ப்பதும் ஆகும்.”***





“உப்பு குளி கலைமுறையானது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பாரம்பரியமாக இடம்பெறும் முக்கிய நாட்டுப்புற கலைகளில் சிறப்பிடம் பெறுகின்றது. இது உழைப்பு, வேளாண்மை, கடல் வாழ்க்கை, காதல் மற்றும் வழிபாடு போன்ற கிராமிய வாழ்க்கை அம்சங்களை வெளிப்படுத்தும் கலையாகும்.”

நிகழ்ச்சிகளில் மட்டும் அவை காட்சியளிக்கின்றன. இதனால் அவை மக்களின் வாழ்விலிருந்து சுலபமாகப் பிரிந்து செல் கின்றன.

இலங்கையின் தென்கிழக்கு மற்றும் கரையோரப் பகுதிகளில் (மாத்தறை, அம்பாந்தோட்டை, காலி போன்ற இடங்களில்) இடம்பெறும் ஒரு முக்கியமான நாட்டுப்புற நாடக மற்றும் முகமூடி நடனக் கலையாக கோலம் காணப்படுகின்றது. இது கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையையும், புராணக் கதை களையும் நகைச்சுவையையும் மற்றும் முகமூடி நடனங்களின் மூலம் வெளிப்படுத்தும் தனித்துவம் கொண்டவை. வண்ணம யமான முகமூடிகள் இசை மற்றும் நாடகப் பாணியுடன் கூடிய இந்தக் கலை மக்களுக்கு மகிழ்ச்சியையும் சமூக சிந்தனை யையும் ஒரே நேரத்தில் தரக்கூடியது.

உப்பு குளி கலைமுறையானது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பாரம்பரியமாக இடம்பெறும் முக்கிய நாட்டுப்புற கலைகளில் சிறப்பிடம் பெறுகின்றது. இது உழைப்பு, வேளாண்மை, கடல் வாழ்க்கை, காதல் மற்றும் வழிபாடு போன்ற கிராமிய வாழ்க்கை அம்சங்களை வெளிப் படுத்தும் கலையாகும். உப்பு குளி பெரும்பாலும் கூட்டுப் பாடல்கள், நடனங்கள், எளிய தாளங்கள் ஆகியவற்றின் மூலம் நிகழ்த்தப்படும். இதன் மூலம் மக்கள் ஒன்றிணைந்து பாடி ஆடி தங்களது சமூக வாழ்க்கையை கலை வடிவில் வெளிப்படுத்துகின்றனர்.

இலங்கை தமிழர்கள் மத்தியில் அர்ஜுனன் தபசு சிறப்பிடம் பெறுகின்றது. இது இந்திய இதிகாசமான மகாபாரதத்தில் இடம்பெறும் அர்ஜுனனின் தவப்பிரயாசத்தினை (தவம் செய்த கதை) அடிப்படையாகக் கொண்ட கூத்து. தமிழர் நாட்டுக் கூத்து மரபில் மதம் மற்றும் புராணக் கதைகள் எடுத் துரைக்க இது முக்கிய பங்கு வகிக்கிறது.

பாஸ்கா என்பது இலங்கையில் வாழும் கத்தோலிக்கத் தமி ழர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படும் ஒரு கலை வடிவம் ஆகும். இயேசு கிறிஸ்துவின் துன்பப்பாதை (Passion), சிலுவை ஏற்றம் (Crucifixion), மற்றும் உயிர்த்தெழல் (Resurrection) ஆகிய நிகழ்வுகளை இவ்வடிவம் வெளிப்படுத்து கின்றது. இது கத்தோலிக்கச் சமூகத்தினரின் பாரம்பரியத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

புத்தருக்கான அர்ப்பணிப்பையும், அரச வம்சத்தின் வலிமை யையும், இயற்கையின் சக்திகளையும் வெளிப்படுத்தும் ஒரு வழிபாட்டுக்கலையாக கண்டிய நடனம் குறிப்பிடப்படுகின் றது. இதனை உடரட்ட நடனம் என்றும் அழைக்கின்றனர். இது பெரும்பாலும் கண்டி மாவட்டத்தில் பௌத்தர்களின் மிக முக் கியமான மத விழாவான எசல பெரஹெராவில் நிகழ்த்தப்படு கிறது. பல்வேறு தாள வாத்தியங்களின் துணையுடன், வீரத் தன்மையுடனும் சாகசமிகு அசைவுகளுடனும் நிகழ்த்தப்படும் இந்நடனம், இலங்கையின் தேசிய அடையாளமாகவே மதிக் கப்படுகின்றன.

காமன் கூத்து கலை வடிவமானது, இலங்கையின் மலையக மக்கள் வாழும் பகுதிகளில் பாரம்பரியமாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. கோவில் திருவிழாக்கள் அல்லது கிராமிய விழாக் கள் நடைபெறும் நேரங்களில், இது பொதுவாக மேடையின் றித் திறந்த வெளியில் பொதுமக்கள் சூழ வந்து பார்க்கும் அமைப்பில் நிகழ்த்தப்படுகிறது. இந்தக் கூத்து, காம தகனம் (மன்மதனை எரித்தல்) கதையை அடிப்படையாகக் கொண் டது. இது நடனம், பாடல், மற்றும் நாடகம் ஆகிய கூறுகளுடன் மலையக மக்களின் கலை மற்றும் சமய வாழ்வில் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

நாட்டுப்புற நாடகங்கள் மக்களுக்கு கல்வியையும் பொழுது போக்கையும் ஒருசேர வழங்கின. தமிழர்களிடம் நாடோடி நாட கம், நாக கூத்து, அணங்கு கூத்து, கதைப் பாடல்கள் முதலி யவை இடம்பெற்றன. நாடோடி நாடகம் சமூக பிரச்சினை களை மக்களிடம் எளிமையாக எடுத்துரைத்தது. நாகக்கூத்து பெரும்பாலும் கோவில் திருவிழாக்களில் நடத்தப்பட்டு பாம் புத் தெய்வங்களை மகிமைப்படுத்தியது. அணங்கு கூத்து பெண்களின் வாழ்வு, குடும்ப வாழ்வின் சிக்கல்கள் போன்ற வற்றை வெளிப்படுத்தியது. சிங்கள மக்களிடம் கோலம் நாடகம், சடங்கு நாடகம் போன்றவை மிகவும் பிரபலமாக இருந்தன. இந்நாடகங்கள் முகமூடி அணிந்த நடிகர்களால் ஆடப்பட்டு நகைச்சுவையுடனும் பாடல்களுடனும் மக்களின் மனதைக் கவர்ந்தன. இத்தகைய நாடகங்கள் வெறும் பொழுது போக்கல்ல. அவை சமூக நெறிமுறைகளையும் ஒழுக்கத்தையும் மதிப்பையும் மக்களிடம் கற்றுக் கொடுத் தன. ஆனால், இன்று இத்தகைய நாடகங்கள் அரிதாகவே நடத்தப்படுகின்றன. அவற்றை அறிந்த கலைஞர்களின் எண் ணிக்கை குறைந்து வருகிறது.

கைவினைக் கலைகளும் நாட்டுப்புறக் கலையின் ஓர் அங்க மாகும். கிராமங்களில் களிமண் பானைகள், பனை ஓலைப் பொருட்கள், நாணலால் நெய்யப்பட்ட கூடைகள், கையால்

நெய்யப்பட்ட துணிகள் போன்றவை அன்றாட வாழ்வில் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. உதாரணமாக, யாழ்ப்பாணத்தில் பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பில் பல குடும்பங்கள் ஈடுபட்டன. கிழக்கு மாகாணத்தில் களிமண் பானைகள் சமையல் பயன்பாட்டிற்கு பரவலாக உபயோகிக்கப்பட்டன. கண்டியில் கையால் நெய்யப்பட்ட துணிகள் பயன்பாட்டில் பிரபலமாக இருந்தன. இவை அனைத்தும் மக்களின் அன்றாட வாழ்வில் பங்கு கொண்டவை. ஆனால் இன்று பிளாஸ்டிக் பொருட்கள், தொழிற் சாலைகளில் தயாரிக்கப்படும் துணிகள், இயந்திர உற்பத்திப் பொருட்கள் ஆகியவை வந்ததால் இக்கை வினைப் பொருட்கள் தள்ளாடும் நிலையில் உள்ளன. பல கைவினைக் கலைஞர்கள் தங்கள் பாரம்பரியத் தொழில் களை விட்டுவிட்டு வேறு தொழில்களில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டுப்புறக் கதைகள், புராணங்கள், பழமொழிகள், கதைப் பாடல்கள் ஆகியவை மக்களின் அறிவையும் நெறியையும் வளர்த்தன. தமிழர்களிடையே பஞ்சதந்திரக்கதைகள், பொன்னர் சங்கர் கதைகள், மரியாதை இராமன் கதைகள், வீரர் கதைகள் குழந்தைகளிடம் பரவலாகக் கூறப்பட்டன. சிங்கள மக்களிடமும் சித்தகாத்தா கதைகள், பண்டைய புராணக் கதைகள் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்கப்பட்டன. இத்தகைய கதைகள் குழந்தைகளுக்கு நன்மை தீமை ஒழுக்க நெறியையும், பாகுபாட்டையும், மதிப்பையும் கற்றுத் தந்தன. ஆனால், இன்றைய காலத்தில் குழந்தைகள் அதிகம் இணையம், தொலைக்காட்சி, தொலைபேசி விளையாட்டுகள் ஆகியவற்றில் ஈடுபடுவதால் இத்தகைய வாய்மொழிக் கதைகளைக் கேட்கும் பழக்கம் மறைந்து வருகிறது. இதன் மூலம் தலைமுறை தலைமுறையாகப் பரவிய வாய்மொழி இலக்கியங்கள் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன.

இக்கலைகள் அழிந்து செல்லக் காரணங்கள் பல. உலகமயமாக்கலின் தாக்கத்தால் மேற்கத்தேய இசை, நடனம், ஆடை, வாழ்க்கை முறை ஆகியவை இளைஞர்களைக் கவர்ந்துள்ளன. நகரமயமாக்கலால் கிராமங்களின் பாரம்பரிய பண்டிகைகள், சடங்குகள் குறைந்துவிட்டன. தொழில்நுட்ப முன்னேற்றத்தால் தொலைக்காட்சி, இணையம், சமூக ஊடகங்கள் மக்கள் வாழ்வில் பிரதான இடம் பெற்றதால் வாய்மொழிக் கலைகள் புறக்கணிக்கப்பட்டன. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு போதிய வருமானம் கிடைக்காததால் அவர்கள் தங்கள் கலைகளைத் தொடர முடியாமல், வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். கல்வித்துறையிலும் நாட்டுப்புறக் கலைகள் பெரிதாகப் போதிக்கப்படுவதில்லை. திருமணங்கள், பண்டிகைகள் போன்றவற்றில் மேற்கத்தியப் பாணிகள் அதிகரித்து வருவதால் நாட்டுப்புறக் கலைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

இந்தக் கலைகள் அழிந்து போனால், அதனால் ஏற்படும் இழப்புகள் பெரிது. முதன்மையாக நமது பண்பாட்டு அடையாளமே மங்கிவிடும். மக்களின் வரலாற்று அறிவும், பாரம்பரிய உணர்வும் மறைந்துவிடும். சமூகத்தில் மக்களை ஒன்றிணைக்கும் சக்தி குறையும். பொருளாதார ரீதியிலும் இழப்பு உண்டாகும். ஏனெனில், கைவினைப் பொருட்கள், நாட்டுப்புற நிகழ்ச்சிகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் மிகப் பெரிய திறன் கொண்டவை. அவை அழிந்துவிட்டால் நாட்டின் பண்பாட்டு சுற்றுலாவும் பாதிக்கப்படும்.



“இந்தக் கலைகள் அழிந்து போனால், அதனால் ஏற்படும் இழப்புகள் பெரிது. முதன்மையாக நமது பண்பாட்டு அடை யாளமே மங்கிவிடும். மக்களின் வரலாற்று அறிவும், பாரம்பரிய உணர்வும் மறைந்துவிடும். சமூகத்தில் மக்களை ஒன்றிணைக்கும் சக்தி குறையும்.”

நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கும் முயற்சிகள் மிகவும் அவசியம். அரசாங்கம் கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கி, கலை பயிற்சி மையங்களை நிறுவ வேண்டும். பாட சாலைகளில் நாட்டுப்புறக் கலைகளை பாடத்திட்டமாகச் சேர்த்து, குழந்தைகள் சிறு வயதில் இருந்தே அவற்றைப் பழகும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். ஊடகங்கள் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி மக்களிடையே ஆர்வத்தை உருவாக்க வேண்டும். சுற்றுலாத் துறையுடன் இணைத்து நாட்டுப்புறக் கலைகளை வெளிநாட்டு பயணிகளிடம் அறிமுகப்படுத்தலாம். இளைஞர்கள் இக்கலைகளை நவீன பாணியுடன் இணைத்து புதுமையாக மேம்படுத்தலாம். இலங்கையின் நாட்டுப்புறக் கலைகள் நமது பண்பாட்டு அடையாளத்தின் உயிர். அவை மக்களின் வாழ்வியலை, வரலாற்றையும், ஆன்மீக நம்பிக்கையையும் பிரதிபலிக்கின்றன. அவை அழிந்து போனால் நமது பண்பாட்டு வேர்கள் நழுவிச் செல்லும் அபாயம் உண்டு. ஆகையால் அரசு, கல்வித்துறை, ஊடகம், கலைஞர்கள், இளைஞர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து அவற்றைப் பாதுகாக்க வேண்டும். நாட்டுப்புறக் கலைகளைக் காப்பது நமது கடந்தகாலத்தை மதிப்பதும், எதிர்கால சந்ததியினருக்குச் சிறந்த பண்பாட்டு அடையாளத்தை வழங்குவதுமாகும்.



devasagayam.santhiyagu@thaiveedu.com



கிழக்கிலங்கைக் கவிஞர்

பாவலர் பஸீல் காரியப்பர்

- வே. அலேஷாந்தன்

கிழக்கிலங்கையிலே சம்மாந்துறையில் வாழ்ந்து வந்த முகம்மது சுபைர் காரியப்பர் பாத்திமா இணையருக்கு மகனாக பஸீல் காரியப்பர் 1940-ஆம் ஆண்டு மே மாதம் ஒன்பதாம் திகதி பிறந்தார். இவரது இயற்பெயர் முகம்மது பஸீல் காரியப்பர். இவர் தனது ஆரம்பக் கல்வியை பதுளை கார்மல் கொன்வன்ரில் கற்றார். இடைநிலைக் கல்வியையும், உயர் கல்வியையும் முறையே சம்மாந்துறை அரசினர் ஆண் கள் பாடசாலை, கல்முனை பாத்திமா கல்லூரி ஆகியவற்றில் தொடர்ந்தார். ஆசிரியர் பயிற்சி நெறியினை அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நிறைவு செய்தார்.

1958-ஆம் ஆண்டு பாணந்துறை தொட்டவத்தை கல்லூரியில் ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்த பஸீல் காரியப்பர், தொடர்ந்து கொழும்பு சிலேவைலண்ட் ஸாகிறாக் கல்லூரி, கல்முனைக்குடி அல் பஹிரியா மகா வித்தியாலயம், சம்மாந்

துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி, சம்மாந்துறை மகா வித்தியாலயம், ஆகிய பாடசாலைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

பாடசாலை மாணவனாகப் படித்த காலத்திலேயே தமிழ் மொழி மீது அளவிலா ஆர்வமும், இயல்பாகவே கவிதை புனையும் ஆற்றலும் இருந்தது. இத்திறமையினை அடையாளம் கண்டுகொண்ட தமிழ் ஆசிரியர் கே.ஆர். அழகையா பீ.ஏ இவரது திறமையை வெளிக்கொணர உற்சாகமளித்துக் கவிதை உலகிற்கு வழிகாட்டினார். அவர் கொடுத்த ஊக்கத்தினால், பதின்நான்காவது வயதிலேயே துணிச்சலுடன் மேடையேறித், தான் எழுதிய கவிதையினை வாசித்து, சபையோரின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றார். கவிதை உலகில் காலடி எடுத்துவைத்த பஸீல் காரியப்பர் ஏராளமான கவிதைகளை எழுதிக் குவித்தார். ஆசிரிய பதவியின் ஊடாகப் பெற்ற உறவுகளினாலும், பன்மொழி ஆளுமையினாலும் பிரதேச மற்றும் தேசிய உள்ளடக்கம் மிக்க கவிதைகளை எழுதி வந்தார்.

1960-களின் கடைசிக் காலகட்டத்தில் சுதந்திரன், தினபதி, சிந்தாமணி, வீரகேசரி போன்ற பத்திரிகைகளிலும் அறவழிக் கீதம், முற்றத்து மல்லிகை, கவிதாஞ்சலி ஆகிய சஞ்சிகைகளிலும் காரியப்பரின் ஏராளமான கவிதைகள் பிரசுரமாகின. அவற்றுள் உயிர், ஊனக்கலை, அழகான ஒரு சோடிக் கண்கள், பிரியதர்ஷினி, சட்டை, இரணக்கோல், தங்கம்மா, உறவு, சிரிசரி, துளசி, ஹலால், சிறுக்கி, எனக்கு ஒரு தேவை, நம் காதல், படப்பிடிப்பு, வருத்துவது, நட்டுமை போகவில்லை, மின்னல், தூரிகை போன்றவை மக்கள் மனதைத் தொட்ட கவிதைகளாகும். இக் கவிதைகளுள் 'அழகான ஒரு சோடிக் கண்கள்' என்னும் கவிதையினைப் பத்திரிகையில் பார்த்து, அதன் கற்பனைத் திறனில் திளைத்த, இலங்கை வானொலியின் அறிவிப்பாளரும் பாடகருமான, எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்கள், இயற்றியவர் யார்? என்று தெரியாத போதிலும், எம்.கே. றொக்சாமியின் இசையமைப்பில், 1966-ஆம் ஆண்டு முதல் இனிமையான குரலில் பாடிவந்தார். இலங்கையில் மட்டுமின்றி தமிழ் நாட்டிலும் பட்டிதொட்டி எங்கும் இப்பாடல் பிரபல்யம் அடைந்தது.

பன்னிரண்டு ஆண்டுகள் கடந்து, 1978-ஆம் ஆண்டு பீ.எச். அப்துல் ஹமீட் அவர்களுடனான நேர்காணலின் போதே காரியப்பர், அது தான் எழுதிய கவிதை எனக் குறிப்பிட்டு ஆச்சிரியத்தில் உறைய வைத்தார்.

எழுபதுகளின் பிற்பகுதியும் எண்பதுகளின் முற்பகுதியும் இலங்கை வானொலியில் ஈழத்துப் பாடல்கள் கோலோச்சிய காலமாகும். அக்காலப்பகுதியில் நீலாவணனின் 'ஓ... வண்டிக்காரா... ஓட்டு வண்டியை ஓட்டு', மஹாகவியின் 'சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும் - சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும்', ஆகிய பாடல்களைப் போல, பாவலர் பஸீல் காரியப்பரின் 'அழகான ஒரு சோடிக் கண்கள்' என்ற பாடலும் சுருதி பிசகாது எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்களின் இனிமையான குரலில் அடிக்கடி ஒலிபரப்பப்பட்டு வந்தது. அறிவிப்பாளர்கள் ஒளிபரப்பிய சுஜாதா அத்தநாயக்க பாடிய 'கயிற்றோசை கேள் மகளே... தொட்டில் கயிற்றோசை கேள் மகளே' என்னும் பாடலும், 'பொன்னரிவாள் என்றே கவிஞர் புரட்சிக் கமால் சொன்னார்' என்ற பாடலும் இலங்கை வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பப்பட்டு வந்த பிற பாடல்களாகும்.

இவரது பாடல்கள் சமயப்பார்வை கொண்டனவாகவும், சமூக விமர்சனமுடையனவாகவும், பிரதேச சொல் வழக்குகளைப் பிரதிபலிப்பனவாகவும், அங்கதச் சுவைகள் நிரம்பியனவாகவும், காணப்படுவது தனிச்சிறப்பாகும். குறிப்பாகக் கிழக்கு மாகாண இஸ்லாமிய மக்களின் பேச்சு வழக்கு அவரது கவிதைகளில் விரவி இருப்பதனைக் காணலாம். போர்க்காலத்தில் தமிழ் மக்களுக்கும் இஸ்லாமிய மக்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளால் கவலையடைந்த பாவலர், 1983-ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்-இஸ்லாமிய மக்கள் வாழ்ந்த வாழ்வியல் மீண்டும் துளிர்க்காதா, என்ற ஆதங்கத்துடன் எழுதிய, 'துளசி' என்ற கவிதை பின்வருமாறு அமைகிறது.

துறை நீலாவணையிலிருந்து
ஒரு துளசிச் செடி கொண்டு வந்தேன்
வேர் நொந்து போகாமல் நீர்வார்த்து
ஓரமாய்க் கெல்லி ஈர மண்ணெடுத்து
உசுப்பாமல் கொண்டு வந்து
எங்கள் இல்லம் இருக்கும்
கல்முனைக்குடி மண்ணைக் கெல்லி
அதன் உள் வைத்தேன்.
அம்மண்கள் கலந்தன
மனிதரைப் பழித்தன
துளசி இலைகள் என்னைப் பார்த்து
மெல்லச் சிரிக்கின்றன'.

இக்கவிதை, தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் இருந்து கொண்டு வரப்படும் துளசிச் செடி, இஸ்லாமியர்கள் வாழும் மண்ணில் செழித்து வளர்கிறது. ஒரு மண் இன்னொரு மண்ணை ஏற்றுக் கொள்கிறது. ஒரு மண்ணின் பயிர் இன்னொரு மண்ணை ஏற்றுக் கொள்கிறது. ஆறறிவுள்ள மனிதர் தான் ஒற்றுமைப்படாமல் பிரிந்து கிடக்கிறோம், என்பதைத் தான் இக்கவிதை அழகுற எடுத்துக் காட்டுகிறது. பாவலரின் கவிதைகள் பல விவசாயக் கிராமத்தின் வாசனை யைப் பிரதிபலிப்பன. அக்கிராமத்து சாதாரண மக்களின் உழைப்பையும், வியர்வையையும், வறுமையையும், வலிகளையும் வித்தியாசமாகப் படம் பிடித்துக் காட்டும் பண்பி னைப் பின்வரும் கவிதை ஊடாகக் காணலாம்.

பட்டுத் துணி எடுத்துப் பல
வெட்டுக் கிறுக்குகளால் துளை
இட்டுத் தளிர் மேனி வெளிக்
கிட்டுத் தெரியவரும் சிறு
சட்டை அணிந்த பெண்கள்
சஞ்சரிக்கும் பூமியிலே

அட்டைக்கடி அழுத்தப் பன்
கட்டைத் தலை சுமக்க கை
எட்டி அதைப் பிடிக்க ஓ!
எரி வெய்யிலிற் செல்லுமிவள்
சட்டை இடுவலிடை அந்த
மொட்டுத் தெரிந்து விழி
பட்டுத் தெறித்ததனால் என்ன
பெட்டை இவள் என்றே
பிழையாக நினைக்காதீர்

உண்மையிலே இவ்விடத்தில்
ஒழுங்கான சட்டை இல்லை
பன்பிடுங்கும் தொழிலால் இப்
பாவை பெறும் ஊதியத்தால்
இன்னும் ஒரு சட்டை தைக்க
இயலவில்லை.

இவ்வாறு பல கவிதைகளை எழுதிக் குவித்த பாவலரின் ஆரம்பக் கவிதை முயற்சி ஏமாற்றமாக அமைந்ததாக நேர் காணல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். 'உயிர்' என்ற தலைப்பில், தனக்கு முழு மன நிறைவைத் தந்த கவிதையினை எழுதித் தினகரன் பத்திரிகைக்கு அனுப்பியபோது, அது பிரசுரிக்கப்ப டவில்லை எனவும், அதனால் மனம் சங்கடப்பட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார். பின்னாளில் அக்கவிதை இலங்கை முற் போக்கு எழுத்தாளர் சங்கம், அகில இலங்கை ரீதியில் நடத் திய கவிதைப் போட்டியில் பரிசு பெற்றதாகக் கூறப்படுகிறது.

1978-ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில், இவரது 'தங்கம்மா' என்ற குறுங்காவியம் தேசிய மட்டத்திலான பரிசைப் பெற்றது. இதனைக் கொண்டாடும் முகமாக, சம்மாந்துறை மக்கள் எடுத்த விழாவில் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, 'கவி ஞன் தோன்றிவிட்டான். பஸீல் காரியப்பர் கண்டீர்' எனக் கூறி என்றும் நிலைத்திருக்கக் கூடிய 'பாவலர்' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். அன்று முதல் பஸீல் காரியப்பர் 'பாவலர் பஸீல் காரியப்பர்' என அழைக்கப்படலானார். இக்கு றுங்காவியம் பின்னர், கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பாடத்திட்டத்திலும் இணைக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பி டத்தக்கது. நீலாவணன் இலக்கியப் பேரவை நடத்திய கவி தைப் போட்டியில் பாவலரது 'பாதுகை' என்னும் கவிதை பரிசு பெற்றது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இலங்கை இலக்கியப் பேரவை என்பன நடத்திய போட்டிகளில் பாவலரது 'உயிர்', 'தங்கத்தாத்தா' ஆகிய கவிதைகளும் தேசிய மட்டத்திலான பரிசில்களைப் பெற்றிருந்தன. சிறுகதை, வானொலி நாடகம், உருவகக் கதை, இசைப் பாடல்கள் என்ப வற்றையும் அவர் எழுதியுள்ளார்.

'நிதானி' என்ற புனை பெயரிலும் கவிதைகளை எழுதிய பாவலர், கவியரங்குகளில் தனது கம்பீரம் மிக்க குரலால் சபையை அதிர வைப்பார். 1995-ஆம் ஆண்டு அட்டாளச்சே னையில், கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமையில் நடை பெற்ற 'மீலாதுநபி தின' கவியரங்கில் 'விடாது பெய்யும் பெருமானார் என்னும் அருள்மாரி' என்ற தலைப்பில் கவிதை யைப் பாடி, ரகுமானின் பாராட்டைப் பெற்றார். 2002-ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக்குத் தலைமையேற்று, கவிதை அரங்கை களைகட்டச் செய்து, தனது தலைமைத்துவ ஆற்றலையும் நிரூ பித்தார்.

பாவலரின் ஒழுங்குபடுத்தப்படாமல் இருந்த அறுபத்தாறு கவி தைகளைத் தொகுத்து, 116 பக்கங்களில் 'ஆத்மாவின் அலை கள்' என்னும் கவிதை நூலினை, 2001-ஆம் ஆண்டு தென்கி ழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டு, அவ ரைப் பெருமைப் படுத்தியது. பாவலரின் கவிதை முயற்சிக ளுக்கு தினகரன் ஆசிரியராக இருந்த எஸ். சிவகுருநாதனும் சில்லையூர் செல்வராசனும் பக்கபலமாக இருந்துள்ளனர். சில்லையூர் செல்வராசனின் பங்களிப்பில் இலங்கையில் தயாரான 'நிர்மலா' திரைப்படத்திலும் பாவலர் நடித்துள்ளார்.

கவிதா அமைப்புகளுடன் இணைந்து கவிஞர்களை ஊக்கு வித்தும், கவிதைகளை நூலுருப்படுத்தவும் பேருதவி புரிந் துள்ளார். குறிப்பாக 2002-ஆம் ஆண்டு, சாய்ந்தமருது அபா பீல்கள் கவிதா வட்டத்தின் பிரதம ஆலோசகராகப் பெரும் பணி புரிந்ததைப் பாராட்டி, அவ்வமைப்பு 'தென்கிழக்கின் தேசகவி' என்னும் விருதினை வழங்கி கௌரவித்தது.

2004-ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் போது, பாவலரின் வீட்டின் அரைவாசி கடல் நீரில் மூழ்கியது. அதனால் அவரது படைப்புகள், இலக்கியச் சேகரிப்புகள், அரிய புகைப்ப டங்கள், பெறுமதிமிக்க நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் அனைத்தையும் இழந்தார். இப்பெரும் இழப்பின் போதும் 'வெறுமை யில் மகிழ்ந்திருத்தல் என்பதே ஒரு அலாதியான சுகம் அது ஒரு ஆத்மீகப் பயிற்சி' எனக் கூறி ஆறுதல் அடைந்தார்.

தமிழ் மொழி மீது அளவிலாப் பற்றுக் கொண்டிருந்த பாவலர், தமிழ்த் தேசிய அரசியலிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டார். 1956-ஆம் ஆண்டு சம்மாந்துறையில் இருந்து, துவிச்சக்கர வண்டி யில் பயணம் செய்து, மட்டக்களப்பில் நடந்த தமிழரசுக் கட்சியின் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டார். 1957-ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகம் அவர் களின் தலைமையில், பாத்திமா கல்லூரியில் மே தின நிகழ்வு நடைபெற்றது. அங்கு இடம்பெற்ற பேச்சுப் போட்டியில் கார சாரமாகவும், கவர்ச்சியாகவும் உரையாற்றி, தந்தை செல்வநா யகத்தினதும், மற்றும் அந்நிகழ்வில் கலந்து கொண்ட, சொல்லின் செல்வர் செ. இராஜதுரை, அ. அமிர்தலிங்கம், மட் டுநகர் லோரன்ஸ், கவிஞர் காசி ஆனந்தன், மாஸ்டர் சிவ லிங்கம் ஆகியோரது பாராட்டையும் பெற்றார்.

விளம்பரத்தையோ பட்டம் பதவிகளையோ விரும்பாத பாவ லர் மிகவும் அமைதியாகவும் ஒதுங்கியும் வாழவே விரும் பினார். பொதுசனத் தொடர்பு ஊடகங்கள், இவரை மிகவும் பயன்படுத்த விரும்பின. ஆனால் அவர் தானாகவே ஒதுங்கிக் கொள்வார். சிறந்த ஆசிரியர், பாவலர், கவிதை அரங்குகளின் கதாநாயகன் எனப் பன்முக ஆளுமை கொண்ட பாவலர் பஸீல் காரியப்பர், நோய்வாய்ப்பட்டு கண்டி வைத்தியசாலை யில் 2006-ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 16-ஆம் திகதி மாலை இவ்வுலகை விட்டு நீத்தார். சாய்ந்த மருது அபாபீகள் கவிதா வட்டம் 'எழு நிறங்களும் மறைந்தன' என்னும் தலைப்பில் கவிதையினை அஞ்சலிப் பிரசுரமாக வெளி யிட்டுத் தனது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டது. கிழக்கி லங்கை கவிதைப் பாரம்பரியத்தில் நீலாவணனுக்கு அடுத்த வாரிசாகக் கருதப்படும் இவர் சம்மாந்துறை மண்ணின் மைந்தன் என மக்களால் போற்றப்படுகின்றார்.



vivekananthan.v@thaiveedu.com



தொடக்கக் குறிப்புகள்:


ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழி பெயர்க்கும் செயற்பாடானது (மொழிபெயர்ப்பு) பெரும்பாலும் இரண்டாம் நிலை, தொழில்நுட்பச் செயற்பாடாகக் கருதப்படுகிறது. இருப்பினும், ஆபிரிக்காவின் மிக முக்கியமான இலக்கிய மற்றும் அரசியல் சிந்தனையாளர்களில் ஒருவரான தியாங்கோ, மொழிபெயர்ப்பைக் காலனித்துவ நீக்கம், படைப்பாற்றல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையின் மைய நடைமுறையாக மறுவடிவமைப்பதில் தனது வாழ்க்கையைச் செலவிட்டார். அவரது முக்கிய படைப்புகளான Decolonising the Mind (1986) முதல் அவரது சமீபத்திய The Language of Languages (2023) வரை, மொழிபெயர்ப்பு நடுநிலையானதோ, புறம்பானதோ அல்ல என்று அவர் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார். மாறாக, இது அதிகார உறவுகளை மத்தியஸ்தம் செய்யும், கலாசார நினைவகத்தைப் பாதுகாக்கும் மற்றும் மொழியியல் மற்றும் கலாசாரப் பிளவுகளுக்கு இடையே உரையாடலை செயற்படுத்தும் ஓர் அரசியல் செயலாகும்.

இந்தக் கட்டுரை மொழிபெயர்ப்பின் கருத்தியல்மயமாக்கலுக்கும் அதன் முக்கியத்துவத்திற்கும் தியாங்கோவின் பங்களிப்பை ஆராய்கிறது. மொழி மற்றும் அதிகாரம் குறித்த அவரது பிரதிபலிப்புகள் மொழிபெயர்ப்புக்கான அவரது அணுகுமுறையை எவ்வாறு வடிவமைத்தன, அவரது சொந்த சுய-மொழிபெயர்ப்பு நடைமுறை மொழிபெயர்ப்பின் படைப்புத் திறனை எவ்வாறு வெளிச்சம் போட்டுக் காட்டியது, அவரது பிற்கால படைப்புகள் உலகளாவிய அனுபவங்கள் (globalectics) மற்றும் மொழியியல் சமத்துவத்தின் கருத்துகளை எவ்வாறு வளர்த்தன என்பதை நோக்க முயல்கிறது. இவையனைத்தையும் ஒன்றாக எடுத்துக் கொண்டால், தியாங்கோவின் எழுத்துகள் மொழிபெயர்ப்பை இலக்கிய ஆய்வுகளின் ஓரங்களிலிருந்து கலாசார, நீதி மற்றும் உலகளாவிய உரையாடலுக்கான போராட்டங்களின் மையமாக மாற்றுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ங்கி வா தியாங்கோவுக்கு அஞ்சலி - 4
மொழிகளின் மொழியாக மொழிபெயர்ப்பு

- தெ. ஞானசீர்த்தி ஸ்ரீலங்கா

இலக்கியம், அரசியல் மற்றும் கலாசார எதிர்ப்பு ஆகியவை இடைவெட்டுகிற புள்ளியில் தியோங்கோ நீண்ட காலமாக நின்று வருகிறார். தனது தாய்மொழியான கிகுயுவில் எழுத வேண்டும் என்ற அவரது வலியுறுத்தலும், பின்னர் தனது சொந்தப் படைப்புகளைத் தானே ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதும், பிந்தைய காலனித்துவ இலக்கிய விதிமுறைகளிலிருந்து ஒரு தீவிரமான விலகலைக் குறித்தது. 2023-இல் வெளியான அவரது கட்டுரைத் தொகுப்பான மொழிகளின் மொழி (The Language of Languages) மொழிபெயர்ப்பின் பங்கு குறித்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான தொடர்ச்சியான பிரதிபலிப்பின் உச்சகட்டமாகும். இந்தப் புத்தகம் இந்த விஷயத்தில் அவரது கட்டுரைகள் மற்றும் விரிவுரைகளின் தொகுப்பாக மட்டுமல்லாமல், காலனித்துவ நீக்கப் போராட்டங்களுக்கு மையமான ஓர் அரசியல், படைப்பு மற்றும் நெறிமுறை நடைமுறையாக மொழிபெயர்ப்பை நிலை நிறுத்தும் ஒரு செயல்நூலாகவும் உள்ளது.



மொழிபெயர்ப்புப் பற்றிய அவரின் அடிப்படை வாதங்கள் 'காலனியாதிக்க சிந்தனையிலிருந்து விடுபடல்: ஆபிரிக்க இலக்கியத்தில் மொழியின் அரசியல் (1986) என்ற நூலிலேயே வெளிப்படுகின்றன. அவரைப் பொறுத்தவரை, காலனித்துவம் ஓர் அரசியல் மற்றும் பொருளாதார வெற்றி மட்டுமல்ல, மொழியியல் வெற்றியும் கூட: கல்வி மற்றும் இலக்கியத்தில் ஆங்கிலத்திற்குச் சலுகை அளித்ததன் மூலம், காலனித்துவ சக்திகள் ஆபிரிக்கர்களை அவர்களின் சொந்த மொழிகள், நினைவுகள் மற்றும் அடையாளங்களிலிருந்து துண்டித்தன. இந்தச் சூழலில், மொழிபெயர்ப்பு இரட்டை முக்கியத்துவத்தைப் பெறுகிறது. முதலாவதாக, இலக்கிய உற்பத்தியில் ஆபிரிக்க மொழிகளை மீண்டும் செயற்படுத்துவதன் மூலம் ஒடுக்கப்பட்ட மரபுகளை மீட்டெடுப்பதற்கான ஒரு வழிமுறையாக இது மாறுகிறது. 1970-களின் பிற்பகுதியில் ஆங்கிலத்தைக் கைவிட்டு, தாய்மொழியான கிகுயுவில் பிரத்தியேகமாக எழுத அவர் எடுத்த முடிவு, காலனித்துவமற்ற மொழிபெயர்ப்பின் ஒரு வடிவமாகும் - அவரது கலாசார வேர்களுக்குத் திரும்புவதும் காலனித்துவ படிநிலைகளை நிராகரிப்பதும். இரண்டாவதாக, மொழிபெயர்ப்பு ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஒற்றுமைக்கான ஒரு நடைமுறையாக மாறுகிறது. மொழிகளின் மொழி நூலின் குர்திஷ் மொழிபெயர்ப்பின் முன்னுரையில், குர்திஷ் மற்றும் கிகுயு ஆகிய தாய்மொழிகளின் இடையே மொழிபெயர்ப்பது ஆங்கிலத்தின் ஆதிக்கத்தைத் தவிர்த்து, இரண்டு ஓரங்கட்டப்பட்ட மொழியியல் சமூகங்களுக்கு இடையே ஒரு பாலத்தை எவ்வாறு உருவாக்குகிறது என்பதை நிகுகி அடிக்கோடிட்டுக் காட்டுகிறார். அவரது ஆரம்பகால எழுத்துக்களில்கூட, மொழிபெயர்ப்பை ஒரு தொழில்நுட்ப நடவடிக்கையாக மட்டும் நிறுவவில்லை. காலனித்துவ மரபுகளை அழிப்பதற்கும் கலாசார சுயாட்சியை மீட்டெடுப்பதற்கும் இது ஒரு அரசியல் உத்தியாகும் என்பதை தியாங்கோ வலியுத்தினார்.

உலகளாவிய உரையாடலாக மொழிபெயர்ப்பு:

அவரைப் பொறுத்தவரை, மொழிபெயர்ப்பு என்பது இரண்டு மொழிகளில் உள்ள சொற்களுக்கு இடையேயான சமநிலையைக் கண்டறிவது மட்டுமல்ல. மாறாக, இது ஓர் உலகளாவிய உரையாடலை செயற்படுத்துவது பற்றியது. ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் கலாசாரங்களுக்கு இடையிலான உரையாடலைக் குறிக்கிறது. இது மொழிகளின் வெளிப்பாட்டுத் திறனை விரிவுபடுத்துகிறது மற்றும் உலக இலக்கியத்தை வளப்படுத்துகிறது என்று அவர் வாதிடுகிறார். அவர் பெரும்பாலும் பைபிளையும் கம்யூனிஸ்ட் அறிக்கையையும் சக்திவாய்ந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடுகிறார். அவை இரண்டும் அவற்றின் தோற்றத்திற்கு அப்பால் பயணித்த நூல்கள், மொழிபெயர்ப்பின் மூலம் சமூகங்களை மறுவடிவமைத்தன.

இந்தக் கருத்து மேற்கத்தேய மொழிபெயர்ப்புக் கோட்பாட்டில் ஆதிக்கம் செலுத்தும் பாரம்பரிய 'மூலத்தைப் பிரதிபலித்தல்' என்ற ஒற்றைச் சிந்தனைக்குச் சவால் விடுகிறது. ஒரு மூலத்திலிருந்து மற்றொரு மொழிக்கு அர்த்தத்தை மாற்றும் ஒரு வழித்தோன்றல் செயலாக மொழிபெயர்ப்பைப் பார்ப்பதற்குப் பதிலாக, மொழிபெயர்ப்பு புதிய அர்த்தங்களை உருவாக்குகிறது, குறுக்கு-கருத்தரித்தல் சாத்தியத்தைத் திறக்கிறது என்று தியாங்கோ வலியுறுத்துகிறார். அவர் கோதேவின் Weltliteratur (உலக இலக்கியம்) பற்றிய கருத்தைப் பயன் படுத்துகிறார், ஆனால் ஐரோப்பிய மொழிகள் மூலம் பெரும்பாலும் மத்தியஸ்தம் செய்யப்பட்ட ஓர் உரையாடலைக் கற்பனை செய்த கோதேவைப் போலல்லாமல், ஆபிரிக்க மற்றும் பிற ஓரங்கட்டப்பட்ட மொழிகளை உள்ளடக்கும் கொள்கையை தியாங்கோவின் சிந்தனை விரிவுபடுத்துகிறது. மொழிபெயர்ப்பு என்பது மாறும், கிடைமட்டப் பரிமாற்றமாக இருக்கிறது. அது ஒரு படிநிலை புனல் அல்ல, இதன் மூலம் புற மொழிகள் சட்டபூர்வ அங்கீகாரத்தைப் பெற ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் செல்ல வேண்டும் என்பதை மறுதலிக்கிறது.

உரையாடலுக்கான இந்த முக்கியத்துவம் குறிப்பாகத் தீவிரமானது, ஏனெனில் அது மொழிபெயர்ப்பை தொழில்நுட்பக் கைவினையாக தனிமைப்படுத்த மறுக்கிறது. அதற்குப் பதிலாக, அவர் அதை மக்கள் மற்றும் கலாசாரங்களுக் கிடையே சமத்துவத்திற்கான பரந்த போராட்டத்தில் ஒருங்கிணைக்கிறது என்று வாதாடுகிறார். அவரது பார்வையில், மொழிபெயர்ப்பு ஒவ்வொரு மொழியும் பேசும் மற்றும்

கேட்கும் திறனைக் கொண்ட ஒரு உண்மையான உலக ளாவிய சமூகத்தை உருவாக்க உதவுகிறது.

ஆப்பிரிக்க ஒற்றுமைக்கான உரையாடல்:

'மொழிகளின் மொழி' என்ற நூலில் தியாங்கோவின் முக்கி யமான வாதங்களில் ஒன்று, மொழிபெயர்ப்பு ஆபிரிக்க மக்க ளிடையே ஒன்றிணைக்கும் சக்தியாகச் செயற்படும் என்பது. 2000-ஆம் ஆண்டு வெளியான 'நமது வழியைக் கண்டறிதல்: நமது மொழிகளிடையே உரையாடல் ஆபிரிக்க மக்களின் ஒற்றுமைக்கான வழி' என்ற அவரது முக்கிய கட்டுரையில், ஆங்கிலம், பிரெஞ்சு அல்லது போர்த்துகீசிய மொழிகளில் வெளியிடும் ஆபிரிக்க எழுத்தாளர்கள் பெரும்பாலும் சர்வதேச அளவில் கொண்டாடப்படுவதற்கும், ஆபிரிக்க மொழி களில் எழுதுபவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் இருப்பதற்கும் உள்ள முரண்பாட்டை அவர் புலம்புகிறார். இந்தக் கண் ணுக்குத் தெரியாதது, இயற்கையானது அல்ல, மாறாக ஐரோப்பிய மொழிகளுக்குச் சலுகை அளித்த காலனித்துவக் கல்வி முறைகள் மற்றும் வெளியீட்டுக் கட்டமைப்புகளின் மரபு என்று அவர் வாதிடுகிறார்.

ஆபிரிக்க மொழிகளுக்கிடையேயான மொழிபெயர்ப்பை மாற்று மருந்தாக அவர் கருதுகிறார். ஹௌசா இலக்கியம் சுவாஹிலி மொழியில் கிடைத்தால், அல்லது கிகுயு படைப் புகளை அம்ஹாரிக் மொழியில் படிக்க முடிந்தால், ஆபிரிக்க வாசகர்கள் ஐரோப்பிய மொழிகளின் மத்தியஸ்தம் இல்லாமல் ஒருவருக்கொருவர் அறிவுசார் மரபுகளை எதிர்கொள்ள முடியும். இத்தகைய மொழிபெயர்ப்பு பன்முகத்தன்மையை அழிக்காது, ஆனால் ஒற்றுமையை உருவாக்கும், ஆபிரிக் கர்கள் மொழியியல் எல்லைகளுக்கு அப்பால் தங்கள் பகிரப் பட்ட போராட்டங்கள் மற்றும் அபிலாஷைகளை அங்கீகரிக்க அனுமதிக்கிறது.

தியாங்கோ மொழிபெயர்ப்பை கலாசார நடைமுறை மற்றும் அரசியல் திட்டமாக நிலைநிறுத்துகிறார். இது கண்ட சுய-அங் கீகாரம் மற்றும் பன்முகத்தன்மையில் ஒற்றுமைக்கான முறையாக மாறுகிறது. அவ்வாறு செய்வதன் மூலம், அவர் ஆபிரிக்க கலாசாரக் கொள்கைத்துறையில் நேரடியாகத் தலையிடுகிறார். பூர்வீக மொழிகளிடையே மொழிபெயர்ப்பில் முதலீடு செய்யத் தவறியது நவகாலனித்துவப் பிளவுகளை நிலைநிறுத்தியுள்ளது என்று குறிப்பிடுகிறார். காலனித்துவ மொழிகளால் உருவாக்கப்பட்ட அந்நியப்படுதல் பற்றிய ஃபனானின் எச்சரிக்கைகளை அவரது பார்வை நினைவுபடுத்துகிறது, ஆனால் தியாங்கோ நடைமுறை பாதையை வழங்குவதன் மூலம் ஃபனானின் சிந்தனைகளை விரிவுபடுத்துகிறார்: கண்டத்தை ஒன்றாக இணைக்கக்கூடிய ஆபிரிக்காவிற்குள் மொழிபெயர்ப்புகளின் வலையமைப்பு ஒன்றின் அவசியத்தை அவர் முன்மொழிகிறார்.

தானியங்கி மொழிபெயர்ப்பும் படைப்பின் மறுபிறப்பும்:

தியாங்கோவின் சொந்த வாழ்க்கை மொழிபெயர்ப்பின் சவால்கள் மற்றும் சாத்தியக்கூறுகளை எடுத்துக்காட்டுகிறது. 1970-களின் பிற்பகுதியில் ஆங்கிலத்தைக் கைவிட்டு கிகுயுவில் பிரத்தியேகமாக எழுதத் தொடங்கிய அவர், பின்னர் தனது சொந்த படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தொடங்கினார் - இந்த நடைமுறையை அவர் தானியங்கி மொழிபெயர்ப்பு என்று அழைக்கிறார். 'மொழி களின் மொழி' என்ற புத்தகத்தில், இந்தச் செயல்முறை எவ்வாறு இயந்திர இனப்பெருக்கம் அல்ல, மாறாக ஒரு படைப்பு மறுபிறப்பு என்பதை அவர் பிரதிபலிக்கிறார்.

சைட்டானி முத்தராபா-இனியை சிலுவையில் தொங்கும் சாத்தான் என்றும், மோரோகி வா ககோகோவை காகத்தின் வழிகாட்டி என்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தபோது, அவர் தனது கதைகளை புதிதாக மீண்டும் கற்பனை செய்வ தைக் கண்டார். ஒரே மாதிரியான இரட்டையர்களாக இருப்ப தற்குப் பதிலாக, ஆங்கிலம் மற்றும் கிகுயு பதிப்புகள் உடன் பிறப்புகளாக மாறின - ஒத்த ஆனால் தனித்துவமானவை, ஒவ்வொன்றும் அதன் சொந்தத் தாளம், சொற்றொடர்கள் மற்றும் அதிர்வுகளுடன். மொழிபெயர்ப்பை 'மொழிபெயர்ப்பா ளரின் ஆன்மாவை' சுமந்து செல்வதாக அவர் விவரிக்கிறார், அதாவது செயலுக்கு வெறும் நம்பகத்தன்மை அல்ல, கண்டு பிடிப்பு மற்றும் உணர்ச்சி முதலீடு தேவை என்பதை வலியு றுத்துகிறார்.

இந்தப் பிரதிபலிப்பு மொழிபெயர்ப்பு ஆய்வுகளுக்கு, குறிப்பாக ஆசிரியரின் நோக்கம் மற்றும் சமத்துவம் பற்றிய விவாதங்களுக்கு நுணுக்கத்தைச் சேர்க்கிறது. தியாங் கோவின் கட்டமைப்பில், தன்னை மொழிபெயர்த்துக்கொள்ளும் செயல் தூய்மை அல்லது அதிகாரத்தை உத்தரவாதம் செய்யாது. அது இன்னும் மாற்றத்தை உள்ளடக்கியது. 'அசல்' மற்றும் 'மொழிபெயர்ப்பு' ஆகியன ஒரு இயங்கியல் உறவில் நுழைகின்றன, ஒவ்வொன்றும் ஒன்றையொன்று வளப்படுத்துகின்றன. இவ்வாறு அவரது தனிப்பட்ட அனுப வங்கள் மொழிபெயர்ப்புக் கோட்பாட்டிற்குத் தனித்துவமான பங்களிப்பைச் செய்கின்றன, இது ஆசிரியர்-மொழிபெயர்ப்பா ளரின் தோற்றுவிப்பாளர் மற்றும் மறு உருவாக்குபவர் ஆகிய இரண்டின் இரட்டைப் பாத்திரத்தை முன்னறிவிக்கிறது.

மொழிகள் பாலங்களாக, படிநிலைகளாக அல்ல:

தியாங்கோவின் படைப்பில் மொழிகள் பாலங்களாக இருப்பது என்பது தொடர்ச்சியான உருவகமாகும். இது படிநி லைகளாக அல்ல. சில மொழிகள் இயற்கையாகவே 'பெரியவை' (ஆங்கிலம், மாண்டரின், பிரஞ்சு) மற்றவை 'சிறியவை' (கிகுயு, குர்திஷ், வோலோஃப்) என்ற பொதுவான கருத்தை அவர் நிராகரிக்கிறார். அவரைப் பொறுத்தவரை, ஒவ்வொரு மொழியும் மனித படைப்பாற்றலின் நீர்த்தேக்கமாகும். அவை ஒவ்வொன்றும் தனித்துவமான கலாசார 'மனதின் பொக்கி ஷங்களை' சுமந்து செல்கிறது. இருப்பினும், காலனித்துவம் படிநிலைகளை நிறுவனமயமாக்குவதன் மூலம் இந்த சமத்துவ நிலப்பரப்பை சீர்குலைத்தது: ஐரோப்பிய மொழிகள் சக்தி, நவீனத்துவம் மற்றும் அறிவு ஆகியவற்றுடன் தொடர்பு டையதாக மாறியது, அதே நேரத்தில் ஆபிரிக்க மொழிகள் உள்நாட்டு மற்றும் நாட்டுப்புறக் கதைகளுக்குத் தள்ளப் பட்டன. மொழிபெயர்ப்புப் பெரும்பாலும் இந்த ஏற்றத்தாழ்வை வலுப்படுத்தும் வழிகளில் பயன்படுத்தப்பட்டது - ஆபிரிக்க வாய்வழி மரபுகள் கல்வி நுகர்வுக்காக ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன, ஆனால் அவை அரிதாகவே அவ்வாறு நிகழ்ந்தன. அதேவேளை அவை நேர்மாறான பலன்களையும் வழங்கின.

மொழிகளின் மொழியில், தியாங்கோ இந்த மாதிரியை தலைகீழாக மாற்றுகிறார். மொழிபெயர்ப்பு, ஜனநாயக ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டால், படிநிலைகளை அகற்றி, மொழிகளுக்கு இடையே சமத்துவத்தை உறுதிப்ப டுத்தும் ஒரு வழியாக மாறும். 'எனது கடவுள் உங்கள் கடவுளை விட உயர்ந்தவர் என்று அழைப்பது எப்படித் தெய் வீகமாற்றமோ அதைப் போன்றதே மொழிகள் குறித்த ஒப்பீடும். கடவுளின் உவமை மொழிகளுக்கும் பொருந்தும்' என்று அவர் வாதிட்டார். மொழியியல் பேரினவாதத்தின் அபத்தத்தை அவர் அம்பலப்படுத்துகிறார். மொழிகளை பாலங்களாக முன்வைப்பதன் மூலம், மொழிபெயர்ப்பின் நோக்கத்தை மறுபரிசீலனை செய்ய அறிஞர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் இருவருக்கும் அவர் சவால் விடுகிறார்: ஒரு மொழியை மற்றொரு மொழியைப் பலியாகக் கொடுத்து உயர்த்துவது அல்ல நாம் செய்ய வேண்டியது, மாறாக பரஸ்பர பரிமாற்றம் மற்றும் பரஸ்பரத்தை செயற்படுத் துவதே நாம் செய்ய வேண்டியது.

உலகளாவிய பார்வை:

மொழிபெயர்ப்புக் குறித்த உலகளாவிய பார்வையை தியாங்கோ வெளிப்படுத்தியிருப்பது மிகவும் முக்கியமான தத்துவார்த்த பங்களிப்புகளில் ஒன்றாகும். ஒவ்வொரு மொழியும் கலாசாரமும் உலக அனுபவத்தின் செல்லுபடி யாகும் மையமாக செயற்பட முடியும் என்று வாதிடுவதன் மூலம் மொழிபெயர்ப்புக்கு இந்தப் பார்வையை அவர் பயன்ப டுத்துகிறார். 'மொழிபெயர்ப்புடன் சந்திப்புகள்: ஓர் உலக ளாவிய பார்வை' என்ற கட்டுரையில், மொழிபெயர்ப்பு ஒவ்வொரு மொழியையும் உலகளாவிய அறிவுத் தொகுப் பிற்கு கருத்துக்களைப் பெறவும் பங்களிக்கவும் உதவுகிறது என்று அவர் வாதிடுகிறார். உலகளாவியமயமாக்கல் ஒரு கலாசார அல்லது மொழியியல் மையத்தின் (வரலாற்று ரீதியாக ஐரோப்பா) கருத்தை சீர்குலைத்து, அதற்குப் பதிலாக சுவாஹிலி, பெங்காலி அல்லது கெச்சுவா ஒவ் வொன்றும் உலகளாவிய பிரதிபலிப்புக்கான சாதகமான புள்ளியாக இருக்கக்கூடிய ஒரு பன்மைத்துவ உலகத்தைக் கற்பனை செய்கிறது.

இந்த வாதம் மொழிபெயர்ப்பு ஆய்வுகளுக்கு ஆழமான தாக் கங்களைக் கொண்டுள்ளது. மொழிபெயர்ப்பை சுற்றளவில் இருந்து மையத்திற்கு, ஆங்கிலம், பிரஞ்சு அல்லது ஸ்பானிஷ் மொழிகளுக்கு நகர்த்துவதாகக் கற்பனை செய்யும் ஐரோப்பிய மைய முன்னுதாரணங்களிலிருந்து இது வேறுபடு கிறது. இந்த முயற்சிக்குப் பதிலாக, மொழிபெயர்ப்பு பல்திசை, மையப்படுத்தப்பட்ட செயல்முறையாக மாறுகிறது. தியாங்கோ அது மொழியியல் நீதியில் உறுதியான அடிப்படையைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை உறுதியுடன் வலி யுறுத்துகிறார்.

'மொழிகளின் மொழி' என்ற புத்தகத்தில் உள்ள மற்றொரு முக்கிய கருப்பொருள் ஒடுக்கப்பட்ட வரலாறுகள் மற்றும் தத் துவங்களை மீட்டெடுக்கும் மொழிபெயர்ப்பின் திறன் ஆகும். இந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ள 'மனதைக் காலனித் துவமாக்குதல்' என்ற குர்திஷ் மொழிபெயர்ப்பின் முன்னு ரையில், தியாங்கோ காலனித்துவத்தின் மிகவும் அழிவுக ரமான ஆயுதம் அதன் மொழியின் மீதான கட்டுப்பாடு என்று வாதிடுகிறார். பாடசாலைகள், நிர்வாகங்கள் மற்றும் இலக்கி யங்களில் ஐரோப்பிய மொழிகளைத் திணிப்பதன் மூலம், காலனித்துவ ஆட்சிகள் ஆபிரிக்கர்களின் தலைமுறைகளை அவர்களின் சொந்த அறிவுசார் மரபுகளிலிருந்து துண்டித்தன.

இந்தச் சூழலில், மொழிபெயர்ப்பு என்பது எமை மறுசீர மைப்புச் செய்யும் செயன்முறையாகும். இது ஒரு காலத்தில் அமைதியாக இருந்த கருத்துகள், கட்டுக்கதைகள் மற்றும் தத்துவங்களை மீண்டும் புழக்கத்தில் கொண்டு வர அனும திக்கிறது. எடுத்துக்காட்டாக, குர்திஷ் மொழியில் ஆபிரிக்கப் படைப்புகளை மொழிபெயர்ப்பது இரண்டு ஒடுக்கப்பட்ட மொழியியல் சமூகங்களை இணைப்பது மட்டுமல்லாமல், மொழியியல் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒற்றுமையையும் நிரூபிக்கிறது. இங்கே மொழிபெயர்ப்பு ஓர் அரசியல் மீட்புச் செயலாக மாறுகிறது. காலனித்துவம் அழிக்க முயற்சித்ததை மீட்டெடுப்பது மற்றும் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் பேரரசின் மத்தியஸ்தம் இல்லாமல் ஒருவருக்கொருவர் பேச முடியும் என்பதை உறுதி செய்வது.

இந்த முக்கியத்துவம் மொழிபெயர்ப்பை நினைவக அரசியல் மற்றும் கலாசார உயிர்வாழ்வின் மையத்தில் வைக்கிறது. தியாங்கோவைப் பொறுத்தவரை, மொழிபெயர்ப்பு என்பது காலனித்துவ நீக்கம் ஆகும். இது சுருக்கமான அர்த்தத்தில் அல்லாமல் சமூகங்களை அவற்றின் வரலாறுகள் மற்றும் எதிர்காலங்களுடன் மீண்டும் இணைத்து வாழும் யதார்த் தத்தில் முக்கியமானது.

பொக்கிஷங்களின் தீவுக்கூட்டம்:

உலக மொழிகளை விவரிக்க தியாங்கோ பெரும்பாலும் பொக்கிஷங்களின் தீவுக்கூட்டத்தின் உருவகத்தைப் பயன்ப டுத்துகிறார். ஒவ்வொரு மொழியும் ஒரு தீவு, அதன் சொந்த விலைமதிப்பற்ற பொருட்களை - வாய்மொழி மரபுகள், தத்து வங்கள், பாடல்கள் மற்றும் மொழிச்சொற்களை - சுமந்து செல்கிறது. மொழிபெயர்ப்பு, இந்தப் பொக்கிஷங்களைப் புழக்கத்தில் விட அனுமதிக்கும் பாத்திரம் என்று அவர் வாதி டுகிறார். அது தீவுகளை ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட தீவுக்கூட்டமாக இணைக்கிறது.

இந்த உருவகம் கோதேவின் உலக இலக்கியம் பற்றிய பார் வையுடன் ஆழமாக எதிரொலிக்கிறது, ஆனால் ஒரு முக்கிய விஷயத்தில் வேறுபடுகிறது: கோதே ஐரோப்பாவை முக்கிய தரகராகக் கற்பனை செய்த இடத்தில், 'சிறிய' அல்லது ஓரங் கட்டப்பட்ட மொழிகளின் பொக்கிஷங்கள் குறைவான முக்கி யத்துவம் வாய்ந்தவை அல்ல என்று தியாங்கோ வலியுறுத்து கிறார். உண்மையில், மனிதகுலத்தின் அறிவுசார் பன்முகத் தன்மையின் உயிர்வாழ்வு, இந்தப் பொக்கிஷங்களை உரை யாடலுக்குக் கொண்டு வரும் மொழிபெயர்ப்பின் திறனைப் பொறுத்தது என்று அவர் கூறுகிறார்.

மொழிபெயர்ப்பு ஆய்வுகளில், இந்த உருவகம் முதன் மையாக வணிக ரீதியாகவோ அல்லது கருவியாகவோ மொழிபெயர்ப்பின் பயன்பாட்டுக் கருத்துக்களை சவால் செய்கிறது. அதற்குப் பதிலாக, அவர் கலாசார பாதுகாப்பு மற்றும் பரிமாற்றத்தில் அதன் பங்கை வலியுறுத்துகிறது. மொழிபெயர்ப்பு மனிதகுலத்தின் கூட்டுப் பாரம்பரியத்தை நிர் வகிப்பதற்கான ஒரு வழிமுறையாக மாறுகிறது. அது ஒரு மொழியியல் செயலைப் போலவே ஒரு நெறிமுறை கடமையுமாகும்.

> மொழிபெயர்ப்பு என்பது பின்விளைவல்ல, மாறாக மனித தொடர்பு மற்றும் கலாசார உயிர்வாழ்வின் அடித்தளம் என்பதை தியாங்கோவின் சிந்தனைகள் வெளிப்படுத்துகின்றன. அவர் குறிப்பிட்டது போல், 'மனிதகுலத்தின் உண்மையான மொழி ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் அல்லது வேறு எந்த மொழியும் அல்ல, மொழிபெயர்ப்பே

நிறைவுக் குறிப்புகள்:

அவரது படைப்புகளின் வழி தியாங்கோ மொழிபெயர்ப்பை நாம் கருத்தியல் செய்யும் விதத்தை மாற்றுகிறார். மனதை காலனித்துவ நீக்கம் செய்வதிலிருந்து மொழிகளின் மொழி வரை, மொழிபெயர்ப்பு இரண்டாம் நிலை அல்லது நடுநிலை யானது அல்ல, மாறாக கலாசார உயிர்வாழ்வு, படைப்பு வெளிப்பாடு மற்றும் உலகளாவிய ஒற்றுமைக்கு மையமானது என்று அவர் வலியுறுத்துகிறார். சுய-மொழிபெயர்ப்பின் அவரது சொந்த நடைமுறை மொழிபெயர்ப்பின் படைப்புத் திறனை எடுத்துக்காட்டுகிறது, அதே நேரத்தில் அவரது தத் துவார்த்தப் பங்களிப்புகள் - குறிப்பாக மொழியியல் சமத் துவம், பொக்கிஷங்களின் தீவுக்கூட்டம் மற்றும் உலகளாவிய வியல் பற்றிய கருத்துக்கள் - மொழிபெயர்ப்பை ஜனநாயக மற்றும் பல்மைய நடைமுறையாக மறுவடிவமைக்கின்றன.

மேலும் அவரது பிரதிபலிப்புகள், மொழிபெயர்ப்பை காலனித்துவ நீக்கத்துடன் இணைப்பது, ஒடுக்கப்பட்ட மக்க ளிடையே ஒற்றுமை மற்றும் நிறுவன மொழிக் கொள்கை களின் தேவை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. அவரது தொலைநோக்கு மொழிபெயர்ப்பை இலக்கியத் திற்கு மட்டுமல்ல, ஒரு நியாயமான மற்றும் பன்முக உலகத்தை உருவாக்குவதற்கான பரந்த திட்டத்திற்கும் இன் றியமையாததாக ஆக்குகிறது. இந்த அர்த்தத்தில், மொழிபெ யர்ப்பு ஆய்வுகளுக்கு தியாங்கோவின் பங்களிப்பு இரண்டு மடங்கு முக்கியத்துவம் பெறுகிறது: அவர் தீவிரமான கருத் தியல் மறுவடிவமைப்பு மற்றும் நடைமுறை அரசியல் நிகழ்ச்சி நிரலை வழங்குகிறார். இந்தத் தலையீடுகள் அனைத்தும் சேர்ந்து, அவரை மொழிபெயர்ப்பின் மிக முக்கியமான சமகால சிந்தனையாளர்களில் ஒருவராக - மொழிபெயர்ப்பை தொழில்நுட்பக் கைவினையிலிருந்து விடுதலையின் தத்து வமாக மாற்றிய எழுத்தாளராக - நிலைநிறுத்துகின்றன.

மொழிபெயர்ப்பு என்பது பின்விளைவல்ல, மாறாக மனித தொடர்பு மற்றும் கலாசார உயிர்வாழ்வின் அடித்தளம் என்பதை தியாங்கோவின் சிந்தனைகள் வெளிப்படுத்து கின்றன. அவர் குறிப்பிட்டது போல், 'மனிதகுலத்தின் உண்மையான மொழி ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் அல்லது வேறு எந்த மொழியும் அல்ல, மொழிபெயர்ப்பே'. இந்தக் கண்ணோட்டம் மொழிபெயர்ப்பை அனைத்து மொழிகளும் சந்திக்கும் பொதுவான தளமாக நிலைநிறுத்து கிறது. அவரைப் பொறுத்தவரை, மொழிபெயர்ப்பின் பங்குகள் ஆழமான அரசியல் சார்ந்தவை. ஆபிரிக்க மொழிகளை இலக்கியம் மூலம் மீட்டெடுப்பதன் மூலமும் அவற்றிடையே மொழிபெயர்ப்புக்காக வாதிடுவதன் மூலமும் காலனித்து வத்தின் மன வன்முறையை அவர் தவிர்க்க முயல்கிறார். மொழிபெயர்ப்பு மறுசீரமைப்பின் ஆயுதமாகிறது. அது அடக் கப்பட்ட வரலாறுகள் மற்றும் மௌனமான குரல்கள் உலக ளாவிய உரையாடலில் மீண்டும் நுழைய அனுமதிக்கிறது.

அதே நேரத்தில், அவர் மொழிபெயர்ப்பின் படைப்புப் பரிமா ணத்தை வலியுறுத்துகிறார். சுயமொழிபெயர்ப்பு நடைமு றையைப் பிரதிபலிக்கும் வகையில், 'மொழிபெயர்ப்பு உலக இலக்கியத்தின் ஆக்ஸிஜன்' என்று அவர் வாதிட்டார். ஆக்ஸிஜன் வாழ்க்கையைத் தக்கவைப்பது போல, மொழிபெ யர்ப்பு கருத்துக்களின் சுழற்சியைத் தக்கவைத்து, மொழிகள் முழுவதும் நூல்களுக்குப் புதிய உயிரைக் கொடுக்கிறது. எல்லா வற்றிற்கும் மேலாக, அவரின் நுண்ணறிவு மொழிபெயர்ப்பை விடுதலை, நினைவகம் மற்றும் ஒற்றுமைக்கான நடைமு றையாக மாற்றுகின்றன. இது ஓரங்கட்டப்பட்ட மொழிகளுக்கு கண்ணியத்தை மீட்டெடுக்கும் பாலமாகவும், இலக்கியத்தை வளப்படுத்தும் படைப்புச் செயலாகவும், உண்மையிலேயே உலகளாவிய உரையாடலை உருவாக்குவதற்கான அரசியல் உத்தியாகவும் உள்ளது. அவர் நமக்கு நினைவூட்டுவது போல், 'எந்தவொரு புள்ளியும் உலகின் மையமாகும். எந்த மொழியும் மனித அனுபவத்தின் முழுமையை வெளிப்படுத்த முடியும்'. எனவே, மொழிபெயர்ப்பு என்பது வெறும் வார்த்தை களைப் பற்றியது அல்ல - அது நீதி, சமத்துவம் மற்றும் அனைத்துக் குரல்களையும் கேட்கக்கூடிய உலகத்தின் சாத் தியத்தைப் பற்றியது. அவரது மொழிகளின் மொழி நூலில் இருந்தான ஒரு மேற்கோளுடன் இதை நிறைவுசெய்வது பொருத்தம்.

'இவ்வுலகில் சிறிய மொழிகள் எதுவும் இல்லை. ஒவ் வொன்றும் அதன் சொந்த மனதின் பொக்கிஷங்களைக் கொண்டுள்ளன. அவை மொழிபெயர்ப்பின் மூலம் மற்றவர்க ளுடன் பகிர்ந்து கொள்ளக் காத்திருக்கின்றன. மொழிபெ யர்ப்பு என்பது மொழிகளின் மொழி. உலகில் நாம் அனைவரும் பேச வேண்டிய ஒரே மொழி அதுதான். மொழிகள் ஒரு இசைக்கு ழுவில் உள்ள இசைக்கருவிகள் போன்றவை. மொழிபெ யர்ப்பு என்பது அவற்றை இணக்கமாக இசைக்க அனும திக்கும் இசையாகும்.'

(தொடரும்...)



meenilankco@thaiveedu.com

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில்

பேராசிரியர்

துரை மனோகரனின்

வகிபாகம்

– இக்பால் அலி



தமிழ் இலக்கியத்தின் வரலாறு சங்க காலத்தில் தொடங்கி, பல்வேறு அறிஞர்களின் பங்களிப்பால் செழுமைப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்த வளர்ச்சிப் பாதையில், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பல மாணவர்களையும் அறிஞர்களையும் உருவாக்கி தமிழ் மொழிக்கு வலு சேர்த்துள்ளது. இத்துறைக்கு பெருமை சேர்த்தவர்களில், பேராசிரியர் துரை மனோகரன் குறிப்பிடத்தக்கவர். அவ்வகையில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் துரை மனோகரனின் கலை இலக்கிய வாழ்வியலையும் அவரது தமிழ்ப் பணிகளையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியதொன்றாகும். பேராசிரியர் துரை மனோகரன், அன்று முதல் இற்றை வரை சங்க இலக்கியம் முதல் நவீன தமிழ் இலக்கியம் வரை ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். அவரது தமிழ்ப் பணி, கல்விப் பணி, நாடகப்பணி, படைப்பிலக்கியம், இலக்கியச் செயற்பாடுகள், திறனாய்வுகள், பத்தி எழுத்துகள், வானொலி உரைகள் எனப் பன்முகத் தன்மைகளைக் கொண்டது. குறிப்பாக, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்குத் தேவையான இலக்கியப் பாட நூல்கள் இல்லாதிருந்த காலகட்டத்தில், அவற்றுக்கான நூல்களை எழுதி வெளியிட்டவர். இது, தமிழ் மொழியியல் மற்றும் இலக்கியத் துறைகளில் அவரது முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. இவை தவிர, அவரது பெயரை நிலைநிறுத்தும் வகையில் பாவையின் பரிசு (1966) நாவல் உட்பட பார்வையும் பதிவும் (1993), இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி (1997), பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும் (1999), ஈழத்து இலக்கிய தரிசனம் (2004), பழம் புனலும் புது வெள்ளமும் (2005) எனப் பல நூல்களை எழுதியுள்ளார். இந்த நூல்கள், அவரது விரிவான ஆய்வுகளையும், இலக்கியப் பங்களிப்புகளையும் எடுத்துக்காட்டுகின்றன.

சமூகத்தின் எதிர்காலப் பயணத்திற்கான வழிகாட்டுதல்களை மையமாகக்கொண்டு, பேராசிரியர் மனோகரன் எட்டு நாடகங்களை எழுதியுள்ளார். சில நாடகங்களில் அவரே நடித்தும் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது நாடகப் பங்களிப்புகள், சமூகச் சிந்தனைகளையும் கலை வெளிப்பாடுகளையும் ஒன்றிணைத்ததாக உள்ளன. பேராசிரியர் துரை மனோகரன் ஐந்தாம் வகுப்பில் 'மன்னிப்புக் கேட்ட மகாராஜா' என்ற நாடகத்தையும், க.பொ.த. உயர்தர வகுப்பில் பயின்றபோது 'அன்பின் பேரால்', 'ஒரே இரத்தம்', 'நால்வரில் ஒருவர்', மற்றும் 'நெஞ்சைக் கேள்' போன்ற நாடகங்களை எழுதி அரங்கேற்றி, நாடகக் கலைஞராகப் பரவலாக அறியப்பட்டார். 1971-இல் பல்கலைக்கழக மாணவராக இருந்தபோது 'சமுதாய விலங்கு' மற்றும் 'வேசங்கள் வாழ்கின்றன' போன்ற நாடகங்களையும் அரங்கேற்றினார். 'வேசங்கள் வாழ்கின்றன' நாடகத்தில், பல்கலைக்கழக மாணவர் பாத்திரத்தில் நடித்ததற்காக 'நினைவில் நிற்கும் பாத்திரத்திற்கான' சிறந்த விருதையும் வென்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய காலத்தில் 'இருளில் தேடும் ஒளிகள்' என்ற நாடகத்தையும் எழுதினார்.

பேராசிரியர் துரை மனோகரன் இளம் வயது முதலே இலக்கியச் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். 1969-ஆம் ஆண்டு, உரும்பிராய் கலை இலக்கிய வளர்ச்சிக் கழகத்தை தனது நண்பர்களுடன் இணைந்து நிறுவினார். அதன் தலைவராகவும் இருந்து பாடசாலை ஆண்டு விழாவையும் சிறப்பாக நடத்தினார். இவ்விழாவில் கலையரசி சொர்ணலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அப்போது, அவரது 'நெஞ்சைக் கேள்' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது, அதில் அவரும் நடித்துப் பலரின் கவனத்தை ஈர்த்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய அவர், சிறந்த எழுத்தாளர்,

பேச்சாளர், மற்றும் பத்தி எழுத்தாளராகவும் அறியப்படு கிறார். கண்டி மக்கள் மத்தியில் கலை, இலக்கியம், மற்றும் பண்பாட்டு அம்சங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அவர் முக்கியப் பங்கு வகிக்கிறார்.

இதன் ஒரு பகுதியாக, அவர் பல சங்கங்களுடன் இணைந்து செயற்பட்டு வருகிறார். அவற்றில் சில:

- மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
- முத்தமிழ்ச் சங்கம்
- மத்திய மாகாண சாஹித்திய விழாக்குழு
- தமிழ்ச் சங்கம்
- பேராசிரியர் கைலாசபதி ஆய்வு மையம்
- மலையக கலை கலாசாரப் பேரவை

இத்தகைய முயற்சிகளின் விளைவாக, அவர் பல திறமையான எழுத்தாளர்களை அடையாளம் கண்டு வளர்த் துள்ளார். அவர்கள் இன்று இலங்கையில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவதற்கு அவரே முக்கியக் காரணமாக இருந்துள்ளார்.

ஆரம்ப வாழ்க்கை:

பேராசிரியர் துரை மனோகரன் யாழ்ப்பாணம் உரும்பிராய் மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1947-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ஆம் திகதி பிறந்தவர். அவர் அப்பாவின் பெயர் துரைராஜா. அம்மாவின் பெயர் அருந்த வமணி. பேராசிரியர் துரை மனோகரன் குடும்பத்தில் ஆறு சகோதரர்கள். இதில் மூன்று ஆண்களும் மூன்று பெண்களும் அடங்குவர். அவர்களில் இவரே மூத்தவர்.

பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள் தனது சிறு வயதில் அம்பாறை மாவட்டத்தில் வாழ்ந்து வந்தார். அவரது தந்தை அங்குள்ள அரசாங்க நிறுவனமான கல்லோயா அபிவிருத்தி சபையில் சிறாப்பராக (காசாளர்) பணியாற்றினார். 1950-களின் ஆரம்பத்தில் 'கல்லோயா அபிவிருத்தி சபை' என அறியப்பட்ட இந்த நிறுவனம், 1960-களில் சிறிமா பண்டாரநா யக்க காலத்தில் 'ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபை' எனப் பெயர் மாற்றம் பெற்றது. அவர் தனது குடும்பத்துடன் அம்பாறை நகரில் வாழ்ந்து வந்தார்.

பாடசாலைக் கல்வி:

பேராசிரியர் துரை மனோகரன் அவர்களின் ஆரம்பக் கல்வி, அவரது சொந்த ஊரான உரும்பிராய்க்கும், தந்தையின் பணி இடமான அம்பாறைக்கும் இடையே அமைந்தது. 1953-இல் அம்பாறை தமிழ் மகா வித்தியாலயத்தில் முதலாம் வகுப்பு பயின்ற அவர், 1954-இல் கல்வி வசதிக்காக குடும்பத்துடன் சொந்த ஊருக்குத் திரும்பினார். அப்போது, அவரது தந்தை மட்டும் அம்பாறையில் தொடர்ந்து பணிபுரிந்து வந்ததால், விடுமுறை நாட்களில் அவர் அங்கு சென்று வந்ததுண்டு. இதனால், சிறுவயதிலேயே அம்பாறை நகரம் அவருக்கு நன்கு அறிமுகமானது.

உரும்பிராயில் உள்ள சைவதமிழ்த் தமிழ்ப் பள்ளியில் இரண்டாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை கற்ற பின்னர், 1957 ஜனவரியில், தந்தையின் ஆலோசனைப்படி கண்டிக்குச் சென்றனர். அங்கு அவரது உறவினர்கள் வசித்து வந்ததால் அவரது பாட்டனார், கண்டி நகரில் இருந்த இந்து சிரேஷ்ட வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டில் அவரையும், அவரது தங்கையை மூன்றாம் ஆண்டிலும் சேர்த்து படிக்க வைத்தார். அப்போது அப்பள்ளியின் அதிபராக இருந்த சண் முகதாசன் மிகவும் அன்பானவராகவும் பண்பானவராகவும் காணப்பட்டார். ஆதலால் இவ்விரு மாணவர்களையும் அன்போடு வரவேற்றார்.

பேராசிரியர் துரை மனோகரன், கண்டி இந்து சிரேஷ்ட வித்தி யாலயத்தில் ஒரு வருடம் மட்டுமே பயின்றபோதும், அது அவரது திறமைகளை வளர்த்துக்கொள்ள ஒரு முக்கியமான இடமாக அமைந்தது. அப்பள்ளியில், அவர் தனது நண்பரான பாண்டியனுடன் இணைந்து 'மன்னிப்புக் கேட்ட மகாராஜா' என்ற நாடகத்தை எழுதினார். அந்த நாடகத்தில், அவர் மகா ராஜாவாக நடித்தார். நாடகத்தை அவர்களே எழுதியிருந் தாலும், நடிப்புப் பயிற்சியை நவரட்ணம் என்ற ஆசிரியர் வழங்கினார். இப்பாடசாலைதான் துரை மனோகரன் அவர்க ளுக்கு ஆர்வத்துடன் கற்பதற்குரிய சூழலையும் தன் திறனை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றலையும் ஈட்டிக்கொடுத்தது.

பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள் கண்டி, லேவெல் லைக்குச் செல்லும் வழியில் உள்ள சங்கமித்த மாவத் தையில் அமைந்திருந்த தனது பாட்டனாரின் வீட்டில் வசித்தார். அந்த வீட்டில் அவரது தந்தையின் தங்கை, மற்றும் அவரது இரண்டு சகோதரர்கள் ஆகியோருடன் வாழ்ந்து வந்தார். தந்தையின் தம்பியார் ஒருவர் பேராதனைப் பல்க லைக்கழகத்தில் கலைப் பீடத்தில் படித்துக்கொண்டிருந்தார். அப்பாவின் கடைசித் தம்பி ஏழாம் வகுப்பில் கற்றார். குறிப்பாக வீட்டுச் சூழல் துரை மனோகரன் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மிக உதவியாக இருந்தது. வீட்டில் அப்பாவின் தங்கை நல்ல வாசகி. கல்கி, அம்புலிமாமா ஆகிய இரு சஞ்சிகைள் கட்டாயம் அவர்களது வீட்டில் இருக்கும்.

கல்கியில் அகிலனின் 'பாவை விளக்கு' என்ற நாவல் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. அதனை அப்பாவின் தங்கை விழுந்து விழுந்து வாசிப்பார். ஆனாலும், அப்பொழுது துரை மனோரகன் எதனையும் பெரிதாக வாசிப் பதில்லை. அந்த நாவலை அவர் காலம் பிந்தித்தான் வாசித்தார். அம்புலிமாமா சஞ்சிகையினை அவர் முழுக்க வாசித்தார். அங்கு பாட்டனாருக்குச் சகோதரர் முறையான பிறிதொரு பாட்டனும் அவ்வீட்டில் இருந்தார். அவர் கண்டி கச்சேரியில் வேலை செய்துகொண்டிருந்தவர். அவரும் நல்ல வாசகர். அவர்தான் சஞ்சிகைகளை எல்லாம் வாங்கி வருவார். சுதந்திரன் பத்திரிகையை அவர் ஒவ்வொரு வாரமும் கொண்டு வருவார். கல்கியும் அம்புலிமாமாவும் அவரு டாகவே அவர்களுக்கு கிடைத்தது. கல்கியில் மிகச் சுவராசி யமாக வெளிவந்த சிறுவர் நாவலை அவர் தொடர்ந்து வாசித்து வந்தார். பத்து வயதில் தொடங்கிய அவரின் வாசிப்பு இன்று வரை அவரை விட்டுப் போகவில்லை.

பேராசிரியர் துரை மனோகரன், 1958 முதல் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூ ரியில் விடுதியில் தங்கிப் பயின்றார். அந்தக் காலகட்டத்தில், தனது 11-ஆவது வயதிலேயே அவருக்குக் கவிதை எழுதும்

ஆர்வம் ஏற்பட்டது. மூன்றாம், நான்காம் வகுப்புப் பாடப்புத்தகங்கள் வழியாக பாரதியார் அறிமுகமானதால், விடுதியில் இருந்தபோது பாரதியார் குறித்து தனது முதல் கவிதையை அவர் எழுதினார். அதேசமயம், நாடகத்துறையிலும் அவருக்கு ஆர்வம் இருந்தது. யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் அப்போது புகழ்பெற்ற ஒரு நாடக ஆசிரியர் இருந்தது குறிப்பிடத்தக்கது.

'தேவன்-யாழ்ப்பாணம்' என்ற புனைப்பெயரில் சிறுகதைகள் எழுதிய புகழ்பெற்ற ஆசிரியர் இ. மகாதேவா என்பரே அவர். அவர் ஒவ்வொரு வருடமும் நாடகங்களை எழுதி மேடையேற்றுவார். ஏழாம் வகுப்பு மாணவராக இருந்த துரை மனோகரன், அந்த நாடக ஒத்திகைகளை மிகுந்த ஆர்வத்துடன் கவனிப்பார். அதில் 'கூடப் பிறந்த குற்றம்' என்ற நாடகத்தில் செங்கையாழியான் கதாநாயகன் பாத்திரத்தில் நடித்தார். அவர் அப்பொழுது அதே கல்லூரியில் எஸ்.எஸ்.சி. மேல் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அங்கு துரை மனோகரன் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். ஆதலால், இ. மகாதேவா அவர்கள் ஒவ்வொரு வருடமும் மேடையேற்றும் நாடங்களை கண்டுகளிக்க அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. அது மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெறும். அதில் பிரமுகர்கள், வெளிப் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொள்வார்கள்.

எனினும் அவருக்கு அடிக்கடி வீட்டுக் கவலை தோன்றியதால் யாழ். இந்துக் கல்லூரியில் தொடர்ந்து படிக்கமுடியவில்லை. 1961-இல் அப்பா தன் மகனின் நிலை அறிந்து வீட்டில் இருந்து படித்தற்காக ஊரிலுள்ள உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஒன்பதாம் வகுப்பில் சேர்க்கப்பட்டார். உரும்பிராய் இந்துக் கல்லூரி அவருக்கு ஒரு பெரிய தளமாக விளங்கிற்று. துரை மனோரகன் ஒன்பதாம் ஆண்டு படிக்கும் போது ஞான சேகரன் (ஞானம் இதழாசிரியர்) மேல் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். அவர் அப்பொழுது நாடகம் எழுதித் தயாரித்து நடித்து மேடையேற்றுவார்.

க.பொ.த. சாதாரண தரத்தில் பேராசிரியர் துரை மனோகரனின் தமிழ் ஆசிரியராகப் பண்டிதர் நவரட்னம் இருந்தார். கட்டுரை எழுதத் தலைப்புகள் வழங்குவது அவரது வழக்கம். ஒருமுறை, துரை மனோகரன் தனது கட்டுரையின் இறுதியில் கவிதை வரிகளைச் சேர்த்திருந்தார். கட்டுரையைப் பாராட்டிய ஆசிரியர், 'கவிதை இன்னும் சிறப்பாக அமைய வேண்டும், அதற்குப் பயிற்சி தேவை' எனக் கூறினார். அடுத்த வகுப்பில், பாடத்திட்டத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, கவிதை எப்படி எழுதுவது என்பதை 40 நிமிடங்கள் விளக்கினார். மற்ற மாணவர்கள் இதைப் பொருட்படுத்தாத நிலையில், துரை மனோகரனுக்காகவே அவர் இக் கருத்துகளை விரிவாகப் போதித்தார். பின்னர் ஒருமுறை, மற்றொரு கட்டுரையுடன் கவிதையையும் எழுதி சமர்ப்பித்தார். அதைப் பார்த்த ஆசிரியர் எந்தக் குறையும் சொல்லவில்லை. இது, தனது கவிதை ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது என துரை மனோகரன் புரிந்து கொள்ள உதவியது. இதன் பின்னரே, அவருக்குக் கவிதை எழுதும் ஆர்வம் மேலும் உறுதியானது.



பேராசிரியர் துரை மனோகரன், தனது ஒன்பதாம் வகுப்பில் பயின்றபோது, தங்கலட்சுமி என்ற ஆசிரியை 'நீர் பார்த்த படம்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதும்படி கூறினார். அப்போது அவர் கண்டுகளித்த 'பாசமலர்' திரைப்படம் குறித்த தனது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, ஒரு கட்டுரையை எழுதினார். இதுவே அவர் எழுதிய முதல் திறனாய்வுக் கட்டுரையாக அமைந்தது. அவரது கட்டுரையைப் பாராட்டிய ஆசிரியை, அவரது திறமையை அங்கீகரித்தார். ஆசிரியையின் இந்தப் பாராட்டு, திறனாய்வுத் துறையில் அவருக்கு ஏற்பட்ட ஈடுபாட்டிற்கான முதல் உந்துதலாக அமைந்தது.

அப்பொழுது ஏனைய பாடசாலைகளில் எட்டாம் வகுப்பில்தான் கலைப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவுகள் என்று பிரிப்பார்கள். ஆனால், உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஒன்பதாம் ஆண்டுக்குப் பின்னர்தான் பிரிப்பார்கள். துரை மனோகரனுக்கு கலைப்பிரிவில் படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஒன்பதாம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் கலைப் பிரிவிலும் படிக்கலாம் விஞ்ஞானப் பிரிவிலும் கற்கலாம் என்ற வகையில் அவருடைய பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்திருந்தன. துரை மனோகரன் இயல்பாகவே கலைப் பிரிவில் படிக்கத்தான் எண்ணம் கொண்டிருந்தார். ஆனால், யாழ்ப்பாணம் மல்லாகம் என்ற இடத்தைச் சேர்ந்த அவரின் வகுப்பாசிரியர் கார்த்திகேசு அவர்கள், துரை மனோகரன் இரண்டு துறைகளிலும் திறமையாக இருக்கின்றார். அவரை விஞ்ஞானப் பிரிவில் விடுவோம் என்று தீர்மானித்து விஞ்ஞானப் பிரிவு வகுப்புக்கு அனுப்பிவிட்டார். ஆசிரியர் அவர்களின் சொற்படி விஞ்ஞானப் பிரிவில் சேர்ந்து கற்றார். அவர் வகுப்பில் யோகேஸ்வரன் ஆசிரியர் பௌதீக வியல் பாடம் படிப்பிப்பார். கலைப்பிரிவு வகுப்பில் பொன்னம்பலம் ஆசிரியர் தமிழ் இலக்கியம் படிப்பிப்பார். கலைப்பிரிவில் ஆர்வம் ஏற்பட்டு பாடசாலையின் அதிபராக இருந்த அ. வைத்தியலிங்கம் அவர்களிடம் கலைப் பிரிவுக்கு மாற விரும்புவதாகத் தெரிவித்தார்.

அப்பொழுது உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த அ. வைத்தியலிங்கம், கம்யூனிஸ்ட் கட்சியில் மிகவும் பிரபலமான ஒரு தலைவர். பீட்டர் கெனமன் மற்றும் என்.எம். பெரேரா போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததால், அவர் 'கம்யூனிஸ்ட் வைத்தியலிங்கம்' என்றே அழைக்கப்பட்டார். அவர் ஒரு கொள்கை சார்ந்த கம்யூனிஸ்டாக இருந்தபோதிலும், பள்ளியில் நடைபெறும் சமய மற்றும் கலாசார நிகழ்வுகளுக்கு எந்தத் தடையையும் விதித்ததில்லை. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தேவாரங்கள் பாடி சமய நிகழ்வுகளை பள்ளி விதிமுறைகளுக்கு ஏற்ப நடத்த அனுமதித்தார். அவரது திறந்த மனப்பான்மையும், அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் பண்பும் குறிப்பிடத்தக்கவை.

'பொதுவாக எல்லோரும் விஞ்ஞானப் பிரிவுக்குத்தான் வர விரும்புவார்கள். ஆனால் நீர் கலைப் பிரிவுக்குப் போக வேண்டும் என்று சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது,' என்று கூறிவிட்டு, 'இது உன்னுடைய விருப்பம்' எனத் தெரிவித்தார்.

பரீட்சை நெருங்கிய கடைசித் தவணையில் கலைப் பிரிவில் இணைந்த அவரது இந்த முடிவு, பள்ளி மட்டத்தில் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. எனினும், அவர் இரவு பகலாக தீவிரமாகப் படித்து, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார்.

1966-ஆம் ஆண்டு, க.பொ.த. உயர்தரம் பயிலும்போது, பேராசிரியர் துரை மனோகரனுக்கு நாவல் எழுதும் ஆர்வம் ஏற்பட்டது. சிறுகதைகளைத் தாண்டி, நேரடியாக ஒரு நாவலை எழுத அவர் முயற்சித்தார். அவரது பட்டதாரி ஆசிரியரான சித்தப்பா, அவர் ரகசியமாக நாவல் எழுதிக்கொண்டிருப்பதை அறிந்துகொண்டார். துரை மனோகரன் இல்லாத நேரத்தில், கையெழுத்துப் பிரதியை வாசித்துப் பார்த்த அவர், தனது சகோதரரிடம் (துரை மனோகரனின் தந்தையிடம்) சென்று, 'தம்பி ஒரு நல்ல நாவல் எழுதுகிறான். அதை எப்படியாவது புத்தகமாக வெளியிட உதவுங்கள்' என்று கூறினார். இதைக் கேட்ட அவரது தந்தை, 'நாவலை எழுதி முடித்தவுடன் புத்தகமாகப் போட்டுத் தருகிறேன்' என்று உறுதியளித்தார். சித்தப்பாவின் தூண்டுதலாலும், தந்தையின் உதவியாலும், அவரது 18-ஆவது வயதில், 1966-ஆம் ஆண்டு, 'பாவையின் பரிசு' என்ற நாவல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வெளியிடப்பட்டது. வெளியீட்டு விழாவில் அந்த மண்டபத்தை அலங்கரிக்கும் விடயத்தில் அனைத்து மாணவர்களும் மிகுந்த ஒத்துழைப்பு வழங்கினார்கள். அவர் நிகழ்வில் கலந்து கொண்டது மட்டும்தான். மற்றும் எல்லா ஏற்பாடுகளையும் அவருடைய பாடசாலை நண்பர்கள்தான் செய்தார்கள். தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அவருடைய தேர்தல் தொகுதி கோப்பாய். இத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை இருந்தார். அந்நூல் வெளியீட்டு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை உரையாற்றும் போது 18 வயதில் ஒரு நாவலை எழுதியது என்பது நம் ஊருக்குப் பெருமை தரும் விடயம் என்று வியந்து பாராட்டிப் பேசினார். அதன் பின் பாடசாலையிலும் சரி ஊரிலும் சரி துரை மனோகரன் கௌரவத்துடன் மதிக்கப்பட்டார்.

இதற்குப் பிறகு அவருக்குப் பௌதீகவியல் கற்பித்த ஆசிரியர் அவர்கள் துரை மனோகரனை அழைத்து ஒரு நாடகம் எழுதும்படியும் அதில் தானும் நடிப்பேன் என்று தெரிவித்தார். அப்பொழுதுதான் அவர் முதன் முதலாக தனியாக நாடகம் எழுதினார். அந்த நாடகத்தின் பெயர் 'அன்பின் பேரால்'. அந்த நாடகத்தை இயக்கியவர் துரை மனோகரன்தான். அதில் தகப்பன் பாத்திரத்தில் அவ்வாசிரியர் நடித்தார். துரை மனோகரன் கதநாயகி வேடத்தில் நடித்தார். இன்னுமொரு மாணவர் கதாநாயகனாக நடித்தார். அந்த நாடகம் ஐந்து முறை மேடையேற்ற ப்ப ட்ட து. முதலில் அந்நாடகம் அவர் பாடசாலையில் மேடையேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து வேறு பாடசாலையிலும் பொது இடங்களிலும் மேடையேற்றப்பட்டது. அவருக்கு நாடகத் துறையிலும் உற்சாகம் ஏற்பட்டது.



அவர் தொடர்ந்து நாடகங்கள் எழுதி நடித்தார். 'நெஞ்சைக் கேள்', என்ற நாடகத்தில் அவர் கதாநாயகியாக நடித்தார். 'ஒரே இரத்தம்' என்ற நாடகத்தில் சட்டத்தரணியாக நடித்தார். இன்னும் பல நாடகங்களை எழுதியும் நடித்தார். இவை அனைத்தும் க.பொ.த உயர்தரம் கற்கின்றபோது எழுதியவையாகும். பாடசாலை ஆசிரியர் ஒருவர் 'நால்வரில் ஒருவர்' என்ற நாடகத்தை தயாரித்தார். திருஞானசம்பந்தருக்கு ஆதரவளித்த பாண்டிமாதேவி மங்கையக்கரசி என்ற பாத்திரத்தில் அவர் நடித்தார். அதில் அவருடைய தங்கையும் நடித்தார். சுமார், எட்டு நாடகங்கள் அவர் எழுதியிருந்தாலும் தற்போது அவரிடம் ஒரே ஒரு நாடகம்தான் கைவசம் உள்ளது.

துரை மனோகரன் யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவனாக இருந்தபோது, உயர்வகுப்பு மாணவர் மன்றத் தலைவராகவும் விளங்கினார். அக்காலப்பகுதியில் பல இலக்கியப் பணிகளையும் புரிந்துள்ளார், அப்போது, டொமினிக் ஜீவா, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் முதலான எழுத்தாளர்களையும் கல்லூரிக்கு அழைத்து, இலக்கிய உரைகளை ஆற்றச் செய்தார். 1969-இல் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அக்கால கட்டத்தில் வீரகேசரி நாளிதழ் பத்திரிகையில் ஊரில் நடைபெறும் கலை கலாசார நிகழ்வுகளை தொடர்ந்து எழுதி வந்தார். அதுவே, பின்னர் அவரை ஒரு பிரபல்யமான பத்தி எழுத்தாளராக மாற்றம் பெறச் செய்வதற்கு உந்து சக்தியாக இருந்தது.

பல்கலைக்கழகக் கல்வி:

1969 ஒக்டோபர் மாதம் பேராதனைப் பல்கலைக்கழகம் நுழைந்த அவர் முதலாவது கவியரங்கில் பங்குபற்றினார். அதற்கு பேராசிரியர் எஸ். தில்லைநாதன் தலைமை தாங்கினார். பல்கலைக்கழகம் இரண்டாம் வருடம் கற்றுக் கொண்டிருக்கின்றபோது 'சமுதாய விலங்கு' என்ற நாடகத்தை எழுதினார். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் கல்வி பயிலும் துரை மனோகரன் நாடகத்தை எழுதினார். அதை இயக்கித் தயாரித்தவர் பேராசிரியர் எஸ். தில்லைநாதன். இந்த நாடகத்தின் ஒத்திகையினைப் பார்ப்பதற்காகப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும் வருவார். அவர் நாடகத்தில் செய்யப்பட வேண்டிய மேடையேற்றம், நடிப்புத் திருத்தங்களைச் சொல்லி நெறிப்படுத்துவார். நாடக எழுத்துருப் பற்றி எந்தக் குறையும் கூறவில்லை.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவர் இரண்டாம் ஆண்டு மாணவராக இருக்கும் சமயம், 'தமிழ் இலக்கிய மன்றம்' தோற்று விக்கப்பட்டது. ஏற்கனவே தமிழ்ச் சங்கம் இருந்தது. அதன் தலைவராக துரை மனோகரன் அவர்கள் தேர்வு செய்யப்பட்டார். அவர் தமிழ்த்துறையில்

சிறப்புக் கல்வி கற்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அப் பொழுது பேராசிரியர் சு. வித்தியானந்தன் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தார்.

பல்கலைக்கழகத்தில் நான்காம் ஆண்டில் 'வேசங்கள் வாழு கின்றன' என்ற நாடகத்தை எழுதி நடித்தார். இவர் இந்த நாட கத்தில் மிகச் சிறப்பாக நடித்தமையால் நினைவில் நிற்கும் பாத்திரம் என்ற பெயரில் இவருக்கு பரிசு வழங்கி கௌரவிக் கப்பட்டது. அதில் அவர் தந்தையின் பாத்திரத்தில் நடித்தார். அதேபோல், பேராதனை தமிழ்ச் சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றார். சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்றார்.

1972-ஆம் ஆண்டு, பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டிருந்த கனகாம்பிகை என்பவரைச் சந்தித்தார். அவர் பக்க த்து ஊரான ஊரெழுவைச் சேர்ந் தவர். இரு குடும்பத்தினரின் சம்மதத் துடன் அவர்களின் திருமணம் இனிதே நடைபெற்றது. பேராசிரியர் துரை மனோகரனின் கல்வி மற்றும் ஆய்வுப் பயணத்திற்குப் பல ஆசிரி யர்கள் வழிகாட்டியுள்ளனர். அவர் களில், பேராசிரியர் சு. வித்தியா னந்தன், பேராசிரியர் சண்முகதாஸ், எஸ். தில்லைநாதன், மற்றும் நா. சுப் பிரமணியம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். குறிப்பாக, பேராசிரியர் க. அருணாசலம் முதலில் அவரது பல் கலைக்கழக நண்பராக இருந்து, பின்னர் அவருக்கு ஆசிரியராகவும் வழிநடத்தினார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர், சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், மற்றும் பத்தி எழுத்தாளராகவும் அறியப்படுகிறார். கண்டி மக்கள் மத்தியில் கலை, இலக்கியம், மற்றும் பண்பாட்டு அம்சங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அவர் முக்கியப் பங்கு வகிக்கிறார்.

விரிவுரையாளரும் கல்விப் பணியும்:

1974-இல் பேராதனைப் பல்கலைக்க ழகத்தின் தமிழ்த்துறையில் தற்காலிக உதவி விரிவுரையா ளராக அவர் நியமிக்கப்பட்டார். அதன் பிறகு 1975 - 1978 வரையிலும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தற்காலிக தமிழ்த் துறை உதவி விரிவுரையாளர் நியமனம் கிடைக்கப் பெற்று கடமையாற்றினார். அப்பொழுது உபவேந்தராகப் பேராசிரியர் கைலாசபதி அவர்களும் அதனைத் தொடர்ந்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும் இருந்தார்கள். அப்பொழுது அங்கு நடைபெற்ற தமிழ்ச்சங்கத்தின் கலைவி ழாவில் துரை மனோகரனின் 'சமுதாய விலங்கு' என்ற நாடகம் இரண்டாது தடவையாக மேடையேற்றப்பட்டது. அதில் யாழ். பல்கலைக்கழக மாணவர் மாணவிகள் நடித்தார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில், பேராசிரியர் துரை மனோகரன் அவர்களுக்கு, பேராசிரியர் க. கைலாசபதியுடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. இது அவரது கல்வி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. பேராசிரியர் கைலாசபதி, அவரது வாழ்வில் ஒரு முக்கியமான வழிகாட்டியாக இருந்தார். 1979-ஆம் ஆண்டு முதல், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிரந்தர உதவி விரிவுரையாளராகச் சேர்ந்தார். பின்னர், படிப்படியாக முது நிலை விரிவுரையாளர், பேராசிரியர் எனப் பல பதவிகளைப் பெற்று உயர்ந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் அமைந் திருக்கும் சங்கப்பலகை இலக்கிய ஆர்வம் உள்ள மாணவர் களின் படைப்புகளான கவிதைகள், கட்டுரைகள் போன்ற வற்றை வெளியிடுவதற்கான களமாக இருந்து வருகிறது. பேராசிரியர் சி. தில்லைநாதன் இதனைத் தொடங்கி வைத்தார். பேராசிரியர் துரைமனோகரன் உத்தியோகப்பற் றற்ற முறையில் சங்கப்பலகையின் பொறுப்பாளராக இருந்து மாணவரை உற்சாகப்படுத்தி வந்தார். இந்த அமைப்பு இன்றுவரை சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. இதன் குறிப்பி டத்தக்க சாதனையாக, 'சங்கப் பலகையில்' வெளிவந்த கவி தைகளைத் தொகுத்து, கலாநிதி செ. சுதர்சனைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு 'என் தேசத்தில் நான்' என்ற பெயரில் ஒரு நூல் ஒன்று வெளியிடப் பட்டது. இந்த நூலை டொமினிக் ஜீவா தனது மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளியிட்டார். அந்நூல் வெளியீட்டு விழா நடைபெற்றபோது பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தார்.

பேராசிரியர் எஸ். தில்லைநாதன் அவர்கள் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த காலத்தில் தமிழ்த்துறைக்கு என்று நூலகம் ஒன்று பெயரளவில் இருந்தது. அந்நிலையில் பேராசி ரியர் எஸ். தில்லைநாதனுடைய அரிய நூல்களையும் வேறு நபர்க ளுடைய நூல்களையும் சேகரித்து ஒரு சிறியளவில் நூலகத்தை தொடக்கி வைத்தார். இப்போது அது பெரிய நூலகமாக பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் அவர்களால் வளர்த்து எடுக்கப்பட்டு வருகிறது.

பேராசிரியர் துரை மனோகரன், தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் நான்கு முக்கிய மாற்றங்களை ஏற்ப டுத்தினார். அவை:

- நாடகப் போட்டி: தமிழ் சிறப்புக்கலை பயிலும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு நாடகம் ஒரு பாடமாக இருந் ததால், மாணவர்களுக்கிடையே ஒரு நாடகப் போட்டியைத் தொடங்கினார். இந்தப் போட்டிக்கு மதிப் பெண்களும் வழங்கப்பட்டன. இம்முயற்சி இன்றும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. அவருக்குப் பின் வந்த தலைவர்களான பேராசிரியர் வ. மகேஸ்வரன், கலாநிதி சோதி மலர், மற்றும் பேராசிரியர் பிரசாந்தன் ஆகியோர் இதனைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.
- இலக்கியச் சொற்பொழிவுகள்: புகழ்பெற்ற இலக்கியவா திகளைப் பல்கலைக்கழகத்திற்கு அழைத்து, அவர் களின் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தார். இது மாணவர்களுக்கு இலக்கியப் புரிதலை மேம்படுத்த உதவியது.

- மூத்த எழுத்தாளர் கௌரவம்: தமிழ்ச் சங்கத்தின் வருடாந்திர கலை விழாவில், மூத்த எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் வழக்கத்தைத் தொடங்கினார். இதன் மூலம், முதன்முதலில் கௌரவிக்கப்பட்டவர் எழுத்தாளர் டொமினிக் ஜீவா ஆவார். இந்த மரபு இன்றும் தொடர்கிறது.
- வானொலி நிகழ்ச்சி: இலங்கை வானொலியில் மலையக சேவைக்காக, 'கலையமுதம்' என்ற பெயரில் வாராந்த நிகழ்ச்சியைத் தொடங்கினார். 2006 முதல் 2011 வரை நடந்த இந்த நிகழ்ச்சியில், தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து பங்குபெற்றனர்.

1980-களில், பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள் தனது கலாநிதிப் பட்டப் படிப்பிற்காகத் தமிழ்நாடு, தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். இலங்கையிலிருந்து அங்கே கலாநிதிப் பட்டம் பெறச் சென்ற இரண்டாவது நபர் இவராவார். முதன்முதலாகச் சென்றவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆவார்.

1986-இல் தனது படிப்பை முடித்துவிட்டுப் பேராதனைப் பல்கலைக்கழகம் திரும்பியபோது, கண்டி சத்தியோதய மண்டபத்தில் மலையக இலக்கியம் தொடர்பான நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டார். அந்த நிகழ்வின் மூலம், அவர் மலையக எழுத்தாளர்களான அந்தனி ஜீவா, சாரல் நாடன், வி. தேவராஜ், மற்றும் முத்து சம்பந்தர் உள்ளிட்ட பலருடன் நட்புறவைப் பேணிவந்தார். இந்த நட்பு, மலையக இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அவரது பங்களிப்பை மேலும் வலுப்படுத்தியது.

பேராசிரியர் துரை மனோகரன், தனது பேச்சாற்றலால் கண்டி இலக்கிய உலகில் ஒரு மதிக்கத்தக்க இடத்தைப் பிடித்தார். மறைந்த அதிபர் செ. நடராஜாவுடன் இணைந்து, அவர் கண்டியில் நடந்த பல கலை மற்றும் இலக்கிய நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கினார்.

இலங்கை வானொலியில் ஒலிபரப்பான ஆறு மெல்லிசைப் பாடல்களை இயற்றிய அவர், 'கலைக்கோலம்' போன்ற வானொலி நிகழ்ச்சிகளில் உரைகளை நிகழ்த்தியுள்ளார். மேலும், சக்தி மற்றும் நேத்திரா தொலைக்காட்சிகளிலும் இலக்கியம் சார்ந்த விவாதங்களில் பங்கேற்றுள்ளார். அத்துடன், 'ஞானம்' கலை இலக்கிய சஞ்சிகையில் அதன் முதல் இதழ் முதல் 300-வது இதழ் வரை தொடர்ச்சியாகப் பத்தி எழுத்துகளை எழுதியுள்ளார். இந்தத் தொகுப்பு விரைவில் நூலாக வெளியிடப்பட உள்ளது.

தமிழ் ஆய்வு மாநாடுகள்:

பேராசிரியர் துரை மனோகரன், தமிழ் மொழி ஆய்வுகள் தொடர்பாகப் பல நாடுகளுக்குப் பயணித்து உரையாற்றியுள்ளார். 2010 உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, மலேசியாவில் நடந்த இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு, சர்வதேச இந்து மாநாடு, லண்டன் உலகத் தமிழ் ஆய்வு மாநாடு உள்ளிட்ட பல சர்வதேச மாநாடுகளில் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். சில மாநாடுகளுக்குத் தலைமை தாங்கியும் உள்ளார். அவரது மாணவர்கள் பலர் இன்று உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகிறார்கள். அவர்களில் சிலர்: பேராசிரியர் சிவலிங்கராசா, பேராசிரியர் பிரசாந்தன், கலாநிதி சோதி மலர், கலாநிதி செ. சுதர்சன், பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ் மற்றும் இக்பால் அலி ஆகியோர். ஊடகத்துறையிலும், இலக்கியத்திலும் பல இளைஞர்களை அவர் ஊக்குவித்து உருவாக்கியுள்ளார். எழுத்தாளர் ராஜகவி ராகில், தனது மாணவராக இருந்த துரை மனோகரன் மீதான பற்றின் காரணமாக, தனது 'இன்னுமொரு சுவாசம்' சிறுகதைத் தொகுப்பில் உள்ள 'வெள்ளைப்புறா' கதையிலும், 'மிட்டாய் மலை இழுத்துச் செல்லும் எறும்பு' நாவலிலும் துரை மனோகரனை ஒரு முக்கியப் பாத்திரமாகக் காட்சிப்படுத்தியுள்ளார். விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் பேராசிரியர் துரை மனோகரன் தனது வாழ்நாளில் பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். அவற்றில் சில: இரத்தினதீபம் (1998), மத்திய மாகாணத் தமிழ்ச் சாகித்திய விருதுகள் (1995, 2002, 2003, 2006), தினகரன் வாழ்நாள் சாதனையாளர் விருது (2024) இவற்றுடன், 2025-ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சர்வதேச ஆய்வு மாநாட்டில் அவர் வாழும் காலத்திலேயே மூத்தப்படைப்பாளிக்கான கௌரவ விருது அவருக்கு வழங்கப்பட்டது. இந்த விருதுகள் அனைத்தும் அவரது வாழ்நாள் பங்களிப்புகளுக்குக் கிடைத்த அங்கீகாரங்களாகும்.

முடிவுரை:

இவ்வாறான வாழ்க்கைப் பின்புலத்தில் இருந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அதன் வாழ்வுக்கும் புத்துயிரளித்து, உந்து சக்தியாக இருந்து அவர் ஆற்றிய வகிபாகம் குறித்து எவையென அறிந்து அவற்றின்பால் கரிசனை செலுத்த வேண்டும். முதலில் சிறு பராயத்தில் மாணவர்களிடையே நாடகக் கலை வளர்ப்பதற்கு பாடசாலை சமூகம் பங்களிப்பு நல்க வேண்டும். இலங்கையில் சிறுவர் இலக்கியம் மங்கிப் போகின்ற நிலையில் சிறுவர் நாடகங்களை அரங்கேற்றி காத்திரமான பணிகளைச் செய்வதற்கு முன் வருதல் வேண்டும்.

துரை மனோகரனின் எழுத்தாக்க முயற்சிகளுக்கும் நாடக முயற்சிகளுக்கும் வலுவூட்டும் வகையில் பாடசாலை மட்டத்திலும். பல்கலைக்கழக மட்டத்திலும் அவருக்குத் தேவையான வரவேற்பும் ஊக்குவிப்பும் வழங்கப்பட்டுள்ளது. இது அவருடைய கல்வி, இலக்கிய முயற்சிகளுக்கு நம்பிக்கையூட்டுவதாய் அமைந்திருந்தன. ஆதலால் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் மாணவர், மாணவிகள் மத்தியில் கலை இலக்கியப் பண்பாட்டு படைப்பாக்க நிகழ்வுகளை சிறப்புற நடத்தி அதில் வெற்றி பெற்றவரைப் பாராட்டி ஊக்குவிப்பதன் மூலமாக துரை மனோகரன் போன்ற நல்ல தமிழ் பேராசிரியர்களையும் சிறந்த படைப்பாளிகளையும் ஆர்வமிக்க இளம் எழுத்தாளர்களையும் ஊக்கப்படுத்தலாம். அவரது வாழ்க்கை, ஒரு தனிநபர் எவ்வாறு சமூகத்தின் கலை மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கு உந்துசக்தியாக மாற முடியும் என்பதற்கு ஓர் உதாரணமாகும்.



Iqbal.ali@thaiveedu.com



கி.ரா. விருது பெற்ற சு. வேணுகோபால்

- அரவிந்த் வடசேரி

தாய்வீடு இதழுடன் நெருங்கிய தொடர்பு பேணும் தமிழின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் திரு சு. வேணு கோபால். விஜயா வாசகர் வட்டத்தின் 'கி.ரா. விருது 2025' அவருக்கு வழங்கப்படுவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இதற்கான விருதுத் தொகையாக இந்திய ரூபாய் 5 இலட்சமும் விருதுக் கேடயமும் வழங்கப்படுகிறது. கோவை சக்தி மசாலா நிறுவனம் விருதுத் தொகையை வழங்குகிறது.

எம்.ஏ, எம்ஃபில் பட்டம் வென்று பணியில் சேர்ந்த பிறகு சொந்த மண்ணுக்குத் திரும்பி ஒன்பது ஆண்டுகள் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவருக்கு கரிசல் மண்ணைத் துழாவி கதைகளை எடுத்துவந்த கி.ரா. பெயரில் விருது வழங்கப்படுவது சாலப்பொருத்தமானது.

ஜெயகாந்தனின் எழுத்துகள் மற்றும் அவரது தனியாளுமையின் மீதான ஈர்ப்பினால் நவீன இலக்கியத்தை அடைந்தவர் சு.வே. அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கக் கூடிய மனிதர்களையும் நிகழ்வுகளையும் தனக்கே உரித்தான பார்வையில் புற அக நிகழ்வுகளை விரிவாகவும் எளிமையாகவும் நேரடியாகவும் வாசகருக்குச் சொல்லும் பாணி இவருடையது. அன்றாடச் செயற்பாடுகள் பண்பாட்டு மரபை மீறும்பொழுது உருவாகும் முரணின் காரணமாக ஓட்டு மொத்த வாழ்க்கையும் எப்படி சிதைந்து போகிறது

என்பதைத் தனது படைப்புகளின் வாயிலாகச் சொல்லி வருகிறார் திரு. வேணுகோபால். அன்றாட வாழ்வியல் சூழல்களை களமாகக் கொண்டு ஏதோ ஒரு நிகழ்வினை விதையாக்கி இக்கட்டான நிலைமைகளை உருவாக்கி அந்த நேரங்களில் கதைமாந்தர்கள் எப்படி எதிர்வினை ஆற்றுகிறார்கள் என்பதைப் புனைந்து கதைகளை உருவாக்குவதாகச் சொல்கிறார் சு.வே. சொந்த வாழ்வில் தான் பார்த்து அனுபவித்து உணர்ந்தவற்றை இயல்பான கதையோட்டத்தினூடே விவரித்து வாசகர்களுக்கு தனித்துவமான ஒரு வாசிப்பனுபவித்தினை வழங்குபவை இவரது புனைவுகள். சமூகத்தின் மேற்பரப்பில் பெருமளவு வன்முறைகள் நடந்துகொண்டிருந்தாலும் கீழ்ப்பரப்பில் அன்பு, காதல் இருந்துகொண்டேதான் இருக்கும் என்பது இவரது நம்பிக்கை.

இவரது முதல் நாவல் 'நுண்வெளி கிரகணங்கள்' 1995-ஆம் ஆண்டின் குமுதம் ஏர் இந்தியா போட்டியில் முதல் பரிசு வென்றது. 2006-இல் வெளிவந்த 'வெண்ணிலை' சிறுகதைத் தொகுப்பு தமிழக அரசின் சிறந்த சிறுகதைத் தொகுப்பிற்கான விருதினை வென்றது. இவரது 'கூந்தப்பனை' குறுநாவல் தொகுப்பும் மிகவும் பேசப்பட்ட ஒன்று. 2001-ஆம் ஆண்டு வெளியான கூந்தப்பனைக்கு கு. அழகிரிசாமி நினைவு விருது அளிக்கப்பட்டது. இவரது வலசை நாவல் 2017-ஆம் ஆண்டின் சிறந்த நாவலாக எழுத்து அமைப்பின் சார்பாகத் தெரிவு செய்யப்பட்டு விருது பெற்றது. பாரதிய பாஷா பரிஷத் விருது, தன்னறம் இலக்கிய விருது, கேரள பண்பாட்டுக் கழக விருது உட்பட பல்வேறு விருதுகளை வேணுகோபால் வென்றுள்ளார்.

இவரது நிலமெனும் நல்லாள், ஆட்டம் ஆகிய புதினங்களும், திசையெல்லாம் நெருஞ்சி, பால்கனிகள் ஆகிய குறுநாவல் தொகுப்புகளும், பூமிக்குள் ஓடுகிறது நதி, களவுபோகும் புரவிகள், தாயுமானவள் சிறுகதைத் தொகுப்புகளும் வாசகர்களின் வரவேற்பு பெற்றவை. தமிழ் சிறுகதைப் பெருவெளி எனும் பெயரில் இவரது விமர்சனக் கட்டுரைத் தொகுப்பும் வெளியாகியுள்ளது.

2000-ஆம் ஆண்டு முதல் பல்வேறு தனியார் கல்லூரிகளில் விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் இவர் தற்போது கோவையில் பிரபல கல்லூரியில் தமிழ்த்துறை தலைவராகப் பணியாற்றி வருகிறார். 1967-ஆம் ஆண்டு தேனி மாவட்டம் அம்மாப்பட்டியில் பிறந்த இவர் 1998-இல் வணிகவியல் பேராசிரியரான பிருந்தாவை மணந்து கொண்டார். பிள்ளைகள் நிதின், நிகில்.

aravind.vadaseri@thaiveedu.com







கலைமாமணி விருதாளர் ஓவியர் ஜீவா நந்தன்

தாய்வீடு இதழில் தொடர்ந்து பங்காற்றிவரும் ஓவியருள் ஒருவரான திரு ஜீவா நந்தனுக்கு தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கியிருக்கும் செய்தி தாய்வீடு குழுமத்துக்கு பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக அவர் ஆற்றி வருகின்ற ஓவியப்பணிகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டிருக்கின்றது.

விருது ஜீவாவிற்கு ஒன்றும் புதியதல்ல. தான் எழுதிய திரைப்படம் சார்ந்த திரைச்சீலை நூலுக்காகத் தேசிய விருது பெற்றவர். அது தவிரவும் ஆங்காங்கே பல்வேறு மதிப்பளிப்புகளையும் பாராட்டுகளையும் பெற்று வருபவர்.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் வாழ்ந்து வரும் ஜீவா தொழில்முறை ஓவியக் கலைஞர். இவருடைய தந்தையார் திரைப்படப் பதாதைகளை வரைவதன் மூலம் பெரும்புகழ் பெற்றவர். அக்காலத்தில் கோயம்புத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரத் திரையரங்குகளில் காணப்பட்ட பெரும் நடிகர்களின் பாதாதைகள் பலவும் ஜீவாவின் தந்தையார் வரைந்ததே. அதன் தொடர்ச்சியாக திரைத்துறைக் கலைஞர்கள் பலரையும் ஜீவா பதாதைகளில் வரைந்தார்.

ஜீவா சட்டத்துறையில் பயின்றவர். சில காலம் சட்டத்தரணியாக பயணித்தவர், ஓவியத்தின் மீதிருந்த அதீத ஈடுபாட்டால் சட்டத்துறையினைத் துறந்து ஓவியத்துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். இயல்பாகவே இவருக்கிருந்த ஓவியத் திறமை தந்தையாருடன் இணைந்து பதாதைகள் வரைவதில் அவரை ஈடுபடுத்தியது. இதயத்துக்குப் பிடித்த துறையோடு ஒன்றி முழுநேர ஓவியக் கலைஞரானார்.

திரைப்படப் பாதாதை வரைவுக்கலை மெல்லமெல்ல வழக்கொழிந்து போனாலும் ஓவியத்தின் தேவைகள் சமூத்தில் ஏதோ ஒரு வகையில் தொடர்ந்து வந்தன. நூல்களுக்கு அட்டைப்படங்கள் வரைதல் அவற்றில் ஒன்று. தாய்வீடு வெளியிட்ட பல நூல்களுக்கான அட்டைப்படங்களை வரைந்தவரும் வரைந்து வருபவரும் இவரே.

தொழில்நுட்ப மாற்றங்கள் பதாதைகள் வரைவதில் தாக்கத்தை ஏற்படுத்தவே, கணினி வரைகலையூடாக (Digital) ஓவியங்கள் வரைவதில் ஈடுபாடு காட்டிய ஜீவா அதிலும் தனது உயர்திறனை வெளிப்படுத்தினார். அண்மையில் கனடாவுக்கு வந்திருந்தபோதுகூட, இத்துறை சார்ந்த கணினிசார் கருவிகளைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வங்காட்டினார்.

பல ஆண்டுகளுக்கு முன்பாகவே ஓர் ஓவியராக தாய்வீடு இதழுக்கு அறிமுகமானவர் ஜீவா. இதழுக் கேற்ப, அழகான ஓவியங்களை வரைகின்றவர். எப்போது கேட்டாலும் மகிழ்வோடும் விரைவாகவும் ஓவியங்களை அனுப்பிவிடுவதில் வல்லவர். பழகுவதற்கு மிகவும் இனியர்.

இவர் ஓர் ஓவியராகவே அறியப்பட்டாலும் உலக சினிமா தொடர்பில் இவர் கொண்டிருக்கும் ஆர்வமும் தேடலும் வியக்க வைக்கின்றன. இந்தி மொழிவழி கல்வி கற்ற இவர் தேசியவிருது பெறுமளவுக்கு தமிழ் எழுத்தாளராகியிருப்பது உண்மையில் ஆச்சரியமானதே. சினிமா தொடர்பான தேடலும் தொடர் வாசிப்பும், ஓவியரான இவர் ஓர் எழுத்தாளரும் கூட என்ற தகுதியைத் தோற்றுவித்திருக்கின்றது.

இவர் இரசனை நிறைந்த படப்பிடிப்பாளர் என்பதைப் பலரும் அறிவீர்கள். உக்கடம் ஏரியைப் பற்றி ஒளிப்படங்களால் அதிகம் பேசியவர் இவரே. கனடா வந்திருந்த போதும் சின்னக் சின்னக் காட்சிகளைக் கூட தனக்கேயுரிய பாணியில் படம்பிடித்து அவற்றைப் பகிர்ந்திருந்தார்.

கோயம்புத்தூரில் இருந்து வெளியாகும் காத்திரமான இதழான ஆவநாழியுடன் சேர்ந்து பயணிப்பவர்.

இவரிடம் இருக்கும் மற்றுமொரு சிறப்பு, நகைச்சுவை உணர்வு. பேச்சினிடையே அவ்வவ்போது வழிந்தொழுகும் நகைச்சுவை கேட்போரை எப்போதும் கவர்ந்திழுக்கும். அவரைக் காணும்போதெல்லாம் நாம் இதை அனுபவித்திருக்கின்றோம்.

சற்தே தாமதமானாலும்கூட, திரு ஜீவா நந்தனை வந்தடைந்ததனால் இவ்விருது பெருமையுற்றிருக்கின்றது. அவருக்கான இந்த மதிப்பளிப்பை தாய்வீடு தமது விருதாகக் கருதி பெருமகிழ்ச்சியடைகின்றது.

ஓவியர் ஜீவா அவர்களுக்கு தாய்வீடு இதழின் உளமார்ந்த வாழ்த்து!





ரஜிதாவின் கவிதைகள்

துயரத்தின் இருட்கனதியும் காதலின் தீரா வேட்கையும்

கருணாகரன்

ரஜிதாவின் கவிதைகளில் துயரத்தின் இருட்கனதியும் காதலின் தீரா வேட்கையுடைய வண்ண ஒளிக் கோலங்களும் அகமும் முகமுமாகி வெளியெழுகின்றன. தன் காலத்தின் துயரையும் தன்னுடைய ஏக்கங்களையும் ஏற்கவும் முடியாமல் விலக்கவும் முடியாமல் தவித்துலையும் உளமுடைய அன்னையாகி, பிரிய சகியாகி ஒலிக்கிறார் ரஜிதா. முதிய அன்னையின் துயரமும் இளைய பெண்ணின் காதற் பித்துமாக பின்னி விளையும் (விதியுடைய) கவிதை களை எழுத நேர்ந்திருக்கிறது ரஜிதாவுக்கு.

‘பிளக்கும் தலையூடு
கொதித்த ஆவி பீறிட
தைக்கொண்டு
என் இக்காலத்தை
நிரப்ப?...’

‘கொடும் துயரழுத்தும்
இக்காலத்தில்
ஒடுங்கி உதறுகிறது
பாழ் உடல்...’
‘உங்களை
ஒன்றின் பின் ஒன்றாக
இழக்க நேர்ந்ததை
ணைனி

காரிருள் புகும்
முதல் இருட்டில்
தட்டித்தடுமாறி

சிறு ஒளியொன்றை
பற்ற வைத்திருக்கிறேன்.

வெறுமைகளின்
பெருந்திரளை

தைக்கொண்டு
நிரப்பிடினும்

நாழிகை கனக்க
நாளாகிக் கொண்டே
இருக்கின்றது;

பஞ்சாமிர்தமே
என் வேம்புத் தேனே!

சிரசுக்கேறும்
வேப்பம் பூவின் சுகந்தமே!...’

இவை ஈழப்போரினால் அன்னையர் தாங்க நேரிட்ட பெருந்துயர்ச்சுமை உண்டாக்கிய கொதிநிலைப்படலத்தின் அலைகளாகும். இதைக் காலச் சாட்சியாக ஏற்றொலிக்கிறார் ரஜிதா.

போர் நிலத்துப் பாணர்களுடைய விதி தவிர்க்கமுடியாமல் இவ்வாறு துயரேற்கும்படியாகவும் துயரை எதிர்க்கும்படியாகவும் அமைவதுண்டு. அன்னா அக்மதோவா, சார்லோட் போர்தின் கிரிம்கே (Charlotte Forten Grimké), ஃபொரூ ஃபார்குஸாத் (Forough Farrokhzad) இராபி'அ அல்-அதாவி (அல்லது ரபி'ஆ), ஆன் ரணசிங்க போன்ற உலகப் பெண் கவிஞர்கள் தொடக்கம் ஈழப்பெண் கவிஞர்களான சன் மார்க்கா, கலா, நாமகள், அ. காந்தா, அம்புலி, பாமதி... மற்றும் பலஸ்தீனத்தின் பாலை வெளியில் பெருக்கெடுத் தோடும் கண்ணீரில் கவிதைகளை எழுதிக் கொண்டிருக்கும் ஹிபா அபு நாடா, டாரின் டட்டூர் போன்ற கவிஞர்கள் வரையில் அனைவருக்கும் இதுதான் நிலைமை. இதுதான் உலகப் பொதுவிதியும்.

இதற்கான காரணம், இவர்கள் தம்முடைய சூழலைப் பிரக்ஞபூர்வமாக உணர்வதும் அதையிட்டுச் சிந்திப்பதுமாகும். அப்படி உணரும்போதும் சிந்திக்கும்போதும் கவிதைகளில் எதிர்ப்பும் விடுதலைக்கான தவிப்பும் கலந்து ஒரு கூர்மை உருவாகிறது. அந்தக் கூர்மைதான் இத்தகைய கவிதைகளை உந்தி முன்னே தள்ளுகின்றது.

போரில் மிதக்க வைக்கப்படும் வீரமும் வெற்றிக்களிப்பின் வாகை சூடலுமாக விளைந்த தொல்தமிழின் போர்ப்பரணிப் பெருந்திரையை நவீன கவிதைகளும் கவிஞர்களுமே கிழித்தெறிந்தனர். சங்கத்தமிழின் 'புறநானூறு', 'கலிங்கத்துப்பரணி' போன்றவற்றின் புகழ்ப் பெருங்கதையாடலின் பின்னே மறைக்கப்பட்ட அன்னையரின் துயரை (உண்மையை) இன்றைய அன்னையரின் துயரோடு இன்றைய கவிகள் ஏற்றுக்கொண்டனர். அதனுடைய தீவிர அடையாளமாக ஒலிப்பனவே ஈழப் போரில் ஒலித்த பெண்கவிதைக்குரல்கள். ஔவையின் 'சொல்லாமற் போகும் புதல்வர்', கலாவின் 'கோணேஸ்வரிகள்', கற்பகம் யசோதரவின் 'பிள்ளைகள் தேவை', 'பிள்ளைகள் அற்ற நிலம்' என நீளும் சாட்சியங்கள். இத்தகைய (ரத்த) சாட்சியங்களுக்கான முனைப்பு அன்றும் இருந்திருக்கும். ஆனால், அது வெளித்தெரியாமல் மறைக்கப்பட்டது.

சாட்சியம் என்பதென்ன? உண்மை உரைத்தல்தானே! அந்த உண்மை உரைத்தலை அன்றைய அதிகார அரசியல் அனுமதிக்கவில்லை. அன்னையரின் (பெண்களின்) கண்ணீரை விடவும் ஆண்களின் வெற்றிக் களிப்பே பெரிதாக்கப்பட்டது. பேசப்பட்ட பெண்களும் தங்கள் துயரைப் பொருட்டெனக் கொள்ளாது, 'நெற்றியிற் திலகமிட்டுப் புதல்வரைப் போர்க்களம் அனுப்பினர்'; 'மைந்தரை மகிழ்வோடு போருக்கீந்தனர்'; 'முறத்தினால் புலியை விரட்டினர்...' என்றே புகழுரைக்கப்பட்டது; பொய்யுரைக்கப்பட்டது. இதெல்லாம் உண்மை மறைத்தலன்றி வேறென்ன? இந்த மறைத்தலைப் பின்வந்த தமிழ்ப் பண்பாட்டுப் பெருவெளியும் தமிழ் வரலாற்றுப் பெருமிதத் தலைகளும் அநீதி என்றோ இழிவு என்றோ கருதவில்லை. இன்னும் சொல்வதானால், பின்வந்த விமர்சகர்களும் கல்விப் புலத்தினரும் அறிவுஜீவிகளும்கூட இதையெல்லாம் விதந்து கொண்டாடினரே தவிர, கேள்வி எதையும் எழுப்பவில்லை. இதுபோன்றவற்றை நியாயப்படுத்தும் விதமாகவோ என்னவோ 'கவிதைக்குப் பொய்யழகு' என்ற கருத்தாக்கம் தமிழ்ப்பண்பாட்டு வெளியில் அழகாக நிறுத்தப்பட்டது. ஆனால், 'கவிதைக்கு உண்மையே அழகு'. அதையே இன்றைய நவீனத்துவ, பின் நவீனத்துவ கவிதைகள் உரத்து உரைக்கின்றன. உண்மையைக் குறித்துக்கூட கேள்விகள் எழுப்பப்படுகின்ற, சந்தேகிக்கின்ற காலம் இது.

எனினும், முந்திய காலப் புனைவும் புகழும் பொய்யும் போன்ற நிலை இன்றும் உண்டு. அதை மீறியொலிக்கும் கவிதை வெடிப்பு ஈழத்தில் 1980-களில் நிகழ்ந்தது. 'சொல்லாத சேதிகள்' அதனுடைய தொடக்கமும் அடையாளமுமாகும். வீரத்தைக் கொண்டாடுவதற்குப் பதிலாக, வெற்றிக் களிப்பில் மிதப்பதற்கு மாறாக, காலடியில் பீறிட்டுப் பாயும் கண்ணீரிலிருந்து குமுறி எழும் சொற்கள் கால சாட்சியமாக - உண்மை உரைப்பாக எழுந்தன. துயருறும் அன்னையரின் வாடிய முகமாகவும் ஆற்றொணாத் துயரில் விம்மும் குரலாகவும் தூங்கா விழிகளாகவும் கொதிக்கும் இதயமாகவும் ஒவ்வொரு சொல்லும் கவிதையாகின. ஔவை, செல்வி, சிவரமணி, கற்பகம் யசோதர, அம்புலி, பஹீமா ஜஹான் எனத் தொடரும் இந்த வரிசையில் ரஜிதாவும் இணைந்துள்ளார். முன்னவர்கள் போராட்டத்தின், போரின் மையக் காலத்தில் நின்றுரைத்த கவிகள். ரஜிதாவோ போர்க்காலத்தில் குழந்தையாக இருந்து, இன்று கவியானவர். அவர்கள் தமக்கும் சமூகத்துக்கும் நேர்நின்ற அனுபவக் கொதிப்பை எழுதினர். ரஜிதா, பிறர் வழி அனுபவங்களைத் தன் நோக்கிலும் திரட்டி எழுதுகிறார். போர் முடிந்தாலும் அது உண்டாக்கிய அவலப் பரப்பும் துயரக்குழியும் சிந்தப்பட்ட இரத்தத்தின் சூடும் பெருகிக் கொண்டேயிருக்கும் கண்ணீரின் கொதிப்பும் இன்னும் தீராதே உள்ளது. என்பதால் அவற்றின் ஆறாச் சூட்டை ரஜிதா வெளிப்படுத்துகிறார்.

இப்படித் தன் காலத்தின் நெருக்கடியையும் துயரையும் விட்டொதுங்கி நிற்க முடியா அன்னையின் தவிப்பு ரஜிதாவின் பல கவிதைகளில் கருமூட்டமாகித் தாழ்கின்றன. அன்னை உளத்தில் துயரேற்றலும் துயர் விலக்கலும் பேரவலம் கொண்டது. தவிர்க்கவியலா நிலையிற் துயரேற்றலும் தவிர்க்க முனையும் துயர் விலக்கலுமாக இது இரு நிலை கொள்கிறது.

இந்த நிலைக்குக் காரணம், நாளெலாம் வழியெலாம் துயரத் தோரணங்கள் முடிவுறாமல் ஆடும் தேசமொன்றில் குழந்தை, பிள்ளை, வளரிளம் பருவங்களை ஏற்க வேண்டிய வாழ்வை விதியெனக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் ரஜிதாவுக்கு இருந்திருக்கிறது. இத்தருணத்தில் காணாமலாக்கப்பட்டோரைத் தேடியலையும் உறவினரை ரஜிதா எதிர்கொள்கிறார். போரினால் சிதைக்கப்பட்ட பெண்களோடு சந்திக்கவும் வாழவும் நேர்கிறது. போரில் உடலும் மனமும் சிதைந்து போனவர்களைத் தவிர்த்துச் செல்ல முடியாதிருக்கிறது. இப்படியெல்லாம் இருக்கும் வாழ்க்கையில் கவிதைக்கென வேறு சொற்களை எங்கே, எப்படித் தேடுவது?

தன்காலத் துயரையும் நெருக்கடியையும் எழுதாக் கவி உலகில், நடப்பியலில் அரிது. ஈழச் சூழலில் அரிதினும் அரிது. தணியா நெருக்கடிகளும் தீராத் துயரும் முடிவுறா விசும்பலும் காய மறுக்கும் காயமும் இரத்தமுமான வாழ்க்கைச் சூழலிலிருந்து தன்னைத் துண்டித்து வேறாக்குவதெங்ஙனம்? முடியாது. கண்முன்னே ஒருவர் வீழ்த்தப்பட்டுக் கிடக்கும்போது பாராமுகமாகிச் செல்வது எத்தகைய நீதி? அயல் பற்றியெரியும்போது பதறாமல், தன்வீட்டுத் தொலைக்காட்சியில் கேளிக்கையில் திளைத்துக் கொண்டிருப்பது எத்தகைய அறம்? என்பதால், ரஜிதா தன் காலத்தினதும் சூழலி

னதும் கொதிப்பைத் தன் காலப் பொறுப்பெனத் தன்னுள் ஏற் றுக்கொள்கிறார். அவை அவரைத் தீண்டுகின்றன. அவருடைய உளம் அறத்தில், நீதியுணர்ச்சியில், கருணையில், அன்பில், நேசிப்பில், பொறுப்புணர்வில் தோய்ந்துழல்கிறது. ஆனால், இது எப்பொழுதும் ஒரே நிலையை, ஒரே தன்மையைக் கொண்டதல்ல. ஒரு நிலையில், கொடியை அசைத்து விளையாடும் மென்காற்று அன்னையின் தாலாட்டென உணர்வை வருடிச்செல்லும். இன்னொரு நிலையில் காதற் கொடியெனக் காதலிற் சேர்ந்து கூடிக் கலந்து களிக்கும். வேறொரு நிலையில், சீற்றமுற்று, சிப்பிலியாட்டிக் கொடியையே சிதைத்து விடுவதாக அலைவுறும். திடீரென சீற்றங் கொண்டு அலைப்புற்று தீப்பற்றியும் விடுகிறது. அநேக தருணங்களில் இந்த வெவ்வேறான நிலைகளைக் கொண்ட காற்றாக தன்னை உணர்கிறார் ரஜிதா.

மாய வண்ணங்களின் விளையாட்டாக, சீற்றமும் பரிவும் அணைத்தலும் விலக்கலும் நீரைப்போல ரஜிதாவிடம் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. பின்னல்களும் நிறங் களின் கலவையுமாக என ஒரு நிலையில் இப்படித்தான் இந்த வாழ்க்கை. இன்னொரு நிலையில் அந்தரிப்பு, அலைக்க ழிப்பு எனச் சுழித்துக் கொண்டே தீ மூண்டெரிகிறது. தீயின் குணம் எரிப்பது, சுடுவது. சீற்றத்திலேயே தன்னை எப்பொ ழுதும் வைத்துக் கொள்ளும் உக்கிரத் தெய்வம் அது. நீரோ, குழந்தையின் பொலிவையும் அன்னையின் அரவணைப் பையும் கொண்டது. ஆனால், எப்போதும் அப்படி இருப்பது மல்ல. சந்தர்ப்பத்தில் சீற்றமுற்று வெள்ளமென ஆவேசம் கொண்டு அடித்துப் புரட்டிவிடும். இரண்டின் கலவையும் வேறான பிரிவுகளுமாக மாறியும் கலந்துமிருக்கும் இக்கவி தைகளில் துயரமும் காதற் களிப்பும் கலந்திருப்பது வியப் பில்லை.

ரஜிதாவின் காதற் கவிதைகள் வேறொரு பண்பைக் கொண்டவை. முன்சொன்ன 'அன்னையர் துயர்க் கவிதைகள்' சற்று நேரடியான - வெளிப்படையான அர்த்த வெளிப்பாட்டை - பொருளுணர்த்து முறைமையைக் கொண்டவை என்றால், இவை அந்தப் பண்பிலிருந்து விலகி, அகவுணர்வை ஆழு ணர்வாக உணர்த்த முற்படுகின்றன. இதனால் இங்கே மொழியின் பயன்படுத்துகையும் மொழிதலும் கவிதையின் தன்மையும் மாற்றமடைந்துள்ளது. இதனால் ரஜிதாவின் காதற் கவிதைகளில் சிதைந்தும் கூடியும் தோன்றும் மாயமாக காதல் உருமாறி, ஆழ்ந்த காயமாகவும் தெய்வீக அனுபவமாகவும் வெளிப்படுகிறது. இது முரண்நிலையா இயல்பா என்ற குழப்பத்தை நமக்குத் தருகிறது. காதலில் எப்போதும் அருகருகாக இணைந்திருக்கும் உறவு - பிரிவு (நெருக்கம் - விலக்கம்) என்ற இருமுகத்தை ரஜிதாவின் காதற் கவிதைகளிலும் காணலாம். 'கொன்றாய் என்னை மாபாதகா!', 'நீ தெய்வம் / வாழ்விற்குள் வாழ்வாகிப்போ னவன்' போன்ற வரிகள் உணர்ச்சிகரமான நிலையில் காதலை வழிபாடு மற்றும் வன்முறை என இரண்டாகவும் சித் திரிக்கின்றன. ஆனால், இரண்டும் பித்து நிலையின் வெளிப் பாடேயாகும். 'அன்பான ராட்சசி', 'அடி பாதகத்தி' என்று காதலில் அழைப்பதெல்லாம் பித்து நிலையின் வெளிப்பா டுகளே! அப்படித்தான் இங்கே 'மாபாதகா' என்பதும். இந்தச் சொற்கள் வேறு இடத்தில் அமையுமாயின், அதன் தொனியும் பொருளும் வேறுபடும். ஆக, மொழி என்பதும் அதன் உணர்வு நிலையும் சிலபோது அது வெளிப்படுத்தப்படும் சூழலிலும் நிலையிலுமே தனக்குரிய அர்த்தத்தைக் கொள்வதும் அதிலிருந்து விலகுவதும் நிகழ்கிறது. கவிதையில் மொழியின் தொழிற்பாடே வேறுவிதமானது. எப்போதும் மொழியின் அதிகாரத்தை உடைத்து தன்னை வெளியேற்ற முயற்சித்துக் கொண்டேயிருக்கிறது கவிதை.

ரஜிதாவின் காதற் கவிதைகள் பொதுவாகப் பெண்ணின் உணர்வலைகள் (Emotional Waves). சுதந்திரத் தேடல், அன்பைப் பகிரும் எத்தனம், பிரிவு, அது உண்டாக்கும் தனிமை, அதன் விளைவான கோபமும் ஏக்கமும், மற்றும் அதற்கான ஆன்மீகத் தவிப்பு போன்றவை அவருடைய கவி தைகளில் இயல்பாகவே கட்டமைகின்றன. இதில் எழும் கடுமையான உணர்வுகளை கூர்மையான, சிலிர்ப்பூட்டக் கூடிய சொற்களால் வெளிப்படுத்துகிறார். மொழியை நவீன கவிதைப் பண்பின் அடியாக அழகியல் உணர்வுடன் பயன்ப டுத்த வேண்டும் என்ற கரிசனை ரஜிதாவிடம் கூடுதலாகத் தெரிகிறது. இதை 'நீங்கற் படலம்' என்ற கவிதையிலேயே காணலாம் –

நீங்கற் படலம்

'விசமூறிய இரவுகளின்
நீள் நாட் பிரார்த்தனைகள்
நீங்க

அந்தரிப்புக்கள்
இலேசாக

சலனமற்ற மனத்துண்டு.

விடுதலை

உன்னிடம் விழுந்துகிடக்கும்
நாட்களை எரித்தேன்

பின் எப்போதும்
நெருங்காதபடிக்கு
பக்குவமாய்...'

இது கடந்த காலத்தின் பாரத்தைத் தாங்க முடியாமல், அதி லிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் ஒருவரின் உள் ஓலமாக வெளிப்படுகிறது. இந்த விடுதலை வெறும் உணர்ச் சிவசப்படுதல் மட்டுமல்ல; அது ஒரு கவனமான, பக்குவமான, முடிவான செயலுமாகும். கவிதையில் அவிழ்ந்து கொண்டி ருக்கும் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு வரியும் படிகளாகி நம்மை அதனோடு கொண்டு செல்கின்றன. இக்கவிதையின் ஈற்றடியில் இடம்பெறும் 'உன்னிடம் விழுந்துகிடக்கும் நாட்களை எரித்தேன்' என்பது ஒரு சக்திவாய்ந்த உருவகம். 'உன்னிடம்' என்பது, ஒருவேளை கவிஞரை விட்டு விலகிய அல்லது விலக்கிய அல்லது ஏதோ வகையில் துயர்ப்ப டுத்திய ஒரு நபராகவோ, காதலராகவோ இருக்கலாம். அல்லது ஒரு நினைவு, அல்லது தன்னுடைய கடந்த காலத்தையே கூடக் குறிக்கலாம். அந்த நாட்களை 'எரித்தல்' என்பது முற்றிலுமாக அழித்தல், அதிலிருந்து தன்னை விடு வித்துக் கொள்ளல் என்ற செயலைக் குறிக்கிறது. நிச்சயமாக இதொரு ஆற்றல் மிக்க செயற்பாடேயாகும். துயரத்தில், வேதனையின் இருட்பரப்பில் குழம்பிக் கிடந்துழல்வதை யும்விட, அதிலிருந்து நீங்கி, மேலெழுதல் விடுதலையே. இதைத் தனியே தனிப்பட்ட ஒருவருடைய காதலிழப்பின்,

பிரிவின் பின்னான நிலையாகக் கொள்வதற்கும் அப்பால், ஈழத் தமிழ்ச் சமூகத்தின் நெடுங்கால உழல்விலிருந்து விடுப டுதலாகவும் கொள்ள முடியும். பன்முக வாசிப்பில் இதற்கு அப்பாலும் விரியக்கூடிய சாத்திய விரிவுகளைக் கொண்ட கவிதை இது.

காதற் பிரிவிலிருந்து விடுபட்டு நீங்குதல் என்று நேரடிப் பொருளைக் கொள்வதாயினும் கூட 'உன்னிடம் விழுந்து கிடக்கும் / நாட்களை எரித்தேன்' என்ற வரிகள், காதல் நினைவுகளை அழிக்கும் செயலை ஒரு சுத்திகரிப்பு யாகமாக (Purification by Fire) காட்டுகிறது. தீயின் குறியீடு முக்கியமான ஒன்று. இந்து மரபில் ஓரம்சமாகத் தீயை யாகத்தோடு இணைத்துக் குறிப்படுவது வழக்கம். அதற் கப்பால் உலகளாவிய ரீதியில் தீயை (நெருப்பை) குப்பைகளை, அழுக்குகளை, தேவையற்றவைகளை எரித்துச் சுத்தப்படுத்தும் ஒரு இயற்கைக் கருவியாகப் பார்ப்பதுமுண்டு. இன்னொரு நிலையில் தீ என்பதை ஒளியாக - சுடராக (அகச்சுடராக) நோக்குவதுண்டு. சமையலில் வேக வைப்பதற்கும் தீயே உத வுகிறது. இவையெல்லாம் அதனதன் நிலையில் பரிமாணம் கொள்ளும் வகையில் இந்தச் சிறிய கவிதையில் ரஜிதா கட்ட மைத்திருக்கிறார். அத்துடன் ஒரு சிக்கலான நிலையிலிருந்து (அது உறவு நிலையாகக் கூட இருக்கலாம்) 'பக்குவமாய்' என்ற சொல், பிரிவை நிதானமாகக் கையாளும் ஒரு கலை நயச் செயல்பாடாக, அகப்பண்பாட்டின் உயர் நிலை யாக உயர்த்துகிறது. பக்குவமான வெளியேறல் என்பது பகைமை கொள்ளாத நிதானத்தின் - உயர் நிலையின் - வெளிப்பாடன்றி வேறென்ன?

ஒற்றை ஆட்சிக்குள் கட்டுண்டு கிடந்துழல்வதையும் விட பிரிந்து செல்லுதல் - விலகுதல் - வெளியேறுதல் எத்தனை மகிழ்ச்சிக்குரியது! இதை இஸ்ரேல் - பலஸ்தீனச் சூழ லோடும் இணைத்துக் கொள்ள முடியும். இங்கே கவி தைக்குப் பொருளுரைக்கும் முயற்சி எதையும் நான் மேற் கொள்ளவில்லை. மாறாக தன்னுடைய கவிதைகளின் அரசிய லையும் அழகியலையும் எப்படி ரஜிதா தீர்க்கமான முறையில் கட்டமைக்கிறார் என்பதை உணர்த்தவே முயன்றுள்ளேன்.

ரஜிதாவின் கவிதைகள் ஏனைய தமிழ்ப் பெண்கவிஞர்களின் கவிதைகளைப்போல முழுமையான கருத்தை வெளிப்படுத் தாமல், தெளிவான சித்திரத்தை அளிக்க முற்படாமல், அனாரின் கவிதைகளைப்போலச் சிலிர்ப்பூட்டும் உணர்வுச் சாயல்களை முதன்மையாக்கித் தருகின்றன (Fragmented yet evocative). இதனால் புகைமூட்டக் காட்சியாகவே பெரும் பாலான கவிதைகளும் உள்ளன.இன்னொரு வகையில் கூறு வதானால் கொலாஜ் (Collage) போலக் காணப்படுகின்றது. காதற்கவிதைகளில் இதைக் கூடுதலாகக் காண முடிகிறது. சொற்களை அந்தரத்தில் நிறுத்தி, அவற்றோடு மாயத் தொடுப்பொன்றுக்கான உணர் கொம்புகளை விட்டு அவற்றில் நம்மைச் சிக்க வைக்கிறார். ஈழக் கவிதைகளின் பொதுவான போக்காகக் காணப்படும் ஒரு குறிப்பிட்ட கதை அல்லது பின்னணித் தோற்றம் என இல்லாமல், உணர்வு களின் தொகுப்பாக (As a collection of feelings) இது உள்ளது எனலாம். மந்தையை விட்டு விலகிய ஆடாக, எப்போதும் விலகலே புதியதை உருவாக்கும்.

கவிதைகளின் பொருள் அல்லது உள்ளீட்டுக்கு அப்பால், வெளிப்பாட்டு முறையில், வடிவத்தில், சொல்முறையில், கட்ட மைப்பில் ஏனையவர்களிடத்திலிருந்து ரஜிதா வேறுபடுகிறார். ரஜிதாவின் கவிதைத் தொழில் நுட்பம், மிதக்க வைக்கும் அந் தரிப்புத் தன்மையைக் கொண்டது. இதில் அவர் கவனம் செலுத்துவது உணர்ச்சிக் கூர்மை - சொற்கள். இக்கவி தைகள் உணர்ச்சியை குத்தும் (Piercing) தன்மையைக் கொண்டவை. எதையும் நேரடி விவரிப்பாகச் சொல்லாமல், பிரகடனங்ளைச் செய்யாமல், குறிப்பால் உணர்த்தும் முறை கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், 'சொல்லாத சேதிகள்' ஏறக்குறைய பிரகடனங்களின் வெளிப்பாடாகவே இருந்தது. அவை பெண்களின் முதற்குரல் என்றபடியால் அத்தகைய உணர்ச்சி வெளிப்பாடும் பிரகடன நிலையும் ஏற்பட்டது இயல்பு மட்டுமல்ல, அந்தக் கவிதைகளை எழுதியவர்களில் பலரும் செயற்பாட்டாளர்கள் அல்லது செயற்பாட்டியக்கங் களோடு இணைந்திருந்தவர்கள் என்பதால் அதற்கான முனைப்பும் கூர்மையும் அத்தகைய வெளிப்பாட்டு முறைத் தேவையும் அந்தக் கவிதைகளில் இருந்தன. அவற்றுக்கு அவசியப்பட்டன. இங்கே 'பிரகடனங்கள்' என்பதை அரசியற் கூவல்கள், முரசறைதல்கள் என்று எளிமைப்படுத்தக் கூடாது. அப்படிச் செய்தால் அது அநீதியாகும். தங்களை (பெண்களை) உறுதி கொள்ளச் செய்வதன், நிலைபெறச் செய்வதன் வெளிப்பாடே அவை என்று கொள்ள வேண்டும். ஆகவே அந்தக் கவிதைகள் அதற்கான எளிய, ஆனால் கூர்மையான மொழியையும் சொல்முறையையும் கொண்ட மைந்தன. அவற்றின் அழகியலும் அதுவே.

ரஜிதா 'சொல்லாத சேதிகளு'க்குப் பின்னர் வந்த இன்னொரு தலைமுறையைச் சேர்ந்தவர் என்பதால், அதிலிருந்து புதிய எல்லைகளை நோக்கி முன்னகர்ந்திருக்க வேண்டும். சுகிர் தராணி, சல்மா, குட்டி ரேவதி, லீனா மணிமேகலை, தீபுஹரி, அம்பிகா குமரன், தேன்மொழிதாஸ் என இன்னொரு சூழலில், பிறிதொரு தலைமுறைப் பெண்கள் தங்களையும் தங்கள் பார்வைகளையும் எழுதியதற்கும் அப்பாலான புதிய தொன்றை நோக்கித் தன்னை விரிப்பதற்கு முயற்சிப்பது அவசியம். ஏனென்றால், இன்று உலகளாவிய கவிதைப்போக் குகளையும் உலகளாவிய பெண் கவிதைகள், பெண் அரசியல் போன்றவற்றையும் இணைத்துப் பார்க்கக் கூடிய வாய்ப்பும், பார்க்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. அப்படிப் பார்க்கும்போது தமிழ்ப் பெண்கவிதைகளில் ரஜிதாவின் கவிதைகளுக்கான இடம் என்ன? உலகளாவிய பெண் மற்றும் பொதுவான கவிதைகளில் ரஜிதா எங்கே, எத்தகைய தன்மையோடு நிற்கிறார்? அவருடைய தனித்தன் மைகள் - சிறப்புகள் என்ன என்று நோக்குவது அவசியம். அப்படித்தான் புதிய கவிதையை நுகரும் மனம் எதிர் பார்க்கும்; கேட்கும். ஆனால், ஒன்று, ரஜிதா தனக்குரிய அழகியலை உருவாக்கி வெளிப்படுகிறார். ஏறக்குறைய 40 ஆண்டுகள் இடைவெளியில் அங்கே (சொல்லாத சேதிகளில்),காதலும் கூட போராட்டம், போராளி என அன்றைய வாழ்வியற் சூழலோடு இணைந்திருந்தது. இங்கே அந்தச் சுமையோ, அத்தகைய அரசியல் நெருக்கடியோ அதற்கான சூழலோ இல்லை. எனவே, தீவிர அரசியல் நெருக் கடிகள், அதற்கான போராட்டங்கள் இல்லாமல் மாறியதொரு சூழலில் இவை 'பிரிவு' மற்றும் 'தனிமை' ஆகிய உறவு நிலைப் பொருள்களில், உளவியல் நிலையைத் தொட முயற் சிக்கின்றன. இதனால் எல்லாக் காதற் கவிதைகளும் பிரிவு, இழப்பு, நினைவுகளின் சுமை, தனிமை ஆகியவற்றைச் சுற்றியே சுழல்கின்றன. அவற்றில் சிக்கலாக இருக்கும் சமூக, பொருளாதார அடிப்படைகளைப் பற்றிய கரிசனையை –

புரிதலைக் காணவில்லை. இங்கே பெண்ணின் தனித்துவம் ஆணுடனான உறவில் மட்டுமானதாகவே வரையறுக்கப்படு கிறது. சமூகம், தொழில், தாய்மை, பெண்ணின் தனித்துவம், ஆற்றல், ஆளுமை போன்ற பரிமாணங்கள் காணப்பட வில்லை. இதனால் பெண்ணியப் பார்வை மங்கலாக உள்ளது (The feminist vision is blurred).

ஆனால், சமூகம், தொழில், தாய்மை, பெண்ணின் தனித் துவம், ஆற்றல், ஆளுமை, பொருளாதார நிலை போன்ற போன்றவையே காதலின், உறவின் நீடிப்பையும் நெருக்கத் தையும் விலக்கலையும் (பிரிவையும்) விளைப்பதில் பெரும் பங்காற்றுபவை. அவற்றைப் பற்றிய கரிசனையும் புரிதலும் இல்லாதிருப்பது இவற்றைப் பலவீனப்படுத்துகின்றன. அதாவது பெண்ணிய அரசியற் புரிதலைப் பற்றிய அடையா ளங்களைக் காண முடியாதுள்ளது. இதனால் பெண்ணிய அடையாளத்தில் ரஜிதா சற்றுத் தள்ளியே நிற்கிறார். தொடர்ந்து மேலோட்டமான முறையில் ஆண் - பெண் உறவுகளை மட்டுமே மையமாக்குவதன் காரணத்தினால், பெண்ணின் தனித்துவம் மரபுரீதியான முறையில் ஆணு டனான உறவுமுறைகள் வரையறுக்கப்படுவதாகவே உள்ளன. பெண்ணின் ஆற்றல் வெளிப்பாடுகளையும் புதிய பரிமாணங்களையும் அவற்றின் நவீன, பின்நவீன வெளிப்பாடு களையும் காணமுடியவில்லை. இது பெண் உடலுக்கான மரபு வழிப் பார்வையை அளிக்கும் பின்னோக்கிய அபாய நிலையாகும்.

விடுதலைக்கான வழியைக் காட்டாத அல்லது அதை நோக்கி உறுதி கொள்ளாத இக்கவிதைகள் 'தற்கொலை - தனிமைப் போக்கு' போன்றவற்றைச் சித்திரிக்கின்றன. இதனால் இந்தக் கவிதைகள் கீழிறக்கும் அபாயமுள்ளன. 'பெண்ணியம் என்பது தீயில் எரியும் பூவாக இருக்க முடியாது -அது தீயையே உருக்கும் ஒரு இரும்புக் குரல் ஆக வேண்டும்' என்ற அடிப்படைப் புரிதல் இங்கே நோக்கப்பட வில்லை. அத்துடன், உடலை 'பிணம்', 'கல்' எனச் சோர்வு நிலையில் அல்லது அதிருப்தியில் காட்டுவதெல்லாம் உடலின் சக்தியை (Strength) மறுப்பதாக அல்லது எளி மைப்படுத்துவதாக இருக்கிறது. உடல் ஒரு ஆற்றல் மிக்க ஆயுதம். எதையும் செய்யக் கூடிய - எதையும் தாங்கக் கூடிய வல்லமை அதற்குண்டு. மனம் (சிந்தனை அல்லது கருத்து) அதனோடு இணைந்து இயக்கமாக - ஆயுதமாக (உயிருள்ள கருவியாக) உருவாகிறது. ஆனால் இதை உணர்ந்து கொள்ளத் தவறியதால் இங்கே 'நீ தெய்வம், / வாழ்விற்குள் வாழ்வாகிப்போனவன்' போன்ற வரிகள் எளிமைப்படுத்தப்பட்ட (ரொமாண்டிக்) காதலின் தன்மையையே வெளிப்படுத்துகின்றன.

ஆனாலும் சில கவிதைகளில் பெண்ணின் உணர்ச்சி - பிரக்ஞை, அவளது உரிமைகள் மற்றும் சமூகத்தால் அவள் அடையப்படும் அழுத்தம் பற்றியும் பேசப்படுகிறது.

'காதலித்துக்கொள்வதற்கும்
பிடித்த வேலைகளுக்குள்
மூழ்கிப் போகும்போதும்

நேரமற்றவளாயும்
சலித்துக்
கொள்பவளாயும்
முன்னாலிருத்திப் பார்க்கிறேன்
உடனிருக்கும் பொழுதுகளில்

இந்த போதாத
காலத்தை நினையாமல்
காதலர்களையே
கடிந்து தள்ளியிருக்கிறேன்...'

சமூகத்தின் உண்மைகளை (பெண்ணியம், வர்க்கம், அரசியல்) கவிதையுடன் இணைக்கும் முயற்சி காணப்படு கிறது. இந்தத் தன்மையைக் கொண்ட கவிதைகள் குறைவு. இதை ரஜிதா கவனத்திற் கொள்ளலாம். அல்லது விவாதிக்க வேண்டும்.'

ரஜிதாவிடம் மொழியைக் கையாளும் நுட்பம், சொற்தேர்வு, வெளிப்பாட்டு உத்தி அல்லது வெளிப்பாட்டுத் தொழில் நுட்பம் போன்றன சிறப்பாக உள்ளன எனக் குறிப்பிட்டோம். இதனால் குறியீட்டு நயம் மற்றும் உணர்ச்சிப் பளிங்குகள் (Emotional Crystals) கவிதைகளின் வலிமையாக அமைகின்றன. ஆனால், கவிதைகளில் உள் அமைந்துள்ள மிகையான சுருக்கம் (Over-Abstractness) சிலருக்கு புரிந்து ணர்வைச் சவாலாக்கலாம்; வாசிப்பின்பத்தைச் சுருக்கலாம். சில விமர்சகர்கள் இதை மிகவும் அமுக்கமான (too abstract) வெளிப்பாடு என்று கருதக்கூடும். ஒவ்வொரு வாசகரும் இதன் குறியீடுகளைத் தங்களுக்குரிய விதமாகப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கும், இது சிலருக்கு கடினமாகக் கூட இருக் கலாம். காரணம், இவற்றிள் உள்ள சிக்கலான குறியீட்டு மொழி (Complex Symbolic Language) ஆகும்.

'பாதங்களின் ஊடுருவலில்
வெண்பச்சைக் குளிர்வு
விரல்கள் மிதந்த வெளி

யுகம் முதிர்ந்த ஆட்டக்காரி.

துள்ளிய நிலத்தின்
சமநிலை தளும்ப

தலை சாய்க்கிறாள்.

முன்,
நிழல்கள் மட்டும் வந்துபோயிருந்த
பூக்கற்களின் நிலவொளியில்

இவ்விரவு எம்மோடிருந்தது.

நான்கு கால்கள்
ஒருயிராய் குந்தியிருந்த படிக்கற்களில்
மலராய் உதிர்த்தெறிந்த வெள்ளிகளோடு
விரிந்த இருள் நிறை வான்

உடனிருந்தது.

புத்தி பேதலித்த
இரக்கமற்றவளுடன்'

இத்தகைய கவிதைப்போக்கை அல்லது தன்மையை போஸ்ட் மாடர்ன் கவிதை (Postmodern Poetry) தன்மை என்றும் சிலர் கருதலாம், ஏனெனில் இது ஒரு முழுமையான கதை, காட்சி,

தூண்டல், தொடுகை உணர்வை விட, கலவையான உணர்வு களின் துணுக்குகளையே (Fragments of Emotion) பிரதா னமாக முன்வைக்க விளைகிறது. தொகுத்துச் சொல்வ தானால், இந்தக் கவிதைகளின் தொகுப்பை சிக்கலான, ஆழமான அதேவேளை உணர்ச்சிபூர்வமான பயணத்தை வழங்கும் குவிப்பு எனலாம். தாய்மைத்துயர், போரில் பலி கொள்ளல் (இது வெளிப்படையாக இல்லை. ஆனால், உணரக் கூடியதாக உள்ளது), காதல், பிரிவு, தனிமை, சமூகப் பிரக்ஞை (மங்கலாக), பெண்ணியம் (மங்கலாக), மரணம், நினைவுகள், கோபம், வெறுப்பு, பித்துநிலை போன்ற பல்வேறு உணர்முனைகளை, ஆழமான பொருள்களை, சவாலான எல்லைகளை இவை தொடுகின்றன. இதற்கான கவிதை மொழி, பயன்படுத்தப்படும் அல்லது இயல்பாக வந் தமரும் உருவகங்கள் மற்றும் சொல்லாட்சிகள் மிகவும் சக்தி வாய்ந்தவையாக உள்ளன. அவை கவிதையின் உணர்ச்சி மற்றும் அழகியல் தன்மையைச் சிறப்பான முறையில் வெளிப் படுத்துகின்றன.

பல கவிதைகளில் காதல் ஒரு சுவாரஸ்யமான, சிலசமயம் வலி நிறைந்த உணர்வாக சித்தரிக்கப்படுகிறது. இந்தக் கவிதைகள் பொதுவாக ஒரு ஆழமான உளவியல் ரீதியான பயணத்தை வழங்குகின்றன. போரின் இழப்புகள், காதல், அதில் ஏற்படும் பிரிவு - விலகல், வாழ்க்கையின் தாழாமை, போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன. கவிதைகளின் மொழி சற்றுக் கடினமானதாக இருந்தாலும், அது ஒரு தனித்துவமான கவிதை அனுபவத்தையும் வடிவத்தையும் வழங்குகிறது. ஆனால், ரஜிதாவின் கவிதைகளில் தனிமனிதத் துயரம் மே லோங்கியுள்ளது. இந்தத் துயரம் ஒரு தனிப்பட்ட அழி வுப்போர் (Personal Holocaust) போலத் திரும்பத்திரும்ப வருகிறது. இது ஒரு பிரிக்க முடியாத தொற்றை (Metastas-ized Pain) ப் போல் உள்ளது. இதனால் சில இடங்களில் துய ரத்தின் மிகைப்படுத்தல், கருப்பொருளின் மீள்தன்மை (அதுவும் காதலினால்) என்பன வாசிப்போருக்குச் சவாலாக இருக்கலாம்.

கவிதைகளில் போரின் தாக்கம் சிறிய அளவில் வெளிப்படு கிறது. இவையெல்லாம் உடல், மனம், நினைவுகள் போன்ற வற்றுடன் நிகழும் ஒரு ஒற்றைப்படையான போரை (Solitary War) சித்தரிக்கின்றன. இந்தக் கவிதைகளைப் படிக் கும்போது எனக்குச் சில்வியா பிளாத் (Sylvia Plath) நினைவுக்கு வந்து கொண்டிருந்தார். இதிலுள்ள சில கவிதைகள் அ சில்வியா பிளாத்தின் ஒப்புதல் வாக்குமூலக் கவிதை (Confessional Poetry) பாணியுடன் ஒப்பிடத்தக்கது! *'ரஜிதாவின் சொற்கள் ஒரு சிதறிய கண்ணாடி -அதில் நாம் அனைவரும் சில சமயங்களில் நம் சொந்த முகங்களைப் பார்க்கிறோம்'*



karunagaran@thaiveedu.com







‘தேய்பிறை’
கவிதையின் தெவிட்டாத சுவை
தாகூரின் கவிதைகளைத் தமிழில் தந்த சி.வி.

– மல்லியம்புசந்தி நிலகர் –

கடந்த ஓகஸ்ட் மாத ‘தாய்வீடு’ இதழில் எழுதப்பட்ட ‘ஈழத்துத் தாகூரின் பார்வையில் கவியரசர் தாகூரின் வாழ்க்கை’ எனும் கட்டுரையின் ஊடாக இரண்டு விடயங் களைக் கண்டடைய முடியும். பொதுவாக ஆரம்பத்தில் ஆங்கிலத்திலேயே எழுதிவந்த சி.வி. வேலுப்பிள்ளை அவரது படைப்புகளை சக்தீ பால-ஐயா, பொன். கிருஷ் ணசாமி போன்றோர் தமிழில் மொழிபெயர்த்ததன் பின்னரே தானே தனது படைப்புகளை நேரடியாகத் தமிழில் எழுத ஆரம்பித்தார் என்ற ஒரு கருத்து நிலவியது. ஆனால், இன்று 95 வயதை அடையும் வீரகேசரி பத்திரிகையில் 90 வருடங்களுக்கு முன்பே அதாவது ‘வீரகேசரி’யின் ஐந்தாவது வயதிலேயே சி.வி. வேலுப்பிள்ளை தமிழில் கட் டுரைகளை எழுதி உள்ளார் என்பது அவரது சேகரங்களில் இருந்து தெரியவருகிறது. ஏனெனில் 1960-களுக்கு பின்னரே சக்தீ, கிருஷ்ணசாமி போன்றவர்கள் சி.வி.-யின் படைப்புகளைத் தமிழில் தரத் தொடங்குகின்றனர்.

மற்றையது, 1937-ஆம் ஆண்டு சி.வி. வீரகேசரியில் எழுதிய கட்டுரையில் தாகூரின் கவிதைகளை அவரே தமிழுக்கு மொழி பெயர்த்துமுள்ளார். இதன் மூலம் சி.வி. ஆங்கி லத்தில் எழுதியவர் மட்டுமல்ல, ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தும் உள்ளார் என்பது உறுதியா கிறது. எனவே கவிதை, சிறுகதை, கவிதை நாடகம், நாவல், கட்டுரைப் படைப்புக்களில் மிளிர்ந்த சி.வி. ஒரு மொழி பெயர்ப்பாளராகவும் தமது திறமையை வெளிப்படுத்தி யுள்ளார்.

1937-ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24-ஆம் திகதி வீரசேகரி இதழில் ‘பொத்தல் படகில் கடலைக் கடக்க பிரயாசை’ - ‘தேய்பிறை கவிதையின் தெவிட்டாத சுவை’ எனும் கட்டு ரையில் தாகூரின் ‘தேய்பிறை’ எனும் கவிதைகள் பற்றி எழு துவதோடு அதன் சில பகுதிகளைத் தமிழில் மொழி பெயர்க்கவும் செய்துள்ளார்.

சி.வி.-யின் இந்தக் கட்டுரையின்படி ‘தேய்பிறை’ என்பது குழந்தை இலக்கிய படைப்பு என்பது தெரியவருகிறது. கூடவே தாகூரின் குழந்தை இலக்கியப் படைப்புகளை விப ரிக்கும்போது சி.வி.-யின் தமிழ் மொழிநடையும் கூட அதற் கேற்றாற்போல் இசைந்து செல்வதை அவதானிக்க முடி கின்றது. அந்தக் கட்டுரை இவ்வாறு அமைகிறது.

கவியரசர் தாகூர் கவி வன்மையென்னும் ரதத்தில் சவாரி செய்கின்றார். அந்த ரதம் ஜோதி வடிவம் உடையது. அதில் அவர் உயரச் செல்கின்றார். அவர் செல்லும் ஜோதி மயமான அந்த தேருக்கு சக்கரங்களும் உண்டு. அந்த சக்கரச் சுவடுகள்தான் அவர் இயற்றும் பாடல்கள். காலமாகிய மணல் மீது அச்சுவடுகளைக் கவியரசர் விட்டுச் செல்கின்றார். மனிதனின் மர்மங்கள் பல மறைபொ ருளாய் இருக்கின்றன. தாகூரின் காவியங்களை வாசிப்பவர் களுக்கு அவை வெளிப்படையாகிவிடும். கடவுளை அடையும் மார்க்கங்களை கவியரசர் மனித வர்க்கத்தின ருக்காகப் பாடுகின்றார். அது மட்டுமல்ல அவருடைய பாடல்கள் இன்னும் பல நன்மைகளைச் செய்கின்றன.

வெகு தூரத்தில் உள்ள இடங்களையும் இதுவரை எவரும் அறியாத இடங்களையும் அடையும் மார்க்கத்தை அப்பாடல்கள் மூலம் சுலபத்தில் அறிந்து கொள்ளலாம்.

கவி வன்மையென்னும் தேரில் ஆரோக ணித்து முகில் கூட்டங்களுக்கு இடையே சஞ்சரிக்கும் கவியரசர், எக்காரியத்தையும் சுலபமாகச் சாதித்து விடுகின்றார். அவருடைய கற்பனை சக்தி இறந்தகாலம், நிகழ்காலம் ஆகிய திரையை ஊடுருவிச் செல்கின்றது. அப்படிச் சென்று மனிதனின் உள்ளத்தில் துஞ்சிக் கிடக்கும் பழைய ஞாப கங்களையும் கஷ்டங்களையும் எழுப்பி விடு கின்றது. அத்துடன் அவர் உள்ளத்தில் குழந்தைப் பருவ ஞாபகங்களை பத்திரப்ப டுத்தி வைக்கின்றது. கவியரசரின் உள் ளத்தில் பொதிந்து கிடக்கும் இந்த குழந்தைப் பருவ ஞாபகம் அவர் கவி வன்மையை அதி கப்படுத்துகின்றது. இக்கலப்பற்ற குண விசேஷம் ஒப்பற்ற குழந்தை கீதமாகத் 'தேய்பிறை'யில் காணப்படுகிறது.

இலக்கிய உலகில் தாகூரின் 'தேய்பிறை' முக்கியமான பங்கு வகிக்கின்றது. கவியர சரின் உள்ளத்தில் நூற்கப்பட்ட இனிமை, கபடமின்மையாகிய நூல்களைக் கொண்டு 'தேய்பிறை' மிக நுட்பமாக நெய்யப்பட்டிருக் கின்றது. குழந்தைகளை நேசிக்கும் கவிஞர் களில் தாகூர் முதன்மையானவர். 'தேய் பிறை'யின் மாயாஜால சக்திக்கு கட்டுப் படாது தப்பிச்செல்ல ஒருவராலும் முடியாது. குழந்தை உள்ளத்தில் பொதிந்து மறைந்து கிடக்கும் மர்மங்களை அது வெளிப்படை யாக்குகின்றது. குழந்தைக்கு அழகான வஸ்து மீதுள்ள ஆர்வம், இயற்கையாக குழந்தைக ளுக்கு உள்ள மனோபாவம், பொருட்களைப் பற்றி குழந் தையின் அபிப்பிராயம், அதன் பரிசுத்தத்தன்மை, புனித மனப்பான்மை, இன்னோரன்ன யாவும் அப்படியே தடித்த வர் ணங்களில் தீட்டப்பட்டிருகின்றன.

"கவி வன்மையென்னும் தேரில் ஆரோகணித்து முகில் கூட்டங்களுக்கு இடையே சஞ்சரிக்கும் கவியரசர், எக்காரியத்தையும் சுலபமாகச் சாதித்து விடுகின்றார். அவருடைய கற்பனை சக்தி இறந்தகாலம், நிகழ்காலம் ஆகிய திரையை ஊடுருவிச் செல்கின்றது. அப்படிச் சென்று மனிதனின் உள்ளத்தில் துஞ்சிக் கிடக்கும் பழைய ஞாபகங்களையும் கஷ்டங்களையும் எழுப்பி விடுகின்றது"

ஒரு குழந்தையின் வாழ்க்கையில் சம்பவிக்கக்கூடிய அற்ப சுக துக்கங்கள் யாவும் இக்கட்டுரையில் விவரமாக எடுத்துக் காட்டப்படுகின்றன. அதை படித்ததும் நமது மனதில் ஒருவகை உணர்ச்சி எழுகின்றது. ஒரு காலத்தில் நாமும் குழந்தையாய் இருந்தோம் என்றும் குழந்தையாய் இருக்க வில்லையே என்றும் நாம் பெரு மூச்செறிகின்றோம். ஆதர வற்ற அனாதைபோல் நடிக்கின்றது குழந்தை. யாவரிடமும் சென்று யாசிக்கின்றது. மற்றவர்கள் அதன் மீது அருமை பாராட்டுகின்றனர். அத்தகைய கபட நாடகக் குழந்தை என்ன செய்கின்றது? வானத்துடனும் பூமியுடனும் ரகசியமாகச் சம் பாஷிக்கின்றது. வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவது சகஜம். அதைத் தவிர்க்க எவராலும் முடியாது. அத்தகைய கஷ்டங்கள் காரணமாக அதைரியப்படவேண்டாமென்று நம் கவியரசர் நம்மை உற்சாகப்படுத்துகின்றார். இவ்விதம் கவிய ரசர் மனித வர்க்கத்தினரை கடவுளோடு ஐக்கியப்படுத்து கிறார்.

விக்டர் ஹியுகோ குழந்தைக் கவிதை புனைவதில் பேர் போனவர். அவரின் மர ணத்தின் பின்னர் தேய்பிறைக்குச் சமமான குழந்தை கீதத்தை ஒரு கவிஞனும் எழுத முன் வரவில்லை. ஆங்கில, வங்காள இலக்கிய உலகில் உள்ள மேன்மையான பிள்ளைப் பாடல்களில் 'தேய்பிறை'யும் ஒன்றாகும். இதன் குணவிஷேசத்தை கீழ் வரும் வரிகளில் காண்க.

அவர்கள் கூச்சலிட்டு சண்டை செய்கின் றனர். சந்தேகிக்கின்றனர். நம்பிக்கையின்றி துயரில் மூழ்கி தவிதவிக்கின்றனர். ஆனால் அவர்களின் சச்சரவுகளுக்கு முடிவே கிடை யாது என்பது அவர்களுக்கு தெரியும்.

எனது அன்புள்ள குழந்தாய்! அவர்களுக்கி டையில் உன் வாழ்க்கை ஒரு அக்னி பிளம் புபோல் வெளிவரட்டும். நான் அதை ஆவ லுடன் எதிர்நோக்குகின்றேன். உனது வாழ்க்கை சலனமின்றி தூய்மையாய் இருக் கும். அதைக் கண்டு அவர்கள் மௌனம டையட்டும். அவர்கள் பேராசையென்றும் கூறி கொடிய அரக்கனிடம் அகப்பட்டு அவஸ்தைப்படுகின்றனர். அவர்களின் சொற்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கூரிய கத்திகள். அந்தக் கத்திகள் ரத்த தாகம் கொண்டிருக்கின்றன.

எனது குழந்தாய்! கோபத் தீச்சுடர் விட்டெ ரியும் இதயம் உள்ள அவர்கள் மத்தியில் நீ சென்று நில். உனது நயனங்களை அவர்கள் மீது செலுத்து. பகல் முழுவதும் நடைபெற்ற சண்டைக்கு அந்திப்பொழுது சமாதானம் உண்டாக்குவது போல், உனது பார்வையும் அவர்கள் மோட்சேம ரச உணர்ச்சியை எழுப்பட்டும்.

எனது அருமந்த மதலையே! அவர்கள் உனது முக விலாசத்தை பார்க்கட்டும். அதிலிருந்து அவர்கள் சகல தையும் தெரிந்து கொள்ளட்டும்.

எனது அருமை குழந்தாய்! எல்லையற்ற இந்த மலரில் உனது ஆசனத்தில் வந்து நீ அமர்ந்து கொள். பகலவன் உதய மாகும் போது புஷ்பங்கள் இதழ் விரிப்பதை போன்று தூய இருதயம் உனக்கு இருக்கிறது. மேலைக் கடலில் அருணன் ஆழும்போது நீ மௌனமாக உனது தலையை (புஷ்பங்கள் இதழ் குவிப்பது போல்) கவிழ்த்துக் கொள்வாய். அத்தோடு உனது பகற் பிரார்த்தனை பூர்த்தி பெறுகின்றது.

ஹே! என் அருமை குழந்தாய்!. அந்த தூசி படிந்த புழுதி நிறைந்த இடத்தில் ஆனந்தமாக அமர்ந்துகொண்டு காலைப் பொழுது முழுவதிலும் ஓடிந்த மரக்கலையுடன் நீ எப்படி விளையாடிக் களிக்கிறாய்.

நான் அப்போது நீ சுள்ளிகளுடன் விளையாடுவதைப் பார்த்து புன்னகை கொள்ளுகிறேனே!. நான் என்ன செய்து கொண்டிருக்கின்றேன் தெரியுமா? ஓயாமல் ஒழியாமல் சுறுசு

றுப்பாக கணக்குப் போட்டுக்கொண்டிருக்கின்றேன். கால தேவதை ஓடி மறைவதை நான் விடாமல் எண்ணிக்கொண்டே இருக்கிறேன்.

எனது இந்த செயலைப் பார்த்து அருமருந்தன்ன காலைப் பொழுதை இப்படி மடத்தனமான விளையாட்டில் வீணாக்கு கின்றேனே என்று நீ ஒருவேளை நினைக்கக் கூடும்!.

என் அருமை மதலையே! குச்சிகளைக் கொண்டும் மணற் பொம்மைகளைக் கொண்டும் விளையாடிக் களிக்கும் கலையை நான் இப்போது அடியோடு மறந்துவிட்டேன்.

இப்போது நான் விலை உயர்ந்த விளையாட்டுப் பொருட் களைத் தேடுகின்றேன். தங்கப் பாளங்களை அதற்காகச் சம் பாதித்து குவிக்கிறேன். வெள்ளிக்கட்டிகளை வேண்டுமட்டும் சேகரிக்கிறேன். உன்னிடம் ஒரு உன்னத குணம் அமைந்தி ருக்கிறது. நீ எதைக் காண்கிறாயோ அதை உனது விளையாட்டு கருவியாகச் சிருஷ்டி செய்து கொள்கிறாய்.

ஆனால் நான் என்ன செய்கின்றேன் தெரியுமா ? எனது காலத் தையும் பலத்தையும் என்னால் ஒருபோதும் அடைய முடியாத பொருட்களின் மீது ஆசை கொண்டு அவற்றைப் பெறுவ தற்காக வீணாக செலவு செய்து வருகிறேன்.

அதற்காக நான் என்ன முயற்சி செய்கிறேன் தெரியுமா ? பொத்தல் நிறைய உள்ள என்னுடைய படகில் ஆசை என்னும் அலைகடலைக் கடந்து செல்ல நான் பிரயாசப்படு கிறேன். ஆனால் அந்தச் சமயத்தில் நானும் ஒரு விளையாட் டைத்தான் விளையாடுகிறேன் என்பதை அறவே மறந்துவிடு கிறேன்.

இவ்வாறு, கவியரசர் தாகூரின் 'தேய்பிறை' கவிதையை தலை சிறந்த குழந்தை இலக்கியப் படைப்பாகக் காணும் கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை, 'தோட்டக்காரன்' எனும் தாகூரின் படைப்பை எவ்வாறு பார்க்கிறார் என்பதை தொடர்ந்து பார்க்கலாம்.



thilagar@thaiveedu.com





நவீன வாழ்வின் நெருக்கடியில் விளைந்த நாவல்

‘கனவுச்சிறை’

– சு. வேணுகோபால்

நாவல் என்ற இலக்கிய வடிவம் தமிழ்ப்புலத்தில் மதிப்புமிக்க அம்சமாக மாறிவருகிறது. ‘பிரமாண்டம்’ என்ற கவர்ச்சி சார்ந்த விசயத்தினால் அல்ல. வாழ்வை அதன் சகல கோணங்களிலும் சென்று பார்க்க அகல சகலமான பாதை தேவைப்படுகிறது. இது படைப்பாளியின் ஆளுமையைப் பொறுத்து மாறுகிறது. பெருங்கனவுகளே பெரிய படைப்புகளை நோக்கிய உந்து சக்திகள். வாழ்வின் கூறுகளைச் சொல்லத் துடிப்போருக்கு குறுநாவல்களே சாத்திய மாகியிருக்கின்றன. அவர்கள் அவற்றை விஸ்தாரமாகச் சொல்ல முனைகிற ஆசையில் தொடர்கதைகளாக நீண்டு விட்டிருக்கின்றன. ஒரு படைப்பாளிக்கு முழு வாழ்வையும் மோதிப்பார்த்துவிட தினவு வேண்டும். தேவகாந்தன், ‘கனவுச் சிறை’ நாவல் மூலம் மிகப்பெரிய பரப்பிற்குள் வாசகனை அழைக்கிறார். இலக்கியக் கனவுகளைத் தாங்கிய படைப்பாளிகள் படைத்திருக்கும் படைப்பிலிருந்து இந்நாவல் வித்தியாசமானது.

ஒரு இனத்தின் நிகழ்கால சிதைவை ஆத்மசுத்தியோடு பதிவு செய்துவிடவேண்டும் என்ற உந்துதலால் படைக்கப்பட்டிருப் பது கனவுச்சிறை. இதன் நிகழ்களம் 1981-லிருந்து 2001-வரையிலான இருபத்தோராண்டுகள். நாம் சிறுகதைகளை அன்றாட நிகழ்வுகளிலிருந்து எழுதுகிறபோது நாவலை பழைய உலகத்திலிருந்து தோண்டி எடுத்துக்கொண்டிருந் தோம். மறைக்கப்பட்ட உண்மைகளை, எழுதப்படாத வர லாறுகளைப் புதிய வெளிச்சத்தில் உட்படுத்துகிற இலக் கியப் பயணமாக நாவல் இருந்தது. கனவுச்சிறை சமகால வாழ்வைச் சொல்ல வருகிறது. படைப்புக்குத் தேவையான ஒரு சிறப்பம்சம் இயல்பிலேயே கிட்டிவிடுகிறது. மறந்து போன காலத்தில் சென்று எழுதுகிறபோது அரசியல் சூழல் மங்கிப்போய்விடுகிறது. நிகழ்காலத்தினது பிரச்சினையை நாவல் தன் வடிவமாகக்கொண்டு அணுகுகிறபோது இயற் கையிலேயே அரசியல் சூழலும் காலச் சூழலும் மிக்க உயிரோட்டத்தோடு புனைவிற்குப் பங்காற்றுகின்றன. இன் றைய தேதியில் கனவுச்சிறை முக்கியமான படைப்பு.

இலங்கைக்கு உட்பட்ட நயினாதீவு என்ற மிகச்சிறிய பரப் பிலிருந்து கதை விரியத் தொடங்குகிறது. (மகேஸ்வரி, சுந்தர லிங்கம், சரஸ்வதி - விசுவலிங்கம், திரவியம்) குறிப்பாகச் சொன்னால் மூன்று குடும்பத்தினரை பின்னிணைத்துப் போகிற கதை. எண்பத்துமூன்றில் சிங்களப் பேரினவாதத் தாக்குதல் நடப்பதற்கு முன்பே இனவாத மோதல் குறித்துத் தான் எழுதத் தொடங்குகிறார். வெறுமனே அரசியல் ரீதியான பதிவாக இல்லாமல் மோதலின் விளைவுகளைப் பின் தொடர்கின்றார். இதுவரை தரிசித்திராத அவலம் நிறைந்த உலகிற்குள் பயணமாகின்றனர் வாசகர். படைப்பாளி எந்த இயக்கத்தின் பின்னும் நிற்கவில்லை. சத்தியத்திற்கும் பொய் மைக்கும் நடக்கும் வாழ்க்கைப் போராட்டத்தை எந்தவித கூச்சமும் இல்லாமல் பகிரங்கமாகப் போட்டு உடைக்கிறார். ஒரு வரலாற்று நூல் நம்மை ஈர்க்காமல் போவதற்குக் கார ணம் தகவல் தொனியோடு கூடிய தட்டைத் தன்மைதான். அதே சமயம் ஒரு கலைப்படைப்பு மீண்டும் மீண்டும் வாசிக் கவும் வாழ்க்கையை அறிந்து கொள்ளவும் ஆகர்ஷிப்பதற் குக் காரணம் மனித ஆன்மாக்களைக் கண்டுரைக்கும் ஊற்றுக்கண்கள் ஏகமாய் நிரம்பி இருப்பதுதான். மறைமுக மாக நம்மை நாமே கண்டுகொள்வதற்கும் அதிலிருந்து மீள்வதற்குமான தளம் இது.

எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் மாடு அசைபோடுவது போலத்தான் நயினாதீவு இயங்குகிறது. மொழிகூட ஜிகுனாத் தனம் இல்லாது யதார்த்தமான மொழியிலேயே சொல்லத் தொடங்குகிறார். தற்போது மொழியை வைத்து வித்தை காட்டுகிற காலம். அதற்கெல்லாம் சட்டை செய்யாமல் அவருக்குக் கைவரப்பெற்ற விவரனை மொழி வாசகனுக்கு அலுப்புத்தட்டுவதுபோல் முதலில் இருக்கிறது. 'படைப்பு', மொழியை நம்பி மட்டும் இல்லை. மொழியழிந்து அது உருவாக்கும் உள்ளக் கிளர்ச்சிகளிலேயே அதன் உயிர் இருக்கின்றது. மெல்ல மெல்லமாய் பிரச்சினை நெருங்கி வருகிறது.

ராஜி அரசு வேலையில் அமர்ந்து விடவேண்டும் என்ற ஆவ லில் கொழும்பு நகரில் இருந்து வந்த அரசு தொழில் நிறுவன வாய்ப்பைப் பயன்படுத்த முற்படுகிறாள். உடன்படித்த ஜெஸ்மினும் கூட்டுச் சேர்ந்து நேர்முகத் தேர்வுக்குச் சென்று திரும்பத் திட்டமிடுகின்றனர். இது ஒரு கண் துடைப்பு என்று ஜெஸ்மின் குடும்பம் பின் வாங்குகிறது. இறுதியில் ஜெஸ் மின் வரமுடியாது போகிற ஊடாட்டத்தில் 'படைப்பு' மனங் களைத் தேடத் துவங்குகிறது. ராஜியின் நம்பிக்கை சார்ந்த பயணமும் ஜெஸ்மின் குடும்பத்தாரின் நம்பிக்கையின்மை சார்ந்த காரணமும் வெகு இயல்பாக நகர்கின்றன. இருவேறு மனங்களின் இயக்கத்தில் காலத்தின் சாதகம் சிங்களப் பேரினவாதத்தின் கைகளால் உருட்டப்பட்டுக்கொண்டிருப் பதை ராஜி பின்னால் உணர்கிறாள். ஜெஸ்மினுக்குப் பதி லாக சுதன் என்ற ஆடவனைத் துணைக்கு அழைத்துப்போய் திரும்பி வந்தவளுக்கு, சரியான தருணத்தில் நம் கலாசாரத் தின் ஆப்பு அறையப்படுகிறது.

ஆடவனோடு லாட்ஜில் திரிந்தவள் என்று திருமணத்தை உதற ஒரு சாக்குசொல்லி குணரத்தினம் சிங்களத்தியோடு மறைகிறான். நடந்து முடிந்த இந்த சம்பவத்தைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்ப்பதில் தவறில்லை. ஆனால் ஒரே பார்வையை ஒரே வாழ்வியல் விமர்சனத்தை அது தருமா னால் அதனால் எந்தப்பயனும் இல்லை. அழுத்திச் சொல்வ தானால் முதன் முதல் சொல்லப்படுகிறபோது வாசகருக்குள் எழுந்த பாதிப்பும் நீர்த்துப்போகும். ஒரு நிகழ்வு திரும்பத் திரும்ப வெவ்வேறு கோணங்களில் சொல்லப்படுமானால் வசீகரம் கூட வந்துவிடும். ராஜியின் முதல் கொழும்பு பய ணத்தால் ஏற்பட்ட விளைவை திரவியம், உதயன், ஜெஸ்மின், தங்கமணி, சுதன் எனப் பல பாத்திரங்கள் ஒரே மாதிரி நினை வூட்டுவதால் மன எழுச்சியற்ற சவலையாகிப் போய்விடு கிறது அச் சம்பவம்.

கனவுச்சிறையின் முதல் பாகமான 'திருப்படை ஆட்சி' படைப்பாக எழுந்து நிற்காமல் ஆசிரியரே கதையை நகர்த்திச் செல்வது அலுப்புத் தட்டுகிறது. தமிழின அழிவும் சரி, புலம் பெயர்தலும் சரி நிஜமாக நிகழ்ந்திருக்குமோ என்று சந்தேகம் தட்டுகிறது. எல்லாம் செவிவழி கேட்ட கதை களைத் தொகுத்துச் சொல்லுவதுபோல இருக்கிறது. நடந்து முடிந்த அழிவுகளை ஆசிரியர் கூற்றில் சொல்லும்போது மனதைப் பாதிப்பதில்லை. நயினாதீவே வெறிச்சோடிவிட்டது என்று கூறினாலும் அந்த வெறிச்சோடிய பாதிப்பைப் பார்க்க முடிவதில்லை. வினாக் காலத்தில் தியாகு, மாதவன் உயி ரோட்டமாக உருவாகிறார்கள். நயினாதீவைப் படைப்பாளி அழுத்திக்காட்டியிருக்கலாம். அல்லது கொழும்பிலோ யாழ்ப்பாணத்திலோ கதையைத் தொடங்கி இருக்கவேண்டும். ஏனெனில் அதற்கான பதட்டமான சூழல் அங்கே நிகழ்ந்து கொண்டே இருந்திருக்கிறது.

வினாக்காலத்திலிருந்து தான் படைப்பு ஆரம்பிக்கிறது. ஆனால் படைப்பாளியின் ஆளுமை அப்படியொன்றும் சோபிக்கவில்லை. புத்தக்கோவிலின் வடிவமைப்பு எழுத்தில் வரவில்லை. படைப்பு என்பது மனவெளியில் உருவாகும் அழியாத ஓவியங்கள். காட்சிகள்! நெகிழும் சலனங்கள்! வாசகனுள் எப்போதும் சலசலக்கிற ஓடைகள்! வெறும் தக வல் சுரங்கமல்ல. மனதிற்குள்ளே மனித வாசனைகள், மண் வாசனைகள், பெண் வாசனைகள், கருகல் வாசனைகள், ஈரக்காற்று, வெப்பக்காற்று, நிலச்சூடு, மனச்சூடு... எல்லாம் கொதித்தபடி இருக்கச் செய்வது. இட வருணனை, பொருள்

வருணனை என்பது நம்பகத்தன்மைக்காக மட்டுமல்ல. அவையே உயிருள்ள வாழ்வாக மனிதனுள் பிணைவது. முதல் பாகத்திலேயே புத்தவிகாரை பற்றி வருகிறது. ராஜி யும் மகேஸ்வரியும் புத்தவிகாரை சென்று புத்தபிக்குவை முதன் முதலில் சந்திக்கும் இடம். இந்த பேதைமை ஆசிரியர் கூற்றாக இருக்கிறது. வாழ்வாக இல்லை. பேதைமையைப் படைத்துவிட்டு அதை விளக்கத் தொடங்கிவிடுகிறார். புத்த விகாரைக்குள் ராஜி ஓடித்திரிந்த பாலியம் பேதைமைக் குரியது. இப்படி அற்புதமான இடங்களைத் தவறவிடுகிறார். ராஜியின் நினைவு கூறலாக வருகிறது. இந்துப் பெண்ணின் விளையாட்டு வளாகமாக பக்தி வளாகமாக மாறி இருந்தால் எப்படி இருக்கும்? இனமோதல்களின் முரணில் விளைந்த தெய்வீகமாக - ஆன்மீகமாக மாறி இருக்கும். வினாக்காலத் தின் பின் பகுதியில் இருந்து படைப்பாளியின் ஆளுமை எழுகிறது. காலம் என்ற கதாநாயகன் எழுந்து நிற்கிறான். மூர்க்கத்தோடு இயக்க நடவடிக்கையில் இறங்கிய சுதன் வங்கிக் கொள்ளையில் ஈடுபடுகிறான். இயக்கத்திற்காக அடிக் கப்பட்ட கொள்ளை அது. போராட்டம் வெற்றி பெறாதோ என்ற எண்ணம் உருவாக அடித்தக் கொள்ளையைப் பதுக் கப் பார்க்கிறது மனம். நாவல் வாழ்வின் மீதான விமர்சனமாக இந்த இடத்தில்தான் முதன்முதல் திரும்புகிறது. இலட்சிய எண்ணம் கொண்ட ராஜி தனக்குக் கணவனாக வரக்கூடிய வன் இனத்துரோகியாக மாறிவிட்டதைக் கண்டு வெறுத் தொதுக்குகிறாள். மண்சார்ந்த கனவுகளைச் சுமந்திருக்கும் ராஜிக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பணத்தை சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டவனுக்குமான உறவு அறுகிறது.

சொந்த நாட்டின் விடுதலை, அகதிகளின் அவலம், இராணுவ சித்திரவதை (மாதவன்) இயக்கங்களின் உள் முரண்பாடு களால் காட்டிக்கொடுத்தல் (ரோகிணி) என சகல கீழ்மை களும் அரங்கேறுகின்றன. ஆயுதப் பயிற்சிக்காக வெளியே வந்த பல இளைஞர்கள், அகதிகளாக வந்த இளைஞர்கள் (சிலர்) பெண்கள் (சிலர்) காலத்தைப் பயன்படுத்தும் போட்டி யில் பங்குபோடத் தொடங்குகின்றனர். கப்பல் வேலைக்குச் சேர வந்த ராஜேந்திரன் ஒன்னா நம்பர் பித்தலாட்டக்கார னாக மாறுகிறான். பம்பாயில் முகாமிட்டு போலி பாஸ்போர்ட் தயாரிக்கும் கூடாரத்திற்கே தலைவனாக இருக்கிறான். இன மோதல்களைப் பயன்படுத்தி அகதியென்ற போர்வையில் சந்தோஷமாக வெளிநாடுகளுக்கு இளைஞர்களை ஏற்றுமதி செய்யும் பெற்றோர்களின் கூட்டம் பெருகுகிறது. ஈழத்திலும், பம்பாயிலும் விசாக்களுக்கு முட்டி மோதுகின்றனர். ஈழப் போராட்டத்தின் கொல்லைப் புறத்தில் மாபெரும் சந்தை நடக்கிறது. முதலில் தப்பிப்பிழைப்பதற்காக ஓடிய ஜனங் கள் ஐரோப்பிய நாடுகளில் இருந்துகொண்டு சொந்தங் களை இறக்குமதி செய்வதில் ஈடுபடுகின்றனர். அவர்களின் சொகுசான வாழ்க்கையையும் பணங்கொழிப்பையும் கண்ட ஆண்கள், பெண்கள் மத்தியில் மேலைநாட்டு மோகம் தலைவிரித்தாடத் தொடங்குகிறது. தனக்காக நிச்சயிக்கப் பட்ட ராஜி ஜேர்மன் வர மறுத்ததும் ஷீலாவை அழைக்கிறான் சுதன். உடனே கிளம்புகிறாள். அதைப் பெற்றோர் மனசுக் குள் மனமுவந்து தள்ளிவிடுகின்றனர். வீட்டுக்கு ஒருவனோ, ஒருவளோ வெளிநாடு போனால் பணம் அனுப்புவார்கள், சொகுசாக வாழலாம் என்ற அடிதடி நடக்கிறது. ஈழப் போரைக் காட்டிலும் சுயநலப்போர் கொடிகட்டிப் பறக்கிறது. எல்லாமே பிழைப்பிற்கான வழியில் நிகழும் கோரத்தாண்டவம்.

ஒரு படைப்பாளி எந்த ஓர் இயக்கத்தின் கீழ் நின்றும் பணி யாற்றலாம். படைப்பைப் படைக்க வரும்போது எதனைச் சார்ந்தும் நிற்கலாகாது. சத்தியத்தின் தேடல் ஒன்றே அவரது குறி. அந்த நேர்மை தேவகாந்தனிடம் நூற்றுக்கு நூறு இருக் கிறது. படைப்பு என்பது வரலாறா? சமூகப்பிரச்சினையா? இயற்கையா? அது எல்லாமான ஒன்று. எல்லாவற்றையும் உள்ளடக்கிய உயிர்க் கோளம்.

நயினாதீவுக்கு வாக்கு அருளும் கதிர்காமசாமி என்ற நிர் வாணச்சாமியாரின் வருகை குறித்த இடங்கள் படைப்பின் உச்சம். சிலப்பதிகாரத்தில் வரும் கோப்பெருந்தேவியின் பலித கனவுகளுக்கு ஒப்பானவை. ஊர்சுற்றும் சாமியாரின் புற உலகக் கொந்தளிப்புகளின் சாரத்திலிருந்து பேசு கிறாரா? இறைவாக்கிலிருந்து பேசுகிறாரா? என்ற இரண்டு புள்ளிகளுக்கும் வாசகர் தாவலாம். ஆனால் மக்களின் நம்பிக்கை சார்ந்த ஒன்றை அந்த நம்பிக்கையின் தளத்தில் எழுதியிருப்பதுதான் சிறப்பு. நாவல், காவியத்தின் இப்படிப் பட்டதான துளிகளைப் போகிறபோக்கில் துளித்துவிட்டுச் செல்கிறார்.

வாசகனை ஏமாற்றும் ஒரு வித்தை இந்நாவல் நெடுக வரு கிறது. நான் வாசிக்கிறபோது, ஈழ வாழ்க்கையில் தொன்மங் களே இல்லையா? அதை இவர் கையாள மாட்டாரா என்று குறிப்பெழுதுகிறேன். அடுத்த இருபதாவது பக்கத்திலோ, முப்பதாவது பக்கத்திலோ வாழ்வோடு இயைந்த தொன்மக் கூறுகள் வருகின்றன. பாக் நீரிணையை நிந்திக் கடந்ததால் கடல் வன்மம் கொண்டு விடுவதும், பார்வேராஜாவுக்கு வரும் ஆபத்து, பில்லிபேய் கதை, கன்னிகாமரம், காண்டாவனத் தின் குறிப்பு, என இரண்டாயிரமாண்டு புராண, ஐதீகக் கூறு களும் இழையோடுகின்றன.

ஓரிடத்தில் இப்படிக் குறித்து வைத்தேன்: 'பௌத்தம் என்பது அஹிம்சாநெறி' இலங்கையில் புத்தபிக்குகள்தான் இனக் கலவரத்திற்குக் காரணமாயிருக்கிறார்கள். புத்தம் மனித வாழ்க்கைக்கு ஆன்மீக பலத்தைத் தரக்கூடியது. ஓர் உன்னத மான புத்த பிக்குவை உருவாக்கி இனவாத சமூகத்தில் ஒரு மோதலை உருவாக்காமல் நாவலை எழுதுகிறாரே. பௌத் தம் ஈழத்தமிழனுக்கு வெறுப்பளிக்கலாம். அது சிங்கள இனவாதத்தினால் எழுகிற வெறுப்பாக இருக்குமே ஒழிய புத்த கருத்துகளால் எழும் வெறுப்பாக இருக்க முடியாது...' என்று குறித்து வைத்தேன். என் நொட்டை கண்டுபிடிக்கும் விமர்சன மோதலை வாசித்து வரும்போது நொறுங்கிவிட்டது. சங்கரானந்தர் என்ற புத்தபிக்கு புராணிகப் பாத்திரமாக உலாவுகிறார். உபதேசி பிக்கு கங்கைவளவத் துறவியுடன் சந்திக்கிற சந்திப்பு நாவலின் Master peace. இறக்கும் முன் சங்கரானந்தர், 'நீங்கள் எழுதிய மகா சரிதம் எங்கே!' என்று கேட்கிறார். 'காற்று மண்டலத்தில் எழுதியிருக்கிறேன்' என் கிறார். இதெல்லாம் கவிதையின் ஆகப்பெரிய சாத்தியம்.

மிகப்பெரிய சுவடுகளைப் பதிக்கும் சங்கரானந்தர் நாவலின் இறுதியில் ஒற்றைவரியில் கழுத்தை நெரித்துக் கொன்றதாக வருகிறது. சாவு நம்மை உலுப்பவில்லை. அதை இன்னும் விஸ்தாரமான பகுதியாக்கியிருக்கலாம். இலங்கை என்பது

தமிழர்களின் பூர்வீகபுலம்தான் என்பதை குணாநந்தரோடு வாதிக்கும் பகுதிகள் செழுமையாகக் காட்டி இருக்கின்றன. இனவெறியரான குணாநந்தர் நாவலின் இறுதியில் 'போர்' வாழ்தலுக்கான முறையல்ல என்று தன் சீடர்களுக்குச் சொல்லி புதிய வெளிச்சத்தில் தோன்றுவது நாவலை உல கப் பொதுமையாக்குகிறது.

நாவலில் காலம்தான் தலைப்பாத்திரம் என்றாலும் ராஜியின் மூலமாக மனித சிதைவுகளை நாம் இனம் காணுகிறோம். அபாரமான ஒரு பாத்திரம் ஓரிடத்தில் சறுக்குகிறது. மேலை நாட்டுப்பாணியில் யோகேஸ்வரனை டேட்டிங்குக்குக் கூப் பிடுவதாகத்தான் மாமல்லபுரச் சந்திப்பு இருக்கிறது. யோகேஸ்வரனுக்கும் ராஜிக்கும் இடையே காமப் பகிர்வை வைக்கக்கூடாது என்பதல்ல. பொருத்தமற்று அவசர கதியில் நிகழ்த்துவதாக இருக்கிறது. நாவலின் பின்பகுதியில் இந்த உறவின் நினைவுகள் சிறப்பாகப் படைக்கப்பட்டிருந்தாலும் முன்பகுதியில் அதற்கான சூழல் பொருத்தமற்று இருக் கிறது. அதே சமயம் திரவியத்திற்கும் விதவை சுவர்ணா விற்கும் இடையே நிகழும் உடல்பகிர்வு வாழ்க்கையாக மலர் கிறது. புஞ்சிபண்டாவிடமிருந்து தப்பிக்க சுவர்ணா தூக்கில் தற்கொலை புரிகிறாள். சடலத்தை இறக்கி காமத்தைத் தீர்த்துக் கொள்கிற குரூரம், துன்பியல் காவியமாகிறது. (இந்த இடத்தில் அறிவார்த்த தளத்தில் பார்த்தால் உயிர் போகும் அதே தருணத்தில் மலமும் வெளியேறும் என்பது உண்மை. தொடையிடுக்கில் நானும் கழிவைப் பார்த்தபின் புணரத் தோன்றுமா? - இப்படிப் பார்ப்பது இலக்கியத்தின் பாய்ச்சலைத் தடை செய்வதாகும்).

வெளிநாடு போவான் என்று நம்பி சிவாவை மணமுடித்த மாலாவின் வாழ்க்கைக்குள் படைப்பாளி ஆகக்கூடிய மட்டும் புகுந்து முன்வைக்கும் பார்வை தமிழ்ப் படைப்புலகில் இது வரை பதிவு செய்யப்படாத ஒன்று. உதவாக்கரை மாப் பிள்ளைக்கும் ஒருநாள் ரோசம் வருகிறது. அந்தோ பரிதாபம்! குலசிங்கம் தவமணியின் பொருமலோடு இருக்கக்கூடாதா? மகேஸ்வரி, 'வா மாளவியிடம் சேர்த்து வைக்கிறேன்' என்ற தும் அவன் கிளம்பும் இடம். அவமானத்தின் குணத்தைச் சொல்லிவிட முடியாது. சேனன் தன்னை வெளிநாடு அனுப் பாமல் சிவாவின் தம்பிக்கு ஏற்பாடு செய்ததால் ஏற்படும் களேபரம்; மகேஸ்வரி; ராஜேந்திரனையும் அம்பாவையும் பிரிக்கக் கட்டும் கட்டுக்கதை; தம்பி ராசாவின் அரேபியப் படையெடுப்பு; ரோகிணியைக் காட்டிக் கொடுக்கும் தலை யாட்டி (நடராஜா) ராஜநாயகத்தின் தீவா கதை. கள்ளபாஸ் போர்ட் எடுக்க வந்த பெண் தன் கற்பை இன்னொரு கள்ள பாஸ்போர்ட் வாங்க வந்தவனால் சூறையாடுதல், சுந்தரம் அஹிம்சை தோற்கும் காலத்தை (திலீபன் மரணத்தில்) உணர்வதும், அவர் இந்தியாவிற்கு வந்தபின் திரும்ப முடியா மல் மனதில் அல்லாடும் இடம். அதாவது இலங்கைக்குத் திரும்பச் சென்றால் கேவலமாகப் பார்ப்பார்களே என்ற அவமானம், இந்தியாவிலும் நிற்கவிடாத ஏளனப்பார்வைகள், என நாவலின் அற்புதமான பகுதிகள் ஏராளம்.

அக்கினிதிரவம், உதிர்வின் ஓசை, ஒரு புதிய காலம் மூன்று பாகங்களின் படைப்பின் மேன்மை கைகூடி வந்திருக்கின் றன. தேசத்திற்குச் செய்த துரோகத்தால் அவமானப்படும் மனிதனாக சுதன், நிலத்தை விற்றுத்தந்த பணத்தைக் கொண்டு பம்பாயில் கள்ளத்தொழிலில் ஈடுபடும் ராஜேந் திரன், சிவா லண்டன் போனதும் மாலாவிடம் ஏறும் அதி காரம், போராட்டம் குறித்தும், போர்குறித்தும், மண்பற்று குறித்தும் நேர்மை குறித்தும் சதாபேசும் ராஜி வெளிநாடு போகும்படியாவதும், புஜ்ஜிபண்டாவான குணாநந்தர் போரை வெறுப்பதும் எல்லாம் காலம் ஏற்படுத்தும் மாற்றங்களாக மாறுகின்றன. ஈழத்தில் அமைதி ஏற்பட்டால் ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருக்கும் ஐம்பது லட்சம் தமிழ்மக்கள் தாயகம் திரும்பி விடுவார்கள் என்பது போன்ற மாயையை 'காலம்' மாற்றி உரைக்கிறது யாரும் வரப்போவதில்லை என்று. இலங்கையில் பேரினவாத போரே நிகழாத காலத்தில் மக்கள் எப்படி இருந்தார்கள்? பஞ்சமும் பட்டினியும்தான். போரின் விளைவால் வெளியேறியவர்கள் நன்றாக சம்பாதிக் கவும் சொகுசாக வாழவும் செய்கிறார்கள் என்ற எதிர்மாற லான நிதர்சனம் ஈழவிடுதலையையே வெறுமையாக்குகிறது.

தேவகாந்தன், விடுதலைப்புலிகள் ஆகட்டும் மற்ற இயக்கங் கள் ஆகட்டும் 'போட்டுத்தல்லுதல்' என்ற நடத்தைகளின் மீது கறாரான பார்வையை முன்வைக்கிறார். சென்னையில் நடக்கும் மாநாட்டில் இருதரப்புவாதங்களையும் கிளப்பி விட்டு மனிதகுல மேன்மைக்கான அமைதிப்பாதைக்கு நகர்த்துகிறார்.

பத்தமநாபாகொலை, ராஜீவ்கொலை இரண்டும் தமிழகத் தில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்வுகள். ராஜிவ்கொலை நிகழும் காலத்தைச் சொல்லாமல் நாவல் காலம் என்ற கட்டமைப்பின் வழி தப்பிக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரை அது ஒரு முக்கியமாகிப்போன சம்பவம். நாவலின் பின்பகுதியில் ஆங்காங்கே வருகிறது. விடுதலைப்புலிகள் இதனால் தமிழகத்திடமிருந்து இழந்த மாபெரும் நஷ்டம் கோடிட்டுக் காட்டப்படுகிறது. ராஜிவ் கொலை நிகழ்ந்த பின் நாவலுக்குள் ஒரு விவாதத்தை வைக்காமல் தாவுகிறார். அப்படி தாவிவிட முடியுமா? கொலை சரியென்றோ தவ றென்றோ கூறவில்லை. வாசகர்கள் தெளிவடைய முடியும் என்பது முக்கியமல்லவா? நிகழ்கால வரலாற்றை நாவலாக் குகிறபோது இந்தச் சிக்கல் வரும் என்பது தெரிகிறது. இருபுறமும் படைப்பாளி எதிர்கொள்ள வேண்டிய (உயிரைப் பணயம் வைத்தல்) சூழல் கடுமையானதுதான். தேவகாந்தன் தன் முன்னுரையில் 'சூழல் கருதி சிலவற்றை வெட்டியிருக் கிறேன்' என்கிறார். குறைந்தபட்சம் கைப்பிரதியிலாவது மனசு என்ன சொல்கிறதோ அவற்றை அவர் எழுதி வைக்க வேண்டும். என்றோ ஒரு நாள் (ஐம்பதாண்டுகளுக்குப் பின்னுமேனும்) சேர்ந்த வாசகர்கள் காத்திருப்பார்கள். கைப் பிரதிக்கு உரிய அழிந்திடாத மரியாதை என்பது இதுதான்.

அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியதில் ராஜிவ் மட்டும் குற்றவாளியாகப் பார்க்கப்படுகிறார். ராணுவத்தின் அட்டகாசம் என்பது பிரதமர் தூண்டிவிடுவதல்ல. வக்கிரம் என்பது மனித மர்மங்களில் ஒன்று. நிறுவனமயப்பட்ட அதி காரம் தன் மூர்க்கத்தைக் காட்டச் செய்து வருவது அரசி யலில் செயற்கையாகவே நீளுகிறது.

தொன்மங்களைக் கையாளும்போது புதிய பார்வைசார்ந்த நிகழ்வாக உருமாற்றி இருக்கலாம். உதாரணமாக தீவா போன்றும் கதிர்காம சாமியின் வாக்கு போன்றும் படைப்பின்

இன்னுமான சாத்தியப்பாடுகள் அவற்றில் இருக்கின்றன. 1983-இல் நாவலை இயக்கும்போது 90-களின் ஞாபகம் ஆங்காங்கே தெறித்து விடுகின்றன. இன்னும் எழுதப்படாத, நிகழாத நிகழ்வுகளை முன் உரைத்தலில் ஒரு சிக்கல் இருக்கிறது. 90-களின் எழுதப்படாமல் அல்லது நிகழாமலே போகக்கூடுமல்லவா? மன உந்திப்பை கொஞ்சம் கவனப் படுத்த வேண்டும். செப்பனிடுதல் தொடர்பாக சில குறைகள் இருக்கின்றன. அவைகளை இங்கு கூறுவது பொருத்தமல்ல.

உலகத் தமிழர் கலாசாரப் பேரவைக்கும் போராட்டக் குழுக் களுக்கும் ஒரு மோதல் போக்கு இருக்கிறது; சரி. பேர வையை மிக உன்னத இடத்தில் தூக்கி வைத்துக் கொண் டாடுவதுபோல் இருக்கிறது. நாளை அது ஒரு சடங்காக மாறி விடாது என்று திடமாக நம்புகிறார் தேவகாந்தன். எனக்கு நம்பிக்கையில்லை. சிங்கப்பூர், மலேசியா, பிஜி தீவுகளில் குழந்தைகள் தமிழ் மொழியை விரும்பிக் கற்பதில்லை. வர்த்தகத்திற்குச் சம்பந்தமில்லாத மொழி என்று விட்டுவிட்ட னர். அங்கே கலப்புக் கலா சாரம்தான் உருவாகி விட்டிருக் கின்றன.

தேவகாந்தன் இந்நாவலை 97-98-லேயே எழுதி முடித்து விட்டார் என்பது எனக்கு நேரடியாகவே தெரியும். ஒரு காத்திரமான படைப்பு இப்படி பாகம் பாகமாக வரக்கூடாது என்பது என் அபிப்பிராயம். முழுத்தொகுப்பாக வந்திருந் தால் தமிழ்ச்சூழலில் இதன் இருப்பு வேறொன்றாக மாறி யிருக்கும். மூன்றாண்டுகளில் வந்த மெகா நாவல்களிலேயே 'மெகா' என்ற பெயருக்கு உண்மையான அர்த்தத்தைக் கொடுக்கும் படைப்பு இந்த கனவுச்சிறை ஒன்றே. சவசவ வென்று 800 பக்கங்களில் வந்த பெரியவரின் நாவலில் வாசகன் உத்வேகமடையக்கூடிய, வாழ்வை புரிந்து கொள் ளக்கூடிய ஒரு பக்கத்தையேனும் காணோம். கனவுச்சிறை யின் முதல் இருபாகங்களின் மொழி பலகீனமாக இருக் கிறது. தூரத்தே மங்கி ஒலிக்கும் குரல்களாக இருக்கின்றன. நிகழ்வுகளை நயினாதீவில் நிகழ்த்திக்காட்ட வேண்டும். தீவில் படகு கவிழ்வதும், உருத்திரன் புத்தவிகாரைக்கு வெடி வைக்க முயல்வதும் செய்தியாக வருகின்றன. அதே போல் கடலுக்கும் யோகேஸ்வரனுக்கும் உள்ள உறவு தேவகாந் தன் சொல்லுமளவு படைப்பாகப் பதிவாகவில்லை. ஆசிரிய கூற்றில் வெறுமையான செய்தி மொழியாகவே இருக்கிறது. சுதன் நல்லவனாக மாறுவதற்கு ஷீலா வேறொருவனோடு சேர்ந்து கொண்டது ஒரு காரணமாகி விடுமா? அம்மா சொன்னதும் ராஜேந்திரன் (அஸாம்) மனைவியைத் துறக்க முடியுமா? அதற்கான மனநெருக்கடிகளின் வழி நாவல் பயணித்து அந்த முடிவுகளை எட்டவில்லை.

நாவலில் மெச்சத்தகுந்த பல அம்சங்கள் இருக்கின்றன. வாழ்க்கையைப் போலவே நாவலும் நிதானமாக நகர்கிறது. ஒரு காரியத்தை நிகழ்த்துவதற்காகப் படைப்பாளியின் அவ சரப்படாத குணம் நம்பிக்கையைக் கூட்டுகிறது. ராஜி சுதன் இவரின் விவகாரம், சங்கரானந்தரின் கால்நடைப்பயணங் கள், சரஸ்வதியின் குடும்ப இயக்கம்... எல்லாம் தேர்ந்த கலைப்பார்வையால் எழும்பியிருக்கிறது. காலம் ஏற்படுத்தும் மாற்றங்களின் வழி மக்களின் வாழ்க்கை நகர்கிறது. கற்பு, பகைமை, நட்பு, பொறாமை... என்ன என்னவெல்லாமோ காலப் பெருநதியில் உருண்டு புரண்டு கரை ஒதுங்குகின. அல்லது உருமாறி உருண்டு போகின்றன. படைப்பாளி இந்நாவலில் ஒரு பார்வையாளர். சினிமாத் தனங்களையும் தொடர்கதை உறவுகளையும் முற்றாகத் தூக்கி எறிந்து வாழ்வின் பின் மட்டுமே நிற்கிறார். ராஜிவ் கொலையால் ஏற் பட்டுப்போன தமிழ்நாட்டுத் தமிழ் மனங்களின் திரிபுகளைத் திரும்ப ஈழமக்களின்பால் கருணை ஊற்றுகளைக் கிளறி விடக்கூடிய பெரும்பணியை இந்நாவல் செய்கிறது. மனங் களை மாற்றுவதுதானே படைப்பு. மீடியாக்கள் தமிழ் தேச மெங்கும் புகுந்து உருவாக்கியிருக்கும் மன வெறுப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காக இந்நாவல் நிச்சயம் உருவாக்கப் பட்டதல்ல; அதாவது நூறு வீதமும். ஆனால் நூறுவீதமான அந்தப் பணியையும் செய்கிறது. கிச் சுக்கிச்சுத்தனமான வம்பளப்பு இல்லாத வாழ்க்கைப் பதிவு இந்நாவலுக்குக் கூடுதல் அழகைத் தருகிறது.

காவியப்படைப்புகள் நீதியை நிலை நாட்ட, போரை வாழ் வின் அம்சமாகக் கைக்கொள்கின்றன. நவீன படைப்பு என் பது எதிர்காவியம். நன்மை / தீமை, நல்லவன் / கெட்டவன் என்பதெல்லாம் பிறப்பின் அடிப்படையில் தோன்றுவன அல்ல. சூழல், அதிகாரம் என்பவற்றின் ஊற்றுகளிலிருந்து கசிபவை. காலமே இவற்றைத் தீர்மானிக்கிறது. உண்மைக் காகத் தொடங்கப்பட்ட போரில் அழிவுகளைத் தவிர ஏதும் கைமாறாகப் பெற்றுவிடவில்லை. தென்றல் வீசிய தெருவில் கந்தகக் காற்றடிக்கிறது. எளிமையாக உற்பத்தி செய்யப் பட்ட பண்டங்கள் கள்ளச் சந்தையில் பத்துமடங்கு உயர்ந்து மனிதர்களை வதைக்கிறது. எதிரெதிர் சாவுகள் பலிக்குப்பலி என்ற துவேசத்தை வளர்க்கிறது. அழிந்த காடுகள், அழிந்த ஊர்கள், சிதைந்த மனிதர்கள், வாழ்க்கையே பயமாகிப் போன நம்பிக்கையின்மைகள்... எல்லாவற்றையும் போரே கொண்டு வருகிறது. மனிதகுலத்திற்குப் போர் என்பது அழி வின் சுவடுகள் என்பதைத்தான் 'கனவுச்சிறை' எதிர்காவிய மாகக் காட்டுகிறது. நம் கனவுகளின் தன்மை எதிராளிகளை யும் விழுங்கி ஏப்பம்விடக் கூடியதாக இருந்தால் அதுவே சிறையாகிப் போகும் என்ற தரிசனம் பெறப்படுகிறது. தமிழ் இலக்கிய தடத்தில் நல்ல நாவல்களில் இதுவும் ஒன்று. இதுவரை தமிழ்உலகம் அறியப்படாத மனித ஓலம் நாவ லெங்கும் வியாபிக்கிறது. புதிய களத்தால் புதிய நெருக் கடிகளை வாசகர் அறிகிறார். மனித மனங்கள் அந்த நெருக்கடிகளில் என்னென்ன விதமாய் அலைமோதுகின் றன. வாழ எத்தனிக்கின்றன. பொய்மை பேசுகின்றன, பண் பாடுகளை உதறுகின்றன. மரபுக்கட்டுகள் தெறிக்கின்றன. விடுதலையே கிட்டாதவர்களுக்கு விடுதலையும், சுதந்திர மானவர்களுக்கு விலங்குகளும் மாற்றிப் பூட்டப்படுகின்றன. காலத்தை உருட்டிப் புரட்டியடித்து வாழ்தலுக்கான புதிய காலத்தையும் கொண்டு வந்து நிறுத்துகிறது காலம். 'எதைத் தேர வேண்டும் என்று நினைக்கிறாய் மனிதா நீ?' என்று காலம் கேட்கிறது கேள்வி.




venugopal@thaiveedu.com

பேராசிரியர் சச்சிதானந்தம் சுகிர்தராஜாவின்

அந்தணரும் ஆகமமும்

மணி வேலுப்பிள்ளை

2019-இல் பேராசிரியர் சச்சிதானந்தம் சுகிர்தராஜா எழுதிய The Brahmin and his Bible என்னும் நூல், 1820-இல் ராம் மோகன் ராய் (1772-1883) வெளியிட்ட The Precepts of Jesus என்னும் பனுவலின் திறனாய்வாகும். தமது முதலாவது அத்தியாயத்தின் முதலாவது வரியிலேயே ராயின் தற்கால முக்கியத்துவத்தை பேராசிரியர் சுகிர்தராஜா இடித்துரைத்துள்ளார்:



'இன்று ஊடக சூழ்ச்சித்திறம் கொண்டும், நயந்துவக்கும் அடிவருடிகளின் புகழாரம் கொண்டும் இந்தியப் பிரதம மந்திரி நரேந்திர மோடி ஓர் உலகளாவிய காவிய நாயகனாக ஏற்றிப் போற்றப்படுகின்றார். ஆனாலும், அவருக்கு முன்னரே தோன்றிய ராம் மோகன் ராயே உண்மையில் முதலாவது உலகளாவிய இந்தியர்!'

ராய் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவர். அப்பொழுது இந்திய விடுதலை என்ற பேச்சுக்கே இடமில்லை. சமூக, சமய சீர்திருத்தமே அவர் நாட்டத்தை ஈர்த்தது. இந்துக்களும், இஸ்லாமியரும் யேசு போதித்த விழுமியங்களைத் தேர்ந்து தெளிந்து கைக்கொள்வது, அவர்களுக்கு நலம் பயக்கும் என்பதே என்றென்றும் அவர் நிலைப்பாடாய் இருந்து வந்தது.

இந்து மனைவியர் உடன்கட்டையேறும் கொடுமையை ஒழிப்பதில் ராய் தலையாய பங்கு வகித்தார். சமூக சீர்திருத்தவாதி என்ற வகையில் மாதருக்கு சொத்துரிமை வேண்டியும், கல்விச் சீர்திருத்தம் கோரியும், ஊடக சுதந்திரம் நாடியும் அவர் போராடி வந்தார். அதற்காக வங்காள, பார்சி, ஆங்கில, வடமொழிகளில் அவர் கட்டுரைகளையும், மொழிபெயர்ப்புகளையும் வெளியிட்டு வந்தார்.

ராய் (1772-1883), நாவலர் (1822-1879), வள்ளலார் (1823-1874), அனகாரிக தருமபாலா (1864-1933) ஆகிய நால்வரும் சமூக, சமய சீர்திருத்தங்களில் ஈடுபட்டவர்கள். அனகாரிக தருமபாலா ஆரிய பௌத்த சிங்கள மறுமலர்ச்சியிலும், தேசிய அரசியலிலும் கருத்தூன்றி ஈடுபட்டார். நாவலரும், வள்ளலாரும் தம்மிடையே மோதிக்கொண்டாலும், சைவத்தையும் தமிழையும் முன்னெடுக்க முயன்றார்கள்.

ராயின் நிலைப்பாடு பெரிதும் வேறுபட்டது. அவர் இந்துசமய வரம்பினுள் தன்னைக் குறுக்கிக் கொள்ளவில்லை. நாவலரையும், தருமபாலாவையும் போல் கிறீஸ்தவத்தை எதிர்ப்பதில் அவர் ஈடுபடவில்லை. யேசுவை ஓர் ஆசியக் கண்டத்தவராகவே அவர் கொண்டாடினார். இந்து, இஸ்லாமிய சமயத்தவர்களுக்கு கிறீஸ்தவ விழுமியங்கள் என்றென்றும் நலம் பயக்கும் என்பதே அவர் நிலைப்பாடு.

யேசுவின் வாக்குகளைத் தேர்ந்து தெளிந்து, அவற்றைக் கிறீஸ்தவ விழுமியங்களாக அவர் முன் வைத்தார். ஐரோப்பியரின் நாகரிகம், பண்பாடு, கல்வி என்பவற்றால் இந்து, இஸ்லாமிய மக்கள் பயனடைந்தது போலவே, யேசுவின் வாக்குகளால் அவர்கள் பயனடைய முடியும், பயனடைய வேண்டும் என்பதே ராயின் எதிர்பார்ப்பு.

1902-இல் சேர் பொன். இராமநாதன் (1851-1930) வெளியிட்ட An Eastern Exposition of the Gospel of Jesus according to St. John என்னும் பனுவலில், யேசுவின் வாக்குகளை யோக போதனைகளாகக் கொள்ளமுடியும் என்று தெரிவித்தமை கவனிக்கத்தக்கது.

இந்தியாவின் இறைமை முகலாயர் வசமிருந்து வெள்ளையர் வசமாகுந் தறுவாயில் உதித்தவர் ராய். கண்மூடித்தனமான இறைப்பற்றிலும், சமயச் சடங்குகளிலும், மூடநம்பிக்கைகளிலும் மூழ்கியிருந்த இந்தியர்களிடம், தமது சுயேச்சையை நிலைநாட்டும் வல்லமை இல்லையே என்று அவர் உள்ளம் பதைத்தது. ஒழுக்கமும் நியாயமும் பொதிந்த யேசுவின் வாக்குகள் அவர்களை ஒருங்கிணைத்து வலுப்படுத்தும் என்று அவர் நம்பினார்.

பேராசிரியர் சுகிர்தராஜா சுட்டிக்காட்டுவது போல், 'படையெடுத்து வந்தவர்கள் கொண்டுவந்த யேசுவின் வாக்குகளைக்



கொண்டே அவர்களை இந்துக்களாலும், இஸ்லாமியராலும் எதிர்கொள்ள முடியும்' என்று கருதினார்.

யேசுநாதரின் பேர்போன 'மலைப் பிரசங்கம்', நீதிக்கதைகள் உட்பட அவரது வாக்குகளைத் தேர்ந்து தெளிந்து சல்லடை போட்டு எழுதப்பட்ட பனுவலாகவே ராயின் The Precepts of Jesus தென்படுகிறது. தொன்மங்கள், அற்புதங்கள், வைதீக போதனைகள் போல் புலப்பட்டவற்றை ராய் தவிர்த் துள்ளார். அதே விதமாக இந்துக்களின் வேதாகமங்களை சல்லடைபோட்டால், அவையும் யேசுவின் வாக்குகளும் ஒன்றை ஒன்று நிகர்க்கும் என்று முழங்கினார்.

யூத-கிறீஸ்தவ தொன்மம், உரோமப் பேரரசு, விவிலியம், யேசுவின் அவதாரம், சிலுவையேற்றம், உயிர்ப்பு, அற்பு தங்கள்... என்பவற்றைப் புகட்டுவதில் புலனைச் செலுத்திய கிறீஸ்தவ சமய பரப்புரைஞர்களுக்கு ராய் புத்திமதி கூறத் துணிந்தபொழுது, 'ஓர் அந்தணர் எமக்குப் புத்தி கூறுவதா?' என்று அவர்கள் வெகுண்டெழுந்தார்கள்.

1820-இல் The Precepts of Jesus வெளிவந்தபோது, ராயை 'ஓர் அஞ்ஞானி' என்றும், அப்பனுவலை 'ஓர் எரிகுண்டு' என்றும், 'கிறீஸ்தவத்தின் உயிர்மையத்தை நோக்கி எய்யப் பட்ட கொலையம்பு' என்றும் கிறீஸ்தவ சமய பரப்புரைஞர்கள் சாடினார்கள். மறுபுறம், சக அந்தணர்கள் அவரை 'நெறிதுறந்தவர், மதம்மாறி, வேதாகமங்களைக் காட்டிக் கொடுத்தவர், வெள்ளையரின் ஊதுகுழல்...' என்றெல்லாம் தூற்றினார்கள்.

இந்தியாவில் கிறீஸ்தவ சமயப் பரப்புரைஞர்களுக்கும் ராய்க்கும் இடையே மூண்ட சமரைவிட, இலங்கையில் அவர்களுக்கும் நாவலருக்கும் இடையே மூண்ட போர் மிகவும் மும்முரமானது. 1923-இல் ஜோன் எச். மார்ட்டின் வெளியிட்ட 'யாழ்ப்பாணக் குறிப்புகள்' என்னும் அரிய தொகுப்பு அதற்குச் சான்று பகர்கின்றது:

'ஆறுமுகவர் எமது சமயப் பரப்புரைஞர்களைப் பின்பற்றி பழம்பெரும் தமிழ் நூல்களையும் பாடநூல்களையும் தேர்ந்து தெளிந்து தொடர்ந்து வெளியிட்டார். இந்து சமயத்தையும் கிறீஸ்தவ சமயத்தையும் உடன்படுத்தியும் முரண்படுத்தியும் கலப்படம் செய்தார். வேட்கையும் திறமையும் கொண்ட அந்த இயக்கத்தின் உச்சக்கட்டம் எனும்படியாக 'சிவ தூஷண பரிகாரம்' 1854-இல் வெளிவந்தது. அதன் ஆசிரியர் ஆறுமுகவரே என்பதில் ஐயமில்லை. திருவிவிலியத்தை அவர் கருத்தூன்றிக் கற்றுத் தேர்ந்தவர் என்பதை 'சிவ தூஷண பரிகாரம்' வியக்கத்தக்க முறையில் உறுதிப் படுத்துகிறது. யூதர்களின் எண்ணங்களும் சடங்குகளும் சைவர்களின் எண்ணங்களையும் சடங்குகளையும் போன்றவை என்றும், அவற்றின் தோற்றுவாய் சாலவும் தெய்வீகமானது என்றும், அவற்றை ஏற்றிப்போற்றுவதால் பயன் கிடைக்கும் என்றும் காட்டுவதற்கு ஆறுமுகவர் கெட்டித்தனமாக முயன்றுள்ளார். தந்திரமான முறையில் எங்கள் புனித நூல்களை ஆதாரமாகக்கொண்டு இந்துக்களின் நெறிமுறை, தவம், யாத்திரை, இலிங்க வழிபாடு, முழுக்கு, சடங்கு வகைகளை அவர் நியாயப்படுத்தியுள்ளார்' (Rev. E.J. Robinson, Hindu Pastors, John H. Martyin, Notes on Jaffna).

ஏனைய அறிவார்ந்த இந்தியர்களைப் போலவே ராயும் ஆங்கிலேயரின் கல்விமுறைமை, அரசியல்-நிருவாக முறைமை, தனிமனித ஆளுமை, புறவய அணுகுமுறை... என்பவற்றின் தாக்கத்துக்கு உள்ளானவர். அந்த வகையில் முகலாயரின் கொடுங்கோன்மையிலிருந்து இந்தியாவை விடுவித்தவர்களாகவே அவர் பிரித்தானியரை நோக்கினார். இந்தியாவைக் கைப்பற்றியவர்களாகவோ, கட்டியாள்பவர் களாகவோ பிரித்தானியரை அவர் நோக்கவில்லை.

'மகத்தான பிரித்தானியாவுடன் கொண்ட உறவினால் இந்திய பாமரமக்கள் நன்மை அடைவார்கள்' என்று அவர் உளமார நம்பினார். எனவே தமது இளமைக்கால நிலைப் பாட்டை மாற்றி, இந்தியாவில் பிரித்தானியரின் ஆட்சி நீடிக்க வேண்டும் என்று விரும்பினார். அதே விதமாகவே இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி நீடிப்பதை இராம நாதன் விரும்பியதாக அவர்மீது ஒரு குற்றச்சாட்டு உண்டு. 1931-இல் இலங்கையில் சர்வசன வாக்குரிமை புகுத்தப்பட்ட போது, Casting pearls before swine (குரங்கின் கையில் பூமாலை) என்று அவர் கருத்துரைத்ததாகத் தெரிகிறது.

அன்றைய ராயின் கருத்துக்கள் சிலவற்றுடன் இன்றைய இந்துத்துவர்களின் கருத்துக்கள் ஒத்திருப்பதை பேராசிரியர் சுகிர்தராஜா சுட்டிக்காட்டியுள்ளார்:

- இந்தியாவின் தொன்மையும் பன்மரபுகளும் பெருமை வாய்ந்தவை
- இந்துக்களே இந்தியாவின் ஆதிக்குடிகள்
- இந்துக்கள் ஏனைய சமயத்தவரை விட சகிப்புத்தன்மை மிகுந்தவர்கள்
- இந்துக்கள் மதம்மாறக் கூடாது

இவை மேலோட்டமான ஒற்றுமைகள் மாத்திரமே. ராயின் ஆழ்ந்து பரந்து விரிந்த புலமைக்கு எட்டிய சங்கதிகள் அவை. அதேவேளை அவர் இந்துத்துவத்துடன் முரண்படும் விதங்களும் கவனிக்கத்தக்கவை:

- 'இந்துஸ்தான்' என்பது சமயம்சார்ந்த சொல் அல்ல, ஆள்புலம் சார்ந்த சொல்
- 'ஆரியவர்த்தம்' என்ற மனுவின் சொல்லாட்சி புரியாதது, தெளிவற்றது
- உலகமும் மானுடமும் எல்லைகளால் கூறுபட்டவை ஆகா
- இஸ்லாமியரின் தனியிறை வழிபாடும், இறையியலும் மெச்சத்தக்கவை
- இந்து, இஸ்லாமிய, கிறீஸ்தவ விழுமியங்கள் ஒன்றை ஒன்று மேவுபவை
- உலகளாவிய விழுமியங்கள் இந்தியாவுக்கு உதவும்

வெவ்வேறு சமயங்கள் மாத்திரமல்ல, வெவ்வேறு இயல்களும், நெறிகளும், வாதங்களும் கூட உலகளாவிய மானுட விழுமியங்களால் ஒருங்கிணைய வல்லவை. மானுட வரலாறு (மெய்யியல் - அறவியல் வரலாறு) அதையே உணர்த்து கின்றது. அந்த வகையில் யேசுவின் போதனைகளைப் புகட்ட வந்த வீரமாமுனிவரால் 1730 வாக்கில் 'திருக்குறள்' இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டமை ஒன்றும் தற்செயலான சங்கதி அல்ல என்பது புரிகிறது. ராம் பிறப்பதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்னரே, குறள் கூறும் விழுமியங்களை மேல்நாடு அறிந்துகொண்டது. மானுட விழுமியங்கள் குறித்த ராயின் நிலைப்பாட்டை அது மெய்ப்பிக்கின்றது.

யேசுவின் வாக்குகளை ராய் கைக்கொண்டாலும் கூட, வேதங்களே ராயின் இறுதிப் பற்றுக்கோடு. வேதங்களை சரிவரக் கையாண்டால், தமது நாட்டவர்கள் தூய, சீரிய இறைநிலை எய்தி இன்புற்று வாழமுடியும் என்று அவர் திடமாக நம்பினார்.

2019-இல் பேராசிரியர் சுகிர்தராஜா T&T Clark வெளியீடாக முன்வைத்த The Brahmin and his Bible என்பது 150 பக்கங்கள் கொண்ட ஒரு குறுநூல். புலமைமொழியில் எழுதப்பட்ட இந்நூல் புலமையாளர்களுக்கு மட்டுமல்லாது, பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அறிவார்ந்த பிறர்க்கும் பயன்படவல்லது.



mani.velupillai@thaiveedu.com



ஒரு நூலின் உருவாக்கம்

ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்

பகுதி 20

- என். செல்வராஜா

ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகத்தின் எதிர்காலம்:

ஒரு ஜனரஞ்சக ஆக்க இலக்கியப் படைப்பாளியாக இல்லாது போனாலும், 15 ஆண்டுகள் இலங்கையில் நூலக ராகப் பல்வேறு நிறுவனங்களிலும் பணியாற்றிய அனுபவம், இருபதாண்டுகளாக நூல்தேட்டம் என்ற பெயரில் குறிப்புரை யுடனான ஈழத்துத் தமிழ் நூற்பட்டியலைத் தொகுத்து 18000 ஈழத்துத் தமிழ் நூல்களைப் பதிவுசெய்து எமது அறிவுசார் தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றாதாரமாக 18 தொகுதிகளில் வழங்கிய அனுபவம், சில ஈழத்துத் தமிழ்ப் பதிப்பாளர்க ளுடன் இணைந்து, தாயகத்தில் நலிந்து செல்லும் ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகத்திற்கு புத்தூக்கம் தரும் வகையில் 2011 முதல் லண்டனிலும் புறநகர்ப் பகுதிகளிலும் ஈழத்துத் தமிழ்ப் புத்தகச் சந்தைகளை நடத்தி சராசரி வாசகர்கள் படைப்பாளிகள், பதிப்பகங்கள் பற்றிப் பெற்றுக்கொண்ட அனுபவம் இவை அனைத்தும் என்னை இக்கட்டுரையை எழுதத் தூண்டியுள்ளது.

எம்மவரிடையே வாசிப்புத் தரம் குறைந்துவிட்டது என்று பொதுப்படையான உண்மையைச் சொல்லி கைதுடைத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. அதிலிருந்து எவ்வாறு மீள லாம் என்ற சிந்தனையின் வெளிப்பாடே இக்கருத்துகள் என்று கூறிக்கொள்ளலாம்.

வாசிப்பு என்பது பொதுவான கல்வித் தேவை களுக்காகவும், இலக்கிய வாசிப்பு இரசனைக்காக வும், அதற்கப்பால் உள்ள ஆழ்ந்த விரிந்த தேட லுக்காகவும் என மூன்று வகைகளில் இங்கு நிகழ் கின்றது. இங்கு பொதுவான வாசகர்கள் பற்றிய மதிப்பீடு இரண்டாம் மூன்றாம் வகைக்குள் அடங்கி விடுகின்றது. பொழுதுபோக்குக்காகவும், தம்மைச் சுற்றி உலகில் நடந்தேறும் பல்வேறு விடயங்களை விரைவாகவும், விரிவாகவும், ஆழமாகவும் அறிந்து கொள்வதற்காகவும், புரியாதனவற்றைப் புரிந்து தெளிவுபெறவும் ஒருவருக்கு ஆழமான வாசிப்புத் தேவைப்படுகின்றது.

பொது அறிவு - கேள்வி பதில் புத்தகத்தை எடுத்து வாசித்ததும் பொது அறிவு எமக்கு வந்துசேர்ந்து விடுகின்றது என்று இன்றுவரை நாங்கள் நம்பிக் கொண்டே இருக்கின்றோம். அதனால்தான் இன்று புத்தக விற்பனை நிலையங்களில் சிறியதும் பெரியதுமாக இரண்டு வரிகளில் பதில் தரும் பொது அறிவுக் களஞ்சியங் களும், பொது அறிவுக் கலசங்களும், பொது அறிவுப் பெட்ட கங்களும் வாசகருக்குத் தயாராகக் காத்திருக்கின்றன. ஒரு பரீட்சைத் தேவைக்கு வேண்டுமானால் இந்தப் பொது அறிவு நூல்கள் ஓரளவு தகவல்களை வழங்கலாம். ஆனால் ஆழ்ந்த அகன்ற வாசிப்பே ஒருவரை தன்னைச் சார்ந்த சமூகத்தை யும், தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் கூர்ந்து அவதானித் துப் புரிந்துகொள்ள உதவுகின்றது. அதற்கான தேவையை யும், ஆர்வத்தையும் வளர்த்தெடுப்பதே எம்முன்னுள்ள சமூ கக் கடமையாகும்.

மலையைப் பார்க்கத் தூரம் வேண்டும். அடிவாரத்தில் நின்று முழு மலையையும் இரசிக்க முடியாது. இன்று எம்மவர்களில் பலரும் ஆனையைப் பார்த்த குருடராக அறிவியல் விளக் கம் தரமுயல்வதற்கான காரணமாயமைந்தது, அறிவியல் ரீதியான தூரப்பார்வையை தம்மிடையே எம்மவர்கள் வளர்த் துக்கொள்வதில் அக்கறை செலுத்தாமையேயாகும்.

தமிழ்ச் சமூகத்தில் பெரும்பாலோரின் ஆர்வம் கல்வித் தேவைகளுக்கான வாசிப்புடன் நின்றுவிடுகின்றது. அதற்கப் பால் ஏற்படும் வாசிப்பு நிலை ஒருவருக்கு சிறுபராயத் திலேயே அவரது பெற்றோராலும், ஆசிரியர் களாலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தடுக்கப்பட்டு விடுகின்றது. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை உள் ளிட்ட பாடசாலைக் கல்வி முறையும், அதற் கப்பால் தொடரும் டியூஷன் கல்வித் திட் டங்களும் அவர்களைப் பாடக்குறிப்புகளை மட்டும் (Notes) நம்பிய மாணவர் சமூகமாக வளர்த்தெடுக்கிறது. ஆரோக்கியமான விரிந்த வாசிப்புக்கு சிறுவரை சுதந்திரமாக விட்டுவைக்க வேண்டிய அந்த இளவயதில் அச்சிறுவர் புலமைப்பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளுக்குள்ளும், மேலதிக வகுப்புக்கான 'டியூட்டரி'களுக்குள்ளும் தள்ளி அவர்களை நான்கு சுவர்களுக்குள் முடக்கி விடுகின்றது. பரந்த சுதந்திர வாசிப்புக்கான வாய்ப்பு அவரறியாமலேயே தட்டிப்பறிக்கப் பட்டுவிடுகின்றது.

> ***"பொது அறிவு நூல்கள் ஓரளவு தகவல்களை வழங்கலாம். ஆனால் ஆழ்ந்த அகன்ற வாசிப்பே ஒருவரை தன்னைச் சார்ந்த சமூகத்தையும், தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் கூர்ந்து அவதானித்துப் புரிந்துகொள்ள உதவுகின்றது."***

இத்தகு கட்டுப்பாடுகளுக்குள்ளாகாத விதி விலக்கான சில பெற்றோர்களால் வளர்க்கப் படும் ஒரு சில சிறார்களே நல்ல வாசகர் களாக, மக்களின் கவனத்தை ஈர்த்த அறிவு ஜீவிகளாக, எமது சமூகத்தில் எதிர்நீச்சல டித்து முன்னேறி மிளிர்ந்துவிடுகின்றனர். இவ்வழிவிற்கு பெற்றோரும் ஆசிரியர்களும் முக்கியமாகத் துணை நின்றிருக்கிறார்கள். இவர்கள்தான் வெளியே நின்று 'வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது' என்று முத லைக்கண்ணீர் வடிக்கின்றார்கள். எமது ஈழத்துப் படைப்பாளிகளில் பலர் கல்வித்து றையில் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களே. இருந்தும் அவர்களது கல்விச்சாலைகளின் நூலகங்களில்கூட நூல் வாசிப்புக்கான உந்துதல் கிட்டாமல் நூலக அறைகள் வெறிச்சோடியும் நலிந்தும் கிடக்கின்றன. மாணவர்களுக் கென வழங்கப்படும் நூல்கள் பாடசாலை அலுவலக அலுமாரி களில் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன. சாவி தலைமை ஆசிரிய ரிடம் அடைக்கலமாகிவிடுகின்றது. தான் ஓய்வுபெற்றுப் போகும் வரை அதிபரும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட புத்த கங்களைப் பூதம் காத்த புதையல் போலப் பாதுகாத்து புதிய அதிபரிடம் கையளிக்கின்றார். தனது ஓய்வூதியம் தாம தமாகக்கூடாதென்ற கவலை அவருக்கு. இதுதான் காலாதி காலமான நடைமுறை.

> ***"வேண்டும். ஈராக் யுத்தம் பற்றி அல்லது இஸ்ரவேலின் காசா மீதான ஆக்கிரமிப்பு பற்றியும், இலங்கையின் ஆர்தர் சீ கிளார்க்கின் வாழ்வும் பணியும் பற்றி ஒரு சிறுவனுக்கு விளங்கக்கூடியவகையில் படங்களுடன் அழகாக ஒரு நூலையும் எழுதவேண்டும் என்று எமது சிறுவர்களுக்காக எழுதுவதாகக் கூறும் எழுத்தாளர்கள் எப்போது முன்வருகின்றார்களோ அன்றுதான் எமது வாசிப்புத்திறன் சர்வதேசத் தரத்தை எட்டும்."***

இன்றைய ஈழத்துத் தமிழ்ப் பாடசாலைகளில் திறந்த வாசிப் புமுறையுள்ள பாடசாலைகளை விரல்விட்டு எண்ணலாம். பாடசாலைகளில் நூலகத்தின் நூற்றொகை என்பது நிலை யான சொத்துகளாகக் (Fixed assets) கணக்கிடும் முறை நீங்கி அவை அழியும் நுகர்பொருட்களாகக் (consumable) கணக்கிடும் வகையில் நூலக விதிமுறைகள் தளர்த்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் அதிபரின் பொறுப்பில் பாது காக்கப்படும் நூலகச் சாவிக்கொத்து, நூலகரிடம் கைமாறும் நிலை உருவாகும். பாடசாலைகளில் நூல்கள் விடுதலை யாகி, பாவனைக்கு விடப்பட்டு காலக்கிரமத்தில் பழுத டைந்து பெறுமானத் தேய்வுகண்டால், புதிய நூல் பதிப்பு, விற்பனைக்கான சந்தை வாய்ப்பினையும் அது விரிவு படுத்தும். இறைத்த கிணறே ஊறும் என்பது மூத்தோர் பொன் மொழியல்லவா ?

எம்மிடையே வாழும் தமிழ் பாடசாலை ஆசிரியர்களில் எத் தனைபேர் பொதுவாசிப்பில் அக்கறையுடன் ஈடுபடுகின்றார் கள் என்பதை இலங்கையில் ஆண்டுதோறும் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறும் BMICH புத்தகச் சந்தைகளில் அவர்கள் தமது நூலகங்களுக்காக தெரிவுசெய்யும் பொது வாசிப்புக்கு உரியதெனக் கருதும் நூல்களின் எண்ணிக்கை யிலிருந்து மதிப்பிடலாம். இதை எமது தமிழ்ப் பதிப்பாளர் களும் படைப்பாளிகளும் அறியாமலில்லை. பாடவிதானத் துக்குட்பட்ட பாடம் சார்ந்த துறைகளுக்கு அப்பால் செல்ல அவர்களது கைகள் கூசுவதை அத்தகையதொரு நூற்சந் தையில் நேரில் கண்டவன் நான். இது வருத்தத்துக்குரியது. கல்வித் தேவைகளுக்கு அப்பாலும் வாசிப்பு விரியவேண்டும் என்று ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றோரும் நினைத்தால் - அதற்கான வாய்ப்புகளை அவர்கள் தமது பிள்ளைகளுக்கு வழங்கினால் எமது வாசிப்பு நிலை அதிசயிக்கத்தக்க அளவில் மாறும். வரையறுக்கப்பட்ட நிதி வசதி என்பது இரண்டாம் பட்சமே. பதிப்பாளர்கள் மறைமுகமாக வழங்கும் கொமிஷன்களே (லஞ்சம் என்றும் சொல்லலாம்) நியாயமா னதும் ஆரோக்கியமானதும், நேர்மையானதுமான நூல் கொள் வனவுகளைக் கல்வி நிறுவன நூலகங்கள் மேற்கொள்ளத் தோன்றாத் தடையாக உள்ளன.

படைப்பாளிகளும், பதிப்பாளர்களும் சிறுவர் நூல்கள் என் றால் கற்பனைவளம் மிக்க சிறுவர் பாடல்களும், ஒழுக்க வியல் போதனைக்குரிய சிறுவர் கதைகளும்தான் என்ற மாயையிலிருந்தும் இன்று விடுபடவேண்டியுள்ளது. அறி வியல் சார்ந்த படைப்புகளை எழுத்தாளர்களும் துறைசார் அறிவுஜீவிகளும் சிறுவர்களுக்காகப் படைக்க வேண்டும். ஈராக் யுத்தம் பற்றி அல்லது இஸ்ரவேலின் காசா மீதான ஆக்கிரமிப்பு பற்றியும், இலங்கையின் ஆர்தர் சீ கிளார்க்கின் வாழ்வும் பணியும் பற்றி ஒரு சிறுவனுக்கு விளங்கக்கூடியவ கையில் படங்களுடன் அழகாக ஒரு நூலையும் எழுதவேண் டும் என்று எமது சிறுவர்களுக்காக எழுதுவதாகக் கூறும் எழுத்தாளர்கள் எப்போது முன்வருகின்றார்களோ அன்று தான் எமது வாசிப்புத்திறன் சர்வதேசத் தரத்தை எட்டும்.

சில காலங்களுக்கு முன் இலங்கையில் Room to Read திட் டத்தின் கீழ் தமிழ்ப் பதிப்பகங்களால் வெளியிடப்பட்டுள்ள தமிழ் நூல்களின் தலைப்புகளையும் பாடத்துறையையும் மேலோட்டமாகப் பார்த்தாலே இளையோர் அறிவியல் நூல்க ளுக்கு நமது பதிப்பகங்கள் வழங்கும் முக்கியத்துவம் புரிந்து விடும். எழுத்துப் பிழைகளுடனும், இலக்கணத் தெளிவின் மையுடனும் சாதாரண தமிழ் சிறுவருக்கு பழக்கப்பட்டிராத சொற்பிரயோகங்களுடன் சகோதர மொழிசார்ந்த எழுத்தா ளர்களால் எழுதப்பட்டு தமிழ்ச் சிறுவர்களின் கைகளில்



திணிக்கப்பட்ட பல நூல்கள் Room to Read திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு, பாடசாலை நூலகங்களின் தட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

இன்று வளரும் சிறுவரே நாளைய வாசகர். பறக்கத்துடிக்கும் பறவையின் சிறகுக ளைக் கத்தரித்துவிட்டு அது பறக்கவில் லையே என்று வருத்தப்படும் சமூகக் கோளாறு எம்மிடையே மாறவேண்டும். எமது கவனம் ஒட்டுமொத்தமாகச் சிறுவர் களைப் பரந்த வாசிப்புக்கு இட்டுச்செல் லும் வழிமுறைகள் பற்றிய நேர்கொண்ட பார்வையுடன் சிந்தித்தால் இந்தத் தலை முறையிலேயே விடிவைக் காணலாம்.

பாடசாலைகளும் ஆசிரியர்களும் கல்வித் துறையும்தான் இதனைச் செய்யவேண்டும் என்ற வழமையான 'மற்றவர் செய்யட்டும் நாம் வேடிக்கை பார்ப்போம்' என்ற போக்கை கைவிட்டு - ஒவ்வொருவரும் தமது பங் களிப்பினை நல்க வேண்டும். மேலைத்தே யங்களில் கோடி கோடியாக பணத்தை அதில்தான் கொட்டுகிறார்கள். பாடசாலை நூலகங்களுக்கு அப்பால் வகுப்பறை நூல கங்களும் அங்கே செழிப்புடன் செயற்படு கின்றன. அவற்றின் பொறுப்பை பெற் றோரும் வகுப்பாசிரியர்களுமே பெரும் பாலும் ஏற்கிறார்கள். அதன் ஒரு வெளிப் பாடுதான் இலங்கையில் அறிமுகப்படுத் தப்பட்டுள்ள Room to read என்ற இலங் கைத் திட்டம். அதையும் நாங்கள் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்பதே எனது கருத்து. இத்திட்டத்தை வெறும் 'சிறுவர் களுக்கான புத்தக உற்பத்தித் திட்டமாக' மாற்றியமைத்த எம்மவர்கள் நல்லதொரு சந்தர்ப்பத்தை தவறவிட்டவர்களாவர்.



> ***"கல்வித் தேவைகளுக்கு அப்பாலும் வாசிப்பு விரியவேண்டும் என்று ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றோரும் நினைத்தால் அதற்கான வாய்ப்புகளை அவர்கள் தமது பிள்ளைகளுக்கு வழங்கினால் எமது வாசிப்பு நிலை அதிசயிக்கத்தக்க அளவில் மாறும்."***

கூடாது. சிறிய அளவில் நடமாடும் நூற்சந் தைகளை ஏன் இலங்கையில் தொடர்ந்து நடத்தக்கூடாது. பாடசாலைகளும், சனசமூக நிலையங்களும், பொது நூலகங்களும் இது பற்றிச் சிந்திக்கவேண்டும். யாழ்ப் பாணம் 'எங்கட புத்தகங்கள்' அமைப்பின் வரவுடன் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நூல் வெளியீட்டாளர்களும் பதிப்பகங்களும் சிறிய-பெரிய அளவில் கடந்த சில ஆண்டு களாக எங்கட புத்தகச் சந்தையின் வழி யொற்றி தமிழ்ப் புத்தகச் சந்தைகளை ஆங்காங்கே நடத்திவருகின்றார்கள்.

ஆக்க இலக்கியத்துறையிலும் கலைத்து றையிலும் வடமராட்சியிலிருந்து அல்வாய் 'ஜீவநதி' பதிப்பகத்தின் உரிமையாளர் க. பரணீதரன் 450-இற்கும் அதிகமான நூல் களை வெளியிட்டுவிட்டார். மட்டக்களப்பில் மைக்கல் கொலின், தனது மகுடம் பதிப்ப கத்தின் மூலம் 100-ஆவது பிரசுரத்தை அண்மையில் கண்டுள்ளார். யாழ்ப்பாணத் திலிருந்து எழுநா பதிப்பகம் தனது 20-ஆவது நூலையும், எங்கட புத்தகங்கள் 18-ஆவது நூலையும் அண்மையில் வெளியிட் டுள்ளனர். ஆக்க இலக்கியம் தவிர்ந்த, ஆயிரத்தைத் தாண்டிவிட்ட பல ஆய்வு நூல்களை குமரன் பதிப்பகமும், சேமமடு பதிப்பகமும், அண்மைக் காலமாக சில தனியார் அமைப்புகளும் வெளியிட்டு வரு கின்றார்கள் என்பதும் அவதானத்திற்கு ரியது.

இவர்களின் ஆய்வு நூல்கள் பரந்த அள வில் வாசகர்களிடம் எடுத்துச் செல்லப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அதற்கான முறையான சர்வதேச விநியோ கத்திட்டம் எதுவும் எமது பதிப்பாளர்களிடம் இல்லை. அதனைச் செய்யவேண்டிய பொறுப்பு எழுதுபவரின் தலையிலேயே கட்டிவிடப்படுகின் றது. பாவம், புத்திஜீவிகளான அவர்களால் வியாபாரச் சிந்தனையை தமக்குள் வளர்த்துக்கொள்ள முடியாதுள்ளது. ஒரு வெளியீட்டு விழாவுடனேயே படைப்பாளிகள் திருப்தி கொண்டு விடுகிறார்கள்.

எம்மிடையே வாழும் சில ஈழத்து எழுத்தாளர்களைப் பற்றி யும் எனக்கு ஒரு கசப்பான அபிப்பிராயம் உள்ளது. தனது நூல்களைத் தவிர அடுத்தவரின் நூல்களையும் விலைகொ டுத்து வாங்கிப் படிக்கும் படைப்பாளிகளை எம்மிடையே விரல்விட்டு எண்ணிவிடலாம். இன்று ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ளும் பலதரப்பட்ட எழுத்தாளர்களின் எண்ணிக்கையை வைத்தும் எனது கருத்தைப் புரிந்துகொள் ளலாம். எத்தனை குழுக்கள், எத்தனை பிரிவுகள் ? இந்நிலை ஈழத்தில் மாத்திரமல்ல. புலம்பெயர்ந்து நாம் வாழும் மண்ணி லும்தான் தொடர்கின்றது. காழ்ப்புணர்வற்ற தமது பரந்த வாசிப்பை எழுத்தாளர்களும் விமர்சகர்களும் மேற்கொள் ளும்போது புத்தகக் கலாசாரம் செழுமையடையும்.

நூலகத்துறையில் ஒரு பொன்மொழியுண்டு. 'நூலகங்களை நாடி வாசகர் வராவிட்டால் வாசகரை நாடி நூல்கள் சென்ற டைய வேண்டும்' - இது நூலகவியலின் தந்தை எஸ்.ஆர். இரங்கநாதன் சொன்னது. இந்தக் கருத்தே பதிப்பகங்க ளுக்கும் பொருந்தும். தமது பதிப்புகளை நாடி மக்கள் வரா விட்டால், அவர்களை நாடி ஏன் பதிப்பகங்கள் செல்லக் லண்டனிலிருந்து கடிதம் எழுதி ஒரு பிரதியைக் கேட்டால்கூட பதில் எழுதவோ, தொடர்புகொள்ளவோகூட பெரும்பான்மை யான ஈழத்து எழுத்தாளர்கள் அக்கறைப்படுவதில்லை. இத்தகைய நிலையில் நூல் விநியோகத்திட்டம் பற்றி சிந் தித்து அதனைச் செய்யவேண்டியது பதிப்பகங்களே. முன் னர் ஒரு தடவை பூபாலசிங்கம் பதிப்பகத்தின் மூலம் இத்த கையதொரு கூட்டு விநியோகத் திட்டம் முன்னெடுக்கப்பட்ட தாக அறிகின்றேன். அது ஏன் தோல்வியில் முடிந்தது என்பதை நாம் ஆராயவேண்டும். அதன் காரணிகளைக் கண் டறிந்து அதனை வெற்றிகொள்ளத்தக்க மற்றொரு தொடர் முயற்சியை பதிப்பாளர்கள் ஒன்றுசேர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

புதிதாக ஒரு நூல் வெளிவந்ததும் அது பற்றி அறிமுகத்தையும், விமர்சனத்தையும் பத்திரிகைகளிலும் சிறு சஞ்சிகைகளிலும் பிரசுரித்துவிடுவதால் மாத்திரம் அந்த நூலைத் தேடிச் சென்று வாங்கும் அளவுக்கு எமது வாசகர் சமூகம் உத்வேகம் பெறவில்லை என்ற யதார்த்தத்தை நாம் முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும். வாசகர்களிடம் நூல்களைக் கொண்டுசேர்க்கும் வழிமுறைகளாக இன்று இருப்பது பதிப்பாளர்களின் புத்தக விலைப்பட்டியல்களும், பதிப்பாளர்களின் சஞ்சிகை விளம்பரங்களும் சமூக ஊடகங்களுமே. இதற்கப்பால் நூல்களை விநியோகிப்பது தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு கலந்துரையாடலையாவது பதிப்பகங்கள் ஒற்றுமையுடன் அறிவுஜீவிகளுடன் இணைந்து மேற்கொள்ளவேண்டும். இப்பொழுது தனித்தனியாக 'ஒன்லைன் வியாபாரங்களை' நூல் விநியோகத் திட்டத்திற்கு மாற்றீடாக எமது பதிப்பகங்கள் தொடங்கியிருக்கின்றன.


தமது சந்தை வாய்ப்பை உலகெங்கும் புலம்பெயர்ந்துள்ள எம்மவரிடையே உருவாக்க நியாயமான விலையில் அவர்களிடம் நூல்களைக் கொண்டுசேர்க்க தனிநபர்களின் உதவும் கரங்களைப் பற்றிப் பிடிக்கவேண்டும். இலாபத்தை மாத்திரம் கருத்திற்கொண்டு புலம்பெயர் தமிழர்களை நோக்கி நீழும் வர்த்தகக் கரங்கள், தவறான கரங்களையும் பற்றிக்கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகளவில் காணப்படுகின்றது. புலம்பெயர் தமிழர்களின் அறிவியல் தேவை மற்றும் ஆர்வத்துக்கு தீனியாக அமையும் நூல்களை வெளியிடும் முயற்சிகளிலும் பதிப்பாளர்கள் அவ்வப்போது இறங்கவேண்டும். குறிப்பாக, ஈழத்தவரின் சமூக அரசியல், கலாசார, பிரதேச வரலாற்று மூலங்களை அடியொற்றிய தேடல் இன்று புலம்பெயர் தமிழர்களிடம் உண்டு. அதற்கு ஏற்ப வெளிவரும் நூல்களையே அங்கு வெற்றிகரமாகச் சந்தைப்படுத்தும் வாய்ப்புள்ளது. இந்தத் தேவையை நிவர்த்தி செய்வது ஈழத்து பதிப்பகங்களினதும், படைப்பாளிகளினதும் கடமையாகும்.

கடந்த பத்தாண்டுகளில் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையே ஏராளமான தரமான இளம் படைப்பாளிகள் உருவாகிக்கொண்டிருக்கிறார்கள். துரதிஷ்டவசமாக அவர்களை கவர்ந்திழுக்கும் சக்தியை தமிழகப் பதிப்பாளர்களே கொண்டிருப்பது ஈழத்துப் பதிப்புலகத்தைப் பொறுத்தவரையில் கவலைதரும் விடயமாகும். இன்று இலங்கைக்குள் வெளியிடப்படும் தமிழ் நூல்களுக்கு இணையாக புகலிட நாடுகளில் தமிழ் நூல்கள் உருவாக்கப்பட்டு வந்தாலும், ஈழத்தவர்களுக்கு அவற்றின் இருப்புப் பற்றிய செய்திகளே சமூக வலைத்தளங்களின் வாயிலாக சென்றடைகின்றன. புத்தகங்கள் அல்ல. அந்த நூல்கள் தமிழகத்தில் அச்சிடப்படுமிடத்து இலங்கை முகவர்களின் வாயிலாக இந்திய விலையில் 8-9 மடங்கு விலையிலேயே சொந்த மண்ணில் வாழும் உறவுகளைச் சென்றடைகின்றன.

இன்று தமிழகத்தின் பல்வேறு பதிப்பகங்களும் புலம்பெயர்ந்தோரை நோக்கித் தமது சந்தை வாய்ப்பை வலுப்படுத்திவரும் வேளையில் ஈழத்தின் பதிப்பாளர்கள் என்னதான் செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற சாமான்யனின் கேள்விக்கு அவர்களிடமிருந்து நல்லதொரு பதிலை ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகம் இன்று எதிர்பார்த்திருக்கிறது.



selvarajah.n@thaiveedu.com



கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

5

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

நடுத்திராவிட மொழிகள்:

நடுத்திராவிட மொழிகள்: தெலுங்கு, குவி, கொலாமி, நாய்க்கி என நான்கு வகைப்படும்.

நடுத்திராவிட மொழிகளும் அதன் பொதுப்பண்புகளும்:

நடுத்திராவிட மொழிகளின் சில பண்புகள் எவை என்பதை பார்க்கும் போது

- தென் திராவிட மொழிகளுக்கும் வடதிராவிட மொழிகளுக் கும் ஒரு இணைப்புப் பாலமாக அமைந்து காணப்படுகிறது.
- நடுத்திராவிட மொழிகள் தென் திராவிட மொழிகளின் பல அம்சங்களைத் தாங்கி இருந்தாலும் வட திராவிட மொழி களின் சில பொதுவான பண்புகளைக் கொண்டு காணப் படுகின்றன.
- நடுத்திராவிட மொழிகளில் சில ஒலியியல் மாற்றம், சொல் லிலக்கண மாற்றங்கள் தென் திராவிட மற்றும் வட திராவிட மொழிகளில் இருந்து வேறுபடுகின்றன.
- நடுத்திராவிட மொழிகளில் சில ஒலிகள் 'ழ' தென் திராவிட மொழிகளில் இருப்பது போல உச்சரிக்கப்படுவதில்லை. ஆனால் வட திராவிட மொழிகளிலுள்ளதைப் போல் உச் சரிக்கப்படுகின்றன.
- நடுத்திராவிட மொழிகளில் சில பெயர்ச்சொற்கள், வினைச் சொற்களின் அமைப்பு தென் திராவிட மொழிகளிலிருந்து வேறுபட்டு வடதிராவிட மொழியைப் போல் உள்ளது குறிப் பிடத்தக்கது.
- சில சொற்கள் தென் திராவிட மொழிகளில் இருந்து வேறு பட்டு, வட திராவிட மொழிகளில் உள்ளதைப் போல் பயன் படுத்தப்படுகின்றன.
- சில இலக்கண அமைப்புகள் தென் திராவிட மொழிகளில் இருந்து வேறுபட்டு, வட திராவிட மொழிகளைப் போல உள்ளன.
- நடுத்திராவிட மொழிகளின் இலக்கியங்கள் குறைவாகவே இருந்தாலும் அவற்றின் பேச்சு வழக்கு தென் திராவிடம் மற்றும் வடதிராவிடம் ஆகிய இரண்டு மொழிகளின் கலவை யாக உள்ளதனைக் காணலாம்.
- தென் திராவிட மொழிகளில் மொழி முதல் 'ட' கர ஒலி வரு வதில்லை. ஆனால் நடுத்திராவிட மொழிகளில் இது சில இடங்களில் மொழி முதல் வருகின்றது.
- நடுத்திராவிட மொழிகளில் ஆண்பால், ஆண்பால் அல்லா தன என்று இருவகைப் பாகுபாட்டினை ஒருமையிலும் பன்மையிலும் காணமுடிகிறது.
- பெண்பால் உறவுப் பெயர்கள் (kinship terms) ஆள் விகுதியைப் பெற்று அமையும் மரபினை நடுத்திராவிட மொழிகளில் காணமுடிகிறது.
- தென் திராவிட மொழிகளிலும், வட திராவிட மொழிகளிலும் பன்மையினை உணர்த்துவதற்குப் பலவின்பால் விகுதி கட்டாயம் இணைத்தாக வேண்டும் என்ற நிலை கிடை யாது. ஆனால் நடுத்திராவிட மொழிகளில் அஃறிணைச் சொற்கள் பன்மையுணர்த்த வேண்டுமாயின் பலவின்பால் விகுதி கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.
- நடுத்திராவிட மொழிகள் நெடில் ஒலிகளே இல்லாத ஓரியா போன்ற மொழிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்ட போதிலும் தமக்கே உரிய குறில், நெடில் வேறுபாட்டை இழக்காமல் பேணிக்காத்து வருகின்றன.
- ஏனைய திராவிட மொழிகளைப் போன்று எழுவாய் வடிவில் மூவிடப் பெயர்களின் முதலுயிர் நீண்டும் வேற்றுமை ஏற் கும் வடிவில் குறுகியும் நிற்கும் இயல்பு நடுத்திராவிட மொழிக்கும் உண்டு.

இத்தகைய பொதுப் பண்புகளை நடுத்திராவிட மொழிகளில் மொழியியல் அறிஞர்கள் காண்கின்றனர்.

திராவிட மொழிகளுள் தென் திராவிட மொழிகளுடன் தெலுங்கு மொழியை இணைத்து ஆய்வது பழைய மரபு. ஆனால், தெலுங்கு நடுத்திராவிட மொழிகளுடன் சேர்க்கப் படுகிறது. அந்தவகையில் நடுத்திராவிட மொழிகளை...,

தெலுங்கு - குவி கிளை நடுத்திராவிட மொழிகள்
கொலாமி - நாய்க்கி கிளை நடுத்திராவிட மொழிகள்
என்று இரு வகைப்படுத்துவர்.
தெலுங்கு – குவி கிளையில் தெலுங்கு, கோண்டி, கோண்டா, குயி, குவி, பெங்கோ, மண்டா ஆகிய மொழிகள் உள்ளன.

கொலாமி – நாய்க்கி கிளையில் பர்ஜி, கட்பா ஒல்லாரி, கட்பா சில்லூர் ஆகிய மொழிகள் உள்ளன. கட்பா ஒல்லாரி, கட்பா சில்லூர் ஆகியன தனிமொழிகள் அல்ல; ஒரே மொழி யின் கிளைகள் என்றும் கூறுவர் மொழியியல் அறிஞர்கள்.

நடுத்திராவிட மொழிக் குடும்பத்திலுள்ள மொழிகளுள் முதலாவதாக பார்க்கப்படும் மொழி தெலுங்கு மொழி (Telugu Language):

தெலுங்கு மொழி தென்னிந்தியாவில் பேசப்படும் ஒரு திராவிட மொழியாகும். நடுத்திராவிட மொழிக் குடும்பத்தில் தொன்மைச் சிறப்பிலும் சொல் வளத்திலும் தெலுங்கு மொழி தமிழுக்கு அடுத்த நிலையில் உள்ளது. ஆந்திர, தெலுங் கானா மற்றும் யானம் ஆகிய மாநிலங்களில் அதிகார பூர்வ மான மொழியாகும். இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட 22 மொழிகளில் தெலுங்கு மொழியும் ஒன்றாகும். இந்தியாவில் பேசப்படும் மொழிகளிலில் மூன்றாவது இடத்தில் தெலுங்கு மொழி இடம்பெற்றுள்ளது. தெலுங்கு மொழி வட இந்திய மொழிகளிலிருந்து வேறுபட்டது என்று சீன பௌத்த துறவி யான யுவான் சுவாங் (Hieun Tsang) கூறுவார். தெலுங்கு மொழி மிகவும் இனிமையான மொழியாகப் பலரால் கருதப் படுகிறது. தெலுங்கில் அனைத்துச் சொற்களும் இத்தாலிய மொழியைப் போல் உயிரெழுத்துடன் முடிவடைகின்றன. எனவே தான் இம்மொழியின் இனிமையைக் கருதி ஆங்கி லேயர்கள் இதை கிழக்கின் இத்தாலிய மொழி (Italian of the East) என அழைத்தனர். தெலுங்கு மொழியின் வினையடிகள் பற்றிப் பேராசிரியர் பி.எச். கிருட்டிணமூர்த்தி ஆராய்ந்துள் ளார். தெலுங்கில் ஒருமையில், 'ஆண்பால்' என்றும், 'ஆண் பால் அல்லாதன' என்றும் பிரிவு உள்ளது. திணை, பால் பாகு பாட்டில் தெலுங்கு தொன்மையானது' என்பார் டாக்டர் பி.என். சுப்பிரமணியன்.

கோண்டி மொழி (Gondi Language):

இம்மொழி பேசும் மக்கள் கோண்டுவனம் என்று அழைக்கப் படும் நடு இந்தியாவின் காடுகளில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். கோண்டி மொழி பேசும் மக்கள் தங்களைக் கோயிதோர் என்று அழைக்கின்றனர். சுமார் 3 மில்லியன் மக் கள் இம்மொழியினைப் பேசுகின்றனர். பேராசிரியர் ஆபிர காம் லிண்ட் (Abraham A Lind), ஏ.என். மிட்சல் (A.N. Mitchell) ஆகியோர் கோண்டி மொழி பற்றி ஆய்வு செய்துள்ளனர். பேராசிரியர் சி.ஜி. செனிவிக்ஸ் டிரென்ச் (C.G. Chenegvix Trench) புனித வில்லியம்சன் ஹென்றி டிரம்மண்டு (William-son Rev. Henry Drummond) ஆகியோர் கோண்டி மொழிக்கு இலக்கண நூல்களை எழுதி உள்ளனர். கோயிதோர் மக் களது வாழ்வியல் பற்றிய தகவல்களை வங்காள மக்களின் வரலாறு (Ethnology of Bengal) என்ற நூலிலும், மையப் பிராந்திய அரசிதழ்களிலும் (Gazetteer of the Central Prov-inces) விரிவாக மேலதிக விளக்கங்களைக் காணலாம்.

> ***"இது கோண்ட் மக்களின் மொழியாக இருந்தாலும் மிகவும் அழிந்து வரும் மொழிகளில் ஒன்றாக காணப்படுகிறது. கோண்ட் மக்களில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே இந்த மொழியைப் பேசுகிறார்கள்."***

கோண்டி என்பது பல பேச்சு வழக்குகளைக் கொண்ட ஒரு பேச்சு வழக்கு மொழியாகும். முக்கியமாக இந்திய மாநிலங் களான மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், ஆந் திரப் பிரதேசம், தெலுங்கானா போன்ற மாநிலங்களிலுள்ள சிறுபான்மையினரால் பேசப்படும் ஒரு பேச்சு வழக்கு மொழி யாக பார்க்கப்பட்டது. இது கோண்ட் மக்களின் மொழியாக இருந்தாலும் மிகவும் அழிந்து வரும் மொழிகளில் ஒன்றாக காணப்படுகிறது. கோண்ட் மக்களில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே இந்த மொழியைப் பேசுகிறார்கள். இம்மொழியில் வளமான நாட்டுப்புற இலக்கியங்கள் உள்ளதாக அறியப் படுகிறது. திருமணப்பாடல்கள் நாடோடிக் கதைகள் என் பனவே அவையாகும். கோண்டி மக்கள் தெலுங்கு மக்க ளுடன் இனரீதியான தொடர்புகள் உடையவர்கள்.

கோண்டா மொழி (Gonda Language):


ஆந்திரப் பிரதேசத்தின் எல்லைப் பகுதிகளில் கோண்டா மொழி பேசப்படுகிறது. ஏறத்தாழ பதின்மூவாயிரம் ஆயிரம் மக்கள் கோண்டா மொழி பேசுகின்றனர். உசுமானியாப் பல் கலைக்கழகப் பேராசிரியர் பி.எச். கிருஷ்ணமூர்த்தி கோண்டா மொழியின் இலக்கண அமைப்பைப் பற்றிப் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். 'கோண்டா மொழி' என்ற தலைப்பில் இதன் இலக்கணத்தையும், சொல்லமைப் பினையும் ஆராய்ந்து பேராசிரியர் எஸ். பட்டாச்சார்யா நூல் எழுதி உள்ளார். இங்கிலாந்து நாட்டைச் சார்ந்தவரான பேராசிரியர் தேமஸ் பரோ (Thomas Burrow) இவரது திரா விடமொழிகளின் சொற்பிறப்பியல் அகராதி (Dravidian Ety-mological Dictionary) என்ற நூல் திராவிட மொழிகளுக்கு இடையேயான ஒத்த சொற்களையும், ஒலி ஒற்றுமைகளையும் தொகுத்து, அவற்றின் மூல மொழி குறித்த ஆய்வுகளுக்கு அடிப்படையை அமைத்த முக்கியமான ஆய்வாகக் கருதப் படுகிறது.

குவி மொழி (Kuvi Language):

குவி மொழிக்கு கோந்த் என்னும் பெயருமுண்டு. குவி மொழி பேசும் மக்கள் கோண்டு வனக்காடுகளிலும், ஒரிசாவிலுள்ள சில குன்றுகளிலும் வாழ்கின்றனர். குவி மொழி பேசுவோர் கோண்டர்கள், கந்தர்கள், கூ (ksus) என்று அழைக்கப்படு கின்றனர். ஏறத்தாழ இரண்டு இட்சம் பேர் குவி மொழி பேசு கின்றனர். குவி மொழிக்கென்று வரி வடிவம் இல்லை. எழுதப் பட்ட இலக்கியங்களும் இல்லை. குவி மொழி பேசும் மக் களிடம் குழந்தைகளைத் திருடி வந்து தெய்வங்களுக்குப் பலி தரும் வழக்கம் முன்னர் இருந்ததாக கூறப்படுகிறது. (நவீன சூழலில் குவி மொழி பேசும் மக்களுக்கும் இதற்கும் நேரடி மற்றும் திட்டவட்டமான தொடர்பு இருப்பதை உறுதிப் படுத்துவது கடினம்.)

குயி மொழி (Language):

ஒரிசா மாநிலத்தில் உள்ள கோராபுத் மாவட்டப் பகுதிகளில் குயி மொழி பேசப்படுகிறது. ஏறத்தாழ ஒன்பது இலட்சம் பேர் குயி மொழி பேசுகின்றனர். குயி மொழியின் இலக்கணத்தைப் பேராசிரியர் டபிள்யூ. டபிள்யூ. வின்ஃபீல்டு (W.W. Winfield) எழுதியுள்ளார். பேராசிரியர் பெரிரா (J.E. Pereira) ஓர் இலக் கண நூல் எழுதியுள்ளார். தோமஸ் பரோ (Thomas Burrow) பட்டாச்சார்யா இருவரும் குயிமொழி பற்றி ஆய்வு செய்து



கட்டுரைகள் எழுதி உள்ளனர்.

கொலாமி மொழி (Kolami Language):

மத்தியப் பிரதேசத்தில் கொலாமி மொழி பேசப்படுகிறது. ஏறத்தாழ ஐம்பது ஆயிரம் பேர் கொலாமி மொழி பேசுகின் றனர். பேராசிரியர் சேது மாதவராவ் 1950-இல் கொலாமி மொழி இலக்கணம் பற்றி நூல் எழுதி வெளியிட்டார். பேராசிரி யர் மர்ரே பான்சன் எமனோ (Murray Barnson Emeneau) 1955-இல் கொலாமி மொழி பற்றி ஆய்வுக் கட்டுரை எழுதி னார். வில்லியம் பிரைட் (William Bright) கொலாமி மொழி பற்றி ஆய்வு செய்துள்ளார். பேராசிரியர் தோமஸ் பரோவும் (Thomas Burrow), பட்டாச்சார்யாவும் கொலாமி மொழியில் பல ஆய்வுகளைச் செய்துள்ளனர். தெலுங்கு மற்றும் கோண்டி ஆகிய மொழிகளால் நன்கு பாதிப்பிற்குள்ளாகிய மொழி யாகும். இது ஒரு பழங்குடி திராவிட மொழியாகும். கொலாமி மொழி தெலுங்கு மற்றும் கன்னடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

நாய்க்கி மொழி (Naiki Language):

நாய்க்கி மொழி ஒரு நடுத்திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழியாகும். இம்மொழி ஆந்திரப் பிரதேசம் மற்றும் மகராஷ்ரா மாநிலங்களில் பேசப்படுகிறது. ஏறக்குறைய 10,000 பேர் இம்மொழியைப் பேசுகின்றனர் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. கொலாமி, பர்ஜி, கட்பா போன்ற மொழிகளுடன் நாய்க்கி மொழிக்கு மிக நெருங்கிய தொடர்புண்டு.

nageswary@thaiveedu.com





நாட்டார் இலக்கியத்தின் தொன்மையும் ஒன்மையும்

விவேகவெளி தமிழ்ச்செல்வன்

அறிமுகம் :

கிராமிய மக்களின் கலைகள், கலாசாரம், பழக்க வழக்கம், பண்பாடு, மரபுகள், நம்பிக்கைகள், சவால்கள், எதிர்நீச்சல்கள், தொழில் முயற்சிகள் முதலான இன்னோரன்ன பல்வேறு வாழ்வியல் கூறுகளைத் தம்மகத்தே கொண்டு மிளிர்வது நாட்டுப்புற இயலாகும். இத்தகைய நாட்டுப்புற இயலிலே பாடல்கள், பழமொழிகள், கதைகள், விடுகதைகள் ஆகிய நான்கு கூறுகள் இடம்பெறுவதைக் காணலாம். இந்த நான்கு அம்சங்களையும் ஒருங்கே பெற்று விளங்கும் நாட்டுப்புற இயலையே நாட்டார் இலக்கியம் எனவும் கூறிவருகின்றோம்.

இலக்கியத்தில் பெறும் இடம்:

இலக்கியம் என்பது 'லஷியம்' என்னும் இலத்தின் சொல்லில் இருந்து தோன்றியது. 'லஷியம்' என்றால் இலட்சியம் என்பது பொருளாகின்றது. ஆக, இலக்கியம் என்பது இலட்சியம் உடையது. இலக்கியம் மக்கள் வாழ்வியலை கோலமுடனும் நிதர்சனத்தோடும் எடுத்துக் காட்டும். அதனாலேயே இதனை 'காலக் கண்ணாடி' என்பர். இது இரண்டு வகைப்படும். ஒன்று எழுதா இலக்கியம். மற்றையது ஏட்டு இலக்கியம். எழுதா இலக்கியமே கிராமிய இலக்கியம். அத்திவாரம் இல்லாமல் கட்டடம் இல்லையே! அது போலவே எழுதா இலக்கியம் இல்லாமல் ஏட்டு இலக்கியம் எதுவுமே இல்லை. இதிலிருந்து இலக்கியம் என்ற பரந்து விரிந்த இலட்சிய விரிப்பில் எழுதா இலக்கியமான நாட்டார் இலக்கியம் பெறும் உன்னத இடமும் தனித்துவமும் அதன் மகத்துவமும் உள்ளங்கை நெல்லிக்கனி போல நன்கு தெளிவாகின்றது.

தோற்றம்:

நாட்டார் இலக்கியமும் அதன் பிரிவுகளும் யாரால் தோற்றுவிக்கப்பட்டன? எப்போது தோன்றின? ஆகிய வினாக்களுக்கு இலகுவில் விடை கூறிவிட முடியாது. அதாவது இன்னாரால் இன்னது தோற்றுவிக்கப்பட்டது என்று பெயர் சுட்டியோ இன்ன காலத்தில் தான் தோன்றியது என்றோ குறிப்பிட முடியாது. கிராமத்தில் வாழும் மக்களால் தோற்றுவிக்கப்பட்டவை என்று பொதுவான கண்ணோட்டத்தில் மட்டுமே கூற முடியும். இவற்றின் தோற்றமோ ஏட்டு இலக்கியங்களுக்கும் முந்தியதாகவே அமைவது கண்கூடு.

ஏட்டு இலக்கியங்களுக்கும் எவ்வினத்துப் பண்பாட்டுக்கும் நாட்டார் இலக்கியங்களே அடிப்படைகளாகவும் உன்னத மூலங்களாகவும் விளங்குகின்றமை ஆய்வுக் கண்ணோட்டம் கொண்டு அறியக்கூடியதாகும். நாட்டார் இலக்கியமானது யாரால் எப்போது தோற்றுவிக்கப்பட்டது என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. 'ஏற்றப் பாட்டின் முன் தோற்று நின்றானாம் கம்பன் என்னும் கொம்பன் எனும் சொலவடை' இன்றும் பலவிடங்களில் வழக்கில் உள்ளது. 'உழவுப் பாட்டிலும் நெஞ்சை நான் பறி கொடுத்தேன்' என்பார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். இதிலிருந்து கவிச் சக்கரவர்த்தியான - கல்விச் சக்கரவர்த்தியான கம்பர் ஏர் எழுபது, கம்பராமாயணம் முதலிய நூல்களைப் படைப்பதற்கு முதலில் நாட்டார் இலக்கியத்தின் நயங்களைப் பருகி வியந்து நின்றமையை அறிய முடிகின்றது.

உலக இலக்கியங்களிலே ஒப்பற்ற காப்பியங்களாகக் கொள்ளப்படும் இலியட், ஒடிசி, இராமாயணம், மகாபாரதம் போன்ற இலக்கியங்கள் அனைத்தும் ஒரு காலத்தில் நாட்டு மக்களிடையே புகழ்பெற்று விளங்கிய கதைப்பாடல்களில் இருந்தே கருவாகி உருவானவை என்பது வரலாறு அறிந்ததோர் உண்மையாகும். இதிலிருந்து நாட்டார் இலக்கியமானது மிகவும் தொன்மையானது என்பது தெளிவாகின்றது. இவ்விலக்கியம் மிகவும் பழமை வாய்ந்தது என்று சுருக்கி ஒரு வரியில் மட்டும் நாம் கூறிவிட்டுச் செல்ல முடியாது. இதில் அடங்கும் நான்கு பெரும் பிரிவுகளும் சீர்தூக்கிப் பார்க்கப்படவும் பாராட்டப்படவும் வேண்டும். அந்தவகையில் இதில்

அடங்கும் நாட்டார் பாடல்கள் தொன்மையானவை. இதே போன்று நாட்டார் பழமொழிகள் தொன்மையானவை. அடுத்த இரு பிரிவுகளான நாட்டார் கதைகள், நாட்டார் விடுகதைகள் ஆகியவைகளும் மிகப் பழமையானவைகளே.

நாட்டார் பாடல்களை மையப்படுத்திய ஆய்வுகளில் ஈடுபட முயற்சிக்கும் பல்கலைக்கழக மாணவர்கள், மேற்பட்டப்படிப் புக்குரிய மாணவர்கள், கலாநிதிப் பட்டம் முதலியவற்றை அவாவி நிற்கும் புலமையினர்கள் முதலானோர் நாட்டுப்புற இயலின் இந்த நான்கு பிரிவுகள் மீதும் அதிகபட்ச கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வோர் அலகின் பல்வேறுபட்ட சிறப் பம்சங்களையும் கூர்ந்து நோக்கி ஆய்ந்து அறிந்து அறிக்கை களாக அருமையான கட்டுரைகளாக ஊருக்கும் உலகுக்கும் வெளிப்படுத்த வேண்டும். இதுசார் ஆய்வுகள் பல்கலைக் கழக மட்டங்களில் அண்மைக் காலங்களில் சற்று அதிகமாக இடம் பெற்று வருகின்றமை பெரிதும் வரவேற்கத்தக்கதும் மகிழ்ச்சியைத் தரக்கூடியதுமான விடயமாகும்.

ஒண்மை:

மிக மிகத் தொன்மையான இலக்கியங்களாக விளங்கிவரும் நாட்டுப்புற இலக்கியங்களான பாடல்கள், பழமொழிகள், கதைகள், விடுகதைகள் ஆகியவை தொன்மை மிக்க தமிழுக்கு மேலும் அணிசெய்பவைகளாகத் திகழ்ந்து வரு கின்றமை கண்கூடு. தமிழ்மொழி பன்நெடுங்கால தொன்மை மிக்கது; ஒண்மை மிக்கது. அத்தகைய நம் செம்மொழியிலே - தொல்லியல் தமிழ்பேசும் சமூகங்களிலே தோற்றம் பெற்ற நாட்டுப்புற இலக்கியங்களும் தொன்மையானவை; ஒண்மை யானவை.

'ஒண்மை' என்ற ஓர் பதத்தினுள்ளே ஒளி / பிரகாசம், இயற்கை அழகு, நன்மை, மேன்மை, நல்லறிவு, மிகுதி, ஒழுங்கு ஆகிய பல்வேறு அம்சங்கள் பொதிந்து கிடக் கின்றன. நாட்டுப் புற இயலின் மேற்சொன்ன நான்கு இலக் கியப் பெருங்கூறுகளையும் இந்த 'ஒண்மை' சார்ந்து ஆரா யுங்கால் உண்மை தெரிய வரும். அதாவது தொன்மை மிக்க இவ்விலக்கியங்கள் ஒண்மை மிக்கவை என்பதும் நிருபணமா கின்றது. நாட்டார் பாடல்கள், நாட்டார் பழமொழிகள், நாட்டார் கதைகள், நாட்டார் விடுகதைகள் அனைத்திலும் பயன்படுத் தப்பட்டுள்ள 'மொழிநடை' முதலில் கவனிக்கத்தக்கது. கிராமிய மக்களின் உள்ளங்களில் இருந்து இயல்பாகவே தோற்றம் பெற்ற இலகுவான இனிமையான - எல்லோருக்கும் விளங்கக்கூடிய மொழிநடையில் எழுதப்பெற்ற உன்னதமான கருவூலங்களே இந்த நாட்டார் இலக்கியங்கள். இவ்விலக்கி யங்களின் மொழிநடையில் சிறந்த சொல்லாட்சிகள், கருத் தாழம் மிக்க இலகுவான அணிப் பிரயோகங்கள், கவனத்தை ஈர்க்கக் கூடிய எடுத்துரைப்பு முறைகள், நகைச்சுவை அம் சங்கள், நவரச உணர்வுகள், உன்னதமான உத்தி முறைகள், உணர்வு வெளிப்பாடுகள் பிரதான இடங்களைப் பெறு கின்றன.

தற்காலத்தில் கதை சொல்வோர், கதை கேட்போர் அருகிச் செல்வதையே காண்கிறோம். நாட்டார் கதைகளுக்கோ எக்கால கட்டத்திலும் தனியிடம் உண்டு. சிறந்த கருப் பொருள், கருத்தாழம், தொய்வடையாத கதையோட்டம், நகைச்சுவை அம்சங்கள், சிறந்த பாத்திரப் படைப்புகள் ஆகி யவற்றை நாட்டார் கதைகளிலே காணலாம். மாணவர்க ளுக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் பாடப்பரப்பில் ஆங்காங்கே இத்தகைய நாட்டார் கதைகளும் நாட்டார் பாடல்களும் பழமொழிகளும் விடுகதைகளும் இடம்பெற்றி ருக்கின்றமை பாராட்டத்தக்க விடயமாகும். இதே போன்று நாட்டார் இலக்கியங்களில் இயற்கை அழகும் நன்மை அல்லது மேன்மை பயக்கக் கூடிய விடயங்களும் ஒழுங்கும் அல்லது ஒழுக்க விழுமியப் பாரம்பரியங்களும் நல்லறி வூட்டும் உபதேசங்களும் மிகுந்திருப்பதை யாருமே மறக்கவோ மறுக்கவோ முடியாது. இவை யாவற்றாலும் தொன்மை மிக்க நாட்டுப்புற இலக்கியங்கள் ஒண்மை மிக்க வைகளாகவும் விளங்கி வருகின்றமை துலாம்பரமாகின்றது.

'பழமொழி பொய்ச்சா பழம் சோறு சுடும்' என்ற நமது வழிவழி வந்த சிந்தனை ஒருபோதும் பொய்த்ததில்லை. ஆம்! பழமொ ழிகள் ஒரு போதும் பொய்த்ததில்லை. அவை பண்பாட்டின் இதயதானம் எனலாம். எண்ணில்லாப் பழமொழிகளை நாம் பெற்றிருக்கிறோம். அத்தனை பழமொழிகளிலும் எத்தனை எத்தனையோ வண்ணங்களைக் காண்கிறோமல்லவா!

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்', 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்', 'ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்', 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?', 'எலி வளையானாலும் தனி வளை வேண்டும்'... இப்படி ஏராளம் பழ மொழிகள் மொழியை அழகுபடுத்தி நிற்கின்றன. சொல்லணி களில் அடங்கும் அணிகளில் எதுகை, மோனை ஆகிய இரு அணிகளை அநேகமான பழமொழிகளில் காணமுடிகிறது. கருத்தாழத்தை, வாழ்வியல் நிதர்சனத்தை, சொல்லாட்சிச் சிறப்பை, பல்வேறு நயங்களை பொதுவாக எல்லாப் பழமொ ழிகளிலுமே கண்ணாரக் காணமுடிகிறது. இத்தகைய தொன்மை, ஒண்மை, இலக்கிய முக்கியத்துவம், கலாரசனை, நவரசப்பாங்கு, நகைச்சுவை அம்சங்கள், நிதர்சனப் போக்குகள், தூரதரிசனம், சிறந்த சமூகப் பூட்கைகள் (கொள் கைகள்) நாட்டார் இலக்கியங்களில் பொதிந்திருப்ப தனாலேயே இவை பாடசாலை மட்டங்களிலும் கல்விக் கல்லூரி மட்டங்களிலும் பல்கலைக்கழக மட்டங்களிலும் பாட அலகுகளில் ஒன்றாகவும் பல்கலைக்கழக மட்டங்களில் ஆய்வுப் பொருளாகவும் செல்வாக்குப் பெற்றுள்ளன.

நிறைவுரை:

வாழ்வியல் அற்புதமானது. நாட்டார் இலக்கியங்களோ அத்தகைய வாழ்வியலுக்கு வண்ணமயமானது. நாட்டார் இலக்கியங்களின்றி ஏட்டு இலக்கியங்கள் எதுவுமே கிடையாது. மனிதரின் பிறப்பு முதல் இறப்பு வரையான நிகழ் வுகளைக் கருப்பொருளாகக் கொண்டு வாழ்வையே வாசமாக்கி நிற்கும் நாட்டுப்புற இலக்கியங்களுக்கு நிகரேதுமே கிடையாது என்றால் இது மிகையாகாது. தொன்மை மிக்க ஒண்மை மிக்க இவ்விலங்கியங்கள் பற்றிய பார்வைகளும் படிப்புகளும் தேடல்களும் ஆய்வு முயற்சி களும் மேன்மேலும் பல்கிப் பெருகுவதாக.



thamilendran@thaiveedu.com

மலையக மக்களின் பாரம்பரியப் பழக்கவழக்கங்களும் சூழற் பாதுகாப்பும்

– அருள்காக்கி

இலங்கையின் மலையகப் பகுதிகளில் வாழும் மலையகத் தமிழ் மக்களோடு அவர்தம் கலாசார, சமூக, மற்றும் ஆன்மீக அம்சங்கள் பின்னிப் பிணைந்துள்ளன. இந்தப் பழக்கவழக்கங்கள் இயற்கையுடனான அவர்களின் ஆழமான தொடர்பைப் பிரதிபலிக்கின்றன, மேலும் சூழல் பாதுகாப்பில் இவை மறைமுகமாகவும் நேரடியாகவும் பங்களிக்கின்றன. மலையக மக்களின் முக்கிய பாரம்பரியப் பழக்கவழக்கங்களையும், அவை சூழல் பாதுகாப்புடன் எவ்வாறு தொடர்புடையவை என்பதையும் சுருக்கமாக பார்க்கலாம்.

மதம் மற்றும் வழிபாடு:

கோயில் வழிபாடு மற்றும் திருவிழாக்கள் என்பன மலையக மக்களின் அன்றாட வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தனவாகக் காணப்படுகின்றன. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழகத்திலிருந்து இடம்பெயர்ந்த காலம் தொட்டு மலையக மக்கள் தமக்கான பிரத்தியேகமான வழிபாட்டு முறைகளையும் மத நடைமுறைகளையும் பின்பற்றுகின்றனர். மலையக மக்கள் மாரியம்மன், காளி, மற்றும் முருகன் போன்ற தெய்வங்களை வணங்குவதற்கு சிறிய கோயில்களைப் பெருந்தோட்டப் பகுதிகளில் அமைத்துள்ளனர். குறிப்பாக கிராமிய வழிபாட்டுடன் தொடர்புடைய சிறுதெய்வ வழிபாட்டுக்கான அம்சங்கள் இயற்கையுடன் பின்னிப்பிணைந்தனவாகக் காணப்படுகின்றன. இந்த வழிபாடுகளில் இயற்கையுடன் தொடர்புடைய பல பழக்கங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது (வேப்ப மரம், ஆலமரம்) மற்றும் நீர் நிலைகளைப் புனிதமாகக் கருதுதல் என்பவற்றைக் கூறலாம். குறிப்பாக வருடத்தின் ஆரம்பத்தின் போதும் மாதத் தொடக்கத்தின் போதும் தேயிலை மலைகளில் காணப்படும் சிறுதெய்வ வணக்க ஸ்தலங்களில் பூஜை செய்வதைக் குறிப்பிடலாம். அதேபோல் கவ்வாது சாமி கும்பிடுதல் என்ற பண்பாடும் காணப்படுகின்றது. இது தேயிலை செடிகளைக் கவாத்து செய்யும் முன் இயற்கையை வழிபடுவது, அதேபோன்று இயற்கையிலிருந்து பாதுகாப்பு பெறுவது போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. நீர் நிலைகளைப் பாதுகாப்பதையும் அதே போன்று நீர் நிலைகளைப் புனிதமாகக் கருதுவதையும் குறிப்பிட இங்கு முடியும்.



மலையக மக்களின் பண்டிகைகளை எடுத்துக் கொண்டால் அவையும் இயற்கையைப் பாடும் விதமாகவும் இயற்கைக்கு நன்றி சொல்லும் விதமாகவும் அமைந்திருப்பதைக் காணமுடியும். எடுத்துக்காட்டாக தைப்பொங்கல் பண்டிகையை எடுத்துக்கொண்டால் அது சூரியனுக்கும், சாத்தியமான இயற்கைக்கும் நன்றி செலுத்தும் முகமான ஒரு பண்டிகை ஆகும். அதேபோல் ஆடித் திருவிழா பெருந்தோட்டங்களில் இன்றும் விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது. இது வறட்சிக் காலமான செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் பெருந்தோட்டங்களில் கொண்டாடப்படும் ஒரு திருவிழாவாகும். இது மழை வேண்டி இயற்கையை வழிபடும் ஒரு நடைமுறையாகும். அதேபோல் பயிர்ச்செய்கையை மையப்படுத்தி சாத்தியமான காலநிலையை வேண்டி பல வழிபாடுகளும் மலையகப் பகுதிகளில் பின்பற்றப்படுகின்றன. இன்று சர்வதேச பேசு பொருளாகியுள்ள புவி வெப்பமாதல், காலநிலை மாற்றம், வறட்சி போன்ற காலநிலைப் பாதிப்புகளைத் தணிப்பதற்கு, பாரம்பரிய அறிவினைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற ஒரு சூழலை உருவாக்குவதைக் குறித்து நிற்கின்றது. இலங்கை மட்டுமன்றி பல்வேறு நாடுகளில் வாழும் பழங்குடியின மக்களின் பாரம்பரிய சூழல் சார்ந்த அறிவை, காலநிலை மாற்ற பாதிப்புகளைத் தணிப்பதற்கும் காலநிலைத் தாக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் இதனை எவ்வாறு பயன்படுத்தலாம் போன்ற உரையாடல்கள் சர்வதேச மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் மலையக மக்களின் பாரம்பரிய சூழல்சார் அறிவினை நாம் இவ்விடத்தில் காலநிலை பாதிப்புகளுடன் தொடர்புபடுத்தி ஆய்வு செய்ய முடியும்.

நாட்டார் கலைகள்:

மலையக மக்கள் தமக்கே உரிய பிரத்தியேகமான நாட்டார் வழக்குகளைக் கொண்டவர்கள். அந்த வகையில் மலையக மக்களின் நாட்டார் பாடல்களும் நாட்டார் வழக்கியலும் பிரதானமாக இயற்கையை மையமாகக் கொண்ட கருப்பொருள்களை உள்ளடக்கியவை. மலை, காடுகள், விவசாயம் போன்ற பாடுபொருள்களை மையப்படுத்தி மலையக மக்களின் நாட்டார் வழக்கு காணப்படுகின்றது. பொது வாகவே நாட்டார் வழக்கு என்பது இயற்கையைப் போற்றிப் பாடுவதாகவும் மனித வாழ்க்கையையும் இயற்கையையும் இணைப்பதாகவும் காணப்படும். அந்த வகையில் மலையக மக்களின் நாட்டார் வழக்கிலும் சுற்றுச்சூழலை மையப்படுத்திய ஒரு வாழ்வியல் கோட்பாட்டை வலியுறுத்துவதாகக் காணப்படுகின்றது. கூத்து மற்றும் பறை இசை இவை இயற்கையுடனான தொடர்பைப் பிரதிபலிக்கும் கதைகளையும் பாடல்களையும் உள்ளடக்கியவை. எடுத்துக்காட்டாக, மலை, காடு, மற்றும் விவசாயம் பற்றிய பாடல்கள் இயற்கையை மையமாகக் கொண்டவை. தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும்போது பாடப்படும் பாடல்கள், இயற்கையின் அழகையும் அதன் முக்கியத்துவத்தையும் போற்றுகின்றன.

விவசாயம் மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை:

மலையக மக்கள் இயற்கை விவசாயம் சார்ந்த பயிர்ச் செய்கை முறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை போலவே ஏனைய விவசாயப் பயிர்ச்செய்கைகளிலும் மலையக மக்கள் பாரம்பரிய அறிவினைப் பயன்படுத்துகிறார்கள். இது சூழலுக்கு உகந்த விவசாய நடைமுறை ஆகும். சமீப காலத்தில் அதிகளவான பயன்பாட்டுக்கு வந்த இரசாயன பாவனையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதான ஒரு பாரம்பரிய இயற்கை விவசாய முறையை மலையக மக்கள் இன்றும் பின்பற்றுகின்றனர். பெருந்தோட்டங்களில் இலகுவாகக் கிடைக்கும் மாட்டு சாணம், இயற்கை பசளைகள் என்பவற்றை மட்டுமே பயன்படுத்தி வீட்டுத்தோட்டங்களை அவர்கள் பராமரிக்கின்றார்கள். இது சூழலுக்கு உகந்த ஒரு முறையாகவும் இரசாயனப் பாவனையை மட்டுப்படுத்தும் ஒரு மாற்று நடைமுறையாகவும் காணப்படுகின்றது. வர்த்தக ரீதியான உணவுப் பயிர்ச் செய்கை இன்று எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சவால் இந்த இரசாயனப் பாவனையாகும். மண்ணின் இயற்கைத் தன்மை அற்றுப்போதல், நீர் நிலைகள் அசுத்தமடைதல் மற்றும் பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கு காரணமாகியுள்ள இந்த இரசாயன உரப்பாவனை இன்று பாரிய ஒரு பிரச்சினையாக மாறி உள்ளது. அதிலிருந்து விடுபடுவதற்கும் இயற்கை விவசாயத்தை மேம்படுத்துவதற்கும் மலையக மக்களின் பாரம்பரிய விவசாய அறிவானது ஒரு தீர்வாகக் காணப்படுகின்றது.

பெருந்தோட்டப் பிரதேசங்களில் வீட்டுத் தோட்டங்களை அமைக்கும்போது பல் பயிரிடல் நடைமுறை பின்பற்றப்படுகின்றது. குறிப்பாக வீட்டுத் தோட்டங்களினை தேயிலை பெருந்தோட்டங்களை மையப்படுத்தி அமைக்கும்போது காய்கறிகள், மூலிகைகள் மற்றும் அன்றாட மனிதப் பாவனைக்குத் தேவையான பயிர்களை ஒரே இடத்தில் பயிரிடுவதால் உயிரியல் பன்முகத்தன்மை பேணப்படுகின்றது. இயற்கையான முறையில் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் பூச்சிகளையும் விலங்குகளையும் கட்டுப்படுத்துவதற்கு இயற்கையிலேயே காணக்கூடிய சில மூலிகைகளையும் தாவரங்களையும் பயன்படுத்துவதைக் கூறலாம். இது சூழல் சமநிலையைப் பேணுவதோடு இயற்கைச் சூழலின் உயிரியல் பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதாகவும் காணப்படுகின்றது. மேலும் மரபு ரீதியான விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுவதால் சூழலுக்குப் பாதிப்பான பதார்த்தங்கள் சூழலில் இருந்து அப்புறப்படுத்தப்படுவதற்குக் காரணமாக அமைகின்றது. பெரும்பாலும் பெருந்தோட்டப் பகுதிகளில் அரசாங்கத்தின் கழிவு முகாமைத்துவ நடைமுறை செயற்படுத்தப்படாத காரணத்தினால் மக்கள் தாமாகவே கழிவு முகாமைத்துவத்தை விவசாயத்துக்கு பயன்படுத்தக்கூடிய அறிவினையும் அனுபவங்களையும் கொண்டிருக்கின்றார்கள். இது நிலைபேறான சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஓர் அவசியமான நடைமுறை ஆகும். மலையக மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை எளிமையானது மற்றும் இயற்கை வளங்களை குறைவாகப் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது. எடுத்துக்காட்டாக, உணவு தயாரிப்பில் உள்ளூர் மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களைப் பயன்படுத்துவது கழிவுகளைக் குறைக்கிறது.

உணவு மற்றும் வாழ்க்கை முறை:

மலையக மக்களின் உணவு மரபு இயற்கையை அடிப்படையாகக் கொண்டது. உள்ளூர் பொருட்களைப் பயன்படுத்தி உணவு தயாரிப்பது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக உள்ளது. அதேபோல் மலையக மக்கள் சூழலில் இருந்து கிடைக்கும் உணவுகளைப் பிரதான உணவுகளாக அன்றாடம் பயன்படுத்துகின்றனர். காய்கறிகள், மூலிகைகள் அதேபோன்று தேநீர் போன்றவை இயற்கையில் இருந்து இலகுவாகக் கிடைக்கக்கூடிய, மற்றும் குறைவான பொருட்செலவில்

நுகரக்கூடிய விடயங்கள் ஆகும். எனவே மலையக மக்களின் வாழ்க்கை முறையானது சூழலை மையப்படுத்தியதாகவும் தமது அன்றாட வாழ்வுக்குத் தேவையான சூழலை நிலைபேறாகப் பயன்படுத்துவதாகவும் காணப்படுகின்றது. தமது அன்றாட தேவைகள் சூழலில் இருந்து பூர்த்தி செய்யப்படுவதால் அந்த சூழலைப் பராமரிக்கும், அதேபோன்று பாதுகாக்கும் நடைமுறைகளையும் மலையக மக்கள் தொடர்ச்சியாகப் பின்பற்றுகின்றனர். மேலும் பாரம்பரிய மூலிகை மருத்துவ முறைகள், இயற்கையில் கிடைக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தி நோய்களைக் குணப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.



ஒன்றிணைந்த வாழ்க்கை முறை:

மலையக மக்களின் வாழ்விடங்கள் ஓர் ஒன்றிணைந்த வாழ்க்கைக்கான சாத்தியப்பாடுகளைக் கொண்டுள்ளது தோட்டங்களை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள தோட்டப் பிரிவுகள் என்பன இம்மக்களின் ஒருங்கிணைந்த வாழ்க்கைக்கான ஒரு வசதியளிப்பைச் செய்கின்றது. சமூக அபிவிருத்தியில் கூட்டுறவும் பரஸ்பர பங்களிப்பும் அவசியம் ஆகும். மலையக மக்களின் வாழ்க்கை நடைமுறைகளில் இவற்றை நேர்மறையாகப் பின்பற்றுவதன் மூலம் சமூக அபிவிருத்தியை நோக்கி நகரக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. இதற்கு அடிப்படையாக சுற்றுச்சூழல் விளங்குகின்றது. அவர்கள் வாழும் பிரதேசம் அங்கு காணப்படக்கூடிய இயற்கை வளங்கள், நீர், நிலம் என்பவை மலையக சமூகத்தின் ஒருங்கிணைந்த அபிவிருத்திக்கு அடித்தளமாகக் காணப்படுகின்றது. குறைவான பொருட்செலவில் இயற்கையில் காணப்படக்கூடிய வளங்களை நுகர்வதற்கும் அதனைப் பேணுவதற்கும் தேவையான அனுபவமும் நம் மக்களுக்கு இருப்பது சிறப்பம்சமாகும். நகர்ப்புறங்களில் காணப்படக்கூடிய நுகர்வுக் கலாசாரம் அதிகரித்த வாழ்க்கை செலவினங்கள் என்பவற்றை ஓரளவு தணிக்கக் கூடிய வகையில் பெருந்தோட்டங்களில் இயற்கை வளங்கள் காணப்படுகின்றன. அவற்றை நிலைபேறான முறையில் பயன்படுத்துவது எதிர்காலத்துக்கு அவசியமான ஒன்றாகும்.

சவால்கள் மற்றும் நவீன மாற்றங்கள்:

சமகாலத்தில் மலையக பெருந்தோட்டப் பிரதேசங்கள் பலவற்றில் சுற்றுச்சூழல்சார் சவால்கள் எழுந்துள்ளன. இவை சமூக ரீதியான சவால்களாகவும் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் வகையிலும் அடையாளம் காணப்படுகின்றன. குறிப்பாக இன்று தேயிலைப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தக்கூடிய இரசாயன உரப்பாவனை, இரசாயன பூச்சி கொல்லிகளின் பாவனை என்பன ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளது. அதேபோல் விவசாயப் பயிர்ச்செய்கைக்கு இன்று இரசாயனம் சார்ந்த பாவனைகள் அதிகரித்துள்ளன. இவை சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் அதே சமயம் சுற்றுச்சூழலுக்கும் ஒரு பாரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இது உயிரியல் பன்முகத்தன்மையைப் பாதிக்கும் அதே வேளை சூழல் சமநிலைக்கு இந்த இரசாயன பாவனையானது ஒரு பாரிய சவாலாக விளங்குகின்றது.

நவீன மயமாக்கம் என்னும் பெயரில் பெருந்தோட்ட கம்பெனிகளால் நடைமுறைப்படுத்தப்படும் இவ்வாறான செயற்பாடுகள் பொதுச் சொத்தான சுற்றுச்சூழலைப் பாதிப்பதோடு அந்த சூழலில் தங்கி வாழக்கூடிய மக்களின் வாழ்வாதாரத்தையும் சுகாதாரத்தையும் நேரடியாகப் பாதிக்கின்றது. இந்நிலை தொடரும் பட்சத்தில் மலையகத்தில் காணப்படக்கூடிய இயற்கை வளங்கள், நீர் நிலைகள் மற்றும் நிலப் பிரதேசங்கள் என்பன பாவனைக்கும் ஒத்து வராத தன்மையை அடைவதோடு நாட்டின் சுற்றுச்சூழலுக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் பெருந்தோட்டங்களை அண்டிய பிரதேசங்களில் இடம்பெறும் காடழிப்பு நிலச்சரிவுக்கு பிரதான காரணமாகவும் அதேபோன்று நீர் நிலைகள் இல்லாமல் போவதற்கான ஒரு காரணமாகவும் அமைகின்றது. பல பெருந்தோட்டக் கம்பெனிகள் குத்தகைக்கு பெற்ற நிலங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதன் காரணமாகவும் அத்துமீறிய குடியேற்றங்கள் மற்றும் அபிவிருத்திகள் காரணமாகவும் மத்திய மலைநாட்டின் பல இயற்கை வளங்கள் இன்று அச்சுறுத்தலை எதிர்கொண்டு உள்ளன.

அதேபோல் இளைய தலைமுறையினருக்கு சூழல் பாதுகாப்பு தொடர்பான போதிய அறிவு இன்மை காரணமாகவும் சூழலை நிலைபேறாக பயன்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் குறைந்துபோய் உள்ளன. இன்று சர்வதேச ரீதியாக சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வுகளும் கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள நாடுகள், தமது பிரஜைகளுக்கு சுற்றுச்சூழல் தொடர்பான அறிவினை வழங்குவதை இன்று பிரதானமாகக் கொண்டுள்ளன. இலங்கையிலும் அவ்வாறான சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம். முக்கியமாக மக்களின் பாரம்பரிய அறிவினைப் பயன்படுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பை எவ்வாறு சாத்தியமாக்கலாம் என்பது தொடர்பாக ஆய்வுகள் பல இன்று முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறான முயற்சிகள் மலையகத்தை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இன்று இளந்தலைமுறையினர் நகர மையப்பட்ட வாழ்க்கையை விரும்புவதன் காரணமாகவும் நுகர்வுக் கலாசாரம் மற்றும் வர்த்தகமயமாக்கல் போன்ற காரணிகளுக்கு ஊடாகவும் மக்களின் பாரம்பரிய சுற்றுச்சூழல் தொடர்பான அறிவு பின்னடைவைச் சந்தித்துள்ளது. ஒரு தேசிய இனமாக மலையக சமூகமும் இவ்வாறான அச்சுறுத்தல்களை சமகாலத்தில் சந்திக்கின்றது. இவ்வாறான சமூக, சூழல் அச்சுறுத்தல்களில் இருந்து இந்த சமூகம் விடுபடுவதற்கு தேவையான பூர்வாங்க முயற்சிகள் முன் னெடுக்கப்பட வேண்டும்.

மலையக மக்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்கள் இயற்கையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவை மற்றும் அவை சூழல் பாதுகாப்புக்கும் பங்களிக்கின்றன. இயற்கையை வணங்குதல், நிலையான விவசாய முறைகள், மற்றும் மூலிகை மருத்துவம் ஆகியவை இவர்களின் சுற்றுச்சூழல் உணர்வை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும், நவீனமயமாக்கல் மற்றும் பொருளாதார அழுத்தங்கள் இந்தப் பாரம்பரியங்களை அச்சுறுத்துகின்றன. இந்த மரபுகளைப் பாதுகாப்பதற்கும், சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கும் கல்வி மற்றும் சமூக முயற்சிகள் தேவை.

Arulkarki@thaiveedu.com





மலையக மக்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்கள் இயற்கையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவை இயற்கையை வணங்குதல், நிலையான விவசாய முறைகள், மற்றும் மூலிகை மருத்துவம் ஆகியவை இவர்களின் சுற்றுச்சூழல் உணர்வை வெளிப்படுத்துகின்றன.



மதனின் நியாயப்படுத்தல்களை செவிமடுத்த நிலையில் ரதியானவள் தனது நிலைப்பாட்டையும் எடுத்துக் கூறுகிறாள். சாரங்கபாணியின் புதல்வரே! எனக்கு தெய்வமாக வந்தவனே, என்னை விட்டு நீ போனால் எனது நிலை என்னவாகும்? உன்னையே நம்பி வந்த என்னை விட்டு விட்டு நீ போனால் நிச்சயமாக நானும் இறந்திடுவேன். தேவர்களின் பாதிப்பு நிலையைத் தீர்ப்பேனென்று நீர் போனால் எனது நிலை என்னவாகும்? ஆளுமை பொருந்திய என் துணையாளனே என்னை விட்டு நீரும் போக வேண்டாம், என்று பலவாறெல்லாம் புலம்பி தன்நிலையை எடுத்துக் கூறினாள். பின்னர், உலகத்து மாந்தர் எல்லாம் பரமனின் அருளைப் பெற்று வாழ்கின்ற நிலையில், உனக்கு மட்டும் ஏன் வேண்டாத புத்தி. பரமனின் அருளை அறியாமல் சேதி வந்ததென்று சொல்லி வாதிக்க முனைவது சரியல்லவே! இடம், பொருள், ஏவல் அறிந்து சமயோசிதமாக நடப்பதே முறை. அதை தவிர்த்து உனது தீர்மானம் சிறந்தது என நினைத்து முடிவெடுப்பது அழகல்லவே! என் பதை உணர்ந்து, என் கணவா போகும் தீர்மானத்தில் இருந்து விலகுவதே பொருத்தமான முடிவாக இருக்கும், என்பதை ரதியானவள் தெளிவுறுத்துகிறாள்.

ரதியின் கோரிக்கைகளை செவிமடுத்த நிலையில் மதன் தனக்குள் ஏற்பட்ட கனவு அனுபவத்தை ஒரு கணம் மீட்டிப்பார்க்கின்றான். மதனும் ரதியும் திருமணம் முடித்த புதிதில் வேட்டையாடச் சென்ற நிலையில் நடந்த சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. அச் சந்தர்ப்பத்தை ஞாபகப்படுத்தும் வகையில் காமன் மாஸ்டரால் முன்வைக்கப்பட்ட பாடல் வரிகள் பின் வருமாறு அமைகிறது.

'நித்திரை போறாறே மன்மதராஜன் நித்திரை போறாறே
சர்வ சரிகை சதிராய் போர்த்தி சாய்ந்து நல்ல நித்திரை செய்யவே
ரதி மடியில் நித்திரை போறாறே
அதிசயமான கனா அங்கு
அனங்கனும் கண்டுதான்
சொர்ப்பனம் கண்டல்லவோ
மன்மதராஜன் திடுக்கிட்டு எழுந்தாரே
அலரி எழுந்தாரே மன்மதராஜன்
ஆயாசப்பட்டாரே!...'

என்பதாக அமைகிறது. ரதியின் மடியில் நித்திரை செய்த மதன் திடுக்கிட்டு எழுந்த நிலையை ரதியிடம் தான் கண்ட கனவை பின்வருமாறு எடுத்துரைக்கின்றான்.

'சொர்ப்பனம் கண்டதை சொல்லவும் வேண்டுமா
தோகையே தோகையே
உன் தந்தை நிஸ்டையில் இருக்கையில்
தோகையே தோகையே
நான் முல்லை மலர் பாணத்தால் கணை
தொடுக்கக் கண்டேன் தோகையே தோகையே
அவர் அப்போது நெற்றிக்கண் திறக்கவும்
கண்டேன்
தோகையே தோகையே
அப்போது என்னுடல் தணலாய் எரியக்
கண்டேன்
தோகையே தோகையே...'

என்று மதன் ரதியிடம் கூறியதை ஒரு கணம் நினைத்துப் பார்க்கிறான். தான் கடும் பிரயத்தனமான விடயம் ஒன்றிலேயே சிக்க வைக்கப்பட்டிருக்கும் நிலையை அறிந்தவனாக அவனுள் சிந்தனை தொடர்கிறது. இருந்த போதிலும், தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பில் இருந்து விலகிவிட்டால் தேவர் சபையினர் என்ன நினைப்பார்கள் என்ற கலக்கம் மதனின் மனதை வாட்டுகிறது. ரதியானவளின் நியாயப்பாடுகளை பற்றி ஆழமாகச் சிந்திக்கிறான். சுலபமாக எமது

வாழ்க்கையை நாம் வாழ்ந்து விடலாம். நாம் வாழும் காலத்தில் மற்றவர் என்ன நினைப்பார்கள் என சிந்திக்கும் போது தான் நமது வாழ்வு சிக்கல் நிலையை அடைகிறது.

ரதியின் முன்வைப்புகளும் மதனின் எதிர்வாதங்களும் தொடரும் நிலையில் இரண்டு கருத்தியல்கள் மோதும் பிரயத்தனங்களே வலிமை பெறுகின்றன. அவ்வாதங்கள் தொடரும் நிலையில் தேசிங்கு ராஜன் கதையை ரதி எடுத்துரைப்பதை அறியலாம். காலத்தால் முற்பட்ட புராணங்கள், இதிகாசங்கள், அவற்றோடு தொடர்புபடும் கதைகள் எடுத்துரைக்கப்பட்ட முறைமைகளை அறிவோம். பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பேரரசனான தேசிங்கு ராஜாவின் வாழ்க்கை வரலாறும் இங்கு இணைக்கப்பட்டுள்ளமை அவதானத்திற்குரியதாகும். இஸ்லாமியர்களின் ஆட்சிக்குட்பட்ட சம்பவங்களும் இங்கு மேற்கோளாக அமையுமாற்றைக் காணலாம். ரதி, மதன் பாத்திரங்கள் ஊடாக வாழ்வியலுக்குத் தேவையான அம்சங்கள் உதாரணங்களாக்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றன. ரதியின் எடுத்துரைத்தலுக்கு மதன் பத்மாசூரன் கதையை எடுத்துக் கூறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. பதிலுக்கு ரதியால் மார்க்கண்டன் கதையும் மதனால் ராமன் கதையும் முன்வைக்கப்படுகிறது. இக்கதைகளை ஏற்கனவே அறிந்தவர்கள் ஞாபகப்படுத்திக்கொள்ளும் வகையிலும், புதியவர்கள் அறிந்துக்கொள்ளும் களமாகவும் காமன் பொட்டல் அமைந்துவிடுகிறது.

ராமனை மதன் புகழ்வதும் சிவனின் மேன்மையை ரதி எடுத்துரைப்பதும் காமன்கூத்தில் தொடர்ந்த வண்ணமாக இருக்கிறது. மதன் சிவனை நிந்திக்கும் முனைப்பில் பத்மாசூரன் விடயத்தில் சிவன் பாதிப்பிற்குள்ளான சந்தர்ப்பமும் புத்தி சாதூரியத்தால் சிவனையே விஷ்ணு காப்பாற்றிய சந்தர்ப்பமும் எடுத்துரைக்கப்படுகிறது. சிவனை நோக்கி தவமிருந்த பத்மாசூரனுக்கு கேட்ட வரத்தை சிவன் கொடுத்துவிடுகிறார். சிவன் வழங்கிய தவத்தைச் சோதித்துப் பார்க்க விரும்பிய பத்மாசூரன் சிவபெருமானின் தலையிலேயே கைவைக்க முனைகிறான். இவ்வாறு யாருடைய தலையில் பத்மாசூரனின் கை படுகிறதோ அந்த தலை எரிந்து விடும். செய்வதறியாது திணறும் சிவனுக்கு உதவும் வகையில் திருமால் மோகினி அவதாரம் எடுத்து பத்மாசூரன் அசுரனுக்கு முன் நின்றார். பெண் உருவத்தை பார்த்து மயங்கிய நிலையில் தன்னை திருமணம் செய்துக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கிறான். தன்னைத் தவிர யாரையும் நினைக்க மாட்டேன் எனச் சத்தியம் செய்ய சொல்லி வற்புறுத்துகிறாள் மோகினி. இந் நிலையில் தனது தலையில் அடித்து சத்தியம் செய்த நிலையில் அசுரன் எரிந்து சாம்பலாகிறான். இச்சம்பவத்தைக் எடுத்துச் சொல்வதன் ஊடாக சிவனின் அவசரப் புத்தியையும், திருமாலின் சமயோசித புத்தியையும் எடுத்துச் சொல்லும் முனைப்பு தொடர்கிறது.

அமைதியாகச் செவிமடுத்த ரதியானவள் விஷ்ணுவின் அவதாரத்தில் ஒருவராக விளங்கும் ராமனைப் பலவீனப்படுத்தும் முனைப்பில் இறங்குகிறாள். இவ்வுலகில் பிறந்த உன் அப்பனின் தலை முறையின் வழிவந்த இராமன் கிஷ்கிந்தாபுரத்து அரசனான வாலியை மறைந்திருந்து தனது பாணத்தால் அம்பெய்தி கொன்றமை தர்மத்திற்கு இழுக்கான செயல்தானே? வெட்க மில்லை, ரோசமில்லை, மானமில்லை என வாழ்ந்துகாட்டிய குடும்பமாகவே உங்கள் குடும்பம் இருக்கிறது. இடையர் குலத்தில் பிறந்து இப்படி மடத்தனமாய் திரிந்து, எட்டி தயிர் திருடும் உனக்கும் மட்டிப்புத்தி போகாதா? இடையர் வம்சத்தில் பிறந்த என் கணவா, என்னை விட்டு நீ போனால் திரும்பி வரப் போவதில்லை. அந்த கொடூரன் இந்திரன் சொல்லை நம்பி விதி வழியை மறந்து அமரலோகம் நீ போனால் மாண்டு மடிந்திடுவீர். அமரலோகம் போகாதீர், போகாதீர் என மன்றாடுகிறாள்.

தன் தந்தையையும் தந்தை வழி வந்தவர்களையும் சாடும் ரதியின் வார்த்தைகளை செவிமடுத்த மதன் ரதியின் குடும்பத்தாரின் குறைகளை எடுத்துரைக்கிறான். வனவேடன் தன் மகளே, சிலைவேடன் தங்கையரே! நான் கூறும் செய்திகளையும் செவிமடுப்பாயாக! வடிவேலன் உங்கள் அண்ணன் வாழ்ந்த கதை கேட்கலையோ? நாரதரின் மொழி கேட்டு அறிந்த நங்கை வள்ளியின் அழகில் மயங்கி உங்கள் அண்ணன் செய்த மாயைகள் தெரியுமோ? வேடனாக வந்த உங்கள் அண்ணன் முருகனைப் பார்த்து 'ஆரடா வேடுவனே அறிவுக் கெட்ட பாதகனே' என வள்ளியின் தூசித்தலுக்கும் உள்ளாகிய கதைத் தெரியுமோ? செட்டியைப் போல் ரூபம் கொண்டான் உங்கள் அண்ணன். வளையல் விற்கும் செட்டியைப்போல் மதிக்கெட்டு வந்தவன்தானே உங்கள் அண்ணன். இப்படிப்பட்ட விடயங்கள் எல்லாம் இருக்கையில் என் குலத்தை அவமதித்து உன் குடும்பப் பெருமைகளை எடுத்துரைக்க வந்து விட்டாய் எனச் சாடுகிறான். இந்த பாடல் இசைக்கும் தருவாயில் முருகன் வள்ளி, தெய்வானை சகிதம் அரங்கிற்குள் பிரசன்னம் ஆவதுண்டு. ஏலவே தக்கன் யாகத்தினைக் காட்சிப்படுத்தும் தருவாயில் பாலகனாக முருகனின் பிரசன்னம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. தேவர்சபை கட்டமைப்பு களத்தில் அவதானத்திற் குரியதாகக் காணப்படுவதுண்டு. இந்திரன், சூரியன், சந்திரன், வருணன், அக்கினி போன்ற தேவர்சபை உறுப்பினர்களாக வேடம் தரிப்பவர்கள் சபையில் நீண்ட நேரம் அமர்ந்திருந்து காட்சி தருவார்கள். விநாயகர் அவ்வப்போது வருகை தருவதையும் அவதானிக்கலாம்.

மதன், ரதி, கோமாளி, தப்பிசைக் கலைஞர்கள், காமன் மாஸ்டர், கோரஸ் பாடகர்கள் என மட்டுப்படுத்தப்பட்டிருந்த காமன் பொட்டல் புதிய பாத்திரங்களின் வருகையால் அரங்கு களை கட்டும். முருகு தம்பதியினர்களின் வருகையின் போது முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய பாத்திரங்கள் மீதான புகழ்மொழிகள் பாடல்களாக இசைக்கப்படுவதையும் அவதானிக்கலாம். புதிய பாத்திரங்களின் வருகையின் போது அவ்வாறு வேடம் தரித்தவர்களுக்கு மருள் வருவதுண்டு. இவ்வாறு புதிய பாத்திரங்களின் வருகையின் போது தேவர் சபையில் வீற்றிருக்கும் பாத்திரங்களுக்கும் மருள் வருவதுண்டு. இவ்வாறு மருள் வருபவர்களை கட்டுப்படுத்தும்

பிரயத்தனத்தில் காமன் மாஸ்டர்களினதும், மருளை கட்டுப் படுத்தும் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ள அங்கத்தவர்களின் வகிபங்கு கவனத்திற்குரியதாக அமையப்பெறும். இதே வேளை பார்வையாளர்களாக அமர்ந்திருக்கும் நபர்களுக்கும் மருள் வருகின்ற போது அவற்றைக் கட்டுப்படுத்தும் முனைப் புகளில் சபை பரப்பரப்பான தன்மையை பெற்றிருக்கும்.

மலையக மக்கள் முருக வழிபாட்டில் மிகுந்த ஈடுபாட்டைக் கொண்டவர்கள். அவ்வகையில் சபையில் முருகனின் பிர சன்னம் இடம்பெறும்போது அதீத ஈடுபாட்டைக் காட்டுவார் கள். இலங்கையில் கதிர்காமம் மிகுந்த அவதானத்தைப் பெற்ற தலமாக இருந்து வந்துள்ளது. வருடாந்தம் கதிர்காமத் திற்கு யாத்திரை செல்ல வேண்டியதைக் கட்டாயமாகக் கொண்டுள்ளார்கள். கதிர்காம முருகனை நினைத்து மலைய கத்தவர்களால் பல பாடல்கள் இயற்றப்பட்டுமுள்ளன. குறிப் பாக மலையக இலக்கியத்தில் வீரியமிகு காலகட்டமாக 'மலையக வீதிப்பாடல்' யுகம் விளங்குகிறது. இக்காலத்தில் நிலைப்பெற்ற வீதிப்பாடலாசிரியர்களால் கதிர்காம கந்தனை நினைத்து பல பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. பொதுவாக முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய பாத்திரங்களைச் சிறு வர்களே ஏற்றிருப்பார்கள். பெண் பாத்திரங்களை ஆண்களே ஏற்கும் நிலையில் இங்கு தெய்வானை, வள்ளி பாத்திரங் களை சிறுமிகளும் ஏற்பதுமுண்டு. முருகன் பாத்திரத்தையும் சிறுமி ஒருவரே ஏற்பார் என்பதும் குறிப்பிடத்தக்கது. முருகன், வள்ளி, தெய்வானை பாத்திரங்களின் வருகையின் போது இவ்வாறு வீதிப்பாடலாசிரியர்களால் இயற்றப்பட்ட பாடல்கள் இசைக்கப்படும். அவ்வாறு இசைக்கப்படும் பாடல்களில் நாவலப்பிட்டி எஸ்.ஆர்.எம். பெரியாம்பிள்ளை இயற்றிய பாடல்களும் இடம்பெறுவதுண்டு. அவரது பாடல்களுள் எடுத் துக்காட்டாகப் பின்வரும் பாடலை குறிப்பிடலாம்.

'சங்கரன் மகனெனும் தங்க மருந்து
சதுர்மறைபுகழ் சிவசண்முக மருந்து
ஐங்கரன் சோதரனான மருந்து
அவனியோர் புகழ்ந்திடும் ஆனந்த மருந்து...
தென் கதிர்காமத்தில் வசிக்கும் மருந்து
சேயன் பெரியாம்பிள்ளை துதிக்கும் மருந்து
கும்பமுனிக்கருள் தந்த மருந்து...'

என்றவாறு இப்பாடல் தொடரும்.

பாத்திரங்களின் வரவு சபையோரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதாக அமையப்பெறும். மீளவும் 'வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும் நிலை' என்றவாறு மதன் ரதியின் வாதங்கள் தொடர்கின்றமை அவதானத்திற்குரியதாகும்.

மதனால் முன்வைக்கப்பட்ட முருகன் மீதான சாடலை ரதி செவிமடுக்கிறாள். இந்நிலையில் மீளவும் மதனின் குடும்பம் ரதியின் வார்த்தைகளால் தூசிக்கப்படுவதை உணரலாம். ரதி யானவள் மகாபாரதத்தில் கிருஸ்ணர் அவதாரம் கொண்டி ருந்த அகவயத்தன்மையை எடுத்துக் கூற விளைகிறாள். மகாபாரதக் கதையம்சத்தில் பஞ்ச பாண்டவர்கள் அரசாட்சி புரிய வேண்டிய காலப்பகுதியில் வனவாசம் அனுபவிக்கிறார் கள். பதினான்கு வருடத்திற்கு பிறகு நடைபெற்ற பதினெட்டு நாள் போர் நிறைவுறும் தருவாயில் கிருஸ்ணர், அருச் சுணனுக்கு சாரதியாய் ஆனதன் காரணமாகவே மகாபாரதப் போர் பாண்டவர்களுக்கு வெற்றியைத் தந்தது. போர் தர்மத் தையும் மீறி சூழ்ச்சியின் வசத்தாலே மகாபாரதப் போரில் கிருஸ்ணரின் வகிபங்கு கண்டனத்திற்குரியது என்ற வாதத்தை முன்வைக்கிறாள். 'அரவக்கொடியோனையும் அவனுடைய படைகளையும் அழித்த சக்கரத்தாழ்வானை 'செப்படி வித் தைக்காரன்' என இகழ்கின்றமையும் கவனத்திற்குரியதாகும். ஆதிசிவன் மகிமையை நீதியாய் அறிந்தால் அவரது மகி மையை நன்குணரலாம். 'அங்குசரே நீர் போனால் பங்கம் வந்து நேர்ந்து விடும்' என மீளவும் எச்சரிக்கிறாள். ரதியின் இவ் முன்வைப்பானது மக்களிடத்தில் மகாபாரதம் மற்றும் பக வத்கீதை தொடர்பான கவனத்தை ஏற்படுத்தும் முனைப்பை கொண்டமைந்துள்ளமையும் கவனத்திற்குரியதாகும்.

ரதியின் குரல் ஓங்கியுள்ள நிலையில் மதனிடம் மார்க்கண் டேயர் புராணத்தை எடுத்தியம்பும் முனைப்பில் ஆர்வம் கொள் கிறாள். மிருகண்டு முனிவர், மித்ராவதி தம்பதியினருக்கு நீண்ட நாட்களாக குழந்தை வரம் கிட்டவில்லை. இருவரும் தவமிருந்து சிவனிடம் புத்திரப்பேறு பெற்றார்கள். தம்பதியின ருக்கு மகனாகப் பிறந்த மாரக்கண்டேயருக்கு பதினாறு வயது மட்டுமே ஆயுள் உள்ளதாக சிவன் வரமளித்துள்ளார். இருப்பினும் தனது மரணத்தை வெல்ல மார்க்கண்டேயர் கடும் தவம் இருந்துள்ளான். யமன் தனது கடமையை மேற்கொள்ள பிரயத்தனம் எடுத்த போது மார்க்கண்டேயரின் கோரிக்கைக் குச் செவிமடுத்து யமனையே சிவன் தண்டித்தார். காலத் தைக் கட்டுப்படுத்தும் வகையிலான அணுகுமுறையில் மார்க் கண்டேயருக்கு என்றும் பதினாறு என்ற வரம் கிடைத்தது. இவ் விடயம் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்து சிவனின் சிறப்பை எடுத்துரைக்கிறாள். மதனுக்கு எவ்வகையிலாவது உலக யதார்த்தத்தை எடுத்துரைக்கும் முனைப்போடு பார் வையாளர்களுக்கு தக்க சமயத்தில் அவ்விடயங்கள் தொடர் பில் அவதானத்தை எடுத்துரைக்கும் நோக்கத்தோடு களம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியதாகும்.

தன்னிலையில் இருந்து ரதியானவள் மதனுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அதனை மதன் செவிமடுக்காத





நிலையில் தோழியருடன் பஞ்சனைக்குச் செல்கிறாள். கவலையுற்று பஞ்சனையில் சாய்ந்திருந்த நிலையில் தன்னிடம் குறத்தி ஒரு சமயம் கூறிய குறி வார்த்தைகளை மீட்டுப்பார்க்கிறாள். இந்நிலையில் களத்திற்கு குறத்தி பாத்திரம் வருகை தருவதுண்டு. குறத்தியை வரவேற்கும், குறத்தி சார்பான கருத்துகளைப் பாடல்களாக முன்வைக்கும் பணியில் காமன் மாஸ்டரின் பங்கேற்பு சிறப்பிடம் பெறும். குறத்தியின் வருகையும் ஆட்டமும் சபையோரின் எதிர்பார்ப்புகளுடன் கலகலப்பை ஏற்படுத்துவதாக அமையப்பெறும். 'தன்னே நன்னே தான நன்னனே தன்னா நானே தான நன்னனே' என்ற ஓசை தொடர குறத்தியின் ஆட்டம் மிகுந்த வரவேற்பை பெற்றதாக அமையப்பெறும். சபையோரும் பாடலுக்கு ஏற்றவாறு கரங்களைத் தட்டி தமது ஆர்வத்தை வெளிப்படுத்துவார்கள்.

'பச்சமணி பவளமணி
வாங்கலியோ அம்மே
வாங்கலியோ அம்மே
பாலகனுக்கு பாசி மணி
வாங்கலியோ அம்மே
வாங்கலியோ அம்மே...'

என்ற பாடலுடன் உள்நுழையும் குறத்தி, ரதியின் கரத்தைப் பற்றிக் குறிகோலைப் பிடித்து குறி சொல்லும் காட்சி இடம் பெறும். குறத்தி ரதியை நோக்கி, குறிக்கோலை கரம்பிடித்து குறியுரைப்பேன் நானுனக்கு, 'கொம்பனையே உந்தன் குறி கொல்லுதடி அம்மாமாரே! காணாத அதிசயங்கள் காட்டுதடி அம்மாமாரே! கந்தன் உந்தன் தமையனென்று காட்டுதடி அம்மாமாரே! மாயவனார் உந்தனுக்கு மாமனாக தோன்றுதடி; பார்வதியார் உந்தனுக்கு தாயாக வேண்டுமடி; தேவேந்திரன் ஓலை வரப் போகுதிப் போ' என கூறிய வார்த்தைகள் ரதியின் ஞாபகத்திற்கு வருகிறது. அவ்வாறே மதனும் ரதியும் வேட்டைக்குப் போன போது மதன் கனவு கண்டு எழுந்து கூறிய வார்த்தைகளும் ஞாபகத்திற்கு வருகிறது. இந்நிலையில் ரதியானவள் மிகுந்த கலக்கம் அடைந்தவளாகக் காட்சியளிக்கிறாள். தான் எதை எடுத்துச் சொல்லியும் ஆகப் போது எதுவுமில்லை என் முடிவுக்கு வருகிறாள்.



'குறவர்கள்' எனப்படுவோர் இந்திய நாகரிக மரபில் முக்கிய இடத்தை வகித்து வந்துள்ளார்கள். குறி பார்த்தல் இவர்களின் தொழில்களில் ஒன்று, இவர்கள் சாஸ்த்திர சம்பிரதாயங்களில் அதீத நம்பிக்கை யுடையவர்கள். வேடர்கள் என அறியப்பட்டவர்கள் மலையக மக்களிடத்தே குறி சொல்பவர்களாகவும், முருகனின் மனைவி வள்ளி இக்குலத்தைச் சேர்ந்தவளாகவும் காணப்படுகின்றாள். குறவர்கள் குறிஞ்சி நிலத்தைப் பூர்வீகமாகக் கொண்டிருந்த நிலையில் குறிஞ்சி நிலத்தில் ஏற்பட்ட கோடை நிலைமையின் காரணமாக பாலை நிலத்துடன் தொடர்புபட்டுள்ளார்கள். குறிஞ்சி நிலத்தில் வேட்டையாடும் குறவர்கள் பாலை நிலத்தில் மறவர்கள் எனும் வாழ்க்கை முறையை பின்பற்றுகிறார்கள். குறவர்களில் வேறுப்பட்ட வகையினர் காணப்படுகின்ற நிலையில் குறி சொல்லும் குறவர், காதுகுத்தி குறவர், பச்ச குத்தி குறவர் ஆகியோர் மலையக மகளுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டுள்ளார்கள். மூங்கில் மரங்களை வெட்டி அதனைச் சீவி சிறிய குச்சிகளாகப் பிரித்து மூங்கில் கூடைகள் பின்னுவது, கோழிகள் அடைக்கும் பஞ்சாரங்கள் (கோழிக்கூடை), சுளகு (முறம்) செய்தல் போன்றவற்றில் குறவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். மலையகப் பெண்களுக்கு கொழுந்துக்கூடை அத்தியவசியமான சாதனமாக திகழ்கிறது. அதனை ஆக்குபவர்கள் குறவர்கள் என்ற வகையிலும் அவர்களுடனான தொடர்பு இற்றைவரை மலையக மக்களிடத்தே காணப்படுகிறது. நரிக்குறவர்கள் என அழைக்கப்படும் இவர்கள் 'அக்கிபிக்கி' சமுதாயத்தினர் எனவும் அழைக்கப்படுகிறார்கள். இவ்வகையில் தொடர்புபட்ட குறவர் இனத்தின் மீதான தொடர்பு நிலை மனதளவிலும் பங்கேற்பாளர்களை உற்சாகப்படுத்துவதாகவும் அமையப்பெறும். காமன்கூத்து தவிர்ந்த கலைநிகழ்வுகளிலும் குறவன், குறத்தி நடனம் என்பது தவிர்க்கமுடியாததாக இணைக்கப்பட்டிருக்கும்.

சபையோரின் மனதைக் கவர்ந்ததில் குறத்தியின் நடனம் முக்கிய கவனத்தைப் பெற்று விளங்கும். சபையோரின் கரகோசம் அதற்கு அடையாளமாகத் திகழும். அச்சமயத்தில் 'சல்லி குத்துதல்' செயற்பாடுகள் முனைப்பு பெறும். அதாவது சபையோர், தமக்குப் பிடித்த, தம்மைக் கவர்ந்த பாத்திரங்களுக்கு காசு குத்துவார்கள். குறத்தி பாத்திரம் ஏற்பவருக்கே அதிகமாக காசு குத்தப்படுவதுண்டு. இவ்வாறு பாத்திரங்களுக்கு காசு குத்துதலின் போது, தங்களின் பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் என்ற நிலைகளும் செல்வாக்குப் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மன்மதனுக்கு வலியுறுத்தலும் தெளிவூட்டல்கள் அவனில் எது வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை அறிந்து ரதியானவள் தன்னுள் ஓர் தீர்மானத்திற்கு வருகிறாள். மதனோடு இணைந்து செல்ல விளைகிறாள். இத்தீர்மானம் மதன், ரதி வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்துவதாக அமையப்பெறுகிறது. 'கையில் கங்கணம் கட்டி கைவிட்ட கண்ணழகா போறேனென்று துடுக்காக நீ நடந்தால் எனது நிலை என்னாவது? மனையாளை இங்கு விட்டு மன்னவரே நீர் போனால் தனியாக இருப்பேனா தனஞ்சுதனே என் கணவா' என வினாவுகிறாள். தொடர்ந்து 'அடியாளும் கூட வாரேன் நாயகனே என் கணவா - இருபேரும் போய் வருவோம் இன்ப முள்ள என் கணவா' என அழுத்தமாக சொல்கிறாள். ரதியின் பிடிவாத நிலைமை தகர்க்கப்பட்ட மனநிலை அறிந்து மதன் மகிழ்ச்சி கொள்கிறான். போகவே வேண்டாம் என நிர்ப்பந்தித்த ரதியானவள் தற்போது தானும் சேர்ந்து வருகிறேன் என முன் வந்திருப்பது மதனில் மகிழ்ச்சியைத் தோற்றுவித்துள்ளது. உன்னுடன் சேர்ந்து போனால் என்னை இழுக்காக எண்ணுவார்கள். தெய்வ சபையில் சிரிப்பார்கள் பெண்ணே! என்னோடொத்த மன்னவர்கள் என்னை நகைப்பார்கள். இதை அறிந்து பெண்ணே நான் போவதற்கு சம்மதத்தை தந்திடுவீர், என்றான். மதனின் முன்வைப்பை மனமில்லாமல்





ஏற்கும் கட்டாயத்தில் மதன் போவதற்கு தனது சம்மதத்தை அறிவிப்பதை அண்ணாவியார் பின்வருமாறு எடுத்துரைப் பார்.

'பயந்து நடுங்குதே நீ பயணம் போய் வாருமென்றாள்
சரீரம் நடுங்குதே என் சாமியே நீர் போய் வாரு மென்றாள்
ஏங்கியே மனந்தளர்ந்து எண்ணாததும் எண்ணி இப்போ
தன்னுடைய அரண்மனைக்கு தானடைந்தார் தாதியு டன்ன
சாமியை நினைத்து சாய்ந்து விட்டார்
பஞ்சனையில்...'

என்றவாறு தொடர்கிறது. ரதியிடம் சம்மதம் பெற்ற மதன் மகிழ்வடைந்து தனது பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளத் தொடங்குகிறான். தான் பயணிக்கவுள்ள தேரை ஆயத்தப்படுத்துமாறு தனது தேர்ப் பாகனான வசந்தனை அழைத்து பணிக்கின்றான். தான் பயணிக்கவுள்ள தேரின் நிலைமையை மதனும் ஒரு தடவை சுற்றி பார்த்துக் கொள் கிறான். தயார் நிலையில் வைக்கப்படுள்ள தேரின் அலங் காரம் பின்வருமாறு அமையப்பெற்றுள்ளமை கவனத்திற்குரி யதாகும். பச்சைக்கிளிகள் பூட்டிய தேர் பார்ப்பதற்கு மிகுந்த அலங்காரத்துடன் காட்சியளிக்கிறது. பொன் நிறத்தால் ஆன தேர் மகர மீன் கொடியை சூடி காட்சி தருகிறது. தேரை இயக் கும் கடிவாளம் பொருத்தமான இடத்தில் இணைக்கப்பட்டுள் ளமையும் சிறப்பிக்கப்படுகிறது. கவலையோடு பஞ்சனையில் வீற்றிருக்கும் ரதிதேவியைப் பார்த்து 'அபரஞ்சி, பொக்கிசமே அந்தகாரனிடம் போய் நானும், அரை நொடியில் வாரனடி அஞ்சாதே பெண்ணே' என ஆறுதல் வார்த்தைகள் சொல்லி மதன் புறப்படுகிறான்.

'சகுனம்' என்பது நடக்கப்போகும் நன்மை தீமை பற்றி முன் கூட்டியே எதிர்வு கூறும் நம்பிக்கையாக விளங்குகிறது. வசந்தன் மிக வேகமாகத் தேரை ஓட்ட மதனின் பயணம் தொடர்கிறது. இப்பயணத்தின் போது பல்வேறு சகுணங் களை மதன் எதிர்கொள்கிறான். மதன் எதிர்கொள்ளும் சகு ணங்கள் எதிர்காலத்தில் பாதிப்பான சம்பவங்கள் நிகழ்ப் போவதை எதிர்வு கூறுவதாகவே அமைந்தது.

காகங்கள் விடாது தொடர்ந்து கரைந்துக் கொண்டிருந்தன. நாக பாம்புகள் சீறிக் கொண்டிருந்தன. கரும் பூனை குறுக்கே ஓடிவர பெரும் பன்றியொன்று பின்னால் துரத்தி வருகிறது. காட்டானையின் பிளிறல் சத்தமும் கோட்டானையின் அலறல் சத்தமும் ஓங்கி ஒலிக்கின்றன. கழுதை, நாய், நரிகள் எல்லாம் அழுது புலம்பிடும் சத்தங்கள் கேட்கின்றன. கம்மாளன் ஒருவன் வரும் போது வண்ணான் அழுவதையும் அவதானிக்க முடிகிறது. தலையில்லாத முண்டங்கள் கூடிச் சண்டைகள் செய்யும் காட்சியும் கண்களுக்குத் தெரிகின்றன. காட்டு விரியன் இடப்பக்கமும் மொட்டைப் பாப்பான் வலப்பக்கமா கவும் தோன்றுகின்றன. கருங்குருவி பிரளும் இடத்தில் வெற் றுப்பானையும் இருக்கிறது. கரடி, புலி, வேங்கை கூடியிருக் கும் இடத்தில் குருடான பெண் ஒருத்தி தடுமாறி விழும் காட் சியும் தென்படுகிறது. மொட்டைத் தலையுடன் காட்டு விறகை சுமந்து வரும் காட்சியும் தெரிகிறது. கன்னியொருத்தி நடந்து வரும் தருவாயில் எண்ணெய்க் குடம் உடையக் காண்கிறான். கழுகுகள் முறைத்துக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. கங்கைக் கரையின் அருகில் மங்கையர்கள் கூடி நிற்கும் வேளையில் வளையல்களை ஒருத்தி உடைக்கும் காட்சிகளையும் காண்கிறான்.

மேற்குறித்த சகுனங்கள் மீதான அவதானம் மலையக மக்களி டத்தேயும் தொடர்ந்த வண்ணம் காணப்படுகின்றமையை அறியலாம். காகம் மரக்கிளையில் இருந்து கத்துவதும் சகுனமாக அமைகிறது. ஆரோக்கியமான கிளையில் இருந்து கரையும் போது வீட்டிற்கு விருந்தாளிகள் வருவார்கள் என்ற நம்பிக்கை நிலவுகிறது. அவ்வாறே காய்ந்த கிளையில் இருந்து காகம் கரையும்போது துக்க செய்தி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது. வீடுகளுக்கு அருகில் ஊமைக் கொட்டான் கத்தும் சத்தம் கேட்டால் குடியிருப்புத் தொகுதியில் மரணம் சம்பவிக்கும் என்ற எதிர்வுகூறலு முண்டு. அடுப்பு இரையும்போது விருந்தாளிகள் வரக்கூடும் என்ற எதிர்வுகூறலும் உண்டு. பாதைகளின் மத்தியில் வாழை மரம் விழுந்தால் துன்பகரமான செய்திகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் கவனத்தைப் பெறுகிறது. மேற்குறித்த வகை யில் மதனின் பயணத்தின் போது அவன் எதிர்கொள்ளும் சகு னங்களும் அவனில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்துகிறது. இருந்த போதிலும் மதனின் பயணம் நம்பிக்கையோடு தொடர்கிறது. பயண வழியில் மதனில் நம்பிக்கையை ஏற் படுத்தும் பாத்திரங்களையும் சந்திக்க முடிகிறது. அவ்வாறே பாதிப்புகளை ஏற்படுத்தும் பாத்திரங்களையும் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது.

(தொடரும்...)

letsumanan.a@thaiveedu.com




மலையக நாட்டார் புறக் கலைகளும் மனித உடல் – உள நன்னிலைகளும் ஓர் ஆய்வு

– ச. லக்ஷரன், க. கஜவிந்தன் –

கலை என்பது வெறும் படைப்பாக்கம் மட்டுமல்ல; அது மனித சிந்தனையில் உதித்த ஓர் உன்னத வெளிப்பாடு ஆகும். உலகத்தோரின் உன்னத படைப்புகளுள் நாட்டார் கலையும் ஒன்றாகும். மனித வாழ்வின் பல்வேறு கட்டங்களோடு இரண்டறக் கலந்துள்ள நாட்டாரியல் கூறுகள், காலங்காலமாக இயைந்து செழுமைபெற்று வளர்ந்துள்ளன. மனிதனின் நாகரிக நிலைப்பாடுகள், பண்பாட்டுக் கூறுகள், வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக் கைகள், உணர்வுகள், உணர்ச்சிகள் ஆகியவற்றின் வெளிப்பாடாகவும், உட்கூறாகவும் அமைந்த நாட்டார் கலைப் படைப்பாக்கமானது மனிதனின் உடல், உள, ஆன்மீக ஈடேற்றத் திற்குப் பெரிதும் உதவுகின்றது.

காத்தவராயன் கூத்து, பொன்னர் சங்கர் நாடகங்கள், பண்ணிசைகள், கரகாட்டம், ஒயிலாட்டம், போன்றவை மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்தி, உடல், உள மற்றும் ஆன்மீக வாழ்க் கையில் ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்புகின்றன. இந்த வகையில் நாட்டார் கலைகள் ஏனைய

கலைகளிலிருந்து வேறுபட்டாலும், அதன் அம்சங்கள் மனித நாகரீகம் தோன்றியதிலிருந்து இன்று வரை பேசப்பட்டு வருகின்றன. ஏனைய கலைகள் உள்ளத்திற்கு மகிழ்வைத் தந்தாலும், உடலில் பெரிதும் உற்சாகத்தைத் தருவது இல்லை. ஆனால் நாட்டார் கலைகள் மனிதனுக்கு உடலியல் ரீதியிலான பயிற்சியையும் வழங்குவதுடன், உடலின் உள்ளார்ந்த உறுப்புகளையும், அதன் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கின்றன.

உளவியல் ரீதியாகப் பார்க்கும்போது, மனித மனங்களை மேம்படுத்தவும், மனநலப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் நாட்டார் கலைகள் பயன்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இசைக் கலைகள் மனநல மேம்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இசைக் கலையுடன் கூடிய நாட்டார் கலைகளின் வளர்ச்சி, மக்களின் வாழ்வியல் அம்சங்களைப் பிரதிபலிப்பதுடன், அவர்களின் கற்பனைத் திறன், உள ஆற்றுப்படுத்தல் நுட்பங்கள், சகிப்புத்தன்மை ஆகிய உளவியல் உள்ளீடுகளை வலுப்படுத்துவதன் மூலம் மனித மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்துள்ளன. இந் நாட்டர் கலைகள் வாய்மொழி இலக்கியம், நாடோடிப் பாடல்கள், கிராமிய இலக்கியம், நாட்டார் பாடல்கள் எனப் பலவாறு குறிப்பிடப்படுகின்றன. மலையக நாட்டார் கலைகள், இத்தகைய அம்சங்களுடன், உடல் மற்றும் மன ஆரோக்கியம், மேம்பாடு ஆகிய வற்றுக்குப் பெரிதும் பங்களிக்கின்றன

பழந்தமிழர்களின் கலைகளை நாம் இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று செந்நெறிக் கலைகள். மற்றொன்று உழைக்கும் மக்கள் கலைகளான நாட்டுப்புறக் கலைகள் எனும் நாட்டார் கலைகளாகும். கலைகளை இரசித்து மகிழ்வது ஒரு சாரார் நிலைப்பாடாகும். மக்களால் உருவாக்கப்பட்ட கலைகளை மக்களின் சமூக மாற்றத்திற்கு ஆக்கிக் கொள்வது என்பது இன்னொரு சாராரின் நிலைப்பாடாகும். மக்களின் இருப்பியலில் அவர்களின் வாழ்வியல் அம்சங்களுடன் பின்னிப் பிணைந்ததாக உடல், உள, ஆன்மீகம் சார்ந்த விடய பரப்புகள் அவர்களின் சூழ்நிலைகளுடன் நெருங்கி தொடர்புபட்டவையாகவே காணப்படுகின்றன. மக்களின் உணர்ச்சிப் பெருக்கங்களுக்கும் மனநிலை கட்டுப்பாடுகளுக்கும் நிலைக் களன்களாக விளங்கும் கலைகள், பண்பாட்டு அம்சங்கள் என்பன வரலாற்றில் முக்கியமானவை. யதார்த்தமான சிந்தனையோட்டத்தின் வழியாக உண்டாகும் உணர்ச்சிகளின் பெருக்கம் அவர்களது கிராமிய மற்றும் கலைப் பண்பாட்டின் ஊடாக வெளிப்படும். அவற்றினை இன்பத்தின் போதும் கவலையின் போதும் விழா, விஷேட தினங்களின் போதும் வெளிப்படுவதை நடைமுறையில் கண்கூடாகப் பார்க்கலாம். உதாரணமாக திருவிழாக்காலங்களில், வருடப் பிறப்பின் போது, திருமண நிகழ்வின் போது நாட்டரியலோடு இணைந்த வகையிலான கலைகள் வெளிப்படுகின்றன. மனிதருக்கு நிகழ்த்துகலைக்கும் வரலாற்றுக்கும் இடையிலான ஓர் அறிவுத்துறையாக நாட்டார் கலைகள் காணப்படுகின்றன. பொதுவாக இந்நாட்டார் வழக்காற்றுகளை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தின் நிலை மாற்றங்களும் வரலாற்று நாகரிகங்களும் வளர்ச்சி பெற்றுள்ளன. இதன்படி நாட்டார் வழக்காற்றியல் கூறுகள் நாடகம், சடங்கு, கதையாடல், இசைக் கருவி, ஆட்டம் என்பவற்றை உள்ளடக்குகின்றன. வட்டாரம், மதம், சாதி, இனம், மொழி வாழ்வியல் போன்ற பண்பாட்டுக் கூறுகளைத் கூத்து, நடனம், நாடகம் ஆகிய நிகழ்கலைகள் தெள்ளத்தெளிவாக விளக்கி உள்ளன.

நாட்டார்கலை என்பது கடந்த காலம் சார்ந்த ஒரு உறைப் பொருளாக மாத்திரம் அல்லாமல் அது வளர்ந்து வரும் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. உழைக்கும் மக்களின் நோக்கில் நாட்டார் கலைகளையும் கலைஞர்களையும் அதனை அணுகும் நாட்டார் வழக்காற்றினையும் அதன் பயன்பாட்டையும் இன்று குறைவாகவே காணக்கூடியதாக உள்ளது.

நாட்டுப்புறக் கலைகள் இரண்டு வகைப்படும். அவை சடங்கு முறைக் கலைகள், தொழில்முறைக் கலைகள் ஆகும். பெண்களால் ஆடப்படும் சடங்கு முறை ஆட்டங்களில் ஒன்று கும்மியாட்டம் ஆகும். இது அம்மன் விழாக்களில் முளைப் பாரி எடுத்து ஆடப்படுவதாகும். கரகாட்டம் எனப்படுவது இரு பெண்கள் இணைந்து நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடப் படும் தொழில் முறை ஆட்டமாகும். இவர்கள் கலையைத் தொழிலாகக் கொண்டவராக விளங்குகின்றனர். குறிப்பாக மலையகத் தமிழர்கள் · இந்தியாவிலிருந்து தொழில் நிமித்தம் அழைத்து வரப்பட்டவர்கள். இந்தியா ஒரு சாதியச் சமூக நாடாகும். இனக்குழு சமூக அமைப்பாக இருந்தபோது ஒவ்வொரு இனக் குழுவும் ஆடற்கலையினை கொண்டிருந்த நிலை வேதகால வளர்ச்சியில் சாதி அமைப்புகளாக உருவாகின. மலையக மக்களிடம் ஒருவித ஆடற்கலை காணப்படுகின்றது. தேவராட்டத்தை நாயக்கர் இன மக்களின் குறிப்பிட்ட சாதியினர் ஆடுகின்றனர். பறையாட்டக் கலையை பறையர் இனத்தவர் ஆடுகின்றனர். நாட்டுப்புற ஆட்டங்கள் இரண்டு வகைப்படும். அவை வட்டவடிவ ஆட்டம், நேர் கோட்டு வடிவ ஆட்டம் எனபனவாகும். வட்ட வடிவ ஆட்டத்தின்போது கும்மியாட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது. இதில் கோலடிக்கு ஏற்ப காலடிகளும் ஒரு இயல்புத் தன்மை கொண்டதாகக் காணப்படும். இசை பாடலும் இதில் பெரும் பாலும் இடம்பெறுவது இயல்பாகும். மலையக நாட்டார் கலை அம்சங்கள், மலையக மக்களின் வாழ்வியலோடு இணைந்து பின்னிப் பிணைந்திருக்கும். அவை, அவர்களின் வரலாறு, பண்பாடு மற்றும் அடையாளங்களின் பிரதிபலிப்பாகத் திகழ்கின்றன. இந்தக் கலைகள், மலையக மக்களின் தனித்துவமான வாழ்க்கை முறையையும், அவர்களின் மனோபாவத்தையும் வெளிப்படுத்துகின்றன. மனிதனின் வாழ்வியலோடு இணைந்து வளர்ந்த இக்கலைகள் மனிதனின் உடல் உள ஆன்மிக மேம்பாட்டிற்கு இன்றியமையாததாக காணப்படுகிறது.

மலையக நாட்டார் கலைகளின் முக்கிய அம்சங்கள்:

மலையக நாட்டார் கலைகள், தங்கள் மூதாதையரிடமிருந்து பெற்ற தொன்மையான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளன. இந்தக் கலைகள் தலைமுறை தலைமுறையாகப் பரவி, மலையக மக்களின் முக்கிய அடையாளமாக விளங்குகின்றன. வாழ்க்கை முறையோடு மலையக மக்களின் விவசாயம், தொழில், சமூக வாழ்க்கை, சடங்குகள் போன்ற அனைத்து அம்சங்களும் நாட்டார் கலைகளில் பிரதிபலிக்கின்றன. மலையக நாட்டார் கலைகள் தெய்வீக நம்பிக்கைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. பல கலைகள் தெய்வங்களைப் போற்றி, அவர்களின் அருளைத் தேடுவ தற்காக நிகழ்த்தப்படுகின்றன. மலையக நாட்டார் கலைகள் பெரும்பாலும் வாய்மொழியாகவே பரப்பப்படுகின்றன. மூத்த வர்களிடமிருந்து இளையவர்கள் கற்றுக்கொள்ளும் இந்த வழக்கம், கலைகளின் தொடர்ச்சியை உறுதி செய்கிறது.

மலையக நாட்டார் கலைகள் தனித்துவமான பாணிகளில் ஆடப்படுகின்றன. மலையக நாட்டார் கலைகளுக்கு உரித்தான ஆடை அலங்காரம், இசைக் கருவிகள் மற்றும் நடனங்கள் உள்ளன. இவை ஏனைய பகுதிகளின் நாட்டார் கலைகளிலிருந்து வேறுபடுகின்றன.

- கூத்துகள் - காமன் கூத்து, பொன்னர் சங்கர், அர்ச் சுனன் தபசு போன்ற கூத்துகள் மலையக மக்களின் பிரபலமான கலை வடிவங்களாகும்.
- நாட்டுப்புறப் பாடல்கள் - தாலாட்டு, ஒப்பாரி, தொழிற்பாடல்கள் போன்ற பல்வேறு வகையான நாட்டுப்புறப் பாடல்கள் மலையக மக்களின் வாழ்க் கையின் ஒவ்வொரு கட்டத்திலும் இடம்பெறு கின்றன.
- நடனங்கள் - கும்மி, கோலாட்டம் போன்ற நடனங்கள் மலையக மக்களின் மகிழ்ச்சியான தருணங்களில் ஆடப்படுகின்றன.
- கைவினைப் பொருட்கள் - மலையக மக்கள் தங்கள் திறமையைப் பயன்படுத்தி, பல்வேறு வகையான கைவினைப் பொருட்களை உருவாக்குகின்றனர்.

மலையக நாட்டார் கலைகளான கூத்துகள், கரகாட்டம், ஓயிலாட்டம், கோலாட்டம், காவடியாட்டம், கும்மி, பறை யாட்டம், மற்றும் ஒப்பாரி போன்றவை மலையக மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை. இவை அவர் களின் வரலாறு, பண்பாடு மற்றும் அடையாளங்களின் பிர திபலிப்பாகத் திகழ்கின்றன. இந்தக் கலைகள், மலையக மக்களின் தனித்துவமான வாழ்க்கை முறையையும், அவர் களின் உணர்வுகளையும் மனோபாவத்தையும் வெளிப்ப டுத்துகின்றன. மலையக கூத்துகள் மிகவும் பழமையான பாரம்பரியம் கொண்டவை. இவை பெரும்பாலும் மதம் சார்ந்த கதைகளையும், புராணக் கதைகளையும் அடிப்ப டையாகக் கொண்டவை. இதன் மூலம், மக்கள் தங்கள் நம் பிக்கைகள், மதிப்புகள் மற்றும் வாழ்க்கை பாடங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். பாமர மக்களால் ஆக்கம் பெற்று பரம்பரை பரம்பரையாக பல்லாண்டு காலமாக வழங்கி வரும் நாட்டார் பாடல்கள், நாட்டுப்புற மக்களின் துன் பங்கள், தொழில் முறைகள், வாழ்க்கை நடைமுறைகள், நம்பிக்கைகள் முதலியவற்றை பின்னணியாகக் கொண்டவை. மலையகத்தின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் இந்தக் கலைகள் மக்களை ஒன்றிணைத்து, தொடர்பு கொள்ளும் வழிமுறை ஊடாக சமூக உறவுகளை வலுப்ப டுத்துகின்றன. மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு நாட்டார் கலைகளில் ஈடுபடுவது அவசியம். மனதை ஒருமுகப்ப டுத்தி, மன அழுத்தத்தை குறைக்கவும் ஆரோக்கியமாக வாழவும் கலைகள் உதவுகிறது. இந்தக் கலைக ளைப் பாதுகாப்பது நம் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கு சமம். நவீன உலகில், நாட்டார் கலைகள் மறக்கப்பட்டு வரு கின்றன. இளைஞர்கள் நவீன கலாசாரத்தால் ஈர்க்கப்பட்டு, பாரம்பரிய கலைகளில் ஆர்வம் காட்டுவதில்லை. இதனால், பல கலைகள் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன. மலையக நாட்டார் கலைகள், ஒரு சமூகத்தின் அடையாளம் மற்றும் பாரம்பரியத்தின் அடை யாளம். இந்தக் கலைகள் அழிந்துவிட்டால், மலையக மக்களின் தனித்துவமான அடையாளமும் அழிந்துவிடும். எனவே, இந்தக் கலைகளைப் பாதுகாத்து, வருங்கால சந்ததியின ருக்குக் கொண்டு செல்வது நம் அனைவரின் கடமையாகும்.

உசாத்துணை:


- இ. பாலசுந்தரம், நாட்டார் இசை: இயல்பும் பயன்பாடும், நாட்டார் வழக்கியல் கழகம், யாழ்ப்பாணம், 1991.



laksharan.sarawanan@thaiveedu.com



Gajavindan.k@thaiveedu.com



நீர்ப்பண்பாடு x தீப்பண்பாடு

எனும் எதிர்வுத்தளப் பண்பாட்டு மோதுகைகளுக்கிடையே
'தமிழ்மை'யின் தனித்துவத்தைக் கண்டுபிடித்தல்

- தென்னவன் வெற்றிச்செல்வன்



பண்பாடு எப்போதுமே ஒற்றைப் பண்பாடாக இருந்ததில்லை. பன்மைத்துவம் வாய்ந்ததாகவே காணப்படுகிறது என்பதை மனங்கொள்ளவேண்டியுள்ளது. வட்டார அடிப்படையிலும், வருண அடிப்படையிலும், வர்க்க அடிப்படையிலும், தொழில்சார் அடிப்படையிலும், இன / நிற / பால் அடிப்படைகளிலும் பன்மைத்துவம் நிலவுகிறது. ஆயினும் பொதுமைப்படுத்திப் பார்க்கத்தக்க கூறுகளும் இருக்கவே இருக்கின்றன. அந்த வகையில், நீர் சார்ந்த பண்பாட்டுப் பதிவுகளை இங்கு ஆயலாம்.

நீர் எனும் சொல் தமிழில் நீரை மட்டுமன்றி, பல்வேறு சிறப்புப் பொருள்களையும் தருவதோடு, தமிழ்ப் பண்பாட்டில் கனதியான பேரிடத்தையும் பெற்றுள்ளது. சங்கச் செவ்வியல் இலக்கியங்களில் நீர் என்ற சொல் 648 இடங்களில் காணப்படுகிறது. நீர் வேர்ச் சொல்லாக இருந்து புதுப்புது சொற்களாகி, பல்பொருள் தருவதைப் பார்க்கமுடியும். அப்படி, தமிழில் 'நீர்மை' என்று சொன்னால் 'சிறப்பு' என்று பொருள் குறிக்கிறது.

நீர்மட்டம் பார்த்தல்; நீராணிக்கர்; நீர்விழவெடுத்தல்; நீர் அளாவுதல்; நீராட்டுதல்; நீர் வார்த்துக் கொடுத்தல்; நீர்மாலை; என நீர் வழியாகவே வாழ்வின் பெரும்பான்மை நிகழ்வுகள் நடத்திச் செல்லப்படுவதை நாம் பார்க்கிறோம். எனவே நீரின்றி அமையாது உலகு எனத் தமிழ் மரபில் போற்றப்படுவதில் வியப்பில்லை.

நம்முடைய மரபில் தமிழை இயல்தமிழ், இசைத்தமிழ், கூத்துத்தமிழ் என்று நாம் வழக்கமாக வழிவகைப்படுத்தி வைத்திருக்கிறோம். இதிலே காலனியகாலத்தில் ஒரு புதிதான தமிழ் வந்து சேர்ந்தது. ஆங்கிலேயர்கள் தமிழர்களை விரட்டி வேலைவாங்க உருவாக்கப்பட்ட அது 'கூலித்தமிழ்' எனப்படுகிறது. அந்தக் கூலித்தமிழை உருவாக்குகிறபோது, இவர்களை வேலைவாங்க முடியவில்லையே என, வெள்ளைக் காரர்கள் ஒருவருக்கொருவர் புலம்பிப் பேசிக்கொண்டிருக்கிறபோது, ஒரு வெள்ளைக்காரன், 'தமிழர்கள் பேசுவது ஒன்றுமே புரியவில்லை, பேசத்தொடங்கினால் மேலிருந்து நீர் கொட்டுவது போலச் சத்தம் வருகிறது' என்று சொல்கிறான். எங்க வரைக்கும் நீர் வருது பாருங்க. நம்ம பேச்சே நீர் ஓசைத்

தன்மை கொண்டதாக அல்லது நீரோசையைப் போல இருக்கிறது என்று பேசுகிறார்கள் வெள்ளையர்கள். (தெ. வெற்றிச் செல்வன், மே-17 இயக்க அறிவர் மாநாட்டு, உரை)

ஆக்கச்சடங்கு x அழிப்புச்சடங்கு; நீர்ச்சடங்கு x தீச்சடங்கு என்றெல்லாம் முரணிக்கொண்ட சடங்குகளைப் பார்க்கிறோம். காடுகொன்று நாடாக்குகின்ற, குளம் தொட்டு வளம் பெருக்குகின்ற, நீரைத்தேக்கி வளநாடாக்குகிற மன்னனைத்தான் சங்கச்செவ்வியல் இலக்கியங்கள் உயர்த்திப் பேசுகின்றன.

நீர்நிலைக் காவலர் என்கிற ஒரு பதவியே நம்முடைய சமூகத்தில் உண்டு. கீழத் தஞ்சையில் 'நீராணிக்கன்' என்று சொல்லுவார்கள். நீராணிக்கன் என்கிற ஒரு பதவி நம்முடைய தமிழ் இனக்குழுமத்தில் அடிப்படையான, ஊரின் மிகமுக்கிய ஒரு பணியாக இருக்கிறது. (சிந்துவெளி மரபில் நீர்ப்பாசன அலுவலர் இருந்ததாகச் சொல்லப்படுவதன் வளர்நீட்சியாக இதை இங்கு பொருத்திப்பார்க்கலாம்.) வண்ணான் மானியம், பரியாரி மானியம், வெட்டியான் மானியம், கூத்தியாள் மானியம், நீராணிக்க மானியம் என்றெல்லாம் கிராம சமுதாய அமைப்பில் உண்டு. நீராணிக்கன், நீர்மேலாண்மை செய்கின்ற ஒரு சேவைக்குடியாக இருக்கிறார். நிறையச் சொல்லலாம் இதேபோல். மடையர் (மடையடைப்பவர்= மடையர்) என்ற சொல்லையும் இழிபொருளில் ஆள்வது பெருவழக்காகி விட்டது. வெள்ளாண்மை கருதி நீர்மடையை அடைப்பதால் தொழிற்பெயர் ஆன மடையர் வெள்ளப்பெருக்கின்போது முட்டுக் கொடுப்பதால் (பிற்காலங்களில் தேரோட்டத்தின்போது தாறு மாறாகத் தேர் ஓடாமல் இருக்க முட்டுக்கட்டைகள் கொண்டு முட்டுக்கொடுக்கிறவர்களுக்கும்) தொழிற் பெயர் ஆன முட்டாள் என்கிற சொற்கள் மடையன், முட்டாள் என்று ஏசுவதற்கான இழிபொருளில் ஆரிய மரபினரோ ஆதிக்கவாதிகளோ உருவாக்கி உலவவிட்டிருக்க வேண்டும்.

மேலும், நீர்விளையாட்டு (நீர்விழவு) நீர்வார்த்தல், நீர்மாடம் (பள்ளியோடம் எனும் தோணி) நீர்ப்படை, (போரில் புறமுதுகிடாது விழுப்புண்பட்டு இறந்த போர்வீரனின் தகைமையை நடுகல்லில் பொறிக்குமுன் நிகழ்த்தப்படும் சடங்கு) நீர்வழிபாடு, நீர்நாடு (சோழநாடு), நீர்த்தூம்பு / நீர்ப்பத்தர் (மதகு), நீரவன் (அறிவுடையோன்), நீராணிக்கண் (ஏரி மதகின் காவலன் - நீர்நிலைக் காவலர் என்று அருளியாரின் அருங்கலைச் சொல் அகரமுதலி தருகிறது - (Watter Balliff), நீர்க்கடன் (நீத்தார்க்கடன்), இவற்றையெல்லாம் தருகிறது, ந.சி.க.-வின் செந்தமிழ் அகராதி. கருப்பக்கிளர் ராமசாமிப்புலவர் தொகுத்த தொகையகராதி, நீர் நிலைகளுக்கு இலைஞ்சி, பண்ணை, ஏல்வை, குண்டம், அலந்தை, பொய்கை, வலயம், சுனை, சிறை, பட்டம், உடுவை, பயம்பு, படுகர், குட்டம், தாங்கல், கோட்டகம், எரி, உவளகம், மடு, ஓடை, படு, தடம், வாவி, தடாகம், ஆவி, சூழி, கிடங்கு, சலதரம், கேணி, பணை, கயம், பல்வலம், நளினி, இலந்தை, மூழி, குழி, குளம் ஆகிய பல்பொருள்களைத் திரட்டித் தருகிறது, தொகையகராதி (பக்:145).

தமிழில் சிறப்பு என்பதைக் குறிக்க நீர்மை என்ற சொல் ஆளப்படுகிறது என்று கண்டோம். நீர்மை = நிலைமை, குணம், ஒப்புரவு ஆகிய பொருள்களைத் தருகிறது, பவானந்தர் அகராதி. சரிமட்டம் பார்ப்பதற்கு 'நீர்மட்டம்' என்றும் சொல்லுவது வழக்கமாக இருக்கிறது. கொத்தனாரோ, தச்சரோ மட்டப்பலகை / குண்டுநூல் வைத்துச் சரிமட்டம் பார்க்கிறார் இல்லையா! அதற்குக்கூட நீர்மட்டம் (ரசமட்டம்) என்று சில பகுதிகளில் சொல்வது வழக்கமாக இருக்கிறது. பணத்தாள், மரம் இவற்றில் உண்மைத் தன்மை மதிப்பிட, நீரோட்டம் பார்ப்பது என்று சொல்லுவார்கள். சரிமட்டம் பார்க்கும் கருவிக்கு, நீர்மட்டம் என்ற பெயரையும் அது தருகிறது (பக்: 312). நீரகம் என்பதற்குப் பூமி என்று பெயர் தருகிறது, கழக அகராதி (பக்: 615) நீர்வரைப்பு என்பதற்குப் பூமி என்ற பொருளிருக்கிறது.(பிங்கலநிகண்டு.) நீர்வலயம் என்றும் இதைக் குறிப்பிடுகிறது, ந.சி. கந்தையாவின் செந்தமிழ் அகராதி. இப்படியாக நீர் நம்முடைய சமூகத்தில் அளப்பரிய பங்கைக் கொண்டதாக, ஒருவகையில் நீரை முதன்மைப்படுத்தும் பண்பாடாகத் தமிழ்ப் பண்பாடு விளங்குகின்றது எனலாம். அதனால்தான் 'நீர்மாலை எடுத்தல்' என்கிற இறப்புச் சடங்கு வரையிலும், அது கடைசி வரைக்கும் வந்து கொண்டே இருக்கிறது.

ஒரு சாதாரண 'தண்ணீர்ப் பந்தல்' என்கிற பண்பாடுகூட, கோடைக்காலத்தின் அந்தக் கொடுந்தகிப்பைத் தவிர்ப்பதற்காக, ஆனால் வேறு ஒரு பொருளில் சடங்கியல் நிகழ்த்துக் கலையாக, தீ மூட்டிக்கொண்டு இறந்துபடுகிற அந்த உயிர்களைச் சாந்தப்படுத்துவதற்காகத் தண்ணீர்ப் பந்தல் வைப்பது வழக்கமாக இருந்திருக்கிறது என்கிற பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை நாம் பார்க்கிறோம். வேளாண் சமூக வாழ்வியல் பின்புலத்தில் இப்படி நீர் இன்றியமையாததாகக் கருதப்படுவதில் வியப்பில்லை.

கீழத்தஞ்சைக் கிராமங்களில் 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்கக் கூடாது' என்பது பழமொழியாக உலவுவதைக் காணமுடியும். அதுபோல 'நீரும்சோறும் விற்பனைக் கானதல்ல' என்கிற தமிழ்ப்பண்பாடு, விஜயநகரப்பேரரசு வரை நிலைத்திருந்ததாக ஆய்வறிஞர் தொ. பரமசிவன் சொல்வதும், திண்ணையில் தண்ணீர்ப் பானை ஒன்று வைக்கப்பட்டு வழிப்போக்கரின் தாகம் தீர்த்ததுபோல, திருநெல்வேலிச் சீமையில் குருவிகளின் தாகம் தீர்க்க, வீட்டு முன்றிலில் குருவிக் கிண்ணம் வைத்து நீரூற்றி வைப்பது வழக்கம் என்றும், வீட்டுக்காரர்கள்தான் என்றில்லை அவ்வழியே தண்ணீர் எடுத்துக்கொண்டு போகிற யார் வேண்டுமானாலும் யார் வீட்டு முன்றிலில் வேண்டுமானாலும் குருவிக்கிண்ணம் காலியாகியிருந்தால் தண்ணீர் ஊற்றிச்செல்வது சிறந்த பண்பாட்டு நடவடிக்கை என்று எஸ். ராமகிருஷ்ணன் பேசுவதும் ஊன்றி கவனிக்கத் தக்கது.

மருதநில நாகரிகம் முழுவதும் நீராதாரம் சார்ந்து எப்படி வாழ்வைக் கட்டமைத்துக்கொண்டது என்பதும், வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் நீர் எப்படி முதன்மையாயிருந்து என்பதும், இதற்கு நேர்மாறாக மேய்ச்சல் நாகரிகம் முற்றுமுழுக்க எப்படி நெருப்பை முதன்மைப்படுத்தி, அதன் பண்பாட்டைக் கட்டமைத்துக் கொண்டது என்பதும் அதன் காரணமாகவே இரு பிளவுபட்ட திராவிட x ஆரியப் பண்பாடுகள் அல்லது எதிர்க் கதையாடல்கள் எப்படி உருவாகின என்பதான பின்புலத்தை வரலாறுகள் வழக்காறுகள் மூலம் முன்னெடுக்க முடியும்.

வேதங்களிலோ இந்திரன் மேகத்தைத் துண்டுதுண்டாக வெட்ட மழை பொழிந்தது எனும் புனைவுகள் (குறிப்பாக ரிக் வேதம்) காணப்பட, தமிழ் மரபோ சமயச் சார்பற்றதும், அறிவியல் அடிப்படை கொண்டிலங்குவதும் என்பதற்கான

சான்றாதாரமாக சங்கச் செவ்வியல் பனுவல்கள் திகழ்கின்றன.

இந்திரன் மேகத்தைத் துண்டுதுண்டாக வெட்டியதால்தான் மழை உண்டாகிறது எனும் புராணீகம் பட்டினப்பாலையில் தகர்க்கப்பட்டு மழையை அறிவியலாகப் பரிமளிக்கச் செய்யும் பாடல்:

'வான் முகத்த நீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்த நீர் கடல் பரப்பவும்
மாரி பெய்யும் பருவம்போல்
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்திலிருந்து நீர்ப் பரப்பவும்'

என்று மழைச்சித்திரமாகிறது.

'அர்ஜுனன் தனது அஸ்திரங்களால் காண்டவ வனத்தை மூடினான். அங்கிருந்து எந்தப்பிராணியும் தப்பிக்க முடியாதது போலாயிற்று. காண்டவ வனம் எரியும்போது தக்ஷகன் என்னும் நாகர்களின் அரசன் குருக்ஷேத்திரத்திற்குப் போயிருந்தான். அவன் மகன் அசுவஸேனன் அங்கிருந்தான். தீயிலிருந்து விடுபட்டு ஓடிவிட மிகவும் பிரயத்தனப்பட்டான்... முடிய வில்லை. அசுவஸேசனனின் தாயாகிய நாக கன்னிகை அவனை விடுவிக்கும் பொருட்டு அவனை விழுங்கினாள். பின்னர் மேலே கிளம்பினாள். தயாராக நின்றுகொண்டிருந்த அர்ஜுனன் அந்த நாககன்னிகையின் தலையை அறுத்தான். மேலிருந்து அதை இந்திரன் பார்த்தான். அசுவஸேனனை விடு விப்பதற்காகத் தாங்கமுடியாத காற்றையும் மழையையும் உடனே வரவழைத்து அர்ஜுனனை மயக்கமுறச் செய்தான். அந்தச் சமயத்தில் அசுவஸேனன் விடுபட்டான். மூர்ச்சை தெளிந்த அர்ஜுனன் அந்த அசுவஸேனனை 'நீ நிலையற்ற வனாகப் போகக் கடவாய்' என்று சபித்தான். அப்போது கிருஷ் ணனும் சபிப்பதில் சேர்ந்து கொண்டான். அர்ஜுனனுக்குப் பெரும் கோபம் ஏற்பட்டது. இந்திரனுடன் துவந்தயுத்தம் செய்ய ஆரம்பித்தான். இருவரும் ஆக்ரோஷமாகச் சண்டையிட் டார்கள். இடிமின்னல்கள் உண்டாக்கும் அதிகமழை வர் ஷிக்கும் அஸ்திரத்தை இந்திரன் பிரயோகிக்க அர்ஜுனன் வாயுவாஸ்திரத்தைப் பிரயோகித்து அடக்கினான். சட்டென்று மழைத்தாரகைகள் மறைந்துபோயின. இருள் நீங்கியது. குளிர்ந்த காற்று வீசி அமைதியான சூழல் நிலவியது. அக்னி இன்னமும் ஆவேசத்துடன் பிராணிகளின் கொழுப்பை விழுங்கி எரிய ஆரம்பித்தான். இப்போது பக்ஷிகள் கூட்டம் கிருஷ்ணார்ஜுனர்களை எதிர்த்தது. அவர்களோடு நாகர் களும் விஷத்தைக் கக்கிக் கொண்டு அர்ஜுனன் அருகில் வந் தார்கள். பாணங்களினால் அவற்றை அறுத்தான், அர்ஜுனன். இந்திரனுக்குக் கோபம் பொங்கியது. வஜ்ராயுதத்தை ஓங்கிக் கொண்டு ஐராவதத்தில் ஏறி, அர்ஜுனனுடன் சண்டையிடுவ தற்கு வந்தான். இந்திரனே வஜ்ராயுதத்தைத் தூக்கிய பிறகு இதர தேவர்களும் ஆயுதபாணிகளாகக் களம் புகுந்தார்கள். கிருஷ்ண அர்ஜுனர்களை எதிர்த்து யுத்தம்செய்ய வந்தார்கள். அர்ஜுனன் அனைவரையும் பந்தாடினான். தேவர் கூட் டத்தையே பின்வாங்கச் செய்த கிருஷ்ண அர்ஜுன பராக்கிர மத்தைக் கண்டு ரிஷிகள் வியந்தார்கள். இந்திரன் சினத்தால் முகம் சிவந்தான். அர்ஜுனனின் பராக்கிரமத்தை அறிய விரும்பிய இந்திரன் கல்மழை பொழியச் செய்தான். அர்ஜு னனின் காண்டீபத்திலிருந்து புறப்பட்ட அம்புகள் கற்களை மறைத்து விண்ணுலகம் அனுப்பியது. இந்திரன் அதிர்ந்தான். பின்னர் அதைவிட வேகமாகக் கல்மழை பொழியச்செய்தான். அர்ஜுனன் அசரவில்லை. மின்னலெனப் புறப்பட்ட அம்புகள் அவைகளைத் தடுத்தன. இங்கே யுத்தம் நடந்துகொண்டிருக் கையில் அக்னி தனது வேலையில் மும்முரமாக இருந்தான். காண்டவவனத்தின் முக்கால் பங்கை பக்ஷித்திருந்தான். இந்திரன் உடனே மந்த்ர மலையின் மரங்களடர்ந்த ஒரு சிக ரத்தைப் பெயர்த்து அர்ஜுனன் மீது எறிந்தான். ஜ்வலிக்கின்ற அம்புகளை அதன் மீது எய்தான், பார்த்தன். அந்த மலைச்சி கரம் ஆயிரமாயிரம் துண்டுகளாக உடைந்து காண்டவ வனத்தின் மீது விழுந்து எஞ்சியிருந்த பிராணிகளைக் கொன்றது. [காண்டவதாஹ பர்வம் முடிந்தது] அடுத்து மழையைத் தடுக்க, அருச்சுனன் அம்பினால் சரக்கூடம் அமைத்தல்... என்று புளுகுமூட்டைகள் கணக்கத் தொடங்கிவி டுவதால் இத்துடன் நிறுத்திக்கொள்வோம் வேதப் பரப் புரையை. இனி நமது அறிவார்ந்த மரபுக்கு மீள்வோம்.

நமது திராவிடத் தமிழ் மரபில் ஓடை, ஆறு மட்டுமே இயற் கையாக அமையப் பெற்றவை. தடுப்பணை, மணற்போக்கி, ஏரி, குளம், கலிங்கு, மதகு, தூம்பு போன்றவையும் கொப்பு, கிளை, வாய்க்கால் போன்றவையும் மக்களால் ஏற்படுத்தப் பட்டவை. பருவமழைக் காலங்களில் பெய்யும் மழைநீர், ஆறுகள் ஓடைகள் வழியே ஓடிவரும். இதனைத் தடுப்ப ணைகள் அமைத்துத் தேக்கி, அங்கிருந்து கால்வாய்கள் வெட்டி, கால்வாயினுள் நீரினைத் திருப்பி, குளங்களில் சேமித்து வைத்துக்கொள்ளும் வழக்கம், பன்னெடும் காலத் திற்கு முன்பே தமிழர்களிடம் இருந்துள்ளதற்கு ஏராளமான கல்வெட்டு, செப்பேடு, இலக்கியச் சான்றுகள் காணப்படு கின்றன. நீரின் அவசியத்தையும் நீரினைச் சேமிக்கும் தொழில்நுட்பத்தையும் பழந்தமிழர்கள் நன்கு உணர்ந்திருந் தனர் என்கிறார், முனைவர் மணிமாறன். மண் கட்டுமானத் திலும் (Mud Architechture) கற்கட்டுமானத்திலும் (Stone Architechture) சாலச்சிறந்த தமிழ்ப் பண்பாட்டின் சமகாலம் வரை தொடரும் சான்றாக இன்றுவரை விளங்குவது, ஆங்கிலேய நவீனக் கட்டுமானப் பொறியியளாளர்களை வியக்க வைத்த கல்லணை.

'இருபுனலும் வாய்த்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு'

என்கிறார் திருவள்ளுவர்.

'நீர்ப்பிழை புரிதல் ஊர்ப்பிழைத்தற்றால்
நெடுமுடி மன்னவன் கடுஞ்சினம் கொள்ளும்'

என்று பாண்டியர்காலக் கல்வெட்டு ஒன்றைச் சான்று காட்டு கிறார், மணிமாறன். நாட்டின் வளமை, நீரை அடிப்படையாகக் கொண்டதாகத் திராவிடத் தமிழ்ப்பண்பாடு கட்டமைந்திருக் கிறது. எனவே இந்த மருதநிலப் பண்பாடு முற்போக்குப் பாய்ச்சலோடு இருப்பதை நாம் பல சான்றுகளின் வழியாகக் கண்டடைகிறோம். நீரைத் தேக்கக்கூடாது அது பாவம் என்று கருதித் தேங்கிய ஆரியப் பண்பாடு ஒருபுறம். நீரைத்தேக்கி அணைக்கட்டுகள் கட்டி, வேளாண்மை செய்யமுடியும், முன் னோக்கிப் பாயமுடியும்; நாகரிகம் பண்பாட்டை வளர்த்தெ டுக்க முடியும் என்கிற நம்பிக்கை கொண்டு உழைத்து வளர்ந் திருக்கிற மருதநிலச் சமூகப் பண்பாடு, திராவிடப்பண்பாடு.

'மழைபிணித்(து) ஆண்ட மன்னவன்' (வரி.26-28) என்று மழையைப் பயன்கொண்டு மேலாண்மை செய்யும் ஆற்றலா



ளனாக மன்னர்கள் இருந்தார்கள் எனச் சிலப்பதிகாரத்திலும், 'நிலன் நெளிமருங்கின் நீர்நிலைபெருக' (புறம்-18,28-30) என்றவாறு தோதான பள்ளங்களில் நீரைத்தேக்கி வளம்பெருக்கும் மன்னர்கள் சிறந்தார்கள் எனப் புறநானூற்றிலும், பெருங்குளங்களாகிய பேரேரிகளின் ஒருபுறம் உள்ள சிறிய சுருங்கை (சுருங்கை' என்பது பூமிக்கடியில் செல்லும் சிறிய குழாய்) வழியாக அங்கு தேக்கப்பட்ட நீர் வெளியேறி மக்களுக்கு அளவிட இயலாத வகையில் பயன்தருவதுபோல, செவித்துளைவழியே நல்ல அறக்கருத்துகள் உள்ளத்தைச் சென்றடையும் என்பதாக அமையும்,

'பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி அளப்பரு நல்லறம்
உளமலி உவகையொடு உயிர்கொளப் புகும்'

மணிமேகலை - 1384-87

என்று சாத்தனாரும் 'பெருகிவரும் படையை ஒருவீரன் தடுத்து நிறுத்திப் போராடுவது போல், ஆற்று வெள்ளத்தைக் கற்சிறை தடுத்து நிறுத்துகிறது' (தொல்.பொருள்:725-726) இத்தகு தடுப்பணை 'கற்சிறை' எனும் அழகுத்தமிழ்ச் சொல்லால் தொல்காப்பியரும் பாடிச் சென்றிருப்பது, நீர்ப் பண்பாட்டுக்கு வலிமைசேர்க்கும் இலக்கியச்சான்று மூலங்களாகக் கொள்ளத் தக்கன.

மாறாக, நமது மூதாதையர் கட்டியிருந்த நீர்த்தேக்கங்களை, அணைக்கட்டுகளை ஆரியர்கள் வலுவந்தமாக உடைத்துச் சிதைத்துள்ளனர் என்பதற்கு இந்தப்பகுதி சான்றாக அமைகிறது. 'சிந்துவெளி முழுதும் தாசர்கள் (திராவிடர் / தமிழரின் மூதாதையர்) பரவி வாழ்ந்தனர். ஆற்று ஓரங்களிலும் மலைகளிலும் காட்டுப்பகுதிகளிலும் தக்கமுறையில் அரண் அமைத்து வாழ்ந்த அவர்கள், அணைகள் கட்டுவதிலும் சிறந்தவர்கள். சிறப்பாக வேளாண்மையை நம்பி வாழ்ந்த தாசர்கள் நீர்த்தேக்கங்களை நன்கு பாதுகாத்து வைத்திருந்ததில் வியப்பு ஏதும் இல்லை. நீர்த் தேக்கங்களை தங்கள் வாழ்க்கைத் துணைவியாரைப் போன்று பாதுகாத்து வந்தனர். அதற்கென்று பல நீர்த்தேக்கப் பாதுகாவலர்களை நியமித்திருந்தனர். பொ.ஆ.மு. 1700-ஆம் ஆண்டுகளில் அகி என்ற தாசன் அதற்குத் தலைவனாக இருந்தான். தாசர்களின் நீர்த் தேக்கங்களைக் கண்ட ஆரியர்கள் வியப்படைந்தனர். அதற்கு முன்பு அணைக்கட்டுகளைக் கண்டிராத ஆரியர்களுக்கு அது வியப்பாகத்தானே இருக்கும்! மாடு மேய்த்து வந்த ஆரியர்களுக்கு மாட்டு மந்தைகளை ஒரே இடத்தில் அடைத்து வைத்திருப்பது ஒன்றுதான் தெரிந்திருந்தது. எனவே மாட்டு மந்தைகளை அடைத்து வைத்திருப்பது போல இந்தத் தாசர்கள் தண்ணீரைப் பிடித்து அடைத்து வைத்திருக்கிறார்கள். இந்திரனே கட்டுத் தறியிலிருந்து மாட்டை அவிழ்த்து விடுவதுபோல், சிறை பிடித்து வைத்திருக்கின்ற இந்தத் தண்ணீரை அவிழ்த்துவிடு இந்திரா (ரிக்வேதம்) என்று ஆரியர்கள் கூச்சலிட்டனர். அகி என்பவனின் பாதுகாப்பில் இருந்த நீர்த்தேக்கத்தை இந்திரன் உடைக்கச் சென்றான். அகியால் இந்திரனைத் தடுக்க முடியவில்லை. பல ஊர்களும் நகரங்களும் தாசர்களும் நீரில் மூழ்கி அழிந்தனர். இந்திரன் அகியைக் கொன்று ஆறுகளை விடுதலை செய்தான். மீதமுள்ள அணைக்கட்டுகளை கண்காணித்து வந்தபோது ஏதோ ஒரு அணைக்கட்டு அருகில் இருந்த விருத்திரனையும் அவன் ஆட்களையும் பார்த்துவிட்டான் இந்திரன். அணைக்கட்டை உடைத்து விருத்திரனைத் தாக்கிக் கொன்றான்.' என்று எழுதிச்செல்கிறார், குருவிக்கரம்பை வேலு, தனது 'சிந்து முதல் குமரிவரை' நூலில்.

இப்படி, ஆரியப்பண்பாடு தீப்பண்பாட்டாகவும் திராவிடப் பண்பாடு நீர்ப் பண்பாடாகவும் அமைந்து எதிர்வுநிலை எடுத்துள்ளதை இங்கு கவனிக்கமுடியும். வேதகாலத்தில் தஸ்யூக்களின் (திராவிடத் தமிழர்களின்) நீர்த்தேக்கங்களை உடைக்க ஆற்றல் தரும் வேண்டுதல்களை அல்லது உடைத்துத் துவம்சம் செய்யக்கோரும் வேண்டுதல்களைப் பரக்கப் பேசும் ஸ்ருதிகளைப் படித்த நினைவு மோதுகிறது. (குருவிக்கரம்பை வேலு, ரிக்வேத மொழிபெயர்ப்பு)

'விருத்திரனும் ஆரியப் போர்களும் என்ற ஆறாம் அத்தியாயம், ரிக்வேத சமூகத்தை நமக்குத் தோலுரித்துக் காட்டும் விதமாக அமைந்துள்ளது. விருத்திரன் என்பவன் ஆரியர்களின் முக்கிய எதிரியாக உருவகப்படுத்தப்படுகிறான். இவன் நீர் நிலைகளில் நீரைத் தேக்கிவைத்து வறட்சியை ஏற்படுத்துபவன் என்கிறது, ரிக்வேதம். பாம்பு அல்லது நெருப்புப் பறவை போன்று நீரின் போக்கைத் தடுத்து அதற்குத் தடையாக இருப்பவன் விருத்திரன் என்கிறது, ரிக் வேதம். நதிகளைத் தெய்வங்களாகக் குறிப்பிடும் ரிக்வேத மக்களுக்கு, நீரின் போக்கைத் தடுக்கும் விருத்திரன் முதன்மையான எதிரியாகத் தோன்றினான். எனவே விருத்திரனைக் கொல்வதற்காக இந்திரன் எடுத்த முயற்சியும் கூட்டணியும் மிக முக்கியமானதாகும். இந்திரன் தனது கூரிய வஜ்ராயுதத்தால் விருத்திரனை அடித்தபோது எல்லாத் தேவர்களும் மகிழ்ந்தார்கள் என்று விருத்திரன் கொல்லப்பட்டது பற்றிக் கூறுகிறது ரிக் வேதம். அதன் பின்னர் விருத்திரன் அடைத்து வைத்திருந்த நீரை ஆரியர்களுக்காகத் திறந்து விட்டான் இந்திரன் என்று, ரிக் வேதம் கூறுகிறது (ஆ. பத்மாவதி, தொல்லியல் ஆய்வாளர், சுந்தர சோழன், ரிக்வேத சமூகம் நூல் மதிப்புரை)

இதன் தொடர்ச்சியாக, மனுதர்மம், பாரதம் சாந்திப்பருவம், போன்றவற்றையும் ஒத்தும் உறழ்ந்தும் பார்த்தால், ஆரியர்கள் இங்கு வந்தபோது பூர்வகுடிகளான தாசர்களாகிய திராவிடத் தமிழர்களை எதிர்கொண்டு, அவர்கள் சமயச்சார் பற்றவர்கள், நாத்திகர்கள், பார்ப்பனர்களைக் கடுமையாகத் தாக்குபவர்கள், நீரைத் தேக்குபவர்கள் என்றெல்லாம் வருணிப்பதைக் கொண்டால், திராவிடத்தமிழ்ப் பண்பாட்டின் தர்க்



கபூர்வ முக்கியத்துவமும் அறிவியல் அடிப்படையிலான தனித்துவமும் துலங்கும்.

வேதங்களை நிந்திப்பவனாகவும் தர்க்கத்தில் பற்றுள்ளவனாகவும் சாத்திரங்களை மறுப்பவனாகவும் பிராமணர்களைக் கடுமையாகத் தாக்குகிறவனாகவும் நாத்திகனாகவும் எல்லாவற்றையும் அய்யப்படுகிறவனாகவும் இருப்பவன், நரியாகப் பிறப்பான் என்று பாரதம் சாந்தி பருவம் கூறுகிறது. (சிந்து முதல் குமரிவரை, பக்: 117)

'சோமா! தானம்கொடுக்காத எங்கள் எதிரி ஆன, கடவுளை நம்பாத, தெய்வமற்ற தாசர்களை (திராவிடர்களை)த் தூரத்தில் துரத்து. இது வேதவாக்கு.' ரிக்9-60/25 (சிந்துமுதல் குமரிவரை, பக்: 118)

மேற்கண்ட மேற்கோள்கள் வழி ஆய்வுப்பயணம் மேற்கொண்டால், சமயச்சார்பற்ற சங்கச் செவ்வியல் இலக்கிய காலத்தை வந்தடையலாம். எனவேதான் கீழடி உள்ளிட்ட எந்த அகழ்வாராய்ச்சியிலும் அகழ்வுக்குழிகளில் ஒரு சமய அடையாளத் துரும்புகூடக் கிடைக்கவில்லை.

இன்னொருபுறம் வழக்காற்று ஆய்வியல் முறையில், சிவனுடைய தோற்றத்தை, புழங்கு பொருள்களை, வாகனத்தை வைத்து வேட்டைச்சமூகப் பிரதிநிதி எப்படி வேளாண் உற்பத்திச்சமூகப் பிரதிநிதி ஆக மாற்றம் பெற்றிருக்கிறார் என்பதை ஆய்வுக்கண்கொண்டு நோக்கமுடியும். வேட்டைச்சமூக மனிதனாக, சிவனைப் பார்ப்பதற்குப் போதுமான அடையாளங்கள் புலியினது தோல் அரைக்கசைத்த தோற்றம், மழுவாயுதம், தோளில் கிடக்கிற பாம்புகள், வேட்டைக்கு உதவிய பைரவர் (நாய்) இவையெல்லாம் வேட்டைச் சமூகப் பிரதிநிதி என்பதன் பூர்வ அடையாளமாக இருந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் மலைக்காட்டிலிருந்து கீழிறங்கி; வேட்டைச் சமூகத்திலிருந்து மாறி, சமவெளி உற்பத்திச் சமூகப் பிரதிநிதி ஆகையில் அவருடைய வாகனத்தை இடபம் (ரிஷபம்) என்று பின்னாளில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். மருதநில வேளாண் சமூகத்துக்கு நீர் தலையாயது என்பதால் நீர்நிலையைத் (கங்காவை) தலைமீது சுமந்து இருக்கிறதாகத் தோற்றம் மாற்றம் பெற்றிருக்கவேண்டும். 'வேள்விக்காகவே பசுக்கள் பிரம்மனால் உண்டாக்கப்பட்டுள்ளன. அந்தப் பசு வேள்வி செய்தால் உலகம் எல்லாம் நன்மை அடைகிறது. ஆகையினால் வேள்வியில் கொல்லப்படும் பசுக்கொலை இம்சை ஆகாது' (மனு அ-5 சூ-39) என்று நீதிப்படுத்திக் கொண்ட (Justification) வேதகால வழக்காறு, பின்னாளில் மாற்றம்பெற்று, ஆரியச்சமூகம் அல்லது மேய்ச்சல் சமூகம் கோமாதா என்று பசுவைப் புனிதமான தன்னுடைய அடையாளமாகக் கொள்ள, ஆனால், திராவிடச் சமூகம் காளையை அடையாளச் சின்னமாக, குலக்குறியாக வரித்துக்கொண்டது. சிந்து சமவெளிப் பண்பாட்டுக் காளை முத்திரையை இங்குப் பொருத்திப் பார்க்கலாம்.

இப்படியாக, திராவிடப்பண்பாடு நீரைப் புனிதமாகக் கருதினால், ஆரியப் பண்பாடு தீயைப் புனிதமாக கருதுகிறது. தீயில் எல்லாவற்றையும் ஆகுதியாக்க வேண்டும் என்கிற கட்டாயமான சடங்குமுறைமைகள் ஆரியப்பண்பாட்டில் இறுக்கமாகக் காணப்படுகின்றன. நவரத்தினங்கள், தங்கநகைகள், பட்டுப்புடவை, நெய், பல்வகை மரச்சுப்பிகள், குங்கிலியம் உள்ளிட்ட வாசனாதித் திரவியங்கள், போன்ற அனைத்து வளமான பொருட்களையும் தீயிலிட்டு நிறைவேற்றிக் கொள்ளும் அவிர் பண்பாட்டுச் சடங்காச்சாரங்கள் ஆரியப் பண்பாட்டில் இருக்கின்றன.

புவி ஈர்ப்பு விசையை எதிர்த்து மேல் நோக்கி எரியும் நெருப்பின் வழியேதான் அவிர்ப்பலி வழியாக அனுப்பப்படும் பலன்கள் மேலுலகுக்கு; பித்ருக்களுக்குச் செல்லும் எனும் நம்பிக்கைக்கு வேறு புறவழிச்சாலைகளற்ற நிலையில், நெருப்புப் பண்பாடு மேல்நோக்கியும், சமயச்சார்பற்ற; அவிர்ப்பலிச் சடங்குகளற்ற; வான்நின்று உலகம் வழங்கி வருவதால் தானமிழ்தம் என்றுணற் பாற்று, மழையை அறிவியல் அடிப்படையில் அணுகி உழந்தும் உழவே தலை என்று அறைகூவிய நீரின்றி அமையாத உலகு கீழ் நோக்கியும் கட்டமைந்தன எனலாம்.

அதைப்போல ஆரியப் பண்பாட்டுக் கோயில்களில், கலசம் இல்லாமலும், திராவிடப் பண்பாட்டுக் கோயில்களில் கலசங்களில் தானியமணிகளைப் பாதுகாத்து வைக்கிற முறைமையும் ஆய்வுக் கண்ணோட்டத்தில் பார்க்கலாம். நவ தானியங்களை வைக்கும் கலசங்கள், இடிதாங்கிக் கோட்பாட்டிற்கானவை என்று ஒரு வகையில் சொல்லப்பட்டாலும், அரிய தானிய வகைகளைக் கோவில் கலசங்களில் பேரழிவுகள் நேர்ந்தாலும் பாதுகாத்து விடமுடியும் என்ற ஒரு நம்பிக்கையோடு வைத்திருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இதுவல்லாது, ஆரியர்கள் நீரைத் தீட்டுக்கழிப்பதற்கான ஒன்றாக மட்டுமே பார்க்கிறார்கள். திராவிடர்கள் நீரின் மூலமாக அனைத்து நம்பிக்கைகளையும் கொள்கிறார்கள். சத்திய வாக்குக்கானதாகக் கருதுகிறார்கள். பூப்புனிதநீராட்டு தொடங்கி, நவதானியங்களை முளைக்கச் செய்யும் முளைப்பாரித் திருவிழா முதற்கொண்டு, திருமணச் சடங்கின்போது பெண்ணைத் தாரை வார்த்துக் கொடுக்கிறார்கள். திருமணம் முடிந்த கையோடு மணமக்கள் நவ தானியங்களை முளைக்கச்செய்யும் சடங்கு, இறப்புச் சடங்கின் ஒரு பகுதியாக நீர்மாலை எடுப்புச் சடங்கு என திராவிடப்பண்பாடு, நீரால் துலக்கம் கொள்ளும். சங்ககாலத்துத் தலைவனும் தலைவியும் நீரைக் குடைந்தாடுகிறார்கள். அண்மைக்காலம்

வரை ஆற்றுநீர் திறந்து விடப்படுகையில் அணைக்கட்டுத் தொடங்கி துலாக்கட்டம், மதகுகள் போன்ற இடங்களில் புதுநீரை மலர்கள் தூவி வாழ்த்தி ஆரவாரிக்கிறார்கள். ஆடிப் பெருக்கு கொண்டாடுகின்றார்கள். அந்தளவுக்கு நீர் சார்ந்த சடங்குகள் இங்கே முதன்மை பெறுகின்றன.

எனவே பன்முகப் பண்பாட்டுச்சூழல் இந்தியாவில் நிலவினாலும், இரண்டு மிக முக்கியமான பண்பாட்டு மோதுகைகளை நாம் கவனிக்கமுடியும். ஒன்று தீச்சடங்கு சார்ந்த பண்பாடு. மற்றொன்று நீர்ச்சடங்கு சார்ந்த பண்பாடு. மழை எப்படி உருவாகிறது? நீர் நிலைகள் எப்படி உருவாகின்றன? என்பது குறித்த கேள்விகளுக்கெல்லாம் ஆரியப் பண்பாடு, மேகங்களைக் கண்டதுண்டமாக இந்திரன் வெட்டுகின்ற புராணிகமான செயல்பாடுகளினால்தான் மழை உருவாகிறது என்று தர்க்கமற்றுச் சிந்திப்பதைப் படித்தோம். வளமான ஒரு சமூகத்தைக் கட்டமைத்துக்கொண்டு, ஒரு முற்போக்கான பண்பாட்டைத் தகவமைத்துக் கொள்ளுகிற மருதநிலச் சமூகத்தில் இருந்து, முற்றிலும் வேறுபட்டதாக அது இருக்கிறது. எனவே மேய்ச்சல் சமூகம் (ஆரியச் சமூகம்) பல நிலைகளிலும் உற்பத்திச் சமூகத்தில் (திராவிடச்சமூகம்) இருந்து பின்தங்கி விடுகிறது. அல்லது அறிவியல் அடிப்படையற்ற; தர்க்க நியாயமற்ற; பிற்போக்குச் சடங்காச்சாரங்களில் மூழ்கிவிடுகிறது. இந்தச் சடங்காச்சாரங்கள், மேய்ச்சல் சமூகத்தை முன்னேறிப் பாயமுடியாதபடி மக்களைப் பிளவுபடுத்துவதாகவும் ஏற்றத் தாழ்வு மிகுந்ததாகவும் மாற்றிக் கீழிருத்துகிறது. மருத நிலத்திலோ இப்படியான ஏற்றத்தாழ்வுகள் வந்து புகுந்தாலும் இது ஆரியத்தின் தாக்கத்தினால் நடந்த குழப்படியே தவிர, தொடக்ககால மருதநிலப் பண்பாடு இப்படி இருந்திருக்க வாய்ப்பில்லை என்பதாக நாம் அனுமானிக்க முடிகிறது.

இந்திரன் மேகத்தை இரண்டாகப் பிளந்து துண்டுபோடும்போது மழைபெய்வதாக 'டபாய்க்கிற' வடபுலத்து மழைபோல அல்லாமல்,

'நளி கடல் முகந்து செறிதக இருளி
கனை பெயல் பொழிந்து...'

என்று நற்றிணையிலும்' (289)

'பனித்துறைப் பெருங்கடல் இறந்து நீர் பருகிக்
காலை வந்தன்றால் காரே...'

என்று அகநானூற்றிலும் (183) தமிழ்ப்புலத்தில், சங்ககால இலக்கியத்தில் பெய்கிற மழை, கடலில் முகந்தும் நீராவி ஆனதாலும் இலைத்துளி வழி நீராவி மேலெழுந்ததாலும் பெய்வதாக அறிவியல் சிந்தனையால் அழகியலோடு பெய்கிறது.

'அறுகுளத்து உகுக்கும் அகல் வயல் பொழிந்தும்
உறுமிடத்து உதவாது உவர் நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி'

புறநானூறு - 143

என்று மழைநீரால் நிரம்பும் குளங்கள் பற்றிய செய்தியை வளமான ஒப்புமையாகப் பரணர் பாடுகிறார். எனவே நீர்மேலாண்மை குறித்து, மிகக் காத்திரமான பார்வையை, தமிழ்ச் சமூகம் கொண்டிருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டால், இங்கு இரட்டைப் பண்பாடுகளான ஆரியப்பண்பாட்டைவிடத் திராவிடப் பண்பாடு, நீரை அடியொற்றிய பண்பாடாக; வளமிகுபண்பாடாக; தர்க்க நியாயங்கள் கொண்ட பண்பாடாக இருந்திருக்கிறது.

வளமான பொருள்களையும் வேதம் ஓதி தீயில் அழிப்பது என்கிற அழிப்புச்சடங்கை மாற்றி, உற்பத்திப் பண்பாடாக முளைப்புச்சடங்கை முதன்மைப்படுத்துகிற மருதநிலப் பண்பாடு இந்த வகையில் நீர்மைப் பண்பாடாக விளங்குகிறது. தர்க்கமும் துலங்குகிறது. நிலம், நீர், நெருப்பு, வளி, விசும்பு, என ஐம்பொறிகள் கலந்த முயக்கமே உலகத் தோற்றத்துக்கான காரணம் என்று தொல்காப்பியர் அறிவியல் பூர்வமாகச் சொல்லவருமிடத்தில், 'தீ முரணிய நீரும்...' என்று உரைப்பது இந்த ஆய்வுரையை முடிக்க எவ்வளவு சாலப் பொருந்துகிறது?

உசாத்துணை:

பனுவல்கள் சார்ந்து...

- ம.வே. பசுபதி,(2010) (ப.ர்), செம்மொழித்தமிழ், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
- நித்தியானந்தம்.மு, (2014) கூலித்தமிழ், க்ரியா, சென்னை

மொழிபெயர்ப்பு சார்ந்து...

- ராகுலசாங்கிருத்தியாயன், (1991) ரிக்வேதகால ஆரியர்கள், NCBH, சென்னை
- சுந்தரசோழன், (2022) ரிக்வேத சமூகம், பொன்னுலகம் பதிப்பகம், திருப்பூர்
- குருவிக்கரம்பை வேலு, (1989) சிந்துமுதல் குமரிவரை, வளவன் பதிப்பகம், சென்னை

நிகண்டு சார்ந்து...

- பிங்கல நிகண்டு, (1917) சென்னை

அகராதி சார்ந்து...

- பவானந்தர் (1925) அகராதி, NCBH, சென்னை
- கந்தையா.ந.சி.(2014) செந்தமிழ் அகராதி, தமிழ்மண் பதிப்பகம், சென்னை
- கருப்பக்கிளர் ராமசாமி, (2018) தொகையகராதி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை
- கழக அகராதி, (1964) தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை
- அருளி, (2015) அருங்கலைச்சொல் அகரமுதலி, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

ஆய்வேடு சார்ந்து...

- மணிமாறன், பண்டிதர்,(2019)'பண்டைத்தமிழரின் நீர்மேலாண்மை'முனைவர்பட்டஆய்வு

கல்வெட்டு சார்ந்து...


- பாண்டியர் காலக் கல்வெட்டு

மேடைப்பொழிவு சார்ந்து...

- தெ. வெற்றிச்செல்வன் (2024),மே-17 இயக்க அறிவர்மாநாட்டு உரை: 24-02-24, சென்னை



Vetrichelvan@thaiveedu.com



ஈழத்துத் தமிழ்க் கவிதையில் உடற்கூற்றியல் - பாலியல்

- கி.ரமேஷ் -

உடலின் அனுபவத்தை மொழி வாயிலாக வெளிப்படுத்தும் பெண்ணெழுத்து தன்னுடைய அகத்தை அப்பட்டமாகச் சித்திரிக்கின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் உடல மைப்பில் உள்ள வேறுபாடே அவர்களின் படைப்பின் வேறுபாடுகளுக்கும் அடிப்படையாக அமைகிறது. அதாவது ஆணிலிருந்து வேறுபட்ட பெண்ணுடலின் தனித்தன்மைகளான மார்பு, பெண்குறி, கருவைச் சுமக்கும் வயிறு, போன்றவையும் அவற்றின் மூலமாக நிகழும் பூப்பு, மாதவிலக்கு, சூல், குழந்தைப்பேறு, தாய்-சேய் உறவு போன்ற உள்ளார்ந்த தனித்த அனுபவங்களைப் பெண்மொழியால் பதிவு செய்வதே பெண்படைப்பாகும். காமமும் உடலின் இரகசியங்களும் பெண்கள் நேரடியாகப் பேச முடியாத பண்பாட்டுச் சூழ்நிலையில் அதனைக் குறியீட்டு உத்தி, படிமங்கள் ஊடாகப் பதிவு செய்தனர். சிலர் உடற்கூற்றியலை மொழியில் நுட்பமாகவும் கையாண்டனர். மரபு என்னும் வேலியை அமைத்து காலாகாலமாகப் பெண் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில் அதனைக் கடந்து பெண்ணுடலின் உள்ளார்ந்த இரக சியங்கள் ஈழத்து நவீன கவிதையின் பாடுபொருளாயின. பெண்ணுடலைக் கொண்டாடுதல், நுண்ணுணர்வுசார் காமத்தைக், கலவியைப் பாடுதல் முதலானவை ஈழத்து நவீன கவிதையின் இயங்கு தளங்களாயின.

பல்லவர் காலத்தில் வாழ்ந்த ஆண்டாள் காதலையும், காமத்தையும், பக்தி இலக்கிய மரபிற்குள் உட்புகுத்திய ஒருவராகக் காணப்படுகின்றார். பெண்ணின் அன்பு, ஆசை மற்றும் ஏமாற்றம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன. சமூகத்தால் பெண்கள் மீது திணிக்கப்பட்ட மரபுகளைத் தகர்த்து, கண்ணனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் கொண்டு பாடல்களைப் பாடினார்.

‘முத்தன்ன வெண்முறுவல் செவ்வாயும் முலையும்
அழகழிந்தேன் நான்...

பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப் புணர்
வதோர் ஆசையினால் – என்
கொங்கை கிளர்ந்து குமைத்துகுதூகலத்து
ஆவியை ஆகுலம் செய்யும் அங்குயிலே!’

என்னும் பாடலடியில் நாச்சியார் தன்னுடைய காதலனாகிய கண்ணனிடம் கொண்ட மோகத்தை வெளிப்படுத்துகிறார். தனதுதுன்பத்தைக் குயிலிடம் கூறுவதாக அமையும் இப்பாடலில் தன் உளக்கிடக்கையை ஆண்டாள் வெளிப்படுத்து

கிறாள். 'நான் முத்துப் போன்ற பற்களையும் சிவந்த வாயையும், மார்புகளையும் பெற்றிருந்தேன். கண்ணனாகிய காதலன் வந்து என்னை புணராமையால் இவைகளின் அழகையெல்லாம் இழந்தேன். கண்ணனைப் புணர வேண்டுமென்ற ஆசை மிகுதியால் என்னுடைய மார்புகள் மகிழ்ச்சியால் உந்தப் பெற்று, பெருத்து, உணர்ச்சி வசப்பட்டு என்னுடைய உயிரைத் துன்பப்படும்படி செய்கின்றது. இவைகளை அழகிய குயிலே கண்ணனிடம் சென்று கூறுவாயாக! எனக் கூறுகிறார். அவர் இறையியலுக்கூடாகத் தம் உள்ளத்துணர்வுகளை வெளிப்படுத்தியதால் ஆண்டாள் நின்று நிலைத்து நின்றார்.

'...காமத்தீ உள்புகுந்து கதுவப்பட்டு
இடைக்கங்குல்
ஒத்தோர் தென்றலுக்கு
இங்கிலக்காய் நானிருப்பேனே...'

எனக் கண்ணனையன்றி ஆண்டாள் பிறிதொருவரை அக்காலத்தில் பாடியிருப்பார் ஆயின் அக்காலச் சமூக அமைப்பால் அவர் நிந்திக்கப்பட்டிருப்பார். அவருடைய பாடல்கள் எமது கைக்கு கிடைக்கப்பெறாமல் கூட போயிருக்கலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த முக்கிய கவிஞர்களுள் ஒருவரான கிறிஸ்டினா ஜார்ஜினா ரோசெட்டி காதல், பக்தி மற்றும் குழந்தைகள் கவிதைகளை எழுதியவர். 1862-ஆம் ஆண்டு மேக்மில்லன் & கோ நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கோப்ளின் மார்க்கெட் அண்ட் அதர் போயம்ஸ் (Goblin Market and Other Poems) என்ற தொகுப்பில் இடம்பெறும் கவிதைகளில் உடல் கிளர்த்தும் வேட்கைகளைப் பாடினார். 'என் வாழ்க்கை எனக்கு என்ன நன்மை செய்யும்' என்ற கவிதை இவரது கவிதைகளில் குறிப்பிட்டுக் கூறத்தக்கது. அவரது கவிதைகளில் பெண்ணியக் கருப்பொருட்கள் சிறப்பாக கையாளப்படும். அமெரிக்காவில் இடம்பெறும் அடிமை வர்த்தகத்தை எதிர்த்தார். குறிப்பாக வர்த்தகச் சந்தைகளில் பாலியல் தேவை களுக்காக பெண்கள் விற்கப்படுவதையும் சுரண்டப்படுவதையும் வயதுக்குட்பட்ட பெண்கள் விபச்சாரத்தில் தள்ளப்படுவதையும் எதிர்த்தார்.

20-ஆம் நூற்றாண்டு அமெரிக்க கவிஞரான சில்வியா பிளாத் கவிதைகள் மனிதநிலை குறித்த ஆழமான பார்வை கொண்டவை, ஆழமானவை. மனித மனத்தின் நெருக்கடிகளையும் சிக்கல் நிறைந்த தருணங்களையும் வெளிப்படுத்தும் இக் கவிதைகள் ஒப்புதல் வாக்குமூலங்களாகவும் அமைபவை. உடல் ஆற்றலையும் சிற்றின்ப தீவிரத்தையும் வலியுறுத்துபவை. அவரது கவிதைகளில் காணப்படும் ஆழ்ந்த உணர்ச்சி நம்பகத்தன்மையானவை.

அமெரிக்காவின் புகழ்பெற்ற பெண்ணியக் கவிஞரான அட்ரியன் ரிச்சின் காதல் கவிதைகள் ஒரு தனிப்பாடலின் வடிவத்தில் எழுதப்பட்டவை. நவீன கவிதைகள் வாயிலாக பெண்களின் பாலுணர்வை மீட்டெடுத்த அவர் உடலையும் அதன் இயக்கங் களையும் பெண்ணிய வெளிப்பாட்டின் ஒரு பகுதியாக மாற்றினார். அன்பின் வழிகளையும் சித்தரித்த அவர் பெண்-பெண் உறவுகளை கொண்டாடினார். 1970-களிலிருந்து வெளியான அவரது கவிதைகளிலும் இது வெளிப்பட்டது. 1980-களில் எழுதப்பட்ட 'Compulsory Heterosexuality and Lesbian Existence' என்ற அவரது கட்டுரையில் பாலினப் பாலினம் அதாவது ஓரினச்சேர்க்கை என்பது பெண்களுக்கும் இயற்கையானது மற்றும் தவிர்க்க முடியாதது என்ற கருத்தையும் முன்வைத்த இவர் லெஸ்பியன்வாதத்துடன் தொடர்புடைய இலக்கிய விமர்சனத்தின் பங்கு பற்றிய மாற்றத்தைப் பற்றியும் சிந்திக்க செய்தார். இவரின் இக் கட்டுரை பெண்களுக்கிடையேயான பல்வேறு பிணைப்புகள் மற்றும் தொடர்புகளை உள்ளடக்கிய லெஸ்பியன் இருப்பின் நோக்கத்தை மறுவரையறை செய்கிறது.

காலகாலமாகப் பண்பாட்டுரீதியாகக் கட்டுப்பாட்டுக்குள் இருத்தி வைக்கப்பட்ட பெண்ணை விருப்பு, வெறுப்பு, உணர்ச்சிகள் அற்ற நுகர்வுப்பண்டமாக, ஆணாதிக்கச் சமூகம் நோக்குவதைச் சங்கரியின் 'அவர்கள் பார்வையில்' என்னும் கவிதை பதிவு செய்கிறது.

'எனக்கு முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை
அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன.
சமையல்
செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து
நடத்தல்
இவையே எனது கடமைகளாகும்.
கற்பு பற்றியும்
மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்
கதைக்கும்
அவர்கள்
எப்போதும் எனது உடலையே
நோக்குவர்.
கணவன்
தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்'

——————— *சொல்லாத சேதிகள்*

பெண் மீதான பொருளாதார, பண்பாட்டு, மத ஒடுக்குமுறைகள் மரபுரீதியாக வேரூன்றிய நிலையில் மனித உடல் மீது மேற்கொள்ளப்படும் வன்முறையைப் பாடும் இக்கவிதை

பெண்ணுக்கான உரிமைகள் மதிக்கப்படா நிலையில் அவளி ருப்பை பதிவு செய்கிறது. கல்வியறிவால் பொருளாதார முன் னேற்றம் எய்தப்பட்ட வேளையிலும் பால்ரீதியான பாகுபாடு மறைந்துவிடவில்லை என்பதையும் இக்கவிதை உணர்த்தி நிற்கிறது.

உடலியல் சம்மந்தப்பபட்ட காரணிகளே பெண்ணடிமைத் தனத்தின் அடிப்படைகள் என்பதை 'அவர்கள் பார்வையில்' என்னும் கவிதையினூடாக எடுத்துரைக்கும் சங்கரி, பாலினரீ தியாகப் பெண்ணைப் போகப் பொருளாய் ஆண் சமூகம் நோக்கும் தன்மையானது பெண்மையை மதிப்பிழக்கச் செய்யும் என்பதையும் இக்கவிதையினூடாக வெளிப்படுத்து கிறார். இதன் வெளிப் படையான பிரதிபலிப்பை முகைசிரா முகைடீனின் 'நான் பேச நினைப்பதெல்லாம்' கவிதை மிகத் துல்லியமாகப் பதிவு செய்கிறது.

'என்னை !
ரசிக்கவும் வாங்கவும்
ருசிக்கவும் வாழவும்
உனக்கு இஷ்டம் தான் !
அதுவும் என் உணர்வுகளை
விலக்கியும் விற்கவும் – என்
கொள்கைகளை
முடக்கியும்
கொழுத்தவும்
தலைப்பட்டுக் கொண்டு'

———— *பெண்கள் சந்திப்பு மலர், 2004 - பக்.119*

உடலின் உடல்நிலையையும் அதன் அனுபவங்களையும் உணர்ச்சி மற்றும் துஷ்பிரயோகம் என விரியும் இக்கவிதை புற நிலைப்படுத்தப்பட்ட உடலியல் சார்ந்த செயற்பாடுக ளையும் விளக்கி நிற்கிறது. பெண் உடல் பெரும்பாலும் போகப்பொரு ளாகவும் வன்முறையின் அடையாளமாகவும் மாறிவருவதை இக்கவிதை கூறிநிற்கிறது.

ஈழத்தில் போர் ஏற்படுத்திய அச்சம் மனிதனை உயிர்ப்பின்றி, உணர்வின்றி, வெறும் ஜடமாய் வாழச் செய்கிறது. வெளியில் சென்று ரசிக்க முடியா நிலவு நினைவில் மட்டும் வந்து போக, இருந்தும் அனுபவிக்க முடியா கடந்த கால இருப்பை மைதிலி உடற்கூற்று வழியே வெளிப்படுத்துகிறார்.

'இரவைச்
சிருசிருக்கிறாள் அம்மம்மாக்கிழவி
நிலவு நாட்களைப் பற்றிய
நினைவுகளில் கழிகிறது
இன்று –
அருகிருந்தணைத்து
முலை பற்றும் கணவன் பிடியிலும்
உயிர்ப்பில்லை'

———— *சலனமற்று கரையும் மனிதர்கள் - பக்.55*

இக்கவிதையில் கணவன் மனைவிக்கும் இடையிலான அந்த ரங்க உறவு யதார்த்த வாழ்வியல் சித்திரிப்பு வழியே காட்சிப் படுத்தப்படுகிறது.

ஆண், பெண் பரஸ்பர நட்பின் நிமித்தம் நிகழும் கரு உயிர்த்தல் என்பது பெண்ணின் வாழ்வோடு தொடர்பு டையது. பெண் ணுடலானது போகத்துக்குரியது அல்ல. மதிக் கப்பட வேண்டிய இவ்வுடலானது ஆண்மைய சமூகத்தால் இழிவானதாகவும் போகத்துக்குரியதாகவும் கருதப்படுகிறது. சுயமதிப்பிழக்கச் செய்யும் இந்நோக்கு தவறானது. இதனை ஆழியாளின் 'தடைகளைத் தாங்கி' என்னும் கவிதை எடுத்து ரைக்கிறது.

'நீயும் நானும்
வரையறைகளைக் கடக்க வேண்டும்
உன் விவேகத்தோடும்
நீ என் வீரியத்தோடும்
கடக்க வேண்டும்
எனினும்
என் கருவறையை நிறைப்பது உன்
குறியல்ல
என்ற புரிதலோடு வா'

———— *உரத்துப் பேச - பக். 10*

பெண்ணை நுகர்வுப்பொருளாகக் கருதும் மரபுரீதியான ஆணாதிக்கச் சமூக யாதார்த்த நிலை தவிர்க்கப்படவேண்டிய அவ சியத்தை வலியுறுத்தும் இக்கவிதை அதிகாரத் தொடர்பற்று பெண்மை அதற்குரிய தன்மைகளுடன் மதிக்கப்பட வேண்டிய அவ சியத்தையும் எடுத்துரைக்கிறது.

தன்னியல்சார் இருப்பினூடாக பெண்ணுடலின் பிரத்தியேக பிரச்சினைகள் ஈழத்துக் கவிதைகளில் மிக நுட்பமாக எடுத்து ரைக்கப்படுகிறது. மரபுசார் ஒழுக்கவியல் கற்பிதங்களுக் கூடாக மறைக்கப்பட்ட பெண் உணர்வுகள் ஈழத்துப் பெண் கவிஞர்களால் நுட்பமாக ஈழத்துக் கவிதைகளில் காட்சிப்ப டுத்தப்படுகிறது. மைதிலி, கல்யாணி, றஞ்சனி, ஆழியாள், கலா, கற்பகம் யசோதரா கவிதைகளில் ஆணாதிக்கச் சமூ கத்தால் காலாகாலமாகப் பெண்ணுக்கு வகுக்கப்பட்டு வந்த கற்புநிலையும் புனிதங்களுக்கூடாக மறைக்கப்பட்ட பாலியலு ணர்வுகளும், பாலியலுறுப்புகளும் அகம்சார் சுயத்துவத்துக் கூடாகவும் புறநிலைசார் காட்சிப் படிமங்களுக்கூடாகவும் வெளிப்படுகின்றன.

'பாலியல் தன்மை என்பது ஒரே நேரத்தில் கட்டுப்படுத்தக் கூடிய, ஒடுக்கப்பட வேண்டிய, அச்சப்படத்தக்க வெளியாக மட்டுமன்றிப் புதிய புலங்களைத்தேடிச் செல்லும் களமா கவும், இன்ப துய்ப்பின் விளைநிலமாகவும் அந்த அடிப்ப டையில் சாகசங்களைச் சாத்தியப்படுத்தக் கூடியதாகவும், கிளர்ச்சியூட்டக்கூடியதாகவும் மனித நெருக்கத்தின் ஆதார மாகவும் உள்ளது' பெண் எழுத்துக்களில் பாலியல் அர சியல்', தீராநதி (2005-யூலை) - பக். 12 என்னும் அ. மார்க்ஸின் கூற்று முக்கியமானது.

உடல்நிலை சார்ந்து மன அழுத்தத்தால் பெண் நசுக்கப்படுகையில் அது ஏற்படுத்தும் வலி மைதிலியின் 'கடி' என்னும் கவிதையில் எவ்வித விரசமுமின்றி படிமமாக வெளிப்படுகிறது.

'கடிப்பதன் காரணத்தினால் தான்
முதலில்
சொறியத்
தொடங்குவது
பிறகு
தோல் உரிவு
இரத்தக் கசிவு
எரிவு
சில சமயங்களில் தழும்பு
கடித்தால் சொறியாதே
என்கிறீர்கள்
எப்படி...
கடித்தால் யாருக்கும்
சொறியத்தானே
சொல்லும்'

———— *சலனமற்று கரையும் மனிதர்கள் - பக்.50*

'பெண்ணின் பாலியல் செயற்பாடு என்பது கவிதையை உற்பத்தி செய்யும் படைப்புத் தன்மையோடு ஒத்தது' என்பார் ஹெலன். (க. பஞ்சாங்கம், 2008, பெண்-மொழி-புனைவு - பக்.62) எனவே உணர்வுச்சுழியில் இழுத்துச் செல்கின்ற இந்தப் படைப்பாக்க குணத்தினால் வறட்சியான ஆணாதிக்க போக்கு நிலையைத் தகர்க்க முடியும். பெண் தன் கலை இலக்கியப்பிரதியில் முழுமையாகத் தன்னுடம்பைப் பதிவு செய்வதால் அவளுடைய சுயம் மாசுபட்டுப் போவதில்லை. இக்கூற்றின் பிரதிபலிப்பை ஈழத்து நவீன கவிதையிலும் காணலாம். ஆண்களின் பாலியல் நுகர்வுக்குரிய போகப்பொருளாக பெண் கருதப்படுவதை அவாவி நிற்கும் கவிதைகளாக றஞ்சனியின் 'புரிதலின் அவலம்' மைதிலியின் 'பொருள்', 'அந்தநாள்', ஆழியாளின் 'தடை தாண்டி', சுல்பிகாவின் 'யோனியாகிப் போன பெண்கள்' முதலானவை காணப்படுகின்றன.

1990-களுக்குப் பின் வந்த ஈழத்துப் பெண் கவிதைகளில் பெண்ணுடலை வெறும் அழகுத் தோற்றமாகக் கருதும் பார்வை தவறானது என்னும் கருத்து பெண் கவிஞர்களால் முன்வைக்கப்பட்டது. பெண்ணின் பிறப்போடு தொடர்புடைய உடலியல், உடல் சார்ந்த அழகு பெண்ணை அடிமையாக வைத்திருக்குமேயன்றி அவளைப் போற்றுதற்கு கால்கோலாக அமையாது எனக் கருதும் பெண்ணியக் கவிஞர்கள் உடல்சார் அவையங்களினூடாக ஆழமான படிமங்களை உருவாக்கி கவிதைகளை யாத்தனர். இப்பெண்கவிஞர்களால் கையாளப்பட்ட 'மையக்குறியீடுகள்' சொல்ல வேண்டிய கருவை ஆழமாகவும் அழுத்தமாகவும் கூறுவதற்கும் பயன்படுத்தப்பட்டன. தமிழ்க்கவிதையில் இப்பாடுபொருள் புதியதொரு அத்தியாயத்தை தொடக்கி வைத்தது என்பதுவும் மறுப்பதற்கில்லை.



ramesh.s@thaiveedu.com



இலங்கையில் 1796-1947 காலப்பகுதியில்

தமிழ் - இந்து அடையாள உருவாக்கமும் அதில் வடமொழியின் பங்கும்

– மைதிலி தயாநிதி

இந்தக் கட்டுரை, இலங்கையில் தமிழ்-இந்து அடையாளம் என்பது பழைமையானது அன்று; காலனித்துவ காலகட்டத்தின் உருவாக்கமே ஆகும் என்று வாதிடுகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு, தமிழர்கள் தங்களை 'இந்து' என்று அடையாளப்படுத்திக்கொண்டதற்கான எந்த வரலாற்றுச் சான்றும் இல்லை. இருபதாம் நூற்றாண்டில் இந்த அடையாளம் மேலாதிக்க சாதியைச் சேர்ந்த தேசியவாதிகளால் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டு வலுப்படுத்தப்பட்டது என்பதைக் கட்டுரை சுருக்கமாக நோக்குகிறது. இதற்கு, காலனித்துவ கல்விக்கொள்கைகளால் பள்ளிகளிலும் பல்கலைக் கழகக் கல்லூரியிலும் அறிமுகப்படுத்தப்பட்ட வடமொழிக் கல்வியும் உதவிற்று. 'இந்து' அடையாளத்தை ஏற்றுக்கொண்டமையானது, சிறுபான்மைத் தமிழ்ச் சமூகங்களுக்கு ஆழமான பாதிப்புகளையும் ஏற்படுத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

> ***"நாவலர் காலத்தின் பின்னர், 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், இலங்கையில் தமிழ் உயரடுக்கினைச் சேர்ந்தோர் 'தமிழ்-இந்து' என்பதை ஒரு கூட்டு அடையாளமாக ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர்."***

இலங்கையில் பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில், வடமொழி நூல்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இது காலனித்துவ ஆட்சியில் கல்விக்கூடங்களில் வடமொழிக் கல்வி நிறுவனமயமாக்கப்பட்டமையுடன் இணைத்தே நோக்கப்பட வேண்டியதாகும். பெரும்பாலும் கல்வித்தேவைகளை ஒட்டியே வடமொழி நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன, தென்னாசியப் பொதுக் கல்விக்கூடங்களில் வடமொழி அறிமுகப்படுத்தப்பட்டமைக்கான வரலாற்றுப் பின்னணியை ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களில் தேடவேண்டியுள்ளது. ஐரோப்பியக் கீழைத்தேயவாதிகள் (orientalists) வடமொழியை லத்தீன் மற்றும் கிரேக்கத்துடன் ஒப்பிடக்கூடிய இந்தியாவின் 'மகத்தான' செவ்வியல் மொழியாக உயர்த்தினர், அம்மொழியின் இலக்கண, இலக்கியங்கள் தொடர்பான ஆய்வைத் தம்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஆழமாகவும், விரிவாகவும் மேற்கொண்டதுடன் வடமொழி நூல்களை ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்த்தனர். இச்செயற்பாடுகள் காலனிய ஆட்சிக்குட்பட்ட தென்னாசியாவில் வடமொழியின் மதிப்பை உறுதிப்படுத்தின. அத்துடன், பெரும்பாலும் பிராமணர்கள் மாத்திரம் பயின்ற வடமொழி, பல்லாயிரக்கணக்கான 'இந்துக்கள்' மொழியாகவும் முன்னிறுத்தப்பட்டது.

இந்து மதத்துடன் தொடர்புடைய பல்வேறு சடங்குகள், ஆசார நடைமுறைகள், வழிபாட்டு முறைகள், தத்துவ நோக்குகள் முதலானவை காலனித்துவ ஆட்சிக்கு முந்தையவை என்பதில் ஐயமில்லை. ஆனால், பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியிற்றான் நிர்வாகத் தேவைகள் காரணமாக இந்த மாறுபட்ட சுதேச சமய பன்மைத்துவ வடிவங்கள் யாவும், 'இந்து' எனும் ஓர் ஒற்றை அடையாளத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டன. கீழைத்தேயவாதிகளாலும், கிறிஸ்தவ மதபோதகர்களாலும் கட்டமைக்கப்பட்ட இந்து மத அடையாளத்துடன் தொடர்புடையதாக, வடமொழியானது 'இந்துக்களின்' அதிகாரபூர்வமான மத, சடங்காசார, பண்பாட்டு மொழியாக உருப்பெற்றது.

1871 முதல் இலங்கையில் மதமானது (religion) மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அலகாகச் சேர்க்கப்பட்டபோது, 'இந்து' எனும் தனிப் பிரிவு அதிகாரபூர்வமாக உருவானது. அதே நேரத்தில், கிறிஸ்தவ மிஷனரிகளின் விக்கிரக ஆராதனை



முதலானவை குறித்த விமர்சனங்களும், இந்திய வழிபாட்டு மரபுகளை ஒருங்கிணைத்து 'இந்துமதம்' எனப் பொதுமைப்படுத்திய கீழைத்தேயவியலாளர் ஆய்வுகளும், தமிழரை இதே சொல்லைப் பயன்படுத்தித் தங்களை வரையறுக்கத் தூண்டின. இந்தக் காலத்திற்கு முன், கிறிஸ்தவர்கள் அல்லாத தமிழர்கள் 'இந்து' என்ற சொல்லைத் தம்மைக் குறிக்கப் பயன்படுத்தியதில்லை.

ஆறுமுகநாவலர் (1822–1879) இந்த அடையாளக் கட்டமைப்பின் முரண்பாட்டை வெளிப்படுத்துகிறார். அவர் 'இந்து மதம்' என்ற சொல்லைத் திடமாக நிராகரித்தார், ஏனெனில் அது சைவத்தை ஒரு பொதுவான குடையின் கீழ்க் கொணரும் காலனித்துவக் கற்பனை என அவர் கருதியிருக்கக் கூடும். எனினும், அவரது சைவ சீர்திருத்தப் பணிகள் ஒரு 'தமிழ்-இந்து' அடையாளத்திற்கான அடித்தளத்தை அமைத்தன. வடமொழி ஆகம விதிப் பிரகாரம் அமைந்த கோயில் வழிபாட்டை மையமாகக் கொண்டதாய் சைவத்தை வரையறுத்த நாவலர் ஆகமக் கிரியைகளில் தேர்ச்சி பெற பூசகர்களுக்கு வடமொழிக் கல்வியையும், சைவசமய இலக்கிய அறிவு பெறுவதற்காகப் பொதுமக்களுக்குத் தமிழ்ப் பக்தி நூல் கற்கையினையும் பரிந்துரைத்தார். இவ்வாறு வடமொழி ஆகமங்களின் அடிப்படையில் கோயில் வழிபாட்டு முறையை வரையறுத்தமையானது யாழ்ப்பாண சைவ நடைமுறைகளை அகில இந்திய அளவில் 'இந்து' எனும் பெரும் அடையாளத்தோடு இணைக்க வழி கோலியது.

நாவலர் காலத்தின் பின்னர், 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், இலங்கையில் தமிழ் உயரடுக்கினைச் சேர்ந்தோர் 'தமிழ்-இந்து' என்பதை ஒரு கூட்டு அடையாளமாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கினர். 1893-இல் சிக்காகோவில் நடந்த உலக மதங்களின் பாராளுமன்றத்தில் சுவாமி விவேகானந்தரின் உரை, 1897-இல் அவரின் இலங்கை வருகை ஆகியவை இந்த வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க ஊக்கமளித்தன. விவேகானந்தரின் இந்து மதம் 'நவீன வேதாந்தத்தினை' அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவரால் முன்னெடுக்கப்பட்ட நவீன வேதாந்தம் (Neo-Vedanta), பாரம்பரிய இந்திய தத்துவக் கோட்பாடான அத்வைத வேதாந்தத்தின் நவீன விளக்கமாகும் (modern interpretation). இது வேதாந்தக் கோட்பாடுகளை அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது (Practical Vedanta).

இருப்பினும், இலங்கைத் தமிழ் உயரடுக்கினரின் இந்து மதத்தைப் பற்றிய விளக்கம் தமிழ் சைவ சித்தாந்தத்திலேயே ஆழமாக வேரூன்றி இருந்தது. சேர்.பொன். இராமநாதன் போன்ற தலைவர்கள் சைவ சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்திய மற்றும் மேற்கத்தேய அறிவுசார் வட்டாரங்களில் வேதாந்தத்தோடு சமமாக நிற்கக்கூடிய தமிழ்-இந்து அடையாளத்தை உருவாக்க முயன்றனர். வடமொழியில் அமைந்த பகவத்கீதையை நவீன இந்துமதத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நூலாக பொதுவெளியில் விவேகானந்தர் அறிமுகம் செய்தார் எனில், இராமநாதன் அதே வடமொழி நூலை சைவ சித்தாந்த தத்துவத்தின் வழியாக அறிமுகம் செய்தார். இராமநாதன் பகவத்கீதையைத் தமிழில் உரை நடையில் மொழி பெயர்த்ததுடன், அதற்கு விருத்தியுரையும் எழுதியுள்ளார். அவ் விருத்தியுரை சைவசித்தாந்தக் கண்ணோட்டத்தில் அமைந்துள்ளமை அதன் தனிச்சிறப்பாகும். இதற்கு முன்னர் பகவக்கீதைக்கு சைவசித்தாந்த தத்துவ அடிப்படையில் உரை எழுந்ததாகத் தெரிவில்லை. எவ்வாறு அத்வைத வேதாந்தத்தை விவேகானந்தர் இந்துமதத்தின் முகம் என்று காட்ட முயன்றாரோ, அவ்வாறே இராமநாதன் சைவசித்தாந்தத்தை இந்து மதத்தைப் பிரதிநிதிப்படுத்துவதாகக் காட்ட முயன்றனர் எனலாம். பகவத்கீதையை சைவ சமய சித்தாந்த அடிப்படையில் விளக்குவதன் மூலம் இராமநாதன் இந்தியாவிலும், மேலைத்தேயங்களிலும் வேதாந்தம் ஆதிக்கம் செலுத்தும் அறிவுசார் சூழலில் சைவசித்தாந்தத்தை ஆதாரமாகக் கொண்ட தமிழ்-இந்து அடையாளம் பற்றிய பார்வையை முன் வைத்தார்.


இந்துசாதனம்
THE HINDU ORGAN.
THE CHEAPEST HOUSE FOR HIGH CLASS SILK CLOTHS.
S. U. N. & Co.
K. S. Mathiah & Co.

சென்னையிலிருந்து வெளியான 'சித்தாந்த தீபிகை' ஆசிரியரும், தமிழ் சித்தாந்த நூல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவருமான ஜே.எம். நல்லசாமி பிள்ளை, தனித் தமிழ் இயக்கதைத் தொடக்கிய மறைமலையடிகள் போன்றோருடன் இராமநாதனுக்குத் தொடர்புகள் இருந்தன. வேதாந்தத்தை மையமாக் கொண்ட இந்துமதச் சித்திரிப்புகளுக்கு எதிரான கருத்தாடல்களுக்குப் பங்களிப்பவராக இம் மூவரும் விளங்கினர் எனினும் 1910-20-களில் சென்னை மாகாணத்தில் தலையெடுத்த அரசியல் சார்புடைய வடமொழி எதிர்ப்பு நிலைப்பாட்டை இராமநாதன் ஏற்கவில்லை. மாறாக, இராமநாதன் கல்விப் பாடத்திட்டத்தில் வடமொழி சேர்க்கப்படுவதை ஆதரித்தார். இது தமிழ் இந்துக்களுக்குப் பாரம்பரிய இந்து நூல்களை அணுகுவதற்கும், காலனித்துவ சமூகத்தில் அவர்களின் பண்பாட்டு அங்கீகாரத்தை வலுப்



படுத்துவதற்கும் உதவும் என நம்பினர். தமிழ், வடமொழி ஆகிய இரண்டையும் ஊக்குவிப்பது தமது பண்பாட்டு, மற்றும் மத பாரம்பரியத்திற்கு இன்றியமையாதது என்ற தமிழ் இந்து உயரடுக்கினரின் நிலைப்பாடு, தமிழுடன் வடமொழி யையும் கற்பிப்பதில் ஈடுபட்டிருந்த கிறிஸ்வக் கல்லூரிகளின் செல்வாக்கினைக் குறைக்கும் நோக்கிலும் அமைந்தது. 1823-இல் வட்டுக்கோட்டையில் நிறுவப்பட்ட இறையியற் கல் லூரியிலும் (Batticotta Seminary), பின்னர் 1871-இல் நிறுவப் பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியிலும் வடமொழி கற்பிக்கப்பட் டது. அத்துடன் யாழ்பாணக்கல்லூரி பேர் சொல்லத்தக்க வட மொழிப் புலமையாளர்களையும் தோற்றுவித்தது என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

பண்டைய பண்பாட்டு மொழிகளைக் கற்பித்தலை ஊக்கப் படுத்திய காலனித்துவ கல்வி கொள்கைகள் தமிழ்-இந்து அடையாளத்தை வரித்துக் கொள்ளப் பெரிதும் உதவின. ஜூனியர் மற்றும் சீனியர் கேம்பிரிட்ஜ், எஸ்.எஸ்.எல்.சி மற்றும் மெட்ரிகுலேஷன் போன்ற காலனித்துவ காலப் பரீட்சைகளில் வடமொழி ஒரு விருப்பப் பாடமாக வழங்கப்பட்டது. 1921-இல் இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்பட்டது, இது கலைமாணிப் பட்டநெறிக்கு வடமொழியைச் சேர்த்துக் கொண்டது. 1942-இல் இலங்கை பல்கலைக்கழகம் நிறுவப் பட்ட பின்னரும் வடமொழி தொடர்ந்து பட்டப்படிப்புக்குரிய பாடங்களில் ஒன்றாக விளங்கிற்று. தமிழில் சிறப்புப் பட்டம் பெறுவோர் வடமொழியை உப பாடமாகக் கற்கும் வாய்ப்பும் இருந்தது. அத்துடன் இலண்டன் வெளிவாரிப் பட்டப் பரீட்சை களுக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் வடமொழி விருப்பத் தேர்வுப் பாடமாக இருந்து வந்தது. 1921 முதல் யாழ்ப்பாணம் ஆரிய-திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தால் நடத்தப்பட்ட சமஸ்கிருத பண்டிதர் பரீட்சைகளும் பலரை வடமொழி கற்க ஊக்குவித்தன. முந்தைய காலங்களில் வடமொழிக் கற்கை முக்கியமாக மத நூல்களுடன் தொடர்புடையதாக இருந்த போதிலும், பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் அதன் இலக் கியச் சிறப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிக்கப் பட்டது. அத்துடன், வடமொழியை ஆழமாகக் கற்பதற்கான வசதிகளைக் காலனியக் கல்விமுறை பிராமணரல்லாதோ ருக்கும் ஏற்படுத்திக் கொடுத்தது.

கிறிஸ்தவ மதத்திற்கும் மேற்கத்தேயமயமாக்கலுக்கும் எதி ரான எதிர்ப்பும் தமிழ்-இந்து அடையாளத்தை நிறுவனமய மாக்கு வதற்குப் பங்களித்தது. வடமொழியைத் தமிழுடன் கற்பித்த இந்துப் பள்ளிகள், இந்து ஓர்கன்(1889) போன்ற செய்தித்தாள்கள் மற்றும் சைவ பரிபாலன சபை (1888), விவேகானந்த சபை (1902), இந்து இளைஞர் சங்கம் (1903) போன்ற அமைப்புகள் ஆகியவை இதில் குறிப்பிடத்தக்க பங் காற்றின. இந்த முயற்சிகள் சிங்கள பௌத்தர்களிடையே ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கத்திற்கு இணையாக இருந்தனவா என்பது ஆய்வுக்குரியது. சிங்கள-பௌத்த, தமிழ்-இந்து 'மறு மலர்ச்சி' முயற்சிகள் இரண்டுமே கிறிஸ்தவத்திற்கு எதிரான ஒரு பொதுவான எதிர்ப்பால் உந்தப்பட்டு எழுந்தவை. இருப் பினும், அவை தனித்துவமான மதம், மொழியியல் முன்னுரி மைகளால் வடிவமைக்கப்பட்டன.

காலனித்துவ காலத்தில் கட்டமைக்கப்பட்ட தமிழ்-இந்து அடையாளம், சமூகத்தின் உயரடுக்கினைச் சேர்ந்தவர்க ளுக்குத் தொன்மையான பண்பாட்டுப் பெருமையைக் கொடுத்த அதே நேரத்தில், அது தாழ்த்தப்பட்டவர்களின் குரல்களை ஒதுக்கி வைத்து, சாதிப் படிநிலைகளை வலுப்ப டுத்தியது. 1920-களில் பள்ளி மாணவர்களிடையே சமமான இருக்கை, சமபந்தி போசனம் போன்ற போராட்ட நிகழ்வு களை இது தொடர்பிற் குறிப்பிடலாம். இது 1950-களில் தேநீர் கடை நுழைவு இயக்கம் மற்றும் 1960-களில் கோயில் நுழைவு இயக்கம் ஆகியவற்றுடன் உச்சத்தை அடைந்தது. 1957-இல் கொண்டு வரப்பட்ட The PreventionofSocial Disabilities Act என்ற சட்டம் எதிர்பார்த்த அளவு பயன் தரவில்லை.

சுருக்கமாகக் கூறின், இலங்கையில் (1796–1947) உருவான 'தமிழ்-இந்து' அடையாளம் காலனித்துவ கல்வி, நிர்வாக, மற்றும் மதக் கொள்கைகளின் விளைபொருள். வடமொழி இவ்வடையாளக் கட்டமைப்பில் மையப் பங்கு வகித்தது. ஐரோப்பியக் கீழைத்தேயவாதிகளால் செவ்வியல் மொழி யாக உயர்த்தப்பட்ட வடமொழி, பிரிட்டிஷ் கல்வி முறைமை மூலமாக நிறுவனமயப்படுத்தப்பட்டது. நாவலரின் ஆகம சைவத்தின் அடிப்படையாக வடமொழியே விளங்கிற்று. கால னிய காலத்தில் மதம் மற்றும் பண்பாட்டு அதிகாரம் கொண்ட வடமொழி, சைவத்தை 'இந்துமதம்' எனும் பரந்த அடை யாளத்தின் கீழ் கொண்டு வந்தது. அதேவேளை, இவ்வடை யாளம் மேலடுக்கினரின் பண்பாட்டுப் பெருமையை முன்னி றுத்தியபோதும், தாழ்த்தப்பட்டோரின் அனுபவங்களைப் புறக் கணித்து சாதி அடுக்குகளை உறுதிப்படுத்தியது. எனவே, 'தமிழ்-இந்து' அடையாளம் என்பது வட மொழியின் நிறுவனம யமாக்கம், அதிகாரம், சிந்தனை என்பவற்றால் வடிவமைக்கப் பட்ட காலனித்துவக் கட்டமைப்பு என்றே புரிந்துகொள்ளப்பட வேண்டும்.



maithilithayanithy@thaiveedu.com



இனப்படுகொலையின் அரசியல் - 17

எண்ணிக்கையில் என்ன இருக்கிறது?

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

தொடக்கக் குறிப்புகள்:

இன்று காசாவில் நடந்து கொண்டிருப்பது இனப்படுகொலையா, இல்லையா என்ற விவாதம் கவனிப்புக்குரியது. இஸ்ரேலிய ஆதரவாளர்கள், சர்வதேச ஊடகங்களில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்கிறது என்ற கூற்றைத் தொடர்ச்சியாக நிராகரித்து அதற்கெதிரான தமது வாதங்களையும் நியாயப்பாடுகளையும் முன்வைத்து வருகிறார்கள். அவர்களது பிரதான வாதம் இஸ்ரேல் தற்காப்பு நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றது என்பதாக உள்ளது. இஸ்ரேல் இனப்படுகொலை செய்ய விரும்பினால் ஏன் இன்னும் பலரைக் கொல்லவில்லை? அவ்வாறான ஒரு நோக்கம் இருந்திருந்தால் இன்னும் பல்லாயிரக்கணக்கானோரை இஸ்ரேலால் கொன்றிருக்க முடியும். ஆனால், இஸ்ரேல் அதைச் செய்யவில்லை. மாறாக மக்கள் கொல்லப்படுவது திட்டமிட்டதல்ல, போரின் பக்க விளைவு (collateral damage) போன்றவையே இஸ்ரேல் இனப்படுகொலை செய்கிறது என்பதை மறுப்பதற்கான இஸ்ரேலிய ஆதரவாளர்களது வாதத்திற்கான அடிப்படை.

பலஸ்தீனத்திற்கு ஆதரவானவர்களின் பிரதான கவனக்குவிப்பு யுத்திகளில் '17,000 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளார்கள்' என்பது பிரதானமானது. இதை குறைமதிப்பிற்குட்படுத்தவும் இனப்படுகொலை நிகழவில்லை என்று வாதிடவும் எண்ணிக்கை குறித்த வாதத்தை இஸ்ரேலிய ஆதரவாளர்கள் முன்வைக்கிறார்கள். இந்த இடத்தில் எண்ணிக்கை குறித்த அதீத கவனம் ஏற்படுத்தும் ஆபத்துகள் குறித்து எச்சரிக்க வேண்டியுள்ளது. இலங்கையில், இறுதி யுத்தத்தில் எவ்வளவு தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்பது குறித்த இறுதியான முடிவேதும் இல்லை. நீண்டகாலமான இந்த எண்ணிக்கை விளையாட்டில் அரசாங்கமும் தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விளையாட்டு நடைபெற்ற கொடூரத்தின் தன்மையை மரணித்தோரின் எண்ணிக்கை என்ற அளவுகோலின் அடிப்படையில் நிறுவிடும் அபத்தமான முயற்சி. இந்தச் செயன்முறையை இலங்கை அரசாங்கங்கள் விரும்பின, இன்னும் விரும்புகின்றன. ஏனெனில், இது கொலையுண்டோரின் எண்ணிக்கை விளையாட்டு.

> *"இறுதி யுத்தத்தில் எவ்வளவு தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்பது குறித்த இறுதியான முடிவேதும் இல்லை. நீண்டகாலமான இந்த எண்ணிக்கை விளையாட்டில் அரசாங்கமும் தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விளையாட்டு நடைபெற்ற கொடூரத்தின் தன்மையை மரணித்தோரின் எண்ணிக்கை என்ற அளவுகோலின் அடிப்படையில் நிறுவிடும் அபத்தமான முயற்சி."*

அரசாங்கம் தொடர்ச்சியாகக் கொல்லப்பட்டோரைப் பயங்கரவாதிகள் என்று சித்திரிப்பதன் மூலம் இந்த விளையாட்டில் தனக்கு வாய்ப்பான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் ஏற்றாக வேண்டும்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய விடயமொன்றுண்டு. இனப்படுகொலை என்பது எண்களின் அடிப்படையிலான கருத்தாக்கம் அல்ல. கொல்லப்படுபவர், ஒரு குறிப்பிட்ட குழுவின் கடைசி பிரதிநிதிகளில் ஒருவராகவும், அவரைக் கொல்லும் நபர் அந்தக் குழுவை ஒழிக்கும் நோக்குடன் அக்கொலையைச் செய்து இருந்தால் அது இனப்படுகொலையே. ஒரு வரை மட்டும் கொல்வதன் மூலம் ஒரு இனப்படுகொலை நிகழ முடியும். ஐ.நா.-வின் இனப்படுகொலை வரையறை இவ்வாறு சொல்கிறது: 'ஒரு தேசிய, இன அல்லது மதக் குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்ட குற்றம் இனப்படுகொலை எனப்படுகிறது'. எண்கள் ஒரு குற்றம் இனப்படுகொலையா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில்லை, மாறாக குற்றம் செய்யப்பட்ட நோக்கமே அதைக் காட்டுகிறது. இஸ்ரேலுக்கு எதிரான வழக்கைப் பரிசீலனைக்கு சர்வதேச நீதிமன்றம் எடுத்துக்கொண்டதற்கான வாதம் இதுதான். இனப்படுகொலை செய்யும் நோக்கத்துடன் இஸ்ரேல் குற்றங்களைச் செய்துள்ளது என்று அது கருதுகிறது. அந்த நோக்கத்தை நிரூபிப்பதே வழக்கு.

இனப்படுகொலை குற்றம் குறித்த ஐ.நா. பொதுச் சபையின் 1946 தீர்மானம், இனப்படுகொலை என்பது 'முழு மனித குழுக்களின் இருப்பு உரிமையை மறுப்பது, அதே போல் கொலை என்பது தனிப்பட்ட மனிதனின் வாழ்வதற்கான உரிமையை மறுப்பது' என்று கூறுகிறது. மேலும் 'இந்த மறுப்பு மனிதகுலத்தின் மனசாட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்குவதுடன் மனித குழுக்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் கலாசாரம் போன்ற பங்களிப்புகளின் வடிவத்தில் மனிதகுலத்திற்கு பெரும் இழப்புகளை ஏற்படுத்துவதுடன் இது தார்மீக சட்டத்திற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனப்பான்மைக்கும் முரணானதாகவும் அமைகின்றது.'

இனப்படுகொலை குற்றத்துடன் தொடர்புடைய 'மனிதகுலத்தின் மனசாட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்குவது' குழுவில் உள்ளவர்களைக் கொல்ல இலக்கு வைக்கப்பட்டதோ அல்லது இறுதியில் உண்மையில் கொல்லப்படுவோரின் எண்ணிக்கையோ அல்ல. மனிதகுலத்தின் மனசாட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்குவது இவ்வளவு விலைமதிப்பற்றதும் முக்கியமான துமான நன்மைக்கான ஆதாரம் அழிவுக்கு குறிக்கப்பட்டுள்ளது. ஒரு குழுவிற்கு அதனது இருப்பிற்கும் அதன் உறுப்பினர்கள் செழித்து வளர்வதற்கும் உரிமை இருக்கும்போது மற்றொரு குழுவிற்கு உரிமை இல்லை என்பது அதிர்ச்சியூட்டும் விஷயம். இனப்படுகொலையில் உள்ளார்ந்த தவறு இந்த தீய நம்பிக்கையும் அதனுடன் வரும் அழிக்கும் நோக்கமுமாகும். இனப்படுகொலை என்பது ஒரு அளவிலான குற்றம் அல்ல, உள்நோக்கத்துடன் செய்யப்பட்ட குற்றம் என்பதை தெளிவுபடுத்துவதன் மூலம், இனப்படுகொலையின் தவறுகளின் தன்மை குறித்த இந்த புரிதலை இனப்படுகொலை தொடர்பான கோட்பாடுகள் முன்வைக்கின்றன. இந்தப் புரிதலை சட்டமாக மொழிபெயர்ப்பதில்தான் சிக்கல் உள்ளது. இனப்படுகொலையை அதன் நோக்கத்தால் வரையறுக்கப்பட வேண்டுமா அல்லது அதன் விளைவுகளால் வரையறுக்கப்பட வேண்டுமா என்பது குறித்து அறிஞர்களிடம் ஒருமித்த கருத்தில்லை.

இனப்படுகொலையை ஒரு பெரிய அளவிலான குற்றமாக சமூகப் புரிதலுக்கும், இனப்படுகொலையை ஒரு உள்நோக்கக் குற்றமாக சட்டபூர்வ புரிதலுக்கும் இடையே ஒரு பிளவு நிலவுகிறது. பெரும்பாலான பிரபலமான புரிதல்களில், இனப்படுகொலை என்பது 'பேரளவிலான அட்டூழியம்', 'பேரளவிலான படுகொலை', 'பேரழிவு', 'பேரளவிலான மரணம்' ஆகிய வற்றுடன் தொடர்புடையது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, இனப்படுகொலை சாசனத்தை உருவாக்கிய பலரின் கருத்துடன் இது ஒத்துப்போகிறது. அந்த நேரத்தில் ஒரு முக்கிய பிரச்சினை என்னவென்றால், இனப்படுகொலைக்கான குற்றச்சாட்டு ஒரு மனிதக் குழுவின் இருப்பையே அச்சுறுத்தும் தாக்குதல்களுக்கு மட்டுமே ஒதுக்கப்படுவதை உறுதி செய்வதாகும். யூதர்களின் அழிப்பின் (Holocaust) அளவும் கொடூரமும் அச்சாசனத்தின் நோக்கம், பயன்பாடு பற்றிய விவாதங்களை மறைத்தன.

இன்று சட்டபூர்வமாக, இனப்படுகொலைக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இறப்பு தேவையில்லை. இனப்படுகொலை என்பது ஒரு குறிப்பிட்ட குழுவை அழிக்கும் நோக்கம், ஒரு ஒற்றை அழிவுச் செயலுடன் கூட இது சாத்தியமாகலாம். இனப்படுகொலைச் செயல்களின் வகைகளில் ஒரு குழுவின் உறுப்பினர்களுக்கு மனநல தீங்கு விளைவித்தல் அல்லது குழுவின் குழந்தைகளை மற்றொரு குழுவிற்கு மாற்றுவது போன்ற ஆபத்தான செயல்கள் அடங்கும். ஆயினும்கூட, இனப்படுகொலையின் பெரும்பாலான சட்டத் தீர்



> ***"இனப்படுகொலை என்பது ஒரு குறிப்பிட்ட குழுவை அழிக்கும் நோக்கம், ஒரு ஒற்றை அழிவுச் செயலுடன் கூட இது சாத்தியமாகலாம். இனப்படுகொலைச் செயல்களின் வகைகளில் ஒரு குழுவின் உறுப்பினர்களுக்கு மனநல தீங்கு விளைவித்தல் அல்லது குழுவின் குழந்தைகளை மற்றொரு குழுவிற்கு மாற்றுவது போன்ற ஆபத்தான செயல்கள் அடங்கும்."***

மானங்களின் அளவு அல்லது 'கருப்பொருள்' பற்றிய பிரச்சினை ஆழமாகப் பதிந்துள்ளது. நோக்கத்திற்கான சட்டபூர்வ தேவையை நிறுவுவதில் உள்ள சிரமமே இதற்குக் காரணம்.

ஒரு குழுவை அழிக்கும் நோக்கத்தை வெளிப்படையாகத் தெரியப்படுத்தும் உறுதியான திட்டம் அரிதாகவே இருக்கும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நோக்கத்தை சூழ்நிலைகளிலிருந்து ஊகிக்க வேண்டும். இதன் காரணமாக, அழிவின் அளவு நோக்கத்தை நிறுவுவதில் ஒரு பொருத்தமான காரணியாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ருவாண்டா போன்ற சில சந்தர்ப்பங்களில், இனப்படுகொலை நோக்கத்திற்கான சான்றுகள் கொலைகளின் எண்ணிக்கையில் வெளிப்படுவதாகச் சொல்லப்பட்டது. ருவாண்டா விடயத்தில் இது முக்கியமான காரணியாக வழக்குகளில் பயன்படுத்தப்பட்டன. இதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டன. அவை தனியே விரிவான பார்வையை வேண்டுபவை.

கடந்த அரை நூற்றாண்டுகால வரலாற்றில், இனப்படுகொலை தொடர்பில், விபரங்கள் தெளிவாக இல்லாத பிற சூழ்நிலைகளும் உள்ளன. குற்றவாளிகள் பரந்த அளவிலான அழிவைச் செய்ய வாய்ப்பு உள்ளது, ஆனால் அவ்வாறு செய்யாமல் இருக்கும்போது, தன்னால் செய்யக் கூடியதை விடக் குறைந்தளவு அழிவுகளையே செய்துள்ளார் என்பதைக் குற்றவாளி குறிப்பிட்ட குழுவை அழிக்க நினைத்தார் என்பதை நிராகரிப்பதற்கான வாதமாக வைக்கமுடியுமா என்கிற கேள்வி எழுகிறது. இந்த வாதத்தைத்தான் இஸ்ரேலிய ஆதரவாளர்கள் பயன்படுத்துகிறார்கள்.

கணிசமான அழிவு இல்லாததை, அழிக்கத் தேவையான சிறப்பு நோக்கம் இல்லை என்பதைக் குறிக்கும் சான்றாக விளக்கலாம் என்பது இன்னும் பயன்படும் ஒரு வாதமாகும். எடுத்துக்காட்டாக, டார்பூரில் இனப்படுகொலை நடந்ததா என்பதை விசாரிக்க நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகளின் விசாரணை ஆணையம், அரசாங்கப் படைகள் தான் தாக்கிய கிராமங்களில் உள்ள முழு மக்களையும் அழிப்பதைத் தவிர்த்து, இளைஞர்களின் குழுக்களை மட்டுமே தேர்ந்தெடுத்து கொன்றது பொருத்தமானது என்ற முடிவுக்கு வந்து, அதனடிப்படையில் இனப்படுகொலை நடக்கவில்லை என்று ஆணையம் இறுதியில் தீர்மானித்தது.

> ***"இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், ஆக்கிரமிப்பு போன்ற சர்வதேசக் குற்றங்களைப் பொறுத்தவரை அவற்றின் பாரதூரமான தன்மைகள் குறித்த சட்டப் படிநிலை இல்லை."***

ஒரு குழுவின் 'பகுதி' என்ன என்ற சட்டக் கேள்விக்கும் முக்கியத்துவம் பொருத்தமானது. இனப்படுகொலை சாசனத்தின் வரைவாளர்கள், இனப்படுகொலை குற்றம் 'முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ' ஒரு பாதுகாக்கப்பட்ட குழுவினை அழிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது என்பதை உறுதி செய்வதில் முனைப்பாக இருந்தனர். குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் முழுமையாக அழிப்பது ஒரு தேவையல்ல.

ஆனால், குழுவின் 'குறிவைக்கப்பட்ட ஒரு பகுதி' எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவேண்டும்? இந்தக் கேள்விக்கு முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் (ICTY) அளித்த பதில், வெவ்வேறு சூழ்நிலைகளிலும் புவியியல் அடிப்படையிலும் மொத்தக் குழுவின் குறிப்பிடத்தக்க விகிதமாக இலக்கு வைக்கப்பட்ட பகுதி இருக்கும் எண்ணிக்கையின் அடிப்படையில் அல்லது குறிப்பிட்ட இலக்கு வைக்கப்பட்ட நபர்கள் குழுவின் உயிர்வாழ்வில் எவ்வளவு முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்பதை மதிப்பிடுவதன் அடிப்படையில் தீர்மானிக்க முடியும் என்பதை நிறுவுகிறது. குழுவை 'முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ' அழிக்கும் நோக்கம் 'முழுமையாகவோ அல்லது கணிசமான பகுதியாகவோ' என்று நிறுவுகிறது, ஆனால் கணிசமான தன்மை என்பது எவ்வாறு தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

எண்களில் குறுகிய கவனம் செலுத்தும்போது அது சிக்கலானதும் தனித்துவமானதுமான வரலாற்று நிகழ்வுகளுக்கு இடையில் எளிமையான ஒப்பீடுகளுக்கு வழிவகுத்துவிடும் என்பது ஒரு சிக்கலாகும். உதாரணமாக, 2019-இல் ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் மியான்மரின் ஆங் சான் சூகி வெளியிட்ட அறிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். நாட்டின் மேற்கில் உள்ள முஸ்லிம் இன சிறுபான்மையினரான ரோஹிங்கியாக்களுக்கு எதிராக இனப்படுகொலை செய்வதன் மூலம் இனப்படுகொலை சாசனத்தை மீறியதாக மியான்மர் மீது குற்றம் சாட்டப்பட்டது. அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காக தனது தொடக்க அறிக்கையில், சூகி அளவு குறித்த பிரச்சினையை எழுப்பினார். இனப்படுகொலை என்பது ஆறு மில்லியனுக்கும் அதிகமான ஐரோப்பிய யூதர்களை முறையாகக் கொல்வதும், ருவாண்டாவில் 70 சதவீத டுட்சிகளை பெருமளவில் கொல்வதும் என்று சூகி நீதிமன்றத்தில் கூறினார். இதற்கு நேர்மாறாக, ரோஹிங்கியாக்கள் மிகக் குறைந்த அளவிலான மரணத்தை சந்தித்



தனர். இதன் பொருள், ரோஹிங்கியாக்களை ஒரு குழுவாக அழிக்கும் நோக்கம் இல்லை என்று சூகி வாதிட்டார்.

இனப்படுகொலை சாசனத்தின் வரைவும் இனப்படுகொலை சட்டத்தைப் பயன்படுத்த முயற்சிக்கும் நீதிமன்றங்களும் அழிவு என்பது குழுவின் உயிரியல், உடல் அழிவுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. நீதிமன்றங்கள் இனப்படுகொலை நோக்கத்திற்கான சான்றாக விரிவான உடல் அழிவுச் செயல்களை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் வரலாற்றாசிரியர்கள், மானுடவியலாளர்கள், சமூகவியலாளர்கள், குழுவின் தனிப்பட்ட உறுப்பினர்களின் கணிசமான உடல் அழிவைத் தவிர வேறு வழிகளில் கூட குழுக்கள் அழிக்கப்படலாம் என்று கருத்துரைத்துள்ளனர். உண்மையில் கொலையைத் தவிர வேறு வழிகளில் அழிவு என்பது இனப்படுகொலை சாசனத்தின் கட்டமைப்பிற்குள் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும், ஒரு குழுவை அதன் அடையாளத்துடன் இணைக்கும் முக்கியமான விஷயங்களை (மொழிகள், பழக்கவழக்கங்கள், மத நடைமுறைகள், வீடுகள், வழிபாட்டுத் தலங்கள் போன்றவை) அழிப்பதை 'அழிக்கும் நோக்கத்தின்' ஒரே ஆதாரமாக ஏற்றுக்கொள்ள நீதிமன்றங்கள் பொதுவாகத் தயாராக இல்லை. அதன் உறுப்பினர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் திறனை நீக்குவதன் மூலம் குழுவைச் சமூகரீதியாக அழிக்கும் பிற வழிமுறைகளுடன் உடல் அழிவுச் செயல்களையும் கருத்தில் கொள்ளும் முழுமையான மதிப்பீடுகள் இனப்படுகொலை குறித்த தீர்ப்புகளில் முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், ஆக்கிரமிப்பு போன்ற சர்வதேசக் குற்றங்களைப் பொறுத்தவரை அவற்றின் பாரதூரமான தன்மைகள் குறித்த சட்டப் படிநிலை இல்லை. இந்தக் குற்றங்கள் ஒவ்வொன்றும் 'உலகளாவிய கண்டனத்திற்குரியவை', 'உலகளாவியளவில் வெறுக்கத்தக்கவை', 'அனைத்து மனிதகுலத்தின் மனசாட்சியையும் அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன.' இருப்பினும் பெரும்பான்மை அபிப்பிராயத்தில் இனப்படுகொலைதான் 'குற்றங்களின் குற்றம்' அல்லது 'இறுதி குற்றம்' என்ற நிலையைக் கொண்டுள்ளது. அளவின் அடிப்படையானதாகக் கருதப்படுவது இந்தத் (தவறான) புரிதலின் காரணமாக உள்ளது. ஆயினும் இதன் விளைவுகள் சிக்கலானவை. உதாரணமாக, பாதிக்கப்பட்டவர்கள், தங்கள் துன்பத்தின் அளவை அங்கீகரிப்பதற்காக, வேறு சில சர்வதேச குற்றங்களுக்குப் பதிலாக - இனப்படுகொலை நடந்ததற்கான ஒப்புதலை நாடுகிறார்கள். இதனால் பல சந்தர்பங்களில் கிடைப்பதற்கு வாய்ப்பான நீதியும் கிடைக்காமல் போகிறது என்ற விமர்சனமும் கவனத்திற்குரியது. அனைத்தையும் இனப்படுகொலையாக அங்கீகரிக்கக் கோரும் ஆவலில் எண் விளையாட்டுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் பல சந்தர்பங்களில் அவை ஆபத்தான பின் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இந்த எண் விளையாட்டை கொஞ்சம் விரிவாகப் பார்ப்பது பொருத்தம்.



மியன்மார்: போதாமை வாதம்:

2019-ஆம் ஆண்டில், காம்பியா மியன்மாருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்தது, மியன்மார் 2016 மற்றும் 2017-ஆம் ஆண்டுகளில் ரோஹிங்கியாக்களை நடத்திய விதம் இனப்படுகொலை சாசனத்தை மீறுவதாகக் குற்றம் சாட்டியது. முதற்கட்ட நடவடிக்கைகளில், மியன்மாரை பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர்கள், மியன்மாருக்கு எதிரான வழக்கை விவரிக்கும் விண்ணப்பத்தில் ரோஹிங்கியா இறப்புகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லை என்றும் அந்த எண்ணிக்கையை தாக்கப்பட்டதாகக் கூறப்படும் மக்கள் தொகையின் அளவிற்கோ அல்லது வங்கதேசத்திற்குள் எல்லையைத் தாண்டிய எண்ணிக்கையுடனோ ஒப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்றும் வாதிட்டனர்.

இந்த விடுபாடிற்கான காரணம், இறந்தவர்களின் எண்ணிக்கையை மீண்டும் கணக்கிடுவது மியன்மாரின் இனப்படுகொலை நோக்கம் குறித்த கூற்றை பலவீனப்படுத்தும் என்று மியன்மாரின் வழக்கறிஞர்கள் வாதிட்டனர்: 'ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையில் 10,000 பேர் இறந்தால், அதற்கு அந்த குழுவை உடல் ரீதியாக அழிக்கும் நோக்கத்தைத் தவிர வேறு ஏதாவது காரணம் இருக்கலாம்.' இனப்படுகொலை சாசனத்தின் கீழ், மொத்த பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை விண்ணப்பதாரர் முன்வந்து சேர்க்காத முதல் வழக்கு இது என்று மியன்மார் வழக்குரைஞர்கள் குறிப்பிட்டனர். 100,000-க்கும் மேற்பட்ட ரோஹிங்கியாக்கள் வசிக்கும் மியான்மருக்குள் உள்ள முகாம்களில் வேண்டுமென்றே கொலைகள் அல்லது முறையான உடல் அழிவு நடந்ததற்கான எந்த ஆதாரமும் ஏன் இல்லை என்ற கேள்வியையும் அவர்கள் எழுப்பினர். மியான்மரின் வழக்கறிஞர்களின் பார்வையில், மியான்மரின் அதிகாரிகள் ஒழிப்பைத் தொடர போதுமான வாய்ப்பு இருந்த சூழ்நிலைகளிலும் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று அவர்கள் முடிவு செய்தனர் என்றும் வாதிட்டனர்.

காம்பியாவின் ஆரம்ப வாதங்கள், ரோஹிங்கியாக்களுக்கு எதிரான வன்முறையை விசாரிக்க ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்சிலால் நியமிக்கப்பட்ட ஒரு சுயாதீன உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. இராணுவத்தின் செயல்களின் தன்மையும் நோக்கமும் குறித்த மதிப்பீட்டின் அடிப்படையில், அழிவின் அளவிலிருந்து கிடைக்கக் கூடிய ஒரே அனுமானம், ரோஹிங்கியாக்களை ஒரு குழுவாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்க அரசின் நோக்கம் இருந்தது என்ற கருத்தை உண்மை கண்டறியும் குழு உருவாக்கியது.

உண்மை கண்டறியும் குழுவின் பார்வையில், அரசாங்க அதிகாரிகளில் இருந்தும் பிற அரங்காடிகளிடமிருந்தும் மனிதாபிமானமற்ற கதையாடல்கள், சொல்லாட்சி முறையான திட்டமிடல், பேரளவிலான கொலை, பேரளவிலான இடப் பெயர்ச்சி, பேரளவிலான பயம், அதிகப்படியான மிருகத்தனம், இலக்கு வைக்கப்

பட்ட மக்களின் வீடுகளை அழித்தல் ஆகியன நிகழ்ந்தன. ரோஹிங்கியாக்களின் இடம்பெயர்வை, ஸ்ரெப்ரெனிகாவிலி ருந்து போஸ்னிய முஸ்லிம்களை வலுக்கட்டாயமாக இட மாற்றம் செய்ததைப் போலவே பார்க்க முடியும் என்று உண்மை கண்டறியும் குழு முடிவு செய்தது.

2017 வன்முறை மியான்மரின் பாதுகாப்புப் படைகள் கிளர்ச் சிக் குழுக்களால் முன்வைக்கப்பட்ட கடுமையான பயங்க ரவாத அச்சுறுத்தலை நிவர்த்தி செய்ய மேற்கொண்ட முயற் சிகளின் விளைவாகும் என்று மியான்மர் அரசாங்கம் கூறி யது. அரசாங்கத்தின் கூற்றுப்படி, குறித்த பயங்கரவாதி களால் ஒருங்கிணைந்த தாக்குதல்களுக்கு ஆளான பகுதி களில் அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு குறிப் பிட்ட காலத்திற்கு படைகள் நிறுத்தப்பட்டன. வன்முறை குறித்த பயம்தான் இலட்சக்கணக்கான ரோஹிங்கியாக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வங்கதேச எல்லை யைக் கடக்கக் காரணம். எனவே அரசாங்கம் அதன் சொந்த உள் விசாரணை ஆணையத்தை அமைத்துள்ளது என்பது மியான்மாரிய அரசின் வாதமாக இருந்தது. இவ்வகையில் எண்ணிக்கை விளையாட்டை மியான்மார் விளையாடியது

குவாத்தமாலா: இறந்தோரைக் கணக்கிடல்:

குவாத்தமாலா உண்மை ஆணையம், 1996 அமைதி ஒப்பந் தங்களின் ஒரு பகுதியாக 1997-இல் நிறுவப்பட்டது. இது 36 ஆண்டுகால உள்நாட்டு ஆயுத மோதலை விசாரிக்கும் நோக்குடையதாக இருந்தது. மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துதல் மற்றும் வரலாற்றுப் பதிவை தெளிவுப டுத்துதல் ஆகியவற்றை நோக்காகக் கொண்ட ஆணையம், மோதலுக்குப் பிந்தைய உண்மையைத் தேடுவதில் அரசி யல் ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கூறுகளில் ஒன்றை எதிர்கொண்டது. அது இறந்த வர்களைக் கணக்கெடுத்தல். எத்தனை பேர் கொல்லப்பட்டனர், காணாமல் போனார்கள் மற்றும் குறிவைக்கப்பட்ட னர் என்பது வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல. அவை வரலாற்று விவரிப்பு களை வடிவமைத்தல், பொறுப்புக் கூறலை நிறுவுதல், இனப்படுகொலைக் கான சட்ட வரம்பை நிறைவேற்றுதல் போன்றவற்றில் மையமாக இருந்தன. இருப்பினும், ஆரம்பத்திலிருந்தே, அவை கடுமையான போட்டிக்கான தளமாக மாறியது, மேலும் இந்த சர்ச்சை இறுதியில் ஆணையத்தின் சட்டபூர்வமான தன்மை, அதன் இனப் படுகொலை கண்டுபிடிப்பின் வலிமை ஆகிய இரண்டையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது.

குவாத்தமாலாவின் போருக்குப் பிந் தைய உண்மையைக் கண்டறியும் செயற் பாட்டில் எண்ணிக்கை ஆழமான அர சியல் பங்குகளைக் கொண்டிருந்தது. ஆணையத்தின் இறுதி அறிக்கை, 1960 மற்றும் 1996-க்கு இடையில் 200,000-க்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டனர் அல்லது காணாமல் போயுள் ளனர் என்று மதிப்பிட்டுள்ளது. இதில் 90%-க்கும் மேற்பட்ட மீறல்கள் அரசுப் படைகளாலும் அவற்றின் கூட்டணி துணை இராணுவக் குழுக்களாலும் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தக் கருத்துவன்முறையை வரையறுக்கப்பட்ட, நியாய மான கொரில்லா கிளர்ச்சியின் முதன்மையான பொறுப்பு என்று சித்தரித்த, இராணுவ மற்றும் பழமைவாதத் துறை களால் நீண்டகாலமாக ஆதரிக்கப்பட்டு வந்த அதிகாரப் பூர்வ விவரிப்புக்கு இது நேரடியாக முரணானது.

இந்த புள்ளிவிவரங்கள் அரசு அனுமதித்த வரலாற்றை நிரா கரிப்பது மட்டுமல்லாமல், குவாத்தமாலா அரசு முறையான, பெரிய அளவிலான அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதா கவும், குறிப்பாக மாயா இன மக்களுக்கு எதிராகவும் ஈடுபட் டதாகவும் அவர்கள் நிறுவினர். பல தசாப்தங்களாக மாயா பழங்குடியினர் இலக்கு வைக்கப்பட்ட அழிவைச் சந்தித்த தாகக் கூறப்படும் கூற்றுகளை - நீண்டகாலமாக உயிர் பிழைத்த பழங்குடியினருக்கும் மனித உரிமை ஆதரவாளர் களுக்கும் சொல்லிவந்தனர். இராணுவத்தினருக்கும் அரசி யல் உயரடுக்கினருக்கும் இது மிகுந்த சிக்கலுடையதாக இருந்தது. அவர்களின் நற்பெயர்கள், அதிகாரம், சட்ட வழக்குத் தொடரப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் என்பன அவர்களை அச்சுறுத்தின. இதனால் எண்களின் சட்டபூர்வ மான தன்மையை அவர்கள் கேள்விக்குட்படுத்தி விமர்சித் தனர். இது நீதி குறித்த ஆழமான மோதல்களுக்கான ஒரு மறைமுக போர்க்களமாக மாறியது.

ஆணையத்தின் ஆணையானது, அறிக்கையைப் பலவீனப்ப டுத்தும் தாக்குதலுக்கு வழியமைத்தது. விசாரணை செய்ய ஆணையத்திற்கு 18 மாதங்கள் மட்டுமே இருந்தன, சாட்சிய மளிக்கவோ அல்லது தனிப்பட்ட குற்றவாளிகளை பெயரி டவோ எந்த அதிகாரமும் இல்லை, மேலும் அரச ஆவணக் காப்பகங்களுக்கான அணுகல் குறைவாக இருந்தது, அவற் றில் பல அழிக்கப்பட்டன. இந்தக் கட் டுப்பாடுகளை நிவர்த்தி செய்ய, ஆணையம் உயிர் பிழைத்தவர்களின் சாட்சியங்கள், அரசு சாரா நிறுவனங் களின் காப்பகப் பொருட்கள் மற்றும் தடயவியல், மானுடவியல் ஆகிய வற்றை பெரிதும் நம்பியிருந்தது. முக் கியமாக, இது புள்ளிவிவர அடிப்ப டையிலான நீட்டிப்புக் கணிப்பிட லைப் (extrapolation) பயன்படுத் தியது.

> ***“குவாத்தமாலாவில் 1960 மற்றும் 1996-க்கு இடையில் 200,000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் போயுள்ளனர் என்று மதிப்பிட்டுள்ளது. இதில் 90%-க்கும் மேற்பட்ட மீறல்கள் அரசுப் படைகளாலும் அவற்றின் கூட்டணி துணை இராணுவக் குழுக்களாலும் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.”***



இது ஒரு சட்டபூர்வமான சமூக அறி வியல் முறையாக இருந்தாலும், அதன் அனுமானங்கள் எளிதான இலக்குக ளாக மாறியது. ஆணையம் யூகத்தின் மூலம் புள்ளிவிவரங்களை ‘உயர்த்தி’ வருவதாக எதிர்ப்பாளர்கள் குற்றம் சாட்டினர். மறைமுக ஆதாரங்களை நம்பியிருப்பது எண்களை நம்பமுடி யாததாக ஆக்கியது என்று வாதிட்ட னர். புள்ளிவிவர அனுமானத்தை கடு மையானதாக இல்லாமல் ஊகமாக வடிவமைப்பதன் மூலம், எதிர்ப்பாளர் கள் எண்களை மட்டுமல்ல, முழு உண்மை தேடும் செயல்முறையின் நம்பகத்தன்மையையும் சந்தேகிக்க முடிந்தது.

எண்ணிக்கை குறித்த சர்ச்சை இனப்படுகொலை தீர்மானத்தில் நேரடி தாக்கங்களைக் கொண்டி ருந்தது. ஐ.நா. இனப்படுகொலை சாசனத்தின் கீழ், இனப்படுகொலையை நிரூபிப்பது என்பது, ஒரு குழுவை முழுவதுமாகவோ அல்லது பகுதி யாகவோ அழிக்கும் நோக்கத்தையும் (கொலை, கடுமையான தீங்கு விளைவித்தல் போன்றவை) நிறுவவேண்டும். குவாத்தமாலா சூழலில், மாயாக் களின் உயிரிழப்பு புள்ளிவிவரங்கள், அரசு வன் முறை அவர்களை ஒரு குழுவாக குறிவைத்து இனப்படுகொலை நோக்கத்துடன் ஒத்துப்போகும் அளவை எட்டியது என்பதை நிரூபிக்க மிக முக் கியமானவையாக ஆணையம் கருதியது.



சில பிராந்தியங்களில் மாயாக்களுக்கு எதிராக செய்யப்பட்ட செயல்கள் இனப்படுகொலை என்று ஆணையம் முடிவு செய்தது. இருப்பினும், எண் கள் சந்தேகத்திற்குரியதாக மாற்றப்பட்டவுடன், இனப்படுகொலை கூற்று சட்டபூர்வமாக அடித்த ளமாக இல்லாமல் அரசியல் ரீதியாக உந்தப்பட் டதாக மறுவடிவமைக்கப்படுவதற்கு வாய்ப்புள் ளது. இறப்பு எண்ணிக்கை உயர்த்தப்பட்டால், வன்முறையின் அளவு இனப்படுகொலைக்குக் குறைவாக இருக்கலாம், மோதலை ஒரு இனக் குழுவை வேண்டுமென்றே அழிப்பதற்குப் பதிலாக ஒரு எதிர்ப்பு கிளர்ச்சியாக மறுவடிவமைக்கக்கூடும் என்று விமர்ச கர்கள் வாதிட்டனர். இந்த வழியில், எண்ணிக்கை சார்ந்த சர்ச்சைகள் இனப்படுகொலை என்ற அம்சத்தை நீர்த்துப் போகச் செய்தன.

எண்களை அரசியல்மயமாக்கியதால், ஆணையத்தின் பணி களின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை குலைந்தது. இந்த எண்ணிக்கைகளில் நிலவும் நிச்சயமற்ற தன்மை மறுப்புவாதம் வளர உதவியது. அரசியல் உயரடுக்குகள், வன்முறையின் சாராம்சத்தை புறக்கணித்து, நுட்பக் காரணங்களை முன் னிறுத்தி இனப்படுகொலை என்ற குற்றச்சாட்டை நிராகரிக்க முடிந்தது. சர்வதேச அளவில், மனித உரிமை வழக்கறி ஞர்கள் ஆணையத்தின் கண்டுபிடிப்புகளை ஏற்றுக்கொண் டிருந்தாலும், மாறுபடும் எண்ணிக்கைகள் வழக்குத் தொடர் வதற்கோ அல்லது இழப்பீடு வழங்குவதற்கோ தேவையான அரசியல் மனப்பாங்கை ஒருங்கிணைக்கும் முயற்சிகளைத் தளர்த்தின. காலப்போக்கில், இந்த சர்ச்சைகள் குற்றவாளி களின் தார்மீக, சட்டரீதியான பொறுப்புகளிலிருந்து கவ னத்தை விலக்கி, உண்மை ஆணையத்தின் அறிவியலியல் நம்பகத்தன்மையைச் சுற்றிய விவாதங்களுக்குத் திருப்பின.

குவாத்தமாலாவில், இறந்தவர்களை எண்ணுவது ஒரு போதும் நடுநிலையான பயிற்சியாக இருக்கவில்லை. புள்ளி விவர உண்மைக்கு அப்பாற்பட்ட குறியீட்டு, சட்ட மற்றும் அரசியல் அர்த்தங்களுடன் எண்கள் பயன்படுத்தப்பட்டன. முறைகள், விளக்கம் குறித்த சர்ச்சைகள், அரசியல் அரங்கா டிகள் ஆணையத்தின் பணியை நியாயமற்றதாக்குவதற்கான ஒரு வழிமுறையாக மாறியது. பேரளவிலான அட்டூழியங் களை மிகைப்படுத்தப்பட்ட அல்லது அரசியல் ரீதியாக உந் தப்பட்ட கூற்றுகளாக மறுவடிவமைத்தது. பாதிக்கப்பட்டவர் களின் எண்ணிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதில் முனைந்த இந்த சர்ச்சைகள் இனப்படுகொலை தீர்மானத் தையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தின. உள்நாட்டு, சர்வதேச பொறுப்புக்கூறலை மழுங்க டித்தன. குவாத்தமாலாவின் உதாரணம், நிலைமாறுகால நீதி பற்றிய ஒரு பரந்த உண்மையை விளக்குகிறது: ஆழமாக துருவப்படுத்தப்பட்ட மோதலுக்குப் பிந் தைய அமைப்புகளில் எண்கள் துல்லி யத்தைப் பற்றியது மட்டுமல்ல, யாரு டைய உண்மை நினைவில் வைக்கப் படும், யாருடையது அழிக்கப்படும் என் பது பற்றியது.

மியான்மரில், எண்ணிக்கைகள் அட்டூழி யத்தின் துணை விளைபொருளாக மட் டும் இல்லாமல் அட்டூழியத்திற்குப் பிந் தைய போராட்டத்தில் ஒரு ஆயுதமாக இருந்தன. அணுகலைக் கட்டுப்படுத்து வதன் மூலமும், உயிர் பிழைத்தவர் களின் சாட்சியத்தை இழிவுபடுத்துவதன் மூலமும், இறப்பு எண்ணிக்கையில் சந் தேகத்தை ஏற்படுத்துவதன் மூலமும், மியான்மர் இராணுவம் கதையை முழு மையாகச் சொல்லி முடிவதற்கு முன்பே மீண்டும் எழுத முயன்றது. ஆனால், எண்ணிக்கை பற்றிய சர்ச்சைகள் எரிக் கப்பட்ட கிராமங்கள், பெருமளவிலான இடம்பெயர்வு மற்றும் பாலியல் வன்முறை ஆகியவற்றின் யதார்த்தத்தை அழிக்க வில்லை, ஆனால் அவை இனப்படுகொலை கூற்றின் அரசி யல் மற்றும் சட்ட சக்தியை பலவீனப்படுத்தின. மியான்மர் நமக்குச் சுட்டிக்காட்டும் தொடர்ச்சியான உண்மை என்ன வென்றால், குற்றவாளிகள் தகவல் ஓட்டத்தை கட்டுப்படுத் தும் சூழலில், உலகம் ஒரு குற்றத்தை எவ்வாறு அழைக் கிறது என்பதை தீர்மானிப்பதில், எண்களின் அரசியலும் வன் முறையைப் போலவே ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது என்ப தாகும்.

பொஸ்னியா: சர்ச்சைக்குரிய எண்கள்:

பொஸ்னியா - ஹெர்சகோவினாவில் 1992 – 1995 வரை நடந்த போர் கெடுபிடிப்போருக்குப் பிந்தைய ஐரோப்பாவில் மிகவும் இரத்தக்களரியான அத்தியாயங்களில் ஒன்றாகும். பேரளவிலான கொலைகள், இன அழிப்பு, திட்டமிட்ட அட்டூ ழியங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. சர்வதேச மற்றும் உள் நாட்டு அமைப்புகள் வன்முறையை ஆவணப்படுத்தவும் பொறுப்பை நிறுவவும் முயன்றன. ஆனால் தொடக்கத்திலி ருந்தே உயிரிழப்பு எண்கள் - எத்தனை பேர் கொல்லப்பட் டனர், காணாமல் போனார்கள், இடம்பெயர்ந்தார்கள் - தீவிர அரசியல் மோதலுக்குரிய தளமாக மாறின. குவாத்தமாலா போன்ற மோதலுக்குப் பிந்தைய சூழல்களைப் போலவே, பொஸ்னியாவில் எண்ணிக்கை தொடர்பான சர்ச்சைகள் வெறும் புள்ளிவிவர கருத்து வேறுபாடுகள் அல்ல. அவை சட்டபூர்வமான தன்மை, வரலாற்று விவரிப்பு மற்றும் சட்டப் பொறுப்புக்கூறல் தொடர்பான போர்களாகும். உயிரிழப்பு புள்ளிவிவரங்கள் மீதான விவாதத்திற்குரிய நிகழ்வுகள் குறித்த பொதுமக்களின் கருத்தை வடிவமைக்கும், சமரச முயற்சிகளை சிக்கலாக்கும் மற்றும் இனப்படுகொலை தீர்மா னத்தின் தார்மீக மற்றும் சட்ட சக்தியை பலவீனப்படுத்தும். இதுதான் அங்கு நிகழ்ந்தது.

பொஸ்னியாவில் இறப்புகளின் எண்ணிக்கை பெருமளவான குறியீட்டு, அரசியல் முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. போருக்குப் பிந்தைய மொத்த போர் இறப்புகளின் ஆரம் பகால மதிப்பீடுகள் வியத்தகு முறையில் வேறுபடுகின்றன. பெரும்பாலும் பொஸ்னிய அரசு மற்றும் அதன் ஆதரவா ளர்கள் இறப்பு மதிப்பீடுகள் 200,000 என்று கூறுகின்றபோது வேறு புள்ளிவிபரங்கள் 2007-இல் சரஜெவோவை தளமாகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் ஆவண மையத்தின் ஆராய்ச் சியால் பின்னர் நிறுவப்பட்ட தரவுகள் 100,000-க்கு நெருக் கமான எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றன. இந்த முரண் பாடுகள் வெறும் ஆய்வுமுடிவுகள் சார்ந்தவை அல்ல.



> ***“பொஸ்னியாவில், மோதலுக்குப் பிந்தைய பிற சூழல்களைப் போலவே, எண்களும் இழப்பு அளவை விட அதிகமாக இருந்தன - அவை அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதியாகும். ஆரம்பகால உயர்த்தப் பட்ட புள்ளிவிவரங்கள், பின்னர் மிகவும் துல்லியமான எண்ணிக் கையால் மாற்றப்பட்டன.”***

அதிக எண்ணிக்கைகள் அட்டூழியங்களின் அளவைக் காட்டு வதற்கும், பொஸ்னியர்களுக்கு எதிரான இன அழிப்பு குற்றச் சாட்டுகளை வலுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டன. மாறாக, குறைந்த எண்ணிக்கைகள் செர்பிய தேசியவாதி களால் குற்றங்களின் தீவிரத்தை குறைத்து மதிப்பிடவும், இனப்படுகொலை என்ற வரையறையை எதிர்க்கவும் பயன்ப டுத்தப்பட்டன.

ஜூலை 1995-இல் பொஸ்னிய செர்பியப் படைகளால் 8,000-க்கும் மேற்பட்ட போஸ்னிய ஆண்களும் சிறுவர்களும் கொல் லப்பட்ட ஸ்ரெப்ரெனிகா படுகொலை, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவில் நடந்த மிக மோசமான அட் டூழியமாக பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பா யமும் (ICTY) மற்றும் சர்வதேச நீதிமன்றமும் இந்தக் கொலைகள் இனப்படுகொலை என்று தீர்மானித்தன.

இருப்பினும், அந்த சட்ட முடிவின் வலிமை ஓரளவு பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கையில் தங்கியிருந்தது. செர்பிய தேசியவாத விவரிப்புகள் 8,000 எண்ணிக்கையை தொடர்ந்து சவால் செய்து வருகின்றன, இது மிகைப்படுத்தப்பட்டதா கவோ அல்லது சில பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்களை விட போராளிகளே என்று கூறுகின்றன. எண்ணிக்கைகளை கேள்விக்குள்ளாக்குவது மூலம் இந்த அரங்காடிகள் இனப் படுகொலை வகைப்பாட்டை பலவீனப்படுத்த முயன்றனர், ஸ்ரெப்ரெனிகாவை ஒரு திட்டமிடப்பட்ட அழிப்புக்கு பதிலாக ஒரு துயரமான போர் இழப்பு என்று மறுபரிசீலனை செய் தனர். இந்த எண் ரீதியான போட்டி, ஆதாரங்களை முற்றிலு மாக நிராகரிப்பதற்குப் பதிலாக கூறப்படும் வழிமுறை விவா தத்தின் இடத்தில் மறுப்பு செயல்பட அனுமதித்தது.

குவாத்தமாலாவைப் போலவே, பொஸ்னியாவிலும் எண் களின் நம்பகத்தன்மை அவற்றைப் பெறுவதற்குப் பயன் படுத்தப்படும் முறைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கால போர்க்கால மதிப்பீடுகள் முழுமையற்ற அறிக்கைகள், காணாமல் போனோர் பட்டியல்கள், அகதிகள் கணக்குகளி லிருந்து பெறப்பட்ட வெளித்தரவுகளை அடிப்படை யாகக் கொண்டிருந்தன. காலப்போக்கில், ஆராய்ச்சி மற்றும் ஆவண மையம் மற்றும் சர்வதேச காணாமல் போனோர் ஆணையம் (ICMP) ஆகியவற்றின் பணி களின் மூலம் மிகவும் துல்லியமான எண்ணிக்கைகள் வெளிப்பட்டன, அவை தடயவியல் மானுடவியல் மற்றும் டிஎன்ஏ அடையாளத்தைப் பயன்படுத்தின.

முரண்பாடாக, மிகவும் துல்லியமான, குறைந்த உயி ரிழப்பு மதிப்பீடுகள் ஆரம்பகால உயர்த்தப்பட்ட புள் ளிவிவரங்களை மாற்றியமைத்ததால், இனப்படு கொலை மறுப்பாளர்களால் முந்தைய எண்கள் பிரச்சார நோக்கங்களுக்காகப் புனையப்பட்டதாகக் கூற இந்த மாற்றம் பயன்படுத்தப்பட்டது. இந்த சொல்லாட்சி நடவடிக்கை அட்டூழியங்களின் அள விற்கும் அவற்றின் நோக்கத்திற்கும் இடையிலான வேறுபாட்டை மழுங்கடித்தது. குறைவான இறப்புகள் நிகழ்வுகள் இனப்படுகொலை அல்ல என்று சிலர் வாதிட அனுமதித்தது. பொஸ்னியாவில் எண்களை அரசியல்மயமாக்குவது பல வழிகளில் உண்மை யைச் சொல்வதைக் குறைமதிப்பிற்குட்படுத்தியது.

எண்களைப் பற்றிய இந்தக் கேள்விகளும் எதிர்வினைகளும் பொதுமக்களிடையே குழப்பத்தையும் சந்தேகத்தையும் உரு வாக்கியதுடன் உயிரிழப்பு புள்ளிவிவரங்களுக்கான சவால் கள், மறுப்பு நிலைப்பாடுகளை நேரடியாக அங்கீகரிக்காமல் இனப்படுகொலை தீர்ப்புகளை கேள்விக்குட்படுத்துவதற் கான வழியை வழங்கின. ஒவ்வொரு சமூகமும் தன் சொந்த பாதிக்கப்பட்டவர்களின் கதையை உறுதிப்படுத்தும் புள்ளி விவரங்களைப் பயன்படுத்தியது. இதன் விளைவாக, சர்வ தேச தலையீட்டின் பொறுப்பைக் குறைத்தது.

பொஸ்னியாவில், மோதலுக்குப் பிந்தைய பிற சூழல்களைப் போலவே, எண்களும் இழப்பு அளவை விட அதிகமாக இருந்தன - அவை அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதி யாகும். ஆரம்பகால உயர்த்தப்பட்ட புள்ளிவிவரங்கள், பின்னர் மிகவும் துல்லியமான எண்ணிக்கையால் மாற்றப் பட்டன. இந்தச் செயன்முறை காலப்போக்கில் நம்பகத்தன் மைக்கு சிக்கலாக அமைந்தன. உயிரிழப்பு மோதல்களை முறைசார் கருத்து வேறுபாடுகளாக வடிவமைப்பதன் மூலம், அரசியல் அரங்காடிகள் - குறிப்பாக பொறுப்பைக் குறைக்க அல்லது மறுக்க முயல்பவர்கள் - இனப்படுகொலை என்ற பெயரின் சக்தியை வெற்றிகரமாக பலவீனப்படுத்தினர். பொஸ்னிய அனுபவம் ஒரு முக்கியமான பாடத்தை அடிக் கோடிட்டுக் காட்டுகிறது; நிலைமாறுகால நீதியில், எண் துல்லியம் மற்றும் முறைசார் வெளிப்படைத்தன்மை வெறும் தொழில்நுட்ப விஷயங்கள் அல்ல. அவை வரலாற்று

உண்மையின் சட்டபூர்வமான தன்மை மற்றும் சகிப்புத்தன்மைக்கு அடித்தளமாக உள்ளன.

சூடான்: எண்களின் அரசியல்:

2003-இல் சூடானின் டார்பூரில் வெடித்த மோதல், பொது மக்கள் மீதான பெருமளவிலான அட்டூழியங்கள் (குறிப்பாக அரபு அல்லாத இனக்குழுக்களான ஃபர், மசாலிட், ஜகாவா மக்களை குறிவைத்து இவை நடந்தன) சர்வதேச கண்டனத்தை ஏற்படுத்தியது. மனித உரிமை அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) இங்கு நடந்த கொலைகள், இடப்பெயர்வுகள் மற்றும் அழிவுகளை ஆவணப்படுத்தின. இதனை அடிப்படையாகக் கொண்டு, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் இதை இனப்படுகொலை என வகைப்படுத்தின. ஆனால் ஆரம்பத்திலிருந்தே ஒரு கேள்வி அரசியல் சர்ச்சையாக மாறியது. எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள், எத்தனை பேர் இடம் பெயர்ந்தார்கள்? இது வெறும் புள்ளிவிவர முரண்பாடாக இல்லாமல், சர்வதேச பதில்களை, இனப்படுகொலை குற்றச்சாட்டின் நியாயத்தன்மையை, மேலும் நீதி கிடைக்கும் வாய்ப்புகளையும் தீர்மானித்தது.

டார்பருக்கான ஆரம்ப உயிரிழப்பு மதிப்பீடுகள் பரவலாக மாறுபட்டன. 2004-ஆம் ஆண்டில், அமெரிக்க அரசாங்கமும் சில அரசு சாரா நிறுவனங்களும் 300,000 அல்லது அதற்கு மேற்பட்ட இறப்புகளின் புள்ளிவிவரங்களை மேற்கோள் காட்டின, அதே நேரத்தில் சூடான் அரசாங்கம் இறப்பு எண்ணிக்கை 'ஆயிரக்கணக்கில்' மட்டுமே என்று வலியுறுத்தியது. பின்னர், இறப்பு ஆய்வுகள் மற்றும் இடப்பெயர்ச்சி தரவுகளின் அடிப்படையில், ஐ.நா. மனிதாபிமான விவகார ஒருங்கிணைப்பு அலுவலகம் (OCHA) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) 200,000 முதல் 300,000 வரை இறப்புகளை மதிப்பிட்டன. இந்த புள்ளிவிவரங்கள் இறந்தவர்களை, குறிப்பாக பட்டினியாலும் இடப்பெயர்ச்சியாலும் ஏற்படும் நோய்களால் மறைமுகமாக கொல்லப்பட்டவர்களைக் குறைத்து மதிப்பிடக்கூடும் என்று மனித உரிமை அமைப்புகள் வாதிட்டன.

சூடானின் அரசாங்கத்தைப் பொறுத்தவரை, எண்ணிக்கையைக் குறைப்பது என்பது, அரசு தலைமையிலான படுகொலைகளுக்குப் பதிலாக, குறைந்த உயிரிழப்புகளுடன் கூடிய பழங்குடி சண்டை' என்று சித்தரித்து, அரசு தலைமையிலான திட்டமிட்ட படுகொலைகளை மறைக்கும் ஒரு வழியாக இருந்தது. ஆனால் சூடானிற்கு எதிரான வக்காலத்து குழுக்களுக்கு, டார்பூரை உலகளாவிய நிகழ்ச்சி நிரலில் வைத்திருப்பதற்கும், தடைகள், அமைதி காக்கும் நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற வழக்குகள் உள்ளிட்ட வலுவான தலையீடுகளை நியாயப்படுத்துவதற்கும் அதிக எண்ணிக்கைகள் முக்கியமானவையாக இருந்தன.

டார்பூர் எண்கள் பிரச்சினை ஆழமான வழிமுறை சவால்களால் மேலும் சிக்கலானது. சுயாதீன ஆராய்ச்சியாளர்களும் பத்திரிகையாளர்களும் பெரும்பாலும் மோதல் மண்டலங்களிலிருந்து தடுக்கப்பட்டனர், இதனால் நேரடியான எண்ணிக்கைச் சரிபார்ப்பு சாத்தியமற்றது. சாட், டார்பூர் முழுவதும் உள்ள முகாம்களுக்கு மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்ததால், இறப்பு கணக்கெடுப்புகள் பெரும்பாலும் அணுகக்கூடிய இடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டன, அணுக முடியாத கிராமப்புறங்களில் நடந்தவை தெரியாமலேயே போயின. பலர் நேரடி வன்முறையால் அல்ல, ஊட்டச்சத்து குறைபாடு, நோய் மற்றும் நீர் பற்றாக்குறையால் இறந்தனர். இந்த இறப்புகள் அட்டூழிய புள்ளிவிவரங்களில் எவ்வாறு கணக்கிடப்பட வேண்டும் என்ற கேள்வியை எழுப்பின. இதனால் எண்ணிக்கை தொடர்பான தெளிவு இருக்கவில்லை.

இந்த வழிமுறை வரம்புகள் அரசியல் ரீதியாக சுரண்டப்பட்டன. சூடான் அரசாங்கமும் அதன் கூட்டாளிகளும் அதிக இறப்பு எண்ணிக்கையை மிகைப்படுத்தப்பட்ட மேற்கத்திய பிரச்சாரமாக சித்தரித்தனர். மாறாக, சில வக்காலத்து பிரச்சாரங்கள் சர்வதேச சீற்றத்தைத் தூண்டுவதற்கு கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த மதிப்பீடுகளை வலியுறுத்தின, இது அணி திரட்டலில் பயனுள்ளதாக இருந்தாலும், இதை சவாலுக்குள்ளாக்கும்போது இது நீண்டகால நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்தியது.

எண்ணிக்கை குறித்த சர்ச்சை இனப்படுகொலை கூற்றில் நேரடி தாக்கங்களைக் கொண்டிருந்தது. 2004-ஆம் ஆண்டில், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் கோலின் பவல், டார்பூரில் இனப்படுகொலை நடந்ததாக அறிவித்தார். இது கொலைகளினதும் இடப்பெயர்ச்சியினதும் அளவை அடிப்படையாகக் கொண்டது. இருப்பினும், டார்பூரில் 2005 ஐ.நா. சர்வதேச விசாரணை ஆணையம், மனிதகுலத்திற்கு எதிரான பாரிய குற்றங்களையும் போர்க்குற்றங்களையும் ஒப்புக்கொண்டாலும், அவற்றை இனப்படுகொலை என்று அழைக்காமல் நிறுத்தியது. ஒரு குழுவை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்திற்கான போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதைக் காரணம் காட்டியது. இந்த வேறுபாடு, இனப்படுகொலையைச் சந்தேகிப்பவர்களை, உயிரிழப்பு எண்ணிக்கை சிறியதாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தால், நிகழ்வுகள் இனப்படுகொலை வரம்பை

> ***"2003-இல் சூடானின் டார்பூரில் வெடித்த மோதல், பொதுமக்கள் மீதான பெருமளவிலான அட்டூழியங்கள் சர்வதேச கண்டனத்தை ஏற்படுத்தியது. மனித உரிமை அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) இங்கு நடந்த கொலைகள், இடப்பெயர்வுகள் மற்றும் அழிவுகளை ஆவணப்படுத்தின."***



எட்டவில்லை என்ற ஒரு தோற்றத்தை அழித்தது. ஆனால் தனது முடிவுகளை எட்ட ஐ.நா. சர்வதேச விசாரணை ஆணையம் புள்ளிவிபரங்களை மையமாகக் கொள்ளவில்லை என்ற உண்மை கணிப்பில் எடுக்கப்படுவதில்லை.

பொஸ்னியா, குவாத்தமாலாவைப் போலவே, இனப்படுகொலையின் அளவீடாக உயிரிழப்பு எண்ணிக்கையில் கவனம் செலுத்துவது, நோக்கத்துடன் அளவை மோதச் செய்யும் அபாயத்தை ஏற்படுத்தியது. எண்கள் சந்தேகத்திற்குரியதாக மாறும்போது, இலக்கு மற்றும் அழிவின் வடிவங்கள் பிற வரையறை அளவுகோல்களைப் பூர்த்தி செய்தாலும் கூட, இனப்படுகொலை கட்டமைப்பிலும் சந்தேகம் எழுந்தது. டார்பூரில் எண்ணிக்கையை அரசியல்மயமாக்குவது சர்வதேச வக்காலத்து மற்றும் சட்டப் பொறுப்புணர்வை குறை மதிப்பிற்கு உட்படுத்தியது. மதிப்பீடுகள் ஏற்ற இறக்கமாக இருந்ததால், பொதுமக்களும் கொள்கை வகுப்பாளர்களும் எண்கள் விவாதத்தை நிச்சயமற்ற தன்மை அல்லது மிகைப்படுத்தலின் அடையாளமாகக் காணத் தொடங்கினர். இதனால் இந்தப் பிரச்சனைக்கான தீர்வின் அவசரத்தை குறைத்தனர்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்ட சூடான் அதிகாரிகளுக்கான பாதுகாப்பு குழுக்கள், நம்பமுடியாத வழக்கு விசாரணை விவரிப்புகளுக்கான சான்றாக சர்ச்சைக்குரிய உயிரிழப்பு புள்ளிவிவரங்களை சுட்டிக்காட்டின. அரசாங்கத்தின் குறைந்த எண்ணிக்கையை தலையீட்டைப் பற்றி அஞ்சும் சில பிராந்திய மற்றும் சர்வதேச அரங்காடிகள் ஏற்றுக்கொண்டன. அதே நேரத்தில் மனித உரிமைக் குழுக்களின் அதிக மதிப்பீடுகள் அதன் வலைப்பின்னல்களுக்கு அணிதிரட்டும் புள்ளிகளாக மாறின. ஆனால் இது அந்நியப்படுத்தியதேயன்றி இணைக்கவில்லை.

டார்பூரில், எண்ணிக்கை குறித்த போர் என்பது மோதலின் அர்த்தத்திற்கான ஒரு போராக இருந்தது. துல்லியமான, போட்டியிடப்படாத உயிரிழப்பு புள்ளிவிவரங்கள் இல்லாதது, சூடான் அரசாங்கத்திற்கு அட்டூழியங்களின் அளவைக் குறைக்கவும், சர்வதேச மன்றங்களில் இனப்படுகொலை விவரிப்பை பலவீனப்படுத்தவும் அனுமதித்தது. பொஸ்னியா, குவாத்தமாலாவைப் போலவே, எண்ணிக்கை சார்ந்த சர்ச்சைகள் வரலாற்றுப் பதிவை மறைக்கவில்லை - அவை செயலற்ற தன்மைக்கு அரசியல் மறைப்பையும் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு சட்டப் பாதுகாப்பையும் வழங்கின. டார்பூரில் நடந்த வழக்கு ஒரு தொடர்ச்சியான பாடத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. வெகுஜன அட்டூழியத்தின் சூழல்களில், சர்ச்சைக்குரிய எண்கள் வன்முறையை மறுப்பது போலவே சக்திவாய்ந்த ஆயுதமாக இருக்கலாம், இது நினைவில் வைத்திருப்பதை மட்டுமல்ல, உலகம் இனப்படுகொலை என்று அழைக்க விரும்புவதையும் வடிவமைக்கிறது.

எத்தியோப்பியா: நிழல்களை எண்ணல்:

எத்தியோப்பியாவின் டைக்ரே பகுதியில் நடந்த போர் (2020–2022) 21-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடந்த மிகக் கொடிய மோதல்களில் ஒன்றாகும். இது பெரிய அளவிலான பொதுமக்கள் கொலைகள், பஞ்சம், பாலியல் வன்முறை, கட்டாய இடப்பெயர்ச்சி ஆகியவற்றுக்கு வழிவகுத்தது. எத்தியோப்பிய படைகள், எரித்திரிய துருப்புக்கள் மற்றும் கூட்டணி போராளிகளால் டைக்ரேயர்களுக்கு எதிரான அட்டூழியங்கள் பற்றிய அறிக்கைகள் சர்வதேச எச்சரிக்கையை எழுப்பின. சில அரசாங்கங்களும் செல்வாக்குக் குழுக்களும் இனப்படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று கூறின. இருப்பினும், ஆரம்ப கட்டங்களிலிருந்து, எண்கள் - எத்தனை பேர் கொல்லப்பட்டனர், பட்டினி கிடந்தனர் அல்லது இடம் பெயர்ந்தனர் என்பன தீவிர சர்ச்சைக்குரிய விஷயமாக மாறின. மோதலுக்குப் பிந்தைய பிற சூழல்களைப் போலவே, இந்த புள்ளிவிவரங்களும் புள்ளிவிவரக் குறிகாட்டிகளை விட அதிகமாக இருந்தன. அவை மோதல் விவரிப்பை வடிவமைப்பதிலும், சட்டக் கோரிக்கைகளின் வலிமையை தீர்மானிப்பதிலும், சர்வதேச நடவடிக்கையை செல்வாக்கு செலுத்துவதிலும் மையமாக இருந்தன.

எத்தியோப்பியாவின் போருக்கான துல்லியமான உயிரிழப்பு மதிப்பீடுகள் மழுப்பலாக நிரூபிக்கப்பட்டன. பத்திரிகையாளர்கள், மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் சுயாதீன புலனாய்வாளர்களுக்கு டைக்ரேயை அணுகுவது பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டது, இதனால் உயிரிழப்பு மதிப்பீடுகள் அரிதான உள்ளூர் அறிக்கையிடல், செயற்கைக்கோள் படங்கள், புலம்பெயர் வலையமைப்புகளைச் சார்ந்து இருந்தது.

போரின் ஆரம்பத்தில், டைக்ரேயின் புலம்பெயர் குழுக்களும் சில மனிதாபிமான நிறுவனங்களும் வன்முறை, பட்டினி, மருத்துவ பராமரிப்பு இல்லாமை போன்றவற்றால் இலட்சக் கணக்கான பொதுமக்கள் இறந்ததாகக் கூறினர். இதற்கு நேர்மாறாக, எத்தியோப்பிய அரசாங்கம் இந்த எண்களை மிகைப்படுத்தப்பட்டதாகவோ அல்லது புனையப்பட்டதாகவோ நிராகரித்தது, மோதலை டைக்ரே மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிரான வரையறுக்கப்பட்ட 'சட்ட நடவடிக்கை' என்று வடிவமைத்தது.

மோதல் இனப்படுகொலைக்கு சமம் என்று வாதிடுபவர்களுக்கு அதிக மதிப்பீடுகள் முக்கியமானவை. பெரிய அளவிலான கொலை மற்றும் பேரளவிலான பட்டினி, டைக்ரேயன்களை 'முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ' அழிக்கும் நோக்கத்தை அடிக்கோடிட்டுக் காட்டும். குறைந்த மதிப்பீடுகள் - அல்லது நம்பகமான எண்ணிக்கை இல்லாதது - போரை விகிதாசாரமாகவும், பொதுமக்களுக்கு எதிராக அல்ல, போராளிகளுக்கு எதிராகவும் இலக்காகக் கொண்டதாக அரசாங்கம் சித்தரிப்பதை ஆதரித்தது.

எத்தியோப்பியாவில் நம்பகமான உயிரிழப்பு புள்ளிவிவரங்களை உருவாக்குவதற்கான போராட்டம் பல்வேறுவிதமாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இதில் முதன்மையானது, கட்டுப்படுத்தப்பட்ட அணுகல். ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் உட்பட சுயாதீன கண்காணிப்பாளர்கள் பெரும்பாலும் மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் நுழைய மறுக்கப்பட்டனர் அல்லது கடுமையான இயக்கக் கட்டுப்பாடுகளை எதிர் கொண்டனர். இரண்டாவது, தொடர்பு முடக்கம். இணையம் மற்றும் தொலைபேசி சேவைகள் நீண்ட காலத்திற்கு துண்டிக்கப்பட்டன, இது தகவல் ஓட்டத்தையும் அறிக்கைகளின் சரிபார்ப்பையும் தடுத்தது. மூன்றாவது, அறியப்படாத மறைமுக மரணங்கள். உணவு, மருந்து மற்றும் மனிதாபிமான உதவிகளைத் தடுத்த முற்றுகை தந்திரோபாயங்களால் ஏற்பட்ட பஞ்சம் போன்ற நிலைமைகளால் பல இறப்புகள் ஏற்பட்டன - இவற்றை மோதல் தொடர்பான இறப்புகளாகக் கணக்கிடலாமா, எப்படிக் கணக்கிடுவது என்பது பற்றிய வழிமுறை விவாதங்களை எழுப்பின.

இந்த வரம்புகள் அரசியல்மயமாக்கலுக்கான வளமான நிலத்தை உருவாக்கியது. எத்தியோப்பிய அரசாங்கமும் அதன் கூட்டாளிகளும் இறையாண்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட 'மேற்கத்தேய பிரச்சாரம்' என்று அதிக இறப்பு எண்ணிக்கையை வடிவமைத்தன. இதற்கிடையில், பகுதி தரவுகளுடன் செயற்படும் சில புலம்பெயர் குழுக்கள், உலகளாவிய சீற்றத்தை உருவாக்க மிக உயர்ந்த நம்பத்தகுந்த புள்ளிவிவரங்களை முன்னிலைப்படுத்தின. இது அணிதிரட்டலுக்கு பயனுள்ள ஒரு தந்திரோபாயமாக இருந்தாலும் இந்தத் தரவுகள் கேள்விக்குள்ளாகும் போது நம்பகத்தன்மை வீழ்ச்சியடைந்தது.



எத்தியோப்பிய, எரித்திரிய படைகள் கொலைகள், பாலியல் வன்முறை, பட்டினி, கொள்ளைகள் மூலம் டைக்ரேயன்களை குறிவைத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள், சர்வதேச சட்ட அறிஞர்கள், அமைப்புகளிடமிருந்து இனப்படுகொலை விசாரணைகளுக்கு அழைப்பு விடுக்கும் அளவுக்கு தீவிரமானவை. இருப்பினும், டார்பூரைப் போலவே, மறுக்க முடியாத உயிரிழப்பு எண்ணிக்கைகள் இல்லாதது, இனப்படுகொலை மறுப்பாளர்கள் கொலையின் அளவு சட்ட வரம்பை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை என்று வாதிடுவதற்கு இடமளித்தது, மோதலை ஒரு வழக்கமான எதிர்ப்பு கிளர்ச்சியாக மறுவடிவமைத்தது. பஞ்சம் தொடர்பான இறப்புகள் பெரும்பாலும் மெதுவாக, சிதறடிக்கப்பட்டு, உண்மையான நேரத்தில் அளவிடக் கடினமாக இருப்பதால் இந்த எண்ணிக்கையிலான பாதிப்பு மேலும் அதிகரித்தது. பஞ்ச இறப்பு மதிப்பீடுகள் வெளிவரத் தொடங்கிய நேரத்தில் சிலர் 500,000-க்கும் மேற்பட்ட இறப்புகளைக் கூறுகின்றனர்.

உண்மையில், எத்தியோப்பியாவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை அரசியல்மயமாக்குவது வாதிடுதல், பொறுப்புக்கூறல் இரண்டையும் பலவீனப்படுத்தியது. புலம்பெயர் குழுக்கள், ஐ.நா. அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள், அரசாங்க ஆதாரங்களில் இருந்து முரண்பட்ட மதிப்பீடுகள் பொதுமக்களையும் கொள்கை வகுப்பாளர்களையும் குழப்பத்தில் ஆழ்த்தின. சர்ச்சைக்குரிய எண்கள் சர்வதேச வழக்குரைஞர்களுக்கு இனப்படுகொலை அல்லது மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு காற்று புகாத வழக்குகளை உருவாக்குவதைக் கடினமாக்கியது. எண்ணிக்கையில் ஒருமித்த கருத்து இல்லாமல், ஒரு தரப்பாரின் எண்ணிக்கையை மறுதரப்பார் மறுக்கும் போட்டி விவாதங்கள் போன்றவற்றால் இனப்படுகொலை தொடர்பான கோரிக்கை நீர்த்த வடிவத்தில் வரலாற்றுப் பதிவில் நுழைகிறது. இது உயிர் பிழைத்தவர்களின் அங்கீகாரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

எத்தியோப்பியாவின் டைக்ரே மோதலில், சரிபார்க்கக்கூடிய உயிரிழப்பு எண்ணிக்கை இல்லாதது வெறும் நுட்பவியல் பிரச்சினை மட்டுமல்ல, பொறுப்புக்கூறலைத் தவிர்க்க விரும்புவோருக்கு இது ஒரு அரசியல் அனுகூலமும் ஆகும். அணுகலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், தகவல்களை அடக்குவதன் மூலமும், முறையான நிச்சயமற்ற தன்மைகளைப் பயன்படுத்துவதன் மூலமும், அரச அரங்காடிகள் அட்டூழியக் கூற்றுகளில் சந்தேகத்தை எழுப்பி, இனப்படுகொலை விவரிப்பை பலவீனப்படுத்தின. மியன்மார், குவாத்தமாலா, பொஸ்னியா, சூடானைப் போலவே, எண்கள் மீதான சர்ச்சை புள்ளிவிவரங்கள் மீதான வாதத்தை விட அதிகமாக இருந்தது. அது உண்மை, நீதி, நினைவாற்றல் என்பவற்றின் மீதான போராட்டமாகும். எத்தியோப்பியாவின் கதை ஒரு பரந்த பாடத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அணுகல் கட்டுப்படுத்தப்பட்டு, இறப்பு எண்ணிக்கை நிச்சயமற்றதாக இருக்கும்போது, எண்ணிக்கையின் அரசியலும் உலகின் பதிலை வடிவமைப்பதில் வன்முறையைப் போலவே தீர்க்கமானதாக மாறும்.

தொடரும் குறிப்புகள்:

குவாத்தமாலா, பொஸ்னியா, சூடான், எத்தியோப்பியா, மியன்மார் ஆகிய ஐந்து வெவ்வேறு சூழல்களில், எண்ணிக்கை தொடர்பான போராட்டம், அட்டூழியத்திற்குப் பிந்தைய அரசியலின் ஒரு நிலையான அம்சமாக வெளிப்படுகிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு சர்ச்சைக்குரிய அங்கமாக மாறியது, அங்கு குற்றவாளிகள், ஆதரவாளர்கள், வழக்குரைஞர்கள் வன்முறையின் அளவு, ஆதாரங்களின் நம்பகத்தன்மை என்பன குறித்தும் இறுதியில் நிகழ்வுகளை இனப்படுகொலை என்று முத்திரை குத்துவதன் நியாயத்தன்மை குறித்தும் வேறுபட்டனர். இவற்றில் சில அடிப்படை ஒற்றுமைகளைப் பார்க்க முடியும்.

குற்றவாளிகளும் அவர்களது கூட்டாளிகளும் அட்டூழியங்களைத் தனி நிகழ்வுகளாகவும் குறை விகிதாசாரம் உடையதாகவும் அல்லது தற்செயலானதாகவும் சித்தரிக்க புள்ளிவிவரங்களைக் குறைக்கிறார்கள். வழக்குரைஞர்களும் உயிர் பிழைத்தவர்களும் தீங்கின் அளவையும் வன்முறையின் முறையான தன்மையையும் தெரிவிக்க அதிக மதிப்பீடுகளை வலியுறுத்துகிறார்கள். கட்டுப்படுத்தப்பட்ட அணுகல், அழிக்கப்பட்ட பதிவுகள் அல்லது புறம்போக்குகளை நம்பியிருப்பது போன்ற சர்ச்சைக்குரிய முறைகள் இனப்படுகொலை என்ற அடையாளத்தை எதிர்ப்பவர்கள் நம்பகமான தரவைக் கூட நம்பகத்தன்மையற்றதாக நிராகரிக்க அனுமதிக்கின்றன.

இறப்பு எண்ணிக்கைகள் பேரளவிலான அட்டூழியங்களை ஆவணப்படுத்துவதில் அவசியமான பகுதியாக இருந்தாலும், இந்த ஐந்து சந்தர்ப்பங்களிலும், எண்களை அதிகமாக நம்பியிருப்பது இனப்படுகொலை கூற்றுக்களுக்கு ஒரு மூலோபாய பாதிப்பை உருவாக்குகிறது என்பதைக் காட்டுகின்றன. புள்ளிவிவரங்கள் சர்ச்சைக்குரியதாகிவிட்டால், விவாதம் என்ன நடந்தது, ஏன் நடந்தது என்பதிலிருந்து எத்தனை பேர் இறந்தனர் என்பதற்கு மாறுகிறது.

எனவே இந்த எண்கள் மீதான அதீத கவனம்:

- சட்ட வாதத்தை நீர்த்துப்போகச் செய்கிறது. ஒரு பாதுகாக்கப்பட்ட குழுவை முழுவதுமாகவோ அல்லது பகுதி



> *"பொஸ்னியாவில், மோதலுக்குப் பிந்தைய பிற சூழல்களைப் போலவே, எண்களும் இழப்பு அளவை விட அதிகமாக இருந்தன - அவை அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதியாகும். ஆரம்பகால உயர்த்தப்பட்ட புள்ளிவிவரங்கள், பின்னர் மிகவும் துல்லியமான எண்ணிக்கையால் மாற்றப்பட்டன."*

யாகவோ அழிக்கும் நோக்கத்திற்கான ஆதாரம் இதற்குத் தேவைப்படுகிறது. இருப்பினும், பொது, அரசியல் கதை யாடல் பெரும்பாலும் பெரிய எண்ணிக்கையை ஒரு முன்நி பந்தனையாகக் கருதுகிறது, இதனால் உயிரிழப்பு எண் ணிக்கை பற்றிய உரையாடல் இனப்படுகொலை பற்றிய தீர்மானங்களில் தொடர்ந்து தோன்றும்.

- போட்டியிடும் புள்ளிவிவரங்கள் மறுப்பாளர்கள் நோக்கம் அல்லது இலக்கு வைக்கும் வடிவங்களின் சான்றுகளுடன் நேரடி ஈடுபாட்டைத் தவிர்க்க அனுமதிக்கிறது. கருத்து வேறுபாட்டை ஒரு வழிமுறை முரண்பாடாக வடிவமைப் பதன் மூலம், அவர்கள் அட்டூழியக் கதையை குறைமதிப் பிற்கு உட்படுத்தும் அதேவேளையில் நியாயமானதாகத் தோன்றலாம்.

- கொள்கை வகுப்பாளர்கள் சர்ச்சைக்குரிய எண்களை 'மேலும் தெளிவுக்காகக் காத்திருப்பதற்கான' நியாயமா கப் பயன்படுத்தலாம், வன்முறை தொடரும்போது அல் லது சான்றுகள் அழிக்கப்படும்போது பதில்களை திறம் பட நிறுத்தலாம்.

ஐந்து நிகழ்வுகளிலும் வன்முறையின் வடிவங்கள் குறிப்பிட்ட இன, மத அல்லது அரசியல் குழுக்களை குறிவைத்தல், வாழ்வாதாரங்களை அழித்தல், பாலியல் வன்முறை, கட்டாய இடப்பெயர்வு - உயிரிழப்புகள் எண்ணிக்கை நிச்சயமற் றதாக இருந்தாலும்கூட, இனப்படுகொலைக்கான நோக் கத்தை சுட்டிக்காட்டுகின்றன. சர்வதேசச் சட்டம் தெளிவாகக் கூறுகிறது. இனப்படுகொலை என்பதை வரையறுக்கும் சாராம்சம், முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, ஒரு குழுவை அழிக்க வேண்டுமென்றே நோக்கம் கொண்டிருப் பதே. கொலைகளின் அளவு நோக்கத்தின் ஒரு குறிகாட்டி யாக இருக்கலாம்; ஆனால் அது ஒரே அல்லது தீர்க்கமான காரணியாகாது.

அதற்கு பதிலாக, இலக்காகக் குறிவைக்கும் முறை, அரசின் கொள்கை உத்தரவுகள், தலைவர்களின் சொல்லாட்சி, மற்றும் தாக்குதல்களின் திட்டமிடப்பட்ட தன்மை ஆகியவற் றில் கவனம் செலுத்துவது, இனப்படுகொலைக்கான கூற்று களுக்கு மிகவும் வலுவான அடித்தளத்தை வழங்குகிறது. இக்கூறுகளை பொய்யாக்குவது கடினம், மேலும் மோதல் மண்டலங்களில் ஏற்படும் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட குழப்பங்களுக்கு அவை எளிதில் உட்படுவதில்லை.

இந்தப் பின்புலத்தில் கவனிக்க வேண்டிய சில:

- **எண்ணிக்கைகள் அரசியல் ஆயுதங்களாக மாறுகின்றன –** குவாத்தமாலா, பொஸ்னியா, சூடான், எத்தியோப்பியா மற்றும் மியான்மரில், இறப்பு எண்ணிக்கைகள் வரலாற்றை வடிவமைக்கும், பொறுப்பைத் தவிர்க்கும் போர்க்களங் களாக செயல்பட்டன.

- **சர்ச்சைக்குரிய புள்ளிவிவரங்கள் இனப்படுகொலை கூற் றுக்களை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன –** எண்ணிக் கைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டவுடன், பொது மற்றும் இராஜதந்திர விவாதங்கள் பெரும்பாலும் இலக்கு மற்றும் நோக்கத்தின் மையத்திலிருந்து விலகிச் செல்கின்றன.

- **சட்ட வரம்பு எண்களில் அல்ல –** சர்வதேச சட்டம் கவனம் செலுத்துவது நோக்கத்தில், உடல் எண்ணிக்கையில் அல்ல. உயிரிழப்புகள் எண்ணிக்கை வரையறை அளவு கோலாக இல்லை; அது ஆதாரபூர்வமான துணை மட்டுமே.

- **எண்களை அதிகமாக நம்பியிருப்பது நீதியை தாமதப்படுத் துகிறது –** புள்ளிவிவரச் சர்ச்சைகள் குற்றவாளிகளுக்கு மறுப்பு விவரிப்புகளை வலுப்படுத்தவும், தலையீட்டிற் கான அரசியல் விருப்பத்தை குறைக்கவும் நேரம் வழங்கு கின்றன.

- **நோக்கத்திற்கான சான்றுகளுக்கு முன்னுரிமை அளிக்கப் பட வேண்டும் –** தளபதிகளின் உத்தரவுகள், வெறுப்புப் பேச்சு, முறையான அழிவு, அடையாள அடிப்படையிலான குழுக்களை குறிவைத்தல் ஆகியவை உயிரிழப்பு மதிப்பீடு களை விடவும் உறுதியான ஆதார அடிப்படையை வழங் குகின்றன.

இந்த ஐந்து நிகழ்வுகள் கற்பிக்கிறது என்னவெனில், எண்கள் பொருத்தமற்றவை அல்ல; அவை வரலாற்று உண்மை, இழப்பீடு, நினைவுகூரலுக்குத் தேவையானவை - ஆனால், இனப்படுகொலை அங்கீகாரத்தின் மையமாக இருக்கக் கூடாது. சர்வதேச சமூகம் தனது வழக்கை சர்ச்சைக்குரிய உயிரிழப்பு எண்ணிக்கைகளின் மேல் மட்டுமே தொங்கவிட் டால், நோக்கமுடைய மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட அழிவின் தெளிவான வடிவங்கள் மறைக்கப்படும் அபாயம் உள்ளது.

இறுதியில், இனப்படுகொலை எண்களால் வரையறுக்கப்படு வதில்லை. அது ஒரு மக்களை அழிக்க வேண்டுமென்றே நோக்கம் கொண்டிருந்தது என்பதை நிரூபிப்பதால் வரைய றுக்கப்படுகிறது. இதை அங்கீகரித்து, அந்த நோக்கத்தை மையமாகக் கொண்டு சட்ட மற்றும் அரசியல் வழக்குகளை உருவாக்குவது தான் நீதிக்கான மிகவும் நிலையான பாதை யாகும்.



meenilankco@thaiveedu.com



அதிகாரப் பிரதியின் ஆயிரமாண்டுப் பயணம்

ச. சத்தியதேவன்

பண்டைய அறிவின் இரகசியங்களைத் தேடிச் செல்லும் பயணத்தில், ஒரு தொல்லுலக வீரனின் வாளைவிட, ஓர் அறிஞனின் கூர்மையான பார்வையும், அர்ப்பணிப்புடன் கூடிய பொறுமையுமே பெரும்பாலும் வெற்றியைத் தேடித் தருகின்றன. ஓலைச்சுவடிகளின் மணம் கமழும் அமைதியான ஓர் அறையில், காலத்தின் தூசி படிந்த ஏடுகளுக்கு இடையே, வரலாற்றையே மீண்டும் எழுதக்கூடிய ஒரு அரிய கண்டுபிடிப்பு நமக்காகக் காத்திருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு தேடலின் கதைதான், மைசூரில் உள்ள கீழைத்தேயவியல் நூலகத்தின் (Oriental Library) அமைதியான மண்டபங்களுக்குள் நிகழ்ந்தது.

மைசூர் கீழைத்தேயவியல் நூலகம் (தற்போது மைசூர் கீழைத்தேயவியல் ஆராய்ச்சி நிறுவனம் - Oriental Research Institute Mysore), 1891-ஆம் ஆண்டு மகாராஜா பத்தாம் சாமராஜ உடையாரால் நிறுவப்பட்டது. அதன் முதல் தலைவரான பெஞ்சமின் லூயிஸ் ரைஸ் (Benjamin Lewis Rice) தலைமையில், அரிய கையெழுத்துப் பிரதிகளைச் சேகரிப்பது, பாதுகாப்பது மற்றும் வெளியிடுவதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு விரிவான பணி தொடங்கப்பட்டது. சிதறிக்கிடந்த அறிவுச் செல்வத்தை ஒருங்கிணைத்து, பாதுகாக்கப்பட்ட ஒரு மையப்படுத்தப்பட்ட நிலைக்குக் கொண்டுவருவதே இத்திட்டத்தின் நோக்கமாக இருந்தது. இந்த நூலகம் ஆயிரக்கணக்கான சமஸ்கிருத பனை ஓலை கையெழுத்துப் பிரதிகளைச் சேர்த்து வைத்திருந்தது. 1905-ஆம் ஆண்டுக்கு முன்பான ஒரு பொழுதில், தஞ்சாவூரைச் சேர்ந்த ஒரு பெயர் தெரியாத சமஸ்கிருதப் பண்டிதர் ஒருவர், மைசூர் கீழைத்தேயவியல் நூலகத்திற்கு (Oriental Library - Mysore) ஒரு அரிய எளிதில் உடையக்கூடிய ஒரு பனை ஓலை ஏட்டுப் பிரதியை ஒப்படைத்தார்.

அந்நூலகத்தின் சுவடிகள் ஆராய்ச்சிப் பிரிவில், ருத்ர பட்டணா சாமாசாஸ்திரி (Rudrapatna Shamasastry) ஒரு ஆராய்ச்சி நூலகராகவும், சமஸ்கிருத அறிஞராகவும் பணியாற்றினார். கர்நாடகாவின் காவேரி நதிக்கரையில் அமைந்துள்ள ருத்ரபட்டணா கிராமத்தில் 1868-ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் தேதி பிறந்தார் சாமாசாஸ்திரி. இளம் வயதிலேயே தந்தையை இழந்தபோதிலும், தன் கடின உழைப்பால் ஒரு தலைசிறந்த அறிஞராகத் தன்னை உருவாக்கிக்கொண்டார்.

மைசூர் அரச குடும்பத்தால் நிறுவப்பட்ட புகழ்பெற்ற மகாராஜா சமஸ்கிருதக் கல்லூரியில் (Maharaja's Sanskrit College), 1891-ஆம் ஆண்டு, சாமாசாஸ்திரி 'வித்வத்' தேர்வில் சிறப்பான முறையில் தேர்ச்சி பெற்றார். அவரது திறமையைக் கண்ட அன்றைய மைசூர் திவான் சேர் கே. சேஷாத்ரி ஐயர் (Sir K. Seshadri Iyer), அவரைத் தனது வீட்டிலேயே தங்க வைத்து, பல்வேறு புராணங்கள் மற்றும் இலக்கியப் படைப்புகளைப் பற்றி அவருடன் விவாதித்தார். சாமாசாஸ்திரியின் அறிவுலகம் உலகளாவிய கவனத்தைப் பெற வேண்டுமென்றால், அவர் ஆங்கிலம் கற்றுக்கொள்வது அவசியம் என சேஷாத்ரி ஐயர் உணர்ந்தார். இதனால், சாமாசாஸ்திரி சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் சேஷாத்ரி ஐயரின் ஆதரவில் தங்கி, பெங்களூரு மத்திய கல்லூரியில் பயின்றார். பின்னர், 1899-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவர் இளங்கலைப் பட்டம் பெற்றார்.

சேஷாத்ரி ஐயரின் உதவியுடன் சென்னைப் பட்டப்படிப்பை முடித்துத் திரும்பியதும், சாமாசாஸ்திரி மைசூர் கீழைத்தேய வியல் நூலகத்தின் சுவடிகள் ஆராய்ச்சிப் பிரிவில் பணியில் சேர்ந்தார். அங்கு ஆயிரக்கணக்கான பனை ஓலைச்சுவடிகள் இருந்தன. தனது அன்றாடப் பணியின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு கையெழுத்துப் பிரதியையும் மிகுந்த கவனத்து டனும், ஈடுபாட்டுடனும் ஆராய்ந்து வந்தார். அப்போது, எதிர் பாராத விதமாக, சுவடிக் குவியலுக்குள் விலைமதிப்பற்ற ஒரு முழுமையான நூலின் பிரதியைக் கண்டறிந்தார். அது, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக மறைந்திருந்த, மிக முக் கியமான அரசியல் நூலின் சுவடியாகும். அதனுடன், பட் டஸ்வாமி என்ற அறிஞரால் எழுதப்பட்ட விளக்கவுரையின் ஒரு பகுதியும் இருந்தது. அந்த நூல் பண்டைய கால எழுத் துக்களால் எழுதப்பட்டு இருந்ததால், அதை வாசிப்பது மிகக் கடினமாக இருந்தது.

அந்த தருணம் சாமாசாஸ்திரியின் வாழ்வில் மிக உன்ன தமான தருணங்களில் ஒன்றாக அமைந்தது. இந்தக் கண்டுபி டிப்பு, அவருக்கு உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்தது. மேலும், 1909-இல் அந்த நூல் வெளியிடப்பட்டபோது, அது மைசூர் கீழைத்தேயவியல் நூலகத்திற்கும் உலகளாவிய அங்கீகாரத்தைக் கொண்டு வந்தது.

அந்த அரிய நூல், பண்டைய இந்தியாவின் அரசியல், பொரு ளாதாரம் மற்றும் ஆட்சிமுறை குறித்து விரிவாகப் பேசும் மிக முக்கியமான படைப்பான 'அர்த்தசாஸ்திரம்' ஆகும்.

அர்த்தசாஸ்திரம், பண்டைய இந்தியாவின் மிக முக்கியமான நூல்களில் ஒன்று. இது ஒரு தேசத்தை நிர்வகிப்பதற்கான வழி காட்டியாக, அரசாட்சி, பொருளாதாரக் கொள்கைகள், மற்றும் இராணுவ உத்திகள் குறித்த விரிவான தகவல்களை இந்நூல் வழங்குகிறது. சர்வதேச அளவில் முதல் அரசியல் பொருளாதார நூலாகக் கருதப்படும் அர்த்தசாஸ்திரம், இத்தாலிய அரசியல் தத்துவஞானி நிக்கோலோ மாக்கிய வெல்லி எழுதிய 'தி பிரின்ஸ்' உடன் ஒப்பிடப்படுவது உண்டு.

அர்த்தசாஸ்திரம், கௌடில்யர் மற்றும் விஷ்ணுகுப்தர் என்றும் அறியப்படும் சாணக்கியரால் எழுதப்பட்டது. அறிவுக் கூர்மை மற்றும் அரசியல் சூழ்ச்சிகளின் அடையாளமாக சாணக்கியரின் வாழ்க்கை வாசிக்கப்படுகிறது. புகழ்பெற்ற தக்ஷசீலா பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிஞராகவும் ஆசிரியராகவும் தனது வாழ்க்கையைத் தொடங்கிய அவர், பின்னர் தனது அறிவுக்கூர்மையாலும், வியூகத்திறமையாலும் மௌரியப் பேரரசின் நிறுவுநர் சந்திரகுப்த மௌரியரின் முதலமைச்சராகவும் தலைமை ஆலோசகராகவும் உயர் ந்தார். இந்த வரலாற்றுப் பின்னணியே, அர்த்தசாஸ்திரம் பொ.ஆ.மு. 4-ஆம் நூற்றாண்டில், மௌரியப் பேரரசு காலத்தில் எழுதப்பட்டது என்ற பாரம்பரியக் கருத்தை வலுப் படுத்துகிறது.

பொ.ஆ.மு. 302-ஆம் ஆண்டில், மாசிடோனிய மன்னர் அலெக்சாண்டரின் தளபதியும், செலூசிட் பேரரசின் (Seleucid Empire) ஆட்சியாளருமான செலூகஸ் நிகேட்டர் - I (Seleucus I Nicator), மெகஸ்தனிஸ் (Megasthenes) என்ற கிரேக்க இராஜதந்திரியைச், சந்திரகுப்த மௌரியரின் அரசவைக்குத் தூதராக அனுப்பினார். மெகஸ்தனிஸ் பாடலிபுத்திரத்தில் தங்கியிருந்த காலத்தில், மௌரியப் பேரரசின் சமூகம், நிர்வாகம் மற்றும் புவியியல் பற்றி உன்னிப்பாகக் கவனித்து, தனது அவதானிப்புகளை 'இண்டிகா' (Indika) என்ற நூலில் பதிவு செய்தார். இந்த நூலின் அசல் பிரதி காலத்தால் அழிந் துவிட்டபோதிலும், பிற்கால கிரேக்க மற்றும் ரோமானிய வர லாற்றாசிரியர்களான ஆரியன், ஸ்ட்ராபோ, மற்றும் டியோ டோரஸ் சிக்குலஸ் போன்றோரின் படைப்புகளில் 'இண் டிகா'வின் மேற்கோள்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மேற் கோள்கள், மௌரியப் பேரரசின் நிர்வாகம், சமூக அமைப்பு, மற்றும் அதிகாரத்தைப் பற்றிய ஒரு விரிவான வெளிநாட்ட வரின் பார்வையை நமக்கு வழங்குகின்றன.

மெகஸ்தனிஸின் அவதானிப்புகளுக்கும், அர்த்தசாஸ்தி ரத்தில் விவரிக்கப்பட்டுள்ள நிர்வாக அமைப்புகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகள் குறிப்பிடத்தக்கவை. கௌடில் யரின் அர்த்தசாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிக்கலான அதிகாரத்துவ அமைப்பு, விரிவான உளவுத்துறை, மற்றும் நகரத் திட்டமிடல் போன்ற அம்சங்கள், மெகஸ்தனிஸ் தனது 'இண்டிகா' நூலில் பதிவு செய்த நேரடி அனுபவங்களுடன் ஒத்துப்போகின்றன. இந்த ஒற்றுமை, அர்த்தசாஸ்திரம்



பொ.ஆ.மு. 4-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்ற பாரம் பரியக் கருத்துக்கு ஒரு வலுவான, சுயாதீனமான சான்றாக விளங்குகிறது.

எனினும், நவீன அறிஞர்கள் அர்த்தசாஸ்திரத்தின் காலம் குறித்து மாறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ளனர். பல அறிஞர்கள் அர்த்தசாஸ்திரம் பொ.ஆ.பி. முதல் ஆயிரமா ண்டின் முதல் பாதியில், இந்திய அரசியலிலும் சமூகத்திலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திய பிராமண அறிவுசார் மற்றும் கலை, கலாசாரத்தின் ஒரு பகுதியாகக் கருதுகி ன்றனர். இந்த காலகட்டத்தில், தர்மசாஸ்திரங்கள் மற்றும் பிற அரசியல் நூல்கள் உருவானதற்கான சான்றுகள் உள்ளன.

சில வரலாற்றாசிரியர்கள், தற்போதுள்ள நூல் ஒருவரால் எழு தப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றும், இது பல நூற்றாண்டு களாக பல்வேறு அறிஞர்களால் தொகுக்கப்பட்டிருக்கலாம் என்றும் வாதிடுகின்றனர். இதன் இறுதி வடிவம் பொ.ஆ.பி. 2 அல்லது 3-ஆம் நூற் றாண்டில் ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

இருப்பினும், இந்த விவாதங்க ளுக்கு மத்தியிலும், அர்த்தசாஸ்தி ரத்தின் அடிப்படைக் கொள்கை களும் அதன் சாராம்சமும் மௌரியர் காலத்தைச் சேர்ந்த சாணக்கி யரின் சிந்தனைகளுடன் நெருங்கிய தொடர்புடையவை என்பதில் பெரும் பாலானோர் உடன்படுகிறார்கள். பண்டைய இந்தியாவின் நிர்வாகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் தந்திரோபாயங்கள் குறித்த மிக முக்கியமான ஆதாரங்களில் ஒன்றாக இந்த நூல் இன்றும் கருதப்படு கிறது.

சுமார் 14-ஆம் நூற்றாண்டு வரை, இந்த நூல் இந்திய துணைக் கண் டத்தில் அரசியல் சிந்தனை மற்றும் நடைமுறைகளில் பெரும் செல் வாக்கைச் செலுத்தியதற்கான இலக்கிய சான்றுகள் கிடைத்துள்ளன.

"ஒரு புதிரான நிகழ்வாக, இடைக்காலத்தில் அர்த்தசாஸ்திரம் திடீரெனக் காணாமல் போனது. அதன் பெயர் மட்டுமே ஒரு நினைவுச் சின்னமாக நிலைத்திருந்தாலும், பல நூற்றாண்டுகளாக அதன் அசல் கையெழுத்துப் பிரதி தொலைந்துபோனதால், பண்டைய இந்திய வரலாறு மற்றும் அரசியல் சிந்தனை பற்றிய புரிதலில் ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டது"

காமசூத்திரத்தின் ஆசிரியர் வாத்ஸ்யாயனர், பொ.ஆ.பி. 2 அல்லது 3-ஆம் நூற்றாண்டில், கௌடில்யரின் அர்த்தசாஸ்தி ரத்திலிருந்து பல சொற்றொடர்களையும் கருத்துகளையும் நேரடியாக எடுத்துப் பயன்படுத்தியுள்ளார். இது, அந்த கால கட்டத்தில் அர்த்தசாஸ்திரம் அறிஞர் வட்டாரங்களில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அதிகாரப்பூர்வமான நூலாகக் கரு தப்பட்டதை உறுதிப்படுத்துகிறது.

இதேபோல், பொ.ஆ.பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற சமஸ்கிருத கவிஞரும் நாடக ஆசிரிய ருமான காளிதாசர், தனது காவியங்களான 'இரகுவம்சம்' மற்றும் 'சகுந்தலம்' ஆகியவற்றில், அர்த்தசாஸ்திரத்தில் காணப்படும் பல அரசியல் கலைச்சொற்களையும் கருத்துக ளையும் பயன்படுத்தியுள்ளார். இது, கௌடில்யரின் சிந் தனைகள் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் இந்திய இலக்கி யத்திலும், சிந்தனையிலும் தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தின என்பதைக் காட்டுகிறது.

பொ.ஆ.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற சமஸ் கிருதக் கவிஞரான பாணபட்டர், வர்தன வம்சத்தின் பேரரசர் ஹர்ஷரின் அரசவைக் கவியாகத் திகழ்ந்தவர். இவர், இந்தி யாவின் முதல் வரலாற்றுச் சுயசரிதையாகக் கருதப்படும் 'ஹர் ஷசரிதா' என்ற நூலை எழுதியதுடன், தனது 'காதம்பரி' என்ற காவியத்தில் கௌடில்யரின் அரசியல் கோட்பாடுகளை விமர் சித்துள்ளார். பாணபட்டரின் இந்த விமர்சனம், கௌடில்யரின் காலத்திற்கும், அவரது காலத்திற்கும் இடையே இருந்த தத்துவ மற்றும் கால வேறுபாடுகளைத் தெளிவாக உணர்த்து கிறது. பாணபட்டர், கௌடில்யரின் நடைமுறை அரசியலுக்கு மாறாக, ஒரு பேரரசின் நெறிமுறையான, தார்மீகப் பண்பு களைத் தனது படைப்புகளில் வலியுறுத்தினார்.

அதேபோல், பொ.ஆ.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமண அறிஞ ரான சோமதேவசூரி, தனது 'நீதி வாக்கியாம்ருதம்' என்ற நூலை எழுத, கௌடில்யரின் அர்த்தசாஸ் திரத்திலிருந்து பல கருத்துகளைப் பயன்படுத்தியுள்ளார். மேலும், சோமதேவசூரி, சாணக்கியரை ஒரு வரலாற்று நபர் என்றும், சிறந்த அரசியல் தத்துவஞானி என்றும் நேரடியாகக் குறிப்பிட்டுள்ளார். இது, சாணக்கியரின் வாழ்க்கை மற்றும் அவரது படைப்புகள், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் அறிஞர்கள் மத்தியில் அறியப்பட் டிருந்தது என்பதற்கான ஒரு முக் கியமான சான்றாகத் திகழ்கிறது.

மௌரியர் காலத்திற்குப் பல நூற் றாண்டுகள் கழித்து, பொ.ஆ.பி. 14 அல்லது 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற சமஸ்கிருதப் பண்டிதர் மற்றும் வர்ணனையா ளரான மல்லிநாதசூரி, காளிதா சரின் காவியங்களான 'குமாரசம்பவம்', 'மேகதூதம்', 'ரகுவம்சம்' போன்றவற்றுக்கு விரிவான விளக்க வுரைகளை எழுதினார். காளிதாசர் தனது படைப்புகளில், அரச தந்திரம், போர் உத்திகள், மற்றும் நிர்வாகம் போன்ற வற்றை விவரிக்க, அர்த்தசாஸ்திரத்தில் பயன்படுத்தப்பட்ட நுட்பமான கலைச்சொற்களையும், கருத்துகளையும் கையா ண்டிருந்தார். இந்தச் சொற்களைப் புரிந்துகொள்வதற்காக, மல்லிநாதசூரி கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தை ஒரு ஆதார நூலாகப் பயன்படுத்தியுள்ளார்.

இது, அர்த்தசாஸ்திரம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் எழுதப்பட்ட நூல் அல்ல என்பதையும், அதன் கருத்துகள் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் அறிஞர்களாலும், எழுத்தாளர் களாலும் அங்கீகரிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டன என்ப தையும் தெளிவாகக் காட்டுகிறது. இச்செய்தி, அர்த்தசாஸ்தி ரத்தின் நீடித்த பொருத்தத்தையும், இந்திய சிந்தனை மரபில் அதன் ஆழமான தாக்கத்தையும் உறுதி செய்கிறது.

எனினும், ஒரு புதிரான நிகழ்வாக, இடைக்காலத்தில் அர்த்த சாஸ்திரம் திடீரெனக் காணாமல் போனது. அதன் பெயர் மட்டுமே ஒரு நினைவுச் சின்னமாக நிலைத்திருந்தாலும், பல நூற்றாண்டுகளாக அதன் அசல் கையெழுத்துப் பிரதி தொலைந்துபோனதால், பண்டைய இந்திய வரலாறு மற்றும் அரசியல் சிந்தனை பற்றிய புரிதலில் ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டது.

1905-ஆம் ஆண்டில் டாக்டர் ஆர். ஷாமசாஸ்திரி அர்த்த சாஸ்திரத்தின் கையெழுத்துப் பிரதியைக் கண்டு பிடித்தார். அதன் மீள்கண்டுபிடிப்பு உலகெங்கிலும் உள்ள அறிஞர்க ளுக்கு ஒரு மகத்தான நிகழ்வாக இருந்தது. டாக்டர் ஆர். ஷாமசாஸ்திரியின் விடாமுயற்சியால், இந்த இழந்த அறிவு மீண்டும் உலகுக்குக் கிடைத்தது.

அர்த்தசாஸ்திரம் ஒரு பண்டைய அரசியல் மற்றும் பொரு ளாதார நூல். பல நூற்றாண்டு களாக அதன் இரகசியங்கள் மறைந்திருந்ததால், அதன் தனித் துவமான சொற்கள் மிகவும் விசித் திரமாக இருந்தன. அப்போது இருந்த எந்த சமஸ்கிருத அகராதி யிலும் அதன் தனித்துவமான சொற்களுக்குப் பொருள் இல்லை. டாக்டர் ஆர். ஷாமசாஸ்திரி அதனைக் கண்டெடுத்தபோது, அது ஒரு பெரிய சவாலாக இருந்தது. இருந்தும், ஷாமசாஸ்திரி சோர்வடையவில்லை. ஒரு புதைய லைக் கண்டெடுத்தவர் போல, அதன் இரகசிய மொழியைப் புரிந்துகொள்ள அவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். அவரது விடாமுயற்சியின் காரணமாக, ஆயிரம் ஆண்டு களாக மறைந்திருந்த பண்டைய இந்தியாவின் ஆட்சித் தந்திரங்கள், பொருளாதாரம் மற்றும் போர்க் கலை ரகசியங்கள் மீண்டும் வெளிச்சத்திற்கு வந்தன.

"அர்த்தசாஸ்திரம் ஒரு பண்டைய அரசியல் மற்றும் பொருளாதார நூல். பல நூற்றாண்டுகளாக அதன் இரக சியங்கள் மறைந்திருந்ததால், அதன் தனித்துவமான சொற்கள் மிகவும் விசித்திரமாக இருந்தன. அப்போது இருந்த எந்த சமஸ்கிருத அகராதியிலும் அதன் தனித்துவமான சொற்களுக்குப் பொருள் இல்லை"

அவர் அந்த உரையை கவனமாகப் படியெடுத்து, திருத்திய பிறகு, 1909-இல் அதன் சமஸ்கிருதப் பதிப்பை வெளி யிட்டார். தொடர்ந்து, 1915-இல் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலக அறிஞர் சமூகத்திற்கு வழங்கினார். டாக்டர் ஆர். ஷாமசாஸ்திரியின் இந்தக் கண்டுபிடிப்பு, பண்டைய இந்தியாவைப் பற்றிய காலனித்துவக் கால நம்பிக்கைகளை உடைத்தெறிந்தது. இந்தியர்கள் நிர்வாகக் கலையை கிரேக் கர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள் என்ற தவறான கருத்தை இது முற்றிலுமாக மாற்றியது. அதற்குப் பதிலாக, இந்தியர்கள் தங்களது சொந்த அறிவாற்றலால், ஒரு திறமையான மற்றும் நுட்பமான அரசாட்சி முறையை உரு வாக்கியிருந்தனர் என்பதை அர்த்தசாஸ்திரம் உலகிற்குத் தெளிவுபடுத்தியது. இந்த நூல் உடனடியாக பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, உலக அளவில் இதுவரை எழுதப்பட்ட மிகச் சிறந்த அரசியல் படைப்புகளில் ஒன்றாகப் பரவலான அங்கீகாரத்தைப் பெற்றது.

ஷாமசாஸ்திரியின் இந்த முன்னோடிப் பணி, பல முன்னணி சர்வதேச அறிஞர்களிடமிருந்து பரவலான பாராட்டைப் பெற்றது. அவரது பங்களிப்புகளுக்கு அங்கீகாரம் வழங் கப்பட்டது. அமெரிக்காவின் Oriental Institute in Washington, D.C. (1919) மற்றும் கொல்கத்தா பல்கலைக்கழகம் (1921) அவருக்கு மதிப்புமிக்க முனைவர் பட்டங்களை வழங்கின. மேலும் பிரிட்டிஷ் ஆசிய சங்கத்தின் உறுப்பினராகப் (Fellow of the British Asiatic Society) பெயரிடப்பட்டதுடன் அவர் கேம்பல் நினைவு தங்கப் பதக்கத்தையும் (Campbell Memorial Gold) பிற கௌரவங்களையும் அவர் பெற்றார். இந்திய அரசு அவருக்கு மகா மகோபாத்யாயா என்ற பட்டத்தையும், மைசூர் மகாராஜா அர்த்தசாஸ்திர விசாரதா என்ற பட்டத்தையும் வழங்கினார். தனது முன்னோடிப் பணியைத் தொடர்ந்த ஷாமசாஸ்திரி, மைசூரில் தொல்பொருள்துறை இயக்குநராகப் பணியாற்றினார். அப்பணியின்போது பல முக்கியமான கல்வெட்டு மற்றும் செப்பு சாசனங்களைக் கண்டுபிடித்தார். இவை இந்தியாவின் கடந்த காலத்தைப் பற்றிய புரிதலை மேலும் வளப்படுத்தின.

அர்த்தசாஸ்திரம் என்ற ஒரு பண்டைய அரசியல் பொருளாதார நூலின் மீள் கண்டுபிடிப்பு கதை மிகவும் சுவாரசியமானது. அந்தக் கதை, தஞ்சாவூரைச் சேர்ந்த பெயர் தெரியாத சமஸ்கிருதப் பண்டிதர் ஒருவர், அர்த்தசாஸ்தி ரத்தின் ஏட்டுப்பிரதியை மைசூர் கீழைத்தேயவியல் நூலகத்தில் ஒப் படைத்தபோது தொடங்கியது. எனினும், இந்தக் கண்டுபிடிப்புடன் தொடர் புடைய சில முக்கியமான கேள்விகள் கவனிக்கப்படாமல் போயின. வட இந்தியாவில், குறிப்பாக மௌரியப் பேரரசு காலத்தில் உருவான ஒரு நூல், இடைக்கா லத்தில் காணாமல் போய், பல நூற்றாண்டுகள் கழித்துத் தென் னிந்தியாவில் உள்ள தஞ்சாவூரை எப்படி அடைந்தது? மேலும், பல தலைமுறைகளாக அந்த அரிய ஏட் டுப்பிரதி எப்படிப் பாதுகாக்கப்பட்டது? என்பது குறித்து அறி ஞர்கள் போதிய அக்கறை கொள்ளவில்லை.

வரலாற்று ஆதாரங்கள் மற்றும் அறிஞர்களின் கோட்பாடுகளின் அடிப்படையில், அர்த்தசாஸ்திரம் வட இந்தியாவில் மறைந்த பிறகு தென்னிந்தியாவில் உள்ள தஞ்சாவூருக்கு எப்படி வந்திருக்கலாம் என்பதற்குப் பல சாத்தியமான காரணங்கள் உள்ளன. இவை இடைக் காலத்தின் வரலாற்றுச் சூழலுடன் ஒத்துப்போகின்றன.

இந்தியாவின் வட பகுதியில் பொ.ஆ.பி. 12-ஆம் நூற்றாண் டுக்குப் பிறகு ஏற்பட்ட தொடர்ச்சியான படையெடுப்புகள் மற்றும் அரசியல் மாற்றங்கள், அந்தப் பகுதியின் அறிவுசார் வளர்ச்சிக்குப் பெரும் சவாலாக அமைந்தன. இந்தப் படை யெடுப்புகள் பல வட இந்திய அரசுகளைச் சீர்குலைத்தன. பண்டைய இந்தியாவின் அறிவு மையங்களாகத் திகழ்ந்த

நாளந்தா, விக்கிரமசீலா போன்ற பல்கலைக்கழகங்கள், அங்கு ஆயிரக்கணக்கான அரிய கையெழுத்துப்பிரதிகள் இருந்தபோதிலும், அந்நியரின் வருகையாலும் அவர்களின் தாக்குதல்களாலும் பெரும் சேதமடைந்தன. இதன் விளைவாக, விலைமதிப்பற்ற பல நூல்கள் அழிந்து போயின.

ஆட்சி மொழிகளும் பண்பாடும் மாறத் தொடங்கியதால், சமஸ்கிருத மொழிக்கான அரச ஆதரவு குறையத் தொடங் கியது. இதனால், சமஸ்கிருதப் பண்டிதர்களும் அறிஞர்களும் தங்கள் அறிவையும் நூல்களையும் பாதுகாக்கப் பாது காப்பான இடங்களைத் தேடி, வட இந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்தனர்.

அதே காலகட்டத்தில், தென்னிந்தியப் பகுதிகள் ஒப்பீட்டளவில் அமைதியாகவும், நிலையாகவும் இருந்தன. குறிப்பாக, கலை, இலக்கியம் மற்றும் கல்வியை ஆதரித்த சோழர்கள் போன்ற வலிமையான அரசுகள், தஞ்சாவூர் போன்ற நகரங்களை அறிவைப் பாதுகாக்கும் சிறந்த மையங்களாக மாற்றின. வடக்கிலிருந்து வந்த அறிஞர்க ளுக்கு இந்தச் சூழல் ஒரு புகலிடமாக அமைந்தது. அவர்கள் தங்கள் ஞானப் பொக்கிஷங்களான ஓலைச்சுவடிகளைத் தங்களுடன் கொண்டு வந்தனர். இதன் விளைவாக, இந்திய அறிவுப் பாரம்பரியம் பாதுகாக்கப்படுவதில் தென்னிந்தியா முக்கிய பங்கை பிராந்தியமாக மாறுகிறது.

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, பொ.ஆ.பி. 16 முதல் 19-ஆம் நூற்றாண்டுகளில், தஞ்சாவூர் ஒரு தனித்துவமான கலாசார மற்றும் அறிவுசார் மையமாகத் திகழ்ந்தது. இந்த காலகட்டத்தில் தஞ்சையை ஆட்சி செய்த நாயக்கர்கள் மற்றும் மராட்டிய அரசர்கள் (குறிப்பாக போன்ஸ்லே வம்சம்), கலை, இசை, இலக்கியம் மற்றும் கற்றலுக்குப் பெரும் ஆதரவு அளித்தனர். அவர்கள், சமஸ்கிருத இலக்கியம் மற்றும் இசையின் மிகப்பெரிய புரவலர்களாக இருந்தனர். அவர்களின் அரசவைக்குள், 'சாஸ்திரிகள்' மற்றும் 'வித்வான்கள்' என்று அழைக்கப்பட்ட தமிழ் மற்றும் தெலுங்கு பிராமணர்கள் முக்கியப் பதவிகளை வகித்தனர். இவர்கள் சட்ட ஆலோசகர்களாகவும், புரோகிதர் களாகவும், ஜோதிடர்களாகவும் மதிப்புமிக்க முக்கியமான நிர்வாக மற்றும் ஆலோசனைப் பதவிகளை வகித்தனர். நீதி, சமயச் சடங்கு மற்றும் கல்வி தொடர்பான விஷயங்களில் இவர்களது ஆலோசனை அரசுக்கு இன்றியமையாததாக இருந்தது.

அவர்களின் சேவைக்கு ஈடாக, ஆட்சியாளர்கள் அரச மானியங்களை வழங்கினர். குறிப்பாக, வரி இல்லாத அல்லது வரி விலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இந்த நிதி ஆதரவு மிகவும் முக்கியமானதாக இருந்தது. ஏனெனில், இது அறிஞர்களையும் அவர்களது குடும்பங்களையும் வேறு வேலைகளைத் தேடும் அழுத்தத் திலிருந்து விடுவித்தது. இதன் விளைவாக, அவர்கள் தங்கள் வாழ்க்கையை முழுமையாகப் படிப்பிற்கும், கற்பித்தலுக்கும், கையெழுத்துப் பிரதிகளைப் பாதுகாப்பதற்கும் அர்ப்பணிக்க முடிந்தது. இதனால், பிராந்தியம் முழுவதிலுமிருந்து அறிஞர்கள் தஞ்சாவூரை நோக்கி ஈர்க்கப்பட்டனர்.

16 முதல் 19-ஆம் நூற்றாண்டுகளில், தஞ்சாவூர் தமிழ் மற்றும் தெலுங்கு பிராமணர்களின் அடர்த்தியான மக்கள்தொகை அக்ரஹாரங்கள் நிறைந்த பகுதியாக இருந்தது. அவர்கள் தலைமுறை தலைமுறையாக வேத மற்றும் சாஸ்திர அறிவின் பாதுகாவலர்களாக விளங்கினர்.

அக்ரஹாரங்களில் இருந்த பிராமணக் குடும்பங்கள், அரிய மற்றும் மதிப்புமிக்க கையெழுத்துப் பிரதிகளின் தனிப்பட்ட சேகரிப்புகளைப் பராமரித்து வந்தனர். இந்தக் கையெழுத்துப் பிரதிகள் குடும்பங்களின் மிகவும் விலை மதிப்பற்ற சொத்தாகக் கருதப்பட்டன. மேலும், அவற்றைப் பாதுகாப்பது குடும்பத்தினரின் கடமையாகவும், பெருமை யாகவும் இருந்தது. தலைமுறை தலைமுறையாகக் கைமாறிய இந்தக் குடும்ப நூலகங்கள், அறிவைப் பரப்பு வதற்கும், பாதுகாப்பதற்கும் முக்கிய ஆதாரமாகத் திகழ்ந்தன. இந்தச் சமூகங்களில் அறிவைப் பாதுகாக்கும் பழக்கம் ஆழமாக வேரூன்றி இருந்தது.

1876-1878 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த பெரும் பஞ்சம், தென்னிந்தியாவை, குறிப்பாக மெட்ராஸ் மாகாணத்தை உலுக்கிய ஒரு கொடூரமான பேரழிவாகும். இந்தப் பஞ்சம் லட்சக்கணக்கான மக்களின் உயிர்களைப் பலிகொண்டது. இந்தப் பஞ்சம் வெறும் உணவுப் பற்றாக்குறையாக மட்டும் இருக்கவில்லை; அது சமூக மற்றும் பொருளாதார அமைப்பையே சீர்குலைத்தது. பாரம்பரியமாக தனிமைப் படுத்தப்பட்டிருந்த பிராமண சாஸ்திரிகள் குடும்பங்களும் இதன் பிடியில் சிக்கின.

அரசர்களின் நில மானியங்களைச் சார்ந்து வாழ்ந்து வந்த பிராமண சாஸ்திரிகள், பெரும் பஞ்சத்தின் தீவிரத்தாலும்,



சரஸ்வதி மஹால் நூலகம் மற்றும் அடையாறு நூலகம் போன்ற நிறுவனங்களும், காலனித்துவ கால ஆராய்ச்சி அமைப்புகளும் இந்த அழிந்து வரும் நூல்களுக்குப் புகலிடமாக மாறின. இந்த நிறுவனங்கள் கையெழுத்துப் பிரதிகளைப் பெற்றதன் மூலம், அவற்றை அழிவிலிருந்து காப்பாற்றியதுடன், எதிர்கால சந்ததியினருக்காக அறிவுக் களஞ்சியங்களையும் உருவாக்கின.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அரச ஆதரவு குறைந்ததாலும் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தனர். விவசாய உற்பத்தி சரிந்து, உள்ளூர் பொருளாதாரம் சீர்குலைந்ததால், அவர்களின் நில மானியங்களின் மதிப்பு குறைந்தது. இதன் விளைவாக, தங்கள் குடும்பங்களையும் பாரம்பரிய சுவடிகள் பாதுகாப்பையும் தொடர்ந்து மேற்கொள்வது அவர்களுக்கு மிகவும் கடினமாக மாறியது.

இந்தப் பஞ்ச காலத்தில், பிராமணக் குடும்பங்கள் தங்கள் விலைமதிப்பற்ற கையெழுத்துப் பிரதிகளின் தொகுப்புகளைப் பராமரிக்க முடியாமல் திணறின. நிலையான வருமானம் இல்லாததால், பூச்சிக் கட்டுப்பாடு, வழக்கமான பராமரிப்பு மற்றும் சரியான சேமிப்பு போன்றன இன்மையால் கையெழுத்துப் பிரதிகளைப் பாதுகாக்கத் தேவையான வற்றை அவர்களால் செய்ய முடியவில்லை. வளங்கள் இல்லாததால் அவை சிதைந்து வருவதைப் பார்ப்பதா அல்லது குடும்பத்தின் பிழைப்புக்காக அவற்றை விற்பதா என்ற இக்கட்டான நிலையை அவர்கள் எதிர்கொண்டனர்.

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்கவும், ஆய்வு செய்யவும் அர்ப்பணிக்கப்பட்ட முறையான நிறுவனங்கள் தோன்றின. இந்த நிறுவனங்கள் எளிதில் அழியக்கூடிய ஓலைச்சுவடிகளையும், காகிதச் சுவடிகளையும் பாதுகாக்கத் தேவையான நிதி, ஊழியர்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டிருந்ததுடன் கையெழுத்துப் பிரதிகளைச் சேகரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டன.

இந்தச் சூழ்நிலையில், பல குடும்பங்கள் தங்கள் கையெழுத்துப் பிரதிகளை வளர்ந்து வரும் இந்த நிறுவனங்களுக்கு நன்கொடையாக அளிப்பதையோ அல்லது விற்பதையோ ஒரு அவமானமாகக் கருதவில்லை. மாறாக, இது அந்தப் பிரதிகளைப் பாதுகாப்பதற்கான ஒரு நடைமுறைத் தீர்வாக உணர்ந்தனர். இதன் விளைவாக, தனியார் வசமிருந்த பொக்கிஷங்கள், அனைவருக்கும் சொந்தமான பொதுப் பாரம்பரியமாக மாறின. இந்த நெருக்கடியான காலம், நிறுவன நூலகங்களின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

இதன் விளைவாக, சரஸ்வதி மஹால் நூலகம் மற்றும் அடையாறு நூலகம் போன்ற நிறுவனங்களும், காலனித்துவ கால ஆராய்ச்சி அமைப்புகளும் இந்த அழிந்து வரும் நூல்களுக்குப் புகலிடமாக மாறின. இந்த நிறுவனங்கள் கையெழுத்துப் பிரதிகளைப் பெற்றதன் மூலம், அவற்றை அழிவிலிருந்து காப்பாற்றியதுடன், எதிர்கால சந்ததியினருக்காக அறிவுக் களஞ்சியங்களையும் உருவாக்கின. இதன் மூலம், தனிப்பட்ட குடும்பங்களின் தனியார் சொத்தாக இருந்த பொக்கிஷங்கள், அனைவருக்குமான பொதுப் பாரம்பரியமாக மாறின. இவ்வாறு, இந்தக் கடுமையான நெருக்கடிக் காலம், நிறுவன நூலகங்களின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

இந்தப் பின்னணியில்தான் 'அர்த்தசாஸ்திரம்' கையெழுத்துப் பிரதி மைசூர் ஓரியண்டல் நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட நிகழ்வின் வரலாற்று தொடர்ச்சியை புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, 'அர்த்தசாஸ்திர' கையெழுத்துப் பிரதியின் நன்கொடை ஒரு தனிப்பட்ட நிகழ்வு அல்ல. பஞ்சம் மற்றும் ஆட்சி மாற்றங்களால் பாதிக்கப்பட்டிருந்த பாரம்பரிய அறிஞர் குடும்பங்களிடமிருந்து, நவீன பொது நிறுவனங்களுக்கு அறிவுப் பொக்கிஷங்கள் மாறியதற்கான ஒரு முக்கியமான எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது.

நெருக்கடியான காலங்களில், வலுவான உட்கட்டமைப்பு கொண்ட காப்பகங்கள் தனித்துவமான நிலையில் உள்ளன. அவை பெரும்பாலும் மதிப்புமிக்க கலாசாரப் பொருட்களையும், தனிப்பட்ட சேகரிப்புகளையும் பெறுகின்றன. நிலையற்ற தன்மையை எதிர்கொள்ளும் குடும்பங்கள் தங்கள் பாரம்பரியத்தை விற்கவோ அல்லது நன்கொடையாக வழங்கவோ கட்டாயப்படுத்தப்படலாம். இது உயிர் வாழ்வதற்காக அல்லது தங்களின் பொக்கிஷங்கள் நிரந்தரமாக இழக்கப்படுவதைத் தடுக்கலாம்.

காப்பகங்கள் இந்தப் பொருட்களைப் பாதுகாப்பதாகக் கூறினாலும், இந்தப் பரிவர்த்தனையில் அதிகாரம் சமமாக இருப்பதில்லை. பாதிக்கப்படக்கூடிய தனிநபருக்கும், சக்தி வாய்ந்த நிறுவனத்திற்கும் இடையே இது நடைபெறுகிறது. அதாவது, ஆபத்தில் உள்ளவர்களிடமிருந்து கலாச்சாரச் செல்வம் பாதுகாப்பானவர்களுக்கு மாற்றப்படும் இந்தச் சூழல் 'கலாசார முதலாளித்துவம் என்பதற்கு நெருக்கமாக இருக்கிறது குற்ற சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன.

இன்றைய எண்ணிம ஆவணக் காப்பகங்கள், ஆவணங்கள் அழிந்துபோகாமல் பாதுகாக்க உதவுகின்றன. ஆனால், வெறும் பாதுகாப்பது மட்டும் போதாது. அதாவது, அவற்றை ஒழுங்காகப் பட்டியலிட்டு, சேமித்து வைப்பது மட்டும் தற்போதைய தேவைக்கு போதாது. ஒரு ஆவணத்தின் உண்மையான மதிப்பு அதன் பௌதிக வடிவத்திலோ அல்லது எண்ணிம வடிவத்திலோ இல்லை. மாறாக, அது நமக்குத் தரும் தகவல்களிலும் ஊக்கத்திலும்தான் உள்ளது. அவற்றை யாரும் ஆராய்ச்சி செய்து, பரப்பவில்லை என்றால், அந்த விலைமதிப்பற்ற ஆவணங்கள் பயனற்றுப் போய் விடும். அவற்றின் அறிவும், கலாசார மதிப்பும் பயன்படாமல் போகும்.

ஆகவே, நம் கடந்த காலப் பொக்கிஷங்களை நாம் உண்மையாக மதிக்க வேண்டுமென்றால், ஆவணக் காப்பகங்கள் வெறும் சேமிப்பு இடங்களாக மட்டும் இருக்கக் கூடாது. அவை, ஆராய்ச்சியில் தீவிரமாகப் பங்கேற்கவும், கலாசாரத்தை மேம்படுத்தவும் உதவ வேண்டும். ஒரு ஆவணத்தின் உண்மையான மதிப்பு, அதைப் பத்திரமாகப் பாதுகாப்பதில் மட்டும் இல்லை; மாறாக, அதன் உள்ளடக்கங்களை ஆர்வமாகப் படிப்பதிலும், மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதிலும்தான் இருக்கிறது. அர்த்தசாஸ்திரத்தின் மீள் கண்டுபிடிப்புக் கதை நமக்கு நினைவூட்டுவதும் இதைத்தான்.



sathiyathevan.s@thaiveedu.com

காக்கைக் கூட்டில் குயில் முட்டை

நாஞ்சில் நாடன்



உலக அழகித் தேர்வு எனச் செய்திகளும் படங்களும் இன்ன பிறவும் பார்வையில் பட்டு மருட்டு கின்றன. 'அவனவனுக்கு ஆயிரத்தெட்டு வேலை, அவயானுக்கு மண்ணு பறிக்கப்பட்ட வேலை' என்ற சொலவம் நினைவுக்கு வருகிறது. அகராதியில் பெருச் சாளி, மலையாளத்தில் பெருக்கான், நடுநாட்டில் அக வான், ஈழத்தில் அகழான், நாஞ்சில் நாட்டில் அவயான். பேராசிரியர்கள் பாடு பெரும்பாடு, கட்டப்பாடு, இடர்ப் பாடு, முரண்பாடு.

உலகின் பெண்கள் அனைவரையும் பார்வையிட்டுத் தேர்ந்து அறிவிக்கப்படுவதா அது? உலகத்துப் பெண் மணிகளில் இவளேதான் அழகி என முடிவெடுப்பவர் எவர்? 'பலமரம் கண்ட தச்சன் ஒருமரமும் வெட்டான்' என்றும் பழமொழி உண்டே!

'பெண்ணின் கோணல் பொன்னில் நிமிரும்' என்பதும் ஒரு பழமொழிதான்.

போட்டி நடத்துவார்களாம், அதற்கு விண்ணப்பிக்க வேண்டுமாம்! பல படிநிலைகளில் தேர்வாளர் இருப்பர். நடுவர் வீற்றிருக்கும் நாட்டுக்குப் போட்டியாளர்கள் சென்று, உடுத்து அணிந்து அபிநயித்துப் புன்சிரித்து நடந்து காட்ட வேண்டும். நம் நாட்டு விருதுகள் நிலை யும் இதுதான். பத்மஸ்ரீ, ஞானபீடம், செம்மொழிச் செம் மல், அகவை முதிர்ந்த தமிழறிஞர், உ.வே.சா., திரு.வி.க., பெரியார், அண்ணா, கலைஞர் எனப் பற்பல. அம்மா பெயரில் ஏதும் உண்டா?

அழகி எனில் மாவட்ட அழகி, மாநில அழகி, தேச அழகி எனத் தேர்ந்தெடுக்கப்படுபவரில் இருந்து தேர்ந்தெடுக் கப்படுகிறவரா உலக அழகி? நாம் எந்தப் போட்டிக்கும் முனைந்தவர் இல்லை என்பதனால் நடைமுறை அறி யோம்!

இன்று உலகின் மொத்தப் பெண்கள் தொகை என்ன, ஐ.நா. சபை உறுப்பு நாடுகள் வாரியாக? அவருள் நாடு கள் ரீதியாக விண்ணப்பித்தவர் எத்தனை? விண்ணப் பித்தவர் தமது சொந்தச் செலவில் அல்லது தேயத்தின் செலவில் பயணம் செய்து, தங்குமிடம் தேர்ந்து, ஒப் பனை நிபுணர்கள் தருவித்து, உடை வடிவமைப்பாளர் களிடம் ஆடைகள் வாங்கி, நடுவர் வீற்றிருக்கும் அரங் கில் நடித்துக் காட்ட வேண்டுமா? இந்த வழிமுறை அறியாத பெண்கள், காசில்லாதவர் தலைத்தட்டில் ஆள்கட்டு இலாதவர் அழகியர் அல்லவா? விண்ணப் பம் செய்து, அரசியல் செல்வாக்குப் பயன்படுத்தி, தரகு பேசி, விருதுகள் வாங்கத் தெரியாதவர் எல்லோரும் தகுதியும் திறமையும் சிறப்பும் அற்றவர்களா?

யாவற்றுக்கும் மேலாக அழகு என்பது என்ன? நடுவராக வீற்றிருக்கும் மூவர் தீர்மானிப்பதே அழகா? அவர்கள் முன்வைக்கும் அழகின் அளவீடுகள் என்ன?

தோலின் நிறம், மினுக்கம்? கன்னத்தின் உப்பல், கதுப் பின் செம்மை? மூக்கின் நீளம், முனை? கண்களின்

கருமை, அகலம், நீளம்? நாடி, நெற்றி, புருவ அமைப்பு? தலைமயிரின் கருமையா, செம்மையா, பொன்னிறமா, நீளமா, அடர்த்தியா, சுருட்டையா? தோள்களின் எடுப்பு? கொங்கையின் வடிவம், கனம், எடுப்பு, திரட்சி? காம்பின் வடிவம், நிறம்? இடையின் குறுக்கம்? அடிவயிற்றுச் சரிவு, செம்பட்டை மென்மயிர்? படமெடுத்த நச்சரவப் படம் போன்ற அல்குல்? செவ்வாழை மரத்தின் அடிமரம் போல் தொடைகள்? துறவியரின் குண்டிகை போன்ற புட்டம்? செங்கரும்புத் தண்டு போல் கணுக்கால்? பொற்பாதங்கள்? பனை இளமூங்கில் புயங்கள்? மூங்கில் குருத்துப் போல் முழங்கை? பொன் விரல்கள்? மெல் இள மலர் நகங்கள்? செந்துவர் வாய்? முத்துப் பற்கள்? இள நுங்குபோல் நாக்கு?

சிறுகுடல், பெருங்குடல், இரைப்பை, கல்லீரல், இதயம், நுரையீரல், பித்தப்பை, கணையம் அளவுகள் அவ்வளவு முக்கிய மில்லை போலும்!

எத்தனை உவமைகள் இலக்கியத்தில் பெண் உடம்புக்கு? எட்டூ ஏசிய நாசி, வெண் முத்துக்களோ பற்கள், மாம்பழக் கதுப்போ கன்னங்கள், சந்திரப் பிறையோ நெற்றி, கார் மேகமோ அளகம், வெண் சங்குக் கழுத்தோ, வாரிய தென்னை வருகுரும்பை வாய்த்தன போல் கொங்கை, கருநீலத் திராட்சைக் காம்பு, ஆம்பல் மலரின் வாசமோ பாம்பின் படம் ஒத்த அல்குல், மாதுளம் பூ நீறமோ மேனி... எத்தனை சங்கப் பாடல்களை, கம்பன் கவிதைகளை மேற்கோள் காட்டலாம்?

'கொங்கை முன்றில் குங்குமம் எழுதிய' உலக அழகியரின் முலைகளின் அளவு, இடைக் குறுக்கத்தின் அளவு, குலுங்கும் புட்டத்து விரியும் அளவு என அகில உலக இலக்கணங்கள் என்ன?

அழகைத் தீர்மானிப்பதில் மத, இன, பிரதேச, உடல் அளவுகள் வசீகரம் சார்ந்த மனச் சாய்வுகள் இருக்காதா எவருக்கும்? நடுவர் அனைவருமே மேற்சொன்ன சாய்வுகளற்ற சுத்த புருடர்களா, தவ சிரேட்டர்களா, ஆன்மீக வெளிச்சம் பாய்ச்சும் அரும் பிறப்புகளா?

ஐம்பதாண்டுகளாக எழுதுகிறவன் நான். என்னைப் போலவே சிலரும். அவருள்ளும் மூப்பிலும், நோயிலும் மண்ணில் கலந்தவர் சிலர். ஏன் சில உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், விருதுகள் தருவோர் எம்மனோர் சிலரின் இருப்பையே பொருட்படுத்துவதில்லை. எழுத்தில் தரமற்றவர் என்பதாலா? கொள்கை முரண் உள்ளவர் என்பதாலா? கொள்கை முரண் இருக்கலாகாதா? அவர் நம்புவன வெல்லாம் மெய்ஞ்ஞானமும் பிற நம்பிக்கையாளர் அனைவரும் பொய்ஞ்ஞானமுமா? ஆள்வோரிடம், அரசியல் அமைப்பாளரிடம், கனிமவளக் கொள்ளையரிடம், காடழித்துச் சாய்ப்போரிடம், போதைப்பொருள் கடத்துவோரிடம், சாராய ஆலை நடத்துபவர்களிடம், மருத்துவக் கல்வி வணிகரிடம், தரகுத் தொழில் செய்வோரிடம் கையூட்டுப் பெறுபவர்களா? கண்ணாடியைச் சற்று தன் முகம் பக்கம் திருப்பிப் பார்க்க வேண்டும்.

இந்திய விமானப் பயணங்களின்போது பணிப்பெண்களின் தோல் நிறம் காணும்போது சிலருக்கேனும் தோன்றலாம்! எதற்காக வெண்தோல் பெண்களை மாத்திரமே விமானப் பணிப்பெண் வேலைக்கு எடுக்கிறார்கள்? வெள்ளைத்தோல் நிறமில்லாதவர் இந்தியர் அல்லவா? அடிக்கடி அரசு செலவில் விமானப் பயணம் செய்யும் சமத்துவ - முற்போக்கு - சமூகநீதி அரசியல் தியாகப் போராளி அறிஞர் வர்க்கம் அறியாரா? அவர் தாம் என்னுரைப்பர்? அவர்தம் இனமான சினிமாக் காவலரின் படங்களில் கதாநாயகிகளாக நாளுக்கு இருமுறை அக்குள் சிரைத்துக் கொண்டு வருபவர் எவர்?

சில சமயம் அழகி என அடையாளப்படுத்தப்பட்டு ஊடகங்களால் உடுக்கு, பம்பை, பறை, மகுடம், முரசு, தாரை, தப்பட்டை என உரத்து முழங்கப்பெறும் படங்களை மாத, வார, நாளிதழ்களில் கண்ணுறும்போது நமக்குத் தோன்றும், கொண்டாடப்படுவதற்கான முதலீடு எவ்வளவு இருக்கும் என! அங்கும் சாகித்ய அகாதமி, சரஸ்வதி சன்மான், ஞான பீடம் மற்றும் பத்ம விருதுகளின் சமூக நீதியே கடைப்பிடிக்கப்படுமோ என்னவோ? நகுலன், சுந்தர ராமசாமி, ஞானக் கூத்தன், வெங்கட் சாமிநாதன், ஹெப்சிபா ஜேசுதாசன், ஐசக் அருமைராஜன், இராஜேந்திர சோழன், ஜெயமோகன், அழகிய பெரியவன், கண்மணி குணசேகரன், குமார செல்வா, கலாப்பிரியா, வண்ண நிலவன், விக்கிரமாதித்யன், பா. செயப்பிரகாசம், எம். கோபாலகிருஷ்ணன், கீரனூர் ஜாகிர்ராஜா, அ.கா. பெருமாள், பக்தவத்சல பாரதி, வேதசகாய குமார், கிருஷ்ணன் நம்பி, ந. முத்துசாமி, அபி, சி. மணி (விடுதல்களுக்கு மன்னிக்கவும்) போன்றோர் சாகித்ய அகாதமி விருதுபெறத் தகுதியற்றவர்களா? அடிப்படைத் தேர்வாளர்களின், நடுவர்களின், தலைவர்களின் பொறுப்பல்லவா இது?

ஞானபீட விருதுகள் 1965 முதல் வழங்கப்பெற்று வருகின்றன. தமிழுக்கு இதுவரை இருவருக்கு மட்டுமே! இந்தி - 11, மராத்தி - 4, மலையாளம் - 6, கன்னடம் - 9, வங்காளி - 6 எனவாங்கு. மற்ற மொழிகள் பற்றி நமக்குத் தெரியாது. ஆனால் ஐம்பத்தைந்து ஆண்டுகள் தமிழில் இருவருக்கே தகுதி உண்டா?

இலக்கியத் தரம் தீர்மானிக்கும் சக்திகளை ஒத்ததாகவே அழகிகளைத் தீர்மானிக்கும் சக்திகளும் இருக்கும்?

உப்புக்கடல் நீர் பனங்கள்ளாக மாறினாலும், தினமுமே வெள்ளுவா தோன்றினாலும், குறித்த நேரத்தில் நகரப் பேருந்து காட்சி தந்தாலும், ஐந்து பணம் வாங்கும் கட்டணக் கழிப்பறைகள் துர்நாற்றம் ஆபாசம் கேவலமான சுவரொட்டிகள் அற்றிருந்தாலும், கொலை - வன்புணர்வு - கையூட்டு வாங்கிய அதிகாரி கைது - கனிம வளக் கடத்தல் லாரி மோதி காவலர் பலி எனச் செய்தியொன்று இல்லாத நாளொன்று இருந்தாலும், ஓர் எளிய கிராமத்தில் நெருக்கடியான சந்தில் தகரக்கூரை வீட்டில் வாழும் பெண் உலக அழகி ஆகிவிடுவது சாத்தியமா? மறுபடியும் அவதரித்து தீமையை ஒழிப்பேன் என வாக்குறுதி தந்து ஒயிலாகத் துயிலும் இறைவன் நினைத்தாலும் அது நடக்கிற காரியமா?

கையில் காசிருந்தால் சாதாரணமான திறமையுடைய எவரும் அத்தாணி மண்டபத்தில் வீற்றிருக்க இயலும்! சிறந்த பாடகராக இருந்தும் மக்கள் அறியாத மாந்தர் இல்லையா? எத்துறையிலும் இதில் எடுத்துக்காட்டுகள் பகர இயலும். யாவற்றுக்கும் வாய்ப்பு, வசதி முக்கியம்.

2012-ஆம் ஆண்டில் இலக்கிய நண்பர்களின் அழைப்பின் முகாந்திரத்தில் 58 நாட்கள் அமெரிக்க ஐக்கிய நாடு முழுக்க சுற்றுப்பயணத்தில் இருந்தேன். அதில் ஒரு கிழமை

ஹ்யூஸ்டனில் இரு நண்பருடன் இருந்தேன். ஒரு மாலையில் ஆடலரங்குக்கு அழைத்துச் சென்றனர். நான்கு இளம்பெண் கள் ஆடிக் கொண்டிருந்தனர். அவர்களது நாட்டியம் முடிந்த தும், ஆடிக் களைத்த பெண் ஒருத்தி எங்கள் நடுவில் வந்து அமர்ந்தாள். அவளுக்கு ஒரு பீர் தருவித்தார் நண்பர். உரை யாடிக் கொண்டிருந்தபோது, அந்தப் பெண்ணிடம் கேட்டேன் - 'நீங்க எகிப்து நாட்டுக்காரியா?' என்று. 'இல்லை! எத்தி யோப்பியா... ஏன் கேட்கறீங்க?' என்றாள். நான் சொன்னேன், 'கிளியோபாத்ரா எகிப்து நாட்டைச் சார்ந்தவங்க' என்று. அந்த நாட்டியக்காரியின் முகத்தில் பூத்த வெட்கம் இன்றும் எனக்கு மணக்கிறது.

நான் கிளியோபாத்ராவைப் பார்த்தவன் இல்லை. அவள் திரு வள்ளுவருக்கும் பதினான்கு ஆண்டுகள் மூத்தவள். அந்தக் காலத்தில் வெளியான கிளியோபாத்ரா சினிமா பார்த்தேன் சிலமுறை. கல்லூரியில் இரண்டாமாண்டு பட்டப்படிப்பு படிக் கும்போது ஷேக்ஸ்பியரின் Antony and cleopatra நாடகம் கற்றேன். ஆர்வம் காரணமாக அவரது அனைத்துப் படைப் புக்களும் பின்னர் வாசித்ததுண்டு. இன்றும் என் கையில் தோல் அட்டையிட்ட நான்கு பாகங்களான ஷேக்ஸ்பியரின் முழுப்படைப்புகளும் புத்தக அடுக்கில் உண்டு. கல்லூரி நூலகத்தில் எங்களுக்கு ஆங்கிலம் கற்பித்த பேராசிரியர் வி.எம். ஸ்ரீதர மேனோன், என்.எஸ். இந்திரன் என்போர். முன்ன வர் கல்லூரி முதல்வரும் ஆவார். அவர்தான் என்னை புகு முக வகுப்பில் அனுமதித்தவர். அவரது துணைவியார் மலை யாளப் பேராசிரியர்.

கிளியோபாத்ரா காஷ்மீரத்து, அஸ்ஸாமிய சிவப்பழகியல்ல. எனில் அழகி எனும் தகுதிக்கு வெண்தோல் சிறப்புத் தகுதி யல்ல. நிறத்துக்கும் தொடை, இடுப்பு, தொப்பூழ் குழி, பிட்டம், கொங்கை அளவுகளுக்கு கணிசமான சிறப்பு மதிப் பெண்கள் தருவார்களா நடுவர்கள்?

மாணவருக்கான பேச்சுப்போட்டிக்காக சில பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் நடுவராகச் சிலமுறை போயிருக்கிறேன். ஒரு மாணவன் உரையாற்றிச் சென்றபின் பக்கத்தில் இருக் கும் இன்னொரு நடுவர் சொல்லி இருக்கிறார் - 'நம்ம பையன் சார்' என்று என்னிடம். நம்ம பையன் என்பது அவர் பையன் என்பதல்ல. அவருக்குத் தெரிந்த பையன், உறவினர் பையன், ஊர்க்காரன், சாதிக்காரன் என்ற ஒன்றாக இருக்கலாம். ஈண்டு இன அரசியல் சார்புடைய அமைப்புகளின் விருது களுக்கான தேர்வுகளைப் பேசப்புகுந்தால், - அது - தன் படை வெட்டிச் சாதல் ஆகிவிடும்.

நான் வசிக்கும் வீட்டின் எதிர் வரிசையில் ஒரு வீட்டில் முன் பக்கச் சுற்றுச்சுவரில் பறவைகளுக்கு அரிசியும் தண்ணீரும் வைப்பார்கள். எங்கிருந்து பெறப்பட்ட அரிசி என்பதை விளம்பினால் 'எந்த நாள் காண்பேன் இனி!' என நமக்கு இரங் கற்பா எழுத வேண்டியது வர நேரும். சுமார் முப்பத்தாறு வீடுகளும் நான்கு காலி மனைகளும் இருபத்து மூன்றடி அகலமுள்ள நான்கு வீதிகளும் கொண்ட எங்கள் நகரின் பின்புறம் தென்னை, வாழை, கரும்புத் தோட்டங்கள் உண்டு. தினமும் மூன்று நான்கு மயில்களைக் காணலாம், சேவலும் பெடையும் குட்டிகளுமாக. ஈண்டு பெடை, பெட்டை, பேடு என்பன பெண்பாற் சொல்லே அன்றி, மாற்றுத் திறனாளி எனக் குறிப்பிடும்படியான பிரயோகம் அல்ல.

காலையில் அரிசி கொத்தித் தின்ன மயில்கள் வரும். அழ குள்ள பறவையே ஆனாலும் கிளிகள் காத்திருக்கும். அதே போல் செம்போத்து எனப்படும் செண்பகம், புறாக்கள், மைனா என்று அரபிச் சொல்லால் குறிக்கப்பெறும் நாகணவாய், Seven Sisters எனப்படும் சாம்பல் குருவி, சிட்டுக்குருவிகள், கருங்காகம், காக்கை என. காக்கை வந்தால் புறா, கிளி, மைனா, சிட்டுக்குருவி, சாம்பல் குருவி எல்லாம் விடைத்து ஒதுங்கி நிற்கும்.

புள்ளினங்களுக்குள் இன்னும் சமூக நீதி கொண்டு வர வில்லை முற்போக்கு அரசுகள். எனவே ஆதிக்கசாதிப் பறவைகள் கொத்தித் தின்று போகும்வரை அடிமை சாதிய புட்கள் காத்து நின்றன.

படைபடையாகப் பறவைகள் வந்தமர்ந்து அரிசி கொத்து வதை எனது சின்னப்பேரன் பார்த்து நின்றான். அவன்தான் பஞ்சவர்ணக்கிளியை ஐவர்ணக்கிளி எனும் சொல்லால் எனக்கு அறிமுகப்படுத்தியவன். அவனேதான் கேட்டான், 'ஏன் தாத்தா கொக்கும் நாரையும் வர மாட்டங்கு?' என்று. வேண்டு மென்றே அவனிடம் கேட்டேன் -

'இந்தப் பறவைகளில் எதுடா அழகு?'

'மயில் தாத்தா'

'ஏன் கிளி அழகில்லையா?'

'கிளியும் அழகுதான்'

'அப்போ புறா?'

'அதுவும்தான்'

தொடர்ந்து உரையாடிக் கொண்டிருந்தபோது, 'ஏன் மக்கா காக்கா அழகில்லையா?' என்றேன்.

'காக்காவா?' என்று திருப்பிக் கேட்டான் இளக்காரமாக!

அவனாவது ஐந்தாம் வகுப்பில் நுழைந்திருக்கும் சிறுவன். ஆனால் அகவை முதிர்ந்த மொழி அறிஞர், நன்மொழி விருது பெற்றோர், பொது நூலகத் துறையால் ஆயிரம் படிகள் வாங்கப்பெறும் நூல்கள் எழுதிய பேராசிரியர்கள், உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டிருக்கும் நவ படைப்பாளி கள் போன்றோருக்குக் காகம் அழகான பறவைதானா?

பொதுப் புத்தியில் - பொதுப்புத்தி என்றால் என்ன என்று கேட்பீரேயானில், நடிகனைக் குலதெய்வமாகவும், நடிகை களைக் காவல் தெய்வமாகவும், அரசியல் தொழில் செய் வோரை பேரிறையாகவும் வந்தித்து மெய்சிலிர்த்து நிற்கும் புத்தி - காகம் என்றால் திருட்டுக் காகம், கள்ளக் காக்கா, அண்டங்காக்கா, கருங்காகம், சுடுகாட்டுக் காக்கா. ஆனால் அமாவாசை நாட்களில், பெற்றோருக்குத் திதி கொடுக்கும் தினங்களில் காகங்கள் புனிதர்கள். மதியம் இரண்டரை மணிக்கு மொட்டைமாடியில், பால்கனியில் ஏறி நின்று, இலை யில் சோறு வைத்துக் 'கா... கா... கா...' எனக் கரைவது கேட்க பாவம் தோன்றும். கண்டிப்பாகக் காகங்கள் மீது அல்ல. திருமாலின் வாகனம் கருடன் - பருந்து - காய்சினம் கண்டால் கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள். சனி பகவானின் வாகனமான காகத்தை எவரும் பொருட்படுத்துவதில்லை.

சினிமா மூலம் பிரபலம் அடைந்தது காக்கா பிரியாணி. உண்மை எவரறிவார் ?

சங்க இலக்கிய நூல்கள் பாட்டும் தொகையும் பதினெட்டினுள் எங்கு தேடினாலும் காகம் எனும் சொல் ஆளப்பெறவில்லை. ஆங்கே எங்கும் காக்கைதான். அகநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, பரிபாடல், புறநானூறு, பொருநராற்றுப்படை, பதிற்றுப்பத்து ஆகிய நூல்கள் காக்கையைப் பேசியுள்ளன.

சங்க இலக்கியப் புலவருள் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்றே ஒரு பெண்பாற்புலவர். குறுந்தொகையில் ஒரு பாடல், புறநானூற்றில் ஒரு பாடல், பதிற்றுப்பத்து நூலில் ஆறாம் பத்து, பத்துப்பாடல்கள் அவரது பங்களிப்பு. பேராசிரியர் தாயம்மாள் அறவாணன் எழுதிய 'மகடூஉ முன்னிலை' நூல் காண்க. தாயம்மாள் அறவாணன் அவர்களை நான் அக்காள் என்று அழைப்பேன். அவரது மூத்த சகோதரி வீரநாராயணமங்கலம் ஊரில் வாழ்க்கைப்பட்டு வந்தவர். வெள்ளாளப் பாசம் என்று எவரோ முணுமுணுப்பது கேட்கிறது. 'கசண்டிக்கும் அசூயைக்கும் மருந்தில்லை' என்கிறது மலையாளம்.

குறுந்தொகையின் 210-வது பாடல், ஆறு அடிகள் கொண்டது. ஈற்றடி, 'விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே!' என்று அமையும். விருந்து வருவதை உணர்த்தும் வகையில் கரைந்த காக்கைக்குப் பலி உணவு அளிப்பர் என்பது பொருள். இன்றும் கிராமங்களில் வீட்டு முற்றத்திலோ, சுற்றுச் சுவற்றிலோ, சாய்ச்சிறக்கிக் கூரையிலோ அமர்ந்து காக்கை கரைந்தால் விருந்து வரும் என்ற நம்பிக்கையுண்டு. ஈதெல்லாம் மூடநம்பிக்கை நமக்கு. சினிமா நடிகர்கள் அரசியலுக்கு வந்து தேயத்தின் தீமையெல்லாம் அகற்றுவார்கள் என்பது நல்ல நம்பிக்கை.

காக்கைப் பாடினியார் நச்செள்ளையாரின் புறநானூற்றுப் பாடல் ஒன்பது அடிகள் கொண்டது. ஈற்றடி. 'ஈன்ற ஞான்றிலும் பெரிது உவந்தனளே!' என்று முடிவது.

நரம்பு தெரிய வாடிப்போன மென்தோளும், தாமரைத் தண்டு போன்ற இடையும் உடைய முதியவள் ஒருத்தி, தன்மகன் போரில் புறமுதுகிட்டு மாண்டான் என்று எவனோ கூறக் கேட்டு, எனில் அவன் பாலுண்ட மார்பை அறுத்து எறிவேன் என்று போர்க்களம் புக்கு தேடியபோது, மார்பில் புண்பட்டு மகன் மாண்டு கிடப்பதைக் கண்ணுற்றபோது பேசப்பட்ட பாடல் வரி அது.

அகநானூறு நூலில் மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் பாடல் -

'கடற்சிறு காக்கை காமன் பெடையொடு
கோட்டு மீன் வழங்கும் கோட்டம் மடி பரப்பின
எவள் இறாக் கனவும் நகளென் யாமத்து'

என்று வர்ணிக்கும். கடற்சிறு காக்கை தனது காதல் பெடையுடன் பசிச் சோர்வுடன் அமர்ந்திருக்கும். அப்போது பரதவர் வேட்டையாடாத கடற்பரப்பில் கொம்புடைய சுறாமீனைப் பிடித்து உண்பதாக நள்ளென்று ஒலிக்கும் யாமத்தில் கனவு காணும் - என்பது பாடல் வரிகளின் பொருள்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடல் காக்கையைப் பாடுகிறது. மேலும் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடலும்.

'மணிவாய்க் காக்கை மா நிறப் பெருங்கிளை
பிணி வீழ் ஆலத்து அலங்கு சினை ஏறி'

என்பன பாடல் வரிகள். கருமணிபோல் வாயுடைய கரிய காக்கை, சடைபிடித்துத் தொங்கும் விழுதுகளை உடைய ஆலமரத்தில் ஏறி அமர்ந்திருக்கும் என்பது பொருள்.

மருங்கூர் பாகைச் சாத்தன் பூதனார் பாடல் -

'மைந்நிற உருவின் மணிக்கண் காக்கை'

என்கிறது.

புறநானூறு நூலில் பெருஞ்சித்திரனார், வெளியான் துஞ்சிய போது பாடிய கையறு நிலைப் பாடலில் -

'கவி செந்தாழிக் குவி புறந்து இருந்த
செவி செஞ்சேவலும் பொகுவலும் வெருவா
வாய்வன் காக்கையும் கூகையும் கூடிப்
பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்
காடு முன்னினனே கள் காமுறுநன்'

என்று நீளும்.

இவண் சேவல் என்றால் ஆண் கழுகு. பொருவல் என்றால் பெண்கழுகு. பேஎய் எனில் பேய். செய்யுளிசை அளபெடை. பிணத்தை வைத்து முடிப் புதைத்த தாழியின் பக்கத்தில், சிவந்த செவிகளையுடைய ஆண் கழுகும் பெடைக் கழுகும் வலிமையான வாயை உடைய காக்கையும் கூகையும் கூடியிருக்கும், பேய்கள் கூட்டமாகத் திரியும் இடுகாட்டை அடைந்து விட்டானே கள் போல யாம் விரும்பும் அன்பை உடையவன் - என்பது பொருள்.

அரிசில்கிழார் பாடல் -

'கானக் காக்கைக் கவிச் சிறகு ஏய்க்கும்,
மயிலைக் கண்ணி பெருந்தோள் குறுமகன்'

என உவமை சொல்கிறது. என்ன பொருள் ? கானக் காக்கையின் கவிச் சிறகினைப் போன்ற இருவாட்சிப் பூவால் தொடுக்கப்பட்ட மாலை அணிந்த பெருந்தோள் குறுமகன் - என்பது.

நற்றிணையில் நக்கீரனார் பாடல், 'சேயிறா எறிந்த சிறு வெண் காக்கை' என்று கடற்காகம் பற்றிப் பேசுகிறது. சிவந்த இறால் மீனைப் பெரிய உப்பங்கழிகளில் இருந்து துழாவிக் கொத்தி எடுத்த சிறு நீர்க்காகம் - என்பது பொருள். வேறொரு நக்கீரர் பாடல், 'பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை' என்று உரைக்கும். முக்கல் ஆசான் நல்வெள்ளையார் பாடல், 'கடல் அம் காக்கைச் செவ்வாய்ச் சேவல்' என்கிறது. கடலில் தொழிற்படும் காக்கையின் சிவந்த வாய் உடைய ஆண்காகம் என்று பொருள்.

காக்கைக்குப் பலிச் சோறிடும் மரபு பழங்காலத் தொடர்ச்சி என்பதைக் கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் பாடல்

நிறுவும். 'கடவுள் ஆலத்து உருபலி அருந்திய தொகு விரற் காக்கை' என்பது பாடல்வரி. கடவுளுக்குப் படைத்து வைத்த பலி உணவை ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கும் காக்கைக் கூட்டம் உண்ணும் என்பது பொருள்.

பலிச்சோற்றைக் கடவுள் ஏற்றாரோ இல்லையோ காகம் தின்று பசியாறுகிறது அல்லவா? இதனை மூடநம்பிக்கை என்பவர்கள் விலங்குகளைப் பலிசெய்து பரமனுக்குப் படைப்பதை என் சொல்வர்?

நக்கீரரின் மற்றுமொரு பாடல், 'கொடுங்கண் காக்கைக் கூர் வாய்ப் பேடை, நடுங்கு சிறைப் பிள்ளை தழீஇ' என்று தொடங்கும். சாய்ந்த கண்களையும் கூரிய வாயையும் உடைய காக்கைப் பேடு - சிறகுக்களால் நடுங்கும் தன் குஞ்சுகளைத் தழுவிக் கொள்ளும் - என்பது பொருள். காக்கைப் பிள்ளை என்கிறார் நக்கீரர் நம்மிடம் 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்றொரு பழமொழியுண்டு. அது வென்ன 'காக்கைக்கும்'? இழிவு சிறப்பு உம்மையா? காக்கைக்கும் என்று மொழிய காக்கை என்ன இழிபிறவியா? ஏன் புறாவுக்கும், கிளிக்கும், செண்பகத்துக்கும், மைனாவுக்கும், கொக்குக்கும், நாரைக்கும், குருகுக்கும், மயிலுக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்று சொல்லப்படவில்லை. கரிய நிற முடையதால் காக்கை இழிபிறவியா? உண்மையிலேயே இழி பிறவி எத்தனை பேரைச் சமூகத்தில் கொண்டாடுகிறோம்?

காக்கை கவர்ந்து உண்பதால் இழிவு என்பர் சிலர். கள்ளக் காக்கை, திருட்டுக் காகம் என்பர். வணிகமோ, கல்வியோ, மருத்துவமோ, தரகோ, கனிமமோ, கலையோ, மக்கள் காவலோ திருடுபவர்க்குத்தானே பட்டங்கள், பதவிகள், மாளிகைகள், சிலைகள்? திருட்டு காக்கையின் குணமோ தொழிலோ அல்ல! கடவுள் கற்றுக் கொடுத்ததல்ல. முற்றத்திலோ, மொட்டைமாடியிலோ நீங்கள் காய வைத்திருக்கும் சலங்கை வற்றல், கூழ் வற்றல், வடகம் என்பன அதற்கு உணவாகவே கண்ணில் படுகிறது. தனக்கான உணவை எடுத்துக் கொள்கிறது. அவ்வளவே! குழந்தையின் கரத்தில் இருந்தாலும் தின்பண்டத்தை எடுத்துக் கொள்கிறது. அங்கு திருட்டு என்ற சிந்தனை எங்கிருந்து வந்தது? திருடுதல் என்பது 'தியாகபுத்தியும், போராட்ட உணர்வும், மக்கள் சேவையும்' என வாய்ச்சவடால் உரைக்கும் மாந்தர் குணம். 'காகம் கரவா கரைந்துண்ணும்' எனும் பாடல்வரி சொல்வதென்ன? காக்கை தான் பெற்ற உணவை ஒளித்து வைக்காமல், நாளைக்கு ஆகும் என கிட்டங்கிகளில் பதுக்காமல், கரைந்து தன் இனத்துடன் பகிர்ந்து உண்ணும் என்பது பொருள்.

குறுந்தொகையில் கபிலர், 'பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை' என்பார் 246-வது பாடலின் முதல் அடியில். அதே வரி அப்படியே 'பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை' எனப் பெயரறியாப் புலவர் ஒருவரால் 313-வது பாடலிலும் கையாளப்பட்டுள்ளது.

இதை எழுதிக்கொண்டிருக்கிறபோது, நித்யஸ்ரீ மகாதேவன் பாடல் வரி ஒலிக்கிறது.

'எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தே இளைத்தேன்
இருவினைப் பயன்களை எண்ணியெண்ணிக்
களைத்தேன்'

என்று. இது சுத்தானந்த பாரதியார், என்னை விட ஐம்பது வயது மூத்தவர் எழுதிய 'தூக்கிய திருவடி துணையென நம்பினேன்' எனத் தொடங்கும் கீர்த்தனையில் தொடர்ந்து வரும் அடிகள். இராகம் - சங்கராபரணம், தாளம் - ஆதி. மதுரை மணி ஐயரும், டி.கே. பட்டம்மாளும் இப்பாடலைப் பாடியிருக்கிறார்கள். நான் மேற்சொன்ன பாடல் வரிகளின் முதலடி இராமலிங்க வள்ளலும் பாடியிருக்கிறார். 'எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தே இளைத்தேன்' என்று திருஅருட்பா, ஆறாம் திருமுறையில். ஆமாம்! Great men think alike.

ஐங்குறுநூறு நூலில் 17-வது பிரிவு 'சிறு வெண் காக்கைப் பத்து'. அம்மூவனார் பாடிய நெய்தல் திணைப் பாடல்கள். இந்தப் பகுதியின் பத்துப் பாடல்களும், 'பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை' என்றே தொடங்குகிறது.

அதே நூலில், பாலை பாடிய ஓதலாந்தையார், மறு தரவுப் பத்து பகுதியில், 'மறுவில் தூவின் சிறு கருங் காக்கை' என் பார். மாசுமறுவற்ற சிறகுகளை உடைய சிறிய கருங்காக்கை என்பது பொருள். மறுவில் - மாசுமறுவற்ற - எனும் சொல்லுக்கு கம்பனின் மாற்று, 'காசில்' என்பதாகும். கம்பன் கூறுவான், 'காசில் கொற்றத்து இராமன் கதை அரோ!' என்று.

திருவள்ளுவர் காக்கையைச் சிறப்பித்துப் பாடுகிறார், சுற்றந் தழால் அதிகாரத்தில்.

'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள'

என்று. ஒளிவு மறைவின்றி உறவை அழைத்து உண்ணும் இயல்புடையது காக்கை. அவ்வாறு சுற்றம் பேணுவோரே வெற்றியும் செல்வமும் அடைவர் என்பது கவிஞர் சிற்பி உரை.

காலம் அறிதல் அதிகாரத்துக் குறள் ஒலிக்கும் -

'பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது'

என்று. பகற்பொழுதில் காக்கை கோட்டானை வென்றுவிடும். ஏனெனில் கோட்டானுக்கு இரவில்தான் வலிமை. அஃதே போல் மன்னரும் காலமறிந்து செயலாற்றினால் பகையை வென்றுவிடலாம் - என்பது பொருள்.

தமிழ் எழுத்துகளில் ககர வர்க்கம் மாத்திரமே பயின்று வரும் பாடல் ஒன்று. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர் காளமேகம் யாத்த தனிப்பாடல் அது.

'காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூக் காக்கைக்குக் கொக்கொக்கு
கைக்கைக்கு
காக்கைக்குக் கைக்கைக்கா கா'

என்பது முழுப்பாடல். புலியூர்க் கேசிகன் உரை வருமாறு:

காக்கைக்கு ஆகா கூகை
– *காக்கைக்கு கூகையை இரவில் வெல்லுதற்கு ஆகாது.*

கூகைக்கு ஆகா காக்கை
– கூகைக்கு காக்கையை பகலில் வெல்லுதற்கு ஆகாது. அதனால்,
கோக்கு கூ காக்கைக்கு
– அரசனுக்காக அவன் நாட்டைப் பகைவரிடமிருந்து காப் பாற்றுகைக்கும்
கொக்கு ஒக்க
– கொக்கைப் போலத் தகுதியான காலம் வரும்வரை காத் திருக்க வேண்டும்
கைக்கைக்கு
– பகையை எதிர்த்து
காக்கைக்கு
– காப்பாற்றுவதற்கு
கைக்கு ஐக்கு ஆகா
– சாமர்த்தியமான தலைவனுக்கும் இயலாததாகிப் போய் விடும்.

காளமேகத்தை எண்ண நமக்குக் கர்வமாகிப் போகும். 'வசை பாடக் காளமேகம்' என்ற தலைப்பில், இக்கவிஞர் குறித்த எனது நீண்ட கட்டுரை ஒன்று 'உயிர் எழுத்து' யூலை 2018-வது இதழில் வெளியானது. பிறகு 'பாடுக பாட்டே' என்ற என் கட்டுரைத் தொகுப்பில் சேர்க்கப் பெற்றது. விஜயா பதிப் பகம் வெளியீடு.

பாரதியைச் சொல்லாமல் யாம் காக்கையைக் கடந்து போவது எங்ஙனம் ?

'காலை எழுந்திருத்தல் காணாமலே புணர்தல்
மாலை குளித்து மனை புகுதல் - சால
உற்றாரோடு உண்ணல் உறவாடல் இவ்வாறு
கற்றாயோ காக்கை குணம்?'

என்பார் பாரதி. காக்கை காணாமலே புணர்கிறது. சினிமாக் களில் கோடி மக்கள் காணும்படி கலவிக் காட்சி அமைக் கிறார்கள்.
சின்ன வயதில் சிறுவருக்கான பாடல் ஒன்றிருந்தது.

'காக்கா கண்ணுக்கு மை கொண்டு வா
குருவி கொண்டைக்குப் பூ கொண்டு வா
பசுவே கிண்ணத்தில் பால் கொண்டு வா
பச்சைக்கிளியே பழம் கொண்டு வா'

என்று. காக்காவின் கரிய நிறம்தானே அதனை மை கொண்டு வரப் பணிக்கிறது. காக்கைக் கூட்டில் குயில் முட்டையிடும் சேதியும் உண்டு.

திருமந்திரம் இரண்டாம் தந்திரத்தில் திருமூலர் சொல்வார் -

'குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கில்லை போக்கில்லை ஏனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே'

என்று. அந்த அப்பாவிக் காக்கைக்குத்தான் இத்தனை அவப் பெயர்! நமக்கும் கிளி, மைனா, புறா, செம்போத்து, சிட்டு, தேன்சிட்டு, மயில் என்பன அழகு, காக்கை அழகில்லை.

சினிமா நடிகையர் எண்பத்தேழு வயதானாலும் கவர்ச்சிக் கன்னி. இராஜ்ய சபா இருக்கை, பாரத ரத்னா யாவற்றுக்கும் தகுதியானவள். ஆனால் காய்கறி விற்கிறவர், மீன் விற் கிறவர், குப்பை சேகரிப்பவள் அழகாக இருந்தாலும் துச்ச மானவள்! ஓங்கி உரத்து ஒலித்துக் கம்பலை செய்து முற் போக்கும் சமூக நீதியும் சமத்துவமும் யுகப்புரட்சியும் உரைக்கும் மேய்ப்பர்களின் அழகு பற்றிய இலக்கணம் என்ன ?

இலக்கியங்களில் அழகு குறித்து எவர் எத்தனை பாக்கள் இயற்றி இருந்தாலும் நமக்கு அழகி என்றால் சினிமா நடிகை மட்டுமே! சர்வ சாதாரணமாக நாம் செவிமடுக்கும் சொற் றொடர் - 'கறுப்பா இருந்தாலும் களையா இருக்கா...' என்பது. அதுவென்ன கறுப்பாக இருந்தாலும் ? அத்தொனி சுட்டுவது எதை ? கறுப்பு நிறம் என்பது மலிந்த நிறமா ?

இத்தனை நீளமாகக் காக்கை பற்றி எழுத வந்ததன் நோக் கம், அழகு என்ற தன்மை மீது நமக்கிருக்கும் முன் முடிவுகள் பற்றி - Pre conceived notions - விவாதிக்கவே! ஊரில் சொல்வார்கள் திருமண வரன் பற்றிப் பேசும்போது - 'பொண்ணு கறுப்புதான், ஆனா நூறுபவுண் உருப்படியும் தென்னந்தோப்பும் வீடும் உண்டு' என்று. காசும் பவுனும் சொத்தும் இருந்தால் கறுப்பு ஒரு பிரச்சினை இல்லை. 'காக்கை குளிச்சால் கொக்காகீல்லா' என்பது மலையாளப் பழமொழி. நமது கேள்வி காக்கை எதற்குக் கொக்கு ஆக வேண்டும் ?

கண்ணனைக் கார்மேக வண்ணன் என்றுதானே இலக்கியங் கள் பகர்கின்றன.

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா - நின்றன்
கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா'

என்றுதானே பாரதியார் பாடினார். நீலமேக சியாமள வண் ணன் என்றுதானே திருமாலைக் குறித்தனர் ? 'அஞ்சன வண்ணன்' என்பான் குகன் இராமனைக் குறிக்க, கம்பன் சொற்களால். 'மையோ மரகதமோ மழை முகிலோ மறி கடலோ ?' என்பான். கரிய செம்மல் என்பான்.

அழகு பற்றிய அவரவர் மனோபாவம், கண்ணோட்டம், தேர்வு வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் எதையும் பொதுமைப் படுத்திப் பேசுவது நியாயமல்ல.

லூக்கா நற்செய்தி 6:43 அறிவுறுத்துகிறது -

'கெட்ட கனி தரும் நல்ல மரமும் இல்லை;
நல்ல கனி தரும் கெட்ட மரமும் இல்லை'

என்று. இதனைப் புத்தியில் வைத்தல் நன்று.



nanjilnadan@thaiveedu.com

நினைவுக்கோட்டை


■ குகன் சங்கரப்பிள்ளை

இப்ப ஏன் இந்த அறைக்குளே வந்தனான்?

இது என்ன இந்த மரூன் கலர் சட்டையி னைப் பார்க்க Chapel street போடுகின்ற சட்டை போல இருக்கின்றதே? இங்கே Chapel street என்பது நான் பதின்மவயதில் யாழ்ப்பா ணத்தில் டியூஷனுக்கு படிக் கப் போன இடத்தில் அங்கு படிக்க வந்த ஓர் அழகிய இளம் பெண்ணுக்கு நானும் எனது நண்பர்களும் வைத்த பெயர். அந்த பெண்ணின் உண்மைப் பெயர் தெரியாது, அவர் எந்த ஊரில் இருந்து வருகின்றார் என்பதும் தெரியாது. ஆனால் அந்தப் பெண் அடிக்கடி அணியும் உடையின் நிறம் Chapel street-இல் இருந்த ஒரு வீட்டின் முன்னால் பூத்து குலுங்கும் போகன்வில்லா (Bougainvillea) மரத்தில் பூக்கும் மரூன் கலர் போல இருப்பதால் நாம் அவருக்கும் Chapel street என்ற பெயரை வழங்கி கௌர வப்படுத்திக் கொண்டோம்.

இப்ப பிரச்சினை என்னவெனில் பதின்ம வயதில் பார்த்த பருவ மங்கை அணிந்த உடையின் நிறமும், அந்த உடை காரணமாக நாம் அவருக்கு வைத்த பட்டப் பெயரும் ஞாபகம் இருக்கு, ஆனால் சில நிமிடங்களுக்கு முன்னர், ஏதோ ஒன்றைத் தேடி நான் ஏன் இந்த அறைக்குள் வந்தனான் என்கின்ற விடயம் மறந்து போய்விட்டது. நாம் ஏன் சில விடயங் களை நினைவில் வைத்திருக்கின்றோம் பல விடயங்களை மறந்துவிடுகின்றோம்? நாம் ஏன் மறக்கின்றோம் என்பதனை அறிய வேண்டுமாயின் நாம் ஏன் நினைவாற்றல் உள்ள உயிரினங்களாக பரிணாமம் அடைந்தோம் என்பதனைப் புரியவேண்டுமென பேராசிரி யரும் 'Why we Remember' என்ற அரிய புத்தகத்தை எழுதியவருமான Charan Ranganath கூறுகின்றார். நினைவு நல்லது, அழகானது, அற்புதமானது சிலவேளைகளில் கசப்பா னதும் கூட. உயிரினங்களின் வாழ்வியலுக்கு நினைவாற்றல் மிக அவசியமான ஒன்று. எமது நினைவாற்றலை இழந்துவிடுவோமாயின் எமது மூளையின் தொழிற்பாடு முழுவது மாக ஸ்தம்பித்துவிடும். வாழ்வின் இயங்கியலே சிதைந்துவிடும். உதாரணமாக இப்போது இதனை வாசிக்கும் அல்லது கேட்கும் நீங்கள் இந்த வாக்கியத்தின் கடைசிச் சொல்லைக் கேட்கும்போது வாக்கியத்தின் முதல் சொல்லையும் அதற்கு பின்னால் வந்த சொற்க ளையும் ஞாபகத்தில் வைத்திருப்பதன் மூலம்தான் இந்த முழு வாக்கியத்தின் அர்த்த தினைப் புரிந்து கொள்ள முடியும். Alzheimer போன்ற மறதி நோய்களினால் மிக பாதிப்ப டைந்த நோயாளிகளின் இறுதிக் காலகட்டங்களில் அவர்களின் மூளை எந்தெந்த தசை நார்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அவர்களின் சுவாசத்தை கட்டுப்படுத்தலாம் என் பதனை மறந்து விடுவதன் மூலம் அவர்களின் இறப்புக்கே காரணமாக மறதி அமைந்து விடுகின்றது.

உண்மையில் 'நினைவு' என்றால் என்ன? நினைவு என்றால் என்ன என்ற கேள்வியினை உயிரியல் விஞ்ஞானிகளிடம் கேட்டால் அவர்கள் சார்ந்த துறையினை பொறுத்துப் பதில்கள் வேறுபடும். இந்த கேள்வியினை Behavioural psychologist-இடம் அதாவது மனி தர்களின் நடவடிக்கைகளை அவதானிக்கும் உளவியல் நிபுணரிடம் கேட்போமாயின், திரும்ப திரும்ப ஒன்றை செய்வதன் மூலம் அந்த நிகழ்வு மனதில் நிரந்தரமாகப் பதிந்து விடுவதை நினைவென்று விபரிப்பார்கள். இதே கேள்வியினை நரம்பியல் நிபுணர்களிடம் (Neuroscientist) கேட்போமாயின் அவர்களின் பதில் மூளையில் இருக்கும் கலங்களுக்கு இடையில் ஏற்படும் நிரந்தரமான பிணைப்புப் பற்றி விபரிப்பார்கள். நினைவென்றால் பழைய பொருட்களை ஒரு பெட்டியில் போட்டு வீட்டில் ஓரமாக வைப்பது போல, எமது அனுபவங்களையும், அறிந்து தெரிந்த விடயங்களையும் மூளையில் ஒரு பகுதியில் சேகரித்து வைப்பதுதான் நினைவா? மனதில் நினைவுகளை மீட்பது தொடர்பாகக் காலங்காலமாக பல உவமான உவமேயங்கள் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. ஓர் ஒப்பீடு வீடியோ கமெரா. அதாவது நினைவென்பது ஒரு வீடியோ கமெரா பதிவு செய்வதுபோல நிகழ்வுகள் யாவையையும் மனத்தில் அதாவது மூளையில் எதோ இடத்தில் பதிவு செய்யப்படுவது. இந்த பதிவுகள் தேவைப்படும்போது வீடியோ cassette-ஐ rewind பண்ணிப் பார்ப்பதுபோல நினைவுகளை மனத்தில் மீட்டுக்கொள்ளலாம் என்பது. இன்னுமொரு ஒப்பீடு கணினிகளில் நாம் file-களுக்கு பெயரிட்டு சேகரித்து வைப்பதுபோல எமது நினைவுகளும் மனதில் எங்கோ ஓரிடத் தில் அட்டவணைப்படுத்திச் சேகரித்து வைக்கப்படுகின்றனவென்பது. இந்த ஒப் பீடுகள் யாவும் தவறானவையாக இருந்தாலும் ஓர் உண்மையையும் ஒத்துக்





“எமது புலன்களிருந்து வரும் தகவல்களை ஒரு குறிப்பிட்ட அளவிலேயே எம்மால் நினைவில் வைத்துக்கொள்ள முடியும். தேவையில்லாத தகவல்களை மூளை இலகுவாக மறந்துவிடுகின்றது.”

கொண்டே ஆகவேண்டும். அதாவது இப்போது வாசித்த இந்த வசனத்தைத் திரும்ப கண்ணை மூடிக்கொண்டு உங்களால் அப்படியே கூற முடியும். ஆதலினால் மூளையில் ஏதோ ஓரிடத்தில் நாம் சிலேட்டில் எழுதுவது போல நினைவுகள் பதியப்படுகின்றது என்பது.

நினைவு ஆய்வாளர்கள் (memory researchers) நினைவுகளை அடிப்படையில் இரண்டு விதமாகப் பிரித்திருக்கின்றனர். ஒன்று குறுகியகால நினைவுகள் (short term memory) மற்றது நீண்டகால நினைவுகள் (long term memory). குறுகியகால நினைவுகளென்பது நாம் தற்காலிகமாக ஒரு விடயத்தை நினைவில் வைத்திருப்பது. உதாரணமாக எமக்குத் தெரியாத ஒருவரின் தொலைபேசி இலக்கத்தை யாரிடமாவது கேட்டு உடனடியாகவே தொலைபேசியில் dial பண்ணுவது. நாம் கேட்ட எண்களைத் தொலைபேசியில் நாம் தேர்வுசெய்யும் வரை அந்த எண்கள் நினைவில் இருக்கும் இந்த தொலைபேசி அழைப்பின் பின்னர் நாம் இலக்கத்தை மிக குறைந்த நேரத்திலேயே மறக்கத் தொடங்கிவிடுவோம். இந்த வகையான நினைவுகள் மிக இலகுவாகவே எமது மூளையில் பதிந்து மறைந்து விடுவதனால் இதனை ஓர் இலேசான விடயமாக மூளை கையாளுகின்றது என்று எண்ணி விடாதீர்கள், இதற்குப் பின்னால் மிகச் சிக்கலான ஒரு பொறிமுறை இருக்கிறது.

முதலில் எமது புலன்கள், இவை மிக விழிப்பானவை, வெளியுலகம் தொடர்பாக தொடர்ந்து தகவல்களை மூளைக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றன. இவை மிக அதிகமான தகவல்கள், கணினியின் மொழியில் கூறுவதாயின், பன்னிரண்டு மணித்தி யாலங்களில் ஏறக்குறைய 32 GB தகவல்கள் (32 gigabyte of data) தொடர்ந்து மூளைக்கு சென்று கொண்டிருக்கின்றன. மிக மிக அதிகமான தகவல்கள் இருந்தும், பெரும் பாலான தகவல்களை குறுகிய காலத்திற்கு எமது மூளை சேமிக்கும் வல்லமை பெற்றவை. இப்போது யன்னல் வழியாக வெளியே பார்க்கின்றீர்கள் என்று வைத்துக்கொள்வோம், உங்களால் என்ன பார்த்தீர்கள் என்று கண்ணை மூடிக் கொண்டு விபரமாக கூறமுடியும். ஆனால் ஒரு சில நிமிடங்களின் பின்னர் கேட்டால் இவ்வளவு விபரமாகக் கூறமுடியாது. யன்னலூடாகப் பார்க்கும்போது வெளியே இருக்கும் வீதியில் சில கார்கள் போயிருக்கும். சில நிமிடங்களின் பினனர் எம்மிடம் மூன்றாவது போன காரின் நிறம் என்ன என்று கேட்டால் எமது பதில் சரியாக இருக்காது. முதல் முதலாக கேட்ட பாடலை அதே தொனியிலோ ராகத்திலோ சரியாக சில நிமிடங்களின் பின்னர் எம்மால் பாடமுடியாது.

எமது புலன்களிருந்து வரும் தகவல்களை ஒரு குறிப்பிட்ட அளவிலேயே எம்மால் நினைவில் வைத்துக்கொள்ள முடியும். தேவையில்லாத தகவல்களை மூளை இலகுவாக மறந்துவிடுகின்றது. போனவாரம் புதன் கிழமை இரவு எத்தனை மணிக்கு என்ன சாப்பிட்டீர்கள் என்பது நினைவில் இருக்கின்றதா? இந்தத் தகவல்களால் ஒரு பிரயோசனங்களும் இல்லையெனில் இதனை மூளை நினைவில் வைத்திருப்பதில்லை. இருப்பினும் இந்தப் புலன்களில் இருந்து வரும் தற்காலிக நினைவுகள் தொடர்ந்து வரும் எமது செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும் பட்சத்தில் நாம் குறுகிய நேரத்திற்கு இவற்றை நினைவில் வைத்திருப்போம். இந்த வகை நினைவாற்றலை working memory என்பார்கள். இதற்கு தமிழில் ‘செயற்படு நினைவாற்றல்’ என்று கூகிள் AI மொழிபெயர்ப்பு கூறுகின்றது. கீழேவரும் எண் தொடரை அவதானமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்.

1 8 5 2 7 9

உங்களால் கண்ணை மூடிக்கொண்டு இறுதி இலக்கத்திலிருந்து முதல் இலக்கம் வரை கூற முடியுமா? முதலாவது எண், மூன்றாவது எண் மற்றும் ஐந்தாவது எண்கள் யாவற்றையும் ஒன்றுடன் ஒன்று பெருக்க முடியுமா? இவற்றைக் கணிப்பதற்கு எமக்கு working memory அவசியமாகின்றது. எமது நாளாந்த வாழ்வின் செயற்பாடுகளுக்கு working memory மிகவும் உறுதுணை புரிகின்றது. ஒரு கடையில் சில பொருட்கள் வாங்கப் போவது, சமையல் செய்வது, ஓர் அறைக்குள் எதற்காகப் போனோம் என்பதனை உணர்வது, ஒரு நண்பருடன் ஆழமான உரையாடலை நடத்துவது, ஒரு கதைப் புத்தகத்தை வாசித்து முடிப்பது என பலவற்றுக்கும் இந்த working memory மிக அவசியமான ஒன்று. சில சந்தர்ப்பங்களில் இந்த working memory நீண்ட கால நினைவுகளாக (long term memory) மூளையில் பதிந்துவிடும். நாம் வழக்கமாக நினைவாற்றலைப் பற்றி பேசும்போது இந்த நீண்ட கால நினைவுகளைப் பற்றித்தான் குறிப்பிடுகின்றோம். நீண்ட கால நினைவுகளை மேலும் பல வகையாக ஆய்வாளர்கள் பிரித்திருக்கின்றனர். முதலாவது Procedureal memory - தமிழில் முறைசார் நினைவு என்கின்றனர். மற்றது declarative memory - தமிழில் அறிவாற்றல் நினைவு என்று குறிப்பிடுகின்றனர். இந்த இரண்டு வகை நினைவுகளையும் ‘எப்படி - how ‘ மற்றும் ‘என்ன - what’ என்ற சொற்களுக்கு இருக்கும் அர்த்தத்துடன் பொருத்திப் பார்க்கலாம்.

Procedureal memory அதாவது முறைசார் நினைவென்பது நாம் ஒரு விடயத்தை எப்படிச் செய்வது (knowing how) என்பதனை நினைவில் வைத்திருப்பது. அதாவது நாம் ஒன்றைக் கற்று பழகிக்கொள்வதன் மூலம் நினைவில் வைத்திருப்பது. உதாரணமாக பியானோ வாசிக்கக் கற்றுக்கொண்டவர்களுக்கு எந்த key எங்கே இருக்கிறது என்பது பியானோவை பார்க்காமலேயே முழுவதுமாக நினைவில் இருக்

கும். Procedureal memory-யினை எமது மனதால் உணர்வு பூர்வமாக (Conscious mind) சில வேளைகளில் உணரமுடியாது. உதாரணமாக நீங்கள் கம்ப்யூட்டர் keyboard-ஐ நன்கு பாவிக்க தெரிந்தவர்கள் keyboard-ஐ பார்க்காமலே type பண்ண தெரிந்தவர்களாக இருகின்றீர்கள். உங்களிடம் ஒரு பேப்பரில் keybord-இன் வரை படத்தை கீறி எந்த எந்த இடங்களில் என்ன எழுத்துகள் வரும் என்று எழுதச் சொன்னால் உங்களால் எழுத முடியாமல் இருக்கும், ஆனால் keybord-இல் கைகளை வைப்பீர்களாயின் நீங்கள் பார்க்காமலேயே உங்கள் விரல்கள் தேவையான எழுத்துகள் மேல் தானாக நகரும், அதாவது விரல்களுக்கு தனிப்பட்ட சொந்த நினைவுகள் இருப்பது போல அவை இயங்குகின்றன. இதே போலவே நாம் காரோடும்போது எவ்வளவு பலத்தைப் பாவித்து accilarater padel-ஐ அமத்த வேண்டும் stering-ஐ எவ்வளவு, எந்த பக்கம் திருப்ப வேண்டும் என்பதனைப் பற்றிச் சிந்திக்கவே தேவை இல்லை. கைகளும் கால்களும் தானாகவே அவற்றைச் செய்யும். நாம் நம்பாட்டில் வானொலி கேட்டுக்கொண்டோ நண்பர்களுடன் கதைத்துக்கொண்டோ காரை ஓட்டிக்கொண்டு போகலாம்.

Declarative memory அதாவது அறிவாற்றல் நினைவினை வெளிப்படையான நினைவு (explicit memory) எனவும் விபரிப்பார்கள். இந்த நினைவாற்றல் நாம் சிறு வயதிலிருந்து கேட்டு அறிந்து கொண்ட விடயங்கள் அதாவது நாய்களுக்கு நான்கு கால்கள் இருக்கும் போன்ற தவகல்களை நினைவில் வைத்திருப்பது. இந்த விடயங்கள் வெளிப்படையாகவே யாவரும் அறிந்து கொள்ளும் விடயம். இதனால் இந்த வகை நினைவுகளை Declarative memory அதாவது அறிவாற்றல் நினைவு என்கின்றனர். இந்த நினைவாற்றலையும் மீண்டும் இரண்டு விதமாகப் பிரித்திருக்கின்றனர். ஒன்று கருத்தியல் நினைவு (Semantic memory) மற்றது நிகழ்வுகளின் நினைவாற்றல் (Episodic memory). Semantic memory அதாவது கருத்தியல் நினைவென்பது சாதாரண யதார்த்த உண்மை நிலைமைகளை நினைவில் வைத்துக்கொள்வது. உதாரணமாக இரண்டும் இரண்டும் நான்கு என்பதனை நாம் உடனடியாகக் கூறுவோம் எந்த கணக்கும் மனதில் போடத் தேவையில்லை. அதேபோல பிரான்சின் தலைநகர் பாரிஸ் என்பது போன்ற நினைவுகள். அதாவது இந்த நினைவுகள் அடிப்படை உண்மைகள் (real facts) இவற்றை நினைவில் வைத்துக்கொள்வதனை Semantic memory என்பார்கள். Episodic memory அதாவது நிகழ்வுகளின் நினைவாற்றலென்பது எமது நாளாந்த அனுபவங்களை நினைவில் வைத்திருப்பது. அதாவது பிரான்சின் தலைநகர் பாரிஸ் என்பதை நினைவில் வைத்திருப்பதை Semantic memory என்றால் பாரிஸில் சுற்றுலா பயணம் நாம் மேற்கொண்டபோது எமக்கு ஏற்பட்ட அனுபவங்களை Episodic memory என்பார்கள். காலை நேரங்களில் பாரிஸ் நகரம் முழுவதுமாக பரந்திருக்கும் காப்பி கடைகளுடன் சேர்ந்திருக்கும் பேக்கரிகளில் இருந்து வரும் வெந்து சுவையான மணம் வீசும் croissant, burgette போன்றவற்றின் மணங்களின் நினைவுகள், ஈபிள் கோபுரத்தை (Eiffel Tower) பார்ப்பதற்காக வளைந்து நெளிந்து நின்ற வரிசையில் மணித்தியாலக் கணக்கில் காத்திருந்தது, லாச்சப்பலில் சாப்பிட்ட தோசை என பல அனுபவங்களின் நினைவுகளை நிகழ்வுகளின் நினைவாற்றல் (Episodic memory) என்கின்றனர்.

நினைவுகளென்பது நினைவுகள் இதனை ஏன் எப்படி வகை வகையாகப் பிரிக்கவேண்டும் என்று வாசகர்கள் கேட்கலாம். இதற்குக் காரணம் இருக்கிறது. விதம் விதமான நினைவுகள் மூளையில் பதியப்படும் பொறிமுறைகளும் அவை எங்கே பதியப்படும் என்ற விபரங்களும் நினைவுகளுக்கேற்ப மாறுபடுகின்றன. இதனால் மூளையின் ஒரு பகுதியில் ஏற்படும் பாதிப்பினால் சில வேளைகளில் நோயாளிகளினால் ஒரு வகைபட்ட நினைவுகளை மறந்திருப்பார்கள். அதேவேளை வேறு வகை நினைவுகளை மறந்திருக்கமாட்டார்கள். Alzheimer போன்ற மறதி நோயினால் அவதிப்படும் ஒருவர் இலகுவில் அவர் எங்கே இருக்கின்றார் (spatial memory அதாவது Episodic memory) என்பதனை மறந்துவிடுவார், ஆனால் அவர் பழகிய இசைக் கருவிகளை அல்லது பாடல்களை அற்புதமாக இசைப்பார்கள், பாடுவார்கள். அதாவது இந்த நோயாளிகளுக்கு Procedureal memory என்ற நினைவுகள் பாதிப்பு அடைவதில்லை.

> **“சாதாரண வளர்ந்த மனிதர்களின் மூளையில் ஏறக்குறைய 86 பில்லியன் வரையிலான மூளைக் கலங்கள் அதாவது நியூரோன்கள் இருக்கின்றன. ஒப்பீட்டளவில் இந்த எண்ணிக்கை, தற்போது இந்த பூமியில் வாழும் மனிதர்களின் எண்ணிக்கையை விட பத்து மடங்கு அதிகம்.”**

கற்பதும், கற்றவற்றை நினைவில் வைத்திருப்பதும், நினைவில் இருப்பவற்றைத் தேவைப்படும்போது மீட்டெடுப்பதும் மூளையின் அதிஉன்னதமான செயல்பாடுகளில் ஒன்று. ஒரு கணத்தில் ஓர் இடத்தில் நடைபெறும் ஒரு நிகழ்வு, இந்த நிகழ்வின் காரணமாக மூளையின் மிக சிறு பகுதியில் நடைபெறும் மிக சிறு இரசாயன தாக்கம் எவ்வாறு எமது மனத்தில் வாழ்நாள் முழுவதுமே நீங்காத நினைவுகளாகப் பதிந்து விடுகின்றன? இந்தக் கேள்விக்கான பதிலைத் தேடி ஒரு நூற்றாண்டுக்கு மேலாக உயிரியல் ஆய்வாளர்கள், நரம்பியல் வல்லுநர்கள், மனோதத்துவ நிபுணர்கள், இயற்பியல் விஞ்ஞானிகள் என பலரும் தொடர்ந்து பல ஆய்வுகளை மேற்கொண்டபடி இருக்கின்றனர்.

சாதாரண வளர்ந்த மனிதர்களின் மூளையில் ஏறக்குறைய 86 பில்லியன் வரையிலான மூளைக் கலங்கள் அதாவது நியூரோன்கள் இருக்கின்றன. ஒப்பீட்டளவில் இந்த எண்ணிக்கை, தற்போது இந்த பூமியில் வாழும் மனிதர்களின் எண்ணிக்கையை விட பத்து மடங்கு அதிகம். நியூரோன்கள் ஒரே சீராக மூளையில் உருவாக்குவதில்லை. தாய்மார்களின் கர்ப்பப் பையில் இருக்கும் சிசுவின் இரண்டாவது மூன்று மாதத்தில் (second trimester) நிமிடத்திற்கு 200 மில்லியன் நியூரோன்கள் உருவாகுகின்றன. குழந்தைகள் பிறந்த பின்னர் நியூரோன்களின் உருவாக்கம் நின்றுவிடுகின்றது. இதே போலவே கற்பதும் கற்றவற்றை நினைவில் வைத்திருப்பதும் போன்ற மூளையின் செயற்பாடுகளும் ஒரே சீராக மூளையில் செயற்படுவதில்லை. சிறு குழந்தைகளின் மூளை செயற்றிறன் மிக்க உறுப்பாகச் செயற்படுகின்றது. மூன்று வயது குழந்தையை பரிசோதிக்கும் ஒரு குழந்தை மருத்துவர், அவர் பத்து வருடத்துக்கு மேலாக மருத்துவத்துறையில் சிறப்பு படிப்பு படித்து முடித்து வந்திருந்தாலும் கூட, அந்த மருத்துவரின் மூளையினை விட மருத்துவர் பரிசோதிக்கும் குழந்

தையின் மூளை மிக வீரியமாக, குழந்தையை பரிசோதிக் கும் அந்த நிமிடத்தில் செயற்படுகின்றது.

மூளையில் இருக்கும் ஒவ்வொரு நியூரோனும் (மூளைக் கலம்) சராசரியாக பத்தாயிரத்துக்கும் அதிகமான மற்றைய நியூரோன்களுடன் தொடர்பில் இருக்கின்றன. தொடர்பில் இருக்கும் பத்தாயிரம் நியூரோன்களும் மீண்டும் இன்னு மொரு பத்தாயிரம் நியூரோன்களுடன் தொடர்பிலிருக்கின் றன. இவ்வாறாக ஒரு வலைப்பின்னலாக நியூரான்களின் தொடர்பு விரிந்திருக்கின்றன. உண்மையில் மூளைக்கலங் கள் (நியூரோன்கள்) ஒன்றுடன் ஒன்று இணைப்பில் இருப்ப தில்லை. ஒவ்வொரு கலங்களுக்கு மிடையில் ஒரு சிறு இடைவெளி இருக்கின்றது. இந்த இடைவெளியை synapses என்பார்கள். இந்த இடைவெளிகளுக்கூடாக மூளைக் கலங் களின் தொடர்பை இரசாயனங்கள் உருவாக்குகின்றன. இந்த இரசாயனங்களை நரம்பியற்கடத்தி (nurotransmitter) என் பார்கள். இவ்வாறாக ஒரு வலைப் பின்னலாக மூளையில் உள்ள கலங்கள் அமைந்திருப்பதால் ஒரு கலத்தில் ஏற்படும் தாக்கம் அந்த கலத்துடன் தொடர்பிலிருக்கும் மற்ற கலத் திற்கும் கலங்களுக்கு இடையில் இருக்கும் இரசாயனங்கள் மூலம் பரவுகின்றது. உதாரணமாக சிறு வயதில் ஒரேமாதி ரியான சிறு பெட்டிகளை (உதாரணமாக சிகரெட் பெட்டிகள்) ஒன்றன் பின் ஒன்றாக ஒரு சிறு இடைவெளி விட்டு அடுக்கி வைத்த பின்னர், முன்னால் இருக்கும் பெட்டியினை தட்டிவிட அதற்கு பின்னால் உள்ள ஒவ்வொரு பெட்டியும் சரிந்து விழுவது தொடர்வது போல, மூளைக் கலத்தில் ஏற்படும் தாக்கம் அந்த கலத்துடன் தொடர்பிலிருக்கும் கலங்க ளுக்கும் அதனை தொடர்ந்து அந்த கலங்களுடன் தொடர்பி லிருக்கும் மற்ற கலங்களுக்குமென ஒரு சங்கிலித் தொட ராகத் தொடர்ந்து பரவுகின்றன. இவ்வகையான தொடர்பை நரம்பியலில் multidirectional domino effect என்பார்கள். இங்கு ஒன்றைப் புரிதல் வேண்டும் நியூரோன்கள் வெறும் relay போல ஒன்றுடன் ஒன்று தொடர்புகளை ஏற்படுத்துவ தில்லை. எந்த நியூரோனுடன் எப்போது தொடர்பு கொள்ள வேண்டுமென்பதனை ஒவ்வொரு நியூரோனும் சுயமாகத் தீர் மானிக்கின்றன.


எமது புலன்கள் மூலம் நாம் அடிக்கடி உணரும் விடயங்கள் மூளைக் கலங்களில் நிரந்திரமான தொடர்புகளை உரு வாக்கி விடுகின்றது. உதாரணமாக ஒருவரின் முகத்தைப் பார்க்கும்போது எமது பார்வைப் புலத்தினால் ஏற்படும் தாக் கத்தை உணரும் மூளைக் கலம் அதனை நியூரோன் 'A' என்று வைத்துக்கொள்வோம். அதேபோல அந்த நபரின் பெயரை கேட்கும்போது எமது செவிப் புலத்தினால் உணரும் மூளைக் கலம் அதனை நியூரோன் 'B' என்று வைத்துக்கொள் வோம். இந்த நபரை நாம் அடிக்கடி பார்த்து பழகும்போது அவரது முகத்தை உணரும் நியூரோன் 'A'-ம் அவரது பெய ரைக் கேட்டு உணரும் நியூரோன் 'B' நிரந்திரமான பிணைப் புகளை ஏற்படுத்துகின்றன. நியூரோன் 'A'-இல் ஏற்படும் தாக் கம் உடனடியாகவே நியூரோன் 'B'-இல் ஒரு தாக்கத்தைத் தூண்டிவிடுகின்றது. இவ்வாறாக மூளைக் கலங்கள் ஒன்று டன் ஒன்றாக ஒரே நேரத்தில் இணைப்புகளை தோற்றுவிக் கின்றன. இந்த இணைப்புகள் ஒரு சிறு வரைபடம் போல மூளையில் தோன்றுகின்றன. இந்த வரைபடம் போல தோன் றும் நியூரோன்களின் நீண்ட கால இணைப்புகள்தான் எமது நினைவாற்றலுக்கு அடித்தளமாக அமைகின்றது. மூளையில் வரையப்படும் இந்த நியூரோன்களின் இணைப்பு வரை படத்தை நரம்பியல் வல்லுநர்கள் Engram என்பார்கள். நியூ ரோன்களின் இணைப்புகள் எப்பொழுதுமே நிரந்திரமாக இருக்க வேண்டியதில்லை. ஒரு விடயம் தொடர்பாகப் புதிய தகவல்கள் எமது புலன்களிலிருந்து மூளைக்குச் சென்றடை யும்போது நியூரோன்களின் தொடர்புகள் மாற்றமடைகின்றன. அதாவது நியூரோன்களின் இணைப்பு வரைபடம் engram புதிய வடிவம் பெறுகின்றது. உதாரணமாக இருபது வருடங்க ளுக்கு முன்னர் பார்த்த நண்பர் ஒருவரின் முகத்தின் உருவம் இப்போது பார்க்கும்போது மாறி இருக்கும். இந்த முகத்தைப் பார்க்கும்போது எமது பார்வைப் புலத்தினால் உணரும் நியூரோன் 'A' ஆக இருக்கப் போவதில்லை அது 'A1' என்று ஒரு புதிய நியூரோன் ஆக இருக்கும். இப்போது அவரது பெயரைக் கேட்டு உணரும் நியூரோன் 'B' அதன் தொடர் புகளை 'A1' உடன் பேணிக்கொள்ளும். இவ்வாறாக தொடர் புகளை மாற்றும் நியூரோன்களின் வல்லமையினை ஆங்கி லத்தில் nuro plasticity என்பார்கள். Engram தான் மூளை யில் பதியப்படும் நினைவுகளாயின், இவை மூளையின் எந்தப் பகுதியில் எவ்வாறு பதியப்படுகின்றன? இங்குதான் மூளையின் மத்திய பகுதியில் அமைந்திருக்கும் முக்கிய பகு தியாகிய ஹிப்போகாம்பஸ்ன் தொழிற்பாடு முக்கியம் அடை கின்றது.

புலன்களினால் வரும் தகவல்களை மூளையில் நீண்டகால நினைவுகளாக ஒன்றிணைப்பது ஹிப்போகாம்பஸ் (Hippo-campus) எனும் பகுதி. மூளையில் நீண்டகால நினைவுகளை கட்டமைப்பதற்கு ஹிப்போகாம்பஸ் மிக முக்கியமான பகுதி யாக செயற் படுகின்றது, ஆயினும் இதன் முக்கியத்துவம் 1950-ஆம் ஆண்டுவரை பெரிதாக அறியப்படவில்லை. ஹிப் போகாம்பஸ்-இன் முக்கியத்துவத்தினை அறிவதற்கு நாம் நோயாளி H.M-இன் கதையினை அறிதல் வேண்டும். 2008-ஆம் ஆண்டு இறந்துபோன நோயாளி H.M-இன் உண்மை யான பெயர் Henry Molaison. இவர் இறக்கும் வரை இவரது அடையாளத்தைப் பாதுகாக்கும் பொருட்டு இவர் H.M. என்றே அறியப்பட்டார். பொதுவாக நினைவு, மூளை, நரம்பியல் தொடர்பாக எழுதப்படும் எல்லா புத்தகங்களிலும் இவர் பற்றிய ஒரு சிறு குறிப்பு இருக்கும். பல புத்தகங்களில் இவ ரைப்பற்றி மிக விபரமாக எழுதியிருப்பார்கள்.

H.M. சிறு வயதில் சைக்கிள் ஓடும்போது ஏற்பட்ட விபத்தில் தலையில் ஏற்பட்ட அடி காரணமாக அவர் பத்து-பதினைந்து வயதுகளிலிருந்து வலிப்பு நோயினால் (seizures) அவதிப் படத் தொடங்கினார். அவர் இளமைப் பருவத்தை அடை யும்போது இந்த வலிப்பு நோய் அவருக்கு அடிக்கடி தோன்று வதால் அவரால் ஒன்றுமே செய்யமுடியாத அளவுக்கு நிலைமை மோச மடைந்தது. இவருக்கு இந்த வலிப்பு நோய்







வருவதற்கான காரணம் மூளையின் ஒரு பகுதியில் இருக்கும் கலங்கள் குறிப்பாக temperal lobe எனும் பகுதியில் இருக்கும் மூளைக் கலங்கள் ஒன்றுடன் ஒன்று கட்டுப்பாடுகளின்றி கண்டபடி தொடர்புகொள்வதால் ஏற்படுகின்றது என்று அவரைப் பரிசோதிக்கும் மருத்துவர்கள் நம்பினார்கள். இறுதியாக H.M.-இன் மூளையின் ஒரு பகுதியினை அகற்றிவிடுவதன் மூலம் அவரது வலிப்பு நோயினை கட்டுப்படுத்த முடியுமென முடிவெடுத்து, இந்த வலிப்பு மூளையில் எங்கு ஆரம்பிக்கின்றதோ அந்த பகுதியில் இருந்து சில பகுதிகளை அகற்றியிருக்கின்றனர். இந்த அறுவை சிகிச்சையயை செய்த மருத்துவர் William Scoville-க்கு இது ஒரு புது அனுபவம். இவ்வாறான அறுவை சிகிச்சைகளை அவர் இதற்கு முன்னர் செய்ததில்லை. இந்த சிகிச்சையின் போது H.M.-இன் மூளையிலிருந்து அகற்றப்பட்ட பகுதிகளுடன் ஹிப்போகாம்பஸ் பகுதியும் அடங்கும்.

அறுவை சிகிச்சையின் பின்னர் அவரது வலிப்பு நோய் மிக குறைந்துவிட்டது. அந்த வகையில் அவருக்கு நடந்த அறுவை சிகிச்சை ஒரு வெற்றிகரமான சிகிச்சை என்றே கூறவேண்டும். ஆனால் இந்த இந்த சிகிச்சையின் பின்னர் அவரால் நீண்ட கால நினைவுகளைப் பேண முடியவில்லை. அறுவைச் சிகிச்சை நடப்பதற்கு முன்னர் நடந்த நிகழ்வுகளை நினைவில் வைத்திருந்த H.M. அறுவைச்சிகிச்சைக்கு பின்னர் அவரால் அது முடியவில்லை. H.M-க்கு தலையில் அறுவைச் சிகிச்சை நடந்தது 1958-ஆம் ஆண்டு. அவர் 2008-ஆம் ஆண்டு இறக்கும் வரை பல மனோதத்துவ நிபுணர்கள், நரம்பியல் வைத்தியர்கள், ஆய்வாளர்கள் என பலரும் அவரை பரிசோதித்து பார்த்ததில் முடிவாக அவருக்கு குறுகிய கால நினைவுகளை நீண்டகால நினைவுகளாக மூளையில் பதியும் வல்லமை இல்லையென்பது தெரியவந்தது.

ஹிப்போகாம்பஸ் மூளையின் நடுப்பகுதியில் மூளையின் இரண்டு பாகங்களிலும் இரண்டு பிரிவுகளாக அமைந்துள்ளது. இதன் தொழிற்பாடு, நேரம் - இடம் (space & time) போன்றவற்றை மூளையில் பதிவு செய்வது, மற்றது குறுகிய கால நினைவுகளை தேவைப்படும்போது மூளையின் மேற்பகுதியான cortex-இல் ஒருங்கிணைத்து பதிவுசெய்வது. ஹிப்போகாம்பஸ் குழந்தைகளின் மூளையில் வளர்ந்து முதிர்ச்சி அடைவதற்கு நான்கு, ஐந்து வருடங்கள் எடுக்கின்றன. இதனால்தான் எம்மால் மிக சிறுவயது அனுபவங்களை நினைவில் வைத்திருக்க முடிவதில்லை. இதேபோல வயோதிபகாலத்தில் ஹிப்போகாம்பஸ்-இன் அளவு சுருங்குகின்றது. இதனால் மறதியும் அதிகமாகின்றது. 'Why we Remember' என்ற புத்தகத்தை எழுதிய பேராசிரியர் Charan Ranganath ஹிப்போகாம்பஸ்-இனை ஒரு இசைக்குழுவின் நடத்துநருக்கு (conductor of orchestra) ஒப்பாக விபரிக்கின்றார். இசைக்குழு நடத்துனர் இல்லாதபோது இசைக்குழுவினால் எவ்வாறு ஒருமித்து இசைவழங்க முடியாத நிலைமை உருவாவது போல, ஹிப்போகாம்பஸ்-இல் ஏற்படும் சிதைவால் தவிக்கும் நோயாளிகளுக்கு நினைவுகளை மீட்க முடியாத நிலைமை உருவாகின்றது. இருந்தும் ஓர் இசைக்குழு திரும்பத்திரும்ப ஓர் இசையினை வாசித்து பழகிய பின்னர் இந்த இசைக்குழுவினை இயக்கும் நடத்துனர் இல்லாமலேயே இசை குழுவினர் பழகிய இசையினை வாசிக்க முடிவதுபோல H.M. மற்றும் ஹிப்போகாம்பஸ்-இன் பாதிப்பினால் மறதி நோய்க்கு உட்பட்டவர்கள் சில பழைய நினைவுகளை மீட்கக் கூடியவர்களாக இருக்கின்றனர் என Charan Ranganath மேலும் விபரிக்கின்றார்.

முன்னர் குறிப்பிட்ட நிகழ்வுகளின் நினைவாற்றலை (Episodic memory) கொஞ்சம் விவரமாகப் பார்ப்போம். இந்த வகையான நினைவுகளையே நாம் வழக்கமாக நினைவுகள் (Auto biographical) என்று கருதுவதால் அவற்றைப் பொதுவான நினைவு என்றே தொடர்ந்து எழுதுகின்றேன். ஒரு நிகழ்வு நடக்கும்போது இந்த நிகழ்வு தொடர்பாக எமது மனதில் தோன்றும் அனுபவங்கள் அதாவது உணர்ச்சிகள், காட்சிகள், கேட்ட ஒலிகள், தொட்டு உணர்ந்த உணர்வுகள் என யாவும் ஒன்றிணைந்து மனதில் பதிவதனை உளவியலாளர்கள் Phenominolgy of Memory அதாவது நினைவு எனும் தோற்ற நிகழ்வியல் என்பார்கள். நாம் எவ்வாறு எமது புலன்களில் இருந்து வரும் தகவல்களிலிருந்து மூளையினால் கட்டமைக்கப்படும் ஒரு தோற்ற நிகழ்வியலை யதார்த்தம் என்று கருத்துகின்றோம், அதாவது யதார்த்தம் எனும் தோற்ற நிகழ்வியல் (Phenominology of Reality). அதே போல நினைவுகளும் ஒரு தோற்ற நிகழ்வியல். நினைவுகள் கடந்த கால நிகழ்வுகளை மீண்டும் பழைய வீடியோவையோ அல்லது திரைப்படத்தையோ பார்ப்பதுபோல மனத்திரையில் விம்பமாகப் பார்ப்பதில்லை. மாறாக மனத்தில் மீண்டும் கட்டமைக்கப்படும் ஒரு நிகழ்வியல். ஒவ்வொரு தடவையும் பழைய சம்பவங்களை நாம் நினைக்கும்போது அவை மீண்டும் மீண்டும் கட்டமைக்கப்படுகின்றன. இதனால் எமது மன நிலைமைகளுக்கு ஏற்ப நினைவுகளின் உண்மைத்தன்மையும் வேறுபடுகின்றது. உதாரணமாக ஒரு நெருங்கிய நண்பருடன் நாம் வீதியில் நிற்கும்போது ஒரு விபத்து நடந்திருக்கின்றது. இந்த விபத்தை நாம் இருவரும் ஒரே நேரத்தில் பார்த்தோம் என்று வைத்துக்கொள்வோம். ஒரு பத்து வருடம் கழிந்த பின்னர் நாம் அந்த நண்பருடன் உரையாடும்போது விபத்து தொடர்பான எமது நினைவும் அவரது நினைவும் வேறு வேறாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் அந்த நண்பர் எமக்கு மிக நம்பிக்கையானவராக இருப்பாராயின், இந்த விபத்து தொடர்பான எமது நினைவுகூட எமக்குத் தெரியாமலேயே மெதுவாக மாறிவிடும். குற்றவியலில் நேரடி சாட்சியங்களை விசாரிக்கும் போலீசார், தமது அனுமானங்களின் அடிப்படையில் சாட்சியங்கள் பார்க்காத நிகழ்வுகளையும் அவர்கள் பார்த்ததென்று நினைக்க வைத்துவிடுவார்கள், இதன் நம்பிக்கையின் அடிப்படையில் அவர்களை நீதி மன்றத்தில் சாட்சியம் கூற வைத்த பல வழக்குகள் இருக்கின்றன. நினைவுகள் தொர்பாக எழுதப்பட்டிருக்கும் புத்தகங்கள், கட்டுரைகளில் அடிக்கடி குறிப்பிடப்படும் வழக்கு Jennifer Thompson-க்கும் Ronald Cotton-க்கும் இடைப்பட்டது.

Jennifer Thompson அமெரிக்காவின் வட கரோலினா (North Carolina) மாநிலத்தில் வசித்துவந்தார். அவருக்கு இருபத்தி

ரண்டு வயது நடக்கும்போது அந்த கொடூரம் நடைபெற்றது. அவர் வீட்டில் தனியே தொலைக்காட்சி பார்த்துக்கொண்டி ருக்கையில் அவரது வீட்டில் நுழைந்த காமுகன் ஒருவன் கத்தி முனையில் அவரைக் கற்பழித்துவிட்டான். Jennifer போலீசிடம் முறையிட்டார். போலீசார் அந்த காமுகனின் முகம் எவ்வாறு இருக்கும் என்பதனை விளக்கி கூறும்படி Jennifer-ரிடம் விசாரித்தனர். Jennifer-இன் விளக்கத்திற்கேற்ப ஒருவனின் முகத்தை போலீசார் வரைந்து, குற்றவாளியைத் தேடத் தொடங்கினார்கள். சீக்கிரமே அதே மாநிலத்தை சேர்ந்த Ronald Cotton என்பவரை கைது செய்தனர். Jennifer-ம் அவரை அடையாள அணிவகுப்பில் இனம் கண்டு கொண்டார். Cotton தான் இந்த கொடூர செயலை செய்ய வில்லை என்று பலமுறை விவாதித்தபோதும் அது பலனளிக் கவில்லை. நீதிமன்றம் Cotton-க்கு ஆயுள் தண்டனை விதித்து அவரை சிறையில் அடைத்தது. Cotton சிறையில் அடைக்கப்பட்டு சில வருடங்களின் பின்னர், அதே சிறையில் வேறு ஒரு கற்பழிப்பு குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட் டிருந்த குற்றவாளி Bobby Poole என்பவர் Jennifer Thompson-ஐயும் தானே கத்திமுனையில் கற்பழித்ததினை ஒப்புக் கொண்டார். இதனை தொடர்ந்து தனது ஆயுள் தண்டனை யினை நீக்கி தன்னை விடுதலை செய்யும்படி Cotton மேல் முறையீடு செய்தார். வழக்கு விசாரணைக்கு வந்தது. விசார ணையின் போது தனக்கு நடந்த கொடூர செயலின் சூத்திர தாரி Cottonதான் Bobby Poole அல்ல என Jennifer மிக உறுதியாக கூறினார். நீதி மன்றம் Cotton-க்கு இம்முறை முதல் முறை வழங்கப்பட்ட தீர்ப்பை இரண்டு மடங்காக்கி இரண்டு ஆயுள் தண்டனையாக தீர்ப்பு வழங்கியது. பதி னொரு வருடங்கள் கழிந்த பின்னர் மரபணு பரிசோதனைகள் மூலம் தடயங்களை ஆய்வு செய்தபோது Jennifer-க்கு நடந்த கொடூர செயலின் காரணகர்த்தா Bobby Poole என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகிற்று. Ronald Cotton இறுதியாக விடுதலை செய்யப்பட்டார்.

எவ்வாறு Jennifer Thompson, அவருக்கு நடந்த கொடூர செயலின் சூத்திரத்தாரியை மறந்திருக்க முடியும். இந்த நிகழ்வு நடக்கும்போது Jennifer மிகுந்த அதிர்ச்சி, பயம், கோபம், மற்றும் இந்த நிகழ்விலிருந்து தன்னை எவ்வாறு காப் பாற்றிக்கொள்ளலாம் என்று மன உளைச்சல்களுக்கு உட்பட் டிருந்திருப்பார். இதனால் இவரின் கவனம் வீட்டில் நுழைந்த வனின் முகத்தை அவதானிக்கத் தவறியிருக்கும், இதே வேளை இந்த வழக்கை விசாரிக்கும் போலீஸ்சார் அடையாள அணிவகுப்பின் போது இந்தக் குற்றத்தைச் செய்தது Cotton தான் என்று Jennifer-ரிடம் மறைமுகமாகச் சொல்ல ஆரம்பித் திருக்கின்றனர். இதுவே Jennifer-இன் உறுதியான நம்பிக் கைக்குக் காரணமாகிற்று. இந்த நிகழ்வு மனிதர்களுக்கு நடக்கும் முக்கிய நிகழ்வுகளில்கூட சில வேளைகளில் அவர்கள் முக்கி யமானவற்றை மறந்துவிடும் பலவீனமான நினைவாற்றலை விபரிக்கின்றது. இப்போது Jennifer Thompson-ம், Ronald Cotton-ம் நெருங்கிய நண்பர்கள். தவறான சாட்சியங்கள் மூலம் சிறைகளில் வாடும் கைதிகளை மீட்க முயலும் அமைப்பான Innocence Project-இல் அங்கத்தவர்களாகச் செயற்படுகின்றனர்.

குறிப்பு: இந்த ஒரு கதையினை வைத்து பாலியல் குற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் யாவரும் தவறாக குற்றம் சாட்ட பட்டவர்கள் என்று முடிவுகட்ட முடியாது. நூறுக்கு தொண் ணூற்று ஒன்பது சத விகிதமான சந்தர்ப்பங்களில், பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள், பாதிக்கப்பட்ட பெண்க ளினால் சரியாகவே அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

இந்தக் கட்டுரையின் முற்பகுதியில் நினைவுகளை பல உவ மான உவமேயங்களுக்கு ஒப்பிடுவது பற்றி விபரித்திருந் தேன். Memory lane என்ற புத்தகத்தை எழுதிய Ciara Greene அவர்கள் நினைவுகளை சிறுவர்கள் விளையாடும் பிளாஸ்டிக் 'Lego blocks'-க்கு இணையாக ஒப்பிடுகின்றார். அதாவது இந்த Lego blocks-ஐ பாவித்து ஒரு சிறிய கோபு ரத்தை அமைக்கின்றனர். இந்த கட்டிய கோபுரத்தை பிரித்து ஒவ்வொரு Lego block-க்குகளையும் பிரித்து வைக்கின் றோம். மீண்டும் முன்னர் போல கோபுரத்தைக் கட்டும்போது அந்தக் கோபுரத்தின் நிறங்கள் மாறியிருக்கும். அதன் உரு வம்கூட சிறிது மாற்றம் பெற்றிருக்கும். இந்தக் கோபுரத்தை மீண்டும் மீண்டும் கட்டும்போது கோபுரத்தின் உருவம் முத லில் கட்டியிருந்த உருவத்தினை விட முழுவதுமாக மாறியி ருக்கும். நாம் திரும்பத் திரும்ப நினைக்கும் எமது சுயசரிதை நினைவுகளும் அவ்வாறே. இதனால்தான் திரும்ப திரும்ப நினைக்கும் நினைவுகளை Copy of a copy of a copy of a copy... என்று பேராசிரியர் Ranganath விபரிக்கின்றார். நான் எனது புது சப்பாத்தை பிள்ளையார் கோவிலில் 20 வருடங்க ளுக்கு முன்னர் தொலைத்த கதையினை எனது நண்பருடன் பகிர்ந்துகொண்டிருந்தபோது எனது மனைவி குறிக்கிட்டு, உண்மையில் இது நடந்தது விஷ்ணு கோவிலில் பிள்ளை யார் கோவிலில் அல்ல என நினைவூட்டினார்.

நினைவுகளை நாம் அப்படியே புகைப்படம் பிடிப்பது போல மனத்தில் பதித்து வைப்பதில்லை. மாறாக ஒரு கோடுகளால் கீறப்பட்ட சுருக்கமான வரைபடம் (outline) போலவே பதியப் படுகின்றன. இதனை schema என நரம்பியல் நிபுணர்கள் அழைக்கின்றனர். இந்த schema-க்கள் நினைவுகளைப் பதி யவைப்பதிலும் திரும்ப நினைவூட்டுவதிலும் மிக முக்கிய பங் குவகிக்கின்றன. ஹிப்போகாம்பஸ் பகுதியிலிருக்கும் பல நியூரோன்கள் ஒரு சிக்கலான வலைப்பின்னலாக இந்த schema-களை கட்டியெழுப்புகின்றன. இவை பல வருடகால அனுபவங்களினால் உருவாக்கப்பட்டவை. உதாரணமாக கோவிலுக்கு போகும் போது நாம் சப்பாத்தை கழற்றி வைத்து, கால்கழுவி உள்ளே செல்வோம். எந்த கோவிலில் எங்கு சப்பாத்து வைத்தது என்பதனை நினைவில் வைக்கத் தேவையில்லை கோவிலுக்கு போகும்போது முதலில் செய் பவை ஓர் அனுபவங்கள். இந்த அனுபவங்கள் schema-வாக எமது மனத்தில் பதிந்திருக்கும். நினைவுகளை மீண்டும் நினைப்பதென்பது இந்த சுருக்கமாக வரையப்பட்ட வரைப டங்கலிருந்து அதாவது schema-விலிருந்து கட்டியெழுப்பப் படும் நினைவுக்கோட்டைகள். ஆனால் இவ்வாறு கட்டியெழுப் பப்படும் கோட்டைகளின் வடிவம் நாம் ஒவ்வொரு தடவையும் எமது மன நிலைமைகளுக்கேற்ப மாற்றமடைந்துகொண் டிருக்கின்றது. இருந்தாலும் நினைவுக்கோட்டை அழகானது, அற்புதமானது ஆனால் உண்மை நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் சில வேளைகளில் புதிரானதும் கூட.



kugan.s@thaiveedu.com

மிகச் சிறப்பாக நடைபெற்ற
6-ஆவது அனைத்துலகத் திருக்குறள் மாநாடு

இல. சுந்தரம்













ரொறன்ரோ தமிழ்ச் சங்கமும், தமிழ்நாட்டின் ஆசியவியல் நிறுவனமும் இணைந்து ஈகை அறக்கட்டளையின் கூட்டாண்மையுடனும் டொரோண்டோ பல்கலைக்கழகத்தின் ஆதரவுடனும் 6-ஆவது அனைத்துலகத் திருக்குறள் மாநாடு செப்டம்பர் 19, 20, 21 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களும் ரொறன்ரோ பல்கலைக்கழகம், ஸ்கார்பரோ வளாகத்தின் ஹைலாண்ட் அரங்கில் வெகுசிறப்பாக நடத்தி முடித்திருக்கிறது.

இந்த மூன்று நாள் மாநாட்டில் கட்டுரையாளருக்கான ஆய்வரங்குகள், இளையோர் போட்டிகள், சிறந்த பேச்சாளர்களின் சொற்பொழிவுகள், நூல் வெளியீடு, திருக்குறள் செயலி வெளியீடு, நடனம், 'குறளின் குரல்' இசை நிகழ்ச்சி, சிறுவர் நாடகம், இசைத்தமிழ் நிகழ்ச்சி, புத்தகக் கண்காட்சி, குறளங்காடி எனப் பல நிலைகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன.

இந்த மாநாட்டின் ஆய்வரங்கத்தில் மூன்று நாட்களும் 5 அரங்குகளில் 25 அமர்வுகளில் மொத்தம் 118 கட்டுரைகள் நேரடியாகவும் இணைய வழியாகவும் வழங்கப்பட்டுள்ளன.


தொடக்க விழா:

செப்டம்பர் 19, வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குத் திருவள்ளுவரின் உருவப்படத்துடன் விழா மேடை நோக்கிய அணி வகுப்பினைத் தொடர்ந்து, டாக்டர் நாகேந்திரன் பஞ்சாபிகேசன் குழுவின் மங்கல இசையுடன் 6-ஆவது அனைத்துலகத் திருக்குறள் மாநாடு இனிதே ஆரம்பித்தது.




















10.30 மணிக்கு மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் திரு. சிவன் இளங்கோ இந்த மாநாடு உருவான விதம் அதற்கான ஏற்பாடுகள், மாநாட்டின் பின்னணி, மாநாட்டில் என்னென்னவெல்லாம் நிகழ இருக்கின்றன போன்றவற்றைக் குறிப்பிட்டு மாநாட்டு அறிமுகவுரை வழங்கினார்.

மாநாட்டிற்கு வந்திருந்தோரை அறிமுகப்படுத்தி ரொறன்ரோ தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் இராமநாதன் இலம்போதரன் வரவேற்புரை வழங்கினார்.

ஆசியவியல் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் ஜி. ஜான் சாமுவேல் ஏற்கனவே நடந்து முடிந்த ஐந்து அனைத்துலகத் திருக்குறள் மாநாட்டினைப் பற்றியும் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆறாவது மாநாட்டின் கருப்பொருள் பற்றியும் உரையாற்றினார்.

வாழ்த்துரைகள்:

ரொறன்ரோ பல்கலைக்கழகம், ஸ்கார்பரோ வளாகத்தின் முதல்வர் பேரா. லிண்டா ஜான்சன், ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கைப் பேராசிரியர் சித்தார்த்தன் மௌனகுரு ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர்.

கனடா நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி ஜானைதா நாதன் அவர்களும் ஈகை அறக்கட்டளை தலைவர் முனைவர் வடிவேலு சாந்தகுமார் அவர்களும் கனடாவைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம், முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், பேரா. இளையதம்பி பாலசுந்தரம், முனைவர் பிரெண்டா பெக், திரு. இராஜன் பிலிப்ஸ், திரு. குமார் புனிதவேல், பேரா. சேரன் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர்.

இந்தியாவிலிருந்து மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் பேராசிரியர் பர்வீன் சுல்தானா, மருத்துவர் சொக்கலிங்கம், திரு. திருவள்ளுவன் சேதுராமன் ஆகியோரும், இலங்கையிலிருந்து டாக்டர் ஆறு. திருமுருகன் அவர்களும் பேரா. டென்னிசன் ஜெயசூர்யா (மலேசியா), திரு. கந்தையா இராஜமனோகரன் (இங்கிலாந்து), முனைவர் ராஜேந்திரன் கோவேண்டர் (தென்னாப்பிரிக்கா) வாழ்த்துரைகள் வழங்கினர்.

ஆய்வரங்க அறிமுகம்:

12 மணிக்கு இந்த மாநாட்டில் எத்தனை அரங்குகளாக முதன்மை அமர்வுகளிலும் (Plenary











Sessions) இணை அமர்வுகளிலும் (Parallel Sessions) இணைய வழியாகவும் நேரடியாகவும் எந் தெந்தப் பொருண்மையில் ஆய்வரங்கம் எவ்வாறு நடைபெறவுள்ளது என்பதைப் பேராசிரியர் இல. சுந்தரம் ஆய்வரங்க அறிமுகவுரையாக வழங்கினார். ஆங்கிலத்தில் திருமதி கண்மணி அலோஷியஸ் அறிமுகப்படுத்தினார்.

மாநாட்டு மலர் வெளியீடு:

பின்னர் மாநாட்டின் வாழ்த்துச் செய்திகள், முதன்மைக் கட்டுரைகள், 138 ஆய்வுச் சுருக்கங்கள் அடங்கிய மாநாட்டு மலர் வெளியீடு நடைபெற்றது. இதனைத் திரு. சிவபாலு தங்கராசா, முனைவர் உதயன் துரைராசா, திரு. வின் மகாலிங்கம் ஆகியோர் வெளியிட்டனர். மாநாட்டு மலரினைச் திரு. சோக்கலோ சண்முகம், திரு. வேலுப்பிள்ளை தங்கவேலு, திருமதி சிவனாதன் ஆகியோர் மலரினைப் பெற்றுக்கொண்டனர். திரு. ரமணன் சந்திரசேகர மூர்த்தி தொடக்கவிழாவினைத் தொகுத்து வழங் கினார்.

ஆய்வரங்கம்:

திருக்குறளின் பொருட்பாலை மையமாகக் கொண்டு நடைபெற்ற இந்த மாநாட்டின் ஆய்வரங்குகளில் நேரடியாக 57 பேரும் இணையவழியாக 61 பேரும் என மொத்தம் 118 ஆய்வாளர்கள் கட்டுரையை உரிய ஆய்வறிஞர்களின் அமர்வுத் தலைமையில் வழங்கினர்.


கனடாவிலிருந்து 47 கட்டுரைகளும் இந்தியாவிலி ருந்து 51 கட்டுரைகளும் இலங்கையிலிருந்து 10 கட் டுரைகளும் அமெரிக்கா, இங்கிலாந்து, மலேசியா, ஜேர்மனி, ரீயூனியன், மொரீசியஸ், ஹாங்காங், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து 11 கட்டுரை களும் வழங்கப்பட்டன.

ஆய்வுச் சுருக்கங்கள் மாநாட்டு மலராக வெளியிடப் பட்டது. இந்த ஆய்வரங்குகளில் கட்டுரையாளர்கள் கட்டுரை வழங்கும்போது அமர்வுத் தலைவராலும் பார்வையாளர்களாலும் கேட்கப்பட்ட வினாக்க ளுக்கும் கருத்துகளுக்கும் ஏற்பக் கட்டுரையாளரால் மேம்படுத்தப்பட்டுப் பெறப்படும். அதன் பின்னர் தெரிவுசெய்யப்படும் கட்டுரைகளின் முழுத் தொகுப்பு வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த 118 கட்டுரைகளும் பொருண்மையின் அடிப்ப டையில் ஒப்பாய்வு, அரசியல், அறிவியல், மேலாண்மை, வணிகம், வாழ்வியல் என 7 பிரிவுகளில் பகுக்கப்பட்























டுள்ளன. 'ஒப்பாய்வு' என்ற பொருண்மையின் துணைப்பிரிவுகளாகச் சமயம், இலக்கியம், தத்துவம் ஆகிய உட்பிரிவுகளில் மட்டும் மொத்தம் 51 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 'அரசியல்' என்ற பொருண்மையில் 30 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

முதன்மை அரங்கமான Highland Hall எனும் 'திருவள்ளுவர் அரங்கில்' பிற்பகல் 1.30 மணிமுதல் 3.30 வரை 3 நாட்களும் முதன்மை அமர்வுகள் (Plenary Sessions) மட்டுமே நடைபெற்றன. இதன் 4 அமர்வுகளில் 14 கட்டுரைகள் ஆய்வறிஞர்களால் வழங்கப்பட்டன.

அமர்வுகள் நேரடியாகவும், இணைய வழியாகவும் இடம்பெற்றன. இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக பங்குபற்ற முடியாத வர்களை கவனத்தில் கொண்டு சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் மட்டும் இணைய வழியான அமர்வுகள் இடம்பெற்றன.

இத்தகைய ஆய்வரங்குகள் தனிநாயக அடிகள் அரங்கு, க.பொ. இரத்தினம் அரங்கு, ஆறுமுக நாவலர் அரங்கு, ஜி.யு. போப் அரங்கு, என நான்கு அரங்குகளிலும் இணை அமர்வுக் கட்டுரைகள் வழங்கப்பட்டன.

மாநாட்டின் 21 அமர்வுகளையும் முனைவர் உதயன் துரைராசா, முனைவர் மைதிலி தயாநிதி, பேரா. இ. பாலசுந்தரம், பேரா. சேரன், பேரா. ஜோசப் சந்திர காந்தன், மருத்துவர் வ. இரகுராமன், முனைவர் டேனியல் ஜெயராஜ், பேரா. மா. சின்னத்தம்பி, திரு. தாமஸ் ஹிட்டோஷி புரூக்ஸ்மா, முனைவர் வாசுகி நகுலராஜா, திரு. சண்முகலிங்கம் கந்தையா, முனைவர் கௌசல்யா சுப்பிரமணியம், முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், முனைவர் டென்னிசன் ஜெயசூர்யா, முனைவர் முத்தையா, திரு. குமரகுரு கணபதிப்பிள்ளை, பேரா. இல. சுந்தரம், முனைவர் பார்வதி கந்தசாமி, முனைவர் சா. அருள்சாமி, மருத்துவர் இரா. இலம்போதரன், திரு. த. சிவபாலு ஆகியோர் அமர்வுத் தலைவர்களாக இருந்து அமர்வுகளை நெறிப்படுத்தினர்.

நூல் வெளியீடு:

மாநாட்டின் முதல் நாளான செப்ரெம்பர் 20, வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்குத் திருவள்ளுவர் அரங்கில் அமெரிக்காவைச் சேர்ந்த முனைவர் சுந்தர் பாலசுப்பிரமணியன் எழுதிய Breathe A Little























Better (One Pranayama a week) என்ற நூலினை பேச்சாளர் டாக்டர் ஆறு. திருமுருகன் வெளியிட்டுக் கருத்துரை வழங்கினார். நூலின் முதல் பிரதிகளைத் திரு. சிவம் வேலுப்பிள்ளை மற்றும் திரு. நாதன் வீர சிங்கம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். நூலாசிரியர் முனைவர் சுந்தர் பாலசுப்பிர மணியன் ஏற்புரை வழங்கி நூலைப் பற்றியும் தென்கரோலினா மருத் துவப் பல்கலைக்கழகத்தில் அமையவிருக்கும் திருமூலர் இருக்கை குறித்தும் பேசினார்.

திருக்குறள் செயலி (App) வெளியீடு:

மாநாட்டின் இரண்டாம் நாளான செப்டம்பர் 21, சனிக் கிழமை பிற்பகல் 3.15 மணிக்குத் திருவள்ளுவர் அரங்கில் மருத்துவர் செந்தில் சேரன் மற்றும் பேராசி ரியர் இல. சுந்தரம் ஆகியோர் இணைந்து உரு வாக்கிய இலக்கணக் குறிப்புகளுடன் கூடிய கட்டண மில்லாத் திருக்குறள் செயலி - Thirukkural App (www.kural.app) வெளியிடப்பட்டது. செயலியை ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கைப் பேராசிரியர் சித்தார்த்தன் மௌனகுரு வெளியிட்டு வாழ்த்துரையையும் இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை, கலாசாரப் பீடத்தின் பீடாதிபதி (Dean) கலாநிதி வ. குணபாலசிங்கம் கருத்துரை யையும் வழங்கினர். மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் திரு. சிவன் இளங்கோ, முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், முனைவர் ஜி. ஜான் சாமுவேல், திரு. சுப்பிர மணியம் இராசரத்தினம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மருத்துவர் செந்தில் சேரன் சூம் வழியாக இணைந்து செயலி உருவான விதம் பற்றி கூறினார். முனைவர் இல. சுந்தரம் கட்டணமில்லாச் செயலியை (App) நிறுவிப் பயன்படுத்தும் முறையைச் செயல்வி ளக்கத்தின் (Demo) மூலம் காட்டினார். முனைவர் வாசுகி நகுலராஜா இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.



கலை நிகழ்ச்சிகள்:

செப்டம்பர் 19, 2025, வெள்ளிக்கிழமை முதல் நாளன்று 6.30 மணியளவில் திருமதி நிரோதினி பரராஜ்சிங்கம் மாணவர்களின் 'குறளின் அசைவு' நடனம் நடைபெற்றது. தொடர்ந்து மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் பேராசிரியர் பர்வீன் சுல்தானா அவர்களின் சிறப்புப் பேச்சு நடைபெற்றது.

இரவு 7.30 மணி முதல் இசையமைப்பாளர் பரத்வாஜ் அவர்கள் தலைமையில் கனடா இசைக் கலைஞர்கள் மற்றும் இளம் பாடகர்களைக் கொண்டு 'குறளின் குரல்' எனும் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. ரொறன்ரோ தமிழ்ச் சங்கத்தின் சார்பாக இசையமைப்பாளர் பரத்வாஜ் அவர்களுக்குக் 'குறள் இசையோன்' என்ற பட்டம் திரு. விஜயகுமாரன் பஞ்சாச்சர குருக்கள் அவர்களால் வழங்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளைத் திருமதி ஜோதி ஜெயக்குமார் தொகுத்து வழங்கினார்.

செப்டம்பர் 20, 2025, சனிக்கிழமை இரண்டாம் நாளன்று 6.30 மணியளவில் Madras Arts & Cultural Association மாணவர்களின் 'திருக்குறளின் சொல்வன்மை' சிறுவர் நாடகமும் திருமதி விஜயகௌரி சசிகரன் மாணவர்களின் 'திருக்குறள் இசை நிகழ்ச்சி' நடைபெற்றன. தொடர்ந்து இலங்கையின் சிறந்த பேச்சாளர் டாக்டர் ஆறு. திருமுருகன் அவர்களின் சிறப்புப் பேச்சு நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து 120-க்கும் மேற்பட்ட கனேடிய இசைக் கலைஞர்கள் மற்றும் பாடகர்களைக் கொண்டு மிகப் பிரமாண்டமான 'இசைத்தமிழ்' எனும் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கனடா பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. ஹரி ஆனந்தசங்கரி அவர்களும் திரு. லோகன் கணபதி அவர்களும்

















செல்வி ஜுனைதா நாதன் அவர்களும் வாழ்த்துரைகள் வழங்கினர். இந்நிகழ்ச்சியைத் திரு. ஜஸ்ரின் போல் ஞானசூரியம் தொகுத்து வழங்கினார்.

இளையோர் போட்டிகள்:

மாநாட்டின் இரண்டாம் நாளான செப்டம்பர் 21, சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெற்றன. பேச்சுப் போட்டியினைத் திரு. இராச்குமார் குணரட்ணம் அவர்களும் பல்லூடகப் போட்டியினைத் திரு. வேணு சிவக்கொழுந்து அவர் களும் விநாடி-வினா போட்டியினைப் பேரா. இல. சுந்தரம் அவர்களும் நிகழ்த்தினர்.

பேச்சுப்போட்டி மூன்று பிரிவுகளில் நடைபெற்றன. 3-ஆம் வகுப்புக்கு உட்பட்டோருக்கான பேச்சுப் போட்டியில் செல்வன் சோழன் இராச்குமார், 4-6-ஆம் வகுப்புப் படிப்போர் பிரிவில் செல்வி தனிஹா மயூரன், 7-ஆம் வகுப்பு படிப்போர் பிரிவில் செல்வி அகரா ரமணன் ஆகியோர் முதல் பரிசினைப் பெற்றனர். பல்லூ டகப் போட்டியில் செல்வன் தனிஷ் சட்டநாதன் முதல் பரிசினையும், தமிழ் விநாடி-வினாப் போட்டியில் செல்வன் பவனோஜெயன் இளமேகன், ஆங்கில விநாடி-வினாப் போட்டியில் செல்வன் பிரஜித் ஜெயகரன் ஆகியோர் முதல் பரிசினையும் பெற்றனர்.

நிறைவு விழா:

செப்டம்பர் 21, 2025, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நிறைவு விழா நடைபெற்றது. இதனை நிறைவு விழாத் தலைவர் மருத்துவர் இராமநாதன் இலம்போ தரன், மாநாடு நடைபெற்ற முறை குறித்தும் மாநாட்டு குழுவின் பங்களிப்பு குறித்தும் அறிஞர்களின் கருத்து ரைகள் குறித்தும் தொகுத்து வழங்கினார்.

மாநாட்டின் சார்பாக நடைபெற்ற இளையோர் போட்டி களான பேச்சுப் போட்டி, பல்லூடகப் போட்டி, விநாடி-



வினா போட்டி ஆகியவற்றில் முதல் மூன்று இடங் களைப் பெற்று வெற்றிபெற்ற 18 மாணவர்களுக்கும் பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதனைத் திரு. இராச்குமார் குணரட்ணம், திரு. வேணு சிவக்கொழுந்து, பேராசிரியர் இல. சுந்தரம் ஆகியோர் தொகுத்து வழங் கினர்.

மூன்று பிரிவுகளில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்ற சிறுவர்களான சோழன் இராச் குமார், தனிஹா மயூரன், அகரா ரமணன் ஆகியோரின் பேச்சுகள் இடம்பெற்றன. இவர்களுக்குக் குறளங்கா டியின் சார்பில் திருக்குறள் புத்தகங்கள் பரிசாக வழங் கப்பட்டன.

ஈகை அறக்கட்டளை தலைவர் முனைவர் வடிவேலு சாந்தகுமார், திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம், முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், பேரா. இளையதம்பி பாலசுந்தரம், திரு. குமார் புனிதவேல், திரு. சிவபாலு தங்கராசா, பேரா. சேரன், பேரா. உதயன் துரைராசா, திரு. வின் மகாலிங்கம், கலாநிதி வ. குணபாலசிங்கம், திரு. திருவள்ளுவன் சேதுராமன், பேரா. பர்வீன் சுல்தானா, பேரா. இல. சுந்தரம் ஆகியோர் கருத்து ரைகள் வழங்கினர்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த முனைவர் ரஜேந்திரன் கோவேண்டர் நிறைவு விழா உரை நிகழ்த்தினார். பேரா. நாகராச ஐயர் சுப்பிரமணியம் மாநாட்டு தொகுப்புரையி னையும் அறிவிப்பு மற்றும் அடுத்தகட்ட நடவடிக் கையினை ஆசியவியல் நிறுவனத்தின் முனைவர் ஜி. ஜான் சாமுவேல் அவர்களும் வழங்கினர்.

மாநாட்டிற்காக உழைத்த அனைவருக்கும் பங்கு கொண்டோருக்கும் மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் திரு. சிவன் இளங்கோ நன்றியுரை கூற மாநாடு இனிதே நிறைவுற்றது.











6
International
Thirukkural Conference


Mr. Raju






Enhance Your Wellbeing






Thangappan







புறநிலை அறிவும் அனுபவவாதமும்

ஆங்கில மூலம்: **ஜயதேவ உயன்கொட**

தமிழில்: **கந்தையா சண்முகலிங்கம்**



ஐரோப்பாவின் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பிரான்சிஸ் பேக்கனின் (1561-1626) பங்களிப்பு மிக முக்கியமானது. அவர் விஞ்ஞான அறிவின் வலிதுடமை (Validity of Scientific knowledge) புறநிலைத்தன்மையில் (Objectivity) ஆதாரம் கொண்டுள்ளது என்ற கருத்தை வலியுறுத்தினார். அவர் உண்மை அறிவைப் 'புறநிலை உண்மை' (Objective Truth) என வரையறை செய்தார். உண்மை அறிவைப் பெறுவதற்கான முறையியலாக விஞ்ஞான முறை (Scientific Method) என்பதை அவர் அறிமுகம் செய்தார். அவர் வாழ்ந்த 17-ஆம் நூற்றாண்டில் 'புறநிலை' என்ற கருத்து இன்றைய நவீன அர்த்தத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆயினும் அவர் அபௌதீக (Metaphysical) அறிவை நிராகரித்தார். ஐரோப்பாவில் அக்காலத்தில் மெய்யியல் சிந்தனையில் அபௌதீகமும் அது போன்ற விஞ்ஞானமல்லாத அறிவு முறைகளும் (Non - Scientific forms of knowledge) ஆதிக்கம் செலுத்தின. பேக்கனின் 1620 ஆண்டு நூலான 'Novum Organum' உண்மை அறிவின் 'நிச்சயத்தன்மை' (Certainty) பற்றிய விசாரணையாக அமைந்தது. நிச்சயத்தன்மை உடைய அறிவு ஆழமுடையது, அது நம்மைத் தவறான திசையில் வழிநடத்துவதில்லை (Does not mislead us) என்றும் அவர் குறிப்பிட்டார். பேக்கனின் கருத்துப்படி விஞ்ஞானம் என்பது 'உண்மையைத் தேடுவதும் அதைக் கண்டு பிடிப்பதும் (Searching into and discovering Truth) ஆகும். நான்கு வகையான தவறான தருக்கமுறைக்கு மாறான புரிதல்கள் காரணமாக 'உண்மை' மறைக்கப்படுகிறது என பேக்கன் 'Novum Organum' நூலில் குறிப்பிட்டார். உலகின் உண்மை இயல்பைப் புரிந்து கொள்வதைத் தடுக்கும் இவற்றை வழிபாட்டுக்குரிய படிமங்கள் அல்லது திருவுருக்கள் (Idols) என அவர் குறிப்பிடுகிறார். இவற்றை குகை மனிதரின் திருவுருக்கள் (Idols of the Cave), இனக்குழுவின் திருவுருக்கள் (Idols of the Tribe), நாடக அரங்கத் திருவுருக்கள் (Idols of the Theatre), வணிகம்சார் திருவுருக்கள் (Idols of the Market Place) என பேக்கன் பெயரிட்டு அழைக்கிறார்.



ரெனே தேக்கார்த் (Rene Descartes)
பிரான்சிஸ் பேக்கன் (Francis Bacon)

நாம் தனிமைப்படுத்தப்பட்டனவும், குறிப்பிட்ட பிரத்தியேக சம்பவங்களோடு தொடர்புபட்டனவுமான விடயங்களில் எம் கவனத்தைக் குவிப்பதையும், அத்தனிமைப்படுத்தப்பட்ட (Isolated) விடயங்களை ஆதாரமாகக் கொண்ட பொது முடிவுகளைச் (Generalisations) செய்வதையும் 'குகை மனிதரின் திருவுரு' வழிபாடு என பேக்கன் குறிப்பிட்டார். 'Idols of the Cave' முதலாவது வகையான உண்மையை மறைக்கும் வழி என்பது பேக்கனின் கருத்தாகும். இரண்டாவது வகையான உண்மையின் மறைப்புகளாக எமது மரபு வழிப்பட்ட வழக்கங்கள் (Customary Habits) மரபுகள், எமது சொந்த ஆசாபாசங்கள் என்பன அமைகின்றன என்றார். இவ்விரண்டாம் வகையை அவர் 'இனக்குழு திருவுருக்கள்' எனப் பெயரிட்டார். மூன்றாவதாகக் கடந்த காலத்தில் இருந்து நாம் பெற்ற புனைவுகள் எமது சிந்தனையை ஆக்கிரமிப்பதற்கு நாம் அனுமதிக்கிறோம் எனவும் இவை 'நாடக அரங்கத் திருவுருக்கள்' (Idols of the Theatre) எனவும் அவர் குறிப்பிட்டார். அன்றாட வாழ்வில் நாம் உபயோகிக்கும் குழப்பமான மொழியையும் குழப்பமான உறவுகளையும் நான்காவதான 'வணிகம் சார் திருவுருக்கள்' (Idols of the market place) எனவும் பேக்கன் குறிப்பிட்டார்.

உண்மையை மறைக்கும் மேற்கண்ட வழிகளுக்கு மாறுபட்டதான உண்மையைக் கண்டறியும் புதிய பாதையை (A New Path to Truth) பேக்கன் முன்வைத்தார். அவரது இந்தப் புதிய பாதையை 'கவனமாகவும், திட்டவட்டமான முறையிலும் விடயங்களை அவதானித்தலும், அவற்றைத் தருக்க நெறிப்படி ஆராய்தலும்' (Careful and Systematic Observation and Logical Inquiry) என அவர் வரையறை செய்தார். அறிவைப் பெறுவதற்கான முதனிலை வழி இதுவே எனவும் பேக்கன் குறிப்பிட்டார். இவ்வழி முறைக்கு அவர் கொடுத்த பெயர் 'விஞ்ஞான முறை' (Scientific Method) என்பதாகும். விஞ்ஞான முறையும் தொகுத்தறி நியாயித்தலும் (Inductive Reasoning) 'விஞ்ஞான உண்மையைக் (Scientific Truth) கண்டறிவதற்கான வரை சட்டகத்தை (Frame Work) வழங்குவதாக பேக்கன் குறிப்பிட்டார்.

உடல் – உள்ளம் என்னும் இருமைவாதம்:

புறநிலை அறிவு என்னும் விடயப்பொருள் பற்றிய ஆய்வில் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்தவர் பிரஞ்சு தேசத்தின் மெய்யியலாளரான ரெனே தேக்கார்த் (Rene Descartes) 1596 - 1650 ஆவார்.

அறிவாராய்ச்சியியலை (Epistemology) மெய்யியலின் முதன்மையான ஆய்வுப் பொருளாக ஆக்கியவர் தேக்கார்த் என்று கூறப்படுவதுண்டு. மேற்கு நாட்டின் மெய்யியலுக்கு தேக்கார்த்தின் மிக முக்கிய பங்களிப்பாக இரு கருத்தாக்கங்கள் உள்ளன. அவையாவன.

- தேக்கார்த்தின் ஐயக்கொள்கை
- உடல் - உள்ளம் என்ற இரண்டும் வேறானவை என்னும் இருமைவாதம்

இது ஆங்கிலத்தில் 'Cartesian Dualism' எனப்படும். முதலாவதான தேக்கார்த்தின் ஐயக்கொள்கை எதனையும் ஏற்றுக்கொள்ள மறுக்கும் சந்தேகவாதத்தைக் குறிப்பிடுகிறது. இவ்வாறான சந்தேகம் என்னும் திட்டவட்டமான ஐயத்தில் (Systematic Doubt) அவரது மெய்யியல் முறை அமைந்திருந்தது. தெளிவான முறையில் ஒன்றை உண்மையெனத் தீர்மானிக்கும் வரை அதனை ஏற்கமுடியாது என்பதே தேக்கார்த்தின் வாதம். அவர் யாவற்றையும் சந்தேகம் கொண்டு நிராகரித்தவர், சந்தேகமில்லாமல் தெரியும் முதலாவது உண்மை 'நான் சிந்திக்கிறேன், ஆகையால் நான் இருக்கிறேன்' (I am thinking, Therefore I Exist) என்ற பிரபலமான அவரது கூற்று மூலம் வெளிப்படுத்தப்பட்டது. லத்தின் மொழியில் 'கொஜிற்றோ எர்கோ சும்' - 'Cogito Ergo Sum' என்ற வாக்கியத்தில் இக்கருத்து வெளிப்படுத்தப் பட்டது. தேக்கார்த்தின் இருமைவாதம் என்ற இரண்டாவது கருத்தாக்கம் உடல் - உள்ளம் என்ற இரண்டும் வெவ் வேறானவை; அவை தனித்துவமான பொருட்கள் என்ற வாதத்தை முன்வைத்தது. மனிதர்களின் உடல் வேறு, சிந்திக்கும் ஆற்றல் உடையதான உள்ளம் வேறு, இவையிரண்டும் ஒன்று சேர்ந்த சேர்க்கையே மனிதர் என்று தேக்கார்த் குறிப்பிட்டார். இவ்வாறு அவர் உடலையும் உள்ளத்தையும் பிரித்துக் கூறியதன் மூலம் பௌதீக - சட உலகம் வேறு எனவும், உள்ளம் என்ற உலகும், அதன் உணர்வு நிலையும் (The World of Mind and Consciousness) வேறு எனவும் எடுத்துக் காட்டினார்.

தேக்கார்த்தின் உடல் - உள்ளம் வெவ்வேறானவை என்னும் பிரிப்பு மெய்யியலில் பல விவாதங்களுக்கு அடிகோலியது. இது தொடர்பாகப் பல வினாக்கள் எழுப்பப்பட்டன. உள்ளம் உடலில் இருந்து வேறுபட்டதாயின் அது பௌதீக உலகுடன் எவ்வாறு தொடர்பாடல் (Communicate) செய்கிறது? அறிவுக்கு ஆதாரமான கருத்துக்கள் (ideas) பௌதீக உலகத்துடன் எவ்வித தொடர்பும் அற்றனவாக உணர்வு நிலையில் தோன்றுகின்றனவா? புறத்தே உள்ள உலகின் இருப்புக்கும் எமது அறிவுக்கும் இடையிலான தொடர்பு யாது என்பதை எம்மால் அறிதல் முடியுமா? கருத்துக்கள் அனுபவங்களின் வழித்தோற்றம் பெறுகின்றனவா? போன்ற இவ்வினாக்கள் முக்கியமானவை. மனிதரின் வாழ்நிலை, புறத்தேயுள்ள உலகு, மனித அறிவு ஆகிய விடயங்கள் குறித்த அடிப்படைகளோடு மேற்படி வினாக்கள் தொடர்புடையனவாக அமைகின்றன. இவ்வினாக்களுக்கு மெய்யியலாளர்கள் கூறும் விளக்கங்களை இரண்டு வகையாகப் பிரித்துக் கூறுதல் முடியும்.

- அறிவு உள்ளத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது, மனித மனம் / உள்ளம் அறிவின் தோற்ற மூலமாகும் என்பது முதலாவது வகை மரபாகும். இம்மரபு அகநிலைவாதம் (Subjectivism) எனப்படும்.

- அனுபவம் தான் அறிவின் அடிப்படை; அவதானிப்பு (Observation), பரிசோதனை (Experiment) என்பன மூலம் மனித உள்ளம் புற உலகம் பற்றிய அறிவைப் பெறுகிறது. இவ்வாறு கூறும் மரபு புறநிலைவாதம் (Objectivism) என அழைக்கப்படுகிறது.

தேக்கார்த்தின் உடல் - உள்ளம் என்ற இருமைவாதம், அறிவாராய்ச்சியியல் இருமைவாதத்திற்கு (Epistemological Dualism) காரணமாக அமைந்திருப்பதைக் காணலாம்.

அறிவாராய்ச்சியியல் இருமைவாதம்:

உள்ளம் - உடல் தொடர்புடைய அறிவாராய்ச்சியியல் இருமைவாதம் சமூக விஞ்ஞான முறையியலில் (Social Science Methodology) பெரும் விவாதங்களுக்குக் காரணமாக அமைந்தது. 19-ஆம் நூற்றாண்டில் அனுபவவாத அறிவாராய்ச்சியியல் தோற்றம் பெற்றது. அனுபவவாத அறிவாராய்ச்சியியல், மனித உள்ளத்திற்குப் புறத்தே, சுதந்திரமானதாகப் புறஉலகம் உள்ளது எனக் குறிப்பிட்டது. இப்புறநிலை உலகம் மனித உள்ளம் தோன்றுவதற்கு முன்னரே இருந்ததெனவும் கூறியது. அனுபவவாத அறிவாராய்ச்சியியலின் கருத்துப்படி, புறநிலை உலகம் புலன்களால் பெறப்படும் அனுபவம் (Sensory Experience) மூலம் மனித உள்ளத்தில் பதிவாகிறது என விளக்கம் தரப்பட்டது. ஆகையால் உள்ளத்திற்கு வெளியே சுதந்திரமாக புற உலகம் இருப்புக் கொண்டுள்ளது என்பது தெளிவாயிற்று. புறஉலகம் தொடர்பான விடயங்கள் உள்ளத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை, சுதந்திரமானவை என்பதே அனுபவவாத அறிவாராய்ச்சியியலின் முடிவாகும்.

தேக்கார்த்தின் இருமைவாதம் அறிவோர் (Knower), அறியப்படு பொருளாகிய புறஉலகம் (The Objective World) என்ற இரண்டும் வெவ்வேறானவை எனக் குறிப்பிட்டது.

'அறிவோர்', அறியப்படு பொருள் ஆகிய சொற்கள் முறையே 'ஆராய்ச்சியாளர்' (Researcher), புறஉலகம் என்பன வற்றைக் குறித்து நிற்பனவாகும். ஆய்வாளரும், அவரால் ஆராயப்படும் புறஉலகமும் வெவ்வோறனவை என்பதே தேக்கார்த்தின் இருமைவாத நிலைப்பாடு ஆகும். பிரான்சிஸ் பேக்கனால் தொடக்கி வைக்கப்பட்ட அனுபவவாத ஆராய்ச்சி மரபின் வளர்ச்சியில் மேற்குறித்த இருமைவாதம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றது. எமக்குப் புறத்தேயுள்ள புற உலகம் கறாராகவும், சரியாகவும் உள்ளம் என்ற கண்ணாடியில் பிரதிபலிக்கப்படுவதற்கு அனுபவவாத முறை (Empiricist Method) உதவுகிறது.

இந்த அனுபவவாத முறையில் இரண்டு கூறுகள் உள்ளடங்கியுள்ளன. முதலாவது, அவதானித்தலும், அவதானம் மூலம் தொகுக்கப்பட்ட தரவுகளைப் பரிசீலித்தலும் ஆகும். இரண்டாவது, தொகுத்தறி நியாயித்தல் (Inductive Reasoning) ஆகும். இவையிரண்டையும் மனிதம் பற்றியும் சமூக உலகம் பற்றியும் (Human and Social world) ஆய்வு செய்வதில் பிரயோகிக்கும் போது பல பிரச்சினைகள் எழுகின்றன. புறநிலை அறிவு என்பது முழுமையாகத் தரவுகளையும் நேர்வுகளையும் கொண்டு பெறப்படுவதா? அதில் அகநிலைக் கூறுகளுக்கு இடமில்லையா? புறநிலை அகநிலை என்பனவற்றிற்கிடையே கறாரான பிரிப்பு இருத்தல் அவசியமா? என்பன போன்ற வினாக்கள் எழுகின்றன. ஜயதேவ உயங்கொட இதனை ஆங்கிலத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'Both Empiricist and Inductive Reasoning led to controversies when they were adopted to the Human and Social world. Should objective knowledge be entirely factual, with no subjective element in it? Should there be strict separation between the objective and subjective? Questions such as these were central to the so-called Fact-Value controversy between empiricist and non-empiricist philosophers and methodologists.' (Page 385)

புறநிலை எதிர் அகநிலை விவாதம் 'Fact-Value controversy' எனவும் அழைக்கப்படும். அனுபவவாத மெய்யியலாளர்களுக்கும், அனுபவவாதத்தை ஏற்காத மெய்யியலாளர்களுக்கும் இடையே ஆய்வு முறையியல் சார்ந்து நடைபெற்ற இந்தச் சுவாரசியமான விவாதங்களை ஜயதேவ உயங்கொட அவர்கள் அடுத்து விபரிக்கின்றார்.

(தொடரும்...)



shanmugalingam@thaiveedu.com



கம்பனின் கருவூலம் திறந்து...

– மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

> ***பெண்ணாகப் பிறந்து தான்பட்ட துன்பம் இவ்வாறானதா என்று செய்வதறியாது புலம்புகின்ற துன்பநிலையைக் கம்பர்கூட உணர்ந்து பாடியிருப்பதைப்போல இச்செய்யுள் படிப்பவர்களையும் சூர்ப்பணகைக்காகக் கலங்கவைக்கிறது.***

சென்றமாதத் தாய்வீடு இதழில் கம்பராமாயணத்தில் ஆரணிய காண்டத்தின் ஐந்தாவது படலமாகிய சூர்ப்பண கைப் படலத்தின் மூன்றாவது பகுதியை எடுத்துவந்திருந் தேன். இராம இராவணப் போர் தொடங்குவதற்கு அடித்தளம் இட்டதாகக் கருதப்படும் நிகழ்ச்சியாக, இலக்குமணனால் சூர்ப்பணகையின் மூக்கும், காதும், முலைக்காம்புகளும் அரி யப்பட்டு அவள் அவமானப்படுத்தப்பட்டது வரையுள்ள செய் திகளைக் கம்பனின் கவிநயத்தோடு சேர்த்து அறிந்து கொண் டோம். சூர்ப்பணகையின் உறுப்புகள் சிதைக்கப்பட்ட பின்னே நடந்தவற்றை ஆரணிய காண்டத்தின் இறுதிப் பகுதியாகக் கம்பனின் கவிநயத்தோடு இவ்விதழில் எடுத்துவருகிறேன்.

இலக்குமணனால் உறுப்புகள் அறுக்கப்பட்டுக் கீழே விழுந்த சூர்ப்பணகை பலவாறு துயருறுவதைக் கம்பர் சில செய்யுள் களில் வருணிக்கின்றார். தன்னுடைய இயல்பான தோற்றத் தோடு குருதிமழையைப் பொழிகின்ற கருமேகத்தைப்போல நிலம் அதிரும்படி பேரிரைச்சலிட்டவாறு அவள் படுகின்ற துயரினைக் கூறும் செய்யுள்களில் ஒன்று:

உயரும் விண்ணிடைமண்ணிடைவிழும்,
கிடந்துஉழைக்கும்
அயரும் கைகுலைத்துஅலமரும், ஆருயிர் சோரும்
பெயரும்,பெண்பிறந்தேன், பட்டபிழையெனப் பிதற்றும்,
துயரும் அஞ்சி, முன்தொடர்ந்திலாத் தொல்குடிப்
பிறந்தாள்

கம்ப. ஆரணிய. 322

துயரும் அஞ்சி, முன் தொடர்ந்திலாத் தொல்குடிப் பிறந்தாள் - இதற்கு முன் துன்பம் என்கின்ற ஒன்றைக் கண்டே அறியாத தொல்குடியில் பிறந்தவளான சூர்ப்பணகை, உறுப்புகள் அறுக்கப்பட்டதால் ஏற்பட்ட வலியைத் தாங்கமாட்டாது, உய ரும் விண்ணிடை மண்ணிடைவிழும், கிடந்துஉழைக்கும் - வானத்தை நோக்கி எழுவதுபோல் எழுவாள், பின்னே நிலத்தில் விழுவாள். அங்கே விழுந்தபடியே கிடந்து மிகவும் வருந்துவாள், அயரும் கைகுலைத்து அலமரும், ஆருயிர் சோரும், பெயரும் - அயர்ந்து தளர்வாள், கைகளைப் பிசைந் துகொண்டு அங்குமிங்குமாகச் சுழல்வாள், உயிர் சோர்ந்து மூர்ச்சிப்பதைப்போல ஆகிவிடுவாள், பின்னர் எழுவாள், பெண் பிறந்தேன், பட்டபிழையெனப் பிதற்றும் - பெண்ணாகப் பிறந்த நான் இவ்வாறு பெருந்துயர் பட்டேனே என்று பிதற்றுவாள்.

இதுவரையில் துன்பம்கூடத் தொடர்வதற்கு அச்சப்பட்டிருந்த தொன்மையான குடிப்பிறந்தவளாகிய சூர்பணகை நிலை தளர்ந்து, விழுந்து, மூர்ச்சித்துப் பின் எழுந்து பெண்ணாகப் பிறந்து தான்பட்ட துன்பம் இவ்வாறானதா என்று செய்வத றியாது புலம்புகின்ற துன்பநிலையைக் கம்பர்கூட உணர்ந்து பாடியிருப்பதைப்போல இச்செய்யுள் படிப்பவர்களையும் சூர்ப்பணகைக்காகக் கலங்கவைக்கிறது.

தானடைந்த துன்பத்தினால் இவ்வாறு வருந்தியவள் தன் அண் ணன் இராவணனையும் தனது குலத்தாரையும் அழைத்துப் புலம்புவதை, 14 கொச்சகக் கலிப்பா வடிவத்திலான செய் யுள்களிலே கம்பர் பாடியிருக்கின்றார். அவற்றுள் பலவும் இராவணனுடைய வீரத்தைப் புகழ்ந்து தன்னைக் காப்பாற்ற வருமாறு அவனை அவள் அழைப்பதாகப் பாடப்பட்டிருக் கிறது. ஒவ்வொன்றும் மிகச் சிறப்பான சொல்நயம், பொருள் நயம், அணிநயம் மிக்கசெய்யுள்கள். அவற்றுள் மூன்று செய் யுள்களை இங்கே எடுத்துவருகிறேன்.

நிலையெடுத்துநெடுநிலத்துநீயிருக்கத் தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியுமிதுசிறிதன்றோதேவர்எதிர்
தலைஎடுத்துவிழியாமைச் சமைப்பதே, தழல்எடுத்தான்
மலையெடுத்ததனிமலையே இவைகாணவாராயோ?

கம்ப. ஆரணிய. 325

தழல் எடுத்தான் மலையெடுத்த தனிமலையே! - நெருப்பைக் கையிலே ஏந்திய சிவபிரானது கைலாய மலையையே உனது கைகளால் பெயர்த்து எடுத்த ஒப்பற்ற மலைபோன்றவனே!

நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்க - பெரிய இந்த நிலவுலகத்தில் நிலைகொண்ட வாழ்க்கையில் நீ இருக்கையில், தாபதர்கள் சிலையெடுத்துத் திரியுமிதுசிறிதன்றோ - மரவுரி தரித்துத் தவவேடம் கொண்டு, அச்சமின்றிக் கையில் வில்லை ஏந்திக்கொண்டு இவர்கள் இங்கு திரிவது உனது பெருமைக்கு இழுக்கல்லவா? தேவர் எதிர் தலைஎடுத்து விழியாமைச் சமைப்பதே - தேவர்கள் உன்னெதிரே தலையெடுக்காதபடி பார்த்துக்கொள்வது மாத்திரம்தான் உனது செயலா? இவை காணவாராயோ?- நான் பட்ட இச்சிறுமைகளைப் பார்க்க வர மாட்டாயா? என்று இராவணனை அழைத்துப் புலம்புகிறாள்.

'தேவர் எதிர் தலைஎடுத்துவிழியாமைச் சமைப்பதே' என்னும் சொற்றொடர் - 'தேவர்கள் தன்னெதிரே தலையெடுக்காதபடி பார்ப்பது மாத்திரம்தான் உனது செயலா?' என்று சூர்ப்பணகை கேட்பதாக ஒரு பொருளும், தேவர்களின் முன்னே தான் தலையெடுத்து அவர்களைப் பார்க்க முடியாதபடி எனது உறுப்புகள் சிதைக்கப்பட்டு அலங்கோலமாக ஆகி விட்டேனே' என்று அவள் வருந்துவதாக இன்னொரு பொருள் படுவதாகவும் சிலேடை அணியில் கம்பர் பாடியிருப்பது சிறப்பு.

காற்றினையும் புனலினையும் கனலினையும் கடுங் காலக்
கூற்றினையும் விண்ணினையும் கோளினையும் பணி கொண்டற்கு
ஆற்றினைநீஈண்டிருவர் மானுடவர்க் காற்றாது
மாற்றினையோஉன்வலத்தைச்சிவன்தடக்கைவாள் கொண்டாய்

கம்ப. ஆரணிய. 302

சிவன் தடக்கைவாள்கொண்டாய் - சிவபிரானது வலிய நீண்ட கைகளினால் கொடுக்கப்பட்ட வாளைப் பெற்றவனே!, காற்றினையும் புனலினையும் கனலினையும் கடுங்காலக் கூற்றினையும் விண்ணினையும் கோளினையும் பணிகொண்டற்கு ஆற்றினை நீ - காற்றையும், நெருப்பையும், நீரையும், காலத்தை வரையறை செய்கின்ற கூற்றுவனையும், விண்ணுலகத்தையும், கோள்களையும் உனக்குக் குற்றேவல் செய்யும் வண்ணம் அவற்றை அடிமைப்படுத்தியவன் நீ, ஈண்டிருவர் மானுடவர்க்கு ஆற்றாது மாற்றினையோ உன்வலத்தை - இந்த இரண்டு அற்ப மனிதர்களுக்கும் எதிராக ஒன்றும் செய்ய முடியாது உனது வலிமையை மாற்றிவிட்டாயா? என்று சூர்ப்பணகை புலம்புகிறாள்.

நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்கள் என்று சொல்லப்படுகின்ற ஐம்பெரும் ஆற்றல்களையும், கோள்களையும், கூற்றுவனையும் அடக்கி ஆளும் வல்லமை பெற்றவன் இராவணன் என்பதைச் சூர்ப்பணகை வாயிலாகக் கம்பர் நாட்டியிருக்கின்ற சிறப்பைக் காண்கின்றோம். சிவன் தடக்கைவாள் கொண்டாய் என்னும் தொடரிலே சிவனிடமிருந்து இராவணன் வாள் பெற்ற புராண வரலாறு பதியப்படுகிறது. இராவணன் கைலாய மலையைப் பெயர்த்து எடுத்தபோது, சிவபிரான் தனது பெருவிரலினால் அம்மலையை அழுத்த, அதனால் இராவணனின் கைவிரல்கள் நசுங்கிப் போய் அவன் ஆற்றமாட்டாது அலற, அவனது அமைச்சர்களின் அறிவுறுத்தலின்படி தனது வீணையில் சாமவேத கானத்தை இசைக்க, சிவபிரான் அருள்கூர்ந்து விரலைத் தளர்த்தி அவனை விடுவித்து, அவனுக்கு இராவணன் என்னும் பெயரையும் இட்டு, சந்திரகாசம் என்னும் சிறந்த வாளையும் தந்தருளினான் என்பது புராணச் செய்தி.

உருப்பொடியாமன்மதனைஒத்துளரேஆயினுமுன்
செருப்படியில் பொடிஒவ்வா மானுடரைச் சீறுதியோ
நெருப்படியிற் பொடிசிதற நிறைந்தமதத் திசையானை
மருப்பொடியப் பொருப்பிடியத் தோள்நிமிர்த்த வலியோனே!

கம்ப. ஆரணிய. 329

நெருப்பு அடியிற் பொடி சிதறநிறைந்த மதத் திசையானை-கால்களை வலியப் பதியவைத்து நடக்கும்போது அவற்றின் உக்கிரத்தில் நெருப்புப் பொறிசிந்தும் படிநடக்கும் மதம்பொருந்திய திசையானைகளின், மருப்பொடியப் பொருப்பிடியத் தோள் நிமிர்த்தவலியோனே! - மலைகள் ஒடிந்துவிடுவது போல தனது தோள்களைச் செலுத்தி அவற்றின் தந்தங்கள் ஒடிந்துபோகச் செய்தவலிமை உடையனே! உருப்பொடியா மன்மதனை ஒத்து உளரே ஆயினும் உன்செருப்படியில் பொடி ஒவ்வா மானுடரைச் சீறுதியோ - உருவம் நீறாகப் பெறாத மன்மதனைப் போன்று உள்ளவர்களே ஆனாலும் உனது செருப்பின் அடியிலுள்ள தூசுக்கும் ஒப்பாகமாட்டாத இந்த மிகச் சிறிய மனிதர்மீது சினம்கொள்ளமாட்டாயா? என்று சூர்ப்பணகை இராவணனைக் கூவி அழைத்து புலம்புகிறாள்.





சூர்பணகை துன்பத்தால் வருந்திப் புலம்புகின்ற வேளையிலும் அவளது வாயிலாக இராவணனின் சிறப் புகளை இப்படியும் வருணிக்க முடியுமா என்று சொல்லும் அளவுக்கு மிகச்சிறந்த சொல்லோவியமாக இவைபோன்ற பல செய்யுள்களில் வடித்துவைத்திருக்கின்ற கம்பரின் கவித் திறனை என்னென்று விவரிப்பது.

சூர்ப்பணகை இவ்வாறுபுலம்பித் தவிக்கின்ற வேளையில் தனது காலைக் கடன்களை முடித்துக்கொண்டு இராமன் அங் குவந்து சேர்கிறான். அப்போது அவள் தனது வயிற்றில் அடித்துக்கொண்டு கண்ணீர் சொரிய, குருதிவழிந்து நிலம் சேறாகிப்போக, 'உனக்குத் தீங்கு செய்தவன் பிழையாளர் இவ்வாறு அவமானப்படலாம். ஆனால் உன்மீது அன்பு வைத்த நான் இவ்வாறு இழிவுபடுதல் தகுதியா' என்று அவ னிடம் கேட்கிறாள்.

இவள் ஏதேனும் தீங்கிழைத்திருப்பாள். அதற்காகவே இலக்கு மணன் இவ்வாறு தண்டித்திருப்பான் என்று இராமன் உணர்ந் தவனாக, அவள் முன்னர் வந்த உருவத்தில் இல்லாமல் இயல்பான உருவத்தில் இருந்நதால் அவளை யார் என்று அறியாமல், 'நீ யார்? எதற்கு இங்கு வந்தாய்?' என்று வினவு கின்றான். 'நான் நேற்று உன்னிடம் வந்தவள் என்பதை அறிய மாட்டாயா?' என்கிறாள் அவள். இராமன் இலக்குவனை நோக்கி இவள் என்ன பிழை செய்தாள் என்று கேட்க, அவன் நடந்தவற்றைக் கூறுகிறான். தன்னை அவனுக்குரிய மனைவி யாகக் கருதிய அவள் சீதையைத் தனக்குச் சக்களத்தியாக நினைத்து அவள் மீதுபகைமைகொண்டு அவளைத் துரத்தி விட அவளைத் தொடர்ந்து சென்றதாகச் சூர்பணகை இரா மனிடம் சொல்லுகிறாள். அதனைக் கேட்ட இராமன் அவ ளைக் கடிந்து, 'இந்தக்காட்டைவிட்டு ஓடிப்போய்விடு' என்று கூற, அவள் மேலும் பலவாறு கூறித் தன்னை மணந்துகொள் ளும்படி இராமனை வேண்டுகிறாள். இதனை 11 செய்யுள் களில் கம்பர் வடித்துள்ளார். அவற்றுள் இரண்டு அழகிய செய்யுள்களை இங்கு தருகிறேன்.

ஆக்கரிய மூக்குஉங்கைஅரியுண்டாள் என்றாரை
நாக்கரியும் தயமுகனார் நாகரிகர் அல்லாமை
மூக்கரிந்து நுங்குலத்தை முதலரிந்தீர் இனியுமக்குப்
போக்கரிதிவ் வழகையெலாம் புல்லிடையில் உகுத்தீரே!

கம்ப. ஆரணிய. 348

உங்கை ஆக்கரிய மூக்கு அரியுண்டாள் என்றாரை - உமது தங்கை மீளவும் உண்டாக்கிக் கொள்வதற்கு அரியதாக, மூக்கு அரியுண்டாள் என்ற செய்தியை யாரேனும் சொன்னால் சொன்னவருடைய, நாக்கரியும் தயமுகனார் நாகரிகர் அல் லாமை - நாக்கையே அறுத்துவிடக் கூடியவர் எனது அண் ணன் இராவணன். மூக்கரிந்து நுங்குலத்தை முதல் அரிந்தீர் - என்னுடைய மூக்கை அறுத்ததனால் உம்முடைய குலத்தை வேரோடும் அறுத்திட்டீர். இனி உமக்குப் போக்கரிது - இனி உங்களுக்கு உயிர் பிழைத்துப் போகும் வாய்ப்பு இல்லை. இவ்வழகையெலாம் புல்லிடையில் உகுத்தீரே - உங்களு டைய இந்த அழகு முழுவதையும் புல்லிடையே சொரிந்துவிட் டீர்களே! என்று அவள் அவர்களுக்கு அச்சம் ஊட்டுகிறாள்.

நான் உங்களால் மூக்கறுபட்டேன் என்ற உண்மையான செய் தியை யாரேனும் என் அண்ணன் இராவணனிடம் போய்ச் சொன்னால் இவ்வாறான செயலை யாரும் செய்யத் துணிய மாட்டார்கள் என்பதால் இச்செய்தி உண்மையாக இருக்கமுடி யாதுஎன்று பெருஞ் சினம்கொண்டு அச்செய்தியைச் சொன்ன வருடைய நாக்கையே அறுத்துவிடுவார். உண்மையில் மூக்க றுபட்டசெய்தியை அறிந்தால் அவர் என்னிடத்து வைத்துள்ள மிக்க அன்பினால் உடனே வந்து உங்களையும், உங்கள் குலத்தவரையும் வேரோடு அறுத்து அழித்துவிடுவார். நீங்கள் அழியும் வழியை நீங்களே தேடிக்கொண்டீர்கள். அரிதாகக்

கிடைத்த அமுதத்தைப் புல்லிலே செரிந்ததைப்போல உங்களுடைய அழகை வீணே இழந்துவிட்டீர்களே என்று நகையாடியவள்,

வான்காப்போர் மண்காப்போர் மாநகர் வாழுலகந்
தான்காப்போர் இனித்தங்கள் தலைகாத்துநின்றுங்கள்
ஊன்காக்கஉரியார்யார் என்னையுயிர் நீர்காக்கின்
யான்காப்பேன் அல்லாலவ் விராவணரார் உளரென்றால்

கம்ப. ஆரணிய. 350

என்னை உயிர் நீர்காக்கின் யான் காப்பேன் அல்லால் அவ்விராவணரார் உளரென்றால் - என்னை மணம் செய்து என்னுயிரை நீர் அழியாது பாதுகாப்பீரானால் நான் உங்களை இராவணனிடமிருந்து உயிர்காத்திடுவேன். அவ்வாறு இல்லாவிட்டால் உங்களை அழிக்க என் அண்ணன் இராவணனார் இருக்கும்போது, வான்காப்போர் மண்காப்போர் மாநகர் வாழுலகந் தான்காப்போர் இனித்தங்கள் தலைகாத்துநின்று - மேலுலகத்தைக் காப்பவர்கள், நிலவுலகத்தைக் காக்கின்றவர்கள், பாதாள உலகத்தைப் பாதுகாக்கின்றவர்கள் எல்லோருமே தங்களது தலையைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டி இருக்கும்போது, உங்கள் ஊன்காக்க உரியார்யார் - உங்களை அழியாமல் பாதுகாத்துக்கொள்வதற்கு யார் இருக்கின்றார்கள் ? எவருமில்லை என்பதாம்.

மூவுலகத்திலுள்ளவர்களும் இராவணனுக்கு அஞ்சி ஒடுங்கி வாழ்பவரேயாதலால் அவன் சினம் கொண்டால் அவர்கள் தம்தம் தலையைக் காத்துக்கொள்வதே மிக அரிது. உங்களைப் பாதுகாக்க எவருமில்லை. ஆதலால் என்னை மணந்துகொண்டு மகிழ்வித்துக் காப்பீரானால் இராவணன் அழித்திடாதபடி நான் உங்களைப் பாதுகாப்பேன் என்கிறாள் சூர்ப்பணகை. தன்னை மணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்திக் கொண்டிருந்த சூர்பணகையைப் பார்த்து, 'நீ உன் எண்ணத்தை ஒழித்து உடனே அப்பாற் செல்லாவிட்டால் உன்னைக் கொன்று ஒழித்துவிடுவேன்' என்று இராமன் அச்சுறுத்துகிறான். 'நாங்கள் பூலோகம் முழுவதையும் ஓராளுகையில் அரசாண்ட தயரத மாமன்னனின் மைந்தர்கள். நாங்கள் புகுந்த இந்தக் காட்டிலே முனிவர்கள் பலரும் வேண்டிக் கொண்டதால் அரக்கர் குலத்தை அழித்தபின்பே எமது நகர்க்கு மீள்வதாக சபதம் எடுத்துள்ளோம். எனவே எமதுமுன்னே நில்லாது ஓடிப்பிழைத்துப்போ!' என்று அவளை விரட்டுகிறான்.

அதற்கு அவள் பாம்பின்கால் பாம்பறியும் என்ற முதுமொழியின்படி அரக்கரது சூழ்ச்சிகளை அரக்கியாகிய நானே நன்கு அறிவேன். ஆதலால் அரக்கரை அழிக்கச் சங்கற்பம் எடுத்துள்ள உமக்கு நானே நல்ல துணையாவேன். என்னை மணந்து கொள்ளவேண்டும் என்று மேலும் அவள் வற்புறுத்த, 'இவளை இப்பொழுதே கொன்றுவிடுகிறேன். இல்லாவிட்டால் இவள் எம்மை மிகவும் அலைப்பாள், ஆணையிடுங்கள்' என்று இலக்குமணன் இராமனைக் கேட்க, 'நீ கூறுவது நன்று. இங்கிருந்து இவள் நீங்க மறுத்தால் அவளைக் கொல்க' என்கிறான் இராமன். அப்போது, இவன் ஒருபோதும் இரங்கமாட்டான். இங்கிருந்தால் உயிரிழக்க நேரும் என்பதை உணர்ந்த சூர்ப்பணகை இவ்வாறு கூறுவாள்.

ஏற்றநெடுங் கொடிமூக்கும் இருகாதும்
முலையிரண்டும் இழந்துவாழ
ஆற்றுவனேவஞ்சனையால் உமையுள்ள
பரிசறிவால் அமைந்ததன்றோ
காற்றினிலும் கனலினிலும் கடியானைக்
கொடியானைக் கரனைஉங்கள்
கூற்றுவனை இப்பொழுதேகொணர்கின்றேன்
என்றுசலம் கொண்டுபோனாள்

கம்ப. ஆரணிய. 367

ஏற்ற நெடுங் கொடிமூக்கும் இருகாதும் முலையிரண்டும் இழந்துவாழ ஆற்றுவனே - அழகாய் அமைந்த நீண்டகொடி போன்ற மூக்கையும், இரண்டு காதுகளையும், இரண்டு முலைகளையும் உங்களால் இழந்து போனபின்பும், உங்களுடன் கூடி வாழ்ந்திருக்கப் பொறுப்பேனா ? வஞ்சனையால் உமையுள்ள பரிசறிவால் அமைந்ததன்றோ - நான் இங்கே உங்களிடம் கூறியது முழுவதும் உங்களது இயல்பை உள்ளபடியே அறிந்துகொள்வதற்கான சூழ்ச்சியினாலன்றி வேறில்லை. காற்றினிலும் கனலினிலும் கடியானைக் கொடியானைக் கரனை உங்கள் கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன் என்று சலம் கொண்டுபோனாள் - காற்றைவிட விரைவானவனும், நெருப்பிலும் பார்க்கக் கொடுமையானவனும், உங்களுக்குக் கூற்றுவனாகவும் அமைந்துள்ள கரனை இப்பொழுதே அழைத்துக்கொண்டு வருகின்றேன் என்றுகூறித் தணியாத வைராக்கியத்துடன் சூர்ப்பணகை அங்கிருந்து செல்கிறாள்.

கம்பரின் கவித்திறனுக்கு முத்தாய்ப்பாய் மிகச்சிறந்த சுவை மிகுந்த செய்யுள்களோடு உள்ளத்தை நெகிழவைக்கும் வகையில் படைக்கப்பட்டிருந்த சூர்ப்பணகைப்படலம் நிறைவு பெறுகிறது. சூர்ப்பணகை அழைத்துவரும் கரன் இராம இலக்குமணர்களுக்குக் கூற்றுவனாக அமைவானா என்பதைக் கம்பனின் கவிநயத்தோடு சுவைத்து அறிய அடுத்த இதழ் வரை பொறுத்திருப்போம்.

(வளரும்...)

shanmugarajah@thaiveedu.com

தமிழ்வலை - 120


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



தமிழ்வலை-120 வினா

இடமிருந்து வலம்

1 ஒருவகை மரம்
2 சாட்சாத்
4 அன்னம்
5 முடி ஒப்பனை நிலையம்
8 குடியதிபதி அனுரா பிறந்த ஊர்
9 கொடு
10 ஒன்றும் செய்யாமல்
11 அனுபவம்
12 சந்தர்ப்பவாதி
15 கடற்கலம் தரிப்பிடம்


மேலிருந்து கீழ்

1 இடச்சுக்காரர்
2 நதி
3 சாளரம்
4 குருதிக்குறைபாடு
6 சுவீகரி
7 முகமது நபியின் அன்புமகள்
9 உயர்திணைக்கு எதிர்ச்சொல்
10 தாமதி
13 கப்பம்
14 எமது

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: **416 849 0594**

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தமிழ்வலை-119-க்கான விடைகள்



தமிழ்வலை-119 பெறுபேறுகள்

முன்னணிப் போட்டியாளர்

உமா கதிர், ஏஜக்ஸ்.
சு. ஜெயலக்சுமி, மானிப்பாய்.
ஹம்சத்வனி அரவிந்தன், இங்கிலாந்து
மேரி கெலன் தேவதாஸ்,நோத்யோர்க்.

பரிசுபெறும் போட்டியாளர்

இராசாத்தி தேவதாஸ்,
ரொறன்ரோ.

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிவுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



முலையறுகாதை!

பெண் துயரப் பெருங்கதை - 8



தமிழிற்கு சாதியில்லை. மதம் இல்லை, மாற்றாரைத் தின்று முடிக்கின்ற வன்மம் இல்லை.

சாதி என்ற சொல்லே தமிழுக்கு உரியதில்லை, பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் சாதிப் பிரிவுகள் பழந்தமிழகத்தில் இல்லை. வேண்டாத சாதியெனும் இருட்டு வெளுப்பதற்குத் தூண்டாமணி விளக்காய் துலங்க வேண்டிய பெண்களின் மார்பை அறுத்துச் சிதைக்கும் கொடூரம் கேரளத்தில் தலை விரித்தாடியது போல பழந்தமிழகத்தில் என்றும் இருந்ததில்லை...

‘யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே’

என்தாய் தந்தை யாரென்று உனக்கோ, உன் தாய் தந்தை யாரென எனக்கோ தெரியாமல் காதலில் விழுந்தோம் என்கிற குறுந்தொகை காட்டும் சமூகப் பண்பே தமிழினுடையது.

செம்மண் நிலத்தில் பெய்கிற மழையின் நீர், மண் நிறத்தைத் தன்னிறமாக ஏற்றுச் செந்நிறமாகிப் பிரிக்க முடியாதபடி கலந்து ஒன்றிவிடுவது போன்றிருந்த நல்லார் நெஞ்சங்களில் நஞ்சை விதைத்துச் சாதி பிரித்தது பார்ப்பனீயம். அன்பு என்ற உணர்வில் சங்கமித்து நின்ற தமிழர் பெண்ணை அடாவடியாக வீடுகளில் அடைத்துப் பூட்டியதும் பார்ப்பனீயம் தான்.

அட... வெறும்
தலை மயிரில் பிறந்தவன்...
தானே கடவுளெனும் போது
மனுசருக்குப் பிறந்தவன் நீ
ஏண்டா மௌனமாயிருக்கின்றாய் ?

இப்படித்தான் அங்கு நம்பூதிரிகளின் அடக்குமுறையினில் தவிக்கும் ஈழவர் சாதிக்காரர் உட்பட அனைத்துச் சாதியினரும் சொல்ல எண்ணிய போதும் வெளியே அதைச் சொல்ல முடியாது. கொச்சிக் கடற்கரையில் நின்று சாதி பிரித்த பார்ப்பனீயத்திற்கெதிராக அழுது கண்ணீர் வடித்த மக்களின் கண்ணீரும், வெப்பிசாரப் பெரு மூச்சும் அங்கு சுனாமிப் பேரலையாய் சுழன்றாடியது.

மா. சித்திவினாயகம்

வாழ்வில் தோற்று அல்லாடிய மக்கள் தோணியேறி ஈழ முட்பட பல்வேறு நாடுகளுக்குப் பயணப்பட்டார்கள்.

பரசுராமன் தானே கடலினுள் இருந்து தோண்டியெடுத்து மலையாளப் பார்ப்பனர்களுக்கெனக் கேரளத்தைக் கொடுத்தாரென்கிற, காலங்காலமான கடவுள் தேசமென்கிற பார்ப்பனப் பொய்க் கட்டுக் கதைகளில் அவர்களுக்குத் தீரா வெறுப்பு. பாணினியின் அஷ்டாத்தியாயெனும் சமஸ்கிருத இலக்கண மொழியே எல்லாவற்றிற்கும் முதன்மை என்பவர்கள் அவர்கள்.

குடுமி வைத்த நம்பூதிரிகளின் கொடுமையிலிருந்து தப்ப அவர்களுக்குக் கடல் கடக்கும் வழியொன்றே தீர்வு. இந்நிலையில்தான் கொச்சித் துறைமுகத்தில் படை படையாக வந்திறங்கிய பரதேசியூதப்பெருமக்களோடு சேர்ந்து உயிர்காத்தனர் சிலர். நாடு பிடிக்கவந்த வெள்ளை

யரோடு சேர்ந்தார்கள் வேறு பலர்... கத்தோலிக்கச் செல்வாக் கிற்குட்பட்ட அனைத்து நாடுகளிலும் இருந்து யூதர்கள் அடித்து விரட்டப்பட்ட காலமது. யூத மானிடர் என்பதால் அவமானமும், துன்பமும் துயரமும், படுகொலையும் சுமந்து உயிர் தப்பினால் போதுமென ஓடிவந்தவர்கள் அவர்கள்.

ஆதியில் அனைத்தும் தமிழாயிருந்த சேரநாடெனும் கேரளத்தில் பொ.ஆ.பி. 16-ஆம் நூற்றாண்டளவில்தான் துஞ்சத்து எழுத்தச்சன் என்பவர் மலையாள மொழியை மணிப்பிரவாளம் மூலம் உண்டாக்கினார். 1860-இல் தான் அதற்கென ஒரு மலையாள இலக்கணம் எழுந்தது. அதற்கு முன் மலையாள இலக்கியம் எதுவுமே கிடையாது. சிலப்பதி காரம் பிறந்த அந்தச் சேர தேசத்தில் தமிழையும் சமஸ்கிரு தத்தையும் கலந்து பார்ப்பனீயர் மலையாளம் பேசவைத்ததைப் போலவே, தமிழும் எபிரேயமும் கலந்த யூத மலையாளம் எனும் புது மொழியை அங்கு குடியேறிய யூதர்கள் உருவாக்கினர்.

ஒரு கடவுட் கொள்கையுடைய ஆபிரகாமிய மதங்களுள் முக்கியமான தோரா எனும் பழங்கோட்பாட்டை நம்பிப் பிறந்தது யூத மதம். இஸ்ரேல் மக்களுக்காகக் கடவுள் ஏற்படுத்திய உடன்படிக்கையைக் கொண்டிருந்த கடவுளின் யூதர்கள், இந்தியாவிற்கு எதற்கு வந்து பரதேசியூதர்கள் ஆனார்கள் என்பது இன்று நாம் இஸ்ரேல் கடவுளைக் கேட்க வேண்டிய கேள்வி.

கேரளத்தின் பண்டைத் துறைமுகமான கொச்சின் எனும் இந்தத் துறைமுகம்தான் அன்னிய அடிவருடிகளை நாட்டிற்குள் அலையலையாக உள் நுழைய வைத்த பெருஞ் சாபம். ஆனால் அன்னியர்களோ இதனை அரபுக்கடலின் இராணியென போற்றி மகிழ்ந்தார்கள். முதலில் போர்த்துக்கேயக் கடலோடி வாஸ்கொடகாமா வந்திறங்கி மல்லி, சீரகம், மிளகு என வளமான நாட்டின் சத்துமிக்க வளமனைத்தையும் தாம் கவர்ந்துகொண்டு காலை எழுந்தவுடன் தரித்திரமான தேயிலையும், கோப்பியையும், பாணையும் எம்மை நோயாளி யாக்குவதற்காகத் தந்து காள்கோலிட்ட மூலவிடம் கேரளம் தான். வந்தேறிய வாஸ்கோடகாமா மரணித்துச் சமாதியாகிய இடமும் இதே கொச்சின் தான்.

தென்னஞ் சோலை நிறைந்து தெங்கு நார்த்தொழிலுக்குப் புகழ் பெற்ற அழகு நகர் ஆலப்புழாவிலிருந்து 50 கிலோ மீற்றர் தூரத்தே இருந்தது கொச்சின் துறைமுகம். இதற்கான பாதைகள் பலவும் நீர்வழியினால் இணைக்கப்பட்ட அழகு தேசம். வெள்ளையர்கள் மிகவும் விரும்புகிற ஆலப்புழா அழகான படகு வீடுகளுக்கும், உப்பங்கழிப் பயணங்களுக்கும் மிகவும் பிரசித்தி பெற்றது. ஆலப்புழாவின் ஒரு படகு வீட்டில் இரவு முழுவதும் தங்கி மகிழ்வாக இருந்த நம்பூதிரியும், கிளாராவும் கொச்சிக் கடற்கரையில் வாயோடு வாய் உரசிக் கொண்டிருந்தார்கள். அங்கு தோல்பாவைக் கூத்து நடைபெற ஏற்பாடாகியிருந்தது. தோல்பாவைக்கூத்து என்பது உயிரற்ற பாவைகளை வைத்து உயிருள்ள பாத்திரங்களைப் போல் இயக்கி நிகழ்த்தப்படும் ஒரு பண்டைக் கூத்துக் கலை. கேரளக் கதகளியின் பாதிப்பு தோல்பாவைக் கூத்தில் நிறையவே உண்டு. இதைப் பாவைக் கதகளி என்பவர்கள் உண்டு.

பதப்படுத்தப்பட்ட மிருகத்தோலில் வரையப்பட்ட வண்ணப் படங்களை விளக்கின் ஒளி மூலம் திரைச்சீலையில் அதன் நிழல் தெரியுமாறு ஆட்டி அந்த நிகழ்த்து கலையை நிகழ்த் துவார்கள். ஆனால் மிருகங்களைக் கொல்லாதே என்று தாவர பட்சணியாக வேடமிடும் நம்பூதிரிகள் உட்காருவதும், படுப்பதும் கூட மிருகத்தோலில்தான்.

இத்தகு தோல்ப்பாவைக் கூத்தினுக்காய் பொம்மைகளை உற்பத்தி செய்து அதன் மூலம் எப்படி கைப்பாவை (puppet show) நாடகமாக்கிக் காசு சம்பாதிக்கலாம் என்று மனக் கணக்குப் போட்டாள் பொம்மலாட்டக் கில்லாடி கிளாரா. வந்தேறிய நிலங்களை வழித்து வடிகட்டி நல்லவற்றை அள்ளிச் செல்லுதல்தானே வெள்ளையர் வேலை.

அருகிலிருந்த கடையில் தேநீருக்கு ஓடர் பண்ணினான் நம்பூதிரி. தேநீர் வேண்டாமென சீரகத் தண்ணீர் கலந்த ஒளடதம் குடித்தாள் கிளாரா. அவளுக்குத் தெரியும் ஒளட தங்களைத் தாங்கள் எடுத்துக்கொண்டு அழிவுகளையும், கழிவுகளையும் மூன்றாம் மண்டலக் காலனிகளுக்கு விற் பனையாக்குகிற கலை.

யானை புகுந்த வீடும், வெள்ளையர் புகுந்த நாடும் என்றைக்கும் உருப்படாது.

உள்நாட்டு நாயைத் தெருநாயாக்கி, தன் நாட்டு நாயை அங்கே வளர்க்கவும், பருத்தி உடைகளை பறித்தெறிந்து விட்டு தம் நைலோனால் நாட்டைப் போர்த்தவும், பல நூற்றாண்டுகளாக நம் மத்தியிலிருந்த சித்த மருத்துவத்தை யழித்துவிட்டு தங்களின் மேற்கத்தேய மருத்துவத்தை மகத்துவம் என்று சொல்லி விற்கவும், நோயறிதல் முறைமை களையும், காலங்கணிக்கும் பஞ்சாங்கமறிந்த முன்னோர்களைப் பைத்தியக்காரர் என்று முத்திரை குத்தவும் நன்றாகவே அறிந்து வைத்திருந்தவர்கள் இந்த வெள்ளையர்கள். தமிழர் என்றிருந்த முதுமரத்தின் மூலவேரறுத்து படவைத்த பெருமை வெள்ளையருக்கே உரியது

உள்நாட்டு மாட்டையும், மனிதர்களையும் அடிமாடுகளாக்கி விட்டு வெளிநாட்டுக் காளைகளையும், வெள்ளையரையும், அவர்கள் பேசுகிற மொழியையும்தான் முதலாந்தரமெனச் சொல்ல வைத்திருக்கிற உலகப் பெருஞ் சாணக்கியம் அவர்களுடையது.

பெருங் கைதட்டலோடு தோல் பாவைக் கூத்தில் சூர்ப்பனகைப் படலத்தைக் காட்டினார்கள்.

மக்கள் காசுக்காகக் கொண்டாடும் குபேரனும், ராவணனும் ஒரு தந்தைக்குப் பிறந்த சகோதரர்கள் என்றும், அந்தக் குடும்பத்தின் ஒரே பெண் பிள்ளை சூர்ப்பனகை என்றும் ராமனை விரும்பியமையால் ராமன் தம்பி இலக்குவன் அவள் மார்பையும், மூக்கையும் அரிந்து துரத்திவிட்டானென்றும் பெருமையோடு சொல்கிற காட்சியது.

ஏற்ற நெடுங் கொடி மூக்கும், இரு காதும், முலை இரண்டும், இழந்தும், வாழ ஆற்றுவனே ? என்று சூர்ப்பனகை அழுது புலம்பிய கண்ணீர் இப்பாவைக் கூத்துப் பார்த்துக் கொண்டிருந்தவர்களைக் கலங்கச் செய்யவில்லை. சீதையை மட்டுமே போற்றிச் சூர்பனகையை அரக்கி என்று சொல்ல வைத்திருந்த இராம அம்மணமது.

கிளாராவிற்கு இந்தக் கூத்தின் கதை எள்ளளவும் சகிக்க வில்லை. ராமனின் மீது கடுங்கோபம் அவளுக்கு. விருப்ப மில்லாவிடில் பெண் மார்பை அரிவானா இவர்களின் கடவுள் ? மூடர்களின் கூத்து இது என்றாள் அவள். நம்பூதிரி அதைக் கேளாதவன் போல நின்றான்.

இவர்களின் கதையெல்லாம் இப்படித்தான் பாண்டவருள் ஒருத்தனான பீமனெனும் மல்யுத்தக்காரன் காட்டினுள் இடும்பியெனும் பெண்ணினைக்கண்டு புணர்ந்து கடோற்சகன் எனும் குழந்தையையும் கொடுத்துவிட்டுத் தப்பியோடி வந்து அறம் பேசியபடியே திரிந்தான். இடும்பியோ அவனே தன் கணவன் என அவனில் மிகுந்த காதலோடு இறுதிவரை காத்திருந்தாள். பிறகு அவள் அரக்கி என்று பீமனின் தாய் குந்திதேவி பீமனுக்கு வேறு கல்யாணம் செய்து வைத்தாள். இவர்கள் பேசுகிற தர்மங்களனைத்தும் அதர்மம். ஆனாலும் அவர்கள்தான் நல்லவர்கள் தர்மவான்கள் என்று இத்தகு புராணங்களால் நம்பவைக்கின்றார்கள் நம்பூதிரிகள்.

அடுத்தவர் குடும்பத்தை எப்படிக் கெடுப்பது?

சமூகச் சொத்தை எப்படிச் சூறையிடுவது?

மாற்று மனிதன் மனைவியை எப்படி அவனுக்குத் தெரியாமல் கெடுத்துக் குட்டிச் சுவராக்குவது?

மனைவியை அடிமைப்படுத்துவது எப்படி?

யாருக்கும் தெரியாமல் எல்லோரையும் எப்படிப் பழி வாங்குவது?

எதிரியின் முதுகில் எப்படிக் குத்துவது?

நம்பி வந்தவன் வயிற்றில் எப்படி அடிப்பது?

புருஷன் செத்துப்போனதும், மனைவியை உயிரோடு பிடித்து எப்படித் தீயில் தள்ளுவது?

சூத்திர ஆன்மீகர்களை, அகோரிகளெனும் பெயரில் நிர்வாணமாகத் தெருவில் அலையவிட்டு, அவர்களைப் பிணத்துடன் உறவு கொள்ள வைத்தும், பிணத்தைத் தின்ன வைத்தும், வேடிக்கை காட்டுவதெனப் பார்ப்பனீயம் அனைத்துத் தந்திரங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது.

உழைக்கும் மக்களுக்கு எதிரான வேதமந்திரங்களை உருவாக்கி, அவர்களுக்கிடையே சாதி பிரித்து அவற்றையே உழைக்கும் மக்களுக்காக ஓதுவதாகப் பொய் கூறி, அவர்களை நம்பவைத்து, அவர்களின் உழைப்பால் தம் உண்டியல் நிறைத்துத் தின்று கொழுப்பது பார்ப்பனீயம்.

இதற்கு அவர்களுக்குச் சாதகமாக இத்தகு புராணக் கதைகளும், ரிக் வேதம் உட்பட்ட ஏமாற்று வேதங்களையும் எழுதி வைத்துள்ளார்கள். சூத்திரனை வதைக்கச் சட்டமியற்றும் இம்மண்ணில் பிராமணர்களைத் தண்டிக்க எந்தச் சட்டங்களும் இங்கில்லை.

தோல்பாவைக் கூத்து நடந்த இடத்தைவிட்டுக் கிளாரா கோபத்தோடு வெளியேறினாள். நம்பூதிரி அடிமை போல அவள் பின்னால் ஓடிச் சென்றான். ஆசுவாப்படுத்தி அவளை அணைத்துச் சமாதானப்படுத்தப்போதும் போதுமென்றாகி விட்டது நம்பூதிரிக்கு. சமாதானப்பட்டபின் இருவரும் ஒருவரை ஒருவர் மறந்து ஆனந்தப் பிணைப்பிலாழ்ந்தனர்.

கொச்சின் கடற்கரையில் நம்பூதிரியோடு அவன் மனைவி ஆனந்த ஜலக்கீரிடை செய்த அந்தக் காட்சியைக் கண்டு வந்த வெள்ளைய ஸ்டீபனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தன் மனைவிக்கு உதவியாயிருப்பானென்று அனுப்பிய நம்பூதிரியின் நம்பிக்கைத் துரோகத்தை நேரில் கண்டபோது அவனால் கோபம் தாங்க முடியவில்லை. அவமானம் அவனைப் பிடுங்கித் தின்றது. கிளாரா நம்பூதிரியை விட்டு வீட்டிற்குச் சென்று விட்டாள். நம்பூதிரி தன் வீட்டை நோக்கித் தனியாக நடந்துகொண்டிருந்தான்.

ஆளரவமற்ற அத்தெருவில் நம்பூதிரியைப் பின்தொடர்ந்த ஸ்டீபன் சற்றும் யோசிக்காமல் விருட்டென்று ஜீப்பை விட்டுக் கீழிறங்கிக் கடுங்கோபத்துடன் நம்பூதிரியின் கழுத்தைப் பாய்ந்து பிடித்துக் கீழேதள்ளி கைகளால் கண்மூடித்தனமாகத் தாக்கினான்.

நம்பூதிரி நாய்க்கு, வெள்ளைத் தோல் கேக்குதோ? விழுந்த வனைப் பூட்ஸ் காலால் ஓங்கி உதைத்தான். நல்ல வேளை அவனிடம் அத்தருணம் துப்பாக்கியில்லை. நிறைவெறியில் கண்சிவந்த ஸ்டீபனின் வாயிலிருந்து கொச்சை வசவுகள் நம்பூதிரியை நோக்கி வந்து விழுந்தன.

ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுந்த அவனது தூசண வார்த்தைகள் அந்தக் காட்டை அதிர வைத்தன. வெள்ளைக்காரத் துரை ஸ்டீபன் திட்டியபடியே அவனை பலங்கொண்ட மட்டும் அடித்துக்கொண்டிருந்தான். நம்பூதிரி உணர்ச்சி கெட்டவனைப் போல ஒரு அடி கூடத் திருப்பியடிக்காமல் வாங்கிக் கொண்டிருந்தான். நம்பூதிரிகள் நரிகள். அவர்கள் என்றைக்கும் எதிரியோடு நேருக்கு நேர் எதிரத்துப் போராடுபவர்களல்ல. காத்திருந்து சந்தர்ப்பங் கிடைக்கிறபோது புறமுதுகில் குத்துகிற பேடிகள். வெள்ளைத்துரையின் சரமாரியான அடியில் துவண்டு விழுந்தான் நம்பூதிரி. வெள்ளையனது கொச்சை வார்த்தைகள் மேலும் மேலும் வந்து விழுந்த வண்ணமிருந்தது.

டாமிட், அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. இல்லாததையும், பொல்லாததையும் சொல்லி எம்மிருவரையும் பிரித்து விட்டாயே நாயே. ஸ்டீபனின் இத்தனை ஆத்திரத்திற்கும் காரணம் ஆலப்புளாவில் கிளாராவும், நம்பூதிரியும் ஆற்று நீரில் செய்த அத்தனை ஆலிங்கனங்களையும் கண்டு வந்து சொன்ன அவனது நண்பர்களின் கேலியும் கிண்டலும் தான். அதைத்தான் இப்போ அவன் நேரிலும் கண்டானே...

ஸ்டீபனின் தாக்குதலில் எதிர்பாராமல் கல்லில் விழுந்த நம்பூதிரியின் மண்டை பிளந்தது. நம்பூதிரி வாழ்வில் என்றுமேயில்லாப் பேரடி இது. அவன் வாழ்நாளில் இத்தகு அவமானத்தை எங்கும் சந்தித்தவனல்ல. அவனையும் எவரும் இதுவரை தொட்டு அடித்தவர்கள் எவருமில்லை. இந்த வெள்ளைநாய்க்கு நல்ல பாடம் படிப்பிக்க வேணும். தோட்டக்காரன் செல்வம் தான் ஷ்டீபனுக்குச் சொல்லிவிடுவானென அவனையும், அவன் குடும்பத்தையும் அனியாயமாக எரித்த அவன் சாபம்தான் இதுவோ?

நம்பூதிரி மயங்கியபடியே சிந்தித்தான். சூத்திரன் சாபம் எமக்குப் பலிக்குமா? காகம் திட்டி மாடு சாகுமா? அந்த எண்ணம் அவனைச் சிந்திக்க விடவில்லை.

வெள்ளையன் தெருவில் போட்டு உழக்கியதை எண்ண எண்ண அவன் தன்மான உணர்ச்சி அவனைச்சுட்டெரித்தது. அந்த நினைவுகளோடு இறந்து கொண்டிருந்தான் நம்பூதிரி...

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com

வெள்ளோட்டம்

உஷாதீபன்



அப்பா... தண்ணி ஏறிட்டேயிருக்கு... கீழே போய் காரை ஜாக்கி போட்டு தூக்கி நிறுத்திட்டு வந்திடுவோம்... இல்லன்னா இன்ஜினுக்குள்ள தண்ணீர் போயிடும்... - பிரபு சொன்ன வேகத்தில் படபடப்புத் தெரிந்தது. எப்படா பொழுது விடியும் என்று காத்திருந்ததுபோல் கூறினான் அவன். கார் வாங்கி ஒரு வருடம்தான் ஆகிறது. அவன் கவலை அவனுக்கு. இப்பொழுதுதான் மூன்று இலவச சர்வீஸ் முடிந்திருக்கிறது. மூன்றாவது சர்வீஸ் பண்ணிக்கொண்டு வந்து நிறுத்தி ரெண்டு நாள்தான் ஆகிறது. மழை பிடித்துக் கொண்டது. இப்பொழுது வண்டியை எடுக்க முடியாத நிலை. சர்வீஸ் பண்ணியது விரயம்.புயல் பற்றிய அறிவிப்பு வந்துகொண்டேதான் இருந்தது. ஆனால் இந்த அளவுக்குப் போகும் என்று எதிர்பார்க்கவில்லை. விடாமல் ஊற்ற ஆரம்பித்ததும்தான் பயம் வந்தது. விவரிக்கப்பட்ட மழைப் பிரதேசங்களில் உள்ளதுபோல் ஊற்றித் தள்ளியது. அருகிலுள்ள மேம்பாலத்தில் கொண்டுபோய் நிறுத்தியிருந்தார்கள் பலர். நூற்றுக்கணக்கான கார்கள் ஏற்கனவே வந்துவிட்டது என்றார்கள். பெரிய பெரிய மால்களில் ரூபாய் ஆயிரம் ஒரு நாளைக்கு வாடகை என்று அங்கு கொண்டு போயும் நிறையப் பேர் விட்டிருந்தார்கள். இதுதான் சந்தர்ப்பம் என்று வசமாய் சம்பாதிக்க ஆரம்பித்திருக்கிறார்களோ என்று தோன்றியது. வீட்டு வாசலில், சாலையோரங்களில் கார் நிறுத்தினால் அபராதம் என்று அரசு அறிவித்திருந்தது. ஆனாலும் வீட்டுக்கு ஒரு கார் என்கிற விகிதத்தில் வெளியே கார்கள் நின்று கொண்டுதான் இருந்தன. ஒரு வேளை இந்தப் பகுதியெல்லாம் அரசின் கண்களில் படவில்லையோ என்று நினைத்துக் கொண்டார். பட்டாலும் இப்போதைய நிலையில் ஒன்றும் தண்டிக்க முடியாது. மக்களின் பாதுகாப்புதான் முக்கியம் என்று ஆகிவிட்ட நிலை. இப்படிப் பயப்படாம நிறுத்தியிருக்காங்களே... என்று

ஆச்சரியப்படுவார். தண்ணீர் ஏற ஏற அந்தக் கார்களெல்லாம் என்ன கதியாகும் என்று நினைத்தபோது ஐயோ... பாவமே... என்று வயிற்றைக் கலக்கியது கருணாகரனுக்கு. என்ன ஆகுதோ ஆகட்டும் என்று விட்டுவிட்டது போலிருந்தது. அல்லது எந்த யோசனையும் பலன் தராமல் கையைப் பிசைந்து கொண்டிருப்பார்களோ என்று நினைக்க முற்பட்டார். மாடியிலிருந்து தங்கள் வாகனங்கள் நனைந்து நாறுவதை படிப்படியாகப் பார்த்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பெரு நகரத்தில் காரின் தேவை அத்தியாவசியமாகியிருந்தது. உறவினர்கள் வீட்டு விசேடங்களுக்கு என்று டாக்ஸிகளுக்கு வாடகை கொடுத்து மாளவில்லை. கோயில் குளம் என்று போக, குழந்தைகளைப் பள்ளி கொண்டு விட, கூட்டி வர, கடைகளுக்குப் போக, திடீரென்று வெளியூர் பயணம் மேற்கொள்ள என்று பல நிலைகளிலும் காரின் தேவை அத்தியாவசியமாகிவிட்டதோ என்று தோன்றியது. அதற்குச் செய்யும் செலவு முக்கியமில்லை... வசதிதான் முக்கியம் என்ற கதையாகிப் போனது.

ஒரு காலத்தில் ராலே - பச்சை நிற சைக்கிள் வைத்திருந்தாலே கௌரவம், பிறகு எவன் ஸ்கூட்டர் வைத்திருக்கிறானோ அது கௌரவம்... இப்போது கார் வைத்திருந்தால்தான் கௌரவம் என்றாகிப் போயிருக்கிறது. காரினால் அனுபவித்த வசதிகள் அதிகமா அல்லது அதற்குப் பராமரிப்பிற்காகச் செய்த செலவுகள் அதிகமா என்றால் இரண்டாவதுதான். ஆனாலும் கார் மோகம் மக்களை விட்டபாடில்லை. இன்றைய உலகமயமாக்கல் கற்றுக் கொடுத்த பாடங்களில் இதுவும் ஒன்று. பெண்களும் அநியாயத்துக்குக் கார் ஓட்டுகிறார்கள். விரித்துப் போட்ட தலையுடன், கூலிங்கிளாஸ் அணிந்து ஸ்டியரிங் பிடித்திருக்கையில் பார்க்க அழகாய்த்தான் இருக்கிறது. திரௌபதிக்கு ஒரு சபதம் இருந்தது. இவர்களுக்கு எந்த சபதமோ?

ரெண்டு பேரும் சம்பாதிக்கிறார்கள் என்றாலும், தன் பங்கும் இருக்கட்டும் என்று ஒரு தொகையை இவரும் அந்தக் கார் வாங்க என்று வழங்கியிருந்தார். அப்படியானால்தான் அதில் ஏறி உட்காருவதற்கு ஓர் அருகதை இருக்கும் என்பதும் இவரின் எண்ணமாயிருந்தது. மூணு லட்சம் கொடுத்திடுங்க... என்று வள்ளிசாய் காயத்ரி சொன்னபோது இவர் மறுக்கவில்லை. மீதி அஞ்சோ, ஆறோ அவர்கள் சம்பாத்தியத்தில் போட்டுக் கொள்ளட்டுமே.! அந்தக் காரைக் காப்பாற்ற வேண்டியது இன்றைய தினத்தில் முக்கியமாகிப் போனது. கார் பார்க்கிங்கில் எந்த நேரம் தண்ணீர் நுழையுமோ என்றிருந்தது. கன மழை, மிக கனமழை, அதிமிகக் கனமழை என்று பிரித்து அறிவிப்பதைப் பார்த்தால் எதுவொன்றையும் இந்த நகரம் தாங்காது என்றுதான் தோன்றியது.

முன்பு ஏற்பட்ட புயலின்போது டூவீலர் மட்டுமே இருந்தது. ஆனால் கார் பார்க்கிங் பகுதியில் வண்டி முக்கால்வாசி மூழ்கிப் போனது. சர்வீசுக்கு விட்டபோது இன்ஜினுக்குள் பாம்பு சுற்றி இருக்கு சார் என்று மெக்கானிக் சொன்னபோது அடிவயிற்றில் கலக்கி அங்கேயே மயக்கம்போட்டு விடும் நிலைக்கு வந்து விட்டார் இவர். எப்படி ஓட்டி வந்தோம்? என்ற கேள்விதான் அவரை அந்நிலைக்குத் தள்ளியிருந்தது. சிறிது தூரம்தான் எனினும் அதுவரை அது அடங்கிக் கிடந்ததா? அல்லது சுற்றிய பகுதியிலிருந்து எப்படி வெளியே வருவது என்று தெரியாமல் போனதா? அல்லது செத்துப் போய்விட்டதோ?

சாகல சார்... நல்லவேளை உங்க அதிஷ்டம்... சாரைப் பாம்பு சார்... சாரை... வெளில இழுத்துப் போட்டதும் என்னா வேகம்ங்கிறீங்க... அடிக்க முடில... பொந்துக்குள்ள போயிருச்சு... என்றார் மெக்கானிக். அந்தத் தடவை அவன் கேட்ட கூலியை வாய் மூடிக் கொடுத்தார். வண்டியை இவர் எடுப்பதே இல்லை. பெரு நகரச் சாலைகளில் வண்டிகள் பறக்கும் வேகம் பயப்படுத்தியது. தன்னால் அதன் நடுவே சமாளித்து, ஜாக்கிரதையாக ஓட்ட முடியுமா என்ற ஐயம் ஏற்பட்டது. ரோடு வரை போவது வருவது என்றுதான் வைத்துக் கொண்டார். ரோட்டுக்குள்ளே, நடுவே கலப்பது என்பதில்லை. எங்கேயாவது விழுந்து வைத்து அல்லது மோதி கால் கையை உடைத்துக் கொண்டால்? பிறகு இந்த வயசுக்கு எலும்பு சேராதே? நொண்டியாய் மற்றவர்களுக்கு சிரமம் அளித்து எப்படி மீதி வாழ்க்கையைக் கழிப்பது? கேவலப்பட்ட பிழைப்பாகிவிடும். கவனம், கவனம் என்று அவர் புத்தி அவரை எச்சரித்திருந்தது.

இப்போதுதான் பெருமையாகக் கார் வேறு சேர்ந்து கொண்டிருக்கிறதே? சொகுசு அனுபவிக்கும் அதே வேளையில், அதைப் போற்றிப் பாதுகாப்பதும் முக்கியத் தேவையாகிறது. தேவைகளை அதிகரிக்க அதிகரிக்கத் துன்பம்தான் போலும்... ஆசைகளே துன்பத்திற்குக் காரணம்... எளிய வாழ்க்கையே என்றும் நிம்மதி...! இவர் தியரி இதுதான். ஆனால் யார் கேட்கிறார்கள்? இன்றைய தலைமுறை விண்ணில் பறக்கவல்லவோ ஆசைப்படுகிறது?

இருக்கிற குடிசைகளை இழந்துட்டு ஏழைக் குடி படை எங்க ஒண்டுறதுன்னு அலையுது. நமக்கு நம்ம காரை எப்படிப் பாதுகாக்கிறதுங்கிறதுல கவனமாயிருக்கோம். எவ்வளவு நகை முரண் இது?... பெருங்கவலையாயிருக்கு... இந்த ஏழை ஜனம் எங்க போகும். நினைத்து நினைத்துத் தனக்குத்தானே மனதுக்குள் மருகிக் கொண்டார் கருணாகரன்.

பின்னால் உள்ள குடிசைப் பகுதி முழுக்கத் தண்ணீர் நிரம்பிவிட்டது. இருக்கும் பொருட்களையெல்லாம் விட்டு விட்டு ஒரு பெரும் கூட்டம் பக்கத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் ஒண்டியிருந்தது. அதையாவது திறந்து விட்டார்களே என்றிருந்தது. சின்னப் பள்ளிக் கூடம்தான். மாடியிலிருந்து பார்த்தபோது அங்கு ஒண்டியிருக்கும் கூட்டத்தைப் பார்த்து மனம் பதை பதைத்தது. ஜே.சி.பி. இயந்திரங்களில் எப்படி எப்படியோ பெட்டி பெட்டியாகப் பார்சல்களைக் கொண்டுவந்து இறக்கிக் கொண்டிருந்தார்கள். அரசு இயன்றவரை உதவிகளை வழங்கிக் கொண்டுதான் இருந்தது. வரிசை... வரிசை... என்கிற சத்தம் இங்கு கேட்டது. கூட்டத்தில் சாப்பாட்டுப் பொட்டணம் வாங்க ஒரே அடிபிடி. அதை ஒழுங்கு படுத்தப் போலீசார். எல்லாருக்கும் உண்டு... எல்லாருக்கும் உண்டு என்று கத்திக் கொண்டே விநியோகித்துக்கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் இடுப்பில்

குழந்தையை வைத்துக்கொண்டு அல்லாடும் தாய்மார்கள். இடிபட்டும், மிதிபட்டும் கையேந்தும் ஜனம். பரபரத்துக் கொண்டிருந்தது பாமரக் கூட்டம்.

இதற்கிடையில் வானத்தில் ஹெலிகாப்டர் வேறு பறக்க ஆரம்பித்திருந்தது. எந்தெந்த மாடியில் ஆட்கள் அதிகமாக நின்று கையசைக்கிறார்களோ அங்கு மட்டும் பார்சல் பொட்டலங்கள் விழுந்தன. அவ்வளவு மழையிலும் மக்களுக்கு இந்த வேடிக்கை பார்க்கும் புத்தி போகவில்லையே என்று நினைத்தார் இவர். ஏம்பா... நாமளும்தானே அதுக்கு வந்திருக்கோம்... என்றான் பிரபு. இரண்டு மூன்று ஹெலிகாப்டர்கள் வெவ்வேறு பகுதிகளில் பறந்து கொண்டிருந்தன. ஆனால் இவர்கள் இருக்கும் பகுதிக்கு வரவேயில்லை.

இவனும் பிரபுவும் மட்டும் இங்கு நின்றார்கள். மற்றெல்லாரும்தான் அவரவர் ஊர் போயாயிற்றே? என்னதான் போடுறான் பார்த்து விடுவோம் என்று வீச்சு வீச்சென்று கையசைத்தும் பலனில்லை. சிரிப்புத்தான் வந்தது இவருக்கு. அப்படிக் கையசைத்துப் பிச்சை கேட்பது கடவுளிடம் கேட்பது போல் எண்ண வைத்தது. எட்டியே பார்க்கவில்லை இந்தப் பக்கம். தலைக்கு மேல் பறந்து என்ன பயன்? மத்திய மந்திரி வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்டதாகச் செய்தி வந்தது. ஒருவேளை அவர் போன வெத்து ஹெலிகாப்டராய் இருக்குமோ என்று தோன்றியது. அவர்கள் நம்மைப் பார்ப்பார்கள். ஆனால் நாம் அவர்களைப் பார்க்க முடிவதில்லை. போகிற வேகத்தில்தான் தலை சுற்றுகிறதே!

இடம் பத்தாம இந்த அபார்ட்மென்டுக்கு ஏதாச்சும் ஒரு கூட்டம் வந்தாலும் நாம யாரும் விரட்டக் கூடாது... சொல்லிட்டேன்... என்று கண்டிஷன் போட்டார் கருணாகரன்.

நாம மட்டும்தானேப்பா இங்கே இருக்கோம்... மத்த எல்லாரும்தான் கிளம்பிப் போயிட்டாங்களே... அந்த ஐ.ஜி. மேடம் ஒருத்தங்க மட்டும் இருக்காங்க... அவுங்களுக்கும் ஏதாச்சும் உதவின்னா நாமதான் செய்யணும்...

ஆபத்துக்குப் பாவமில்லே... தாராளமா செய்யலாம். சொல்லிக்கொண்டிருந்தபோதே கீழே சத்தம் கேட்டது. ஒரு சனக்கூட்டம் உள்ளே நுழைந்திருந்தது. பக்கத்திலுள்ள தேவ நகர் குடும்பங்கள் என்று சொன்னார்கள். இடுப்பளவு தண்ணீரிலேயே வந்து ஒண்டியிருந்தார்கள்.

கார் பார்க்கிங்ல ஒரு கக்கூஸ் இருக்குல்ல... அத அவங்களுக்குத் திறந்து விட்ரு... வெளில இருக்கிற குழாயைப் பயன்படுத்திக்கட்டும்... என்றார் இவர்.

அப்பா... அது மழைத் தண்ணி... மேல் தொட்டில தண்ணி தீர்ந்து போச்சு... மூடியத் திறந்து வச்சிருக்கு... மழைத் தண்ணி அதுல விழட்டும்னு... தொட்டில மழைத்தண்ணி கொஞ்சமாச்சும் சேர்ந்தாத்தான் நமக்கே தண்ணி கிடைக்கும். இன்னும் நாலு நாளைக்கு மழை இருக்கும்ங்கிறான்... மழை நின்னாலும் தெருக் குளம் வத்துற வரைக்கும் கரன்ட் வராது. நாமளும் அந்த மேடமும் சமாளிச்சாகணும்... கீழ்க் குழாய் லீவரை மாடில மூடியாச்சு... கழுவத்தானே... மழைத் தண்ணிய அவங்களே கையேந்திப் பிடிச்சு உபயோகப்படுத்திக்குவாங்க...

ஓகே என்று விட்டுவிட்டார் கருணாகரன். அதற்கு மேல் வற்புறுத்த முடியாது. காரணம் ஓடியாடுபவன் அவன். ரெண்டு நாளாய் உட்காராமல், சளி இருமலோடு அல்லாடிக்கொண்டிருக்கிறான். எல்லாவற்றிலும் அவனுக்கு உதவ முடியவில்லையே என்று இவருக்கு வருத்தம். இன்னும் வண்டிக்கு ஜாக்கி போடுவோம் என்று வேறு சொல்கிறான். தண்ணீர் ஏறும் முன் போட்டுத் தூக்கியாக வேண்டும். அதுவரை தண்ணீர் ஏறாமல் இருக்க வேண்டும். ஏறினால் தண்ணிக்குள் நின்று ஜாக்கி ஏற்றும் வேலை செய்தாக வேண்டும். சுத்து சுத்துன்னு சுத்தணும். கடின வேலை காய்ச்சலில் கொண்டு விடாமல் இருக்க வேண்டும். இருக்கும் நிலைமை மிகுந்த வருத்தத்தைத் தந்தது கருணாகரனுக்கு. ஓராள் உதவிக்கில்லையே என்று மனம் வருந்தியது.

சற்றுத் தள்ளியிருந்த அடுக்ககத்தில் மாடியிலிருந்து கயிற்றைக் கட்டி வாளியைக் கீழே இறக்கிக்கொண்டிருந்தார்கள். தேங்கியிருக்கும் மழைத் தண்ணீரை எடுத்து பால்கனியில் வைத்து பற்றுப் பாத்திரம் தேய்த்துக் கொள்ளப் பயன்படுத்துகிறார்கள் என்று தெரிந்தது. தொடர்ந்து வாளி வாளியாக இறக்கி ஏற்றிக் கொண்டிருந்தார் அவர். இன்னும் சில வீடுகளில் அப்படியே கையில் பாத்திரத்தை ஏந்தி மழைத் தண்ணீரில் கழுவிக்கொண்டிருந்தார்கள். மாடியிலிருந்து ஒரு சிலர் உலர்த்திய துணிகளை உருவிக்கொண்டிருந்தார்கள். வீட்டுக்குள் உலர்த்தி ஃபேன் சுற்ற விடலாம். அதுவும் ஈரக் காற்றாக வெளிப்படும்போது எப்படித் துணிகள் காயும்? முதலில் காற்றாடி சுற்ற கரன்ட் வேண்டுமே? அதற்கே வழியில்லையே? மக்கள் பாடு ஒவ்வொன்றிலும் திண்டாட்டம்தான். தள்ளியிருந்த வீடுகளுக்குள் ஆட்கள் நிழல் போல் நடமாடிக்கொண்டிருந்தார்கள். இருட்டு வீட்டுக்குள் மனிதர்கள் நிழலாகத் தெரிவதே பெரிது என்றுதான் தோன்றியது.

அருகிலே புதிது புதிதாக அடுக்ககங்களும், தனி வீடுகளும் உருவாகி கட்டட வேலைகள் பாதியில் நின்றன. இந்த மழை புயலுக்கெல்லாம் நாங்க அசர்ற ஆளில்லை. அது அதுபாட்டுக்கு, இது இதுபாட்டுக்கு... என்று எங்க வேலைகள் தொடரத்தான் செய்யும்... என்று சுற்றிலும் எழுந்து பாதியில் நிற்கும் அத்தனை கட்டடங்களும் பறை சாற்றின... எப்படியாவது சென்னையில் இருந்தால் சரி என்று கங்கணம் கட்டிக் கொண்டதுபோல் அத்தனை ஜனங்களும் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டு படிப்படியாக இங்கு வந்து குவிகிறார்களோ என்று தோன்றியது. குவிந்துவிட்டார்கள் என்றே சொல்லலாம்தான். பாதியில் நிற்கும் கட்டடங்களுக்கெல்லாம் வாட்ச்மேன் தண்ணீர் அடிக்க வேண்டிய வேலையே இல்லை. மழை விடாது பெய்து கட்டடங்களை சொரியச் சொரிய நனைத்துக் கொண்டிருந்தது. சிமின்டும் செங்கலும் சேர்த்து எழுப்பப்பட்ட சுவர்கள் அதீத மழையினால் கரைந்து பலவீனப்பட்டுவிட்டால் என்ன செய்வது என்று இவருக்கு யோசனை போனது.

தண்ணீர் அடிக்க அடிக்க கட்டடம் நல்லா இறுகும். தினமும் தவறாமத் தண்ணி அடிங்க... என்று, தான் வீடு கட்டியபோது வாட்ச்மேனை அனத்தி எடுத்ததும், சொன்னபடி செய்கிறானா என்று போய்ப் போய் கண்காணித்ததும், அவன் கண் முன்னேயே இதெல்லாம் போதாது என்று அதிருப்திப்பட்டு, தானே ரப்பர் குழாயைக் கையில் எடுத்துக்கொண்டு வெறி வந்தவன் போல் தண்ணீரைப் பீய்ச்சி அடித்ததும்... கட்டட வேலையின்போது செங்கல்களைத் தண்ணீரில் முக்கி, ஊறப்போட்டுப் போட்டு எடுத்துக் கொடுக்கிறார்களா என்று கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு கண்காணித்ததும்... நம்புங்க சார்... நம்பிக்கை வைங்க... அப்டியெல்லாம் ஏனோ தானோன்னெல்லாம் செய்திடமாட்டோம். என்று இன்ஜினியர் சலித்துக்கொண்டு சொன்னதும், ஒண்ணுக்கு நாலுதானே போடுறீங்க... நான் இருக்கைல அப்படிப் போட்டுட்டு அந்தப்பக்கம் நகர்ந்தவுடனே ஒண்ணுக்கு அஞ்சுன்னு ஏத்திடாதீங்க... கவர்ன்மென்ட் லோன் போட்டு இந்த வீடு கட்டுறேன்... மனசாட்சிப்படி நடந்துக்குங்க... என்று தான் சொன்னதும்... இப்போது நினைத்தாலும் சற்று சங்கடமாகத்தான் இருந்தது கருணாகரனுக்கு.

அந்த வீடு இன்று முப்பது ஆண்டுகளைத் தாண்டி கிண்ணென்று நின்றுகொண்டிருக்கிறது ஊரில். அப்படியெல்லாமா இன்று வீடு கட்டுகிறார்கள் ? எம்.சான்ட் என்கிறார்கள், உறாலோ ப்ளாக் என்கிறார்கள். புதிது புதிதாய் எது எதுவோ வந்துவிட்டது. இவையெல்லாம் செங்கலும் சிமிண்டும் வைத்துக் கட்டுவதற்கு ஈடாகுமா ? என்று நினைத்துக் கொண்டார். இன்று செங்கலும். சிமிண்டும் வைத்துக் கட்டப்பட்ட வீடுகளும், அடுக்ககங்களும் விலை அதிகமாகவும், அதனிலும் சற்றே குறைவாக மற்ற பொருட்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டவை சற்றுக் குறைவாகவும் இருப்பதைக் கண்ணுற்றார். அப்படிப் பார்த்தால் இவர் இப்போது வாங்கியிருக்கும் அடுக்கக வீடுகள் உறாலோ பிளாக் வைத்துக் கட்டப்பட்டவைதான் என்பதையும், இதுதான் சார் இப்போ டிரென்ட்... அபார்ட்மென்ட் பூராவும் இதுலதான் கிடுகிடுன்னு ஏறுது... என்று பில்டர் சொன்னது நினைவுக்கு வந்தது. கிடு கிடுன்னு ஏறினாப்ல கிடுகிடுன்னு சரிஞ்சிடாம இருக்கணும் என்று இப்போது பயம் வந்தது கருணாகரனுக்கு.

அடுத்த வீட்டில் பேசும் சத்தம் கேட்கிறது. ஓர் ஆணி அடித்தால் இங்கே அதிருகிறது. நடந்தால் இங்கே கேட்கிறது. நடுச் சுவற்றுக்கென்ன பலம். ஒரு செங்கல் கனத்திற்காவது கட்டியிருப்பார்களா ? அல்லது அந்தச் செங்கல்லைப் படுக்கை வசத்தில் வைத்து, இந்தக் கனம் போதும் என்று குறுக்குச் சுவர் எழுப்பியிருப்பார்களா ? என்ன சந்தேகப்பட்டு என்ன செய்ய ? சுவர் ஈரம் பாலித்துக் கிடக்கிறது. தரை ஜிலுஜிலுவென்று கசமாய்க் கிடக்கிறது. நடக்கையில் கால் ஒட்டுகிறது. இதெல்லாம் எதற்கு அடையாளம் ? எவ்வளவு பலமாய் நிற்கப் போகிறது இந்தக் கட்டடம் ? இருக்கும் அல்லலில் இந்தப் பயம் வேறு... தேவையா மனிதனுக்கு ? எதை எதை நினைத்துத்தான் வருத்தப்படுவது ? வருத்தப்படுவதற்கும் மனுஷனுக்கு உடம்பில் ஒரு தெம்பு வேண்டாமா ? சென்னைக்கு வந்த பிற்பாடு வாழ்க்கை அத்தனை சோபிதமாய் இல்லைதான். பேசாமல் ஊரிலேயே இருந்திருக்கலாமோ ? அங்கிருந்தே ஒரு பெண்ணைப் பார்த்துப் பையனுக்குக் கல்யாணம் முடித்திருக்கலாமோ ? எதையும் யோசிக்காமல் தப்பு செய்து விட்டோமோ ? என்னென்னவோ தோன்றி கருணாகரனை அயர வைத்தது.

அடுக்ககத்தில் உள்ள ஆறு வீட்டிலும் இருப்பவர்கள் அவரவரைக் காப்பாற்றிக் கொள்ள என்று முன்னமே கிளம்பிப் போய் விட்டார்கள். எல்லோரும் வாடகைக்கு இருப்பவர்கள். மழை ஓய்ந்து. தண்ணீர் வற்றி. மின்சாரம் வந்து எல்லாம் நார்மலான பிறகு சாவகாசமாய் 'ஹலோ...' என்று ஒற்றை வார்த்தையைப் பகிர்ந்துகொண்டு வருவார்கள். அதுவரை என்னென்ன வேலை நடந்தது என்று ஒரு வார்த்தை கேட்டுக் கொள்ள மாட்டார்கள். வாட்ஸப் குரூப்பில் இன்னின்ன பணிக்கு இவ்வளவு இவ்வளவு என்று நீட்டிமுழக்கிக் கொண்டிருப்பான் இவன். அதற்கு ஆயிரம் காரணம் கேட்பார்கள். நாள் முழுக்கப் பேசுவான். கைக்காசு போட்டு செலவழித்த பணம் லேசில் வந்து சேராது. என்றைக்கானாலும் கொடுக்காமல் முடியாது, அதைக் காலா காலத்தில் தாமதமின்றிக் கொடுத்துத் தொலைப்போம் என்கிற அறிவு எவருக்கும் கிடையாது. அறிவென்ன, மனசு இல்லை. அவ்வளவுதான். இத்தனையையும் ஓடி ஓடி ஒருவர் செய்திருக்கிறாரே... அவர் கைப்பணம் போட்டிருக்கிறாரே... அவருக்கு மட்டும் என்ன தலைவிதி என்கிற சிந்தனை ஒருவருக்கும் இல்லை. வெறும் சுயநலமிகள். இதில் பராமரிப்புச் செலவு மிக அதிகம்... என்கிற முக்கல் முனகல் வேறு. பிரதி மாதமும் அவரவர்க்கான பராமரிப்புச் செலவினத்தை லேசில் தருவதில்லை. மாதக் கடைசி வரை இழு இழு என்று ஜவ்வாய் இழுத்து கடைசியில் மனசில்லாமல் வங்கிக் கணக்கில் தொகை மாற்றம் செய்வது. அதையும் பணம் அனுப்பியாச்சு என்று மனசோடு தகவல் தருவதில்லை. மனிதர்கள் ஏனிப்படி அல்பமாய் இருக்கிறார்கள் ?

வந்தபின்னால்தானே தெரிகிறது... என்னென்ன பிரச்சினை தலையெடுக்கும் என்று ? இதையெல்லாம் முன் வேறு எங்கேயும் படித்து அறிய வாய்ப்பேயில்லை. அனுபவப்பட அனுபவப்படத் தெரிந்து கொள்வதாய் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் தன்னைத்தான் நொந்துகொண்டார் கருணாகரன். அடுக்ககத்தில் வீடு வாங்கியது மகா தவறு... அதுதான் அவர் நிலை. இன்றுவரை அந்தத் தவறுக்காக நொந்து கொண்டிருக்கிறார்.

வீட்டை வாடகைக்கு விட்டுட்டு நாம தனி வீடு பார்த்துப் போயிடுவோம்ப்பா... இந்த வாடகையை வாங்கி அங்க கொடுப்போம். கூடக் கொஞ்சம் சேர்த்துன்னாலும் வசதியா, பிரச்சினையில்லாமத் தனி வீடா நிம்மதியா இருக்கலாம்தானே... ? – பையன் பிரவுவிடம் பொறுக்கமாட்டாமல் அனத்த ஆரம்பித்திருந்தார் கருணாகரன்.



ushadeepan@thaiveedu.com

(டெனிஸ் ஜோன்சன் 1949-2017. அமெரிக்க எழுத்தாளர். சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் எழுதியுள்ளார். இவர் ஜேர்மனியின் மியுனிக் நகரத்தில் பிறந்தவர். அப்போது அவரின் தந்தை அங்கே அமெரிக்க அரசு வேலையில் இருந்தார். இவர் பிலிப்பைன்ஸ், யப்பான், வோஷிங்ரன் டிசி ஆகிய இடங்களில் வசித்துள்ளார். அவருடைய சிறுகதைத் தொகுப்பான Jesus' son இவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது. தேசிய நூல் விருது இவருடைய Tree of Smoke-க்குக் கிடைத்தது. இவரின் முதலாவது நாவலான Angel-க்கு முதல் புனைவுக்கான பரிசு கிடைத்தது. இவர் இரண்டு முறை புலிட்சர் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டார். அதில் ஒன்று இவருடைய Train Dreams என்ற நாவலுக்காக.



The Name of the World, Already Dead, Jesus' Son, Resuscitation of a Hanged Man, Fiskadoro, The Stars at Noon அவரின் படைப்புகள். தன் இருபது வயதுக் காலத்தில் குடிப்பழக்கத்திற்கும் பிற போதைப் பொருள்களுக்கும் அடிமையானார். பின் 1978-இல் குடியை நிறுத்தினார். 1983-இல் போதைப் பொருள் பாவிப்பதையும் நிறுத்தினார். அந்த அனுபவத்திலிருந்து வெளிவந்த சிறுகதைத் தொகுப்பு Jesus' Son அது வாசகர்களின் பெரும் பாராட்டைப் பெற்றது. அது தழுவப்பட்டு திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது. அத்துடன் இவரின் கவிதைகள் ஒரே தொகுப்பாக வெளிவந்துள்ளன. அதன் பெயர் The Throne of the Third Heaven of the Nations Millennium General Assembly. பல நாடகங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இறுதியில் கல்லீரல் புற்றுநோயால் 2017-இல் இறந்தார்.

இந்தக் கதை யேசுவின் வாழ்க்கையுடன் பிணைந்த பின்னணி சித்திரத்தையும் உருவகிக்கிறது என்பதை அவரின் எழுத்துத் தொட்டுக் காட்டுகிறது.)

மலிவு விலையில் மது கிடைக்கும்

மகிழ்ச்சியான நேரம்



டெனிஸ் ஜோன்சன்

தமிழில்: என்.கே. மகாலிங்கம்

அன்றைய பகல் நெருப்புக் கோளமாகவும் ஒளிமயமாகவும் மறைந்து கொண்டிருந்தது. சமுத்திரத்தில் நின்ற கப்பல்கள் காகிதத்தில் செய்த கப்பல்களின் நிழல் உருக்களை வானில் ஒட்டி வைத்திருந்தது போலக் காட்சியளித்தன.

நான் ஒரு பதினேழு வயது பெண்ணின் பின்னால் அலைந்து கொண்டிருந்தேன். அவள் ஓர் இடை ஆட்டக்காரி. அவள் எந்த நேரமும் ஒரு சிறுவனுடன் தான் இருப்பாள். அவன் அவளுடைய தம்பி என்று சொல்லிக் கொள்வான். ஆனால் உண்மையில் அவன் அவளுடைய தம்பி அல்ல. அவன் அவளில் காதல் கொண்ட ஒருத்தன். அவளும் அவனைத் தன்னைச் சுற்ற விட்டிருந்தாள். காரணம், வாழ்க்கை அப்ப டித்தான்.

நானும் அவள் மேல் காதல் கொண்டிருந்தேன். ஆனால் அவள் இன்னொரு ஆணுடன் இன்னும் காதலில் இருந்தாள். அவன் அண்மையில் சிறைக்குப் போய்விட்டான்.

நான் மோசமான எல்லா இடங்களையும் உற்றுப் பார்த்தேன், வியற்னாம் மதுபானசாலை போன்ற இடங்கள் எல்லாவற் றையும்.

மதுபரிசாரகன், 'உனக்கு மது வேணுமா?' என்று கேட்டான்.

'அவனிடம் மது குடிக்கக் காசில்லை.'

என்னிடம் காசு இருந்தது. ஆனால் இரண்டு மணி நேரம் குடிக்க அது போதாது. நான் ஜிம்ஜாம் கிளப்புக்குப் போக முயன்று பார்த்தேன்.

பிரிட்டிஷ் கொலம்பியா அல்லது சஸ்கச்சுவானில் உள்ள கிளாமத் அல்லது கூட்டனெய் என்ற இடத்திற்கு மேற்புறம் வாழ்ந்த இந்தியர்கள் மதுச்சாலையின் உள்ளே வரிசை யாகக் குந்தி இருந்தார்கள், சிறிய சிலைகள் போல. அல்லது குழந்தைகள் கையில் பட்டு உடைந்த கொழுத்த பொம்மைகள் போல. ஆனால் அவள் அங்கே இல்லை.

சிறிதாகக் கீறிய கறுத்தக் கண்களை உடையவன் நெஸ் பேஸ். அவன் மிகவும் விலை குறைந்த போட் வைனுக்கு ஆணை கொடுப்பதற்காக உடலைச் சாய்த்தபோது என்னை நான் இருந்த முக்காலியில் இருந்து ஏறக்குறைய விழுத்தியே விட்டான். 'ஹேய், நானும் நீயும் நேற்று இங்கே பிலியட் விளை யாடினோம் அல்லவா?' என்று நான் சொன்னேன்.

'அப்படி நான் நினைக்கவில்லை,' என்றான் அவன்.

'எனக்கு பணம் கிடைத்தால் உன் கடனை உடனடியாகத் திருப்பித் தருவேன் என்று நீ நேற்றுச் சொன்னாய் அல்லவா என்றேன்?'

'நேற்று நான் இங்கே வரவில்லையே. நான் இந்த நகரத் திலேயே இல்லையே,' என்றான்.

'அப்படி என்றால் நீ எனக்குத் தரவேண்டிய கால் டொலரைத் தரமாட்டாயா? எனக்கு நீ கால் டொலர் தரவேணும்.'

'நான் அந்தக் கால் டொலரைத் தந்து விட்டேன். அதை உன் கையில் தந்தேன் அல்லவா? இரண்டு டைம்களையும் ஒரு நிக்கலையும்.'

'இதற்காக யாரோ ஒருத்தர் விலை கொடுக்கப் போகிறார்?'

'அது நான் இல்லை. நான் உனக்கு அந்தக் கால் டொலரைத் தந்து விட்டேன். அது சிலவேளை நிலத்தில் விழுந்திருக் கலாம்'.

'அது எப்போ என்று தெரியுமா? உனக்கு அது தெரியுமா?'

'எடி, எடி, நீ ஏதாவது பத்து சத குத்தியையோ ஐந்து சத குத்தியையோ நேற்று நிலத்தில் பார்த்தாயா? நேற்று தரையைக் கூட்டினாயா? அப்படி ஏதாவதொன்றைக் கூட்டினாயா? இரண்டு பத்து சதக் குத்தியையும் ஐந்து சதக் குத்தியையும்,' என்று அந்த இந்தியன் மதுபரிசாரகனைக் கேட்டான்.

'கண்டிருக்கலாம். அப்படிச் சிலவேளை காண்பேன். அதைப் பற்றி யார் கவலைப்படுவது?'

'பார்? என்று எனக்கு அவன் சொன்னான்.

'நீ என்னை மிகவும் சோர்வடையச் செய்கிறாய்? என் விரல் களை அசைக்க முடியவில்லை. நீங்கள் எல்லாரும் சேர்ந்து அதைச் செய்கிறீர்கள்,' என்றேன்.

'ஹேய், ஒரு கால் டொலருக்காக உங்கள் நேரத்தை நான் வீணாக்கப் போவதில்லை.'

'எல்லோருக்கும் சொல்கிறேன்.'

'உனக்கு கால் டொலர் வேணுமா? இது முட்டாள்த்தனம். இந்தா.'

'நாசமாப் போ. செத்துப் போ,' என்று நான் சொன்னேன், அதைத் தள்ளிவிட்டுக் கொண்டே.

'இந்தக் கால் டொலரை எடு,' என்றான் மிகவும் உரத்து. அதை நான் தொட மாட்டேன் என்பதை இப்போது கண்டு கொண் டான்.

•

முதல் நாள் இரவுதான் அவள் என்னைத் தன் படுக்கையில் படுக்க அனுமதித்தாள். அவளுடன் அல்ல. அவள் பக்கத் தில். அவள் கல்லூரி மாணவிகள் மூன்று பேருடன் தங்கி இருந்தாள். அவர்களில் இருவருக்கு தாய்வான்நாட்டு ஆண் நண்பர்கள் இருந்தார்கள்.

அவளுடைய பொய் சகோதரன் தரையில் படுத்து நித்திரை கொண்டான். நாங்கள் காலையில் எழுந்தபோது அவன் ஒன்றுமே சொல்லவில்லை. அவன் ஒருபோதும் ஒன்றும் சொன்னதில்லை. அதுதான் அவனுடைய வெற்றிக்கான இரகசிய காரணம். அவன் அப்படித்தான். நான் அவனுக்கு நாலு டொலர் கொடுத்தேன். ஏறக்குறைய என்னிடம் இருந்த அத்தனை பணத்தையும் கல்லூரி மாணவி ஒருத்திக்கும் அவளுடைய நண்பனுக்கும் கொடுத்தேன். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. அவர்கள் எல்லோரும் எங்களுக்கு தைவானிய நாட்டுக் கஞ்சா தருவதாகச் சொல்லியிருந் தார்கள். நான் யன்னலடியில் நின்று அடுக்ககக் கட்டடத்தின் கார் தரிப்பு நிலையத்தைப் பார்த்துக்கொண்டு நின்றேன். அந்த நேரம் சகோதரன் பல் விளக்கிக்கொண்டு, என்னுடைய பணத்துடன் அவர்கள் பச்சைநிற செடான் காரில் போய்க் கொண்டிருப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தான். காரை

கார் தரிப்பு நிலையத்திலிருந்து எடுப்பதற்கு முன்பே தொலை பேசி கம்பத்தில் முட்டிவிட்டார்கள். செடானிலிருந்து வெளியே வந்து தள்ளாடித்தள்ளாடி சென்றார்கள், கார்க் கதவுகளை அப்படியே திறந்திருக்க விட்டு. ஒவ்வொருவரிலும் தொங்கிக் கொண்டு சென்றார்கள். அவர்களின் தலைமுடி காற்றில் முகங்களில் பறந்துகொண்டிருந்தது.

●

அன்று பின் காலையில் நான் நகரப் பேருந்தில் இருந்து கொண்டிருந்தேன். அது சியாற்றில் நகரத்தில். நீளமான, பக் கவாட்டாகப் போடப்பட்டிருந்த முன் இருக்கையில் இருந்து கொண்டிருந்தேன். ஒரு பெண் மொத்தமான ஆங்கில இலக் கிய பாட நூல் ஒன்றைத் தன் மடியில் வைத்திருந்தாள். அவ ளுக்குப் பக்கத்தில் ஒரு வெளிர் நிறத் தோலுள்ள கறுப்பினத் தவன் இருந்து கொண்டிருந்தான். 'ஐ,' என்றாள் அவனைப் பார்த்து. 'இன்றைக்குத்தான் சம்பள நாள். அதை நினைத் தால் மகிழ்ச்சியாக இருக்கிறது. என்றாலும் அது பல நாட்க ளுக்கு தாக்குப்பிடிக்காது,' என்றாள். அவன் அவளை நேரா கப் பார்த்தான். அவனுடைய பெரிய அகன்ற நெற்றி ஆழ்ந்து சிந்திப்பவனைப் போல அவனைக் காட்டியது. 'சரி, எனக்கு இந்த நகரத்தில் தங்குவதற்கு இருபத்து நாலு மணி நேரம் இருக்கிறது,' என்றான்.

வெளியே காலநிலை தெளிவாகவும் அமைதியாகவும் இருந் தது. சியாற்றிலில் அதிகமான நாட்கள் சாம்பல் நிறமாகவே இருக்கும். ஆனால் இப்பொழுது சூரிய ஒளியுடன் கூடிய பிர காசமான நாட்களாகவே இருந்தன என்பது என் நினைவுக்கு வந்தது.

ஒரு நாளைக்கு மூன்று நாலு மணி நேரம் பேருந்தில் பயணம் செய்தேன். அப்போது பிரமாண்டமான ஜமேய்க்கன் பெண் பேருந்தை ஓட்டினாள். 'நீ பஸ்ஸில் குந்திக்கொண்டிக்க முடி யாது,' என்று சொன்னாள், பின்புறம் பார்க்கும் கண்ணாடியில் என்னைப் பார்த்துக் கொண்டே. 'நீ எங்கே போகிறாய் என்று உனக்குத் தெரிய வேணும்.'

'அப்படியென்றால் நான் நூலகத்தடியில் இறங்கிக் கொள் கிறேன்,' என்றேன்.

'அது நல்லது.'

'அது நல்லது என்று எனக்கும் தெரியும்,' என்று நானும் சொன் னேன்.

மகிழ்ச்சியான நேரம் வரும்வரை சொற்களின் சக்தியால் மூச்சு விட முடியாதளவு நசுங்கிப் போய் நூலகத்தில் இருந்தேன்.

அந்தச் சொற்களில் பலவற்றை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதன் பின் அவ்விடத்தை விட்டுச் சென்றேன். இயந்திர வாகனங்கள் இடைவிடாது போய்க் கொண்டே இருந் தன. நடைபாதைகளிலும் சன நெருக்கடி. சனங்கள் தங்களை மறந்து போய்க் கொண்டிருந்தார்கள். அற்பமானவர்களாகவும் இருந்தார்கள். ஏனென்றால் மகிழ்ச்சியான நேரம் சன நெருக் கடியான நேரமும் தான்.

மகிழ்ச்சியான நேரத்தில் ஒரு போத்தல் மதுவுக்குப் பணம் கொடுத்தால் இரண்டு போத்தல் மது கிடைக்கும்.

மகிழ்ச்சியான நேரம் இரண்டு மணி நேரம் நீடிக்கும்.

●

அந்த நேரம் முழுவதும் நான் அந்த இடை ஆட்டக்காரியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அவளுடைய பெயர் அன் ஜலீக். அவளை நான் காண விரும்பினேன். ஏனென்றால், அவ ளுக்கிருக்கும் பல ஈடுபாடுகளுக்கிடையில் அவள் என்னை யும் விரும்புவது போன்றிருந்தாள். அவளை நான் முதல் முதல் பார்த்த நிமிஷமே அவளை விரும்பத் தொடங்கி விட்டேன். கிரேக்க இரவு விடுதி மேசையில் ஒரு ஆட்டம் முடிந்து இன்னொரு ஆட்டம் தொடங்குவதற்கிடையில் இளைப்பாறிக் கொண்டிருந்தாள். மேடை வெளிச்சம் கொஞ்சம் அவளில் பட் டுக்கொண்டிருந்தது. மிகவும் நலிந்த உருவம். அவளுடைய கவனம் வேறெங்கோ இருந்து கொண்டிருந்தது. யாரோ ஒருத்தன் அவளை அழிப்பதற்காக பொறுமையாகக் காத்துக் கொண்டிருந்தான். இன்னொரு நடனக்காரி அவளுக்கருகில் இருந்தாள். அவளுடைய தலைமுடி ஒட்ட வெட்டப்பட்டிருந் தது. ஆண் போன்ற உருவம். 'உனக்கு என்ன வேண்டும், பையா?' என்று ஒரு மாலுமியைப் பார்த்து அவள் கேட்டாள். அவன் அவளுக்கு மது வாங்கித் தருகிறேன் என்று சொல்லி யிருந்தான். அஞ்சலீன் எதுவுமே சொல்லவில்லை. அவளு டைய இந்த கன்னித் துயரம் முழுவதும் போலி அல்ல. அவளில் ஒரு பகுதியை அவள் இன்னும் பிறப்பதற்கு அனும திக்கவில்லை. ஏனெனில் அவள் இந்த இடத்திற்கு மிகவும் அழகானவள். அது உண்மை. அவள் அதிகமாகச் சீரழிக்கப் பட்ட ஒரு பொதுமகள். 'அதிலிருந்து விடுபட முயன்று கொண் டிருக்கிறேன்,' என்றான் மாலுமி. 'இந்த மதுவுக்கு அவர்கள் எடுக்கும் பணத்தைப் பார்த்தால் அதிலும் மேலாக உன்னை பாராட்டி விடலாம்,' என்றான் அவன். 'உன்னுடைய பாராட்டு அவளுக்குத் தேவையில்லை,' என்றாள் வயதான நடனமாது. 'அவள் களைத்துப் போய் விட்டாள்.'

அப்போது மணி ஆறாகி விட்டது. நான் நடந்து போய் கிரேக்க உணவகத்தின் படிகளில் ஏறினேன். அவள் நகரத்தை விட்டுப் போய்விட்டாள் என்று சொன்னார்கள்.

●

அன்றைய பகல் நெருப்புக் கோளமாகவும் ஒளிமயமாகவும் மறைந்து கொண்டிருந்தது. சமுத்திரத்தில் நின்ற கப்பல்கள் காகிதத்தில் செய்த கப்பல்களின் நிழல் உருக்களை வானில் ஒட்டி வைத்திருந்தது போலக் காட்சியளித்தன.

நான் இரண்டு மடங்கு குடித்து விட்டதால் பல காலம் இறந்து கிடந்தவன் போலாகிவிட்டேன். கடைசியாக இப்பொழுதுதான் விழித்தேன்.

நான் பன்றிச்சந்து என்ற இடத்தில் இருந்தேன். அது துறைமு கத்திற்கு நேராக இருந்தது. அது ஆட்டம் காணும் பாலத்தின் மேல் கட்டப்பட்டிருந்தது. அதில் கம்பளம் விரிக்கப்பட்ட தளங் களும் ஃபோர்மிக்காவால் கட்டப்பட்ட மதுச்சாலையும் இருந் தன. சிகரெற் புகை பயங்கரமானதாக இருந்தது. சூரியன், மேகங்களின் கூரையால் தாழ்வாகவும், கடலை எரித்துக் கொண்டும், ஜன்னலில் இருந்த பெரிய படம் முழுவதையும் உருகிய ஒளியால் நிரப்பிக்கொண்டும் இருந்தது. ஆகவே நாங்கள் எங்கள் கொடுக்கல் வாங்கல்களையும் கனவுகளை யும் பிரகாசமான மூடுபனியில் நடத்திக் கொண்டிருந்தோம். முதலாம் வீதியால் மதுச்சாலைக்குள் நுழைந்தவர்கள் தங்கள் உடல்களைக் கைவிட்டு பாவமான செயல்களைச் செய்தார்கள். அதன் பின் தான் எங்களுள் குடியிருக்கும் பேய்களை எங்களால் காண முடியும். ஒன்றுக்கொன்று தவறு செய்த ஆன்மாக்கள் எல்லாம் இங்கே ஒன்றாகக் கொண்டு

வரப்பட்டன. கற்பழித்தவர்கள் தங்களால் கற்பழிக்கப்பட்டவர் களைச் சந்தித்தார்கள். கைவிடப்பட்ட குழந்தை தன் தாயைக் கண்டுபிடித்தது. ஆனால் எதையுமே குணப்படுத்த முடியாது. சுய உணர்வின் இரட்டைத்தன்மைதான் கண்ணா டியைப் போல் அனைத்தையும் பிரிக்கிறது. அசாதாரணமான தனிப்பட்ட இழப்பும் துரோகமும், மனக்கசப்பையும் கொந்த ளிப்பையும் உண்டாக்கிறது. அப்படியானால் இப்போது என்னை என்னச் செய்யப் போகிறீர்கள்? எதனால் என்னை எப்படிப் பயமுறுத்தப்போகிறீர்கள்?

நூலகத்தில் சங்கடமான எதுவோ ஒன்று நடந்தது. வயதான ஒரு கனவான் புத்தகங்களைப் புதுப்பிக்கும் மேசையிலிருந்து கையில் தன் புத்தகங்களுடன் வந்து ஒரு சிறுமியின் தொனி யில் என்னிடம் மெதுவாக சொன்னார். 'உன்னுடைய காற் சட்டை சிப்பர் திறந்திருக்கிறது, அதை உனக்குச் சொல்ல நினைத்தேன்.'

'சரி,' என்றேன். உடனே கீழே குனிந்து அதை மேலே இழுத்து விட்டேன்.

'சிலர் அதைப் பார்க்கிறார்கள்,' என்றார்.

'சரி, நன்றி.'

'பரவாயில்லை.'

அவரை நான் அந்த இடத்திலேயே கழுத்தைப் பிடித்து, அந்த நூலகத்திலேயே கொன்றிருப்பேன். விசித்திரமானவை எல்லாம் இந்த உலகத்தில் நடக்கின்றன. ஆனால் அவர் அவ் விடத்தை விட்டு போய் விட்டார்.

பன்றிச் சந்து மதுபானச்சாலை மலிவான ஓர் இடம். நான் சீருடையில் இருந்த ஒரு தாதிக்குப் பக்கத்தில் இருந்து கொண்டிருந்தேன். அவள் கண்களில் கருவளையங்கள் இருந்தன.

நான் அவளை அடையாளம் கண்டு கொண்டேன். 'இன்று உன்னுடைய சிநேகிதன் எங்கே?' என்றேன்.

'யார்?' என்றாள் வஞ்சகமில்லாமல்.

'அவனுக்கு நான் பத்து டொலர் கொடுத்திருந்தேன். அவன் காணாமல் போய் விட்டான்,' என்றேன்.

'எப்போ?'

'போன கிழமை.'

'நான் அவனைப் பார்க்கவில்லை.'

'அவன் இன்னும் முதிர்ச்சி அடைந்தவனாக நடந்திருக்கலாம்.'

'அவன் ராகோமா என்ற இடத்தில் இருக்கலாம்.'

'அவனுக்கு எத்தனை வயதிருக்கும்? ஒரு முப்பது?'

'அவன் நாளைக்கு வருவான்.'

'ஒரு சில சில்லறைக் காசுக்காக ஒருவனை ஏமாற்றுவதற்கு அவனுக்கு வயதேறிவிட்டது.'

'மாத்திரை வாங்கக் காசு வேணுமா?'

'எப்படியான மாத்திரை?'

'அது சைக்கடெலிக் - மாயத் தோற்றங்களை அளிக்கும் - அரைத்த காளான். போதை மாத்திரை.'

அதை எனக்குக் காட்டினாள். அதை எவருமே விழுங்கியி ருக்க மாட்டார்கள்.

'அது தான் நான் கண்ட மாத்திரைகளிலேயே பெரிய மாத்திரை.'

'அதை உனக்கு மூன்று டொலருக்குத் தருகிறேன்.'

'அப்படியான அளவில் மாத்திரைகள் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அது என்ன அளவு. அது மாத்திரைக ளிலேயே மிகப் பெரியதா?'

'ஓம், இதுதான் முதலாவது.'

'இதைப் பார்! ஒரு முட்டை அளவு. ஈஸ்ரர் முட்டையைப் போல.'

'பொறு,' என்றாள், நான் கொடுத்த பணத்தைப் பார்த்து. 'மூன்று டொலர்களா? சில நாட்கள் என்னால் பணத்தை எண்ணக் கூட முடியாது.'

'இதோ பார்.'

'குடித்துக் கொண்டே இரு. கழுவிக் கொண்டு போய் விடும். முழு பியரையும் குடி.'

'அழகு! அதை எப்படி விழுங்கினேன். நான் ஒரு மனிதன் என்று என்னால் நினைக்கக் கூட முடியவில்லை.'

'இன்னொரு டொலர் இருக்கா? இது சுருங்கிப் போய் இருக்கு.'

'நான் முன்னொரு போதும் பெரியதைச் சாப்பிடவில்லை.'

'இது பெரியதொரு சாமான். உண்மை.'

இதிலும் பார்க்க பெரியது இருக்கிறது. அது குதிரைகளுக் கானதா?'

'இல்லை.'

'அது குதிரைகளுக்கானதாகத்தான் இருக்க வேணும்.'

'இல்லை. குதிரைகளுக்கு ஒரு பசையை அவற்றின் வாய்க் குள் பீச்சுவார்கள். பசை வாய்க்குள் மோசமாக ஒட்டிக் கொள் ளும். அதனால் அதை குதிரைகளால் துப்பக்கூட முடியாது. குதிரைகளுக்கான மாத்திரைகளை இப்போ ஒருவரும் தயாரிப் பதில்லை.'

'தயாரிப்பதில்லையா?'

'இப்போ செய்வதில்லை.'

'ஆனால், அப்படிச் செய்தால்,' என்றேன் நான்.



mahalingam.k@thaiveedu.com


32வது ஆண்டில்
Est. 1993
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் -கனடா
பெருமையுடன் வழங்கும்
மாவிலி வசந்தம் 2025
கலை, பண்பாட்டு விழா
எமது மண்ணின் மைந்தர்கள் யாழ் மாவட்ட அரச அதிபர்
திரு. பிரதீபன் மருதலிங்கம்
மற்றும் சமூக சேவையாளர்
திரு. செல்வின் இ. மரியாம்பிள்ளை
அவர்களின் சிறப்பு வருகையுடன்
On
Oct. 11
2025
4:00 pm
பறை இசை, சிலம்பம்
நாடகம், இன்னிசை
இன்னும் பல
At
Peoples Theatre for The Performing Arts
22 Esna Park Drive
Markham, ON, L3R 1E1
பிரதான அனுசரணை
Queenshead Pub
1214 Queen St. E
Queenshead Pub
2555 Victoria Park Ave.
Queenshead Pub
1042 St. Clair Aev. W
இணை அனுசரணை
SM Medical Centre
RE/Max
Community Inc. (Brokerage)
neem connect
One Community. Endless Opportunity.
நெடுந்தீவு மாணவர்களின் கல்வி மற்றும்,
கல்விசாரா செயல்திறன் வளர்ச்சிக்கும் உதவிக்கரம் கொடுப்போம்

உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...

STANDARD MORTGAGES INC



- Mortgages
- Refinance
- Second Mortgages
- Short Term Secured Loans

SMI

STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial

சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட



Raj Subrayam AMP
Director

80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

Senthooran Punithavel

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பளவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You®

BUYERS

If Yathavann Doesn't Negotiate at Least

$10,000 Off The List Price,

He'll Give You $2000 Cash on Closing.

FREE Home Inspection When You Buy With Us.

Sellers

Your Home SOLD in 60 Days Guaranteed!

OR I'LL SELL IT FOR FREE**

**SOME CONDITIONS MAY APPLY

For More Information On My Exclusive Guaranteed Sales Program

ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA

Free Home Evaluation.
No Cost. No Obligations

RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002

YATHAVANN SELVARAJAH
Sales Representative

416-992-4474



கடன் தொல்லையா?



பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

Corporate Bankruptcy	Bankruptcy	Consumer Proposal
$ 5000 to $7000 + HST	$1800 - $3000 + HST	Zero fee

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

"Empowering Financial Freedom"

309-80 Corporate Drive

Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**

Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

creditsolutioncentre@gmail.com





"

BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

BUY OR SELL

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

POWER BROTHERS REAL ESTATE



UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777

@uthayansivarajah @uthayansivarajah

ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED

INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

MORTGAGE FINANCIAL

Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties

SUBRA
MORTGAGE SOLUTIONS



புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



Residential Mortgages

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

Commercial Mortgages

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com

Powered by MORTGAGE ALLIANCE

WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330

TD Canada Trust | Scotiabank | FIRST NATIONAL FINANCIAL LP | radius financial
RFA | EQUITABLE BANK | HOME TRUST | RMG | MCAP

O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...

18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்

ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

வாங்கப் போகிறீர்களா?

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

விற்கப் போகிறீர்களா?

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்





















Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272






NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON M1S 4Z5
647-290-3416 / 416-543-1111



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


புது
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licensed Funeral Preplanning Director & After Care Advisor
Licensed Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN
PURCHASING A NEW
HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7


15 years of Success
500+ Agents
Selva Vettyvel
HomeLife/Future
Realty Inc.,
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544


AEREN Thiyagarajah
Realtor
Dir. 647-888 3500
DILEEP Thangavel
Realtor
Dir. 416-666 2300
HomeLife/ Future Realty Inc.,
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8


$8475.00
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555


ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana
Yoganathan
416.418.5749


HomeLife Today Realty Ltd.,
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545


RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225



Ahilan
Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd.,
RE/MAX


UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP


Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE


Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120


Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Orbit Solution Centre
416.439.0224
416.450.5011


Suba Aynkharan
Broker
416-722-4444
RE/MAX
COMMUNITY
REALTY INC.


Avazon


Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL
BANKER


Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
RE/MAX ACE
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com


BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,


NOW HIRING
JOIN OUR
DYNAMIC TEAM
iNFORCE LIFE
Financial Services Inc.
416-909-0400 Bus. 416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN
RASALINGAM
President & CEO


Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
Cell: 416 505 8532


DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524


RE/MAX
077 566 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner